# අස්සීරා වත්තාරික්

(ඉස්ලාමීය ඉතිහාසය)

**ඉස්ලාමීය දීනියියාත් ධර්මාචාර්යවරුන් (උපදේශකවරුන්)**
**සඳහා සහතික පත්‍ර විභාගය සඳහා පෙළ පොත්**

# அஸ் ஸீறா வத்தாரீக்

**(இஸ்லாமிய வரலாறு)**

**இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ்**
**பரீட்சைக்குரிய பாடப்புத்தகம்**

# As Seera Wathareekh

**(Islamic History)**

**Text Book for**
**Islamic Deeniyyath (Dharmacharya) Certificate Examination**

# السيرة والتاريخ

**الكتاب المقرر لشهادة الإمتحانات**
**الدينية (للمعلمين)**


**إصدار: إدارة الشؤون الإسلامية**
**كولومبو-سريلانكا**

***Published by :***
***Department of Muslim Religious and Cultural Affairs***
***180, T. B. Jayah Mawatha,***
***Colombo - 10,***
***Sri Lanka.***



2-CM14799

CM14799-2,500(2012/08)


بسم الله الرحمن الرحيم

**ஆலோசனையும் வழிகாட்டலும்** :

கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி
பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

அஷ்ஷெய்க் ஏ. சி. அகார் முஹம்மத்
பிரதிப் பணிப்பாளர்
ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்
துணைத் தலைவர்
அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபை

அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி (நளீமி)
முன்னாள் பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்

அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் (நளீமி)
பணிப்பாளர்
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்

**எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள் :**

அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன் (M.A.)
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

அல்ஹாஜ் எம். எப். எம். ஸாபிர் (M.A.)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கொழும்பு பல்கலைக்கழகம்

ஜனாப் எம். எஸ். எம். பூஸரி (B.A. Hons.)
அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி
திஹாரிய

அஷ்ஷெய்க் ஏ. மிஹ்லார் (நளீமி) (M.A.)
ஸாஹிறாக் கல்லூரி
கொழும்பு

அஷ்ஷெய்க் ஜவ்பர் ஹுசைன் (M.Phil)
சிரேஷ்ட விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

| | | |
|---|---|---|
| **எழுத்தாளர் குழு அங்கத்தவர்கள் (தொடர்ச்சி)** | : | அஷ்ஷெய்க் என் கபூர்டீன் (M.Phil)<br>விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| | | அஷ்ஷெய்க் யு. எல். ஏ. அமீர் (M.Phil)<br>விரிவுரையாளர்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| | | அஷ்ஷெய்க் நவாஸ் ஸனூர்தீன் M.A<br>ஆசிரிய ஆலோசகர் |
| **தொகுப்பாசிரியர் குழு** | : | அல்ஹாஜ் எஸ். எச். எம் ஜெமீல் (M.A.)<br>முன்னாள் செயலாளர்<br>முஸ்லிம் விவகார இராஜாங்க அமைச்சின் |
| | | கலாநிதி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி)<br>முன்னாள் பீடாதிபதி / சிரேஷ்ட விரிவுரையாளர்<br>தென்கிழக்கு பல்கலைக்கழகம் |
| | | அல்ஹாஜ் எம். எச். எம். நாளிர் B.A. (Hons)<br>வளவாளர்<br>தேசிய கல்வி நிறுவகம், மஹறகம |
| | | அஷ்ஷெய்க் எம். எச். எம். புஹாரி (B.A.) (Hons) PGDE<br>முன்னாள் பிரதம செயற்திட்ட அதிகாரி<br>தேசிய கல்வி நிறுவகம், மஹறகம |
| **இணைப்பாக்கம்** | : | மௌலவி அல்ஹாஜ் எம். எச். எம். லாபிர் (கபூரி) (B.A.) PGDE<br>மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத்தலைவர் |
| | | மௌலவி அல்ஹாஜ் எம். எச். நூறுல் அமீன் (நத்வி) (B.A. Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

| | | |
|---|---|---|
| **தலைப்பு** | **:** | **அஸ் ஸீறா வத்தாரீக்**<br>(இஸ்லாமிய வரலாறு)<br><br>இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சைக்குரியது |
| **பதிப்பாசிரியர்** | : | அல்ஹாஜ் மௌலவி எம். எச். நூறுல் அமீன் (நத்வி) (B.A. Cey.)<br>உதவிப் பணிப்பாளர்<br>முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |
| **வெளியீடு** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்<br>இல. 180, T. B. ஜாயா மாவத்தை<br>கொழும்பு - 10. |
| **பதிப்பு** | : | அரசாங்க அச்சகத் திணைக்களம்<br>இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டீ சில்வா மாவத்தை,<br>கொழும்பு - 08. |
| **முதற்பதிப்பு** | : | 2014 |
| **பதிப்புரிமை** | : | முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் |

ISBN

# மாண்புமிகு பிரதமர், புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சர் அவர்களது ஆசிச் செய்தி

இலங்கை சமயங்களுக்கும் கலாசாரங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கும் ஒரு தேசமாகும். சிறுபிராயம் முதல் பிள்ளைகளிடையே கலாசாரம், சகவாழ்வு, மானிடத்துவம் பற்றிய மனப்பாங்கை வளர்ப்பதன் ஊடாகவே தேசத்தையும் சமூகத்தையும் மதிக்கின்ற, சமய கலாசாரத்தை கௌரவிக்கின்ற, மனிதமாண்பை புரிந்து கொண்ட சமூகமொன்றை உருவாக்க முடியும். பரீட்சையை மையப்படுத்திய கல்வித் திட்டத்தின் மூலம் சிலவேளை தார்மீக பண்பாட்டு ரீதியான கல்வியை வழங்குவது கடினமாகலாம். இதனால் தான் இலங்கையில் ஞாயிறு சமய பாடசாலைக் கல்வித்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமய பிள்ளைகள் தத்தமது சமய ஸ்தலங்களுக்கு அல்லது பாடசாலைகளுக்கு சென்று சமயக்கல்வியைப்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமயக் கல்விப் போதனைகளுக்குத் தேவையான ஆசிரியர்களை வளப்படுத்துவதற்கான பயிற்சித் திட்டங்கள், சீருடை வழங்கல் மட்டுமன்றி ஆசிரியர்களுக்கான ஆசிரியர் கைந்நூல், மாணவர்களுக்கான பாடநூல் என்பனவும் இலவசமாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. பௌத்த சமய பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல வசதிகளும் ஏனைய சமயம் சார்ந்த பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். அஹதிய்யா என்ற பெயரில் வழங்கப்படும் இஸ்லாமிய சமய பாடசாலைகளுக்கு அவசியமான பாடத்திட்டத்தை தயார் செய்யும் வேலைத்திட்டத்தினை சிறப்பாக நிறைவு செய்துள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இதே பிரகாரம் பாடநூல் தொகுதியொன்றை வெளியிட மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

சமயக் கல்விப் போதனையின் இலக்கை அடைவதில் ஆசிரியர் களுக்கான வழிகாட்டல்களை வழங்குவது இன்றியமையாததாகும். மிக விரைவில் இது விடயமாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என நம்புகிறேன்.

எந்தவொரு மட்டத்திலாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடு வெற்றியளிப்பதற்கு உரிய பாடநூல்கள் அவசியம் என்பதை யாவரும் ஏற்றுக் கொள்வர். இவ்வவசியத் தேவையை சரியாகப் புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய பாடத்திட்டத்திற்கமைவாக இரு பரீட்சைகளுக்குமான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்திருப்பது காலத்தின் தேவையாகும். சமய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் இதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இதை செய்து முடிப்பதற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் சகலருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**தி. மு. ஜயரத்ன**
இலங்கைச் சனநாயக சோசலிசக்
குடியரசின் பிரதமரும்
புத்த சாசனம் மற்றும்
மத அலுவல்கள் அமைச்சரும்.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# கௌரவ புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் பிரதியமைச்சரின் ஆசிச் செய்தி

பல்லின சமய கலாசார விழுமியங்களைக் கொண்ட இலங்கைத் திருநாட்டு மக்கள் மத்தியில், தார்மீக சமூகமொன்றைக் கட்டியெழுப்பும் நோக்கில் இலங்கையில் வதியும் பிரதான நான்கு சமயத்தவர்களும் தத்தமது பங்களிப்பை வழங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மூலம் முதன் முறையாக இஸ்லாமிய சமய (அஹதிய்யா) பாடசாலை மாணவர்களுக் காக பாடத்திட்டத்தினையும் அப்பாடத்திட்டத்திற்கமைவாக பாடநூல் களையும் வெளியிடும் இச்சிறப்பான வேளையில் வாழ்த்துச் செய்தி யொன்றை வெளியிடக் கிடைத்தமையினை பெரும் நற்பேறாகக் கருதுகிறேன்.

நீண்டகாலமாக நிலவிவந்த இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு எமது அமைச்சின் ஊடாக பங்களிப்புச் செய்வது எமது கடமை என்பதோடு பல தசாப்தங்களாக இயங்கிவரும் அஹதிய்யா சமய பாடசாலை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது சமய கல்விப்பணிகளை முன்கொண்டு செல்வதற்கு இது பேருதவியாக அமையும் என நம்புகிறேன்.

ஒரு நாட்டின் அபிவிருத்தி நிலைத்திருப்பது அரசியல் பொருளாதார அபிவிருத்தியுடன சமய சமூக மட்டத்திலான அபிவிருத்தியும் இணைந்தது என உறுதியுடன் நம்பிக்கை பூண்டுள்ளேன். குறிப்பாக சமூக மட்டத்திலான ஒழுக்க விழுமியங்களைப் பேணுவதாயின் சமய கலாசார துறைசார் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மேற்படி சமய சமூக கலாசார விழுமியங்களைப் பாதுகாப்பதில் அஹதிய்யா முதலான சமயப் பாடசாலைகள் ஆற்றும் பணி விலைமதிக்க முடியாததாகும்.

சிறு பராயம் முதல் பிள்ளைகளை சமய பின்னணியில் வாழப் பயிற்றுவிப்பது போல் அதற்கான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் ஒழுக்க விழுமியங்களால் போஷிக்கப்பட்ட இளைய தலைமுறையொன்று உருவாகுவதை எதிர்பார்க்க முடியும்.

எங்களைப் போல் பல்லின சமய கலாசார சமூகமொன்று வாழும் நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மக்கள் தமது பிள்ளைகளுக்கு அவரவர்களது சமய அறிவையும் விளக்கத்தையும் வழங்குவதற்கு இதுபோன்ற சமய பாடசாலைகள் ஊடாக மேற்கொள்ளும் அறப்பணி மகத்தானதாகும்.

இம்மகத்தான பணியைச் செய்வதில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் இதற்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் எமது அமைச்சின் நன்றியறிதலை சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

**எம். கே. ஏ. டீ. எஸ். குணவர்தன,**
பிரதியமைச்சர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சின் செயலாளரது ஆசிச் செய்தி

தார்மீக சமுதாயமொன்றை தோற்றுவிப்பதில் சமயக் கல்வி அதிமுக்கிய பங்காற்றுகிறது. பாலர் பருவம் முதல் பிள்ளைகளிடையே சமய விழுமியச் சிந்தனையை ஏற்படுத்த முடியுமாயின் நாட்டின் சமூக சூழலை நல்ல நிலைக்கு மாற்றுவது கஷ்டமாயிராது. யாவரிடத்திலும் நல்ல மனப்பாங்கு ஏற்படுவது அனுபவங்கள் ஊடேயாகும். பயனுள்ள அனுபவங்களை வழங்குவதில் சமயக் கல்வி சிறந்த ஊடகமாகும். பரீட்சையை மையப்படுத்திய பொதுக்கல்வியுடன் மாத்திரம் சமய அறிவைப் புகட்டுவது சிரமமான காரியமாகும். இதற்கு மாற்றீடாக இலங்கையில் ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும் சமய பாடசாலைகள் முறை இத்துறையில் பெருமளவு வெற்றியை ஈட்டித்தந்துள்ளது.

பௌத்த, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ பிள்ளைகளிடையே சமய சூழலும் சமய அறிவும் விருத்தி செய்யப்படும் வகையில் ஒவ்வொரு சமயம் சார் பிள்ளைகளுக்குமாக வெவ்வேறான சமயப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. சமய பாடசாலைகளுக்கான பாடத்திட்டம், பாடநூல் என்பன தற்போதைக்கு வெளியிடப்பட்டுள்ளன. ஆசிரியர்களுக்கு அவசியப்படும் பயிற்சித்திட்டங்கள் மற்றும் ஆசிரியர் சீருடை என்பன வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு முக்கிய குறைபாடாக விளங்கி வந்த பாடநூல்களை வழங்க ஏற்பாடு செய்கின்றமை முக்கிய அம்சமாகும். சகல சமய குழந்தைகளுக்கும் ஒரே விதமான வசதிகளை செய்து கொடுப்பது அரசின் கொள்கையாகும். இஸ்லாமிய சமய பாடசாலைகள் விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாடத்திட்டத்தை தயாரித்து சிறப்பாக வெளியிட்டு வைத்த இத்திணைக்களம் தேவையான பாடநூல்களை வெளியிட ஏற்பாடு செய்தமை சமய கல்வித்துறையில் ஒரு திருப்பு முனையாகும். எந்தவொரு கல்வி மட்டத்திலும் பாடத்திட்டத்தின் உரிய பலாபலன்களை அடைவதில் பாடநூல்கள் முக்கிய பங்கு வகிப்பதை மறுக்க முடியாது. இவ்வவசியத் தேவையினை சரிவரப்புரிந்து கொண்டுள்ள முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆரம்ப நடவடிக்கையாக அஹதிய்யா (தஹம்) இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்

களையும், அஹதிய்யா (தஹம்) தீனிய்யாத் சான்றிதழ் பரீட்சைக்குரிய பாடநூல்களுடன் மொத்தம் 10 நூல்களை வெளியிட எடுத்துள்ள நடவடிக்கையினையிட்டு இத்திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

மேற்படி அறப்பணியில் ஈடுபட்டிருக்கும் திணைக்கள ஊழியர்கள், வளவாளர்கள், நூலாக்கக்குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளை சமர்ப்பிக்க ஆசைப்படுகிறேன்.

**எம். கே. பீ. திசாநாயக்க,**
செயலாளர்,
புத்த சாசன மற்றும் மத அலுவல்கள்
அமைச்சு.

புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு,
இல. 135, தர்மபால மாவத்தை,
கொழும்பு - 07.

# முஸ்லிம் சமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இன்றைய உலகு பயங்கர ஆன்மீக வறுமையிலும் வெறுமையிலும் வாடிக் கொண்டிருக்கிறது. உண்மையாக இன்றைய உலகின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணமாக இருப்பது ஆன்மீகப் பிரச்சினையும் அதனடியாகப் பிறந்துள்ள பண்பாட்டு வீழ்ச்சியுமாகும் எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

சமய சார்பற்ற சிந்தனை, சடவாதம், உலோகாயதவாதம் முதலான மதவிரோத கொள்கைகளின் செல்வாக்கின் காரணமாகவே ஆன்மீக, தார்மீக, ஒழுக்க பண்பாட்டுத் துறைகளில் பயங்கர பின்னடைவை இன்று நாம் கண்டு வருகிறோம். அறிவைப் பூஜிக்கின்ற சமூகம் ஆன்மீகத்தைப் புறக்கணிக்கிறது. உடலைக் கவனிக்கின்ற சமூகம் உள்ளத்தை மறந்துவிடுகின்றது. இம்மையை நேசிக்கின்ற சமூகம் மறுமையை நிராகரிக்கின்றது.

சமகால உலகின் இத்தகைய சமய விரோத சவால்களுக்கு முகங்கொடுத்து மனித சமூகத்தை சன்மார்க்க அடிப்படையில், ஆன்மீகப் பாதையில் வழிநடாத்த வல்ல அறிவையும், புலமையையும், ஆளுமையையும் உருவாக்குகின்ற பயிற்சிப் பாசறைகளான அரபுக் கல்லூரிகளோடு இணைந்து அஹதிய்யா பாடசாலைகளும் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அஹதிய்யா பாடசாலைகள் இலங்கையில் 50 வருடங்களுக்கு மேலாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அஹதிய்யா பாடசாலைகளை சிறந்த முறையில் வழிநடத்துவதற்காக திணைக்களம் அதற்கான முழுமையான பாடத்திட்டத்தை வெளியிட்டு வழிநடாத்தி வந்துள்ளமை அனைவரும் அறிந்ததே.

இந்த வகையில் இப்பாடத்திட்டங்கள் மூலம் பூரண பயனைப் பெற முடியாது என்பதை அறிந்த திணைக்களம், முதற்கட்டமாக இப்பாடத்திட்டங்களுக்கு அமைவாக இஸ்லாமிய சன்மார்க்க (அஹதிய்யா அல்குர்ஆன்) பாடசாலை இறுதிச்சான்றிதழ் பரீட்சை மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) சான்றிதழ் பரீட்சை களுக்குத் தேவையான பாடப் புத்தகங்களை வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இந்த பணியை சிறப்பாக மேற்கொண்ட புத்தக

ஆக்கக்குழுவுக்கும் தொகுப்பாசிரியர் குழு மற்றும் இப்பணியில் மும்முரமாக ஈடுபட்ட எமது திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் அவர்களுக்கும் மற்றும் இப்பணியில் இணைந்து பணியாற்றிய அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதோடு, இப்பணியில் ஈடுபட்டவர்களது உழைப்பையும், அவர்களது முயற்சி யையும் அல்லாஹ் அங்கீகரித்துச் சிறந்த நற்கூலிகளை வழங்க வேண்டும் என வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல்,**
பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180, T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உயர் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் (முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்) ஆசிச் செய்தி

இஸ்லாம் ஒரு வாழ்க்கை நெறியாகும். முஸ்லிமாக வாழ்வதாயின் அல்குர்ஆன், அல்ஹதீஸ் தொடர்பான தெளிவான அறிவைப் பெறுவது அவசியமாகும். "அறிவைத்தேடுவது முஸ்லிமான ஆண், பெண் இரு பாலார் மீதும் கடமையாகும்." என்ற கருத்தில் வரும் நபிமொழியும் "அல்குர்ஆனைக் கற்று மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்" என்ற கருத்தில் வரும் நபிமொழியும் இதனை வலியுறுத்துகின்றன. இலங்கையில் இஸ்லாத்தை பாடசாலைப் பருவத்தில் கற்றுக்கொள்வதற்கான ஒரு சிறந்த ஊடகமாக அஹதிய்யா பாடசாலைகள் காணப்படுகின்றன. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளின் வளர்ச்சியில் போற்றத்தக்க சேவைகளை வழங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததாகும். முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அஹதிய்யா பாடசாலைகளுக்கு வருடாந்தம் வழங்கி வரும் சேவைகள் அஹதிய்யாவின் வளர்ச்சிக்கு பெரும் உறுதுணையாக அமைகின்றன.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரையான 14 வருடங்களுக்குரிய தேசிய அஹதிய்யாப் பாடத்திட்டம், இலங்கை அரசாங்க பரீட்சை திணைக்களம் மூலம் அஹதிய்யா இறுதி சான்றிதழ் பரீட்சை, இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) சான்றிதழ் பரீட்சை ஆகிய இரு பரீட்சைகளையும் நடாத்த ஏற்பாடு செய்தமை, மாவட்ட ரீதியாக நடாத்தப்பட்ட அஹதிய்யா ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளும் கருத்தரங்குகளும், அஹதிய்யா ஆசிரியர்களுக்கான வருடாந்த நூல் கொள்வனவுக் கொடுப்பனவு, வருடாந்தம் ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல் என்பன அப்பணிகளில் சிலவாகும்.

இவற்றில் அஹதிய்யா பாடசாலைகளது வரலாற்றில் தேசிய பாடத்திட்டத்துக்கு அமைவாக பாடநூல்கள் வெளியிடப்படுவது முக்கியதொரு மைல்கல்லாகும். அஹதிய்யா சமூகத்தின் ஏகோபித்த கோரிக்கையின் முதற்கட்டம் இன்று நிறைவேறுவதையிட்டு உளப்



3-CM14799

பூரிப்படைகிறேன். முதற் கட்டமாக, அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை வகுப்புகளுக்குரிய அகீதா, மஸாதிறுச்ஷரீஆ, பிக்குஹுல் இஸ்லாம், ஸீரா வத்தாரீக், அஹ்லாக் ஆகிய நான்கு பாடங்களுக்கும் தீனிய்யாத் பரீட்சைக்குரிய மேற்படி நான்கு பாடங்களுடன் *அரபு மொழியும் இஸ்லாமிய இலக்கியமும் ஆகிய ஆறு பாடங்களுக்குமாக பத்து பாட நூல்கள் வெளிவருகின்றமை சிறப்பித்துக் கூறவேண்டிய தொன்றாகும். புதிய பணிப்பாளர் தலைமையில் இப்பணிகள் யாவும் தொடரும் என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.

மேற்படி பணிகளை முன்கொண்டு செல்வதில் ஆரம்பம் முதல் இன்றுவரை அயராது உழைத்துவரும் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். நூறுல் அமீன் மற்றும் திணைக்கள அதிகாரிகள் மற்றும் எழுத்தாளர குழு அங்கத்தவர்கள், தொகுப்பாசிரியர்கள் ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்களாவர். அல்லாஹ் அவர்களது முயற்சிகளை அங்கீகரித்துத்துக் கொள்வானாக. இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு கிடைத்தமையை அல்லாஹ் எனக்கு வழங்கிய ஒரு மகத்தான சந்தர்ப்பமாகவே கருதுகின்றேன்.

இதற்காக என்னால் ஆன பணிகளைச் செய்யக் காத்திருக்கின்றேன்.

அல்லாஹ்வின் அருள் வேண்டி அனைவருக்கும் பிரார்த்திக்கிறேன்.

ஆமின் !

**அஷ்ஷெய்க் Y. L. M. நவவி**,
உயர் கல்வியமைச்சின்
சிரேஷ்ட உதவிச் செயலாளரும்,
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர்

உயர் கல்வியமைச்சு,
இல. 18, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

# மத்திய அஹதிய்யா சம்மேளன பாடத்திட்டக் குழுத் தலைவரின் ஆசிச் செய்தி

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்**

அஹதிய்யாப் பாடசாலைகள் மூலம் கடந்த ஆறு தசாப்தங்களுக்கு மேலாக முஸ்லிம் சமூகம் பல நன்மைகளையடைந்து வந்துள்ளது. இருப்பினும் எதிர்பார்க்கப்படும் முறையான பயனை சமூகம் அடைவதற்கு முக்கிய சில தடைகள் இருந்து வந்துள்ளன. அவற்றுள் ஒன்று பாடநூல் இல்லாமை, மற்றையது தேவையான ஆசிரிய வளம் கிடைக்காமை எனலாம்.

பெரும்பாலும் அஹதிய்யாப் பாடசாலைகளில் க.பொ.த. (சாதாரண தரம்) அல்லது க.பொத.(உயர் தரம்) வரை கற்றவர்களே கற்பித்தல் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களிலேயே உலமாக்களும் பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

அஹதிய்யா பாடசாலைகளில் போதிக்கும் ஆசிரியர்களது அறிவு மட்டத்தை மேம்படுத்தும் வகையிலேயே இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சாரிய) பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடநெறியைக் கற்றுத் தேர்வதன் மூலம் அவர்கள் சன்மார்க்க போதனாசிரியர்களுக்கான தராதரத்தைப் பெறுகின்றனர். இச்சான்றிதழ் உடையவர்களை சமய ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டத்தினை அரசு முன் கொண்டுள்ளது. எனவே இப்பாடத்திட்டம் முறையாக கற்பிக்கப்படுவதன் மூலம் அஹதிய்யாக்கள் எதிர்நோக்கும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திக்க முடியும். அத்தோடு ஆசிரியர்களது கல்வித்தரத்தை மேம்படுத்தவும் முடியும். மேலும் இவர்களிடம் கற்கும் மாணவர்களது அறிவுமட்டம் உயர்வடையும் என்றும் எதிர்பார்க்கலாம்.

இது விடயத்தில் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கரிசனை கொண்டு நடவடிக்கை மேற்கொண்டு செயற்பட்டுவருகின்றமை பாராட்டுக்குரியது. இதற்கு முன்னோடியாக விளங்கிய முன்னாள் பணிப்பாளர் அஷ்ஷெய்க Y. L. M. நவவி அவர்களது பங்களிப்பு மெச்சத்தக்கதாகும். அவரது வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இதற்கு உறுதுணையாக விளங்கின. அவருக்கு பக்கபலமாக விளங்கிய முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. நூறுல் அமீன் அவர்களது அயராத

முயற்சியும் ஈடுபாடும் இங்கு குறிப்பிடத்தக்கவை. அஹதிய்யாப் பாடசாலைகள் மத்திய சம்மேளனம் முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்தப் பங்களிப்பினை நன்றியுணர்வோடு நோக்குகிறது.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கை பூராவும் எமது இளைய தலை முறையினரான பாடசாலைப் பிள்ளைகளுக்கு இஸ்லாமிய அறிவையும் உணர்வையும் ஊட்டி தூய இஸ்லாமிய ஷரிஆவின் வழியில் நடாத்தும் பொறுப்பையேற்று செயற்பட்டு வரும் அஹதிய்யாவின் முன்னோடிகள், அதன் தொண்டர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் அல்லாஹ்வின் அருளுக்குரியவர்கள் என்பதை கூறவிரும்புகிறோம்.

அஹதிய்யாவின் ஸ்தாபகத்தலைவர் மர்ஹூம் எம்.எச்.அப்துல் அஸீஸ் அவர்களைத் தொடர்ந்து எம்மோடு பணியாற்றியாற்றுகின்ற தலைவர்கள், நிருவாகிகள் யாவருக்கும் இவ்விஸ்தாபனத்தை வழிநடாத்திச் செல்வதற்கான மனோபலத்தையும் உடற்சுகத்தையும் நல்க வேண்டுமென மத்திய அஹதிய்யா சம்மேளனம் பிரார்த்திக் கின்றோம்.

மத்திய அஹதிய்யா சம்மேளனம் 1988 ஆம் ஆண்டு பொதுப் பாடத்திட்டத்தை வகுத்தது, இதனைத் தொடர்ந்து முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தேசிய ரீதியாக 2003 ஆம் ஆண்டு பொதுப்பாடத்திட்டத்தனை அறிமுகஞ் செய்தது. 2005 ஆம் ஆண்டு முதல் தேசிய மட்டத்தில் அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சைகள் இடம் பெற்றாலும் பரீட்சைகளுக்கான பாடநூல்கள் எதுவும் இல்லா திருந்தமை பெரும் குறைபாடாக இருந்தது. இதனால் இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களது எண்ணிக்கையும் குறைவாக இருந்ததுடன் விண்ணப்பித்தோருள் பரீட்சைக்குத் தோற்றாமலிருப்போரின் எண்ணிக்கையும் கணிசமாயிருந்தது.

மேற்படி குறைபாட்டை முன்னாள் முஸ்லிம் சமய, பண்பாட்டலு வல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எல். எம். நவவி அவர்களிடம் எடுத்துக்கூறியபோது அவர் தேவையான நூல்களைத் தயாரித்து வெளியிட முன்வந்தார். அவர் விட்ட இடத்தில் இருந்து இப்பணியை சிறப்பாக தொடர்கின்ற பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம். எச். எம். ஸமீல் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது.

இப்பணியில் ஒத்துழைத்த அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக. அவர்களின் பணியை அங்கீகரிப்பானாக.

**மௌலவி எம். எச். எம். லாபிர்,**
மத்திய அஹதிய்யா சம்மேளனம்,
பாடத்திட்டக் குழுத்தலைவர்.

# பதிப்புரை

## பிஸ்மில்லாஹிர்றஹ்மானிர் ரஹீம்

சர்வ புகழும் எல்லாம் வல்ல அல்லாஹ் ஒருவனுக்கே உரித்தாகட்டும்! அல்ஹம்துலில்லாஹ் !

"(எனக்கு வழிப்பட்டு என்னை) வணங்குவதற்கன்றி ஜின்களையும் மனிதர்களையும் நான் சிருஷ்டிக்கவில்லை."(அல்குர்ஆன் - 51 : 56)

இவ்வுலகில் மானிட வர்க்கம் படைக்கப்பட்டதன் நோக்கம் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை அடிச்சுவடுகளை முறையாக பின்பற்றி முஸ்லிமாக வாழ்ந்து மரணிப்பதே யாகும். அல்லாஹ்வின் அடியார்கள் என்ற வகையில் ஒவ்வொரு முஸ்லிமும் ஆத்மீக சிந்தனையுடன் தனது வாழ்வை இபாதத்துடன் இணைத்துக் கொள்வது இன்றியமையாததாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருள்வாக்கு பின்வருமாறு சான்று பகர்கின்றது : "இவ்வுலகத்தில் அல்லாஹ் ஒருவனுக்கு நன்மையை நாடினால் அவனுக்கு மார்க்கத்தில் தெளிவான விளக்கத்தை வழங்குகிறான்." (அல்ஹதீஸ்)

மேற்படி இறைவசனத்திற்கும் நபி (ஸல்) அவர்களின் போதனைக்கும் ஏற்ப மார்க்கத்துடன் தொடர்புடையவனாக வாழ்வது கட்டாயக் கடமையாகும். இவ்வாறாக ஒரு முஸ்லிம் இறையச்சம், பொறுமை, சகிப்புத்தன்மை, நல்லொழுக்கம், நற்பண்புகளுடன் வாழ்வதற்கு இஸ்லாமிய சன்மார்க்கக் கல்வியை பெற்றுக் கொள்வது இன்றியமையாத தாகும். மார்க்கக் கல்வியை பெறுவது உண்மையான மு.ஃ.மினாக வாழ்வதற்கு வழி வகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நல்லொழுக்கமுடைய ஒரு சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இன்று நாடளாவியரீதியில் பல இஸ்லாமிய ஷரீஆ கல்வி நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் தங்களாலான பங்களிப்புகளைச் செய்து வருவது உண்மையில் போற்றத்தக்கதாகும்.

மேற்படி நோக்கத்தை மையமாகக் கொண்டு சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேல் அஹதிய்யா கல்வியை மேம்படுத்துவதற்காக திட்டங்களை வகுத்து செயற்பட்டுக் கொண்டிருக்கும் மத்திய அஹதிய்யா சம்மேளன தலைவர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் பணி என்றும் பாராட்டத்தக்கதாகும்.

அத்துடன் இந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம் பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

குறிப்பாக அரபுக் கல்லூரிகள், அஹதிய்யா பாடசாலைகள், குர்ஆன் மத்ரஸாக்கள் போன்ற இஸ்லாமிய கல்வி நிறுவனங்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதிலும், பௌதிக வளங்களை விரிவுபடுத்துவதிலும் இத்திணைக்களம் அதிக அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. இவற்றுள் அஹதிய்யா பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பல திட்டங்களை வகுத்து செயற்பட்டு வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வகையில் முதல் பணியாக அஹதிய்யா மற்றும் குர்ஆன் மத்ரஸாக்களுக்கான பாடத்திட்டத்தினை 2003 ஆம் ஆண்டு வெளியிட்டு வைத்தமையும் இப்பாடத்திட்டத்திற்கமைவாக 2005 ஆம் ஆண்டு அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சையை நடாத்துவதற்கு இத்திணைக்களம் நிதியுதவி வழங்கி தேவையான ஒழுங்குகளை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் 2008 ஆம் ஆண்டு இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சையையும் பரீட்சைத்திணைக்களத்தின் மூலமாக நடாத்துவதற்கு சகல நடவடிக்கை களையும் இத்திணைக்களம் மேற்கொண்டது. மேலும் 2008 ஆம் ஆண்டு அஹதிய்யா பாலர் வகுப்பு முதல் இஸ்லாமிய தீனிய்யாத் தர்மாச்சார்ய பரீட்சை வரைக்குமான பாடத்திட்டங்களை வகுத்து தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் இத்திணைக்களம் வருடந்தோறும் அஹதிய்யா ஆசிரிய ஆசிரியைகளுக்கான சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்குதல்; கருத்தரங்குகளை ஏற்பாடு செய்தல் போன்றவற்றையும் நடை முறைப்படுத்தி வருகின்றது.

குறிப்பாக அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் மற்றும் இஸ்லாமிய தீனிய்யாத் (தர்மாச்சார்ய) பரீட்சைகளுக்கு தோற்றுபவர்கள் பாடப் புத்தகங்கள் இல்லாததன் காரணமாக பரீட்சைக்கு தோற்றுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை கருத்திற்கொண்டு பரீட்சைகளுக்கு ஏற்றவிதமாக பாடப்புத்தகங்களை உருவாக்கும் பணியை எமது திணைக்களம் மேற்கொண்டது.

மேற்படி நூல்களை வெளியிடுவதற்கும் மற்றும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் முன்னோடியாக விளங்கி, ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய முன்னாள் பணிப்பாளர்களான அஷ்ஷெய்க் Y. L. M. நவவி அவர்களுக்கும் அஷ்ஷெய்க் M. I. அமீர் அவர்களுக்கும் இந்நூல் எவ்வித தங்கு தடையுமின்றி துரிதமாக வெளிவர காரணமாக இருந்த தற்போதைய பணிப்பாளர் அஷ்ஷெய்க் M. H. M. ஸமீல் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

இப்பாடப் புத்தகத்தை வடிவமைத்து பிரசுரிப்பதற்கு எல்லா வகையிலும் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா கலாபீடப் பணிப்பாளர் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி மற்றும் பிரதிப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ. சீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இப்பணியை செவ்வனே முடிப்பதற்கு ஒத்துழைப்பும் அர்ப்பணிப்பும் வழங்கியவர்களையும் நன்றியுடன் ஞாபகப்படுத்திக் கொள்கின்றேன்.

இப்புத்தகம் நூலுருவில் வெளிவருவதற்கு பல சிரமங்களுக்கு மத்தியில் பாடவிதானங்களுக்கேற்ப பாடங்களை எழுதி வடிவமைத்து தந்த எழுத்தாளர் குழு அங்கத்தவர்களான பேராதனை பல்கலைக் கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் எம். எம். எம். ஸாபிர், திஹாரி அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியின் ஆசிரியர் எம். எஸ். எம். பூசரி, கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியின் முகாமையாளர் அஷ்ஷெய்க் ஏ. பி. மிஹ்லார் (நளீமி),

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஜனாப் ஜவ்பர் ஹுஸைன், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். என். கபூர்டீன், மற்றும் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் யு. எல். ஏ. அமீர், ஆசிரிய ஆலோசகர் அஷ்ஷெய்க் நவாஸ் சனூர்டீன் ஆகியோருக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இப்புத்தகத்தினை செம்மைப்படுத்தி, வடிவமைத்து தந்தவர்களான முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் முன்னாள் செயலாளர் அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல், சிரேஷ்ட விரிவுரையாளரும் ஒலுவில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பீடாதிபதியுமான கலாநிதி மௌலவி எம். எஸ். எம். ஜலால்தீன் (கபூரி) மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் வளவாளர், அல்ஹாஜ் எம். எச். எம் நாளிர், மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பிரதம செயல்திட்ட அதிகாரி அஷ்ஷெய்க் எம். எச். எம். புகாரி (நளீமி) ஆகியோருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை நூலாக்குவதற்கு ஆரம்பம் முதல் இன்று வரை என்னுடன் இணைப்பாளராக செயலாற்றிய மௌலவி எம். எச். எம். லாபீர் (கபூரி) மற்றும் அல்முபாரக் தேசிய பாடசாலை சிரேஷ்ட ஆசிரியை திருமதி எம். டீ. எஸ். றுவைதா அவர்களுக்கும் இப்புத்தகம் நூல் வடிவில் வெளிவருவதற்கு பல வகைகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய ஜாமிஆ நளீமிய்யா சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம். ஜே. எம். அறபாத் கரீம் (நளீமி), அஷ்ஷெய்க் எம். ஏ. எம். அஸ்கர் (நளீமி) அவர்களுக்கும் மேலும் ஒத்துழைப்பு நல்கிய எமது திணைக்கள அதிகாரிகளான அஷ்ஷெய்க் எம். ஐ. முனீர் (நளீமி), திருமதி எம். ஐ. ரஸீனா, அல்ஹாஜ் ஏ. ஏ. எம். அஸ்ரின், திருமதி எம். வை. எப். இன்சிபா, மற்றும் இப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய திணைக்கள அனைத்து அதிகாரிகளுக்கும், சிற்றூழியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இப்புத்தகத்தை கணினி வடிவமைத்துத் தந்த திருமதி எம். எப். ஷாமிலா, திருமதி எம். எச். எஸ். பாத்திமா மஹ்ஸனி, திருமதி எம். எச். எப். ரிஸானா ஆகியோருக்கும் மற்றும் இப்புத்தகத்தின் அட்டைப்படத்தை வடிவமைத்துத் தந்த ஜனாப் அஸார் வஸீர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்றும் அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கணினிப் பிரிவில் கடமையாற்றும் திருமதி ஏ. என். ஹிதாயா அவர்களுக்கும் எமது திணைக்களத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடநூல் சம்பந்தமாக ஏதேனும் ஆலோசனைகளும் கருத்துக் களும் இருப்பின் மறுபதிப்பில் பிரசுரிப்பதற்கு ஏதுவாக முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். எனவே இப்பணியில் ஈடுபட்ட சகலரதும் முயற்சியை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொள்வதுடன் உரிய பயனை அடைவதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் நல்லருள் பாலிப்பானாக!

ஆமீன் !!

**மௌலவி எம். எச். நூறுல் அமீன்**,
உதவிப்பணிப்பாளர்,
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
திணைக்களம்.

முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
180 T. B. ஜாயா மாவத்தை,
கொழும்பு - 10.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 01. | வரலாறு பற்றிய இஸ்லாமிய நோக்கு | 01 |
| 02. | வரலாற்று கட்டங்கள்-நபி (ஸல்) அவர்களின் காலம் | 05 |
| 03. | குலபாஉர் ராஷிதூன்கள் காலம் | 13 |
| 04. | உமையாக்கள் காலம் | 38 |
| 05. | அப்பாஸியர் | 59 |
| 06. | ஏனைய அரசுகள் - ஸ்பானிய உமையா ஆட்சி | 68 |
| 07. | முகலாயர் ஆட்சி | 96 |
| 08. | துருக்கிய உஸ்மானியராட்சி | 113 |
| 09. | தற்கால முஸ்லிம் உலகம் | 123 |
| 10. | இஸ்லாமிய கலைகள் - விஞ்ஞானம் | 136 |
| 11. | தத்துவம் | 142 |
| 12. | மருத்துவம் | 147 |
| 13. | வானவியல் | 155 |
| 14. | புவியியல் | 162 |
| 15. | வரலாறு | 169 |
| 16. | அழகியற் கலைகள் | 175 |
| 17. | மஸ்ஜிதுகளின் பங்களிப்பு | 195 |
| 18. | இலங்கை முஸ்லிம்களின் வரலாறு | 204 |
| 19. | முஸ்லிம் வரலாற்று நாயகர்கள் | 232 |
| 20. | சிந்தனையாளர்கள் சீர்திருத்தவாதிகள் | 266 |

# அஸ்ஸிறா வத்தாரீக் (இஸ்லாமிய வரலாறு)
# நூல் அறிமுகம்

இஸ்லாம் இஸ்லாமிய நாகரிகம் என்பன ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்கமுடியாத இரு அம்சங்களாகும. இஸ்லாமிய நாகரிகததை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இவ்வரலாற்று நூலானது இஸ்லாமிய நாகரிகம், வரலாறு, இத்துறைக்கு முஸ்லிம் அறிஞர்கள் ஆற்றிய பங்களிப்புக்கள் என்ற பிரதான அம்சங்கள் உள்ளடக்கியமாக எழுதப்பட்டுள்ளது.

இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தினன் அஹதியா மாணவர் களுக்கான இறுதிப்பரீட்சை தீனிய்யாத் பரீட்சை முதலியவைகளை நடாத்தப்படு அஸ்ஸீரா வத்தாரீக் என்ற பாடத்துக்குத் தயாராகும் பரீட்சார்திகளுக்கான ஒரு பாடநூலாக இந்நூல் அமையப் பெற்றுள்ளது.

பாடத்திட்டத்தின் பிரகாரம்இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபிய வரலாறு தொடக்கம் அறிவியல் தறைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு. சமகால முஸ்லிம் உலகு என்ற தலைப்புக்களுக்கிடையிலானதொரு பாடப்பரப்பை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்து காணப்படுகிறது. பரீட்சார்த்திகளின் தெவைக்கேற்ப இதன் தலைப்புக்களின் உள்ளடக்கம் ஆழ அகல, செறிவு கூடி குறைந்து காணப்படுகின்றது. இது ஒரு குறித்த மட்டத்தினரை அடிப்படையாகக் கொண்டிருந்தாலும் இந்நிலைக்கு குறைந்த, கூடிய தரத்தினருக்கும் இத்துறை சார்ந்ததொரு அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மிகப்பொருத்தமானதொரு நூலாக தென்படு கின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

துறை சார்ந்த அனுபவமும் அறிவும் பெற்றவர்கள் தணை கொண்டு இந்நூல் எழுதப்பட்டுள்ளமையானதுஇநநூலின்தன்மை மேலும் வலுப்பெறுவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் உதவியினால் உருவாக்கப்பட்ட பாடத்திட்டத்தினை அடிப்படையாகக்கொண்டு இந்நூலில் அமையப்பெற்றுள்ள உள்ளடக்கங்கள் பொருத்தமாகவும் அதற்கு வெளியில் செல்லாதும் எழுதப்பட்டுள்ளமை நோக்கத்தக்கதாகும்.

குறிப்பாக அந்நூலின் மூலம் இஸ்லாமிய வரலாற்றைப் படிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றமையானது சிறப்புக்குரியதொரு விடயமாக சுட்டிககாட்டப்படுகிறது.

நூலாக்கக் குழுவின் சார்பாக

**அல்ஹாஜ் எம். ஐ. எம். அமீன்**,
முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்.

பேராதனை பல்கலைக்கழகம்,
கண்டி.

# 01. வரலாறு பற்றிய இஸ்லாமிய நோக்கு
## (இஸ்லாமிய வரலாற்றின் தனித்துவமான பண்புகள்)

### இஸ்லாத்தின் பார்வையில் வரலாறு

வரலாறு என்பது மனித சமூகம் தோன்றிய காலந்தொட்டே தோற்றம் பெற்ற ஒரு கலையாகும். அது தொன்மைக் காலங்களில் இன்று போல் இலகுவான வடிவங்களில் காணப்படாத போதிலும், வாய்வழி மூலம் ஒரு தலைமுறையிடமிருந்து மற்றைய தலைமுறைக்கு கைமாறப்பட்டும், பின்னர் அடையாளங்கள், குறியீடுகள், சின்னங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் பாதுகாக்கப்பட்டும் பரிமாறப்பட்டும் வந்துள்ளது. எழுத்துக்கள், எழுது கருவிகள், கடதாசி போன்றவை தோற்றம் பெற்றதிலிருந்து அது தனக்கென தவிர்க்க முடியாத ஓர் இடத்தினை அடைந்து கொண்டது.

இத்துறைக்கு இஸ்லாம் முக்கியத்துவம் அளித்துள்ளதுடன் அதன் பக்கம் கவனம் செலுத்துமாறும் அறிவுறுத்துகின்றது. அல் குர்ஆன் ஓரிடத்தில்: "உமது மனதை திடப்படுத்துவதற்காக தூதர்களின் செய்திகளை நாம் உமக்கு சொல்லித் தருகிறோம், அவர்களது அனைத்து கதைகளிலும் சிந்திப்பவர்களுக்குப் படிப்பினை இருக்கிறது" எனக் குறிப்பிடுகின்றது. அதாவது முன்னோர்களின் வரலாற்றில் பின்வருவோருக்கு சிந்திக்கவும் படிப்பினை பெறவும் வாய்ப்பும் தேவையுமுள்ளதை அல்குர்ஆன் பல இடங்களில் குறிப்பிடுவதுடன், அல்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் நபிமார்கள், றஸூல்மார்கள் அவர்களது சமுதாயங்களுடன் தொடர்புபட்ட பல்வேறு சம்பவங்கள், வரலாற்று நிகழ்வுகள் உறுதிபடக் கூறப்படுவதும் வரலாற்றுக்கு இஸ்லாம் வழங்கும் முக்கியத்துவத்தினை சான்றுப்படுத்துகின்றது.

உலகிற் தோன்றிய ஒவ்வொரு சமூகத்திற்கும் தனியான வரலாறு இருக்கின்றது. அவை அனைத்துமே தத்தமது சந்ததிகள் பயன் பெறுவதற்காக அவற்றை விட்டுச் செல்லும். ஆயினும் உரிய வடிவில் அவை பாதுகாக்கப்படாதவிடத்து அவை காலத்தால் அழிந்து விடுவது தவிர்க்க முடியாது போய்விடும்.


4-CM14799

**இஸ்லாமிய வரலாறு தொகுக்கப்படலும் பின்னணிகளும்**

முஸ்லிம்கள் உலகளாவிய சமூகம் என்ற வகையில், உலகில் மனித இனத்தின் பிரசன்னம் தொடக்கம் யுக முடிவு வரையிலும் அவர்களது வரலாறு பேணப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இவ்வரலாற்றின் தொகுப்பு, பாதுகாப்பு, நம்பகத் தன்மை போன்றவற்றை எடுத்து நோக்கும் போது பின்வரும் மூன்று முக்கிய கட்டங்களைச் சுட்டிக்காட்ட முடியும் :

***முதலாம் கட்டம்*** :

இக்காலப்பகுதியில் வரலாறு தனித்துறையாகப் பதிவு செய்யப்பட வில்லை. நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் றாஷிதூன்களதும் காலப் பகுதிகளின் வரலாற்றுச் செய்திகள் வாய்மூலச் செய்திகளாகவே பரிமாறப்பட்டு வந்துள்ளன. இக்காலப்பகுதியில் அல்குர்ஆனும் அதுசார்ந்த விடயங்களுடன் ஹதீஸ்களும் ஓரளவு எழுத்துருப்பெற்றன. இஸ்லாமிய வரலாறு இவற்றுடன் நெருக்கமான உறவு கொண்டது என்ற வகையில் வரலாற்றுடன் தொடர்புபட்ட பல விடயங்கள் இப்பதிவுகளுள் இடம் பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஆயினும் வரலாறு என்னும் தனித்துறை பெரும்பாலும் உமையாக்கள் ஆட்சிக் காலத்திலேயே தொடங்கப் பெற்றுள்ளது. அத்துடன் அது தனிநபர் முயற்சி ஊக்கம் என்பவற்றிலேயே தங்கிக் காணப்பட்டது.

இக்காலப் பிரிவில் குறிப்பிட்ட சில நிகழ்வுகள் அல்லது சில பரம்பரை தொடர்பான தொகுப்புக்கள், ஏதேனுமொரு போர் தொடர்பான செய்திகள் போன்றன வாய்வழி மூலம், பள்ளிவாசல்கள், கற்கை அமர்வுகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் பொது உரைகள் மூலம் மக்களுக்கு கொண்டு செல்லப்பட்டன.

இப்பணியில் அக்காலப் பிரிவில் தலைசிறந்த பல முன்னணி அறிஞர்கள் காணப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். அவர்களுள் அகீல் இப்னு அபீதாலிப், அம்றுப்னு கவ்லா, அல் அக்ற.்.. இப்ன் ஹாபிஸ், மக்றமா பின் நவ்பல், ஜுபைர் பின் முத்இம் போன்றோர் ஜாஹிலிய்யக் காலம் தொடக்கம், இஸ்லாத்திலும் நீண்ட காலம் வாழ்ந்தோர் என்ற வகையில் அவர்களது வாய்மூல அறிவிப்புக்கள் வரவேற்புடையதாகக் காணப்பட்டன.

அத்துடன் இக்காலப் பகுதியில் அதாவது உமைய்யாக்கள் ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் வரலாற்றுத் தொகுப்பாளர்களாகப் பல

தனி நபர்களும் காணப்பட்டனர். உதாரணமாக : அப்fபான் பின் உஸ்மான், உர்வா பின் ஸுபைர், ஷர்ஹபீல் பின் ஹஸனா, ஸுஹ்ரீ போன்றோரைக் குறிப்பிடலாம்.

**இரண்டாம் கட்டம் :**

இக்காலப்பகுதி ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டு வரை தொடர்ந்தது. இப்பகுதியில் வாய்மூல வரலாற்றுச் செய்திகள் ஏனைய சிறு சிறு தொகுப்புக்களெல்லாம் நூலுருவாக்கல் நிலையை எட்டியிருந்தன. ஆயினும் அன்றைய வரலாற்றாளர்கள் நபி ஸல்லால்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வரலாறாகிய ஸீறாவிலேயே கூடுதல் கவனம் செலுத்தினர். அதனையடுத்து ஜாஹிலிய நிகழ்வுகள், பரம்பரைத் தொடர்கள், முன்னைய சமூகங்கள் பற்றிய செய்திகள் என்பன தனித் தனி தலைப்புக்களில் சேர்க்கப்பட்டு நூலாக்கம் பெற்றன. ஆயினும் அவை பூரணத்துவம் பெற்றிருக்கவில்லை.

இக்காலப் பகுதியில் வரலாற்று நிகழ்வுகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியை உள்ளடக்கியதாக சிறு சிறு நூல்களே எழுதப்பட்டன. அவ்வாறான தொகுப்பாளர்களில் குறிப்பிடத்தக்கோராக : அபூ முக்னிப், அல் ஹைதம் பின் அதீ, அல் வாகிதீ, நஸ்ர் இப்னு மஸாஹிம், போன்றோர் காணப்படுகின்றனர்.

**மூன்றாம் கட்டம்:**

இக்காலப்பிரிவிலேயே காலத்தை மையமாகக் கொண்டு அடுத்தடுத்து வரும் தலைப்புக்களை ஒரே நூலில் ஒன்றுசேர்த்தல், மானிட வரலாற்றை ஒருங்கே தொகுத்தல் போன்ற அடிப்படைகள் தோற்றம் பெற்றன.

இக்காலத் தொகுப்புக்களின் சிறப்பம்சங்கள் இப்னு இஸ்ஹாகினால் எழுதப்பட்டிருக்கும் "அஸ்ஸீறா அந்நபவிய்யா" எனும் நூலில் பிரதிபலிப்பதைக் காணமுடியும். இந்நிலை மூன்றாம் நூற்றாண்டு வரை காணப்பட்டது. அதனையடுத்து வந்த காலப் பகுதியில் வரலாறு தனக்கான தனித்துவத்துடன் ஸ்திரமடைந்தது. இதனை Chronology களில் காண முடியும். அவற்றுள் முக்கியத்துவமிக்கதாக "தாரீகுத் தபரீ" ஐக் குறிப்பிடலாம். இக்காலப்பிரிவு சிறப்புற்று விளங்குவதற்கு கடதாசி கண்டுபிடிக்கப்பட்டமை முக்கிய பின்னணியாகும்.

இக்காலப் பிரிவின் முக்கிய நூற்களாக தபரீயுடன், அபூ ஹனீபா, அத் தீனூரீ, அல் ய.்.கூபீ, இப்னு தய்பூர் போன்றோரின் நூற்களைக் குறிப்பிடலாம். இக்காலப் பகுதியிலேயே ஷாம், இராக், ஹிஜாஸ் போன்ற பகுதிகளில் வரலாற்றுக் கல்விக்கூடங்களும் நிறுவப்பட்டன.

**இஸ்லாமிய வரலாற்றின் சிறப்பம்சங்கள்**

இஸ்லாமிய வரலாறு ஏனைய வரலாறுகள் போன்றல்லாது இறை வேதங்கள், விசுவாசிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதால் அது ஏனையவற்றிற் காணப்பட முடியாத பல்வேறு விசேட அம்சம்களைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

- இஸ்லாமிய வரலாறு நபிமார்களுடனும் றஸுல்மார்களுடனும் தொடர்புபட்டது : அதாவது முதல் மனிதன் ஆதம் (அலை) அவர்கள் உலகுக்கு இறக்கப்பட்டமை தொடக்கம், இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வரையிலான அனைத்து நபிமார்களும், அவர்களை ஏற்றுக்கொண்டோரும், ஏகத்துவக் கொள்கையில் முரண்பாடுகளற்றவர்களாகக் காணப்படுவதால் அவர்களது வரலாற்றின் தொடர்ச்சியே இஸ்லாமிய வரலாறாகும். இது பற்றி அல்குர்ஆனும் நபிமொழிகளும் பல்வேறு இடங்களில் மிகத் தெளிவாகக் கருத்துரைத்திருக்கின்றன.

- இவ்வரலாறு பரந்துபட்டதாகும் : இவ்வரலாறு வெறுமனே மனித செயற்பாடுகளின் ஏதாவதொரு பக்கத்துடன் சுருங்கிவிட்டதல்ல, மாறாக அது மனிதனோடு மட்டுமல்லாது உலகின் அனைத்து படைப்பினங்கள் பற்றிய விவரங்கள் மறுமை பற்றிய விபரங்கள், மனித வாழ்வின் அனைத்துத் துறைகள் பற்றிய செய்திகளையும் சுமந்திருக்கின்றது.

- இஸ்லாமிய வரலாறு துல்லியமானதும் ஒழுக்க விதிகளுக்குட்பட்டது மாகும். இஸ்லாமிய வரலாற்றிற் பேணப்படுவது போன்ற ஒழுங்கு விதிகளும், கட்டமைப்புக்களும் ஏனைய வரலாறுகளிற் பேணப்படு வதில்லை. இஸ்லாமிய வரலாறு அல் குர்ஆனினதும் ஹதீதினதும் செல்வாக்குகளுக்கு உட்பட்டுள்ளமையால் அங்கு நம்பகத் தன்மை காக்கப்படுவதுடன் பெரும்பான்மையான செய்திகள் அறிவிப் பாளர்கள் தொடர்களுடன் பதியப்பட்டுள்ளன. உலகில் ஏனைய எந்த சமூகத்தை எடுத்து நோக்கினாலும் அவற்றின் வரலாற்றுச் செய்திகளில் புனைவுகள் இல்லாத நிலையோ அல்லது அறிவிப் பாளர் தொடர்களோ காணப்படமாட்டாது. இந்த வகையில்

இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த வரையிலும் யுக முடிவு வரையிலும் இதனை ஆய்வு செய்யவோ உறுதிகாணவோ அனைவருக்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. காரணம் அதில் அறிவிப்பாளர் தொடர் பேணப்படுவதாகும்.

- இஸ்லாமிய வரலாற்றில் தொடராக புத்தாக்கமும் உயிர்ப்பூட்டலும் காணப்படுகின்றன. அது சில சமயங்களில் பின்னடைவைச் சந்தித்த போதிலும் விரைவில் தன்னை சுதாகரித்துக் கொண்டுள்ளதுடன் அவற்றிற்கான மாற்றீடுகளையும் முன்வைத்திருக்கிறது.

அவ்வாறே நுட்பமும், விரிவானதும், மிக நீளமான பதிவேடுகளையும் கொண்ட சிறப்பு மிக்க வரலாறாக இஸ்லாமிய வரலாறு காணப்படுவது மறுக்க முடியாத ஒன்றாகும்.

## 02. வரலாற்றுக் கட்டங்கள்

*** நபி (ஸல்) அவர்களது காலம் :**

**• நுபுவ்வத்திற்கு முன்னர் :**

இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த வரையில் அது பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு காலப்பகுதியும் அவ்வப்போதைய நிகழ்வுகளுக்கேற்ப வித்தியாசங்களையும் சிறப்பம்சங்களையும் கொண்டிருப்பதனை வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அந்த வகையில் இவ்வரலாற்றின் முதற் கட்டமாகிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தை எடுத்து நோக்கும் போது, அதன் முதற் கட்டம் வேதங்களின் வழிகாட்டல்களிலிருந்து முற்றிலும் வெளியேறியிருந்த ஜாஹிலிய சமூகத்தின் மத்தியில் அமைந்து காணப்பட்டமையால், அவரது பிறப்பு முதல் நுபுவ்வத் வழங்கப்படும் வரை பரீட்சைக்களமாகவும் ஆளுமை உருவாக்கமாகவுமே காணப் பட்டது.

தந்தையை வாழ்நாளில் ஒரு தடவையேனும் பார்த்திராத, சிறுவயதில் தாயையும் இழந்து விட்ட அவர்களது வாழ்வு, குடும்ப உறவினர்களின் பராமரிப்பிலேயே தங்கியிருந்தது. ஆயினும், பெற்றோரின் அரவணைப்பிலும் செல்வச் செழிப்பிலும் வளர்ந்தோரைப் பார்க்கிலும் பக்குவமானதும் பாராட்டுக்குரியதாகவுமே அவர்களது பண்பாடுகள் அமைந்திருந்தன. அதில் எதிர்காலத்தில் அவர்கள் மீது

சுமத்தப்படவிருந்த உயரிய பணிக்கான பொருத்தப்பாடு மிகத் துல்லியமாக வெளிப்பட்டது.

இதுவே, அன்றைய நெறி தவறிய ஜாஹிலிய சமூகத்தின் மத்தியிற் கூட அவர்களது நடத்தைகளுக்கும் ஆலோசனைகளுக்கும் உயரிய ஸ்தானத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்தது. அநாதை என்ற வகையில் குடும்பம், பாட்டனார், தந்தையின் சகோதரர்கள் போன்றோரின் பராமரிப்பில் வளர்ந்தமையால் தம்மைப் பராமரிப் போருக்கு சிரமம் கொடுக்கக்கூடாது என்ற ஆதங்கத்தால் சிறு பராயத்திலிருந்தே ஆடு மேய்த்தல், கூலித் தொழில்கள் மூலம் சம்பாதிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார்கள். ஆதலால், கல்வி கற்கும் வாய்ப்பினை இழந்து எழுத வாசிக்கத் தெரியாதவராகவே வளர்ந்தார்கள். வாலிபத்தை அடைந்த வேளை, பெரிய தந்தையுடன் இணைந்து நேர்மையான வணிகத்தில் ஈடுபாடு கொண்டார்கள். அதன் தொடர்ச்சியே சீமாட்டி கதீஜாவுடனான அவர்களது திருமணமாகும். இதனால் செல்வம் நிறைந்த ஒரு சூழலுக்கு மாறிய போதிலும், நபி (ஸல்) அவர்கள் அதனை சமூக மேம்பாட்டுக்கும் தமது உயரிய பண்பாடுகளுக்கும் மேலும் வலுச்சேர்ப்பதாகவே பயன்படுத்திக் கொண்டார்கள்.

நாற்பது ஆண்டுகள் வரையிலும் நெறிபுறழா வாழ்க்கை முறையினைக் கடைப்பிடித்த அவர்கள், அக்கால மக்களின் பிரச்சினை களைத் தீர்த்து வைக்கவும், சொத்துக்களைப் பாதுகாக்கவும் தகுதியானவர் என பொதுசன அங்கீகாரம் பெற்றிருந்தார்கள்.

நபியாக தேர்ந்தெடுக்கப்படு முன்னரே அதற்கான அடையாளங்கள் அவர்களிடம் வெளிப்பட்ட வண்ணமிருந்தன. அது மட்டுமல்லாது முன்னைய வேதங்களைக் கற்றறிந்திருந்த பாதிரிமார் உட்பட ஏனையோரும், அவர்களது நடத்தைகள், அங்க அடையாளங்கள் ஊடாக அவர்களது விடயத்தில் அறிவுறுத்தல்களை வழங்கினார்கள், ஆதலால், நபியவர்களது குடும்பம் அவர்கள் மீது மிகுந்த அக்கறை காட்டியதுடன் அவர்களது பாதுகாப்பிலும் கவனம் செலுத்தியது.

இவ்வாறு சுமார் நாற்பது ஆண்டுகள் பல்வேறு கலாசார பண்பாட்டு சீர்கேடுகள் தமது கண்முன்னே நடைபெறுவதைக் கண்டு கவலையும் வேதனையும் அடைவது மாட்டுமல்லாது, தனிமையில் ஒதுங்கியிருந்து சீர்திருத்தம் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தர்கள். இந்நிலையிலேயே

அவர்கள் அல்லாஹ்வினால் சர்வதேச சீர்திருத்தப் பணியாகிய இறுதித் தூதுத்துவத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

**நுபுவ்வத்திற்கு பின்னரான நபி (ஸல்) அவர்களின் மக்கா வாழ்க்கை**

மேற்சொன்னவாறு நாற்பதாண்டுகளை மக்காவில் கழித்த நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராகப் பிரகடனம் செய்யப் பட்டதிலிருந்து அவர்களது வாழ்க்கை ஹிஜ்றத்தின் முன்னரான மக்கா வாழ்க்கை, ஹிஜ்றத்தின் பின்னரான மதீனா வாழ்க்கை என முக்கியமான இரு கட்டங்களாக நோக்கப்படுகின்றது. இஸ்லாமிய வரலாற்றைப் பொறுத்த மட்டிலும் இவ்விரு பிரிவுகளையும் நுட்பமாக அறிந்தும் விளங்கியும் கொள்வது உலகளாவிய முஸ்லிம் சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

ஹிறாக் குகையில் முதன் முதலாக நபித்துவத்துவத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள செய்தி நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஏகத்துவத்தை பகிரங்கப்படுத்தும் கட்டளைகள் அல்லாஹ்வினால் பிறப்பிக்கப்பட்டன. சற்றும் மனம் தளராது அசாதாரண தைரியத்துடன் அவர்களது உறவினர்கள், குடும்பத்தினர் அனைவரையும் ஒன்று திரட்டி தனக்கிருந்த சமூக அங்கீகாரத்தை உறுதிசெய்து கொண்டு அல்லாஹ்வின் தூதைப் பிரகடனம் செய்தார்கள்.

இதனால் அன்றுவரை அந்த சமூகத்தினால் மனதாரப் புகழப்பட்டும் கண்ணியப்படுத்தப்பட்டும் காணப்பட்ட அவர்களது சமூக வாழ்வு முற்றிலும் வேறுபட்டதொரு சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டது. போற்றிய வர்கள் தூற்றவாரம்பித்தனர். பல்வேறு சந்தேகங்களுக்குள்ளானதுடன் யதார்த்தத்தினைப் புரிந்து கொள்ளாது அவரவர் கற்பனைக்கேற்ப வினாவெழுப்பினர். இவை தவிர தமது கோத்திரத்தினுள் ஏகபோக உரிமை பெற்றிருந்த அன்றைய தலைவர்கள், நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரத்தினை தம்மை எதிர்நோக்கும் முக்கிய சவாலாகக் கருதி முறியடிப்பதற்காக களமிறங்கினர்.

இதனால், நபி (ஸல்) அவர்களும், அவர்களை எவ்வித மாற்றுக் கேள்விகளுக்கும் உட்படுத்தாது முதற்கட்டத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட சிறு தொகை முஸ்லிம்களும் அளவிட முடியா துயரங்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டது.

மனம்போன போக்கில் இன்பம் கண்டு கொண்டிருந்த மக்களுக்குக் கட்டுப்பாடான, ஆனால் சுபீட்சம் நிறைந்த வாழ்க்கை நெறியினை விளங்கிக் கொள்வதும் ஜீரணிப்பதும் கடினமாகத் தோன்றியது. இவையனைத்திற்கும் மேலாக அவர்கள் உயிராக மதித்து வந்த விக்கிரகங்களை நிராகரிப்பதை அவர்களால் நினைத்துப் பார்க்கவே முடியாமலிருந்தது.

இதன் எதிர் விளைவு, யாரை தமது நம்பிக்கை நட்சத்திரமாக ஏற்றிருந்தனரோ அவரது புத்தியில் சந்தேகம் கொள்ளும் நிலைக்கு அவர்களை மாற்றியது. அன்பிற்குப் பதிலாக அடாவடித்தனங்களைக் கட்டவிழ்த்து விட்டனர். நிலைமை மென்மேலும் மோசமடைந்தே சென்றது. நேரடித் தாக்குதல்களை நடாத்தியது மட்டுமல்லாது, பொருளாதாரத் தடை, சமூகத் தடையெனப் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி மாற்றங்காண முற்பட்டனர். ஆயினும், நபி (ஸல்) அவர்களது பிரச்சாரம் வஹியை மையமாகக் கொண்டது என்ற வகையில் அதில் எவ்வித மாற்றமும் இடம் பெறவில்லை. மாறாக மேலும் திடம் பொருந்தியதாகவே மாறிக் கொண்டிருந்தது.

இதனிடையில் ஓரளவேனும் மாற்றத்தை எதிர்பார்த்து நபி (ஸல்) அவர்கள் தாயிப் சென்று தனது பிரச்சாரத்திற்கு சாதகமான நிலையினைத் தேடினார்கள். அதுவும் வெற்றியளிக்கவில்லை. இந்நிலையில் ஸஹாபாக்களை இருமுறை அபீஸீனியாவிற்கு அனுப்பி வைத்தார்கள். இருந்த போதிலும் திருப்தியான நிலை தோன்றவில்லை, இவையனைத்திற்கும் மத்தியிலும் நபி (ஸல்) அவர்களின் பிரச்சாரம் வெற்றியை நோக்கியே பயணித்துக் கொண்டிருந்தது. நாள்தோறும் புதிய, புதிய அங்கத்தவர்கள் நபி (ஸல்) அவர்களின் தலைமையின் கீழ் இஸ்லாத்தில் இணைந்து கொண்டேயிருந்தனர். இத்தகைய நிலையிலும் இஸ்லாத்தின் எதிரிகளான மக்கத்துக் குறைஷிகள், புதிய பிரச்சாரத்தைத்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தார்களே தவிர, நபி (ஸல்) அவர்களின் சமூக வாழ்வில் அவர்களை பொய்யர் என்றோ, நாணயமற்றவர் என்றோ கூற முற்படவுமில்லை, அதனை ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் தயாராயிருக்கவில்லை. அதனை அவர்கள் உள்ளூரில் மட்டுமல்லாது பிற நாட்டுப் பிரதிநிதிகளிடமும் கூட உறுதி செய்திருந்தனர். இது நபி (ஸல்) அவர்களது ஆளுமைக்குக் கிடைத்த மாபெரும் அங்கீகாரம் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு சுமார் பதின்மூன்று ஆண்டுகள் கழிந்திருந்தன. நபியவர்களும் தனது 53ம் வயதை எட்டியிருந்தார்கள். இந்நிலையிலேயே

இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான திருப்பு முனையான ஓர் அத்தியாயம் தொடங்கப்பட்டது.

## நபி (ஸல்) அவர்களின் மதீனா வாழ்க்கை

இஸ்லாமிய வரலாற்றில் அதி முக்கிய இடம் பிடித்துக் கொண்ட இந்நிகழ்வு சுமார் மூன்று வருட காலத்திற்கும் கூடுதலாக மிகத் துல்லியமாகத் திட்டமிடப்பட்ட பின்னரே மேற்கொள்ளப்பட்டது. இதுவே இஸ்லாமிய அரசொன்றின் தோற்றத்தின் முதற் கட்டமாகும்.

ஹிஜ்றத்திற்கு முந்திய இரு ஆண்டுகளிலும் ஹஜ்ஜுக்கு வருகை தந்திருந்த மதீனத்துக் குழுக்களுடன் மிக அந்தரங்கமான சந்திப்புக்களை ஏற்படுத்தி, அவர்களது உள்ளார்ந்த நிலைப்பாடுகளில் திருப்தியான பதில் கிடைக்கவே தமது பிரதிநிதியும் இஸ்லாத்தின் முதல் தூதுவருமான முஸ்அப் பின் உமைர் (றழி) அவர்களை மதீனாவுக்கு அனுப்பி இஸ்லாத்தை ஏற்றிருந்தவர்களுக்கு அல் குர்ஆனை கற்பிக்கவும், அங்கு இஸ்லாமியப் பிரசாரத்தைக் கண்காணிக்கவும் ஏற்பாடு செய்தார்கள். அவர் மிகக் குறுகிய காலப் பகுதிக்குள்ளேயே பெரும் எண்ணிக்கை யிலானோரை இஸ்லாத்தில் இணைத்ததுடன் மிகத் திருப்திகரமான களநிலையினையும் உருவாக்கினார்.

இவ்வாறு சாதகமான சமிக்ஞைகள் கிடைக்கப் பெறவே இறுதியாக, ஹிஜ்றத்திற்கு அண்மித்த காலப் பகுதியில் மதீனாவிலிருந்து வருகை தந்திருந்த முக்கியஸ்தர்களுடன் பைஅதுல் அகபா-1, பைஅதுல் அகபா-2 எனும் இரு பாதுகாப்பு ஒப்பந்தங்களையும் உறுதி மொழியையும் பெற்றுக் கொண்டு புறப்படுவதற்கு அல்லாஹ்வுடைய அனுமதியை எதிர்பார்த்திருந்தார்கள். சில மாதங்கள் கழிந்துவிட்ட பின்னர் ஹிஜ்றத்திற்கான அனுமதியும் கிடைக்கப் பெற்றது. எனவே அவசர அவசரமாகத் தான் பிறந்து வளர்ந்த, சுமார் 53 ஆண்டுகள் வாழ்ந்த மண்ணிலிருந்து உடைமைகள், உளமாற நேசிக்கும் அல்லாஹ்வின் ஆலயமாகிய க.்.பா, தனது உற்றார் உறவினர்கள் அனைத்தையும் நிர்ப்பந்தமாக விட்டுவிட்டு இரவோடிரவாக உயிராபத்துக் களும் பல்வேறு சிரமங்களும் நிறைந்த பயணத்தை பல நாட்கள் தொடர்ந்து, எவ்வித பரீச்சயமோ, முன் அனுபவங்களோ இல்லாத ஒரு புதிய தேசத்தினுட் பிரவேசித்தார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இத்தகைய விரைவானதும் பாரியதுமான மாற்றங்கள் மதீனத்து சமூகத்தில் குறுகிய கால இடைவெளிக்குள் இடம்பெறுவதற்கு, அன்று

மதீனாவிற் காணப்பட்ட அவ்ஸ், கஸ்றஜ் உள்ளக முரண்பாடுகள், அவற்றை அடிக்கடி தூண்டி விடும் யூதர்களின் சதிமுயற்சிகள், இவற்றினைக் களைவதற்காக மதீனத்து மக்கள் தேடிக்கொண்டிருந்த தகைமைமிகு தலைமைத்துவம் நபி (ஸல்) அவர்களூடாக கிடைக்கப்பெறும் எனும் நம்பிக்கை, வரலாறு நெடுகிலும் யூதர்களால் விடுக்கப்பட்டு வந்த அச்சுறுத்தலை இல்லாதொழிக்க அவர்களை முந்திக் கொண்டு நபியவர்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல், மேலும் நபி (ஸல்) அவர்கள் போதித்த ஏகத்துவக் கொள்கையினை விளங்கிக் கொள்ளும் பக்குவம் மதீனா மக்களிடம் அதிகம் காணப்பட்டமை, மக்காவில் நபியவர்களுக்கிருந்த குலப் போட்டி நிலை அங்கு தலைதூக்க வேண்டிய பின்னணியில்லாமை போன்ற பல காரணிகள் மதீனா சூழலை ஓரளவு இலகுவாக மாற்றியமைக்கக் கூடிய சாதக நிலையினை ஏற்படுத்தியிருந்தன என்பது அவதானிக்கப்பட வேண்டியதாகும்.

பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் அகதிகளாக புதிய பிரதேசத்திற் குடியேறியமையால், இயல்பு வாழ்வினைத் தொடர பல முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவை அவர்களுக்குக் காணப்பட்டது. அதாவது மதீனத்து அறபு மக்களைப் பொறுத்த வரையில் சாதகமான நிலை காணப்பட்ட பொழுதிலும், அன்றைய மதீனாவின் பொருளாதாரப் பின்னணியில் யூதர்களின் செல்வாக்கு அதிகமாகவும், மதீனத்துப் பிரபல கோத்திரங்கள் திட்டமிட்டுத் துண்டாடப்பட்டும், பொருளாதார வளம் குன்றியும் காணப்பட்டமையாலும் முஹாஜிர்களான மக்கா வாசிகள் தங்களது அனைத்து உடமைகளையும் இழந்து வெற்றுக்கரங்களுடனேயே மதீனா வந்தடைந்தமையால் மதீனாவின் இஸ்லாமிய சமூகம் தங்களது சக்திக்கப்பாலும் பல சுமைகளைச் சுமக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை காணப்பட்டது. ஆயினும் கூட, எவ்வித தயக்கமுமின்றி அவையனைத்தையும் எதிர்கொள்ள அவர்கள் துணிந்து நின்றனர். எனவே, அன்றைய சூழ்நிலையில் நபி (ஸல்) அவர்களது சமூக உருவாக்கப் பணியின் முன்னால் பலம் மிக்க சவால்களாக பின்வருவன காணப்பட்டன.

1. புதிய பிரதேசத்தில் இஸ்லாத்தின் இருப்பைப் பாதுகாப்பது

2. முஹாஜிர்களது இயல்புகளுக்கும் அன்ஸார்களது இயல்புகளுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் உறவுகளை ஏற்படுத்துவது

3. முஸ்லிம்களைத் துரத்திப் பிடிக்கும் வக்கிரப் போக்கினைக் கடைப்பிடித்துக் கொண்டிருந்த மக்கத்துக் குறைஷிகளை எதிர்கொள்வது

4. நபி (ஸல்) அவர்களுக்கும் இஸ்லாத்திற்கும் எதிரான எல்லை கடந்த காழ்ப்புணர்வுடன் காணப்பட்ட மதீனத்து யூதர்களை முறையாகக் கையாள்வது.

5. முஸ்லிம்களை ஒடுக்கிவிட திரைமறைவில் திட்டம் தீட்டும் நயவஞ்சகர்களின் சதி முயற்சிகள்

6. சிறுபான்மையான முஸ்லிம் சமூகத்தைப் பீடித்திருந்த பொருளாதாரப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு சவால்களை முறியடித்து வெற்றிகரமான ஒரு சமூக உருவாக்கத்தின் அடித்தளத்தினை இடுவதற்கான பாரிய சுமையொன்றினைத் தாங்கிக் கொண்டார்கள் நபி (ஸல்) அவர்கள்.

இப்பணியின் முதற்கட்டமாக முஹாஜிர்கள் மத்தியிலுள்ள கூட்டுப் பொறுப்புக்களை உணர்த்தி அவர்களையும் அன்ஸார்களையும் அவரவர் நிலைமைக்குப் பொருத்தமான வகையில் சகோதர பிணைப்பினை ஏற்படுத்தி, அவர்கள் மத்தியில் இடைவெளிகளைக் களைந்து அன்னியோன்ய உறவினை ஏற்படுத்தினார்கள். அத்துடன் மதீனாவாசிகளான அவ்ஸ்-கஸ்றஜ் கிளையினர் மத்தியில் நிலவிய முரண்பாடுகளை நீக்கி பரஸ்பர உறவினை ஏற்படுத்தினார்கள். அடுத்து மதீனாவின் உள்ளிருந்து பல சதித்திட்டங்களை தீட்டி வந்த யூதர்களையும் தனித்தியங்க முடியாவண்ணம் மதீனாவின் ஒருங் கிணைக்கப்பட்ட சமூக அமைப்பினுள் இணைத்துக் கொண்டார்கள். இவையனைத்தையும் வெறுமனே வாய்ப் பேச்சுக்களாக விட்டுவிடாது ஒப்பந்தங்களாகவும் உறுதி மொழிகளாகவும் நடைமுறைப்படுத் தினார்கள். இவற்றில் யூதர்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட மதீனா சாசனம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அத்துடன் பல்லின சமூகங்கள் மத்தியில் ஓர் இஸ்லாமிய அரசின் சாத்தியத்திற்கு சிறந்த முன்னுதாரணமாகும்.

தனது சீரிய நடைமுறைகளால் எல்லோராலும் கவரப்பட்டும் மதிக்கப்பட்டும் வந்த நபி (ஸல்) அவர்கள் ஓர் ஆன்மீகத் தலைவராக மட்டுமல்லாது ஓர் அரசின் தலைவராகவும் இதன் மூலம் பிரகடனம்

செய்யப்பட்டார்கள். மதீனாவை வந்தடைந்ததும் முதற்கட்டப் பணிகளுள் ஒன்றாக மஸ்ஜிதுந் நபவீ கட்டப்பட்டிருக்கும் நிலத்தினை கிரயமாகப் பெற்று அங்கு தொழுகைக்கான வசதியுடன் கூடிய பல்நோக்கு மையம் (மஸ்ஜித்) ஒன்றினை உருவாக்கினார்கள். ஐவேளைத் தொழுகை உட்பட அனைத்துத் தொழுகைகளும் நிறைவேற்றப்படும் மஸ்ஜிதாகவும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து நீதி செலுத்தும் நீதிமன்றமாகவும், இஸ்லாமிய அரசின் பாராளுமன்றமாகவும், தூதுக்குழுக்களை வரவேற்கும் மண்டபமாகவும், கல்விக்கூடமாகவும் இன்னும் பல சமூகக் கடமைகளை முன்நின்று நிறைவேற்றும் மையமாகவும் அது இயங்கியது. எனவே இவ்வகைக் கட்டமைப்புக்களை உருவாக்கியதன் மூலம் மதீனாவில் வசித்த பத்தாண்டுப் பகுதியிலும் தமக்கு முழுமையாகக் கட்டுப்பட்டொழுகும் ஒரு சீரிய சமுதாயத்தை அவர்களால் உருவாக்க முடிந்தது.

அத்துடன் மதீனாவின் எல்லைக்குள்ளும், அப்பாலும் பல போர்க்களங்களை சந்திக்க நேரிட்ட பொழுதிலும் கூட எதிரிகளால் இலகுவில் தோற்கடிக்கப்பட முடியாத ஒரு சக்தியையும் ஒருமைப் பாட்டினையும் தமது பிரஜைகளிடத்தில் தோற்றுவித்திருந்தார்கள். அதுமட்டுமல்லாது, எந்த சமூகம் தமது பலத்தாலும் அத்துமீறல்களாலும் அன்றைய சிறுபான்மை முஸ்லிம்களை அவர்களது சொந்த மண்ணில் வாழவிடாது புலம்பெயர நிர்ப்பந்தித்ததோ, அதே சமூகம் தலைகுனிந்து காலடியில் விழும் நிலைக்கு இவர்களது ஆள்புலம் பலம் பெற்றிருந்தது.

அன்றைய உலகின் வல்லரசுகளாகக் காணப்பட்ட ரோம, பாரசீக வல்லரசுகள் கூட தமது உன்னிப்பான அவதானத்தை இவ்வரசின் பக்கம் செலுத்தவும், இதனை இல்லாதொழிக்கவும் திட்டமிடும் அளவுக்கு இஸ்லாமிய அரசு எழுச்சி பெற்றிருந்தது. உள்ளகக் கட்டுக்கோப்புகளில் பெருமளவு வெற்றி பெற்றுவிட்ட நபி (ஸல்) அவர்கள்; அயல் நாட்டு உறவுகள், சர்வதேச உறவுகள் போன்றவற்றிற்கும் அடிப்படைகளை உருவாக்கியதுடன் தூதுவர்களளையும் அனுப்பினார்கள். உள்நாட்டில் போராடிப் பயிற்சி பெற்றிருந்த போராளிகளை அயல்நாட்டு அச்சுறுத்தல் களை எதிர்கொள்வதற்காக தயார் செய்தார்கள். இதன் மூலம் இஸ்லாமிய அரசு எத்தகைய உள்நாட்டு, வெளிநாட்டு அச்சுறுத்தல் களையும் சமாளிக்கும் ஆற்றல் பெற்றுள்ளமையை அன்றைய உலகுக்குப் புலப்படுத்தினார்கள்.

ஓர் உன்னத சமுதாயத்தை தனது வாழ்நாளிலேயே உருவாக்கி மனநிம்மதியடைந்த நபி (ஸல்) அவர்கள், தனக்குப் பின்னரும் அச்சமூகம்

ஒற்றுமையும், பலமும் மிக்கதாகத் திகழ வேண்டுமென்பதற்காகத் தேவையான அனைத்துப் பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் வழங்கியதுடன் தனக்குப் பின்னால் சமய அரசியல் பொறுப்பக்களைச் சுமக்கும் ஆற்றல் பெற்ற பலரையும் உருவாக்கியிருந்தார்கள். அத்துடன் அவர்களது வாழ்வின் இறுதிப் பகுதியில் தமது பிரதிநிதியாக எவரையும் நியமிக்காத போதிலும் தேவையான அனைத்து வழிகளையும் காட்டிவிட்டே இவ்வுலகைப் பிரிந்தார்கள்.

## 2. குலபாஉர் றாஷிதூன்கள் காலம்

இஸ்லாமிய வரலாற்று நிகழ்வுகளில் நபி (ஸல்) அவர்கள் காலத்திற்கு அடுத்து மிக முக்கியத்துவம் பெறுவது குலபாஉர் றாஷிதூன்கள் காலமாகும். ஏனெனில் வஹியின் நிழலில் தமது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தெளிவுமிக்கதும், உறுதியானதும், உடனடியானதுமான தீர்வுகளைப் பெற்றுக் கொண்டிருந்த ஒரு சமூகம் வஹி பூர்த்தி செய்யப்பட்டதுடன் தமது தலைவரையும் இழந்து விட்ட நிலையில், பல்வேறு சவால்களை சமாளித்து முன்நோக்கிப் பயணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே இக்கட்டத்தில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்வும் வரலாற்று முக்கியத்துவமிக்கதாகக் காணப்பட்டது.

### 1. கலீபாக்கள் தெரிவு முறைகள்:

கலீபாக்கள் தெரிவு எவ்வாறு இடம் பெற்றது என்பதனை நோக்கு முன்னர், இஸ்லாத்தின் பார்வையில் கிலாபத் எவ்வளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது, அது எவ்வாறான விடயங்களை உள்ளடக்கியிருக்கிறது, கலீபாவாகத் தெரிவுசெய்யப்படுபவரிடம் காணப்பட வேண்டிய தகைமைகள், கலீபாவைத் தெரிவு செய்யும் உரித்துடையோா் யாா், கலீபாவின் பணிகள் என்ன என்பன போன்ற விடயங்களை அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்.

### இஸ்லாமிய கிலாபத் கோட்பாடுகள்:

கிலாபத், இமாமத், இமாறத் எனப் பல சொற்பிரயோகங்கள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் தலைமைத்துவத்தை சுட்டிக் காட்டப் பயன்படுத்தப்படுகின்றன. ஆயினும் அல்குர்ஆன் பல இடங்களில் இது பற்றிப் பிரஸ்தாபிக்கும் போது கலீபா எனும் பதத்தினை அதிகம்

பயன்படுத்தியுள்ளதை (ஸூறா பகறா 30, ஸூறா ஸாத்: 26, ஸூறா நூர் : 55) யும், ஹதீஸ்கள், ஸஹாபாக்களின் பிரயோகங்களையும் அவதானிப்பதன் மூலம் அறியமுடியும்.

தலைமைத்துவத்திலும், அதனுடன் தொடர்புபட்ட விடயங்களிலும் இஸ்லாம் முக்கிய கவனம் செலுத்துகின்றது. முஸ்லிம் சமூகம் எந்நிலையிலும் தலைவர் இன்றி வாழ்வதை அனுமதிக்கவில்லை. ஆகக் குறைந்த பட்சம் மூவர் இருப்பினும் கூட தமக்குள் ஒருவரை தலைவராக்கிக் கொள்ளும்படி அது வலியுறுத்துகின்றது. அது மட்டுமல்லாது அங்கீகாரம் பெற்ற ஒரு தலைவர் பாவகாரியங்களில் ஈடுபட்டாலும் கூட ஏகத்துவத்தில் இருக்கும் வரை அவருக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறும் அறிவுறுத்துகின்றது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் ஸஹாபாக்களை விளித்து: நீங்கள் தலைவரில்லாத ஒரு சமூகத்திடம் செல்ல நேர்ந்தால் அங்கு தங்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்" என அறிவுரை கூறியிருக்கின்றார்கள். இவ்வாறு தலைமைத்துவம் பல்வேறு வகையில் வலியுறுத்தப்படுவதனை அவதானிக்கலாம்.

இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் நபி (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட உறுதியானதும் நேர்த்தியானதுமான தலைமைத்துவத்தின் பின் அவ்வெற்றிடத்தை நிரப்பும் பணி உத்தம ஸஹாபாக்களால் கலீபா அல்லது கலீபது றஸூலில்லாஹ் எனும் பெயருடன் பரிணாமம் பெறுகின்றது. இவ்வாறு தெரிவுசெய்யப்படும் கலீபா தனது அடிப்படைப் பணிகளாக இஸ்லாத்தைப் பாதுகாத்து, அதனை உலகெல்லாம் பரவச் செய்வதுடன், உலக விவகாரங்களை நிர்வகிக்கவும் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

### கலீபாக்களிடம் காணப்படவேண்டிய தகைமைகள்

இஸ்லாமிய அரசியல் ஒரு கலீபா எவ்வாறு இருக்கவேண்டும், அவரிடம் எத்தகைய சிறப்பம்சங்கள் காணப்படவேண்டும் போன்ற நிபந்தனைளை மிகத் தெளிவாக வரையறை செய்கின்றது. அதனடிப் படையில் நோக்கும் போது கலீபாவாகத் தெரிவு செய்யப்படுபவரிடம் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை வலியுறுத்துகின்றது :-

1. முஸ்லிம்களின் கலீபா கட்டாயம் முஸ்லிமாகவே இருக்க வேண்டும் என வலியுறுத்துகின்றது. (அல்-குர்ஆன் : 4 : 141).

2. கலீபா ஆணாக இருக்கவேண்டும் என்பது இன்னுமொரு நிபந்தனையாகும்

3. கலீபா பருவ வயதை அடைந்தவராக இருக்கவேண்டும்

4. தெளிந்த புத்தியுடையவராய் இருத்தல் வேண்டும்

5. நீதி தவறாதவராய் இருக்கவேண்டும். கெட்ட பண்புள்ளவர்கள் இப்பதவிக்கு சிபார்சு செய்யப்படலாகாது

6. பூரண சுதந்திரம் உடையவராய் இருத்தல் வேண்டும்

7. தம்மீது சுமத்தப்படும் பொறுப்பினை செவ்வனே நிறைவேற்றும் தகைமையும் பொறுமையுமுடையவராய் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்யும் தகுதிபெற்ற ஒருவரே கலீபாவாகப் பதவி வகிக்க உரித்துடையவராகிறார். இவைதவிர இன்னும் சில விடயங்கள் மேலதிக தகைமைகளாக முன்வைக்கப்பட்டாலும் அவை அடிப்படைத் தகைமைகளுள் அடங்காது. மாறாக விசேட தகைமைகளாகவே கருதப்படும்.

### கலீபாத் தெரிவுக் குழுவும் (ஷுறா சபை) அங்கத்தினர்களின் தகைமைகளும்

இஸ்லாம் தலைமைத்துவத்தை கட்டாயத் தேவையாக கடமையாக்கியிருப்பதனால் அதனை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும், யார் மூலம் அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனும் ஒழுங்குகளையும் வரையறுக்காமல் விட்டுவிடவில்லை. அந்த வகையில் இஸ்லாத்தின் வழிகாட்டலை ஸஹாபாக்கள் நடைமுறைப்படுத்திய பல்வேறு முன்னுதாரணங்கள் இஸ்லாமிய அரசியல் வரலாற்றிற் பதிவாகியுள்ளன.

“மஜ்லிஸுஷ் ஷுறா” எனும் மக்களவையை முதன்முதலில் அரசியல் விவகாரங்களில் அறிமுகம் செய்து வைத்த நபி (ஸல்) அவர்கள் அச்சபையில் அங்கம் வகிக்கும் தகைமையுடையோர் யார் என்பதையும் தமது நடைமுறைகளூடாக அடையாளப்படுத்தியிருக்கிறார்கள்.

"அஹ்லுல் ஹல் வல் அக்த்" எனப்படும் சமூக அந்தஸ்தும் மக்கள் அங்கீகாரமும் பெற்ற முன்னோடிகள் நபி (ஸல்) அவர்கள் காலத்திலிருந்தே அனைத்து சமூக பொது விவகாரங்களிலும் நபியவர்களாலும் கூட ஆலோசனை பெறப்பட்டுள்ளார்கள். அவ்வாறானவர்கள் கூறும்

ஆலோசனைகள் சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் அங்கீகாரம் பெற்றுள்ளமை அவர்களின் அந்தஸ்தினை தெளிவுபடுத்துகின்றது. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் அபூபக்ர், உமர் (ரழி) ஆகிய இருவர் பற்றியும் குறிப்பிடும் போது "அவ்விருவரும் எனது கண்களையும் காதுகளையும் போன்றவர்கள்" எனக் கூறினார்கள். ஏனெனில் இவ்விருவரும் நபி (ஸல்) அவர்களுடனேயே தமது பெரும் பகுதியான காலத்தை செலவிட்டு இஸ்லாமிய அரசை வழிநடாத்துவதில் துணைசெய்தனர். இவர்கள் மட்டுமல்லாது உஸ்மான், அலீ, அபூஉபைதா (ரழி) போன்ற பல முன்னணி ஸஹாபாக்கள் இத்தகைய முக்கிய பங்களிப்புக்களை செய்து வந்தனர்.

நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னால் கலீபாக்களும் அந்நடைமுறையை மிக ஆணித்தரமாகப் பின்பற்றியதோடு மஜ்லிஸுஷ் ஷுறாவுக்கான தனித்துவமான வடிவத்தினையும் கொடுத்தார்கள்.

இச்சபையில் அங்கத்துவம் வகித்தவர்கள், அன்றைய சமூகத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாகவே காணப்பட்டனர். எனவே அவர்களால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எவ்வித முரண்பாடுகளுமின்றி அனைத்துப் பிரஜைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

### கலீபாக்களின் அதிகாரங்களும் கடமைகளும்

சிரேஷ்ட பிரஜைகள் அல்லது சமூக அங்கீகாரம் பெற்ற உயர்மட்டக் குழுவினரின் ஆலோசனைகள், சிபாரிசுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் முஸ்லிம் தலைவருக்கு பல உரிமைகளையும் கடமைகளையும் இஸ்லாமிய அரசியற் கோட்பாடு வரையறை செய்துள்ளது.

இஸ்லாமிய வழிகாட்டலின் அடிப்படையில் ஒரு கலீபா தெரிவு செய்யப்பட்டு விட்டால், அவரை ஏற்று அனைத்து வயது வந்த பிரஜைகளும் அவருக்கு விசுவாசப்பிரமாணம் செய்ய வேண்டும். அத்துடன் அடுத்த கணமே அவரது நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு ஒழுக வேண்டும். கலீபாவுக்கு எவ்வகையிலும் மாறு செய்யக்கூடாது. ஏனெனில் அது பற்றி இஸ்லாம் மிகக் கடுமையாக வலியுறுத்தியுள்ளது. அதாவது "யாரொருவர் கலீபாவுக்கு முரண்பட்ட நிலையில் மரணிக்கின்றாரோ அவர் அறியாமைக் கால மரணங்களில் ஒரு வகையிலேயே

மரணிக்கிறார்" என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே கலீபாவுக்கு விசுவாசமாய் இருப்பதும் அவரது வழிகாட்டல் களுக்கு செவிமடுப்பதும் மக்களின் கடமைகளாகும்.

"உலகை நிருவகிப்பதும் தீனைப் பாதுகாப்பதும்" எனும் வாசகத்தினூடாக மிகச் சுருக்கமாக விளக்கப்பட்டிருக்கும் கலீபாவின் அடிப்படைக் கடமைகளாக, தனது நிர்வாகத்தின் கீழ் உள்ள அனைத்துப் பிரஜைகளதும் உணவு, உடை, உறையுள் ஆகிய அனைத்தும் உறுதி செய்யப்படல் வேண்டும். அதே போல் பூமியில் இறைகட்டளைகளும் வழிகாட்டல்களும் முடிந்தவரை பூரணமாக அமுல்படுத்தப்படல் வேண்டும். இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஒரு கலீபா தோல்வி கண்டால் அவர் தொடர்ந்தும் அப்பதவியில் நீடிப்பது பற்றி ஷூறா சபை மீள்பரிசீலனை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

### குலபாஉர் றாஷிதூன்களின் தெரிவு முறைகள்

நபி (ஸல்) அவர்கள், தனக்குப் பின்னால் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த ஒரு சமூகத்தை உருவாக்கிவிட்ட நிலையிலேயே தனது மறுமைப் பயணத்தினுட் பிரவேசித்தார்கள். ஸஹாபாக்களைப் பொறுத்த வரையிலும் சடுதியாக நிகழ்ந்து முடிந்த நபி (ஸல்) அவர்களின் மறைவு பேரதிர்ச்சியையும், தாங்கொணாத் துயரினையும் ஏற்படுத்தி யிருந்தது. அதிலிருந்து விடுபட்டு இயல்பு நிலைக்கு மீள, நீண்டகால அவகாசம் அவர்களுக்குத் தேவையாயிருந்தது. ஆயினும், மறுபக்கத்தில் இஸ்லாத்தை எவ்வாறாயினும் ஒழித்துக் கட்டிவிடலாம் எனும் நப்பாசை கொண்டிருந்த பலம் பொருந்திய எதிரிகளின் நகர்வுகளும், இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவர்களின் கிளர்ச்சிகளும், ஏனைய பல சவால்களும் நிலைமையைத் மிகத் துரிதமாகவும் கச்சிதமாகவும் சமாளிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தினை அவர்களுக்கு ஏற்படுத்தின. எனவே, இறைவேதத்தையும் விசுவாசிகளையும் பாதுகாத்து நபியவர்கள் விட்டுச்சென்ற இடத்திலிருந்து அவர்களை வழிநடாத்திச் செல்லும் பாரிய பணியை அவர்களின் பாசறையிற் பயிற்சி பெற்ற உத்தமத் தோழர்கள் தமது தோள்களிற் சுமந்து கொண்டனர். முன்னாலுள்ள பொறுப்புக்களை தெளிவாக அடையாளங்கண்டு, அவற்றைச் சரிவர நிறைவேற்ற அனைத்தையும் அர்ப்பணித்தனர். அவர்களில் முன்னணி வகிப்பவர்கள் இந்த குலபாஉர்றாஷிதூன்களே.

இந்த நேர்வழிபெற்ற கலீபாக்கள் நால்வரும் சுமார் முப்பது வருடங்கள் இஸ்லாமிய உலகை நிருவகித்து அதனை விரிவுபடுத்தியது மட்டுமல்லாது ஸ்திரப்படுத்துவதிலும் அளப்பரிய பங்களிப்பினை வழங்கினார்கள். இவர்கள் கிலாபத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட வழிமுறைகள் இஸ்லாமிய அரசியற் கோட்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1. முதலாவது வழிமுறையாகிய கலீபா அபூபக்ர் ஸித்தீக் (றழி) அவர்களின் தெரிவினை எடுத்து நோக்கும் போது: அதனை "நேரடியான மக்கள் தெரிவு முறை" எனக் கொள்ளலாம். நபி (ஸல்) அவர்கள் தமக்குப் பின்னால் (ஒரு சமூகத்) தலைவரை நியமிக்காத போதிலும் அபூபக்ர் (றழி) அவர்களே அதற்குப் பொருத்தமானவர் என்பதை பல்வேறு விடயங்கள் ஊடாக உணர்த்தி விட்டே சென்றார்கள். அத்துடன் ஸகீபது பனீ ஸாஇதாவில் அன்ஸார்கள், முஹாஜிர்கள் மத்தியில் இடம்பெற்ற கருத்துப் பரிமாறல்கள் அபூபக்ர் (றழி) அவர்கள் அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அதிவிசேடமும் ஏக அங்கீகாரமும் பெற்றிருந்தார்கள் என்பதற்கு சிறந்த சான்றுகளாகும்.

   நபியவர்கள் வபாத்தான தினமே தலைமைத்துவ இடைவெளியின் அபாயத்தினை உணர்ந்த அன்ஸார்கள், ஸகீபது பனீ ஸாஇதாவில் ஒன்று கூடினர். மதீனாவில் மிக நீண்ட காலமாக இருந்து வந்த அவ்ஸ், கஸ்றஜ், முரண்பாடுகள் நபியவர்களின் வருகையின் பின்பே முடிவுற்றிருந்தது. எனவே, அவர்களது வபாத்தின் பின்னர் அவை மீண்டும் தளிர்விடக்கூடாது என்று கருதியமையே அவர்கள் ஸகிபா பனிசஈதாவில் ஒன்று கூடியதற்கான காரணம் எனலாம்.

   ஆயினும், விடயமறிந்து அவசர அவசரமாக அங்கு பிரசன்ன மான முஹாஜிர்களதும் முழு முஸ்லிம்களதும் முக்கியஸ்தர் களான அபூபக்ர், உமர், அபூஉபைதா (ரழி) ஆகியோர் முழு அறேபியாவும் அங்கீகரிக்கத்தக்க குறைசியர்களில் இருந்து ஒருவர் தெரிவு செய்யப்படுதலே நல்லது என்ற கருத்தைத் தெளிவுபடுத்திப் பேசியபோது எவ்வித முரண்பாடுகளுமின்றி அங்கு குழுமியிருந்த அனைத்து ஸஹாபாக்களும் அபூபக்ர் (றழி) அவர்களுக்கு பைஅத் செய்தனர். இரண்டாவது தினம் மஸ்ஜிதுன் நபவியில் பொதுமக்கள் அனைவரதும் பைஅத் இடம் பெற்றது, அங்கு குழுமியிருந்த அனைவரும் பைஅத் செய்தனர். (ஆதாரம் : பைஹகீ)

மதீனா அன்ஸார்களது பிரதேசம் என்பதுடன் அவர்களைச் சார்ந்தவரும், பெரிதும் மதிக்கப்படுபவருமான ஒருவர் இருந்த போதிலும் புலம்பெயர்ந்து வந்து மதீனாவில் குடியேறியிருந்த, அத்துடன் குறைஷிக் கோத்திரத்திலும் ஒரு சிறிய கிளையினைச் சேர்ந்த அபூபக்ர் (றழி) அவர்கள், உமர் (றழி) அவர்களால் முன்மொழியப்பட்ட போது எவ்வித மாற்றுக் கருத்துக்களுமின்றி முண்டியடித்துக் கொண்டு பைஅத் செய்தனர்.

**2. இரண்டாம் வழிமுறையாக :**

**"சமூகத் தலைமைகளின் ஆலோசனைகளைப் பெற்று தகுதிமிக்க ஒருவரை முன்னைய ஆட்சியாளர் நியமித்தல்":**

மிகக் குறுகியகால ஆட்சிக்குள்ளேயே தமது அபார திறமைகளை வெளிப்படுத்தி இஸ்லாமிய அரசை பலப்படுத்தியிருந்த கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள், தமது இறுதிக் கட்டத்தை உணர்ந்த வேளை, இஸ்லாமிய அரசினதும் மக்களதும் நலன் கருதி தாம் மரணிக்க முன்னரே அன்றைய சமூகத்தில் அதிசிறந்த ஒருவரைத் தலைவராக்க முடிவு செய்தார்கள். அதனடிப்படையில், அன்றைய முக்கியஸ்தர்களான அப்துர் றஹ்மானிப்னு அவ்ப், உஸ்மானிப்னு அப்பான் (றழி) போன்றவர்களை அழைத்து ஆலோசனைகளைப் பெற்றார்கள். அவர்கள் அனைவரது அபிப்பிராயங்களும் ஒத்த கருத்திற்கும் உரியவராக உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்கள் தென்பட்டதால் உமர் (ரழி) அவர்களைத் தனக்குப் பின்னால் முஸ்லிம்களின் பொறுப்பினை ஏற்று வழிநடாத்த நியமனம் செய்து மக்களுக்கு அறிவித்தார்கள். மக்களும் அதனை மனப்பூர்வமாக ஏற்று தமது விசுவாசத்தை வெளிப்படுத்தினார்கள்.

**3. மூன்றாம் வழிமுறையாக :**

இரண்டாம் கலீபா உமர் இப்னுல் கத்தாப் (றழி) அவர்கள் தனக்கு முன் சென்ற இரு தலைவர்களும் மேற்கொண்ட வழிமுறைகளிலிருந்து வேறுபட்டதொரு வழிமுறையை அறிமுகம் செய்தார்கள். அதில் மக்கள் தலைவர்கள் கூட்டாகவும் சுதந்திரமாகவும் ஆலோசனை செய்து மிகப் பொருத்த மானவரைத் தெரிவு செய்ய வாய்ப்பினை ஏற்படுத்தினார்கள்.

அதனடிப்படையில் அன்றைய முஸ்லிம் சமூகத்தில் ; நபி (ஸல்) அவர்களது திருப்தியையும் அவர்களையடுத்து வந்த கலீபாக்களது திருப்தியையும் முழு முஸ்லிம்களது நன்மதிப்பையும் பெற்றிருந்த அஷரதுல் முபஷ்ஷராத்களில் இடம்பெற்றிருந்த அறுவரைத் தெரிந்தெடுத்து அவர்களது ஆலோசனை முடிவின் பிரகாரம் குறிப்பிட்ட சில தினங்களுள் அவ்வறுவரில் ஒருவர் கலீபாவாகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என நிபந்தனையிட்டு குழுவை நியமித்தார்கள்.

இது பற்றி இப்னு உமர் (றழி) அவர்கள் குறிப்பிடும் போது: உமர் (றழி) அவர்கள் நஞ்சூட்டப்பட்ட கத்தியினால் குத்தப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்தபோது, அமீருல் மு.்.மினீன் அவர்களே! உங்களுக்குப் பின்னால் ஒரு பிரதிநிதியை (தலைவரை) நியமிப்பதில்லையா? எனக் கேட்கப்பட்ட போது, நான் அவ்வாறு ஒருவரை நியமித்தாலும் என்னை விடச் சிறந்த ஒருவர் நியமித்துச் சென்ற வழிமுறை இருக்கிறது. அதாவது அபூபக்கர் (றழி) – அல்லாது விடுவதானாலும் என்னை விடச் சிறந்த ஒருவர் நியமிக்காது விட்டுச் சென்ற வழிமுறை இருக்கிறது – அதாவது நபி (ஸல்) அவர்கள் - எனக் கூறினார்கள். தொடந்து இப்னு உமர் (றழி) அவர்கள் கூறுகிறார்கள் : உமர் (றழி) அவர்கள் பெருமானாரை இறுதியாகக் குறிப்பிட்டதுமே, அவர் யாரையும் குறிப்பிட்டு நியமிக்கமாட்டார் என்பதை உணர்ந்து கொண்டேன் எனக் கூறுகிறார்கள். (ஆதாரம் : புகாரி முஸ்லிம்)

இவ்வாறு உமர் (றழி) அவர்கள் ஸஹாபாக்களில் மிகப் பிரபலம் பெற்றவர்களில் - சுவர்க்கம் வாக்களிக்கப்பட்ட அறுவரை நியமித்ததுடன், தனது உறவினர்களிலிருந்து எவரும் தெரிவு செய்யப்பட்டு விடக் கூடாது என்பதிலும் கண்டிப்பான உத்தரவினை வழங்கியிருந்தார்கள். இவர்களது இச்செயல் முஸ்லிம் உலகுக்கு மட்டுமல்லாது முழு மனித சமூகத்துக்குமே சிறந்த முன்மாதிரியாகும்.

4. **நான்காம் வழிமுறையாக :**

**"இக்கட்டான சூழ்நிலையில் பொருத்தமான ஒருவரிடம் பொறுப்பினை ஒப்படைத்தல்".**

அதாவது கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் குழப்பக்காரக் கும்பலால் அநீதமாகக் கொல்லப்பட்டு ; நிலைமை கட்டுக் கடங்காது அச்சமும் பீதியும் தலைநகரில் பரவி விட்டபோது, அன்றைய சூழலில் மிகத் தகுதி வாய்ந்தவராகக் காணப்பட்ட அலீ (றழி) அவர்களைப் பதவியேற்குமாறு மக்கள் வலியுறுத்திக் கொண்டிருந்தனர். முதலில் அதனை மறுத்துரைத்த போதிலும் காலத்தின் அவசியம் கருதி தமக்கிருந்த தார்மீகப் பொறுப்பினை அலீ (றழி) அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய உலகைச் சூழ்ந்துள்ள அபாயங்களிலிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

மேற்கூறப்பட்ட நான்கு வழிமுறைகளும் நேர்வழிபெற்ற கலீபாக்கள் நால்வரும் தெரிவு செய்யப்பட்ட முறைகளாகும். இதன் மூலம் இஸ்லாமிய நாகரிகம் எக்காலத்துக்கும் எத்தகைய சூழ்நிலைக்கும் பொருத்தமான தீர்வுகளைக் கொண்டுள்ளதுடன், தலைவர் தெரிவில் கற்றவர்களும், சமூக அங்கீகாரம் பெற்றவர்களும் முக்கியத்துவம் பெற்றுள்ளார்கள் என்பதனை இத்தெரிவு அழகாகப் புலப்படுத்துகிறது.

## 2. இராச்சியப் பரவல்

மதீனாவில் தோற்றம் பெற்ற இஸ்லாமிய அரசின் ஆளுகையானது நபி (ஸல்) அவர்கள் வபாத்தாகும் வரையிலும் அரேபியத் தீபகற்பத் தினைக் கடந்திருக்கவில்லை. ஆயினும் தூதுவர்களை அனுப்பியதன் மூலம் இஸ்லாத்தின் தூதினை உலகறியச் செய்ததுடன் இறுதி வெற்றி இஸ்லாத்துக்கே என்பதைக் குறிப்பிட்டு ரோம, பாரசீக வல்லரசுகள் முஸ்லிம்களின் கரங்களில் வீழ்ச்சியுறும் என்பதனையும் முற்கூட்டியே சுபச்செய்தி கூறியிருந்தர்கள்.

இவ்வாறு இஸ்லாமிய அரசு விரிவுபடுத்தப்பட வேண்டும் எனும் சிந்தனை ஏன் தோற்றம் பெற்றது. அல்லது, முஸ்லிம்கள் இவ்விடயத்தில் ஏன் அதிகம் அக்கறை காட்டினார்கள் என்பதனை நோக்குமிடத்து பின்வரும் விடயங்களை பின்னணிக் காரணிகளாக குறிப்பிடலாம்.

1. இஸ்லாம் இறுதியானதும் உலகளாவிய வழிகாட்டியுமாக அனைத்தையும் சிருஷ்டித்த இரட்சகனால் பிரகடனப்படுத்தப் பட்டமையால் அதனை முழு உலகுக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய பணி முஸ்லிம்கள் மீது கடமையாக்கப்பட்டமை.
2. உலகில் இறைசட்டங்களை அமுல் செய்யவும் அதனை நிர்வகிக்கவும் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட சமூகமாக முஸ்லிம்கள் காணப்படுதல்.
3. இஸ்லாமிய அரசைச் சூழவிருந்த அன்றைய சமூகம், இஸ்லாத் தையும் முஸ்லிம்களையும் ஒழித்துக் கட்டிவிட பல்வேறு வழிமுறைகளைக் கையாண்ட வண்ணமிருந்தது. எனவே, அவர்களது அபாயங்களிலிருந்து இஸ்லாமிய உலகை காப்பாற்ற வேண்டுமென்பதற்காக இராச்சிய விரிவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது.
4. இஸ்லாத்தின் தூது கிடைக்கப்பெற்ற போது, மக்கள் கூட்டம் கூட்டமாக அதில் இணைந்த வண்ணமிருந்தனர். அதனையடுத்து முஸ்லிம்களின் பரம்பல் அக்கம் பக்கங்களில் மிக வேகமாகக் காணப்பட்டது. ஆகவே அப்பகுதிகள் இயல்பாகவே இஸ்லாமிய இராச்சியத்துடன் இணையும் நிலை காணப்பட்டது.
5. தமது ஆட்சியாளர்களின் அடக்குமுறைகளாலும், அதிகார துஷ்பிரயோகங் களாலும் விரக்தியுற்றிருந்த அயல் நாட்டு மக்கள், முஸ்லிம்களின் நியாயமானதும் மக்கள் உரிமைகளை மதிக்கக் கூடியதுமாகிய ஆட்சியால் கவரப்பட்டு தம்மை மீட்டு இஸ்லாமிய ஆட்சியினுள் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டமை போன்ற பல விடயங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

அவ்வாறே இஸ்லாமிய சாம்ராஜ்யப் பரம்பலின் முறைமைகளை எடுத்து நோக்கும் போது, நபி (ஸல்) அவர்களோ அல்லது ஸஹாபாக்களோ வன்முறைகளை ஒரு போதிலும் கையாளவில்லை. பதிலாக இஸ்லாத்தின் வழிகாட்டலுக்கேற்ப மிருதுவாகவும் மனிதாபிமானத் துடனுமே தமது பணிகளை மேற்கொண்டனர்.

முதலில் தம்மைச் சூழவிருந்த முரண்பட்ட அறபுக் கோத்திரங்களை வழிப்படுத்தினார்கள். அந்தவகையில் ஸகாத் வழங்க மறுத்தோரை நல்வழிப்படுத்தி இஸ்லாமிய அரசின் கட்டுக்கோப்பினுட் கொண்டு வந்தார்கள். பொய் நபிமார்களாக உருவெடுத்துக் கலகம் விளை

வித்தவர்களை விரட்டியடித்து அவர்களது குழப்பங்களை அடக்கினார்கள். அதற்கடுத்து இஸ்லாமிய அரசின் எல்லைப்புற பகுதிகளான ரோம, பாரசீக வல்லரசுகளின் தடுப்புப் பிரதேசங்களாக விளங்கிய அரபுப் பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தார்கள். பின்னர் உரோம, பாரசீக வல்லரசுகளின் சொந்த நிலப்பரப்புக்களுட் பிரவேசித்து அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக மிகக் குறுகிய காலப் பகுதியுடன் விடுவித்து தம் வசமாக்கினார்கள். அவ்வாறே தொடர்ந்தும் வடஆபிரிக்கப் பிராந்தியங்ளுட் பிரவேசித்து அவற்றையும் வெற்றிக்கொண்டு அங்கும் சுபீட்சத்தை ஏற்படுத்தினர்.

முஸ்லிம் படைகள் குறித்த ஒரு பிரதேசத்துள் நுழையமுயற்சிக்கும் போது, பிரவேசிக்கும் ஒவ்வொரு பிராந்திய மக்களிடமும் முதலில் இஸ்லாத்தின் தூதைத் தெளிவுபடுத்தி அதனை ஏற்றுக்கொள்ள ஆர்வமூட்டினார்கள். அதற்கு விரும்பாதவிடத்து இஸ்லாமிய அரசின் கட்டுப்பாட்டினுள் வாழவும் அதற்கான வரிகளைச் செலுத்தவும் அவகாசம் வழங்கினார்கள். அதனையும் நிராகரித்து சண்டைக்குத் தயாராகும் பிரதேசங்களுடனேயே போரில் ஈடுபட்டு அவர்களை இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இணைத்தனர். இவ்வாறான மனிதாபிமான நடவடிக்கைகளின் போது அவர்கள் கடைப்பிடித்த ஒழுக்கங்களும் உயரிய பண்பாடுகளும் இஸ்லாத்திற்கெதிராய்ப் போராடிய இலட்சக் கணக்கான மக்களை இஸ்லாத்தின் பால் கவரச்செய்ததுடன் இஸ்லாத்தின் காவலர்களாயும் மாற்றின.

## 3. கலீபாக்கள் கால நிர்வாக, நிதி, நீதி ஒழுங்குகள்

### கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலம்

நபி (ஸல்) அவர்கள் காலத்தினைப் பார்க்கிலும் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்தில் இஸ்லாமிய அரசு மேலும் பலம் பெற்றும் விரிவு பெற்றும் காணப்பட்டமையால் நிர்வாக, நிதி, நீதி ஒழுங்குகளிலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டிய தேவைகள் காணப்பட்டன. அதனடிப்படையில் கலீபா அபூபக்ர் (றழி) அவர்கள் கால நிர்வாகம் பின்வருமாறு அமையப் பெற்றிருந்தது. ஆட்சித் தலை நகராக மதீனாவே காணப்பட்டது. அத்துடன் சட்டம் நீதி போன்ற விடயங்களில் கலீபாவுக்கு உதவியாக உமர் இப்னு கத்தாப் (றழி) அவர்கள் பணியாற்றினார்கள்.

பைத்துல்மாலின் நிதி நடவடிக்கைகளுக்கு ஷாம் தேசத்தின் கட்டளைத் தளபதியாக நியமனம் பெறும் வரை அபூ உபைதா (றழி) அவர்கள் பொறுப்பாளராகக் கடமையாற்றினார்கள். ஸெய்த் பின் தாபித் (றழி), உஸ்மான் பின் அப்பான் (றழி) ஆகியோர் எழுத்துப் பணிகளை மேற்கொள்ளும் செயலாளர்களாகப் பணியாற்றினர்.

அதே போல், மாநிலங்களது நிர்வாகம் செவ்வனே நடந்தேறும் வண்ணம் ஒவ்வொரு மாநிலத்துக்கும் கவர்னர்களை நியமித்ததுடன் அவர்களுக்கான பணிகளையும் வரையறை செய்தார்கள். அந்த வகையில்:

- மக்காவின் கவர்னராக இதாப் பின் உஸைத் (றழி) அவர்களை யும்
- உஸ்மான் பின் அபில் ஆஸ் (றழி) அவர்களை தாயிபிற்கும்
- ஸன்ஆவின்(யெமன்) கவர்னராக முஹாஜிர் பின் அபீ உமையா (றழி) அவர்களையும்
- ஹழ்றமௌத் (யெமன்) கவர்னராக ஸியாத் பின் லபீத் (றழி) என்பவரையும்
- பஹ்றைன் கவர்னராக அலா பின் ஹழ்றமீ (றழி) அவர்களையும்
- நஜ்றான் கவர்னராக ஜரீர் இப்னு அப்தில்லாஹ் என்பவரையும் நியமித்ததோடு புதிது புதிதாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களுக்கும் அவ்வப் பகுதிகளுக்குப் பொருத்தமான ஆளுநர்களை நியமித்தார்கள். அத்துடன் அவ்வப் பிரதேசங்களின் பிரதம இமாமாகவும், நீதி வழங்கல், சட்டம் ஒழுங்குகளை நிலைநாட்டல், நிதி விவகாரங்களை கண்காணித்தல் போன்ற கடமைகளையும் அவர்களுக்குப் பணித்தார்கள். ஆதலால் ஆளுநர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவோரை மிகக் கவனமாகவே அதாவது நபி (ஸல்) அவர்கள் எவ்வாறு தெரிவு செய்தார்களோ அவ்வாறே இவர்களும் தெரிவு செய்தார்கள்.

இவர்களது தெரிவில் உறவினர்கள் அல்லது நெருக்கமானவர்கள் என எவ்வித முன்னுரிமையும் வழங்கப்படவில்லை. தகைமைக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. அத்துடன், பதவி கேட்போருக்கு முற்றிலும் அது மறுக்கப்பட்டது. எனவே இவர்களது ஆட்சியில் கவர்னர்கள் மிகத் திறமையானவர்களாகவும் விசுவாசமுடையோராகவும் காணப்பட்டனர்.

### கலீபா உமர் (றழி) அவர்கள் காலம்

கலீபா அபூபக்ர் (றழி) அவர்களின் பின், இஸ்லாமிய அரசின் நிர்வாகப் பணிகளைப் பொறுப்பேற்ற இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்கள் முன்சென்ற இரு தலைவர்களது அடிச் சுவடுகளையும் பின்பற்றி உலகம் போற்றும் மிகச் சிறந்ததோர் ஆட்சியினை முஸ்லிம் உலகுக்கு வழங்கினார்கள்.

இவர்களது காலம், நிர்வாகம், நிதி, நீதி ஒழுங்குகள் வியாபகம் பெற்ற காலமாகக் கொள்ளப்படுகிறது. அதாவது முன்சென்றவர்கள் இவ்விடயங்களில் மேற்கொண்ட நடவடிக்கைகளுடன் பல புதிய முன்னேற்றகரமான ஒழுங்குகளை அறிமுகப்படுத்தியிருந்தார்கள்.

நிர்வாகம் சீராக நடைபெற வேண்டுமென்பதற்காக கவர்னர்கள் தெரிவில் மிக இறுக்கமான ஒழுங்குகளைக் கடைப்பிடித்தார்கள். ஒருவரை ஆளுனராகத் தெரிவுசெய்வதற்கு பின்வரும் முக்கியமான நான்கு பண்புகளை நிபந்தனையிட்டார்கள்.

1. ஹலாலான வழிகளில் பொருட் சேர்க்கும் திறமை
2. அதனை உரிய வழிகளிற் செலவிடும் திறமை
3. கண்டிப்பானவராயிருத்தல். ஆனால், அடக்குமுறை இருக்கக் கூடாது
4. மிருதுவானவராக இருக்க வேண்டும். ஆனால், பலவீனம் இருக்கக் கூடாது.

இவற்றுடன் எப்போதும் ஒரு கவர்னரை நியமிக்க முன்னர் அவர் பற்றி பகிரங்கமாகவும் இரகசியமாகவும் பரீட்சித்த பின்னரே நியமனம் வழங்குவார்கள். அத்துடன், மக்கள் தேவைக்காக எப்போதும் ஆளுநரின் வாயிற்கதவு திறந்திருக்க வேண்டும் எனக் கடுமையான நிபந்தனை

களிட்டார்கள், அத்துடன் பதவி கேட்போருக்கு நாம் எந்தப் பதவியும் வழங்கமாட்டோம் எனும் நபி (ஸல்) அவர்களின் நிலைப்பாட்டிலே கலீபா உமர் (ரழி) அவர்களும் மிக உறுதியாகக் காணப்பட்டார்கள்.

மேலும் கவர்னர்கள் இரக்க சுபாவமுடையவர்களாயிருக்க வேண்டும் என்பதில் மிகக் கூடுதல் கவனம் செலுத்தியதுடன், இவற்றில் குறைகாணப்படும் கவர்னர்கள் யாராயிருப்பினும் அவரை பதவியி லிருந்து ஓரங்கட்டுவதில் சிறிதும் தாமதம் காட்டவில்லை.

அவர்களது நிர்வாகத்தில் பின்வரும் உயர் அதிகாரிகள் கடமையாற்றினர்:

1. (காதிப்) தலைமைக் காரியதரிசி
2. (காதிபுத் தீவான்) இராணுவ காரியதரிசி
3. (ஸாஹிபுல் கறாஜ்) இறைவரி வசூலுக்கான அதிகாரி
4. (ஸாஹிபுல் அஹ்தாத்) பொலிஸ் அதிகாரி
5. (ஸாஹிபு பைதில் மால்) திறைசேரி செயலாளர்
6. (காழீ) நீதிபதி

மேற்கூறப்பட்டுள்ள அதிகாரிகள் ஒவ்வொரு மாநிலத்திற்கும் நியமனம் செய்யப்பட்டதால் அவர்களைக் கண்காணித்தல், மேற்பார்வை செய்தல், வழிநடாத்தல் போன்ற பணிகள் ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

**அவர்களது காலத்தில் திறைசேரி**

முஸ்லிம்கள் வரலாற்றில் முதன்முதலாக திறைசேரியை நிறுவிய பெருமை கலீபா உமர் (றழி) அவர்களையே சாரும். இதற்கு ஸகாத், ஜிஸ்யா, கனீமத், கறாஜ், வாரிசுகளற்றவர்கள் விட்டுச் சென்ற சொத்துக்கள் போன்றவற்றினூடாக வருமானங்கள் கிடைக்கப்பெற்றன. இவ்வாறான வரவுகள் பொருத்தமானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப் படுவதற்காகவும், நெறிப்படுத்தப்படுவதற்காகவும் மதிப்பீடு செய்தல், ஆவணப்படுத்தல் போன்ற விடயங்கள் அறிமுகம் செய்யப்பட்டன.

### காணி நிர்வாகம்

இஸ்லாமியப் படைகளால் தொடரப்பட்ட புனர்வாழ்வு நடவடிக்கைகளால் மிக நீண்ட நிலப்பரப்புக்கள் கிலாபத்தின் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. இத்தகைய நிலப்பரப்பில் விவசாயக் காணிகளும் பெருமளவிற் காணப்பட்டன. பொதுவாக படை நடவடிக்கைகளின் போது வெற்றியாளர்கள் தாம் கைப்பற்றிய நிலங்களை தமக்கிடையே பகிர்ந்து கொள்ளும் மரபினை கலீபா உமர் (ரழி) அவர்கள் மாற்றியமைத்தார்கள். அதில் தனிநபர்களுக்கு சொந்தமில்லாதவற்றை அரச உடைமை யாக்கியும், தனியாருக்குச் சொந்தமானவற்றை அதன் உரித்தாளிகளே தொடர்ந்து பயன்படுத்துவதற்கும் அனுமதி வழங்கியதோடு அதன் வருமானத்திலிருந்து ஒரு சிறு தொகையை திறைசேரி நிதிக்கான ஒரு வரியாக செலுத்தவும் உத்தரவிட்டார்கள்.

### இராணுவக் கட்டமைப்பு

இஸ்லாமிய வரலாற்றில் முதன் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவம் உருவாக்கப்பட்டது கலீபா உமர் (றழி) அவர்களது காலத்திலேயாகும். இஸ்லாமிய நிர்வாகத்திலுள்ள அனைத்து முஸ்லிம் களுக்கும் இராணுவ சேவை கடமை என்பதைக் கொள்கையாகக் கொண்ட கலீபா, இராணுவத்தை நிரந்தர இராணுவம், தொண்டர் (நிரந்தரமற்ற) படை என இரு பிரிவுகளாகப் பிரித்து, முதற் பிரிவினரை சுமார் எட்டு பிரிவுகளாக வகைப்படுத்தி அதற்கேற்ப சம்பளத் தொகை களையும் நிர்ணயம் செய்தார்கள். இரண்டாம் பிரிவினர் அவசியம் ஏற்படும் போது மட்டும் சேவைக்கழைக்கப்பட்டனர்.

இராணுவத்தினரை நிர்வகிக்க "தீவானுல் ஜுன்த்" எனும் இலாகாவை உருவாக்கி, அவற்றின் கிளைகளை அனைத்து முக்கிய நகர்களிலும் நிறுவினார்கள். அத்துடன் படையினருக்கான தங்குமிடங்களைக் கட்டுவித்ததோடு குடியிருப்புக்களையும் நிறுவினார்கள். இவை தவிர சுமார் நான்காயிரம் குதிரைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு எந்நேரமும் யுத்த நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப் படக்கூடிய வகையில் அவை பராமரிக்கப்பட்டன.

## நீதி நிர்வாகம்

வரலாற்றில் முதன் முதலாக நீதித்துறையை பொது நிர்வாகத்திலிருந்து வேறுபடுத்தி தனியாகவும் சுதந்திரமாகவும் இயங்கச் செய்த பெருமை கலீபா உமரவர்களையே சாரும். ஷரீஆ சட்டங்களில் தேர்ந்தவர்களை நீதிபதிகளாகத் தெரிவு செய்த கலீபா, இஸ்லாமிய ஷரீஆவின் அடிப் படையிலேயே தீர்ப்புக்களை வழங்குமாறு பணித்ததோடு ஊழல் மோசடிகளைத் தவிர்ப்பதற்காக நீதிபதிகளுக்கு மிக உயர்ந்த சம்பளங்களையும் வழங்கினார்கள்.

## திறைசேரியும் நாணயமும்

முன்னைய இரு தலைவர்களது காலப் பிரிவிலும் இல்லாதவாறு இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்து வரவு செலவுகளும் அதிகரித்தன. ஆயினும், செலவினங்களைப் பார்க்கிலும் வரவு அதிகரித்தமையால் மேலதிக செல்வத்தை எவ்வாறு கையாளலாம் என்பதை ஸஹாபாக்களின் ஆலோசனை சபையில் விவாதித்த கலீபா, இறுதியில் திறைசேரி ஒன்றை நிறுவும் முடிவிற்கு வந்தார். அந்த வகையில், இஸ்லாமிய உலகில் முதற் திறைசேரி கலீபா அவர்களின் ஆட்சியிலேயே நிறுவப்பட்டு அதற்கான உத்தியோகத்தர்களும் உதவியாளர்களும் கணக்காளர்களும் நியமனம் செய்யப்பட்டனர். காலப்போக்கில் மேலும் விரிவடைந்த இந்நிறுவனம் மாகாணங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டு அங்கும் இதன் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. கிளைகளில் மேலதிகமாகத் திரளும் செல்வம் மத்திய நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதனால் இராணுவம், நீதிபதிகள் மற்றும் ஏனைய அரச ஊழியர்களுக்கான ஊதியங்கள் வழங்குவது இலகுவானதுடன் பொது மக்களுக்கும் உதவித் தொகை தொடராக வழங்குவது இலகுவானது. அது மட்டுமல்லாது இஸ்லாமிய வரலாற்றில் முதன்முதலாக தனித்துவமான நாணயம் ஒன்றினை அச்சிட்டு வெளியிட்ட பெருமையும் கலீபா உமர் (ரழி) அவர்களையே சாரும்.

## கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்

உஸ்மான் (றழி) அவர்கள் தனது முப்பத்தி நான்காம் வயதில் அபூபக்ர் (றழி) அவர்களது தூண்டுதலால் இஸ்லாத்தை ஏற்றார்கள். இதன் மூலம் இஸ்லாத்திற் பிரவேசித்த முதல் பத்துப்பேருள் ஒருவராக இடம் பெற்றார்கள். அன்று தொடக்கம் அதனைப் பரவச் செய்வதில்

முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திய அவர்கள், வர்த்தகராகவும் செல்வந்தராகவுமிருந்ததால் அவர்களின் செல்வத்தில் பெரும் பகுதி இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவே செலவிடப்பட்டது. அனைத்து ஸஹாபாக்கள் மத்தியிலும் அபூபக்ர், உமர் (றழி) ஆகியோருக்கடுத்த அந்தஸ்தில் நோக்கப்படுமளவு சிறப்பிடம் பெற்றிருந்தார்கள்.

செல்வத்தின் மூலம் பல்வேறு சமூக நலப்பணிகளை மேற்கொண்டது மட்டுமல்லாது தமக்கிருந்த எழுத்தறிவின் மூலம் அல்லாஹ்வின் வார்த்தைகளான வஹியை எழுதும் பணியையும் நபிகளார் (ஸல்) அவர்களுக்குப் பக்கத்திலிருந்து மேற்கொண்டிருக்கிறார்கள். பிற்காலத்தில் அல்-குர்ஆனை ஓதுவதில் முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்காக அபூபக்ர் (றழி) அவர்கள் காலத்துத் தொகுப்பின் அடிப்படையிற் பல பிரதிகள் செய்து முழு முஸ்லிம் பிரதேசங்களுக்கும் அனுப்பிவைத்து அந்த குழப்ப நிலையை நீக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்லாது இஸ்லாத்தைக் கடல்கடந்து கொண்டு செல்வதற்கான கப்பற் படையின் தேவையை தமது ஆட்சிக் காலத்தில் நிறைவு செய்தார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாம் மத்திய தரைக்கடலையும் கடந்து ஐரோப்பாக் கண்டத்தினுட் பிரவேசிக்கவும் பிற் காலத்தில் கொன்ஸ்தான்திநோபிள் கைப்பற்றப்பட்டு ஓர் இஸ்லாமிய சாம்ராஜ் யத்தின் தலைநகரமாக மாற்றியமைக்கப்படவும் அத்திவாரமாக அமைந்தது என்றால் அது மிகையல்ல.

உஸ்மான் (றழி) அவர்கள், முன்சென்ற இரு கலீபாக்களாலும் மேற்கொள்ளப்பட்டது போன்றே, தமது காலப் பகுதியிலும் இஸ்லாமிய சாம்ராஜ்ய விரிவாக்கம் ஸ்தீரணம் போன்றவற்றை மிக சிறப்பாக முன்னெடுத்தார்கள். அந்த வகையில் பல புதிய பிரதேசங்கள் இணைக்கப்பட்டு மிகவும் விசாலமானதொரு சாம்ராஜ்யமாக இஸ்லாமிய சாம்ராஜ்யம் பிரகாசித்தது.

இவ்வாறு பரந்து விரிந்ததொரு சாம்ராஜ்யத்தை தனது நிர்வாகத்தின் கீழ்க்கொண்டு வந்திருந்த கலீபா அவர்கள் காலத்தின் தேவை, பொருத்தப்பாட்டுக்கேற்ப சில மாற்றங்களை நிர்வாகத்தில் ஏற்படுத்தி னார்கள்.

இயல்பிலேயே இளகிய மனமும் இரக்க சுபாவமும் கொண்ட இவர்கள் குடிமக்களுடன் மிருதுவான போக்கினையே கடைப் பிடித்தார்கள். முன்சென்ற கலீபா மிகவும் கண்டிப்பானதும் இறுக்க மானதுமான நிர்வாக

முறைமையைக் கடைப்பிடித்திருந்தமையால் கட்டப்பாட்டுடன் வாழ்ந்த ஒரு சாரார் கலீபாவின் இளகிய மனப் பாங்கினைப் பலவீனமாகக் கருதினர். தமது போக்கில் விரும்பியவாறு வாழ எத்தனித்தனர். இதற்கு இஸ்லாமிய உலகின் அன்றைய செல்வச் செழிப்பும் சாதகமாயமைந்தது எனலாம்.

அதே போன்று செல்வாக்குமிக்க பழம்பெரும் ஸஹாபாக்கள் மதீனாவை விட்டு வெளியேற உமர் (றழி) அவர்கள் அனுமதித்திருக்க வில்லை. ஆனால், கலீபா இவ்விடயத்தில் நெகிழ்வுப் போக்கினைக் கடைப்பிடித்தமையால் முன்னணி ஸஹாபாக்களிற் பலர் தலை நகரிலிருந்து வேறு பிரதேசங்கள் நோக்கி இடம் பெயரத் தொடங்கினர்.

தனது மனோநிலைக்கேற்ப விட்டுக் கொடுப்புடனான நிர்வாகத்தினை விரும்பிய கலீபா, அவ்வாறான இயல்புடையவர்களையே கவர்னர்களாக நியமிக்க விரும்பினார். இதனால், கலீபா உமர் (றழி) அவர்களது கால கவர்னர்கள் கண்டிப்பான நிர்வாக முறைமைக்குப் பழக்கப் பட்டிருந்தமையால் அவர்களிற் பலரை மாற்றி தமது இயல்புக்கு இசைவானவர்களை நியமனம் செய்தார்கள். அவ்வேளை மிக நீண்ட கால நிர்வாக அனுபவம் கொண்ட சிலரை தொடர்ந்தும் பதவியில் நீடிக்கச் செய்தார்கள். அவர்களிற் சிலர் உமையாப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கலீபா உஸ்மான் (றழி) அவர்களது காலத்தில் இஸ்லாமிய உலகு செல்வச் செழிப்புற்று பைத்துல்மாலின் சேமிப்புக்களும் பன்மடங்கு அதிகரித்துக் காணப்பட்டது. குறிப்பாக குதிரைகள், ஒட்டகைகளின் எண்ணிக்கைகள் அதிகரித்தமையால் அரச மேய்ச்சல் நிலங்களை விஸ்தரிப்பு செய்யவும் நடைமுறைகளில் சில மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டிய தேவையும் கலீபாவுக்கு ஏற்பட்டது. அதனையும் அவர்கள் மேற்கொண்டார்கள். திறைசேரியில் செல்வம் குவிந்து காணப்பட்ட மையால் கொடுப்பனவுகளும் அதிகரித்துக் காணப்பட்டன. ஆயினும், தீவிரப் போக்குடைய ஒருசிலர் அவை எவ்விதத்திலும் தேங்கக் கூடாது; அவ்வப்போது அனைத்தும் செலவிடப்படவேண்டும் எனும் நிலைப் பாட்டினை வெளிப்படுத்தினர்.

நீதித்துறையைப் பொறுத்தவரையிலும் கலீபா முன்சென்ற தமது தோழர்களின் நிலைப்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. ஆயினும், மிருதுவான போக்கினையே கடைப்பிடித்தார்கள். மேலும்,

தண்டனைகள் வழங்குவதிலும் இலகுவான நடைமுறையையே பேணினார்கள். இந்நிலையே குழப்பவாதிகள் இவர்களை பலவீனராக நோக்கவும் தமது தவறான நடவடிக்கைகளுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பினை ஏற்படுத்தியது எனலாம்.

அதேபோல், காலத்தின் தேவைகருதி மேலும் சில விடயங்களில் முன்சென்றோரின் நடைமுறைகளில் சில மாற்றங்களை கலீபா ஏற்படுத்தினார். இவற்றின் மூலம் இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் நன்மை செய்வதே அவர்களின் நோக்கமாயிருந்தது. இருப்பினும் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் நீங்காத காழ்ப்புக் கொண்டிருந்த யூதர்களும் குழப்பவாதிகளும் சந்தர்ப்பத்தினைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறவில்லை.

கிளர்ச்சியாளர்களின் நிபந்தனைகளை ஏற்றுத் தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பிருந்தும், நபி (ஸல்) அவர்கள் முன்கூட்டியே; (கூறிவைத்ததற்கிணங்க)" அநியாயக்காரர்கள் அல்லாஹ்வால் உமக்கு அணிவிக்கப்பட்ட ஓர் ஆடையைக் கழற்றி விடுமாறு உம்மைக் கோரினால் நீர் அதற்கு உடன்பட்டு விடாதே, என்னுடன் வந்து சேர்ந்து கொள்ளும்வரை பொறுமையைக் கடைப்பிடிப்பீராக! எனக் கூறிவைத்ததற்கிணங்க பொறுமை காத்தார்கள்.

இதனால், தான் ஷஹீதாக்கப்படும் வரை நபியவர்களின் வாக்கில் அசையா நம்பிக்கையுடன் இருந்து, ஹிஜ்ரி 35ஆம் வருடம் இஸ்லாத்திற் காகவும் முஸ்லிம் தேசத்திற்காகவும் தமதுயிரைத் தியாகம் செய்தார்கள் மூன்றாம் கலீபா உஸ்மான் (றழி) அவர்கள்.

### கலீபா அலீ இப்னு அபீதாலிப் (றழி) அவர்கள்

இஸ்லாமிய வரலாற்றில் மிகவும் துக்ககரமானதும் கறை படிந்ததுமாகிய நிகழ்வுகளின் பின்னணியில் நிர்ப்பந்த சூழலில் நிர்வாகப் பொறுப்பினைக் கையேற்ற கலீபா அலீ (றழி) அவர்கள், தமது காலப் பகுதி முழுவதுமே போராட்டங்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தார்கள். முன்சென்ற மூன்று கலீபாக்களது நிர்வாகங்களிலும் முக்கிய பொறுப்புக்களை ஏற்றும் ஆலோசனைகள் வழங்கியும் ஆட்சிகள் சிறப்புறப் பங்காற்றிய போதிலும் ஆட்சிப் பொறுப்பு அவர்களது கைகளுக்கு மாற்றப்பட்டபோது அதனை திருப்தியுடன் மேற்கொள்ள விரோதிகள் வாய்ப்பளிக்கவில்லை.

அலீ (ரழி) அவர்கள், கிலாபத்திற்காக பைஅத் செய்யப்பட்ட பின்னர் நாட்டில் காணப்பட்ட கொந்தளிப்பு நிலையினை சரிசெய்வ தற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள். அத்துடன் தனது நிர்வாகத்திற்கு ஒத்துழைக்குமாறு மாகாண ஆளுநர்களுக்கு அழைப்பு விடுத்ததுடன் முரண்பட்ட கவர்னர்களை நீக்கி அவ்விடத்துக்குத் தமது தரப்பிலிருந்து புதியவர்களை அனுப்பி வைத்தார்கள். அவர்களுள் சிலர் அதற்கு கட்டுப்பட்ட அதேவேளை சிலர் முரண்பட்டதுடன் பதவியில் தொடர்ந்தும் நீடித்தனர். அத்துடன் தமக்கு ஆதரவாக மக்களையும் ஒன்றுதிரட்டினர்.

இதனால், முதலில் முரண்பட்டவர்களை தனக்குக் கீழ்ப்படிய வைக்கும் நிர்ப்பந்தம் கலீபாவுக்கு ஏற்பட்டது. இந்நிலை கலீபாவை பல உள்நாட்டு யுத்தங்களில் ஈடுபட நிர்ப்பந்தித்ததுடன் நிர்வாகத்தை ஒழுங்காகப் பரிபாலிக்கவோ இஸ்லாமிய உலகின் விஸ்தரிப்புக்கோ போதிய அவகாசத்தினையும் வழங்கவில்லை என்றே சொல்ல முடியும்.

## கலீபாக்கள் எதிர்நோக்கிய சவால்களும் ஆளுமைப் பண்புகளும்

நபி (ஸல்) அவர்களின் மறைவுடன் தோன்றிய பல்வேறு சமூக அரசியற் கொந்தளிப்புக்களின் மத்தியில், இஸ்லாமிய அரசையும் முஸ்லிம் சமூகத்தையும் பாதுகாத்து வழிநடாத்தும் பொறுப்பினைத் தமது தோள்களில் சுமந்து கொண்ட ஸஹாபாப் பெருமக்கள் உலகம் வியக்கும் வகையில் அப்பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றியமை நபி (ஸல்) அவர்களின் பாசறையிற் பெற்ற பயிற்சியின் பின்னணியே எனின் மிகையல்ல.

மிகக் குறுகிய கால அனுபவத்தைக் கொண்டிருந்த இஸ்லாமிய அரசுக்கு முன்னால் ஏராளமான சவால்கள் எழுந்த வண்ணமிருந்தன. அவற்றை உறுதியான இறை நம்பிக்கையுடனும் நபி (ஸல்) அவர்களது வழிகாட்டலின் அடிப்படையிலும் முன்னணி ஸஹாபாக்கள் முறியடித்து சமுதாயத்தை வெற்றிப் பாதையில் இட்டுச் சென்றார்கள். அவ்வாறான சவால்களில் முதற்கலீபா அபூபக்ர் (ரழி) அவர்கள் எதிர்கொண்டவை களை நோக்கும் போது :

அ. சற்றும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட அண்ணலாரின் மறைவை, ஸஹாபாக்களின் உணர்வுகள் ஏற்கத் தயங்கின. வெவ்வேறு

விதமான சிந்தனைகளும் தடுமாற்றங்களும் அவர்களை ஆட்கொண்டன. தமது நேசத்திற்குரிய தலைவரை மரணத்துடன் தொடர்புபடுத்தும் வார்த்தைகள் காதுகளில் விழுவதைக்கூட அவர்களாற் சகிக்க முடியாமலிருந்தது. இதனாலேயே சமூகத்தின் அதி உயர் நிலையிலிருந்த உமர் (ரழி) அவர்கள் கூட நிலை குலைந்து போயிருந்தார்கள். இந்நிலையிலேயே அபூபக்கர் (ரழி) அவர்களின் ஆளுமை வெளிப்பட்டது. அனைவரையும் ஆசுவாசப்படுத்தும் வகையில் அவர்களது பிரசங்கமும் விளக்கவுரையும் அமைந்தன. அனைத்து ஸஹாபாக்களும் அவர்களது அறிவுரைக்கு செவிமடுத்தார்கள். நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஆ. ஸகீபது பனீ ஸாஇதாவிலும் அபூபக்கர் ஸித்தீக் (றழி) அவர்களது ஆளுமையும் அந்தஸ்தும் வெளிப்பட்டன.

இ. நபி (ஸல்) அவர்களால் தயார்படுத்தப்பட்ட உஸாமா (றழி) அவர்களின் படையை ரோம தேசம் நோக்கி அனுப்புவதா அல்லது மதீனாவின் பாதுகாப்புக்காக நிறுத்திக் கொள்வதா என்ற சவால். இதில் படையை அனுப்பும் முடிவில் மிக்க உறுதியாகக் காணப்பட்ட கலீபா அவ்வாறே அமுல்படுத்தவும் செய்தார்கள். இந்நடவடிக்கையே இஸ்லாத்தின் எல்லைப்புற எதிரிகளை கிலிகொள்ளச் செய்தது எனலாம்.

ஈ. **பொய் நபிமார்களின் தோற்றம்** : நபிகளாரின் வபாத்தின் பின் அவர்களுக்கிருந்த சமூக அந்தஸ்தினை தாமும் பெற்றுக் கொள்ளலாம் எனும் நப்பாசையில் பல பொய்யர்கள் தம்மை நபியாக அறிமுகம் செய்து மக்களை வழிகெடுக்கக் களமிறங் கினர். இவர்களனைவரையும் மிகக் கடுமையான நடவடிக்கை மூலம் துடைத்தெறிந்தார்கள் கலீபா அபூபக்கர் (ரழி) அவர்கள்.

உ. **ஸகாத் வழங்க மறுத்தோர்** : இஸ்லாத்தில் ஸ்திரமற்றிருந்த இவர்கள் கலீபாவை பலவீனமாகக் கருதி ஸகாத்தை மறுத்து இஸ்லாமிய அரசுக்கு சவால் விடுத்தார்கள். கலீபா அவர்களுக்கெதிராய் மேற்கொண்ட நடவடிக்கையின் கனதியை உணர்ந்த அவர்கள் உடனடியாகத் தமது நிலைப்பாட்டினை மாற்றியதுடன் இஸ்லாமிய அரசுக்குக் கட்டுப்படவும் செய்தனர்.

ஊ. அல்குர்ஆனை ஒன்று திரட்டல்: நபி (ஸல்) அவர்களது அடிச்சுவட்டிலிருந்து சற்றும் விலகமாட்டேன் எனும் உறுதிப் பாட்டுடன் காணப்பட்ட கலீபாவுக்கு முன்னால் நபிகளார் மேற்கொள்ளாத விடயங்களில் ஈடுபடுவது மிகப்பாரதூரமான விடயமாகக் காணப்பட்டது. ஆயினும், சந்தர்ப்ப சூழ்நிலை யினை உணர்ந்த கலீபா அதற்கான அனுமதியை வழங்கிய துடன் மிக மிக நுணுக்கமாக அதனைக் கையாண்டார்கள்.

இவ்வாறு இன்னும் பல உள்நாட்டு வெளிநாட்டு சவால்களை எதிர் கொண்ட முதற் கலீபா, அவையனைத்தையும் முறியடித்து இஸ்லாமிய உலகின் ஸ்திரத்தன்மையை முழு உலகுக்கும் பறை சாற்றினார்கள்.

இவர்களையடுத்து முஸ்லிம்களதும் இஸ்லாமிய உலகினதும் பணிகளைப் பொறுப்பேற்ற இரண்டாம் கலீபா உமர் (றழி) அவர்களும் அதனை எதிர்கொண்ட விதமும் அவர்களது ஆளுமையும் அவர்கள் அக்காலத்திற்குப் பொருத்தமானவரே என்பதை மிக ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றன.

கலீபா அவர்கள் பதவியேற்றதும் எதிர் நோக்கிய முதலாவது சவாலாக பாரசீகத்தில் புனித போரில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையை இக்கட்டான நிலையிலிருந்து மீட்டெடுக்க வேண்டிய அவசர நடவடிக்கை யாகும். எனவே இறாக் நோக்கி கிட்டத்தட்ட நான்காயிரத்திற்கும் அதிகமான வீரர்கள் கொண்ட உதவிப்படையொன்றினை உடனடியாக அனுப்பி வைத்தார்கள். அத்துடன் உரோம, பாரசீக வல்லரசுகளின் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அப்பகுதி மக்களுக்கு விமோசனத்தின் வழிகளைத் திறந்து விடுதலை பெற்றுக் கொடுத்தலை சவாலாக ஏற்று அதனை மிகவேகமாக செய்து முடித்தார்கள்.

அந்த வகையில் காதிஸிய்யாப் போர், நிஹாவன்த் போர் போன்ற போர்களில் இலட்சக்கணக்கான பாரசீக எதிரிப் படைகளை முறியடித்து இஸ்லாமிய உலகின் இருப்பினை உறுதி செய்து விரிவாக்கம் செய்வதும் அவர்கள் முன்னால் காணப்பட்ட பெரும் சவால்களாகும். அவற்றினையும் தனது விசுவாசமும் அர்ப்பணமும் மிக்க இஸ்லாமிய தளபதிகள், வீரர்கள், ஊடாக அல்லாஹ்வின் உதவியுடன் வெற்றி கொண்டார்கள். பலஸ்தீனை குறிப்பாக மஸ்ஜிதுல் அக்ஸாவை தமது நேரடிப் பிரசன்னத்தின் ஊடாக இஸ்லாமிய ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து அம்மக்களுக்கும் மஸ்ஜிதுக்கும் பாதுகாப்பு வழங்கினார்கள்.

மேலும், இஸ்லாமிய உலகு என்றுமில்லாதவாறு, அரேபியாவுடன் இணைந்ததாக உரோம, பாரஸீக வல்லரசுகளின் ஆள்புலங்களையும் உள்ளடக்கிய பரந்து விரிந்த நிலப்பரப்பினை கொண்டதாக வியாபகம் பெற்ற போது அதன் நிதி, நீதி, நிர்வாக விவகாரங்கள் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பின் கீழ்க் கொண்டு வரப்பட வேண்டியது பெரும் சவாலாகக் காணப்பட்டது. அதனைத் தனது கடமையாக உணர்ந்த கலீபா மிகச் சிறப்பான வகையில் அதற்கான கட்டமைப்புக் களை உருவாக்கி உலகம் வியக்கும் சிறப்பான பேரரசு ஒன்றினை உருவாக்கினார்கள்.

இறுதியில் எதிரிகளின் சதித் திட்டத்தின் மூலம் ஷஹீதாக்கப்பட்ட கலீபா தமக்குப் பின்னால் முஸ்லிம்கள் நிலைகுலையாதிருப்பதற்காக ஷூறாத் தெரிவு முறைமைக்கு அடித்தளமிட்டு அதனை விட்டுச் சென்றார்கள். அதனடிப்படையில் கலீபாவான உஸ்மான் (றழி) அவர்கள் தமது கிலாபத்தில் முன்சென்றவர்களைப் பார்க்கிலும் அதிகமான சவால்களை எதிர்நோக்கினார்கள்.

மிக வேகமாக விரிவடைந்து கொண்டிருந்த இஸ்லாமிய சாம்ராஜ்யம் இவர்களது காலப்பகுதியில் வட ஆபிரிக்காவின் எல்லையை அடைந்ததுடன் ஆசியாவிலும் மிக நீண்ட தூரம் பிரவேசித்திருந்தது. இதன் பயனாக இஸ்லாமிய உலகில் செல்வம் கரைபுரண்டது. மக்களது வாழ்க்கை வழிமுறைகளிலும் மாற்றங்கள் தோன்றிக் கொண்டிருந்தன. இவற்றைச் சரிசெய்து நிர்வாகத்தை வழிநடாத்துவது அன்றைய சூழலில் கலீபாவுக்குப் பெரும் சவாலாகக் காணப்பட்டது. அது மட்டுமல்லாது பெருந்தொகையாக இஸ்லாத்தில் நுழைந்து கொண்டிருந்த அரேபியரல்லாத முஸ்லிம்கள், அராபிய இஸ்லாமிய கலாசாரத்தில் இணையும் போதும் பல புதிய பிரச்சினைகள் தோன்றியதுடன் அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளை முன்வைப்பதும் கலீபாவுக்கு சவாலாக மாறியது.

இவ்விதமிருக்க, முன்சென்ற இருவரது ஸ்திரமானதும் கட்டுப் பாடுடையதுமான நிர்வாகத்தில் சாதிக்க முடியாதவற்றை கலீபாவின் இரக்க சுபாவத்தைப் பயன்படுத்தி சாதித்துக் கொள்ள முயன்ற இஸ்லாமிய விரோத சக்திகளின் குழப்பமும் சதிமுயற்சிகளும் கலீபாவின் முன்னால் மிகப் பெரும் சவால்களாகக் காணப்பட்டன.

இவையனைத்தையும் இரும்புக் கரம் கொண்டு அடக்க பல்வேறு வாய்ப்புக்கள் இருந்தும் கூட சமாதான வழிகளிலும் விட்டுக் கொடுப்புடனும் தீர்த்துக் கொள்ள நினைத்த கலீபா, துரோகிகளால் பதவி விலகுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஆயினும், இஸ்லாத்தில் அவர்களது உறுதியும் நபி (ஸல்) அவர்களது வாக்கின் மீதுள்ள அசையாத நம்பிக்கையும் அவர்களுக்கு தைரியத்தையும் மனவுறுதியை யும் கொடுத்தன. ஆதலால், தான் ஷஹீதாக்கப்படும் வரை இஸ்லாமிய அரசை அரக்கர்கள் கையாட சந்தர்ப்பம் வழங்கவில்லை.

இஸ்லாமிய கிலாபத்தின் நான்காம் கலீபாவான அலீ (றழி) அவர்கள் இக்கட்டான சூழலில் கிலாபத்தை ஏற்றமையால் முன் சென்றவர்களைப் பார்க்கிலும் அதிகளவிலான சவால்களை எதிர் கொண்டார்கள்.

அவற்றுள் மிக, மிக ஆபத்தனாதாக மதீனாவில் இரத்தமோட்டிக் கொண்டிருந்த சதிகாரக் கும்பலின் அத்துமீறல்கள் காணப்பட்டன. அவற்றைக் கையாள்வதில் அவர்கள் பாரிய சவால்களை எதிர் கொண்டார்கள். ஏனெனில், தலைநகரின் அன்றைய பாதுகாப்பு, கட்டுப்பாடு போன்றவற்றைத் தீர்மானிக்கும் சக்தி ஆயுதம் தாங்கிய குழப்பக்காரர்களின் கரங்களிலேயே காணப்பட்டது. அவர்களை அடக்கி விடவோ அல்லது மதீனாவிலிருந்து பலவந்தமாக வெளியேற்றவோ போதிய சக்தி கலீபாவுக்கு இருக்கவில்லை. அதே நிலையில் கலீபாவின் படுகொலைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரும் சிரேஷ்ட மானவர்களின் நெருக்குதல்கள், புதிய கலீபாவுக்கு விசுவாசமாய் செயலாற்ற மறுத்த மாகாண கவர்னர்களின் நடவடிக்கைகள் போன்றன கலீபாவை இக்கட்டான நிலைக்குத் தள்ளியிருந்தன. ஆயினும், கலீபா அவசரப்படவில்லை. கொலைகாரக் கும்பலை தந்திரமாகவே மதீனாவிலிருந்து வெளியேற்றி அதன் பின் நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தார்கள் என்பது அவர்களது பிந்திய நடவடிக்கைகள் மூலம் புலப்படுகின்றன.

மேலும், அரசியல் நோக்கம் கொண்ட சில மாகாண ஆளுநர்கள் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகள் கலீபாவைப் போர்க்களம் செல்லுமளவு நிர்ப்பந்தித்தன. இவை தவிர இஸ்லாத்தின் பெயரால்

எல்லைமீறிய கவாரிஜ்கள், போன்றோரின் கிளர்ச்சிகள் அனைத்திற்கும் மேலாக "ஷீஅத்து அலீ" அதாவது அலீ (ரழி) அவர்களது அணியினர் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டு இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் குழப்பத்தில் ஆழ்த்தி அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்ல முனைந்த யூதர்கள், அவர்களது அடிவருடிகள் அது மட்டு மல்லாது அயல்நாட்டுக் காபிர்களின் சதி முயற்சிகள் போன்றன கலீபாவுக்குப் பன்முனை சவால்களாயமைந்தன. எவ்வாறாயினும், கலீபா சளைத்து விடவில்லை. அனைத்துச் சவால்களையும் எதிர் கொண்டிருந்தர்கள். இவர்களை வெற்றிகொள்வது முடியாத காரியம் என்பதனை புரிந்து கொண்ட எதிரிகள் சதிமுயற்சி ஊடாக கலீபாவை படுகொலை செய்தனர்.

இவ்வாறு பன்முனைச் சவால்களை எதிர்கொண்ட நாற்பெரும் கலீபாக்கள் இறையுதவி, நபிகளாரின் வழிகாட்டல்கள், இஸ்லாத்தில் அவர்களுக்கிருந்த அசைக்கமுடியாத உறுதிப்பாடு போன்றவற்றினால் அத்தனை சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு இஸ்லாத்தையும் முஸ்லிம் உலகையும் பாதுகாத்தனர் என்பது வரலாறு கூறும் உண்மைகளாகும்.

மேலும், அக்கால நிகழ்வுகளின் பின்னணிகள், அவற்றை கலீபாக்கள் கையாண்ட விதங்கள் போன்றவற்றை எடுத்து நோக்கும் போது நான்கு கலீபாக்களது வருகையின் ஒழுங்கும் அவர்களது ஆளுமைக்குப் பொருத்தமான காலப்பகுதியாய் அமைந்துள்ளமையை அவதானிக்க முடியும்.

### பிற்பட்ட கலீபாக்களின் காலம்

அல்குலபாஉர் ராஷிதூன் காலப்பகுதிக்குப் பின்னரான ஆட்சிக்காலப் பகுதியே பிற்பட்ட கலீபாக்களின் காலம் எனும் தலைப்பின் கீழ் இங்கு நோக்கப்படுகின்றது. இக்காலப்பகுதி மிக நீண்ட காலப்பகுதியாகும். கி.பி. 661 முதல் கி.பி. 1924 வரை தொடர்ந்த இவ்வாட்சிக்காலப் பகுதியில் உமையாக்கள், அப்பாஸியர், சிற்றரசுகள், உஸ்மானியர் என பல்வேறு தரப்பினர் ஆட்சி செய்துள்ளனர்.

கால ஒழுங்கினை அடிப்படையாகக் கொண்டு பிற்கால அரசுகளையும், முக்கிய ஆட்சியாளர்களையும் இங்கு நோக்குவோம்.

## 1. உமையாக் காலம்

### அ. உமையாக்களின் எழுச்சி

நபித்தோழர் முஆவியா (ரழி) அவர்களால் ஹிஜ்ரி 41இல் தோற்றுவிக்கப்பட்ட ஆட்சியே உமையா ஆட்சி என வழங்கப் படுகின்றது. அரேபியாவில் மிகவும் பிரசித்தம் வாய்ந்த குறைஷிக் குலத்தில் மிக முக்கிய ஒருவராக விளங்கிய அப்துல் மனாப் என்பவருக்கு ஹாஷிம், அப்துல் ஷம்ஸ் என இரண்டு புதல்வர்கள் இருந்தனர். இவர்களுள் ஹாஷிம் சந்ததியினர் ஹாஷிமீக்கள் என அழைக்கப்படுவது போல அப்துல் ஷம்ஸின் புதல்வரான உமையாவின் சந்ததியினர் உமையாக்கள் அல்லது பனூ உமையா என அழைக்கப்படுகின்றனர்.

குலபாஉர் ராஷிதூன்களில் நான்காவது கலீபாவாக வந்த அலி (ரழி) அவர்களுக்குப் பின்னர் உமையா வம்சத்தைச் சார்ந்தவர்கள் ஆட்சியைக் கைப்பற்றியதால் அவர்கள் ஆட்சி உமையா ஆட்சி எனப்படுகின்றது. நபி (ஸல்) அவர்களின் காலம் முதற்கொண்டே உமையா வம்சத்தைச் சார்ந்த முக்கியஸ்தர்கள் பலர் முக்கியமான பதவிகள் பலவற்றில் அமர்த்தப்பட்டு வந்துள்ளனர். இதற்குதாரணமாக முஆவியா (ரழி) அவர்களையே குறிப்பிடலாம்.


நபி (ஸல்) காலத்தில் குத்தாபுல் வஹி-வஹியை எழுதுவோரில் ஒருவராக நியமிக்கப்பட்டிருந்த முஆவியா (ரழி), கலீபா அபூபக்கர் (ரழி) காலத்தில் (11-13) சிரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட உதவிப்படை ஒன்றுக்கு தளபதியாக நியமிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டார். கலீபா உமரின் காலத்தில் (13-23) ஜோர்தான்

மாவட்டத்திற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். 3ம் கலீபா உஸ்மான் (ரழி) (23-35) அவர்கள் இவரை சிரியா மாகாணம் முழுவதற்குமான மாகாண ஆளுநராக நியமித்தார்.

தொடர்ந்து பல வருடங்கள் சிரியாவில் பணியாற்றியது மட்டு மல்லாமல், மக்கள் நலனிலும் பல்வேறு மட்டங்களில் பங்கெடுத்ததால் அப்பிராந்திய மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருந்த முஆவியா (ரழி), கலீபா உஸ்மான் (ரழி) யின் கொலையைத் தனது அரசியல் தலைமையை வலுப்படுத்திக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முனைந்தார். எனவே, கலீபா உஸ்மானின் கொலையாளிகளை உடனடியாகக் கண்டுபிடித்துத் தண்டிக்க வேண்டுமென்ற நிபந்தனையினை முன்வைத்து கலீபா அலியுடன் முரண்பட்டு ஹிஜ்ரி 37ல் சிப்பீனில் போரிட்டார்.

4ம் கலீபா அலி (ரழி) அவர்கள் ஹிஜ்ரி 40ல் கொலை செய்யப் பட்டதைத் தொடர்ந்து அவர்களது மகன் ஹஸன் (ரழி) யை கூபா நகர மக்கள் கலீபாவாகத் தெரிவு செய்து அவருக்கு பைஅத் செய்தனர். குறிப்பாக மக்கா, மதீனா நகர்களில் வாழ்ந்த மக்கள் இத்தெரிவுக்கு அங்கீகாரம் வழங்கினர். இந்நிலையில் சிரியாவில் தன்னைத்தானே கலீபாவாகப் பிரகடனம் செய்திருந்த முஆவியா (ரழி), கிலாபத் முழு வதற்கும் தானே கலீபாவாக வரவேண்டும் எனும் நோக்கில் கூபாவை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். விடயமறிந்த ஹஸன் (ரழி) போராட்டத்தைத் தவிர்க்கும் நோக்கில் முஆவியா (ரழி) வுடன் சமாதான உடன்படிக்கை ஒன்றைச் செய்து, ஆட்சிப் பொறுப்பை அவருக்கு விட்டுக் கொடுத்தார். அது முதல் முஆவியா (ரழி) கிலாபத்தின் தனிப்பெரும் கலீபாவாக வந்ததன் மூலம் உமையாக் கிலாபத்தின் தோற்றத்திற்கு வித்திட்டார்.

## உமையாப் பரம்பரை அட்டவணை



## ஆ. உமையாக்களின் பிரதான ஆட்சியாளர்கள் (ஆட்சியாளர்களின் ஆளுமைப் பண்புகளும் அவர்களது பங்களிப்புக்களும்)

**முஆவியா (ரழி) (ஹி : 41-60)**

அபூ ஸுஃபியானுக்கும் ஹிந்தாவுக்கும் முதல் மகனாகிய இவர் ஹிஜ்ரத்துக்கு 15 ஆண்டுகளுக்கு முன் மக்காவில் பிறந்தார். உமையா வம்சத்தவரான இவர் தனது 23வது வயதில் மக்கா வெற்றியின் போது இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். வஹியை எழுதுவோரில் ஒருவராக நபியவர்களால் நியமிக்கப்பட்ட இவர், கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் தனது சகோதரர் யஸீதுக்கு உதவியாக ஒரு படைக்குத் தலைமை தாங்கிச் சென்று சிரியாவின் சில இடங்களை வென்றார். சகோதரர் யஸீத் இறந்ததும் அவர் அதுவரை வகித்து வந்த திமிஷ்க் நகரின் பொறுப்பாளர் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டார்.

நிர்வாகத் திறனும் நம்பிக்கையும் நேர்மையும் மிக்கவராக இவர் காணப்பட்டமையால், கலீபா உமர் (ரழி) இவரை சிரியாப் பிரதேசத்தின் ஒரு பகுதிக்கு நிர்வாகியாக நியமித்தார். கலீபா உஸ்மான் (ரழி) இவரை சிரியா மாகாணம் முழுவதற்கும் ஆளுனராக நியமித்தார். இவ்வாறு சிரியாவின் ஆளுனராக 20 வருடங்களும் கலீபாவாக 20 வருடங்களும் கலீபா முஆவியா ஆட்சி செய்துள்ளார். இவர் கலீபாவாக ஆட்சி செய்த காலத்தில் இவரது நிர்வாகத்தில் கணிசமான தொகையினர் (கலீபா மீது) அதிருப்தி கொண்டவர்களாக காணப்பட்டனர்.

கலீபா முஆவியா (ரழி) ஆட்சிக்கு வந்ததும் டமஸ்கஸை தலைநகராக பிரகடனம் செய்தார். நிர்வாக விடயங்களில் மிகப் பொருத்தமான வர்களையே தெரிவு செய்தார். நிர்வாகிகளும் கலீபாவுக்கு அனுசரணையாகவே நடந்து கொண்டனர்.
உதாரணம் :

- எகிப்திய கவர்னர் அம்ர் பின் ஆஸ் (ரழி)
- கூபா கவர்னர் முகீரா பின் ஷுஃபா
- பஸரா கவர்னர் ஸியாத்

இதனால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் நடவடிக்கைகள் சீரடைந்தன. உள்நாட்டிலும் பல சீர்திருத்த நடவடிக்கைகள் இடம்பெற்றன.

குறிப்பாக தபால் சேவையை சீர்செய்ததுடன் அதற்கென "தீவானுல் பரீத்" எனப்படும் தபாற் திணைக்களம் ஒன்றையும் உருவாக்கினார். "தீவானுல் காத்தம்" எனப்படும் பதிவேட்டுத் திணைக்களத்தை உருவாக்கி அதனூடாக அரசாங்க ஆவணங்களை முத்திரையிட்டுப் பாதுகாக்கும் நடைமுறையை அறிமுகம் செய்தார். பலதரப்பட்ட குழுக்களில் இருந்து வீரர்கள் திரட்டப்பட்டுப் பலம் வாய்ந்த படையொன்று உருவாக்கப்பட்டது. அவர்களுக்கு மாதாந்த சம்பளம் ஒன்றும் வழங்கப்பட்டது. இத்தோடு நில்லாது நாட்டின் விவசாய வர்த்தக முயற்சிகளுக்கும் ஊக்கமும் உற்சாகமும் அளித்தார்.

முஸ்லிமுக்குள்ள அதே உரிமையை முஸ்லிம் அல்லாதவருக்கும் வழங்கினார். ஆட்சி அதிகாரங்களில் குறிப்பாகக் கிறிஸ்தவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அவரின் அரசவைப் புலவராக நியமிக்கப் பட்டிருந்த அல்-அக்தல் என்பவரும் அரசவை வைத்தியராக கடமை புரிந்த இப்னு உதால் என்பவரும் கிறிஸ்தவர்களே என்பதும் நோக்கத்தக்கது. கிறிஸ்தவர்களுக்குத் தனது சமயக் கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு சகல உதவிகளையும் வழங்கியதோடு நில்லாது, இயற்கை அனர்த்தங்களால் பாதிப்படைந்த அவர்களது தேவாலயங்களை நிர்மாணித்துக் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்தார். கலீபாவின் இத்தகு நடவடிக்கைகளால் கிறிஸ்தவர்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவராக விளங்கினார். கிறிஸ்தவர்கள் தனது பிரச்சினைகளையும் பொதுச் சிக்கல்களையும் கலீபா முஆவியாவிடமே எடுத்து வந்து அவருடைய தீர்ப்பைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு புகழ் பெற்றிருந்தார்.

கிலாபத்தை ஒரே தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபடுத்திய கலீபா முஆவியா, தனது முழு மொத்த இராணுவ, நிர்வாக விடயங்களை பைசாந்திய ஒழுங்கமைப்பிற்கு ஒத்ததாக மாற்றி யமைத்தார். உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக ஹிஜ்ரி 30க்குப்

பின்னர் வெளிநாட்டு எதிரிகள் பற்றிக் கவனம் செலுத்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இந்நிலையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திய உரோமர் வட ஆபிரிக்கப் பிரதேசங்களை மீட்டிக் கொண்டதோடு உள்நாட்டு மக்களை இம்சைப்படுத்தவும் ஆரம்பித்தனர். இது குறித்து மக்கள் கலீபாவிடம் முறையிடவே, வட ஆபிரிக்கா மீது உக்பா பின் நாபிஃ. தலைமையில் ஒரு படை அனுப்பப்பட்டது. இப்படை எதிரிகளைத் தோற்கடித்து ஹிஜ்ரி 50 இல் கைருவான் எனும் நகரைக் கைப்பற்றிக் கொண்டது. இந்நகர் கைப்பற்றப்பட்டதனால் கடல் மார்க்கமாக நடந்த உரோமரின் தாக்குதல்களை முறியடிக்க இலகுவாக அமைந்தது.

தளபதி உக்பா ஹிஜ்ரி 55ல் மேற்காபிரிக்கா மீது படைநடாத்திச் சென்று மொரோக்கோ (மக்ரிப்) வைக் கைப்பற்றினார். ஹிஜ்ரி 65ல் உக்பா மரணிக்கும் வரை ஆபிரிக்காவை கலீபா முஆவியா தனது பரிபாலனத்தின் கீழ் கொண்டுவந்து ஆட்சி செய்தார்.

ஹிஜ்ரி 51, 53, 54, 55 களில் முறையே கிழக்கு ஆப்கானிஸ்தான், பல்க், புஹாரா, ஸமர்க்கந்த் முதலிய பகுதிகள் உமையாக்கள் வசம் வந்தன.

கலீபா முஆவியாவின் காலத்தில் (ஹிஜ்ரி 48-50 வரையான காலப்பகுதியில்) கொன்ஸ்தாந்து நோபிளை கைப்பற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சைப்ரஸ், ரோட்ஸ் தீவுகள் முஸ்லிம்கள் வசம் வந்தன. சுமார் 20 வருடங்கள் கலீபாவாக ஆட்சி செய்த முஆவியா (ரழி) தனக்குப் பின் கிலாபத்தின் வாரிசாக தனது மகன் யஸீதை நியமித்தார். கலீபாவின் இந்த நடைமுறை முன்னைய நடைமுறைக்கு வேறுபட்டதாகவே அமைந்திருந்தது. இவ்வேளை யஸீதைவிட மிகவும் திறமை படைத்த பல நபித்தோழர்கள் இருந்தமையால் அவர்களிடையே கருத்து வேறுபாடு வராமலிருக்க யஸீதைக் கலீபாவாக நியமித்தார் எனக் கூறுவதும் உண்டு. ஒரு கலீபா உயிருடன் இருக்கும் போதே அடுத்த கலீபாவாக தனது வாரிசை நியமித்து அவருக்காக பைஅத் பெற்றுக் கொண்ட இப்புதிய நடைமுறையை நபித் தோழர்கள் எதிர்த்தனர்.

அச்சுறுத்தல்கள் மூலமாகவும் அன்பளிப்புக்கள் கொடுத்தும் பைஅத் பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும், அன்றைய சூழ்நிலைக்கேற்ப கலீபாவின் இந்த நடவடிக்கையினை அவரின் இஜ்திஹாதாக அங்கீகரிப்போரும் உண்டு.

கலீபா முஆவியா தனது மகன் யஸீதை கலீபாவாக நியமித்தது தொடர்பாக மக்கள் மத்தியில் உரையாற்றிய போது கூறியதாக முபஸ்ஸிர் இப்னு ஹஸீர் குறிப்பிடும் பின்வரும் வாசகங்களும் இங்கு நோக்கத்தக்கது.

> "இறைவா, நான் யஸீதைத் தகுதியானவர் என எண்ணியே கலீபாவாக நியமனம் செய்தேன். அவரது ஆட்சி நல்லாட்சியாக இருந்தால் அதனை அங்கீகரிப்பாயாக. மாறாக, நான் அவர் மீது கொண்ட அன்பின் காரணமாக நியமித்திருந்தால், அவரது ஆட்சியை அங்கீகரிக்காதிருப்பாயாக". தனது 20 வருட அட்சியின் பின் கலீபா முஆவியா ஹிஜ்ரி 60ல் காலமானார்.

யசீதை வாரிசாக நியமித்ததன் மூலம் முஆவியா (ரழி) பெரும்பாலான மக்களின் அதிருப்திக்கு உள்ளானார். அவரது மரணத்திற்குப் பின்னர் ஹிஜ்ரி 61ல் கர்பலாவிலும், ஹிஜ்ரி 63ல் நஹர்வானிலும் நடந்த யுத்தங்கள் இதன் வெளிப்பாடுகளாகும். இந்நிலையில் மக்கள் அப்துல்லா பின் ஸுபைரை கலீபாவாக நியமித்து ஆட்சிக்குள் ஆட்சி நடாத்தும் ஒரு புது மரபைத் தோற்றுவித்தனர்.

யஸீதைத் தொடர்ந்து அவரது இரு புதல்வர்களான முஆவியாவும் காலிதும் அடுத்தடுத்து பதவியேற்றுப் பதவிதுறந்த நிலையில் உமையாக்களின் முக்கியமானவரான மர்வான் இப்னு ஹகமை உமையாக் குடும்பத்தினர் கலீபாவாகத் தெரிவு செய்தனர். மர்வான் ஆட்சிக்கு வந்த போது டமஸ்கஸைச் சுற்றியுள்ள பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் அப்துல்லா பின் ஸுபைரின் கட்டுப்பாட்டின் கீழே இருந்து வந்தன. மர்ஜ்ராஹித் எனும் இடத்தில் இருவரும் போரிட்டுக் கொண்டதில் மர்வானுக்கு வெற்றி கிட்டியது. இருந்தும் மர்வான் நீண்டகாலம் ஆட்சியில் நிலைக்கவில்லை. கி. பி. 685ல் (ஹிஜ்ரி 65 இல்) மர்வான் மரணமானார்.

## அப்துல் மலிக் பின் மர்வான் (65 - 86) (685 - 705)

மர்வானின் மரணத்தைத் தொடர்ந்து அவரது புதல்வர் அப்துல் மலிக் ஹி. 65 இல் உமையாக் கிலாபத்தின் கலீபாவாகப் பதவி ஏற்றார். நீண்ட காலம் ஆட்சி செய்த உமையாக் கலீபாக்கள் மூவருள் இவரும் ஒருவராவார். ஹி. 26 ஆம் ஆண்டு மதீனாவில் பிறந்த இவர் தகுதி

வாய்ந்த ஓர் ஆட்சியாளராகவும், உமையாக்கள் மத்தியில் தனிச் சிறப்பும் பரந்த அறிவும் உடையவராகவும் திகழ்ந்தார். இவருக்குப் பின்னர் இவரது புதல்வர்கள் நால்வர் ஒருவர் பின் ஒருவராக கலீபாப் பதவி வகித்ததால் அரசர்களின் பிதா – அபுல் குலபா.். என்றும், உமையாக் கிலாபத்தின் இரண்டாவது நிர்மாணி எனவும் அழைக்கப் படுகின்றார்.

அப்துல் மலிக் பதவியேற்றபோது உமையா கிலாபத் பல்கோணச் சிக்கலொன்றில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தது.

- கலீபா யஸீதின் புதல்வர் காலிதும், அம்ர் பின் ஸைத் பின் அனஸ் என்பரும் ஸிரியாவில் அப்துல் மலிக்கின் எதிரியாக விளங்கினார்கள்.
- அரேபியாவிலும் ஈராக்கிலும் அப்துல்லாஹ் பின் ஸுபைர் தனது ஆட்சியை நிலைப்படுத்தியிருந்தார்.
- கூபாவில் முக்தார் என்பவர் தவ்வாபீன்களையும் ஷீஆக்களையும் ஒன்று சேர்த்து புரட்சி செய்து கொண்டிருந்தார்.
- இதேவேளை தமது தவறான கொள்கையில் தீவிரப் பற்றுக் கொண்ட காரிஜ்களும் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்தனர்.
- இவ்வாறான உள் நாட்டுக் குழப்பங்களையெல்லாம் தமக்குச் சாதகமானதாக்கிக் கொண்ட ரோமர்கள் அரபு/ முஸ்லிம் பிரதேசங் களைக் கைப்பற்ற முயன்று கொண்டிருந்தனர்.

இவ்வாறு தனக்கெதிராக எழுந்த அத்தனை எதிர்ப்புக்களையும் கலீபா அப்துல் மலீக் அஞ்சா நெஞ்சத்தோடு எதிர்கொண்டார்.

### ஈ. சவாலை எதிர் கொண்ட விதம்

காலிதுக்கு ஆதரவாக நின்ற தளபதி அம்ர் பின் ஸைதை கொன்றதன் மூலம் காலிதைப் பலவீனப்படுத்தினார். முக்தாரின் தலைமையில் கிளர்ச்சி செய்த தவ்வாபீன்களின் கொட்டத்தை அடக்குவதற்காக உபைதுல்லா பின் ஸியாத் தலைமையில் படை அனுப்பப்பட்டது. தவ்வாபீன்கள் உபைதுல்லாவைக் கொன்று தமது ஆதிக்கத்தை நிலை நிறுத்தினர்.

இச்சந்தர்ப்பத்தில் அப்துல்லா பின் ஸுபைரின் படை தவ்வாபீன் களை முறியடித்து ஈராக்கை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது மட்டுமன்றி காரிஜ்களை அடக்கும் பணியிலும் ஈடுபட்டது. இப்னு ஸுபைரின் முன்னேற்றத்தைத் தடுக்கும் வகையில் ஹஜ்ஜாஜின் தலைமையில் அப்துல் மலிக்கினால் மக்காவுக்கு அனுப்பப்பட்ட படை இப்னு ஸுபைரைத் தோற்கடித்தது மட்டுமன்றி அவரைக் கொன்றும் விட்டது. ஹி. 73இல் இப்னு ஸுபைர் (ரழி) மரணமானார். ஈற்றில் காரிஜ்களும் சரணடைந்தனர்.

உள்நாட்டுக் குழப்பங்களை முறியடித்த கலீபா அப்துல் மலிக் அடுத்த கட்டமாக ரோமரின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் நடவடிக்கைகளை மேற்கொண்டார். வட ஆபிரிக்காவில் இருந்து வந்த இந்த எதிர்ப்புக்களைச் சமாளிக்கப் படை நடாத்திச் சென்ற தளபதி கொல்லப்படவே தளபதி ஹஸன் பின் நு.்.மான் தலைமையில் பிறிதொரு படை அனுப்பப்பட்டது. இப்படை கைருவான் பகுதியைக் கைப்பற்றித் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது.

தனக்கெதிராகத் தோன்றிய சவால்கள் அனைத்தையும் வெற்றி கரமாக முறியடித்த பின்னர் கிலாபத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளும் பணியில் ஈடுபட்டார்.

கலீபா அப்துல் மலிக் சிறந்த அறிஞராகவும் கவிஞராகவும் திகழ்ந்ததோடல்லாது அறிஞர்களையும் கவிஞர்களையும் ஆதரிக்கவும் செய்தார். இவரது அரசவைக் கவிஞராக அல் பரஸ்தக் திகழ்ந்தார். அக்தல் எனும் கிறிஸ்தவக் கவிஞரையும் இப்னு மிஸ்கா என்ற இசை மேதையையும் பெரிதும் ஆதரித்தார்.

இலக்கிய ஈடுபாடு கொண்ட அப்துல் மலிக் தனது அரசவையில் அரசாங்க கவிஞர்களை நியமித்திருந்தார். ஜெரூஸலத்திலுள்ள குவிந்த கூரை – Dome of the Rock இவரது கட்டடக் கலை ஆர்வத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அரபு மொழியை அரச கரும மொழியாகப் பிரகடனம் செய்தார். அரபியல்லாதோரும் அரபு மொழியைக் கற்றுக் கொள்ள வழி செய்தார்.

பார்ஸி, கிப்தி, பஹ்லவிய முதலாம் பிரதேச மொழிகள் மூலம் எழுதப்பட்டு வந்த நிருவாக வேலைகள் அரபு மொழி மூலம் எழுத நடவடிக்கை எடுத்தார். மொழி விருத்திக்கெனத் தனியான இலக்கண நூல்களும் எழுதப்பட்டன. அக்கால இலக்கியங்களைத் தொகுக்க வழி செய்தார்.

நாணய வெளியீட்டுக்காக நாணயச்சாலை ஒன்றை நிறுவி அதனூடாக முதன் முதலில் அரபு நாணயங்களை வெளியிட்டார். கலீபா முஆவியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தபாற் சேவையைச் சீர்திருத்தம் செய்தார். இதற்கென குதிரைகளையும் புறாக்களையும் பயிற்றுவிக்க வழிசெய்தார். இதனால் நாட்டு நடப்புக்கள் அரசுக்கு உடனுக்குடன் கிடைத்தன. கிலாபத்தில் முதன் முதலாகத் தனித்தனியான நீதிமன்றங்களை இவர் நிறுவியது மட்டுமல்லாமல் நீதித்துறையில் பல மாற்றங்களையும் ஏற்படுத்தினார். கிலாபத்தில் அமைதி ஏற்பட்டதன் பின்னர் மேலதிக இராணுவ வீரர்களைச் சேவையில் இருந்து நீக்கினார். இதனால் அரச நிதி பாதுகாக்கப்பட்டதோடு நீக்கப்பட்ட வீரர்கள் ஊர்களுக்கு சென்று விவசாய, வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவும் வழி செய்தார்.

இவரது அறபுமயக் கொள்கையினால் அறபி அல்லாத மக்கள் உமையாக்கள் மீது அதிருப்பதியுற்றனர். அப்துல் மலிக் தனக்குப் பின் தனது வாரிசாகத் தனது மூத்தமகன் வலீதை நியமித்துவிட்டு ஹி. 86ல் மரணமானார்.

## வலீத் இப்னு அப்துல் மலிக் (705 - 715) (86 - 96)

அப்துல் மலிக்கைத் தொடர்ந்து அவரது மகன் அல் வலித் அடுத்த கலீபாவாக ஆட்சியில் அமர்ந்தார். உமையா வம்ச கலீபாக்களில் குழப்பங்கள் ஏதுமின்றிப் பதவி வகித்த ஒரே கலீபா இவர் மாத்திரமே. இவரது தந்தையின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட சகல குழப்பங்களையும் அவர் வெற்றிகரமாக முறியடித்தமையே இதற்குக் காரணம் எனலாம். உள் நாட்டில் அமைதி நிலவியமையால் நாட்டின் அபிவிருத்தியில் அதிகம் கவனம் செலுத்தினார்.

இவரது ஆட்சியின்போது உமையாக்களது ஆட்சி சிறப்பான நிலைமை ஒன்றை எய்தியது. கலீபா உமர் (ரழி) அவர்களின் கிலாபத்துக்குப் பின்னர் இவரது ஆட்சியில் தவிர வேறு எவரது ஆட்சியிலும் இஸ்லாமியப் பேரரசு இந்துணை வேகமாக விரிவடையவில்லை.

இந்தியாவின் சிந்து பிரதேசம், ஸ்பானியா, மத்தியாசியா ஆகிய நாடுகள் இவரது கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இவரால் அனுப்பி வைக்கபட்ட தளபதி தாரிக் ஸ்பானியாவை முஸ்லிம் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். தளபதி குதைபா மத்தியாசியப் பகுதிகளை கைப்பற்றி உமையா ஆட்சியை விரிவுபடுத்தினார். மூஸா பின் நுஸைர் வட ஆபிரிக்கப் பிரதேசங்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். தளபதி மஸ்லமா தலைமையில் சென்ற படை மூலம் ஆர்மீனியா, காஸ்பியன் கடல் பிரதேசங்கள் முதலாம் பகுதிகளை தனதாட்சியோடு இணைத்துக் கொண்டார். தளபதி முகம்மது பின் காஸிம் சிந்து பிரதேசத்தைக் கைப்பற்றினார்.

வலீதின் காலத்தில் கிலாபத் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி கண்டது. நெடுஞ்சாலைகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் நிறுவப்பட்டன. கிணறுகள் வெட்டப்பட்டன. விதவைகள், அநாதைகள், ஏழைகள், நோயாளிகளுக்கு சகாய நிதி வழங்கப்பட்டது. குருடர், செவிடர், அநாதைகள், மனநோயாளர் முதலானவர்களுக்கு விடுதி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

கிலாபத் முழுவதும் ஏராளமான கட்டடங்களை நிறுவினார். உலகப் புகழ் வாய்ந்ததும் கட்டடக்கலை அம்சங்கள் பொதிந்ததுமான டமஸ்கஸ் ஜாமிஆ மஸ்ஜித் இவராலேயே நிறுவப்பட்டது. க.்.பா, மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா ஆகிய மஸ்ஜித்களைத் திருத்தியமைத்த தோடு நகர்கள் தோறும் மஸ்ஜித்களைக் கட்டுவித்தார்.

கலீபாவே நேரடியாக சந்தைகளுக்குச் சென்று விலையை அவதானித்து நியாய விலையமைப்பு ஒன்றை ஏற்படுத்தினார். கைத்தொழிற்துறை விருத்தி அடைவதற்கு வழி செய்த அதேவேளை கலை, கலாசாரம், இலக்கியம் என்பன வளர்ச்சியுறவும் அனுசரணை வழங்கினார்.

உமையாக் கலீபா வலீதுடைய ஆட்சிக்காலம் சிறப்புற்றோங்கியது என்றால் அதற்குக் காரணம் அவரின் கீழ்ப் பணியாற்றிய மூஸா, தாரிக், முஹம்மத் பின் காஸிம், குதைபா முதலான தளபதிகளதும்

ஹஜ்ஜாஜ், உமர் பின் அப்துல் அஸீஸ் போன்ற திறன்மிக்க ஆளுநர்களதும் ஒத்துழைப்புமே எனலாம்.

ஹிஜ்ரி 96இல் கலீபா வலீத் காலமானார். மேற்குலத்தில் இஸ்லாம் அறிமுகமாவதற்கும் அதன் கலாசாரப் பண்பாடுகள் அங்கு சென்றடை வதற்கும் இவர் காலத்து வெற்றியே காரணமாக அமைந்தது.

கலீபா வலீதைத் தொடர்ந்து அவரது சகோதரர் ஸுலைமான் ஆட்சிக்கு வந்தார். ஹிஜ்ரி 96 முதல் 99 வரை இவரது ஆட்சி நிலைத்தது.

## உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) (99-101)

கலீபா ஸுலைமானின் மரணத்தைத் தொடர்ந்து உமர் பின் அப்துல் அஸீஸ் உமையாக் கிலாபத்தின் அடுத்த கலீபாவாகப் பதவி ஏற்றார். உமையாக் காலத்து கலீபாக்கள் வரிசையில் தனித்துவம் மிக்க ஒரு கலீபாவாக இவர் கணிக்கப்படுகிறார்.

இரண்டரை வருடங்கள் மாத்திரமே ஆட்சி செய்த இவர் இரண்டாம் உமர், கலீபதுஸ் ஸாலிஹ், ஐந்தாவது கலீபா என்றெல்லாம் பாராட்டப்படும் அளவுக்கு அவரது பணிகளும் சாதனைகளும் அமைந்து காணப்பட்டன. கலீபா உமர் (ரழி)யின் குடும்ப ரீதியான உறவும் மதீனத்துச் சூழலில் கல்வி கற்றமையும் இவரது ஆட்சியை நெறிப்படுத்திய இரு முக்கிய அம்சங்கள் எனலாம்.

கலீபாப் பதவியை ஏற்ற உமர் அரச வாகனத்தைப் பாவிக்காது, தனது சொந்தக் குதிரையையே பயன்படுத்தினார். அரசமாளிகையை விரும்பாத அவர் தனது சிறிய வீட்டிலேயே வாழ்ந்தார். பாதுகாவலர்கள் மற்றும் பணியாட்களை ஏற்றுக்கொள்ளாது தனக்கு அல்லாஹ்வின் பாதுகாப்பு மட்டுமே போதுமானது எனக் குறிப்பிட்டார்.

கலீபா உமரின் இத்தகு நடைமுறைகள் அவர் மீண்டும் கிலாபதுர் - ராஷிதா ஆட்சியைத் தோற்றுவிக்கப் போகின்றார் என்பதற்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்தன. இவரது கிலாபத் சிறப்புற்றோங்க அவர் பெற்றிருந்த மார்க்க ஞானமும், மதீனாவின் கவர்னராகக் கடமை புரிந்தபோது அவர் பெற்ற அனுபவங்களும் துணை புரிந்தன.



7-CM14799

தனது விருப்பத்தைப் பெறாமல் தன்னை கலீபாவாக நியமித்ததை உமர் ஆட்சேபித்தார். பின்னர் மக்கள் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே பதவியை ஏற்றுக் கொண்டார். தனக்கு முன் ஆட்சி செய்த கலீபாக்கள் மக்களுக்கு இழைத்த அநியாயங்களை நீக்குவதே தனது முதற்பணி எனக் கருதிச் செயற்பட்டார். அந்த வகையில் அதுவரை உமையாக்களுக்கென வழங்கப்பட்டிருந்த தனியான சலுகைகளை இரத்துச் செய்தார். நிர்வாக ஊழல்களைக் களைந்தார். மக்கள் மீது விதிக்கப்பட்டிருந்த மேலதிக வரிகளை நீக்கினார். பைத்துல்மால் விடயத்தில் மிகக் கண்டிப்பாக நடந்துகொண்டார். பொதுமக்களை வருத்தி வரி வசூலிக்கும் வழக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். நீதித் துறையில் கவர்னர்கள் செல்வாக்குச் செலுத்தும் முறையை நீக்கி அதனை நீதிபதிகளிடமே ஒப்படைத்தார். இதனால், கவர்னர்களின் எதேச்சாதிகாரம் நீங்கியது. மாகாண அதிபதிகளின் சொத்து விபரங்களைக் கோரினார். மாற்றுமதத்தாரின் தேவாலயங்களை அவர்களிடமே ஒப்படைத்தார். இஸ்லாத்தை அதன் அசல் உருவில் நடைமுறைப்படுத்திக் காட்டுவதையே தனது இலக்கெனக் கொண்டு செயல்பட்ட இவர், தானே நேரில் சென்று மார்க்கப் பிரசாரம் செய்ததோடு நில்லாது அனைத்துப் பிரதேசங்களுக்கும் பிரசாரகர்களையும் அனுப்பிவைத்தார்.

இஸ்லாத்தைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்த கலீபா உமர், ஹதீஸ்களைத் தொகுப்பதற்கு அரசமட்டத்தில் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை மேற்கொண்டார். பாடசாலைகளை ஆரம்பித்து மாணவர்களுக்கு உபகார நிதியும், ஆசிரியர்களுக்கு வாழ்க்கைப்படியும் வழங்க ஏற்பாடு செய்தார். மஸ்ஜித்களைக் கலாசாலைகளாக உயிர்ப்பித்தார்.

கைத்தொழில், விவசாயத்துறை வளம் பெறவும் கலீபா ஊக்க மளித்தார். ஸகாத்தைத் திட்டமிட்ட அடிப்படையில் திரட்டி பைத்துல்மால் ஊடாக வழங்கும் பொறுப்பைத் திறம்படச் செய்தார். இதனால் மிகக்குறுகிய காலத்தில் பைத்துல்மால் சீரடைந்தது. உள்நாட்டில் ஸகாத் பெறத் தகுதியானோர் இல்லாத ஒரு நிலை உருவாகி வெளிப்பிரதேசங்களுக்கு ஸகாத் அனுப்பி வைக்கப்பட்டமை இவரது காலச் சாதனைகளுள் ஒன்றெனலாம்.

இவ்வாறு இவர் மேற்கொண்ட சீர்திருத்த முயற்சிகளால் உமையா வம்சத்தினர் இவர் மீது வெறுப்புற்றனர். இவரது ஆட்சியை நீடிக்க

விடுவது தமது செல்வாக்குகளைச் சரியச்செய்ய வழி செய்வதாகும் எனக்கருதிய உமையாப் பிரமுகர்கள், ஒரு சமயம் கலீபாவின் உணவில் நஞ்சைக் கலந்து அவரைக் கொன்றுவிட்டதாகக் குறிப்பிடப்படுவதுமுண்டு. ஹி. 101இல் கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (றஹ்) காலமானார்.

உமரைத் தொடர்ந்து வந்த இரண்டாம் யஸீத் முதலாம் யஸீதைப் பின்பற்றி ஆட்சி செய்ததால் மக்கள் வெறுப்படைந்தனர். ஹிம்யாரியர் - முழாரியர் மோதல்கள் இடம் பெற்ற இக்காலப் பிரிவை அப்பாஸியர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். அஹ்லுல் பைத்தினருக்கே ஆட்சி சொந்தமானது எனும் கருத்தை இக்காலப்பிரிவில் இவர்கள் மக்களது உள்ளங்களில் விதைத்தனர். தொடர்ந்து வந்த ஹிஷாம், இரண்டாம் வலீத், மூன்றாம் யஸீத், இப்ராஹிம், இரண்டாம் மர்வான் போன்ற கலீபாக்கள் பலவீனமானவர்களாக இருந்தனர். ஹிசாமின் காலத்தில் பிரசாரத்தை பகிரங்கமாகவே மேற்கொண்ட அப்பாஸியர் இரண்டாம் மர்வானின் காலத்தில் உமையாக்களுக் கெதிராகப் போராட்டத்தைத் தொடங்கினர். முதலில் கூபாவைக் கைப்பற்றிய அவர்கள் தம்மை எதிர்க்க வந்த படையினரைத் தோல்வியுறச் செய்து ஹி. 132 இல் கலீபா இரண்டாம் மர்வானையும் கொலை செய்ததோடு உமையா ஆட்சிக்கு முடிவு கட்டினர்.

## இ. உமையாக்கால இராஜ்ஜிய விஸ்தரிப்பும் விளைவுகளும்

உமையா ஆட்சிக்கால இராஜ்ஜியப் பரம்பலானது கலீபா முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சியோடு ஆரம்பமாகின்றது. இவரது ஆட்சியில் கிழக்கே குவாரிஸ்ம், புகாரா, ஸமர்க்கந் முதலாம் பிரதேசங்களும் மேற்கே தளபதி உக்பா பின் நாபி∴ தலைமையில் வட ஆபிரிக்கப் பகுதிகளும் வெற்றி கொள்ளப்பட்டன. தளபதி முஹல்லப் தலைமையில் சென்ற படை ஆப்கானிலுள்ள ஹிராத், காபூல் நகரங்களைக் கைப்பற்றிக் கொண்டது.

உமையா ஆட்சியில் இஸ்லாமிய சாம்ராஜ்யம் ஆசியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய கண்டங்கள் வரை விஸ்தரிக்கப்பட்டிருந்தது. கலீபா வலீதின் காலத்திலேயே இராச்சிய விரிவு ஏற்பட்டது. உமையா கவர்னர்களுள் ஒருவரான ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் உறவினரான தளபதி முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் சென்ற படை இந்தியாவின் சிந்துப் பிரதேசத்தை வெற்றி கொண்டது. இந்த வெற்றி சிந்துப் பிரதேசத்தில் இருந்த முல்தான், பஞ்சாப் பகுதிகளையும்

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தோடு இணைத்தது மாத்திரமன்றி, இந்திய வரலாற்றுப் போக்கில் புரட்சிகரமான திருப்பமொன்றையும் ஏற்படுத்தியது. புது நிர்வாக முறை நடைமுறைப்படுத்தப்பட்டதால் முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் உத்தியோகங்கள் வழங்கப்பட்டன. சிந்துவும், பஞ்சாபும் செல்வச் செழிப்புடன் திகழ்ந்தன. நீதிமிக்க வரித்திட்டமொன்றும் பின்பற்றப்பட்டது. இவ்வாறான சிறந்த நிர்வாகத்தினால் மக்கள் கவரப்பட்டதால் இஸ்லாம் அங்கு துரிதமாகப் பரவியது.

கலீபா முஆவியா (ரழி)யின் காலம் முதல் கைப்பற்றப்பட்ட வட ஆபிரிக்காவில் உரோமரின் தூண்டுதலால் பதற்ற நிலை நீடித்தது. அங்கு வாழ்ந்த பர்பர் இனத்தவர்கள் தொடுத்த தொடர்ந்தேர்ச்சியான போர் நடவடிக்கைகளின் பின்னரே பர்பர்களை முஸ்லிம்கள் வெற்றி கொண்டனர். தளபதி மூஸா பின் நுஸைர் இவ்வெற்றிகளைப் பூரணப்படுத்தினார். மூஸாவின் ஆட்சித்திறனால் கவரப்பட்ட பர்பர்கள் இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்டனர்.

மறுபுறம் உரோமர்கள் தமது வட ஆபிரிக்கப் பிரதேசங்களை முஸ்லிம்களிடம் இழந்துவிட்டதனால் ஏற்பட்ட அவமானத்தில் இருந்து மீள்வதற்காக, மத்திய தரைக் கடல் தீவுகளைத் தமது இராணுவத் தளங்களாக உபயோகித்து வட ஆபிரிக்க முஸ்லிம் பிரதேசங்களைத் தாக்கினர். இந்த நிலை தொடராமல் இருப்பதற்காக மூஸா பின் நுஸைர் கடற்படையின் உதவியோடு உரோமரை எதிர்த்தார். இதன்போது மஜோர்க்கா, மைனோர்க்கா முதலாம் தீவுகள் முஸ்லிம் வீரர்களால் வெற்றி கொள்ளப்பட்டன. இதனால் மத்திய தரைக் கடல் பிராந்தியத்தில் முஸ்லிம்களது இராணுவப் பலம், மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் விருத்தி கண்டன.

இதனைத் தொடர்ந்து தளபதி தாரிக்கின் தலைமையில் வெற்றி கொள்ளப்பட்டு பிரான்ஸின் எல்லை வரையான பிரினீஸ் மலைத் தொடர் வரை இஸ்லாமீய சாம்ராஜ்யம் விரிவடைந்தது. இந்த வெற்றி ஐரோப்பாவின் அரசியல், சமூக, கல்வி, கலாசாரத் துறைகளில் பாரிய மாற்றங்களைத் தோற்றுவிக்கத் தவறவில்லை.

**உமையா ஆட்சியின் விளைவுகள்**

உமையா ஆட்சிக்கு முன்னர் இருந்த கிலாபதுர் - ராஷிதா ஆட்சியானது முழு மொத்த இஸ்லாத்தினதும் செயல்வடிவமாகவே அமைந்து காணப்பட்டது. இந்நிலை உமையா ஆட்சியில் மாற்ற மடைந்ததால் பல்வேறு விளைவுகள் தோற்றம் பெற்றன. அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

உமையா ஆட்சியின் தோற்றத்தோடு இஸ்லாமிய கிலாபத் பரம்பரை ஆட்சியாக மாறியது. நபியவர்களின் வபாத்தைத் தொடர்ந்து உமையாக் காலம் வரை கலீபாவை மக்களே தெரிவு செய்தனர். குலாபாஉர் ராஷிதூன்கள் நால்வரில் எவருமே தமது குடும்பத்தினருக்கு ஆட்சியில் இடம் கொடுக்கவில்லை. ஆனால், கலீபா முஆவியா (ரழி) தனக்குப் பின் தனது புதல்வர் யஸீதை கலீபாவாக நியமித்ததன் மூலம் பரம்பரை ஆட்சி தோன்ற வழி பிறந்தது. இவ்வாறு தோற்றம் பெற்ற பரம்பரை ஆட்சி உமையாக்களைத் தொடர்ந்து வந்த அப்பாஸியர், உஸ்மானியர், மொகலாயர் வரை தொடர்ந்தது.

உமையா ஆட்சியில் தலைநகர் டமஸ்கஸ் நகருக்கு மாற்றப் பட்டது. இதனால், இதுவரை காலமும் கிலாபத்தின் தலைநகராக இருந்து வந்த மதீனா, கூபா நகர் கைவிடப்பட்டது மட்டுமன்றி; மக்கா, மதீனா நகர்கள் இரண்டும் தமது அரசியல் செல்வாக்கையும் இழந்துவிட்டன. அரசியல் விடயங்களில் உயர் நிலையில் இருந்து வந்த முஹாஜிர்களும் அன்ஸாரிகளும் செல்வாக்கிழந்த போது அந்த இடத்தை சிரியா நகர மக்கள் பெற்றுக் கொண்டனர்.

எளிமையாக வாழ்ந்து வந்த மக்களிடையே ஆடம்பர வாழ்க்கை அறிமுகம் பெற உமையா ஆட்சி காரணமாக அமைந்தது. குலாபஉர் ராஷிதூன்களது காலத்தில் கலீபாக்களும் மக்களும் சகல விடயங் களிலும் எளிமையான வாழ்க்கைப் போக்கையே கடைப்பிடித்தனர். உமையா ஆட்சியில் மக்களிடையே எளிமை கைவிடப்பட்டு ஆடம்பரம் தலை தூக்கியது. பெரும்பாலான கலீபாக்களும் அதிகாரிகளும் ஆடம்பர வாழ்க்கையை மேற்கொண்டனர். உணவு, உடை, வீடு முதலாம் அம்சங்களில் எளிமை மறைந்தது. இதனால் மக்களும் ஆடம்பரமாக வாழத்தலைப்பட்டனர்.

உமையா ஆட்சியினால் ஏற்பட்ட பிறிதொரு விளைவு பிற்பட்ட காலங்களில் மக்களிடையே கோத்திர ரீதியாகவும் மொழி, பிரதேச ரீதியாகவும் வேறுபாடுகள் தோன்றியமையாகும். நபியவர்கள் ஜாஹிலிய காலத்து கோத்திர வேறுபாட்டை ஒழித்துக் கட்டினார்கள். மனிதனை மொழி ரீதியாகவோ, இன ரீதியாகவோ நோக்குவது தடை செய்யப்பட்டது. ஆனால், உமையாக் கிலாபத்தின் போது ஜாஹிலியாக் கால கோத்திர வேறுபாடு மீண்டும் தலைதூக்கியது. அரபிகளுக்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. உமையாக்களுக்கும் ஹாஷிமிக்களுக்கும் இடையிலான போராட்டம் உக்கிரமடைந்தது. குத்பாக்களில் அலி (ரழி) யின் குடும்பத்தினரை நிந்திக்கும் வழக்கம் அறிமுகமாகியது. வட அரேபியர், தென் அரேபியர் என்ற வேறுபாடு தலைதூக்கியதன் விளைவாக இரு தரப்பினருமே தாமே மேலானவர்கள் எனக் கருதியதோடு நில்லாது, அவர்களிடையே அடிக்கடி கைகலப்புக் களும் ஏற்பட்டன.

இக்காலப்பிரிவில் சூடு பிடித்து நின்ற அரபி அஜமிப் போராட்டத் துக்கு வித்திட்ட முக்கிய காரணியாக அமைந்ததும் இந்த வேறுபாடுதான். அதாவது உயர் பதவிகள் அஜமிகளைத் தவிர்த்து அறபிகளுக்கே வழங்கப்பட்டன.

நபியவர்களின் காலம் முதல் குலபாஉர் ராஷிதூன் காலம் வரை வாழ்ந்த சமூகம் தனி ஒரு உம்மத் என்ற வகையிலே ஒருமுகப்பாட்டோடு வாழ்ந்து வந்தது. அரசியல், சமூக, பொருளாதார வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றாகவே செயற்பட்டு வந்தனர். ஆனால் உமையா ஆட்சியோடு அதுவரை முஸ்லிம் உம்மத் கட்டிக்காத்து வந்த தனித்துவம் சிதைந்து சின்னாபின்னமாகிப் போனது. இக்காலத்தில் முஸ்லிம் களிடையே பின்வரும் வகையிலான பிரிவுகள் தோற்றம் பெற்றன.

1. முஆவியா (ரழி) சார்பான பிரிவினர்.
2. அலி (ரழி) சார்பான பிரிவினர்.
3. காரிஜ்கள்
   இவர்கள் முஆவியாவையோ அலியையோ ஆதரிக்காத பிரிவினர்.

முஸ்லிம் உம்மத்தில் தோன்றிய இத்தகைய பிரிவினைகளால் இவர்களிடையே அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளும் நிகழ்ந்தன.

ஷீஆ – காரிஜ் போராட்டம் ஒருபக்கம் தலை தூக்க மறுபக்கம் ஷீஆக்களும் காரிஜ்களும் உமையாக்களுக்கெதிரான போராட்டங்களை முடுக்கிவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

பொதுச் சொத்துக்களைச் துஷ்பிரயோகம் செய்து அவற்றைச் சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தும் வழக்கத்தையும் உமையா ஆட்சி யாளர்களே அறிமுகம் செய்தனர். கிலாபதுர் ராஷிதா காலத்தில் பொது நிதியமாகப் பேணப்பட்டு வந்த பைதுல்மால் நிதியம் உமையா ஆட்சியோடு அரசின் பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இதனால் பைத்துல் மாலின் தூய்மை களங்கப்படுத்தப்பட்டது. கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) காலத்தில் (மாத்திரம்) இந்நிலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் அவரின் பின் மீண்டும் பழைய நிலைக்கே சென்றது.

உமையாக் காலத்தில் கல்வி, கலாசார முயற்சிகளுக்கு அடித்தள மிடப்பட்டது. இம் முயற்சிகள் அப்பாஸியர் காலத்தில் பெரு வளர்ச்சி கண்டன. அறிவியல் துறையில் அப்பாஸியர் காலம் பொற்காலம் என அழைக்கப்படுவதற்கும் உமையாக்கள் இட்ட அடித்தளமே காரணமாக அமைந்தது.

### உமையாக் கலீபாக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகள்

உமையா ஆட்சியானது ஹிஜ்ரி 41இல் இருந்து ஆரம்பமாகி 132 வரை தொடர்ந்தாலும், அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி யிருந்தது. உண்மையில் தொடராகவும் முடிவில்லாமலும் தோன்றிய இந்தப்பிரச்சினைகளை முறியடிப்பதிலேயே உமையாக்களின் பெரும் பாலான காலங்கள் கழிந்தன. மறுபக்கமாக தொடர் பிரச்சினைகளால் பலம் குன்றி பலவீனம் அடைந்தது மட்டுமன்றி அதுவே அவர்களது வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது. இந்த வகையில் உமையாக் கலீபாக்கள் எதிர்நோக்கிய பிரச்சனைகளை பின்வருமாறு நோக்கலாம்.

1. ஆட்சியின் ஆரம்பத்திலேயே பிரச்சினை தலைதூக்கியது. கலீபா அலிக்கு பைஅத் செய்யாமல் போராடியதால் வரலாற்றில் ஷீஆ எனும் தனிப்பிரிவு தோன்ற கலீபா முஆவியா காரணமாயிருந்தார்.

மறுபுறம், காரிஜ்கள் அரசியல் ரீதியாகவும் சமய ரீதியாகவும் குழப்பங்களை விளைவித்தனர். இவர்களின் குழப்பங்களை அடக்குவதிலேயே பெரும்பாலான காலங்கள் கழிந்தன.

2. உமையாக்களுக்களும் ஹாஷிமீக்களுக்கும் இடையே காணப்பட்டு வந்த பகைமையை கர்பலா நிகழ்வு மேலும் வளர்ப்பதாய் அமைந்தது. கலீபா அலியின் ஆதரவாளர்கள் எனும் அடையாளத்துடன் ஷீஆக்கள் என்றோர் அணிபலம் பெற்றெழு வதற்கு இந்தக் கர்பலா நிகழ்வே காரணமாக அமைந்தது. இதனடியாகத் தோன்றிய தவ்வாபீன்கள் என்போர் அப்துல் மலிக்கின் காலத்தில் பெரும் தொல்லைகளைக் கொடுத்து வந்தனர்.

கலீபா முஆவியா (ரழி) அறிமுகப்படுத்திய வாரிசு நியமன முறையும் உமையா ஆட்சி எதிர்நோக்கிய பிரச்சினைகளுள் ஒன்றாகும். இஸ்லாமிய நடைமுறைக்கு மாற்றமான இந்த வாரிசு நியமன முறையால் உமையா வம்சத்தினரிடையே ஒற்றுமை குலைந்து போனது. பதவிக்காக சொந்த சகோதரனையே வஞ்சிக்கும் அளவுக்கு நிலைமை பயங்கரமானது. இதன் உச்சக்கட்ட நிலை கொலைகளிலும் முடிந்தது.

உமையா கலீபாக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளை முக்கியமாக இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

1. உள்நாட்டில் சமூக, அரசியல், கோத்திர, பிரதேச ரீதியாக எதிர்நோக்கிய பிரச்சினைகள்.
2. சர்வதேசப் படையெடுப்புக்கள்.
   கிரேக்க, உரோம ஆட்சியாளர்கள், முஸ்லிம்களிடம் தாம் இழந்த பகுதிகளை மீளக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கிலும், வளர்ந்து செல்லும் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் மீது கொண்ட காழ்ப் புணர்ச்சியினாலும் மேற்கொண்ட படையெடுப்புக்கள் அல்லது விளைவித்த தொல்லைகள், குழப்பங்கள்.

உள்நாட்டில் எதிர்நோக்கிய பிரச்சினைகளை பின்வருமாறு நோக்கலாம்.

1. முஆவியா அலிக்கு பைஅத் செய்யாமல் விட்டதும், ஸிப்பீன் யுத்தத்தினால் விளைந்த சமூக விளைவுகளும்.
2. ஹஸன் (ரழி) யோடு செய்து கொண்ட உடன்படிக்கைக்கு மாற்றமாக கலீபா முஆவியா தனது மகன் யஸீதை கலீபாவாக

நியமித்ததால் ஒட்டுமொத்த ஹிஜாஸ்வாசிகளும் இந்நிய மனத்துக்கு எதிராக நின்றனர். இத்தோடு வாரிசு நியமனம் வழமையாகிறது.

3. ஆட்சிக்கு வந்த யஸீதின் கூடா நடத்தையும் ஹி. 61 இல் நிகழ்ந்த கர்பலாச் சம்பவமும்.
4. அப்துல்லாஹ் பின் ஸுபைரின் புரட்சி.
5. ஆட்சியாளர்களது கடும் போக்கு
6. பின் வந்த கலீபாக்களின் பலவீனங்களும், ஒழுக்கவீனமான வாழ்க்கைப் போக்கும்.
7. ஆட்சியின் இறுதிப்பகுதியில் உமையாக்களிடையே கருத்து வேறுபாடுகளும் போராட்டங்களும் தோன்றின. சிரியா வாசிகள் தமக்கிடையே கோஷ்டிகளாகவும் கட்சிகளாகவும் பிரிவுற்றனர். இதனால் உமையாக்களுக்குள்ளேயே மோதல்கள் உருவாகின.
8. நியாயமான காரணங்களை வைத்துச் சிலரும் போலிக் காரணங்களை முன்வைத்து வேறு சிலரும் உமையா கிலாபத்தை எதிர்த்தனர்.

- ராபிழீக்கள் ஸிப்பீனைக் காரணம் காட்டி உமையாக்களை எதிர்த்தனர்.
- காரிஜ்கள் அடிக்கடி ஆட்சிக்கொதிராக கிளர்ச்சி செய்தனர்.
- மஜுஸிகள், கிறிஸ்தவர்கள், யூதர்கள், ஸின்தீக்குகள் முதலானோர் அரபு – அஜமி வேறுபாட்டினால் அதிருப்தி யுற்று ஆட்சியாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டனர்.

* ஆட்சியாளர்கள் கடைப்பிடித்த அல்லது அறிமுகப்படுத்திய கொள்கைகள் சிலவும் அவர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்கக் காரணங்களாக அமைந்தன.

- முஆவியாவின் வாரிசு நியமனம் மற்றும் சில தனித்துவமான நடைமுறைகள் முஸ்லிம் அறிஞர்களின் அதிருப்தியைப் பெற்றுக் கொடுக்கத் தவறவில்லை.
- மர்வான், அப்துல் மலிக் போன்றோரின் எதேச்சாதிகாரப் போக்குகளும் அப்துல் மலிக் அறிமுகப்படுத்திய அறபுத் தேசிய வாதமும்.

- பிற்கால கலீபாக்கள் பலம் குன்றியவர்களாகவும், பலவீனர் களாகவும் இருந்ததை அப்பாஸியர்கள் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு அப்பாஸியர் உமையாக்களுக்கெதிராக களத்தில் குதித்தனர். அஹ்லுல் பைத்தினருக்கே ஆட்சியுரிமை சொந்தமானது என்ற கருப்பொருளில் அவர்களது போராட்டம் முன்னெடுக்கப்பட்ட போது, உமையாக்களின் எதிரிகளான ஷீஆக்களும் மற்றும் சிலரும் அப்பாஸியருக்கு ஆதரவு நல்கினர். இப்போராட்டமே உமையாக்கள் ஆட்சியில் இருந்து விரட்டியடிக்கப்படவும் கரணமாக அமைந்தது.

# 2. அப்பாஸியர்

## அறிமுகம்


உமையா வம்ச ஆட்சியின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அப்பாஸியர் எனும் பிறிதொரு வம்சத்தினர் இஸ்லாமிய பேரரசின் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றனர். இவர்களது எழுச்சியினால் இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் பல புதிய திருப்பங்கள் ஏற்பட்டன. உமையாக் காலத்தில் டமஸ்கஸில் இருந்த தலைநகர் இறாக்கில் பக்தாதுக்கு மாற்றப்பட்டது. இதனால் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் சிரியா நாட்டு அரேபியர் வகித்து வந்த செல்வாக்கு சரியத் தொடங்கியது. அதுவரை மேற்குப் பிராந்தியம் பெற்று வந்த அபிவிருத்தி முன்னேற்றமெல்லாம் கிழக்கு நோக்கி திரும்பலாயின. உமையாக் காலம் வரை ஏதோ ஒரு வகையில் பேணப்பட்டு வந்த கிலாபத் ஒருமைப்பாடு சிதைந்துபோனது மட்டுமன்றி தனித்தனி ஆட்சியாளர்களின் கீழ் பல சிற்றரசுகளும் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் சிற்றரசுகளின் ஆதிக்கம் மிகைத்ததனால் கலீபாக்கள் செல்வாக்கிழந்தனர்.

மறுபுறமாக உமையாக் காலம் வரை கிலாபத்திலும் முஸ்லிம் உம்மத்திலும் பேணப்பட்டு வந்த இஸ்லாமிய அறபுக் கலாசார, நாகரிகப் பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் செல்வாக்கிழந்து செல்ல, அந்த இடத்தை கிரேக்க, பாரசீகப் பண்பாடுகளும் பழக்கவழக்கங்களும் ஆக்கிரமித்துக் கொண்டன. இஸ்லாமிய வரலாற்றின் முதற்கட்டமாக கலை, கலாசார, நாகரிக, அறிவியல் துறைகளில் வியக்கத்தக்க வகையில் விருத்தி ஏற்பட்டது. இந்த முன்னேற்றம் தான் சமகால ஐரோப்பியரின் அசாதாரண வளர்ச்சிக்கும் அடித்தளம் அமைத்துக் கொடுத்தது.

இந்த முன்னேற்றம், விருத்தி என்பனவெல்லாம் ஒரு சில நூற்றாண்டுகள் வரையே நீடித்தன. சுமார் 5 நூற்றாண்டுகள் வரை நீடித்த இவர்களது ஆட்சியின் இறுதிக்கட்டத்தில் வந்த கலீபாக்களின் பலவீனங்களாலும், இதனால் தோற்றம் பெற்ற சிற்றரசுகளின் ஒற்றுமையின்மை காரணமாகவும் அந்த முன்னேற்றத்தை அவர்களால் கட்டிக்காக்க முடியவில்லை. ஈற்றில் 1258ல் தாத்தாரியரின் படையெடுப்போடு அப்பாஸிய கிலாபத் (மங்கி) மறைந்து போனது.

**அ. அப்பாஸியரின் எழுச்சி**

**அப்பாஸியப் பரம்பரை அட்டவணை**




உமையாக்களைத் தொடர்ந்து ஆட்சி செய்த அப்பாஸியப் பரம்பரையினர், நபியவர்களின் பெரிய தந்தை அப்பாஸ் (ரழி)யின் வழித்தோன்றல்களாதலால் அவர்கள் இப்பெயரால் அழைக்கப்படு கின்றனர்.

உமையாக் கலீபா இரண்டாம் மர்வான், ஹிஜ்ரி 132 ல் கொலை செய்யப்பட்டதோடு அப்பாஸியர் ஆட்சிக் காலம் தோற்றம் பெறுகிறது. அப்பாஸ் (ரழி) அவர்களின் கொள்ளுப் பேரர்களில் ஒருவரான முஹம்மத் இப்னு அலி இப்னு அப்துல்லா இப்னு அப்பாஸ் என்பவரே உமையா ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் முதன் முதலாக ஈடுபட்டவராவார். ஹிஜ்ரி 124க்கும் 126க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர் மரணமாகவே இவரது புதல்வர் இப்ராஹீம் தந்தையின் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டதால்; உமையாக்களின் கொடிய எதிரியாக மாறினார். கி.பி. 747ல் குராஸானில் இவர் மேற்கொண்ட ஒரு புரட்சியின் போது இரண்டாம் மர்வானால் கைது செய்யபட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

இதன் பின் இவரது சகோதரர்களான அபுல் அப்பாஸும் அபூ ஜஃபரும் அப்பாஸியருக்குத் தலைமை தாங்கி ஹிஜ்ரி 132ல் கிலாபத்தைக் கைப்பற்றினர். அபுல் அப்பாஸ் அங்கு தன்னைக் கலீபாவாகப் பிரகடனம் செய்தார். போரில் தோற்றோடிய உமையா கலீபா இரண்டாம் மர்வான் எகிப்தில் வைத்துக் கொல்லப்பட்டார். மர்வானின் கொலையோடு உமையா ஆட்சி அஸ்தமித்துப் போக அபுல் அப்பாஸின் தலைமையில் ஹி. 132ல் அப்பாஸிய ஆட்சி உதயமாகியது.

## ஆ. பிரதான கலீபாக்களும் அவர்களின் பங்களிப்புக்களும்

### அல் மன்ஸூர்

அப்பாஸியரின் முதல் கலீபா அபுல் அப்பாஸ் அஸ்ஸப்பாஹ் மரணித்ததைத் தொடர்ந்து, அவரது சகோதரர் அபூ ஜஃபர் அல் மன்ஸூர் கி.பி 754 ஆம் ஆண்டு அப்பாஸிய வம்சத்தின் இரண்டாவது கலீபாவாகப் பதவியேற்றார். சுமார் 22 ஆண்டுகள் ஆட்சி செய்த இவர் வாழ்விலும் நடத்தையிலும் முன்மாதிரிமிக்க மனிதராக விளங்கினார். மன்ஸூரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த வீரம், தாராள மனப்பான்மை, புத்திகூர்மை, ஆழ்ந்த அவதானம் முதலான ஆளுமைப் பண்புகளால் இவர் ஏனைய அப்பாஸிய கலீபாக்களை விட உயர்ந்தவராகக் கருதப்படுகிறார்.

கலீபா மன்ஸூரின் பதவியேற்பு இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் மிக முக்கியம் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். இவரது ஆட்சி முறை அரேபியரின் அரசியல் வரலாற்றில் கீர்த்தி மிகுந்த தசாப்தமொன்றைத் தோற்றுவித்தது. அசாதாரணத் திறமை வாய்ந்த மன்ஸூரின் பண்புகள் பின்னால் வந்த அப்பாஸிய கலீபாக்களால் கூட சில தலைமுறைகள் வரை பின்பற்றப்பட்டன. இவர் தனது திறமையால் அப்பாஸிய ஆட்சியைப் பலப்படுத்தியதன் காரணமாக அவருக்குப் பின்னரும் நீண்ட காலம் வரை அப்பாஸிய ஆட்சியாளர்கள் பலருக்கு ஆட்சிபீடமேற வாய்ப்புக் கிட்டியது. அபுல் அப்பாஸ் அஸ்ஸப்பாஹ் அப்பாஸிய கிலாபத்தின் முதல் கலீபாவாக இருந்த போதும், மிகக் குறுகிய காலமே உயிர் வாழ்ந்தால் அக்காலத்தில் அப்பாஸிய கிலாபத்தை அவரால் ஸ்திரப்படுத்த முடியவில்லை. அஸ்ஸப்பாவினால் இயலாமல் போன இப்பணியை மன்ஸூர் பூர்த்தி செய்தமையால், மன்ஸூரே அப்பாஸிய கிலாபத்தின் (முதல்) உண்மையான நிர்மாணி எனக் கருதப்படுகின்றார்.

செயல் ரீதியில் முதன்முதலாக அப்பாஸிய ஆட்சியைத் தாபித்து வைத்த மன்ஸுர், அப்பாஸிய அரசைப் பாதுகாக்கும் வகையில், ஆட்சிக்கெதிராகத் தோன்றிய அனைத்துச் சவால்களையும் வெற்றிகரமாக முறியடித்தார். அவர் அறிமுகம் செய்து வைத்த ஆட்சிக் கொள்கையே சுமார் 5 நூற்றாண்டுகளாக அப்பாஸியர் இஸ்லாமியப் பேரரசைக் கட்டியாள வழிவகுத்தது.

சுதந்திரமான நிர்வாக முறையொன்றை அறிமுகப்படுத்திய மன்ஸுர், உமையாக்களைப் போல கிலாபத்தை விஸ்தரிக்கும் திட்டத்தை விட்டுவிட்டு மக்கள் நலனில் தன்னை அர்ப்பணம் செய்து கொண்டார். கைவசம் இருக்கும் நிலப்பரப்பை சிறப்பான முறையில் ஆட்சி செய்தால் போதுமானது என்ற நிலைப்பாட்டிலேயே அவர் என்றும் இருந்தார். அந்த வகையில் நாட்டு மக்களின் நலன் கருதி கால்வாய்கள், நெடுஞ்சாலைகள், கிணறுகள் முதலானவற்றை அமைத்துக் கொடுத்தார். கல்வியில் நாட்டமும் பெருவிருப்பும் கொண்டிருந்த அவர் தனது பேரரசின் முக்கிய நகரங்களிளெல்லாம் கல்லூரிகளையும் மருத்துவ மனைகளையும் நிர்மாணித்தார். "தாருல் ஹிக்மா" எனும் பெயரில் ஒரு மொழி பெயர்ப்புக் கூடமொன்றை நிறுவி, அதனூடாக கிரேக்க, இந்திய, சிரிய மொழிகளிலிருந்த பண்டைய அறிவு நூல்களை அரபு மொழிக்கு மொழி மாற்றம் செய்ய வழிசெய்தார். அறிஞர்களை வெகுவாக ஆதரித்ததோடு நில்லாது அவர்களை ஆய்வுப்பணிகளில் ஈடுபாடு காட்டுமாறும் தூண்டுதல்கள் வழங்கினார். இதற்கென அறிஞர்களை அணுகி அவர்களுக்கு ஆவலும் ஊக்கமும் வழங்கினார். மன்ஸுரின் அரசவையில் அறிஞர்களே உயர் பதவிகளை வகித்தனர் என்பதும் நோக்கத்தக்கது.

கலீபா மன்ஸுர், பிற்காலத்தில் கலாசாரம், பண்பாட்டு விருத்தியும் அறிவியல் முன்னேற்றமும் ஏற்படத்தக்க வகையில் உறுதிமிக்கதானதோர் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்.

கலீபா மன்ஸுரின் மரணத்தைத் தொடர்ந்து அவரது புதல்வர் மஹ்தி அடுத்த கலீபாவானார். ஹிஜ்ரி 169இல் மஹ்தி காலமாகவே அவரது மூத்த புதல்வர் ஹாதி அப்பாஸிய ஆட்சிபீடத்தின் அடுத்த கலீபாவாக பதவியேற்றார். இவர் ஹிஜ்ரி 170 வரை ஆட்சி செய்தார்.

## ஹாரூன் அல் றஷீத்

கலீபா ஹாதியின் மரணத்தைத் தொடர்ந்து அவரது சகோதரன் ஹாரூன் அல் றஷீத் அடுத்த கலீபாவாக தனது 22 ஆவது வயதில் பதவியேற்றார். இவரது பதவியின் ஆரம்பக்கட்டத்தில் ஆட்சிப் பொறுப்பானது அவரது தாயார் கைஸ்ரானிடமும் முதல் அமைச்சர் யஹ்யா பர்மகீயிடமும் ஒப்படைக்கப்பட்டது.

இவர் அப்பாஸியக் கலீபாக்களில் முக்கியமான ஒருவராவார். இவரது ஆட்சிக்காலத்தை அப்பாஸிய ஆட்சியின் உச்ச காலமென வர்ணிப்பர். சுமார் 23 வருட காலம் கிலாபத்தை கட்டிக்காத்த இவர் தனது பண்புகளாலும் ஆற்றிய சேவைகளாலும் வரலாறு கண்ட உன்னத ஆட்சியாளர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார். இவரிடம் அறிவும் ஆன்மீகப் பக்குவமும் காணப்பட்டன. இறைவனுடனான நெருக்கத்திலும் மக்களுக்கு தர்மம் செய்வதிலும் அறிஞர்களிடம் உபதேசம் பெறுவதிலும் முன்மாதிரியாக விளங்குகிறார். மக்கள் நலனில் ஆர்வம் காட்டிய கலீபா மக்களின் குறைகளை அறிவதற்காக மாறுவேடம் பூண்டு இரவு வேளைகளில் பக்தாத் தெருக்களில் அலைந்து திரிந்தார். கிலாபத் முழுவதிலும் கடுமையான பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தார். மற்றும் மக்கள் நலன் கருதி பாடசாலைகள், விடுதிகள், மருத்துவ மனைகள், மஸ்ஜித்கள் முதலியவற்றை நிறுவினார்.

பொதுவாக அப்பாஸியரதும் குறிப்பாக ஹாரூனினதும் சிறப்புக்குப் பின்புலத்தில் இருந்து செயற்பட்டவர்கள் பர்மகிகளாவர். ஹாரூனின் ஆசானாக இருந்த யஹ்யா பர்மகி அவர் ஆட்சியில் அமர்வதற்கு பக்கபலமாக நின்றதனால், யஹ்யாவின் புதல்வர்களான பழ்ல், ஜஃபர், மூஸா போன்றோர் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். இவர்களது அறிவுத்துறை பங்களிப்பில் பக்தாத் நகரம் ஓர் அறிவியல் நகராக பரிணாமம் அடைந்தது. காலப்போக்கில் பர்மகிகளின் செல்வாக்கு மிகைத்தபோது, அது தனது செல்வாக்கிற்குச் சவாலாக அமைந்துவிடும் என அஞ்சிய ஹாரூன், ஈற்றில் அவர்களை ஒழிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டார். இது ஹாரூனின் சரிவுக்குக் காரணமாக மாறியது.

இவரது காலத்தில் நிறுவப்பட்ட தாருல் ஹிக்மா இக்காலத்து அறிவியல் முன்னேற்றத்தில் காத்திரமான பங்களிப்புச் செய்தது. பிறமொழிகளிலான

அறிவியல் நூல்களை மொழியாக்கம் செய்வதற் கென்றே தாருல் ஹிக்மாவில் தனியான ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. அங்கு யஹ்யா பின் பத்ரீக், யஹ்யா இப்னு முஆவியா முதலானோர் முக்கிய மொழி பெயர்ப்பாளர்களாக கடமை புரிந்தனர். இவரது காலத்து அரசியல் நிலை மிகவும் சிறப்பாக அமைந்திருந்ததால், சீனச்சக்கர வர்த்தியும் பிரான்ஸிய மன்னன் சார்லிமேனும் தமது தூதுவர்களையும் அன்பளிப்புப் பொருட்களையும் அனுப்பி இருதரப்பு உறவுகளைப் புதிப்பித்துக் கொண்டனர்.

கலீபா ஹாரூன் தனது காலத்தில் உருவான குழப்பங்களை வெற்றிகரமாக எதிர்கொண்டார். புரட்சிக்காரர்களோடு போராடுவதைத் தவிர்த்து அவர்களோடு சமரசம் அல்லது ஒப்பந்தம் செய்துகொள்ளும் உத்தியைக் கையாண்டார். இந்நிலைதான் பிற்காலத்தில் சிற்றரசுகளின் தோற்றத்துக்கு காரணமாக அமைந்தது என்பர்.

## அல் மாமூன்

கலீபா ஹாரூனுக்குப் பின்னர் அமீன் அடுத்த கலீபாவாகப் பதவி ஏற்றார். ஹிஜ்ரி 198 இல் அமீன் கொலை செய்யப்பட்டதன் பின்னர் மாமூன் ஆட்சியில் அமர்ந்தார். இவர் ஹிஜ்ரி 170இல் பக்தாதில் பிறந்தார். அப்துல்லாஹ் எனும் இயற் பெயர் கொண்ட மாமூன் தனது 5வது வயது முதலே கல்வி கற்பதில் ஆர்வம் காட்டினார். மெய்யியல், தத்துவ விசாரணைகளில் இவர் அலாதியான ஆர்வம் காட்டியதால், குறித்த அத்துறைகளில் ஈடுபாடு காட்டிய முதல் முஸ்லிம் ஆட்சியாளராகவும் கருதப்படுகிறார். கலீபா அமீன் கொலையுண்ட வேளையில்கூட இவர் மர்வ் நகரில் தத்துவ விசாரணைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார் என குறிப்பிடுவர்.

கலீபா மாமூன் மிகச் சிறந்த அப்பாஸிய ஆட்சியாளராவார். சுமார் ஐந்து நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக ஆட்சி செய்த அப்பாஸிய அரச பரம்பரையில் மாமூன் போன்ற ஒருவர் எந்தக் காலப்பிரிவிலும் தோன்றவில்லை என்பர். இவருடைய ஆட்சி இஸ்லாமிய வரலாற்றில் புகழ்பூத்த பொற் காலமாகக் கருதப்படுகின்றது. வெற்றியும் சிறப்பும் வாய்க்கப்பெற்ற ஓர் ஆட்சியாளருக்கு இருக்க வேண்டிய அத்தனை பண்புகளும் அவரிடம் காணப்பட்டன. இவரிடம் இயல்பாக அமைந்திருந்த முன்யோசனை, விவேகம், இரக்கம், திடஉறுதி, பெருந்தன்மை முதலான

ஆளுமைப்பண்புகள் இவரை ஏனைய அப்பாஸிய கலீபாக்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டின.

மாமூன் ஆட்சிக்கு வந்த போது அப்பாஸியரின் ஆட்சிக்கு எதிராக கிலாபத்தின் பல பகுதிகளிலிருந்தும் குழப்பங்கள் தலைதூக்கின. மொசபதேமியாவில் நஸ்ர் பின் சன்பாத் உமையாக்களை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் எனும் நோக்கில் புரட்சி செய்தான். கூபாவில் கலீபா அலியின் ஆதரவாளர்கள் அலவிய்யூன் எனும் பெயரில் கிளர்ச்சி செய்தனர். இவ்வாறே குராஸான், எகிப்து, சிரியா போன்ற பிரதேசங்களிலும் புரட்சிகள் வெடித்தன. இவ்வனைத்து எதிர்ப்புக்களுக்கு மத்தியில் கலீபா மாமூன் மர்வில் இருந்து பக்தாதை நோக்கிப் பெரும் படையுடன் வந்து புரட்சிகளை அடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தார். கி. பி. 825இல் மாமூன் தனது பிரதம அமைச்சரின் மகள் பூரானை திருமணம் செய்தார். இத்திருமணச் சடங்கிற்காக சுமார் 50 இலட்சம் திர்ஹம்களுக்கும் அதிகமாக செலவிடப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

கி. பி. 827இல் மு.ஃ.தஸிலாக் கொள்கைகயை அரச கொள்கையாக இவர் பிரகடனம் செய்தார். இதனால் மக்களினதும் இஸ்லாமிய அறிஞர்களதும் அதிருப்திக்கு உள்ளானார். இக்கொள்கைக்கு எதிராகப் போராடிய அக்காலத்திய சட்ட அறிஞர் இமாம் அஹ்மத் பின் ஹன்பலை சிறையிலிட்டுத் தண்டித்தார்.

மாமூனின் காலத்தில் அனைத்து விதமான அறிவியல் கலைகளும் உச்சகட்ட வளர்ச்சி கண்டன. கலீபா ஹாரூன் நிறுவிய தாருல் ஹிக்மாவை பைதுல் ஹிக்மா எனும் பெயரில் மேலும் விரிவுபடுத்தினார். இங்கு மொழி பெயர்க்கப்பட்ட பன்மொழி நூல்களையும் பிரதிகள் எடுப்பதெற்கென பிரத்தியேகமாக ஊழியர்கள் அமர்த்தப்பட்டனர். மேற்கிலிருந்து மாத்திரம் ஐந்து ஒட்டகைகள் சுமக்கும் அளவுக்கு நூல்கள் வருவிக்கப்பட்டன. ஒரு பகுதி ஆய்வகமாகவும் மறுபகுதி நூலகமாகவும் செயல்பட்ட இவரது காலத்து பைத்துல் ஹிக்மாவுக்கு ஹுனைன் பின் இஸ்ஹாக், அல்கிந்தி ஆகிய இருவரும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். மாமூன் நிறுவிய வானாராய்ச்சிக் கூடத்தில் அல்குவாரிஸ்மி போன்றவர்கள் கடமை புரிந்தனர். மத்திய கால அறிவியல் வளர்ச்சியில் கூடிய பங்களிப்புச் செய்த ஓர் அறிவியல் கலைக் கூடமாக இந்நிலையம் கருதப்படுகிறது.

மாமூனைத் தொடர்ந்து மு.ஃதஸிம், வாஸிக், முதவக்கில் முதலான ஆட்சியாளர்கள் ஆட்சி செய்தனர். அப்பாஸிய ஆட்சியைப் பொறுத்தவரை, மேற்குறித்த ஆட்சியாளர்களின் ஆட்சிக் காலப்பகுதியான முதல் ஒரு நூற்றாண்டு காலமே அப்பாஸிய ஆட்சியின் பொற்காலமாக விளங்கியதெனலாம். இதன் பின் அப்பாஸிய கிலாபத் வீழ்ச்சியின் பாதாளத்தை நோக்கிச் செல்லலாயிற்று. சுமார் நான்கு நூற்றாண்டு காலமாக ஏற்பட்ட இந்த வீழ்ச்சி மெதுவாகவும் படிப்படியாகவுமே நிகழ்ந்தது. பிற்பட்ட கால அப்பாஸியர் ஆட்சிக் காலம் எனக் குறிப்பிடப்படும் இக்காலப் பிரிவில் (945 – 1258) சிற்றரசுகளின் ஆதிக்கமே மிகைத்திருந்தது. கலீபாக்கள் வெறும் பொம்மை ஆட்சியாளர்களாகவே செயற்பட்டனர். சிற்றரசுகளுக்கிடையே நிலவிய உட்பூசல்களும் அவற்றின் எதேச்சாதிகாரப் போக்கும் கிலாபத்தை மேலும் பலவீனப்படுத்தின. இறுதியில் கி.பி. 1258இல் (656) கடைசி கலீபா மு.ஃதஸிம் பில்லா மங்கோலியப் படைத்தளபதி ஹுலாகுகானினால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அப்பாஸியக் கிலாபத் முற்றாகவே வீழ்ச்சியடைந்தது.

கலீபா மாமூனைத் தொடர்ந்து வந்த கலீபா மு.ஃதஸிம் துருக்கிய வீரர்களுக்கு இராணுவத்தில் இடமளித்ததால் கிலாபத்தில் துருக்கியரின் செல்வாக்கு அதிகரித்தது. கலீபாவையே அச்சுறுத்துமளவுக்கு அவர்களது அதிகாரம் மிகைத்த போது, கலீபா மு.ஃதஸிம் ஸமர்ரா எனும் இடத்துக்கு தலைநகரை மாற்றினார். ஹி. 256க்குப் பின்னர் அமீருல் உமரா எனப்பட்ட அதிகாரிகள், துருக்கிய அதிகாரிகளை அடக்கி ஆள முற்பட்டனர். இக்காலப் பிரிவில் கலீபா பொம்மையாகவே செயல்பட்டார். ஹி. 447இல் இவர்களது அதிகாரம் புவைஹித்களின் கைக்கு மாறியது. இக்காலத்தில் தவ்லா எனும் பெயரிலான அதிகாரிகள் ஆதிக்கம் செலுத்தினர். இவர்களை செல்ஜுக்கியர் அடக்கி 477 முதல் 590 வரை அதிகாரம் செலுத்தினர். இவர்கள் வீழ்ச்சியடைந்ததோடு அப்பாஸியராட்சியும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. பலம் பெற்று வந்த சிற்றரசுகள் ஒரு பக்கமாவும் மங்கோலியர் மறுபக்கமாகவும் கிலாபத்தை பலவீனப்படுத்தினர். ஈற்றில் ஹி. 656இல் மங்கோலியர் பக்தாதைக் கைப்பற்றியதோடு அப்பாஸியராட்சி வீழ்ச்சி கண்டது.

## பிற்பட்ட கலீபாக்களின் ஆட்சியை குலபாஉர் ராசிதூன்களது ஆட்சியோடு ஒப்பிட்டு நோக்குதல்

பிற்பட்ட கால கலீபாக்களின் ஆட்சியில் உமய்யா மற்றும் அப்பாஸிய கலீபாக்களின் ஆட்சி பற்றி மட்டுமே இங்கு மதிப்பீடு செய்யப்படுகிறது.

**பிற்பட்ட கால கலீபாக்களின் ஆட்சி**

| குலபாஉர் ராஷிதீன்கள் ஆட்சி | பிற்பட்டகால கலீபாக்களின் ஆட்சி |
|---|---|
| 1. ஆட்சியின் அரசியல் யாப்பாக குர்ஆனும் ஸுன்னாவும் அமைந்திருத்தல் | 1. இவையிரண்டும் யாப்பாக இருக்கும் என்று கொள்கை யளவில் மாத்திரமே இருந் தமை. |
| 2. ஷீறா அமைப்பு | 2. முற்றாக இல்லாது போதல் |
| 3. ஆட்சியாளர்கள் மக்களால் தெரிவுசெய்யப்படல் | 3. வாரிசு நியமனம் |
| 4. இறையச்சம் முதன்மையாகக் கொள்ளப்படல் | 4. தகைமை எதுவும் பார்க்கப் படவில்லை |
| 5. கிலாபத் தோற்றம் பெற்ற பூமி என்ற வகையில் மதீனா தலைநகராக இருந்தமை | 5. தன் சொந்த நலன்களை முன்னிட்டு டமஸ்கஸுக்கும் பக்தாதுக்கும் மாற்றப் பட்டமை |
| 6. பைத்துல்மால் பொதுநலன் பேணும் வகையில் பயன் படுத்தப்பட்டது. | 6. ஆட்சியாளரின் குடும்ப நன்மைக்காகப் பயன்படுத்தப் பட்டமை. |
| 7. கலீபாக்கள் மிகவும் எளிமை யாக வாழ்ந்தனர் | 7. ஆடம்பரமான வாழ்க்கை |
| 8. நிர்வாக முறைகளை இஜ்தி ஹாத் அடிப்படையில் மேற் கொள்ளல் | 8. கிரேக்க, ரோம, பாரசீக, இந்திய மரபுகளைப் பேணி அமைத்தல் |
| 9. சமுதாய மரபுகள் பேணப் பட்டமை. | 9. சர்வாதிகாரப் போக்கு தலை தூக்கியமை |
| 10. சட்ட மேம்பாட்டை நோக் காகக் கொள்ளல் | 10. துறை சார்ந்த அறிவியல் கலைகளின் வளர்ச்சி |

# 3. ஏனைய அரசுகள்

## அ. ஸ்பானிய உமையா ஆட்சி

### முஸ்லிம் ஸ்பெய்ன் வரலாறு

**முஸ்லிம்களது படையெடுப்பின்போது ஸ்பெய்னின் சமூக, அரசியல் நிலை**

ஐபீரியத் தீவகற்பத்தை (ஸ்பெய்ன்) முஸ்லிம்கள் ”அந்தலூஸ்“ என அழைத்தனர். அத்தீவகற்பத்துக்கு அந்தலூஸ் எனப் பெயர் சூட்டப்படுவதற்கு இரண்டு காரணிகளை வரலாற்றாசிரியர்கள் முன்வைக்கின்றனர்.

1. நபி நூஹ் அவர்களின் வழித்தோன்றல்களில் ஒருவரான அந்தலூஸ் என்பவரின் வாரிசுகள் அங்கு வாழ்ந்தமை.

2. அங்கு வாழ்ந்த மிலேச்சக் குணங்களைக் கொண்ட மக்களைக் குறிக்க ”வண்டல்ஸ்” (VANDALS) எனும் பதம் பயன்படுத்தப்பட்டது. இப்பதத்தில் இருந்தே அந்தலூஸ் என்ற பதம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்று இப்னு கல்தூன் போன்ற வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்தலூஸ் எனப்பட்ட இந்நாடு மத்திய தரைக் கடலின் வட மேற்கு எல்லையில் அமைந்துள்ளது. அது ஒரு தீபகற்பம். அதன் மேற்கே அத்திலாந்திக் கடலும் வடக்கே பிரான்ஸின் எல்லையாக அமைந்துள்ள பிரனீஸ் மலைத் தொடரும், தெற்கே ஜிப்ரோல்டர் நீரிணையும் அமைந்துள்ளன. 13 மைல்கள் அகலமுடைய இந் நீரிணையே அத்திலாந்திக் கடலையும் மத்தியதரைக்கடலையும் இணைக்கின்றது. இத்தீபகற்பம் தற்காலத்தில் ஸ்பெய்ன், போர்த்துக்கல் என்ற இரு சுதந்திர நாடுகளைத் தன்னுள் கொண்டுள்ளது.

ஸ்பெய்ன் நீண்டகாலமாக ரோமரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அவர்களிடமிருந்து கி. பி. 414 இல் ஸ்பெய்னின் வட கிழக்குப் பகுதியில் இருந்த டரகோனின்ஸிஸ் (Taraconensis) மாகாணத்தை விஸிகொத்

அல்லது வெஸ்ற்கொத் (Visigoth / Westgoth) கோத்திரத்தார் கைப்பற்றிக் கொண்டனர். அதுமுதல் படிப்படியாக ஸ்பெய்ன் முழுவதையும் தமது ஆதிக்கத்தின் கீழ் அவர்கள் கொண்டுவந்தனர்.

கி. பி. 589 இல் ஆளும் கோத்திரத்தவர்கள் குடிமக்களின் சமயமாகிய ரோமன் கத்தோலிக்க சமயத்தை ஏற்றபோது அரச பீடத்துக்கும் கிறிஸ்தவ சமய பீடத்துக்கும் இடையே நெருக்கமான உறவு ஏற்பட்டது. இது அரசியல் ரீதியான ஸ்திர நிலை தோன்றவும் வழிவகுத்தது.

இப்புதிய சூழல் அரச குடும்பத்தவர்களையும் சமய குரவர் களையும் பிரபுக்கள் வர்க்கத்தையும் உள்ளடக்கிய உயர் குழாத்தினர் தோன்ற வழிவகுத்தது. சமயபீடத் தலைவர்கள் அரச பரிபாலனத்தில் செல்வாக்குச் செலுத்தினர். அரச திணைக்களங்களில் பல கிறிஸ்தவத் திருச்சபையின் கீழ் விடப்பட்டன. இதன் விளைவாக சமயபீடம் பொது மக்கள் நலனில் கவனம் செலுத்துவதை விட அரச குடும்ப நலனைப் பேணுவதிலேயே அக்கறை செலுத்தியது.

சமயக் குரவர்கள் ஆதரவை அரச பீடம் பெற்றிருந்த போதும் ஆட்சிக்கான தலைவர்களைத் தெரிவு செய்த முறைமை காரணமாக அரசு சதி முயற்சிகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. காலியாகும் அரச பீடத்தை நிரப்ப அரச குடும்பப் பிரமுகர்களை உள்ளடகிய உயர் குழாத்தினரே அரச குடும்பத்திலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யும் முறைமை இருந்தது. நிலையானதொரு வாரிசுரிமை முறை பின்பற்றப்படாததால் பலர் அரச பதவியை அடைய விரும்பினர். இதுவே சதி முயற்சிகளும் சூழ்ச்சிகளும் இடம்பெற வழிவகுத்தது. இதனால் மன்னன், தான் உயிர் வாழும்போதே அடுத்த வாரிசாகத் தன் மகனைப் பதவியில் அமர்த்துவதற்காக உயர் குழாத்தினரின் ஆதரவைத் திரட்டவும் முயற்சித்தான். இதனால் ஆட்சியின் ஸ்திர நிலை பாதிக்கப்பட்டது.

ஸ்பெய்ன் குடிமக்களில் உயர் குழாத்தைச் சேர்ந்தவர்களே செல்வந்தர்களாக இருந்தனர். மது, மாது, சூது என்பனவே அவர்களின் வாழ்க்கையாக இருந்தது. கடின உழைப்பாளிகளாக அவர்கள் இராததால் சோம்பலும் சுகபோகமுமே அவர்களை ஆட்டிப் படைத்தன. இவர்களின் பணியாளர்களாக வாழ்ந்த குடிமக்கள் கொத்தடிமைகளாக இருந்தனர்.

நடுத்தர வகுப்பினரே பிரபுக்களதும் சமயக் குரவர்களதும் சுகபோக வாழ்க்கைக்கான செல்வத்தை வரியாகச் செலுத்தவேண்டியிருந்தது. இவர்களிடம் இருந்தே அரசும் சமயத் தலைமைப் பீடமும் தத்தம் தேவைகளுக்காக வெவ்வேறான வரிகளை அறவிட்டன. இவ்வகையில் அடிமைகள் நடுத்தர வகுப்பினர் எனும் இவ்விரு வகுப்பினருமே பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்பட்டனர். இதனால் தம் உழைப்பின் பயனை இவ்விரு வகுப்பாராலும் அனுபவிக்க முடியவில்லை. பண்ணை விவசாயிகளின் உழைப்பு பண்ணையாளர்களைக் கொழுக்க வைத்தது. சுதந்திரமான விவசாயிகளின் உழைப்பு மன்னர், பிரபுக்கள், சமயக் குரவர்களின் சுகபோக வாழ்க்கைக்காகவே சுரண்டப்பட்டது. சகோதரத்துவத்தைப் போதித்த கிறிஸ்தவ சமயக் குரவர்களும் பெருந்தோட்டச் சொந்தக்காரர்களாயினர். சுகபோகத்தில் மூழ்கியிருந்த ஏனைய பிரபுக்களைப் போலவே அவர்களும் தம் வாழ்வை அமைத்துக் கொண்டிருந்தனர். இதனால் உயர் குழாத்தினரோ விவசாயிகளோ பண்ணை அடிமைகளோ நாட்டைக் காக்கத் தம்மை அர்ப்பணிக்க வேண்டும் என்ற உணர்வு அற்றவர்களாக இருந்தனர்.

விஸிகொத் ஆட்சியாளர்களின் காலப் பிரிவில் நகர்ப்புறக் குடிமக்களும் பல சிரமங்களை அனுபவித்தனர். ரோமரின் ஆட்சியின் கீழ் இருந்தபோது ஸ்பெய்ன் நகரங்கள் வளர்ச்சி கண்டிருந்தன. நகரங்களை விருத்தி செய்து குடிமக்களுக்குப் பல வசதிகளை அவர்கள் செய்து கொடுத்திருந்தனர். அவர்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றிய விஸிகொத் ஆட்சியாளர்கள் முன்னேற்றம் காணாத புராதன நாடோடிக் கோத்திரத்திலிருந்து வந்தவர்களாவர். அவர்கள் நகர்ப்புறவாசிகள் பற்றி அதிக அக்கறை காட்டவில்லை.

கிறிஸ்தவ பீடம் அங்கிருந்த யூதர்களை தமது சமய ரீதியான எதிரிகளாகவே கருதியது. கி.பி.693 இல் கிறிஸ்தவ திருச்சபை அறிமுகப்படுத்திய சில சட்ட விதிகளால் யூதர்களின் வர்த்தகம் பெரிதும் பாதிக்கப்பட்டது. 694 இல் கிறிஸ்தவ திருச்சபை, யூதர்கள் அனைவரும் கிறிஸ்தவ சமயத்தை ஏற்க வேண்டும் அல்லது அடிமையாக்கப்படுவர் என்ற மற்றொரு பிரகடனத்தை வெளியிட்டது. இப்பிரகடனம் தளர்த்தப்பட்ட போதும் ஆட்சியாளர்கள் மீதான வெறுப்புக் குறைய வில்லை.

ஸ்பெயின் மீது முஸ்லிம்கள் படை எடுத்த காலப்பகுதியில் அங்கு உள்நாட்டுக் கலவரம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தது.

புது ஆட்சியாளனைத் தெரிவு செய்வதில் உயர் குழாம் பிளவுற்றிருந்தமை, சமூகத்தின் உயர் குழாத்தினர் தவிர்ந்த ஏனைய மக்கள் அரசின் மீது அதிருப்தியடைந்தமை, திருச்சபையைத் திருப்திப்படுத்த யூதர்களுக்குக் கொடுத்த நெருக்குதல், இராணுவத்தின் தேசப்பற்றற்ற தன்மை என்பன ஸ்பெயின் அரசைப் பலவீனப்படுத்தியிருந்த நிலையிலேயே ஸ்பெயின் மீதான முஸ்லிம் படையெடுப்பு நிகழ்ந்தது.

## ஸ்பெயின் மீதான முஸ்லிம் படையெடுப்பு

இஸ்லாமியக் குடியரசின் இராச்சிய வியாபகத்தின் முதற் கட்டம் இரண்டாம் கலீபா உமரின் காலத்தில் இடம்பெற்றது. அதன் இரண்டாம் கட்டம் கலீபா வலீதின் காலத்தில் நிகழ்வுற்றது. கிழக்கே இந்திய உபகண்டத்தின் சிந்துப் பிரதேசத்தையும் மேற்கே ஸ்பெய்னையும் உள்ளடக்கிய இவ்விரண்டாம் கட்ட வியாபகம் வரலற்று முக்கியத்துவம் கொண்டதாகும். ஐரோப்பாவில் இஸ்லாமிய சிந்தனையினதும் நாகரிகத்தினதும் ஒளி பாய இவ்விரண்டாம் கட்ட வியாபகம் வாய்ப்பளித்தது.

நீர் வளமும் நில வளமும் இருந்தும் ஸ்பானிய மக்கள் வறுமையில் வாடித் துன்பமடைவதைக் கண்டனர். ஸ்பானிய ஆட்சியாளர்களின் கொடுமைகளில் இருந்து தப்பித்து ஸியூட்டாவில் குடியேறியிருந்தவர்கள் ஸ்பெய்னின் நிலவரம் பற்றியும் அந்நாட்டின் பாதுகாப்பற்ற நிலை பற்றியும் எடுத்துக்கூறி ஸ்பெய்ன் பற்றி முஸ்லிம்கள் ஆர்வம் கொள்ளத் தூண்டினர். படை நடவடிக்கை மூலம் இலகுவாக அந்நாட்டைக் கைப்பற்றலாம் என்ற நம்பிக்கையை முஸ்லிம்களிடம் ஏற்படுத்தவும் முயற்சித்தனர். இவ்வாறு முஸ்லிம் ஆட்சியாளர்களைத் தூண்டியவர்களில் ஸியூட்டா மாகாண கவர்னராகக் கடமையாற்றிய ஜுலியன் முக்கியமானவர்.

ஜுலியன் இவ்வாறானதொரு முடிவுக்கு வருவதற்கான முக்கிய காரணியாகப் பின்வரும் சம்பவம் அமைந்தது என வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

ஜுலியன் மூஸா பின் நுஸைரை நேரடியாகச் சந்தித்துப் போருக்குத் தேவையான உதவிகள் செய்வதாகவும் வாக்களித்தான்.

மூஸா பின் நுஸைர் தூர நோக்கும் ஆழ்ந்த சிந்தனையும் உடையவராக இருந்ததால் ஜூலியனின் கூற்றுக்களை முழுமையாக நம்பாமலும் தட்டிக்கழிக்காமலும் மிகக் கவனமாகச் செயற்பட்டார். ஸ்பெய்ன் மீது போர் தொடுக்க கலீபா வலீதின் அனுமதியைப் பெற்றுக்கொண்ட அதே வேளை, ஜூலியனின் கூற்று எவ்வளவு தூரம் நம்பகமானது என்பதை அறியவும் முயற்சி செய்தார். ஸ்பெய்னின் உண்மை நிலையை அறிந்து கொள்வதற்காக ஜூலியன் வழங்கிய நான்கு வள்ளங்களில் 100 குதிரை வீரர்களையும் 400 காலாற் படையினரையும் ஸ்பெய்னின் கரையோரத்துக்கு தளபதி தாரிக் தலைமையில் அனுப்பி வைத்தார்.

இச்சிறு படை கி. பி. 710 ஜூலையில் ஸ்பெயினின் தென் முனையில் உள்ள ஜிப்ரால்டருக்கு மேற்கே தரையிறங்கியது. அத்தளபதியின் ஞாபகார்த்தமாகவே அவர் இறங்கிய இடம் இன்றும் தரிபா என்றே அழைக்கப்படுகின்றது. இப்படை வீரர்கள் ஸ்பெயினின் கரையோரம் பாதுகாப்பற்றதாக உள்ளது என்ற நற்செய்தியையும், ஏராளமான கனீமத் பொருட்களையும் கொண்டு வந்தனர். இதனால் மூஸா பின் நுஸைர் கி. பி. 711 இல் (ஹி. 92 - ஷ.்.பான்) தாரிக் பின் ஸியாதின் தலைமையில் ஏழாயிரம் பேர் கொண்ட படையை ஸ்பெயினைக் கைப்பற்ற அனுப்பினார். படை செல்லத் தேவையான வள்ளங்களை ஜூலியனே வழங்கினான்.

தளபதி தாரிகின் முழுப் பெயர், தாரிக் பின் ஸியாத் பின் அப்துல்லாஹ் என்பதாகும். ஹி. 50 (கி. பி. 670) இல் பிறந்த இவர் ஹி. 102 இல் (கி.பி.720) மரணித்தார். இவர் ஸதம் எனும் கோத்திரத்தைச் சேர்ந்த (பேர்பர்) இனத்தவராவார். ஸஹாரா பாலைவனத்தின் கடின வாழ்வுக்கு முகம் கொடுத்து வளர்ந்தவர். ஓங்கி வளர்ந்த உடற்கட்டுடைய ஒரு குதிரை வீரர். தூர நோக்குடையவர். மூஸாவிடம் இஸ்லாத்தை ஏற்ற தாரிக்கிற்கு தஞ்சிர் பகுதியின் பாதுகாப்புப் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டிருந்தது. தாரிகின் தலைமையில் ஸ்பெயினுக்குச் சென்ற படைவீரர்களில் பெரும்பான்மையினர் பர்பர்களாவர். ஸ்பெயினின் தெற்கே கடற்கரையோரமாக இருந்த மலையடிவாரத்தில் தாரிக் படையுடன் இறங்கினார். அவ்விடம் இன்றும் தாரிகின் பெயருடன் இணைத்து ஜபல் அத்தாரிக் என்றழைக்கப்படுகிறது. அதுவே தற்போது மருவி ஜிப்ரால்டர் என்று மாறியுள்ளது.

வடக்கே அகிலாவின் கிளர்ச்சியை அடக்குவதில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ரொட்ரிக் முஸ்லிம் படை தரையிறங்கி இருப்பதை அறிந்து உடனடியாக 100,000 வீரர்களைத் திரட்டிக்கொண்டு தாரிக்கை எதிர்கொள்வதற்காக விரைந்தான். தனது ஒற்றர்கள் மூலம் இதனை அறிந்த தாரிக் மேலும் படை உதவி தருமாறு மூஸா பின் நுஸைரிடம் கோரிக்கை விடுத்தார். அதற்கிணங்க மேலும் 5000 வீரர்களை மூஸா உடனே அனுப்பி வைத்தார். போர் தொடங்குவதற்குச் சற்று முன்புதான் இவர்கள் வந்து சேர்ந்தனர்.

ரொட்ரிக்கின் பெரும் படையைக் கண்டு முஸ்லிம் வீரர்கள் அதிர்ந்து விடாதிருப்பதற்காக தளபதி தாரிக் வீராவேசமூட்டும் வகையிலான உரையொன்றை நிகழ்த்தினார்.

“குமுறும் கடலின் பொங்கி எழும் அலைகளை நிகர்த்த எண்ணிலடங்கா எதிரிகள் உங்கள் முன்னே உள்ளனர். பின்புறமோ பெருங்கடல் உள்ளது. தப்பியோட வழியில்லை. ..அவர்களிடமிருந்து பறித்தெடுப்பதைத் தவிர்த்து உண்பதற்கு வேறு உணவுமில்லை. நீங்கள் இருக்கும் நிலையைச் சிந்தித்துப் பாருங்கள்! உலகில் சிதறியுள்ள அநாதைகள் போன்று நீங்களும் இவ்விடத்தில் அரவணைப்போர் எவரும் இல்லாதோராய் இருக்கின்றீர்கள். அச்சத்தைத் தவிருங்கள்! எதிரியோடு போரிடுங்கள். வெற்றி உங்களுடையதே என்று நம்புங்கள். எதிரிகள் இறை நம்பிக்கை இல்லாதவர்கள். ஆதலால், எமது படையை எதிர்த்து அவர்களால் வெற்றி கொள்ள முடியாது. ரொட்ரிக் இங்கு வந்திருப்பதே அவனது மாளிகைகளையும் நாட்டையும் வளங்களையும் உங்கள் கையில் ஒப்படைப்பதற்கே. மரணத்துக்கு அஞ்சாது போராடி அவ் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

உங்களைத் தூண்டிவிட்டு நான் ஒதுங்கிவிடமாட்டேன். எனது பொறுப்பு உங்களைவிட அதிகமானது. எனது ஆவலோ ரொட்ரிக்கை எனது கையால் கொலை செய்வதுதான். ஆதலால், நான் முன்னே செல்வேன். நீங்கள் என்னைத் தொடருங்கள். நீங்கள் அல்லாஹ்வின் தீனை நிலை நாட்ட முயற்சித்தால் அல்லாஹ்வின் அருள் உங்களுக்குக் கிடைக்கும். அவ்வருள் உங்கள் முயற்சியில்தான் தங்கியுள்ளது. உங்கள் முயற்சிக்கான கூலியை அல்லாஹ் இவ்வுலகிலும் மறுவுலகிலும் தருவான். இம்முயற்சியில் உங்களுக்கு முன்மாதிரியாக நான் போராடுவேன். நீங்கள் என்னைத் தொடருங்கள். நான் ரொட்ரிக்கை

இலக்கு வைப்பேன். அவனை நான் கொன்றால் வெற்றி எமதே. அதற்கு முன் நான் கொலை செய்யப்பட்டாலோ அதனைப்பற்றிக் கவலைப்படாது போரைத் தொடருங்கள். ரொட்ரிக்கைக் கொலை செய்தபின் நான் கொலை செய்யப்பட்டால் தீரமும் துணிவும் அனுபவமும் உள்ள ஒருவரைத் தளபதியாகத் தெரிவு செய்து போரைத் தொடருங்கள் இவ்வறிவுறுத்தல்களை நீங்கள் பின்பற்றினால் வெற்றி நமதே.

தாரிகின் இவ்வுரையால் உந்தப்பட்ட முஸ்லிம் வீரர்கள் களத்தில் ஷஹீதாகி சுவர்க்கத்தின் இன்ப சுகத்தை அடைய, அன்றேல் வெற்றி வீரர்களாகி ஸ்பானியாவின் சொந்தக்காரர்களாகத் துடித்தனர். உயிரோட்ட முள்ள இத்தகு வீரர்கள் முன்னே ரொட்ரிக் பெரும் ஆடம்பரத்துடனும் பெரும் படையுடனும் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் போர்க்களத்தை அடைந்தான்.

சாதாரண காலங்களில் ஆட்சியாளர்களால் கவனிக்கப்படாது வரிச்சுமையால் அல்லலுற்ற விவசாயிகளையும் கொத்தடிமை களையும் பெருமளவில் அவனது படை உள்ளடக்கி இருந்தது. ஆட்சிக் கெதிராகச் சதியும் சூழ்ச்சியும் செய்யும் பிரபுக்கள் சிலரும் தளபதிகளாகக் கடமையாற்றினர். போர்க்களத்திலிருந்து பக்கம் மாறி முஸ்லிம் படைகளுக்கு உதவி புரிவதற்காக போர் உச்ச நிலை அடைவது எப்போது என எதிர்பார்த்திருந்த அகிலாவின் ஆதரவாளர்களும் போர் வீரர்களாக ரொட்ரிக்கின் படையில் சேர்ந்திருந்தனர். கூலிப்படையை நிகர்த்த ரொட்ரிக்கின் வீரர்களும் போரில் வீர மரணம் அடையக் காத்திருக்கும் முஸ்லிம் வீரர்களும் கி.பி. 711 ஜூலை 19 இல் (ஹி. 92, ரமழான் பிறை 28) "றியோபர்பாட்டா" என்று தற்காலத்தில் அழைக்கப்படுகின்ற (மசிடோனியா) பிரதேசத்திலுள்ள "குவாடலேட்" நதிப் பள்ளத்தாக்கில் (வாதீ பெக்கா) சந்தித்தனர்.

போர் ஒருவாரம் தொடர்ந்து நீடித்தது. தன்னிகரற்ற திறமை மிகு தளபதியையும், அல்லாஹ்வின் உதவியில் தளராத நம்பிக்கையையும், பாலைவனத்தின் கடின வாழ்வுக்கு முகம் கொடுத்தும் பழகிய வீரர்களையும் கொண்ட முஸ்லிம் படையை எதிர்த்து நிற்க முடியாது ஸ்பானிய வீரர்கள் திணறினர். அச்சந்தர்ப்பத்தில், ஸ்பெய்ன் வீரர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தபோதும் கூலிப்படைபோலச் செயற்பட்டதால் ஸ்பானியப் படை தோல்வியைச் சந்தித்தது. ரொட்ரிக்கிற்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அவனது உடல்

போர்க்களத்தில் கிடைக்கவில்லை. அவனது குதிரையும் அதன் சேணமும் ஆற்றங் கரையில் கண்டெடுக்கப்பட்டதால் அவன் ஆற்றில் மூழ்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

தாரிக் பெற்ற இவ்வெற்றி ஸ்பெய்னின் மத்திய அரசைச் சிதைத்து விட்டது. உயர் குழாத்தினர் ஒன்று சேர்ந்து புதிய ஆட்சியாளர் ஒருவரைத் தெரிவு செய்யவும், புதிய படையணி ஒன்றை உருவாக்கவும் முடியாதிருந்தது. ஆதலால், ஸ்பெய்னின் வாயில் முஸ்லிம்களுக்குத் திறந்தே இருந்தது. விஸிகொத் அரச குடும்பப் பிரமுகர்கள் தலைமை தாங்கிய சில நகர்களில் மட்டும் எதிர்ப்பு ஓரளவு இருந்தது. இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தக் கருதிய தாரிக், அயலிலுள்ள நகர்களைத் தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரத் துரித நடவடிக்கை எடுத்தார். தனது படையை நான்கு பிரிவுகளாக வகுத்தார். ”முஇஸ் அர்-ஷரூமீ” எனும் தளபதியின் தலைமையில் சென்ற 700 குதிரை வீரர்களைக் கொண்ட படைப்பிரிவைக் கொர்டோவா நகரைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். தாரிக் ஒரு தொகுதி வீரர்களோடு சென்று தலைநகர் தொலதோவைக் கைப்பற்றினார். பிறிதொரு படைப்பிரிவு மலாக்காவையும் முஇஸ்ஸின் படைப்பிரிவு கொர்டோவாவையும் கைப்பற்றின. ஏராளமான “ஃகனீமத்” பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

### ஸ்பெய்னில் மூஸா பின் நுஸைர்

மிகப் பெரிய நிலப்பரப்பைக் கொண்ட ஸ்பெயின் மீதான படையெடுப்பை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து அங்கு அமைதியை நிலைநாட்டுவது 12000 போர் வீரர்களை மாத்திரம் கொண்ட படையால் சாத்தியமில்லை. சமய ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தம்முடன் வேறுபட்டுள்ள ஒரு சமூகத்தில் ஒரு சிறு படையால் அமைதியை நிலைநாட்டுவது சிரமம். இதனைக் கருத்திற் கொண்ட தாரிக், நாலா புறத்திலிருந்தும் சுதேசிகள் எங்களை எதிர்க்கின்றனர். எனவே, உடன் உதவிப்படை அனுப்புங்கள்” என்று கோரிக்கை விடுத்திருந்தார். அக்கோரிக்கையை செவிமடுத்து மூஸா படையுடன் சென்றார் என்பதை ஆரம்ப கால முஸ்லிம் வரலாற்றாசிரியர்களுள் ஒருவரான இப்னு குதைபா குறிப்பிட்டுள்ளார். ஸ்பெயின் வெற்றியைத் துரிதமாகப் பூரணப்படுத்த வேண்டும் என்ற அவாவினாலேயே மூஸா பின் நுஸைர் படையுடன் சென்றார் தாரிக் சென்ற வழியைத் தவிர்த்தே மூஸா தன் படையை நகர்த்தினார். ஜிப்ரோல்டரில் படையுடன் இறங்காது, தளபதி

தாரிக் தரையிறங்கிய இடத்தில் மூஸா தரையிறங்கினார். தாரிக் கைப்பற்றாதிருந்த பகுதிகளைக் கைப்பற்றவே இவர் தனது படையை நகர்த்தினார்.

உரோமர் ஆட்சியின் போது தலைநகராகவும், கலை, கலாசார மத்திய நிலையமாகவும் விளங்கிய ஸெவில்லி, கர்மோனா போன்ற நகர்களை அவர் கைப்பற்றியதுடன் நீண்ட காலப் போராட்டத்தின் பின் கி.பி.713 ஜூன் மாதம் மெரிடா நகரையும் கைப்பற்றினார். மூஸா ஸ்பெயின் சென்று ஒரு வருடத்தின் பின்பே தாரிக்கை தொலேடோவுக்கு அருகே சந்தித்தார்.

இருவரும் கூட்டாக இணைந்து ஸ்பெய்னின் வெற்றியைப் பூரணப்படுத்த முயற்சித்தனர். இருவரதும் தலைமையில் இருந்த இரு படைகளும் இணைந்தே சரகோவா, தாகோனா, பார்ஸிலோனா பிரனீஸ் மலையடிவாரத்தில் இருந்த ஜிரோனா முதலான நகரங்களைக் கைப்பற்றினர். ஸ்பெய்னின் வட மேற்குப் பகுதியில் அட்லாண்டிக் கடற்படைப் பிரதேசத்துக்கு அருகில் இருந்த மலைப்பாங்கான அந்தூரியாய் எனும் பிரதேசம் தவிர்ந்த ஸ்பெய்னின் ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் முஸ்லிம்கள் வசமாகின. இந்த வெற்றியை அடுத்து பிரனீஸ் மலையைக் கடந்து பிரான்ஸைத் தாக்குவதற்கு மூஸா திட்டமிட்டார். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க முன்பே டமஸ்கஸ் வருமாறு கலீபா வலீத் மூஸாவுக்குக் கட்டளையிட்டார்.

மூஸா தனது மூத்த மகன் அப்துல் அஸீஸை ஸ்பெய்னின் கவர்னராகவும் இரண்டாவது மகன் அப்துல் மலிக்கை கைரவானின் கவர்னராகவும் மூன்றாவது மகன் ஸாலிஹை ஸியூட்டாவின் தளபதியாகவும் நியமித்துவிட்டு ஏராளமான ஃகனீமத் பொருட்களோடும் போர்க் கைதிகளுடனும் தாரிக் பின் ஸியாதையும் கூட்டிக்கொண்டு கி. பி. 714 இன் பிற்பகுதியில் டமஸ்கஸை நோக்கிப் புறப்பட்டார்.

### முஸ்லிம் ஆட்சியின் கீழ் ஸ்பெயின்

ஸ்பெயினில் முஸ்லிம்களின் ஆட்சி அந்நாட்டு வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்தது. மக்கள் வாழ்வின் பல்வேறு

துறைகளிலும் ஒரு புதிய மாற்றம் பிரதிபலித்தது. ஆட்சியாளர்களதும் சமயக் குரவர்களதும் கொடுங்கோண்மைக்கும் சுரண்டலுக்கும் அது முற்றுப்புள்ளி வைத்தது. கிறித்தவர்கள் பூரண சமய சுதந்திரத்தை அனுபவித்தனர். கிறிஸ்தவ ஆட்சியின் கீழ் தாம் இழந்திருந்த சமய அனுஷ்டான சுதந்திரங்களையும் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமைகளையும் யூதர்களும் பெற்றுக் கொண்டனர். கிறிஸ்தவர்களும் யூதர்களும் அஹ்லுல் கிதாப் என்றழைக்கப்பட்டு, முஸ்லிமல்லாத ஏனைய சமயத்தவர்களை விடவும் முஸ்லிம்களால் கண்ணியப்படுத்தப் பட்டனர்.

இவர்களிடம் ஜிஸ்யா வரியும் நில வரியும் மட்டுமே அறவிடப்பட்டன. போரிடும் ஆற்றல் படைத்தவர்களிடம் இருந்து மட்டுமே ஜிஸ்யா வரியை அறவிட்டனர். மதகுரவர், வயோதிபர், அங்கவீனர், பெண்கள், சிறுவர்கள் முதலானோரிடம் இவ்வரி அறவிடப்படவில்லை. மக்களின் பொருளாதார சக்திக்கு ஏற்ப வருடமொன்றுக்கு 12-48 திர்ஹம் மட்டுமே அறவிடப்பட்டது. அதனையும் 12 கோட்டாக்களாகப் பிரித்துச் செலுத்த அனுமதிக்கப் பட்டனர்.

நிலத்தின் உற்பத்தித் திறனுக்கு ஏற்பவே வரி அறவிடப்பட்டது. நில வரியை நிர்ணயிக்கும்போது சமய வேறுபாடு கருத்தில் கொள்ளப்படவில்லை. இதனால் ஆளும் வர்க்கத்தினரான முஸ்லிம் குடி மக்கள் செலுத்துமளவிலான நில வரியையே ஏனைய சமயத்தைச் சேர்ந்த குடிமக்களும் செலுத்துமாறு கேட்கப்பட்டனர். நிலவுரிமையையும் முஸ்லிம்கள் சுதேசிகளிடமிருந்து பறிக்கவில்லை.

உரோமர்களதும் விஸிகொத் ஆட்சியாளர்களதும் காலத்தில் அடிமைகள் மனிதர்களாகவே கருதப்படவில்லை. முஸ்லிம்களின் ஆட்சியில் இந்த நிலை மாறியது. எஜமானர்கள் உண்ணும் உணவையும் உடுக்கும் உடையையுமே அடிமைகளுக்கும் வழங்க வேண்டுமென்றும், சுமக்க முடியாத வேலைப் பளுவை அடிமைகள் மீது சுமத்தக் கூடாதென்றும் அடிமைகளுக்குக் கொடுமை இழைப்போர் சுவர்க்கம் செல்ல முடியாது என்றும் இஸ்லாம் அறிவுறுத்தியது. அடிமைகளை விடுதலை செய்வதனூடாக பாவங்களில் இருந்து மன்னிப்பையும் சுவர்கத்தையும் பெறலாம் என்று போதித்ததால் முஸ்லிம்கள் அடிமைகளை மனிதர்களாக மதித்தனர். இதனால், முஸ்லிம்களின் பண்ணைகளில் வாழ்ந்த கொத்தடிமைகள் சாதாரண விவசாயிகள் என்ற நிலையை அடைந்தனர். எந்த ஒரு முஸ்லிமும்

அடிமையாக இருப்பதை முஸ்லிம் ஆட்சியாளர்கள் அனுமதிக்கவில்லை. கிறிஸ்தவ எஜமானர்களின் தோட்டங்களில் அடிமைகளாக இருந்தவர்கள் இதனைத் தமக்குச் சாதமாகப் பயன்படுத்தக் கருதி கலிமாக் கூறி முஸ்லிம்களாயினர்.

முஸ்லிம்களின் ஆட்சியில் மேற்குறித்தவாறு குடிமக்களின் வரிச்சுமை பெருமளவில் குறைக்கப்பட்டது. அதனால், வர்த்தகம் பெருகி வளம் பெற்று பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டது. அத்துடன், சமய வேறுபாடு காட்டாது மனித உரிமைகள் வர்க்க வேறுபாடின்றி வழங்கபட்டு நீதியான ஆட்சி இடம்பெற்றதால் பல்வேறு சமயங்களிடையே ஒற்றுமை நிலவியது. இதன்வழி ஸ்பெய்ன் குடிமக்களிடையே அமைதியும் மகிழ்ச்சியும் நிலவின.

முஸ்லிம்கள் ஸ்பெய்னைக் கைப்பற்றியதைத் தொடர்ந்து அங்கு அரேபியரும் பேர்பர் இனத்தவரும் குடியேறினர். இக்குடியேற்றங்கள் பெருமளவில் நகர்களையே மையமாகக் கொண்டிருந்தன. எனினும் ஒவ்வொரு குடியேற்றமும் தத்தமது கோத்திர உறுப்பினரை மட்டுமே உள்ளடக்கியிருந்தது. அதாவது கோத்திரங்களை மையமாகக் கொண்ட குடியேற்றங்களாகவே அவை இருந்தன. அதனால் அறபு நாட்டில் நிலவிய கோத்திர வேறுபாட்டுணர்வு இங்கும் நீடித்தது. இதனால், காலாகாலமாக அறபுக் கோத்திரங்களுக்கிடையே நிலவிய போட்டியும் பொறாமையும் பகைமையும் இங்கும் தோன்ற வாய்ப்பாகியது.

தாரிகின் தலைமையில் சென்ற படை வீரர்களில் 90 வீதத்துக்கும் அதிகமானோர் “பர்பர்” இனத்தினராவர். இவர்கள் இஸ்லாத்தை ஏற்றிருந்தபோதும் அரசியல் ரீதியாக அறபு முஸ்லிம்கள் பெற்றிருந்த உரிமைகளைப் பெறவில்லை. மக்கள் தொகை மதிப்பீட்டின்போது அறேபியர் அவர்தம் கோத்திரங்களை மையமாக வைத்தே கணிக்கப் பட்டனர். பர்பர்கள் தத்தம் கோத்திர அடிப்படையில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படவில்லை. மாறாக அறபுக் கோத்திரங்களைச் சார்ந்தவர்களாக, அக்கோத்திரங்களின் மக்களாகவே கருதப்பட்டுக் கணிப்பிடப்பட்டனர்.

இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை ஆட்சி செய்யத் தகுதி பெற்ற கோத்திர ஒன்றியத்தின் ஓரங்கமாக பர்பர் இன மக்கள் கருதப்படவில்லை. அதனால், அறபுகளுக்குக் கிடைத்த சமூக அந்தஸ்தோ மானிய நிதியோ அறபுகள் பெற்ற அளவில் பர்பர் இனத்தினருக்குக் கிடைக்கவில்லை.

கைப்பற்றப்பட்ட இத்தீபகற்பம் இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் ஒரு பிரதேசமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. இத்தீபகற்பம் வட ஆபிரிக்காவுக்கு அருகே இருந்ததால் வட ஆபிரிக்காவைப் பரிபாலித்த கவர்னரின் பொறுப்பில் ஸ்பெய்ன் விடப்பட்டது. அதனால்தான், ஸ்பெய்னில் இருந்து கவர்னர் மூஸா பின் நுஸைர் திரும்பி வரும்போது தனது மகன் அப்துல் அஸீஸை ஸ்பெய்னின் கவர்னராக நியமித்தார். கி.பி. 716 இல் இருந்து 756 (வரையான) 40 வருட காலத்தில் ஸ்பெய்னில் 20 கவர்னர்கள் கடமையாற்றியுள்ளனர். இந்த கவர்னர்கள் பெரும்பாலும் சுதந்திரமாகவே செயற்பட்டனர். எனினும், சர்வாதிகாரிகள் போன்று இவர்கள் செயற்படாது முக்கிய அறபுக் கோத்திரத் தலைவர்களுடன் கலந்துரையாடியே முடிவுகளை எடுத்தனர்.

உமையா ஆட்சியின்போது ஸ்பெய்னை தொலதோ, கிலஸியா, பார்ஸிலோனா, அந்தலூஸ் எனும் நான்கு மாகாணங்களாகப் பிரித்தே பரிபாலித்தனர். ஸ்பெய்னின் முதலாவது கவர்னரான அப்துல் அஸீஸ் இஸ்லாமிய சட்டங்களை அங்கு அமுல் செய்வதற்காகவும், அறபு - பர்பர் இன முஸ்லிம்களிடையே சுமுகமான உறவைத் தோற்றுவிக்கும் வகையிலும் ஒரு சபையை நியமித்தார். இந்தவகையில் இஸ்லாத்தை மக்கள் வாழ்க்கையில் கொண்டுவரவும் இனங்களிக்கிடையே நல்லுறவை வளர்க்கவும் அவர் முயற்சித்தார். எனினும், அவர் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து முஸ்லிம் இராணுவத்தின் போர் நடவடிக்கைகள் இடை நிறுத்தப்படும் வேளையில் ஸ்பெய்னின் வட புறத்திலிருந்த மலைப்பாங்கான ஒரு சிறு பிரதேசம் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பகுதிகளும் முஸ்லிம்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தன.

அதன் பின் உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) காலத்தில் ஸ்பெய்னின் கவர்னராகக் கடமையாற்றிய அஸ்ஸம்ஹ் பின் அல் மாலிக் என்பவர் விஸிகொத் ஆட்சியாளர்களுக்குத் திறை செலுத்தி வந்த செப்டிமேனியாப் பிரதேசத்தைக் கைப்பற்றினார். அதைத் தொடர்ந்து கி. பி. 722 இல் தென் பிரான்ஸில் "டவ்லோஸ்" (TOULOUSE) எனுமிடத்தில் "அகுடயினின்" ஆட்சியாளனான "கியுட்ஸ் பிரபு" வுடன் ஏற்பட்ட போரில் தளபதியும் கவர்னருமான அஸ்ஸம்ஹ் இறையடி எய்தியதால் படை "செப்டிமோனாவை" வந்தடைந்தது. ஐரோப்பிய மண்ணில் முஸ்லிம்கள் கண்ட முதல் தோல்வி இதுவே. இதுமுதல் ஒரு தசாப்தம் வரை முஸ்லிம்கள் படை நடவடிக்கை எதனையும் வடக்கை நோக்கி மேற்கொள்ளவில்லை. இப்பத்து வருட காலப் பகுதியில்

ஸ்பெய்னில் குடியேறியிருந்த பல்லின மக்களுக்கிடையே கிளர்ச்சிகள் தோன்றின. இதனை மட்டுப்படுத்துவதிலேயே கவர்னர்களின் காலம் கழிந்தது. இத்தகைய அமைதியற்ற ஒரு சூழலில்தான் அப்துர்-ரஹ்மான் பின் அப்துல்லாஹ் அல்-∴காபிகீ என்பவர் கி. பி. 731. ஏப்ரில் மாதத்தில் ஸ்பெய்னுக்கு கவர்னராக நியமிக்கப்பட்டார்.

அப்துர் ரஹ்மான் ஸ்பெய்னின் கவர்னராக நியமிக்கப்பட்டபோது பிரனீஸ் பகுதிக்கும் ஸப்டிமினியா நகருக்கும் பரிபாலகராக உஸ்மான் பின் அபீ நிஸ்ஆ என்பவர் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் பர்பர் இனத்தவர். தாரிக் பின் ஸியாதின் படையுடன் வந்த தளபதிகளில் ஒருவர். பர்பர் இனத்தவரின் போராட்டத்தால் கைப்பற்றப்பட்ட ஸ்பெய்னின் வளங்களை நியாயமற்ற முறையில் அறபுகள் அனுபவிப்பதாகக் கருதினார். ஸ்பெய்னின் கவர்னர் பதவி தனக்குக் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்த்த ஒரு சந்தர்ப்பத்தில்தான் அல் ∴காபிகீ கவர்னராக நியமிக்கப்பட்டார். அதனால் வெறுப்படைந்து கிளர்ச்சி செய்ய வாய்ப்பொன்றை அவர் எதிர்பார்த்திருந்தார். பிரான்ஸின் “அகியுவண்டைன்” பிரதேச ஆளுனரான இயூடு பிரபுவுடன் ஒரு ரகசிய உடன்படிக்கை செய்து கொண்டார். ஸ்பெய்னின் முஸ்லிம் ஆட்சிக்கு எதிராக இப்னு அபீ நிஸ்ஆ கிளர்ச்சி செய்வதற்கு இயூடு உதவி செய்ய வேண்டும் என்பதே இவ்வுடன்படிக்கையின் சாராம்சமாகும். இயூடுவின் மகளையும் இப்னு அபீ நிஸ்ஆ திருமணம் செய்து உறவை மேலும் வலுப்படுத்திக் கொண்டார். இதனை அறிந்த அல்-∴காபிகீ, அபீ நிஸ்ஆவுக்கு எதிராக ஒரு படையை அனுப்பினார். இப் போராட்டத்தில் அபீ நிஸ்ஆ கொலை செய்யப்பட்டார்.

வட பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்திய பின் அல்-∴காபிகீ பெரும் படையொன்றைத் திரட்டிக்கொண்டு பிரான்ஸின் மத்திய பகுதியான “கோல்” பிரதேசத்துக்கு கி. பி. 732 இல் சென்றார். இப்படை, தான் செல்லும் வழியில் பல வெற்றிகளைப் பெற்றுக்கொண்டு ஏராளமான ∴கனீமத் பொருட்களுடன் “டுவர்ஸ்” எனும் நகரை அடைந்தது. இப்படையை எதிர்கொள்ள முஸ்லிம் படை வீரர்களை விட பன்மடங்கு அதிகமான போர் வீரர்களுடன் பிரான்ஸிய மன்னன் “கார்ள் மார்டல்” தயாரானான்.

இரு தரப்பினரிடையே கி. பி. 732 இல் ஆரம்பித்த இப்போர் 9 தினங்கள் வரை நீடித்தது. இறுதி நாளில் பிரான்ஸியப் படை களைப்படைந்து தோல்வியைத் தழுவக் கூடிய நிலை தோன்றியது.

எனினும் அவர்களில் ஒரு பிரிவினர் முஸ்லிம்கள் பாதுகாப்பாக வைத்திருந்த ∴கனீமத்துப் பொருட்கள் அடங்கிய பண்டகசாலைப் பகுதியைத் தாக்க முயற்சித்தனர். முஸ்லிம் படை வீரர்களில் ஒருவர், “எதிரிகள் பண்டகசாலையை நெருங்கிவிட்டனர்” என்று குரல் கொடுத்ததால் முஸ்லிம் படை வீரர்களில் பெரும் பகுதியினர் தளபதியின் கட்டளையில்லாமலேயே ∴கனீமத்துப் பொருட்களைப் பாதுகாக்க முனைந்தனர். இதனால், முஸ்லிம் படையின் ஒழுங்கு குலைந்தது. இதனை உணர்ந்த தளபதி ∴காபிகீ கள நிலவரத்தைச் சீராக்கக் கருதி முன்புறத்தே ஓடியாடி நடவடிக்கை எடுக்கும் போது எதிரிகளின் அம்புகளுக்கு இலக்காகி உயிர் நீத்தார். இதனால், முஸ்லிம் படை பேரிழப்பை எதிர் கொண்டது. இருப்பினும், இரவு வரை போரைத் தொடர்ந்து நடாத்தி தோல்வியில் இருந்து தன்னைக் காத்துக் கொண்டது. இரவில் கலந்துரையாடிய தலைவர்கள் போரில் வெற்றி கொள்ளும் வாய்ப்பு இல்லை என்று தீர்மானித்தனர். அன்றைய தினம் இரவே, சேமித்த ∴கனீமத்துப் பொருட்களை விட்டுவிட்டு படை செப்டிமேனி யாவுக்குப் பின் வாங்கியது. படை பின்வாங்கியதை மறுதினம் காலை அறிந்து கொண்ட போதும், பிரெஞ்சுப்படை முஸ்லிம் படையைப் பின் தொடர்ந்து துரத்த முன்வரவில்லை.

ஐரோப்பிய வரலாற்றாசிரியர்களால் “டுவர்ஸ் யுத்தம்” (Battle of Tours) என்றழைக்கப்படும் இந்த யுத்தத்தை அரபு வரலாற்றாசிரியர்கள் “பிலாதீ அஷ்-ஷுஹதா” என்றழைக்கின்றனர். போர் உச்ச நிலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது ∴கனீமத்துப் பொருட்களைப் பாதுகாப்பதில் முஸ்லிம் வீரர்களின் கவனம் திருப்பப்பட்டமையே முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கான உடனடிக் காரணமாய் அமைந்தது. உஹதுப் போரின்போதும் ∴கனீமத்துப் பொருட்கள் மீது முஸ்லிம்களின் கவனம் திரும்பியமையே அப்போரின் தோல்விக்கும் காரணமாய் அமைந்தது. பொருள் மீது கொண்ட ஆசை இவ்விரு போரிலும் பொருட்களை மட்டுமல்லாது முஸ்லிம் வீரர்கள் பலரையும் இழக்க வழிகோலியது. டுவர்ஸ் யுத்தத்தில் முஸ்லிம்கள் ஏராளமான வீரர்களை களத்தில் இழந்ததோடு, கடந்த பல மாதங்களாகச் சேகரித்து வைத்திருந்த அனைத்து ∴கனீமத்துப் பொருட்களையும் கூட இழந்தனர்.

தளபதி அப்துர்-ரஹ்மான் ∴காபிகீயின் மரணம் முஸ்லிம்கள் எதிர்கொண்ட ஒரு பேரிழப்பாகும். அவர் அந்தலூஸில் கடமையாற்றிய மிகச் சிறந்த ஒரு ராஜ தந்திரியும் சிறந்த நிருவாகியுமாவார். நிர்வாகத் துறையில் அதுகாலவரை நிலவிய குறைபாடுகளை இனம் கண்டு

அவற்றை நிவர்த்தி செய்தார். பிரான்ஸின் மீதான படையெடுப்பையும் திட்டமிட்டே மேற்கொண்டார். ஸ்பெய்னில் முஸ்லிம் குடிமக்களிடையே நிலவிய இன, கோத்திர ரீதியான பிளவுகளை நீக்கி ஒன்றுபடுத்தும் ஆற்றலும் திறமையும் அவருக்கு இருந்தன. அத்தகைய ஒருவரைப் போர்க்களத்தில் இழந்தமை பேரிழப்பாகும்.

கி. பி. 732 - 755க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் முஸ்லிம் ஸ்பெய்னின் வரலாறு இன, கோத்திர ரீதியான சிந்தனையினடியாக எழுந்த செயற்பாட்டின் வெளிப்பாடாகவே இருந்தது. ஏற்கனவே அறேபியாவில் அறேபியர் வட அறேபியர் (முழாரிகள்), தென் அறேபியர் (யெமனி - ஹிம்யாரிகள்) எனும் இரு பெரும் கோத்திரங்களாகப் பிரிந்திருந்தனர். இவ்விரு கோத்திரங்களிலும் மேலும் பல உப கிளைப் பிரிவுகள் இருந்தன. கோத்திர ரீதியான இவ்வேறுபாடு முஸ்லிம் ஆட்சிக்குட்பட்டிருந்த வட ஆபிரிக்கப் பிரதேசத்திலும் செல்வாக்குப் பெற்றிருந்தது.

வட ஆபிரிக்காவுக்கும் ஸ்பெய்னுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நெருக்கமான உறவு இருந்தது. இதனால் வட ஆபிரிக்காவில் இடம்பெறும் நிகழ்வும், சிந்தனைகளும் ஸ்பெய்னிலும் பிரதிபலித்தன.

வட ஆபிரிக்காவில் பர்பர்கள் கி. பி. 740 இல் கிளர்ச்சி செய்தனர். அறபுப் பரிபாலகரிடமிருந்து ஸியூட்டாப் பிரதேசத்தையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டனர். வட ஆபிரிக்காவில் எழுந்த இந்த பர்பர் கிளர்ச்சி ஸ்பெய்னிலும் பர்பர்களைக் கிளர்ச்சி செய்யத் தூண்டியது. தாரிக்கின் தலைமையில் பர்பர் இனத்தினரின் கடும் போராட்டத்தால் ஸ்பெய்ன் பெற்றுக்கொண்ட பயனை அறேபியரே பெருமளவில் அனுபவித்தனர். அவர்கள் பெற்றுக் கொண்டதன் பின் எஞ்சியவற்றையே தமக்குத் தருகின்றனர். அரேபியருக்கு வழங்கப்பட்டதைப் போன்ற நல்ல விளைச்சல் தரும் நிலங்களை நிகர்த்த நிலங்கள் தமக்கு வழங்கப்படவில்லை. இஸ்லாம் வழங்கிய சமத்துவத்தை அரேபியர் தமக்கு அளிக்கவில்லை என்ற மனக் குறைகள் பர்பர் இனத்தாரிடையே பரவலாக இருந்ததால் இக்கிளர்ச்சிக்கு பர்பர்கள் முழு ஆதரவு வழங்கினர். இதனால், வட ஆபிரிக்காவில் போன்று ஸ்பெய்னிலும் உமையா அரசுக்கு எதிரான கிளர்ச்சி வலுவடைந்தது. இதனால் உமையா கலீபா ஸிரியாவைச் சேர்ந்த 21,000 அறபு வீரர்களைக்

கொண்ட ஒரு படையை வட ஆபிரிக்காவுக்கு அனுப்பி கிளர்ச்சியைக் கட்டுப்படுத்தினார். இவர்களில் 7,000 பேர் கொண்ட ஒரு படைப் பிரிவு பல்ஜீ இப்னு பிஷ்ர் அல் குஷைரீ என்பவரின் தலைமையில் ஸ்பெய்னுக்கு அனுப்பப்பட்டது.

அந்தலூஸின் அமீராக அக்காலப் பகுதியில் கடமையாற்றிய அப்துல் மலிக் ஸிரியா வாசிகளான பால்ஜியின் தலைமையிலான படைப்பிரிவு ஸ்பெய்னுக்கு வருவதற்கு விரும்பவில்லை. ஆயினும், பர்பர்களின் கிளர்ச்சியை அடக்க வேறு வழியிருக்கவில்லை என்பதைக் கண்டபோது, தம் பணியை முடித்ததும் திரும்பிச் செல்லவேண்டும் என்ற நிபந்தனையை உட்படுத்தி ஓர் உடன்படிக்கைக்கு வந்த பின்பே பால்ஜியின் தலைமையிலான படை ஸ்பெய்னுக்குள் நுழைய அனுமதிக்கப்பட்டது.

பால்ஜியின் தலைமையிலான படைப்பிரிவு ஸ்பெய்னில் பர்பர்களின் கிளர்ச்சியை முற்றாக நசுக்கி அமைதியை நிலை நாட்டியது. ஆயினும், அப்படை ஸ்பெய்னை விட்டு வெளியேற மறுத்தது. இதனால், முன்பு குடியேறியிருந்த அரபுகளுக்கும் பால்ஜியின் தலைமையில் இயங்கிய அரபுகளுக்கும் இடையே நிரந்தரப் பகை மூண்டது. இப்போராட்டத்தில் கல்பீ கோத்திரத்தைச் சேர்ந்த அப்துல் மலிக் கொலை செய்யப்பட்டார். கைஸ் கோத்திரத்தவரான பல்ஜி கொர்டோவாவைக் கைப்பற்றித் தனது ஆதிக்கத்தை நிறுவிக்கொண்டார். இதனால், கி. பி. 742 இல் இரு அரபுக் கோத்திரங்களுக்குமிடையில் சண்டை மூண்டது. உமையா ஆதரவாளரான பால்ஜியின் ஸிரியப் படை வீரர்கள் இப்போராட்டத்தில் வெற்றி பெற்றபோதும் பால்ஜி களத்தில் இறந்துவிட்டார்.

ஸ்பெய்னில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலையைக் கருத்திற்கொண்டு உமையா ஆட்சியாளரான ஹிஷாம் திறமை மிக்க ஒரு கவர்னரை ஸ்பெய்னுக்கு நியமித்தார். புதிய கவர்னர் அரபுக் கோத்திரங்களுக் கிடையிலான இப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரக் கருதி ஒவ்வொரு கோத்திரத்தாரையும் மிகத் தூரத்தில் இருக்கக்கூடிய விதமாக வெவ்வேறு இடங்களில் குடியேற்றினார். ஸிரியாவின் படை வீரர்களிடையே இருந்த எகிப்தியர்களை முர்ஸியா நகரிலும், பலஸ்தீன் வீரர்களை ஸிடோன் நகரிலும், டமஸ்கஸ் வீரர்களை கிரானாடாவிலும் குடியேற்றினார். இதனால் அவர்களிடையே இருந்த குழப்ப நிலை

ஓரளவு தணிந்தது. எனினும், வட, தென் அரேபியருக்கிடையேயான முறுகல் நிலை தொடர்ந்தும் நீடித்தது. இதனைத் தவிர்ப்பதற்காக ஒவ்வொரு வருடத்துக்கு ஒருவராக இரு கோத்திரங்களும் மாறி மாறி கவர்னர் பதவி வகிப்பதற்கான ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அதற்கிணங்க வட அரபுக் கோத்திரத்தைச் சேர்ந்த யூசுப் பின் அப்துர் ரஹ்மான் அல் பிஹ்ரி கி.பி. 746 இல் கலீபா இரண்டாம் மர்வானினால் நியமிக்கப்பட்டார். இவ்வுடன்பாட்டுக்கு அமைய வருட முடிவில் தென் அரேபியருக்கு இடம்கொடுக்கும் வகையில் யூசுப் அப்துர் ரஹ்மான் பதவியில் இருந்து நீங்கியிருக்கவேண்டும். ஆயினும், அவர் பதவியில் இருந்து நீங்காது கி.பி. 755 வரை தன் படைபலத்தின் துணையுடன் கவர்னர் பதவியை வகித்தார்.

## முஸ்லிம் ஸ்பெய்ன் கலீபாக்களின் சுருக்க வரலாறு

### முதலாம் அப்துர் ரஹ்மான் (கி.பி. 756 -788)

இவர் உமையா கலீபா ஹிஷாமின் பேரனாவார். தனது ஐந்தாம் வயதில் தந்தையை இழந்தார். அதன்பின் தன்னை வளர்த்த கலீபா ஹிஷாமைத் தனது 12வது வயதில் இழந்தார். எனினும், ஆட்சியாளன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய பண்புகள் பலவற்றை அவர் கொண்டிருந்தார். தீய நடத்தைகளில் இருந்து விலகியிருந்தார். சமய அறிஞர்களுடன் உறவாடி சமய சிந்தனைகளையும் வளர்த்துக் கொண்டார். இளமையிலேயே போர்ப் பயிற்சியையும் பெற்றுக் கொண்டார். அப்பாஸியர், உமையாக்களிடமிருந்து ஆட்சியைக் கைப்பற்றும்போது அப்துர் ரஹ்மான் 20 வயது வாலிபராக இருந்தார்.

உமையா அரச குடும்பத்தினரை அப்பாஸிய கலீபா அஸ்ஸப்பாஹ் விருந்துக்கழைத்துப் படுகொலை செய்த தினத்தில் இவர் யூப்பிரடீஸ் நதிக்கருகே இருந்த தனது பண்ணைக்குச் சென்றிருந்ததால் படு கொலையில் இருந்து தப்பினார். அப்பாஸியரின் கொலை முயற்சியில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்வதற்காக தனது தாயின் உறவினர்களான பர்பர் வாழ்ந்த ஸியுமா பகுதியில் அபயம் தேடினார். அவர்கள் அப்துர்றகுமானுக்கு ஆதரவு நல்கினர்.

உமையா ஆட்சியின்போதே இனரீதியான சிந்தனை ஸ்பெய்ன் அரசியலில் செல்வாக்குச் செலுத்தியது. அரேபியர், பேர்பர், முவல்லதூன்(ஸ்பானிய சுதேச முஸ்லிம்கள்), மொஸராபிய்யூன் (அரபு மயமான கிறிஸ்தவர்கள்) போன்ற குழுக்களின் செல்வாக்கு அதன் அரசியலில் நன்கு புலப்பட்டது.

இவ்வாறான இன, கோத்திர மயமான அரசியல் சிந்தனை காரணமாக ஏற்பட்ட கலவரங்களை அடக்குவதிலேயே கவர்னர் யூசுபின் காலம் கழிந்தது. இச்சூழலில்தான் அப்பாஸியர் உமையாக்களை வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றினர்.

அப்பாஸியர் ஆட்சியைக் கைப்பற்றியதும் உமையா சார்பான அரேபியர் ஸ்பெய்னின் எல்லாப் பிரதேசங்களிலும் தொல்லைக் குள்ளாக்கப்பட்டனர். உமையாக்களின் நலன்களைப் பாதுகாப்பவர் களாகச் செயற்பட்ட அபூ உஸ்மான் உபைதுல்லாஹ், அவரது மருமகனான அப்துல்லாஹ் பின் காலித் எனும் இருவரும் அந்தலூஸிய மாகாணத்தின் ஜல்பிரா நகரின் பரிபாலகர்களாக இருந்தனர். ஸிரியா வாசிகளே இந்த நகரின் பெரும்பான்மைக் குடிகளாவர்.

ஸியூட்டாவில் அடைக்கலம் புகுந்திருந்த அப்துர்-ரஹ்மான் தனக்குச் சாதகமான சூழல் ஸ்பெய்னில் மட்டுமே இருப்பதைக் கண்டுகொண்டார். ஸ்பெய்னில் நீண்டகாலமாக இருந்துவரும் உள்நாட்டுக் கலவரத்தால் அதன் பரிபாலகர்கள் பலவீனமடைந்திருப்பதும், கலவரங்களை அடக்கி அமைதியை நிலை நாட்டக்கூடிய ஆளுமை மிக்க தலைவர்கள் எவரும் இல்லாதிருப்பதும், ஸ்பெய்னில் வாழ்ந்த ஸிரியா வாசிகள் அரேபியரதும் உமையாக் கோத்திரப் பிரமுகர்களதும் ஆதரவைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதும் தனக்கான சாதகங்கள் என கருதினார். அதனால், காலம் தாழ்த்தாது ஸ்பெய்னில் தனது ஆதரவாளர்களை ஒருங்கிணைக்கும் முயற்சிகளை மேற்கொள்ளக் கருதித் தனது விசுவாசம் மிக்க அடிமையாகிய பத்ர் என்பவரிடம் கடிதங்களைக் கொடுத்தனுப்பினார். உமையாக் கோத்திரப் பிரமுகர்களுக்கு இக்கடிதத்தைக் கையளிக்குமாறு பத்ருக்கு ஆலோசனையும் வழங்கியிருந்தார். அக்கடிதத்தில், உமையாக் கோத்திரத்தார் படுகொலை செய்யப்பட்டமை, தான் உயிருக்குப் பயந்து ஓடிவந்தபோது எதிர் கொண்ட பயங்கர அனுபவங்கள், ஸ்பெய்னுக்குத் தான் வந்தால் கவர்னர் யூசுபினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களுக்கு தான் அடையும் அச்சம், கலீபா ஹிசாமின் பேரர் என்ற வகையில் ஸ்பெய்னின் ஆட்சியில்

தனக்குள்ள உரிமை என்பன பற்றியெல்லாம் எழுதிவிட்டு, உங்களிடம் மட்டுமே தான் ஏதேனும் உதவியை எதிர்பார்க்க முடியும் என்றும் அவ்வாறு உதவ முன்வருவதாயின் அதுபற்றித் தனக்கு அறியத்தருமாறும் கேட்டுக்கொண்டிருந்தார்.

பத்ர் உமையாக் கோத்திரத்தின் முன்னாள் மவாலிக்களாகவும் தற்போதைய ஜல்பிரா, ஜீன் பிரதேச பரிபாலகர்களாகவும் இருந்த அபூ உஸ்மான் உபைதுல்லாஹ், அவரது மருமகன் அப்துல்லாஹ் பின் பாலித் எனும் இருவரையும் சந்தித்துக் கடிதங்களை வழங்கினார். அவர்கள் ஸிரியா வாசிகளையும் உமையாக் கோத்திரத்தாரையும் சந்தித்துக் கலந்துரையாடி அவர்களின் ஆதரவையும் திரட்டிக்கொண்டார். இவ்வாதரவாளர்களுள் 11 பேர் இப்னு அல்கமா என்பவரின் தலைமையில் ஸிரியாவுக்குச் சென்று அப்துர்-ரஹ்மானை 755.08.14 ம் திகதி ஸ்பெய்னுக்கு அழைத்து வந்தனர். தென் ஸ்பெய்னில் ஸிரியா வாசிகள் அதிக எண்ணிக்கையில் இருந்ததால் ஸ்பெய்ன் வருகையால் அவர் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்படவில்லை. அப்துர் ரஹ்மானின் வருகை பற்றி அறிந்த கவர்னர் யூசுப் அவரைத் தனக்குச் சார்பானவனவராகக்கருதி ஸ்பெய்னின் பெருந்தோட்டங்கள் சிலவற்றையும் வழங்கித் தனது மகளையும் விவாகம் செய்து தருவதாக ஆசை காட்டினார். அப்துர் ரஹ்மான் அதற்கு இணங்கவில்லை. இதனால், இருவரதும் இருபடைகளும் கி.பி. 756 மே மாதம் 15ம் திகதி சந்தித்தன. கடும் போரின் பின் அப்துர் ரஹ்மான் வெற்றிவாகை சூடி கொர்டோவாவைக் கைப்பற்றினார். கொர்டோவா மஸ்ஜிதில் வைத்து அப்துர் ரஹ்மான் அமீராகப் பிரகடனப்படுத்தப்பட்டார். அப்போது அவருக்கு வயது 26.

அமீராக அப்துர் ரஹ்மான் பதவியேற்றபோதும் எதிரிகளின் அச்சுறுத்தலில் இருந்து அவர் விடுதலை பெற்றிருக்கவில்லை. முன்னாள் கவர்னர் யூசுப் ஒரு படையைத் திரட்டிக்கொண்டு கொர்டோவாவுக்கு வந்தார். அவரை எதிர்கொள்வதற்காக அப்துர் ரஹ்மான் வெளியே சென்ற சந்தர்ப்பத்தில் யூசுபின் மகன் அபூஸைத் ஒரு படையுடன் வந்து கொர்டோவாவைத் தாக்கினார். இதனை அறிந்து துரித கதியில் அப்துர் ரஹ்மான் கொர்டோவாவுக்கு வந்தார். இதனால் அபூஸைத் பின்வாங்கி ஓடிவிட்டார். அப்துர் ரஹ்மான் கொர்டோவாவைக் காத்துக்கொண்டதால் கவர்னர் யூசுப் தைரியமிழந்து அப்துர் ரஹ்மானுடன் சமாதானம் செய்துகொண்டார். அதன்படி யூசுபின் உடைமைகள் கையளிக்கப்பட்டதுடன் அவர் கொர்டோவாவில் வாழவும்

அனுமதிக்கப்பட்டார். எனினும், மீண்டும் கிளர்ச்சிசெய்ததால் அவர் கொலைசெய்யப்பட்டார்.

### ஸ்பெய்னில் உமைய ஆட்சி ஸ்திரமடைதல்

குத்பா (ஜும்ஆ பிரசங்கத்தில்)வில் பக்தாதிய கலீபாவை வாழ்த்தும் நடைமுறையைக் கைவிட்டார். இதனால் ஆத்திரமடைந்த அப்பாஸிய கலீபா மன்ஸூர் அப்துர் ரஹ்மான் மீது படையெடுக்கத் தீர்மானித்தார்.

படுகொலை செய்யப்பட்ட யூசுபின் உறவினரும் வட ஆபிரிக்காவின் கவர்னருமான அலா பின் முஇஸ்ஸுக்கு ஸ்பெய்ன் மீது படையெடுக்கு மாறு கலீபா கட்டளையிட்டார். யூசுபின் கொலைக்கு பழிவாங்குமுகமாக தொலேடோவில் கிளர்ச்சி ஒன்று தோன்றியது. இக்கிளர்ச்சியை அடக்குவதற்காக அப்துர்ரஹ்மான் தொலதோவை முற்றுகையிட்டார். முற்றுகை நீடித்திருக்கும்போது அலா பின் முஇஸ் கி.பி. 763 இல் ஸ்பெய்னில் சென்றிறங்கினார். இதனால், அப்துர்ரஹ்மான் முஇஸ்ஸை எதிர்கொள்வதற்காகத் திரும்பி வரும் வழியில் ஸெவில்லிக்கு அருகேயுள்ள கர்மோனா எனுமிடத்தில் அப்படையை எதிர்கொண்டார். தொலதோவில் இருந்து கிளர்ச்சிக்காரர்களின் படையொன்று பின்னால் துரத்தி வந்தது. இதனால், கர்மோனாவில் இருந்த கோட்டையில் அடைக்கலமானார். முற்றுகையிடப்பட்ட நிலையில் அப்துர்ரஹ்மான் இரு மாதங்கள் கோட்டையுள் அடைக்கலப்பட்டுக் கிடந்தார். கோட்டையுள் பசியால் வாடி மடிவதைவிடக் களத்தில் இறங்கிப் போராடி இறப்பதை அப்துர்ரஹ்மான் பெரிதும் விரும்பினார். அவருடன் இருந்த 700 வீரர்களும் இக்கருத்துடன் இணங்கினர்.

அப்துர்ரஹ்மானின் படையினர் திடீரெனப் பாய்ந்து எதிரணியில் புகுந்தனர். முற்றுகையாளர்கள் இரு மாதங்களாக முற்றுகை யிட்டிருந்தனர். இக்காலப் பகுதியில் போர் நடவடிக்கை ஏதும் இல்லாதிருந்ததால் அவர்கள் கவனயீனமாக இருந்தனர். இதனால், அப்துர்ரஹ்மானின் திடீர்த் தாக்குதலால் அதிர்ந்து போயினர். எதிர்த்தரப்பினரில் 7000 வீரர்கள் மடிந்தனர். அப்துர்ரஹ்மான் வெற்றி வாகை சூடினார். களத்தில் அபூ முஇஸ்ஸும் கொலை செய்யப்பட்டார். அப்துர்ரஹ்மான் முஇஸ்ஸின் தலையைத் துண்டித்து கலீபா மன்ஸூருக்கு

அனுப்பி வைத்தார். இது முதல் அப்துர்ரஹ்மானின் ஆட்சி ஸ்திரமடைந்த போதும் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் குறையவில்லை.

### உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கான காரணிகள்

அப்துர்ரஹ்மானை ஆட்சியில் அமர்த்தப் பல பகுதியினர் உதவி புரிந்தனர். தத்தமக்குரிய சில அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்கள் இவ்வாறு உதவி புரிந்தனர். அப்துர்ரஹ்மான் தனக்கு உதவி புரிந்த யாருக்கும் சார்பாகச் செயற்படவில்லை. அக்குழுக்களின் எதிர்பார்ப்புக்கு மாற்றமாக சில நியமனங்கள் அமைந்திருந்தன. சிலருக்கே தமது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறின. ஆதலால், அவர்களில் பெரும்பான்மையானோர் அப்துர்ரஹ்மான் மீது அதிருப்தியடைந்தனர். நண்பர்கள், உறவினர்களில் சிலரும் இவருக்கு எதிரிகளாக மாறினர். பதவி கவிழ்க்கப்பட்ட யூஸு∴பின் ஆதரவாளர்கள் கடும் எதிரிகளாக விளங்கினர்.

ஸ்பானியக் குடி மக்கள், இன ரீதியாகவும் பிளவுற்றிருந்தனர். அரேபியர், பர்பர், முவல்லத்கள், மொஸராப்கள் என்று பல இனங்களாகப் பிரிந்து காணப்பட்டனர். இதில் எந்தவொரு இனமும் மற்றொரு இனத்தின் தலைமையை ஏற்கத் தயாராக இருக்கவில்லை. சகிப்புத் தன்மையுடன் வாழும் மனப்பாங்கின்றி கிளர்ச்சியில் ஈடுபடும் சுபாவம் கொண்டிருந்தனர். கிளர்ச்சிகளில் ஈடுபடுவதற்குச் சாதகமான மனப்பாங்கையும், கிளர்ச்சிக்கு சாதகமான சூழலையும் கொண்டிருந்த குடிமக்களை அப்பாஸியர் பகடைக் காய்களாகப் பயன்படுத்தி சதி முயற்சிகளைத் தூண்டியமை கிளர்ச்சிக்கான மற்றொரு காரணமாகியது. புதிதாக இஸ்லாத்தை ஏற்ற அரபுகளையும் பர்பர்களையும் தூண்டி அடிக்கடி கிளர்ச்சிகளை செய்வித்தனர். ஸ்பெயினின் வடக்கே இருந்த பிரான்சியரும், ஸரகோஸா மாகாணத் தலைவர்களாக செயற்பட்ட ஹுஸைன் பின் ஆஸி, ஸுலைமான் பின் யக்தான் போன்றவர்களோடு சேர்ந்து சூழ்ச்சி செய்தமையும் உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கான பிறிதொரு காரணமாகியது.

நாலா புறத்திலிருந்தும் எழுகின்ற கிளர்ச்சிகளை எதிர்கொள்வதற்குத் தனது உமையாக் கோத்திரத்தவர்களை மையமாகக் கொண்ட படையணியை உருவாக்க வேண்டும் எனக் கருதினார். உமையா நலனைக் காக்கவும், ஆபத்தில் உதவக்கூடிய நம்பத் தகுந்த சக்தியாகவும் உமையாக்களைக் கொண்ட படையணியே இருக்க முடியும் என நம்பினார். இதனால் அப்பாஸியரின் கெடுபிடிகளில் இருந்து தப்பித்து

வாழ்கின்ற உமையாப் பிரமுகர்களை ஒன்று திரட்டினார். அவர்களில் அப்துல் மலிக் பின் உமர் பின் மர்வான், அவரது மகன் உமர் பின் அப்துல் மலிக் குறிப்பிடத்தக்க இருவராவர். இவர்களில் அப்துல் மலிக் பின் உமரை ஸெவில்லிக்கும், உமர் பின் அப்துல் மலிக்கை மொஷரூபா நகருக்கும் கவர்னராக நியமித்தார். இவ்வாறு தனது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை முக்கியமான நகர்களின் நிர்வாகிகளாக நியமித்துக் கிளர்ச்சிகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

## பிரான்ஸிய மன்னன் சாலமேனின் படையெடுப்பு

ஸரகோஸா மகாணத்தின் முக்கிய நகர்களில் ஒன்றான பார்ஸிலோனாவின் ஆளுநராக இருந்த கல்பீ கோத்திரத்தவரான ஸுலைமான் பின் யக்தான் இப்னுல் அரபி, அம்மாகாணத்தின் மற்றொரு நகரின் ஆளுநராகக் கடமையாற்றிய ஹுஸைன் பின் ஆஸி எனும் இருவரும் அப்பாஸியரின் கையாட்களாகச் செயற்பட்டனர். இவர்கள் பிரான்ஸிய மன்னன் சர்லமேனைச் சந்தித்து அப்துர்ரஹ்மான் மீது படையெடுக்குமாறும் தாம் உதவியாக இருப்பதாகவும் வாக்களித்தனர். தனது புகழை நிலை நாட்ட இது ஓர் அரிய வாய்ப்பு என்று சார்லமேன் கருதினான். ஆதலால், கிளர்ச்சிக் காரர்களின் வேண்டுகோளை ஏற்க மன்னன் முன்வந்தான்.

ஏற்கனவே திட்டமிட்டபடி சார்லமேன் பெரும் எண்ணிக்கையிலான வீரர்களுடன் ஸரகோஸாவை நோக்கி வந்தான். முஸ்லிம்களைத் துரத்தி, ஸ்பெய்னைக் கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்துக்குட்படுத்தப் பல்லாயிரக் கணக்கான வீரர்களுடன் சர்லமேன் வருகின்றான் என்ற செய்தி பொது மக்களிடையே ஓர் அதிர்ச்சி அலையைத் தோற்றுவித்தது.

ஸரகோஸாவைத் தாக்க வரும் சார்லமேனை எதிர்கொள்வதற்காக அப்துர்ரஹ்மானும் தன் படையுடன் கொர்டோவாவில் இருந்து ஸரகோஸா சென்றார். சார்லமேனுக்கு ஒரு பாடம் கற்பிக்க கருதித் தன் படையுடன் சென்று பிரான்ஸின் தென்பகுதி நகர்களைத் தாக்கினார். இச்சந்தர்ப்பத்தில் றைன் நதிப் பள்ளத்தாக்கை ஸக்ஸன் வீரர்கள் தாக்குகிறார்கள் என்ற செய்தி கிட்டியதால் சாலமேன் உடனடியாக நாடுதிரும்பினான். தன் நாட்டில் அடிக்கடி ஏற்படும் கிளர்ச்சிகளைக் கருத்திற் கொண்டு அப்துர்றகுமானும் பிரான்ஸிலிருந்து கொர்டோவா வுக்கு மீண்டார். இவ்வாறு தனதாட்சிக் காலமெல்லாம் உள் நாட்டுக் கிளர்ச்சிகளுடனும், அப்பாஸியப் படைகளுடனும், சார்லமேனுடனும்

போராடி தனதாட்சியை ஸ்திரப்படுத்தினார். அரச குடும்பத்தில் பிறந்தும் நாட்டை இழந்து காட்டிலும் மேட்டிலும் பாலைவனத்திலும் ஐந்து வருடங்களாக அலைந்து திரிந்து, ஸ்பெய்னில் புகுந்து உமையா ஆட்சியைத் தோற்றுவித்து, அதனை ஸ்திரப்படுத்திய பின் கி. பி. 788 இல் காலமானார். மூத்த மகன் ஸுலைமானை விடவும் அடுத்தவரான ஹிஷாம் ஆட்சி பீடத்துக்குத் தகுதியானவர் எனக் கருதி ஹிஷாமை அடுத்த வாரிசாக நியமித்திருந்தார்.

### மதிப்பீடு

காடுகளிலும் மேடுகளிலும் பாலைவனத்திலும் தன் உயிரைக் காத்துக் கொள்வதற்காக அபயம் தேடி அலைந்த அப்துர் ரஹ்மான், கடல் கடந்து ஸ்பெய்னில் அகதியாக நுழைந்து புகழ் மிக்கதோர் ஆட்சியை அமைத்தமை அவரது ஒரு சாதனையே. 32 வருட ஆட்சிக்காலத்திலும், உள்நாட்டுக் கிளர்ச்சிகளையும் வெளி நாட்டுப் படையெடுப்புக்களையும் எதிர்கொள்வதில் முழுமையாக ஈடுபட்டிருந்த போதும் நிர்வாகத்தை மேற்பார்வை செய்வதையும் கலை-கலாசாரங்களை வளர்ப்பதையும் அவர் மறக்கவில்லை.

அப்துர்ரஹ்மான் தனது நாட்டை 6 மாகாணங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒவ்வொரு தளபதியை அவற்றின் பரிபாலகராக்கினார். அவர்களுக்குத் துணையாக ஒவ்வொரு மாகாணத் துக்குமான பிரதான நிருவாகிகள் இருவரையும், ஆறு அமைச்சர் களையும், ஒரு காழியையும், நிர்வாக உத்தியோகத்தர்களையும் நியமித்தார். மக்கள் நலனைப் பேணுவதே அவரது நிர்வாகத்தின் இலட்சியமாக இருந்தது. அதற்குத் தேவையான சட்டங்களையும் அவர் அறிமுகப்படுத்தினார்.

கைப்பற்றிய முக்கிய நகர்களிலெல்லாம் காவல் அரண்களை ஏற்படுத்தினார். அந்நகர்களைப் பரிபாலிக்கவும் அழகுபடுத்தவும் தேவையான ஏற்பாடுகளைச் செய்தார். தேவைப்படும் இடங்களில் எல்லாம் மஸ்ஜித்களையும், பரிபாலனத்துக்கு அவசியமான கட்டடங் களையும் நிர்மாணித்தார். அவர் நிர்மாணித்த கொர்டோவா மஸ்ஜித் புகழ் வாய்ந்ததாகும். அதன் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்ய முன்னதாகவே அவர் இறந்தபோதும் அவர் இட்ட அடித்தளத்தில் அவரது மகன் அதன் வேலைப்பாடுகளைப் பூரணப்படுத்தினார். கொர்டோவா

நகரை உலகின் அழகு மிகு நகர்களில் ஒன்றாக மாற்றியமைத்தார். கொர்டோவா மஸ்ஜிதுக்கு மேற்குத் திசையில் அரச மாளிகையை நிர்மாணித்தார். கட்டட நிர்மாணத்தில் ஸிரியாவின் கட்டடக் கலை அம்சங்களைப் பாவித்து அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். யூப்ரடீஸ் நதிக்கரையில் தனது ஓய்வு காலத்தைக் கழிப்பதற்காக அழகிய நகரொன்றை நிர்மாணித்தார். அந்த நகருக்கு அவர் “றுசபா” என்று பெயரிட்டிருந்தார். சிரியாவில் வளர்ந்த ஈத்தமரக் கன்றுகளையும், அழகிய தாவரங்களையும் அங்கு நட்டி அழகுபடுத்தினார்.

நாடளாவிய ரீதியில் கல்வியை வளர்ப்பதற்குத் தேவையான கல்விக்கூடங்களை ஏற்படுத்தினார். அறிஞர்களுக்கும் ஆதரவு வழங்கினார். கவிஞர்கள் நடாத்திய கலையரங்குகளில் கலந்து கொண்டார். முக்கிய நகர்களை இணைக்கக் கூடியதான பாதைகளையும் பாலங்களையும் நிர்மாணித்தார். வழக்கில் இருந்த தபால் கொண்டு செல்லும் “தவள” முறையை விருத்தி செய்தார்.

கேட்போர் மனதைக் கவரக்கூடிய சிறந்த பேச்சாளர். ஆதர வாளர்கள் மீது கருணை காட்டுபவர். எதிரிகளைக் கடுமையாகத் தண்டிக்கும் சுபாவம் உடையவர். இருப்பினும் சமாதான வழி முறையில் அவர்களை எதிர்கொள்ள முடியாதவிடத்து மட்டுமே தண்டிக்கும் வழிமுறையைக் கையாண்டார்.

பொருளாதார வசதிகள் இருந்தபோதும் சுகபோக வாழ்க்கையில் அவர் மூழ்கவில்லை, வீணாகப் பொழுதைக் கழிக்கவுமில்லை. போர் வீரன் ஒருவனுக்கு இருக்கவேண்டிய பண்புகளை அவர் இழக்கவுமில்லை. மஸ்ஜித்களை விட்டும் ஒதுங்கி வாழவுமில்லை. ஜும்ஆ குத்பாவை அவரே நடாத்தி வந்தார். வெண்ணிற ஆடையணிந்து அழகாகக் காட்சி தந்தார்.

### சுல்தான் முதலாம் ஹிஷாம் பின் அப்துர்ரஹ்மான்
### (கி. பி. 788 - 796 / ஹிஜ்ரி 173)

முதலாம் அப்துர்ரஹ்மான் இறப்பதற்கு முன்பே தனது இரண்டாவது மகன் ஹிஷாமை அடுத்த வாரிசாக நியமித்திருந்தார். இவர் அப்துர்ரஹ்மான் ஸ்பெய்னில் குடியேறிய பின்பு விவாகம் புரிந்த

ஸ்பானியப் பெண்ணான ஹலாலா என்பவளின் மகனாவார். கி. பி. 788 இல் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட ஹிஷாம், ஆரம்பத்திலேயே தனது இரு சகோதரர்களால் மேற்கொள்ளப்பட்ட புரட்சிகளை முறியடித்து வெற்றி கண்டார். மேலும், ஆங்காங்கே தோன்றிய கிளர்ச்சிகளையும் அடக்கினார். மார்க்க பக்தி மிக்க இவர் மாலிக் மத்ஹபை அரச மத்ஹபாகப் பிரகடனம் செய்தார். 2 ஆம் உமர் எனப்படும் உமரிப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களைப் போன்ற நற்பண்பு மிக்கவராக இவர் திகழ்ந்தார். தந்தையின் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார். சுமார் எட்டு ஆண்டு கால ஆட்சியின் பின்னர் ஹிஜ்ரி 180 இல் மரணமானார்.

### முதலாம் ஹிஷாமுக்குப் பின் பதவியேற்ற முதலாம் ஹகம்

(கி. பி. 796-822) இரண்டாம் அப்துர்றகுமான் (கி. பி. 822-852) முதலாம் முஹம்மத் (852-886) முன்ஸிர் (886-888) அப்துல்லா (888-912) முதலானோரின் ஆட்சி குறிப்பிட்டுக் காட்டத்தக்க முன்னேற்றங்களை கொண்டிருக்கவில்லை.

### மூன்றாம் அப்துர்ரஹ்மான் (812 - 961 / 275 - 350)

ஸ்பெய்னின் முதல் உமையா கலீபாவாகிய 3 ஆம் அப்துர் ரஹ்மானை உள் நாட்டுக் குழப்பங்கள், வெளி நாட்டுச் சதி முயற்சிகள் என்பவற்றை அடக்கி ஏறக்குறைய 50 வருடங்கள் ஆட்சி செய்தார். ஸ்பெய்னின் வரலாற்றில் மிகச் சிறப்புவாய்ந்த காலமாக இக்காலம் கருதப்படுகின்றது. இவர் இராணுவத்தைச் சீரமைத்து அக்கால இராணுவங்களில் மிகச் சிறந்த இராணுவமாக அதனை மாற்றி யமைத்தார். சிறந்த வரியமைப்பொன்றை ஏற்படுத்தி அரச வருமானத்தை ஸ்திரப்படுத்தினார். பாதைகள், பாலங்கள், கோட்டைகள், கால்வாய்கள், மருத்துவமனைகள், அநாதை இல்லங்கள், வயோதிபர் மடங்கள் முதலானவற்றையும் அமைத்தார். வெளி நாடுகளுடன் நல்லுறவை ஏற்படுத்தினார். குறிப்பாக ஜேர்மனி, பிரான்ஸ், வட ஸ்பெய்ன், ரோம் முதலான நாடுகளுடன் நட்புறவை ஏற்படுத்தினார். ஓர் அங்குல நிலத்தைக்கூட வீணாக்கக்கூடாது என்ற வகையில் விவசாயம், வர்த்தகம், கைத்தொழில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசனத்திட்டத்தை அறிமுகப்படுத்தி ஏராளமான நிலங்களை பயிர்ச்செய்கையில் ஈடுபடுத்தினார். பிடவைக் கைத்தொழில் மிகச் சிறப்பான வளர்ச்சி கண்டிருந்தது. இவரது காலத்தில் குர்துபாவில் மாத்திரம் 30,000க்கும்

மேற்பட்ட நெசவாளர்கள் காணப்பட்டனர். அறிவு, கலை, கலாசார அபிவிருத்திகளில் அதிக கவனம் செலுத்தினார். அறிஞர்கள், தத்துவ ஞானிகள், வைத்தியர்கள் போன்றோர் இவரால் கௌரவிக்கப்பட்டனர். பிற மொழிகளில் இருந்த அறிவியல் நூல்கள் அரபு மொழிக்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டன. இலக்கிய வளர்ச்சியும் குறிப்பிடத் தக்களவு வளர்ச்சி கண்டது. இவர் "அல்-ஸஹ்ரா" என்ற பெயரில் ஒரு புது நகரையும் நிர்மாணித்தார். 40 ஆண்டு கால இடைவெளிக்குள் நிர்மாணிக்கப்பட்ட இந்த நகர் அன்றைய காலப்பிரிவின் அதிசயமாகவே கருதப்பட்டது.

3 ஆம் அப்துர் ரஹ்மானின் ஆட்சியில் ஸ்பெய்னில் நிலவி வந்த வர்க்க, இன வேறுபாடுகள் நீக்கப்பட்டு தேசிய ஒருமைப்பாடு பேணப்பட்டது. ஸ்பெய்னில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் முஸராபிகள் என அழைக்கப்பட்டனர். இவரது நல்லாட்சியினால் சுதேசிகளுள் பலர் இஸ்லாத்தைத் தழுவினர். இவர்கள் முவல்லதூன்கள் என்றழைக்கப் பட்டனர். இவ்வாறாகத் தனதாட்சியில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்ட கலீபா 3ம் அப்துர்ரஹ்மான், சுமார் அரை நூற்றாண்டுகால ஆட்சியின் பின் கி.பி. 961 இல் காலமானார்.

### இரண்டாம் ஹகம் (961 - 976 / 350 - 366)

தந்தை அப்துர்ரஹ்மானைத் தொடர்ந்து அவரது புதல்வர் 2 ஆம் ஹகம் தனது 46 ஆவது வயதில், "அல்- முஸ்தன்ஸிர் பில்லாஹ்" எனும் பட்டப்பெயருடன் ஸ்பெய்னின் அடுத்த கலீபாவாக கி. பி. 961 இல் ஆட்சியில் அமர்ந்தார். இவரது ஆட்சியின்போது கலீபா அப்துர் ரஹ்மானின் காலத்தில் ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருந் தோர் அவற்றை முறித்து விட்டிருந்தனர். குறிப்பாகக் கிறிஸ்தவர்கள் குழப்பம் விளைவித்தனர். தனது இராணுவத் திறனால் அவற்றை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தினார்.

கலீபா ஹகம் சிறந்ததொரு கல்விமானாக இருந்தது மட்டுமன்றி, நூல்களை அதிகம் நேசிப்பவராகவும், பரந்த வாசிப்பாளராகவும் திகழ்ந்தார். அறிவியல் நாகரிக வளர்ச்சி உன்னத நிலையை அடைந்தது. எனவேதான், முஸ்லிம் ஸ்பெய்னின் வரலாற்றில் 2 ஆம் ஹகமின் ஆட்சிக்காலம் அறிவியல் துறையின் பொற்காலம் எனக் குறிப்பிடப் படுகிறது. நாடெங்கிலும் பாடசாலைகள், கல்லூரிகளை நிறுவினார். இலவசக் கல்வி முறை பின்பற்றப்பட்டது. பாடசாலைகளில்லாத, உயர்

கல்லூரிகளில்லாத மாநகரங்களை அன்றைய ஸ்பெய்னில் காண முடியாதிருந்தது. இவரது முயற்சியால் குர்துபாப் பல்கலைக் கழகம் மிகச் சிறந்த வளர்ச்சி கண்டது. முஸ்லிம் நாடுகளில் இருந்து மட்டுமல்லாது ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் கிறிஸ்தவ, யூத மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்றனர். அன்றைய உலகின் மிகப் பெரும் பல்கலைக் கழகமாக குர்துபாப் பல்கலைக்கழகம் திகழ்ந்தது.

புத்தகப் பிரியரான கலீபா இங்கு மிகச் சிறந்த நூலகம் ஒன்று அமைய வழி செய்தார். இந்த நூலகம் சுமார் 4முதல் 6 இலட்சம் நூல்களைக் கொண்டிருந்ததோடு கிடைத்தற்கரிய கையெழுத்துப் பிரதிகளும் அங்கு காணப்பட்டன. கிழக்குலகின் எல்லாப் பாகங்களில் இருந்தும் அறிவியல் கருவூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வழிவகைகளையும் கலீபா செய்தார். இதனால் அன்றைய யுகத்தின் மிகச் சிறந்ததும் பெரியதுமான நூலகமாக குர்துபாப் பல்கலைககழக நூலகம் திகழ்ந்தது. இத்தோடு நின்றுவிடாது நாடெங்கிலும் நூலகங்களை நிறுவினார். கலீபா ஹகம் குர்துபா நகரை மாபெரும் புத்தகச் சந்தை ஒன்றாகவே மாற்றியமைத்தார். இங்கு (சுமார் 20 000) பெரும் எண்ணிக்கையில் புத்தகக் கடைகள் காணப்பட்டன.

கலீபா ஹகம் 15 வருட ஆட்சியின் பின் தனது 61 ஆம் வயதில், கி.பி. 975 இல் மரணமானார். மார்க்கப்பற்று மிக்க இவர் சிறந்ததொரு கல்விமானாக விளங்கிய போதும், இராணுவ நடவடிக்கைகளையும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்றார். குர்துபா மஸ்ஜிதை விசாலப்படுத்தியதோடு நில்லாது, தலை நகரை அழகிய கட்டடங்களால் நிரம்பி வழியச் செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் ஸ்பெய்ன் எல்லாத் துறைகளிலும் தன்னிறைவு கண்டது. ஸ்பானியாவை ஆண்ட மிகச்சிறந்த உமையா கலீபாக்கள் வரிசையில் இறுதியானவராகக் கருதப்படுகின்ற இவரது மறைவோடு புகழ் பூத்த உமையா ஆட்சியும் ஸ்பெய்னில் அஸ்தமித்தது.

### இரண்டாம் ஹிஷாம்

இரண்டாம் ஹகமுக்குப் பின்னர் பலம் பொருந்திய ஆட்சியாளர் எவரும் இல்லாது போயினர். கலீபா ஹகம், தான் உயிருடன் இருக்கும்போதே தனது ஒரேயொரு மகனான ஹிஷாமை அடுத்த வாரிசாக நியமித்தார். தந்தையின் மரணத்தின் பின் மகன் ஹிஷாம் “முஅய்யத் பில்லாஹ்”

எனும் பட்டத்தோடு பதவியேற்றார். கலீபா 2 ஆம் ஹிஷாம் 12 வயதுச் சிறுவராக இருந்தமையால் நிர்வாகத்தை அவரால் திறம்பட நடாத்த முடியவில்லை. எனவே ஏனைய நிர்வாகிகள் ஆட்சியில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்த நிலை உருவாகியது. உண்மையில் இதுவே ஸ்பெய்னில் உமையா ஆட்சி முற்றுப்பெறக் காரணமாக அமைந்தது.

ஸ்பெய்னில் உமையா ஆட்சிக்குப் பின்னர் சிற்றரசுகளின் காலம் ஆரம்பமானது. இக்காலப்பிரிவில் ஸ்பெய்னில் 23 சிற்றரசுகள் தோற்றம் பெற்றன. இப்னு அஹ்மரின் கலைத் திறனை வெளிக்காட்டக்கூடிய புகழ் மிக்க அல்ஹம்ரா மாளிகையும் இக்காலப்பிரிவிலேயே நிறுவப்பட்டது. சுற்றியிருந்த கிறிஸ்தவர்களின் தொடரான படையெடுப்புக்களும் தூண்டிவிடப்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களும் முஸ்லிம்களை ஸ்பெய்னில் வாழவிடாமல் தொல்லைகள் கொடுத்தன. எனவே ஒரு பக்கமாக முஸ்லிம்கள் வெளியேற பிறிதொரு பக்கமாக முஸ்லிம்கள் அங்கிருந்து துரத்தப்பட்டனர். கடைசியாக கி. பி. 1492 ஆம் ஆண்டோடு ஸ்பெய்னுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவு முற்றாகவே அறுந்து போனது.

### முஸ்லிம் ஸ்பெய்னின் வீழ்ச்சிக்கான காரணங்கள்

#### 1. கலீபாக்களின் பலவீனம்

2 ஆம் ஹகமுக்குப் பின்னர் ஆட்சிபீடமேறிய 2 ஆம் ஹிஷாமும் அவரைத் தொடர்ந்து உமையாப் பரம்பரையுடன் நேரடித் தொடர்பற்ற ஆட்சியாளர்களும் ஆட்சி செய்வதற்குப் போதுமான தகுதியைப் பெற்றிருக்கவில்லை.

#### 2. அதிகாரம் கைமாறியமை

2 ஆம் ஹிஷாம் சிறுவராக இருந்தமையால், முன்பு பாதுகாவலராகக் கடமையாற்றிய ஹாஜிப் அல் மன்ஸூருக்கு அதிகாரம் கை மாறியது. இதனால் அரசவைப் பிரபுக்களிடையே பொறாமை தோன்றியது. ஒவ்வொருவரும் பதவிக்கு வர முயன்றனர்.

#### 3. வெளியாரின் தலையீடுகள்

கிறிஸ்தவர்கள் அடிக்கடி தலையிட்டனர். இதனால் உமையா ஆட்சி பலவீனமடைந்தது.

**4. கோத்திரச் சண்டை**

ஸ்பெய்னில் குடியேறியிருந்த அரபுக் கோத்திரங்களிக்கிடையே ஏற்பட்ட பகைமையும் போராட்டங்களும்.

இவ்வாறான காரணங்களால் முஸ்லிம் ஸ்பெய்னில் உமையாக்களின் ஆதிக்கம் வீழ்ச்சியுற்று அவர்களுக்குள்ளேயே சில சிற்றரசுகள் தோற்றம் பெற்றன.

## ஆ. முகலாயர் ஆட்சிக்காலம் (கி. பி. 1526-1858, ஹி. 932-1274)

புகழ்மிக்கதோர் ஆட்சி மரபினை இந்தியாவில் நிலைநாட்டிய பெருமை முகலாயரையே சாரும். இந்திய வரலாற்றில் முஸ்லிம்களது ஆட்சியின் பொற்காலமாக முகலாயரது ஆட்சிக்காலம் கருதப்படுகிறது. சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்தியாவை ஆட்சி செய்த இவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து இந்திய உபகண்டத்தில் பெரும் பகுதியை தமதாட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள். இவர்கள் இந்தியாவின் அரசியல், பொருளாதார, சமய, சமூக மாற்றங்களுக்குத் தமது பெரும் பங்களிப்பைச் செய்துள்ளனர்.

துருக்கி-பாரசீக அல்லது துருக்கி-மங்கோலிய திமுரிட் தலைவனான பாபர், 1526 ஆம் ஆண்டில் கடைசி டில்லி சுல்தானான இப்ராஹிம் லோடி என்பவரை, முதலாவது பானிபட் போரில் தோற்கடித்து முகலாய அரசைத் தோற்றுவித்தார். "முகல்" என்பது மங்கோலியர் என்பதற்கான பாரசீக மொழிச் சொல்லாகும். இவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட மங்கோலியர் பரம்பரை முஸ்லிம்களாவர்.

இந்தியாவில் இஸ்லாமிய ஷரீஅத் அமைப்பிலான ஆட்சியை முகலாயர் தமதாட்சிக் காலத்தில் ஏற்படுத்தினர். இவர்களது ஆட்சியின் கீழ் இவர்கள் பின்பற்றிய சமயப் பொறுமை காரணமாக மக்கள் சுதந்திரமாக வாழ்ந்தனர். நீண்ட கால ஆட்சியொன்றை முகலாயர் தொடர்வதற்கு அவர்கள் பின்பற்றிய (சமய) மத சகிப்புத் தன்மையே காரணமாக அமைந்தது எனலாம். இவர்களது இராணுவத்தில் சேர்ந்திருந்த முஸ்லிமல்லாதோருக்கு ஜிஸ்யாவிலிருந்தும் விலக்களிக்கப் பட்டிருந்தது.

முகலாயராட்சியில் இஸ்லாமிய கலாசார முறை நன்கு பேணப்பட்டது. முஸ்லிம்கள் மட்டுமன்றி முஸ்லிமல்லாதோரும் கலாசார நடைமுறைகளிலும் பண்பாட்டு அம்சங்களிலும் இஸ்லாமிய நடைமுறைகளையும் பின்பற்றியது மட்டுமன்றி அதனை ஒரு கௌரவமாகவும் கருதினர்.

சாதிப்பாகுபாடு நிறைந்திருந்த இந்தியாவில் சமத்துவத்தை நிலை நாட்ட முகலாயர் சட்டரீதியான முயற்சிகளை மேற்கொண்டனர். இதனால் கவரப்பட்டுத்தான் இந்துக்களில் அதிகமானோர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர்.

**முகலாயப் பேரரசர்கள்**

| | |
|---|---|
| பாபர் | 1526 - 1530 (47) |
| ஹுமாயூன் | 1530 - 1540, 1555-1556 (48) |
| அக்பர் | 1556 - 1605 (63) |
| ஜஹாங்கீர் | 1605 - 1627 (58) |
| ஷாஹ்ஜஹான் | 1627 - 1658 - 1666 (74) |
| ஔரங்கஸீப் | 1658 - 1707 (89) |

## பாபர் (கி. பி. 1526 - 1530 / ஹி. 932 - 937)

துருக்கி சுல்தான் சுலைமானும், பிரான்ஸை 1 ஆம் ஃபிரான்சிஸ்ஸும், ஜெர்மனியை 5 ஆம் சார்ல்ஸ்ஸும், இங்கிலாந்தை 8 ஆம் ஹென்றியும் அரசோச்சிய காலத்தில் இந்தியாவை ஆட்சி செய்தவரே பாபராவார். இவர்களோடு பாபரை ஒப்பிடும்போது பாபர் மிகச் சிறந்த வீரராகவும் கலைஞராகவும் அறிஞராகவும் விளங்குகிறார். இதனால்தான் வின்ஸ்ஸன், ஸ்மித் போன்றவர்கள் இவரை 16 ஆம் நூற்றாண்டில் ஆசியாவிலேயே தலை சிறந்த ஆட்சியாளர் என சிலாகித்துக் கூறுகின்றனர். மனிதாபிமானம் மிக்க இவர் தனது நண்பர்களைப் போற்றினார். உறவினர்களை நல்வழிப்படுத்தினார். இந்தியாவின் மீது ஆதிக்கம் செலுத்திச் சென்ற முன்னோர்களைப் போலல்லாமல் நிரந்தர ஆட்சி அமைத்து மக்களுக்கு நிலையான வாழ்வு தந்தார். அவரது சகோதரர் நஸீர் மிர்ஸா அவருக்குப் பல தொல்லைகள் தந்த போதிலும் பாபர் தன்னம்பிக்கையோடு செயலாற்றினார். எது நடப்பினும் அது ஆண்டவன்

செயல் என்று இருப்பார். தோல்வியைக் கண்டு துவண்டு விடாமலும் வெற்றியைக் கண்டு சோம்பியிராமலும் தன் செயல்களை சீர்பட நடத்தினார்.

இவர், 1483 இல் பர்கானாவின் ஆட்சியாளராக இருந்த உமர்ஷேக்கின் புத்திரராவார். துருக்கிய மொழிச் சொல்லான ”பாபர்” எனும் பதத்திற்கு புலி என்பது பொருள். பாபரும் தன் பெயரின் பொருளுக்கேற்ற வகையில் வலிமை மிக்கவராகவும் துணிவுள்ள வராகவும் விளங்கினார். இவர் மத்தியாசியாவில் வாழ்ந்த இரு பெரும் போர் வீரர்களான ஜங்கீஸ்கான், தைமூர் முதலானவர்களின் வழித்தோன்றலாவார். பாபரின் தந்தை அகால மரணமடைந்ததால் 11 வயதிலேயே பர்கானாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானார்.

இவர் முதலில் சமர்க்கந்த் ஆட்சியாளராக இருந்து அதை இழந்த பின்னர் 1504 இல் காபூல் பிரதேசத்தின் ஆட்சியாளரானார். இக்காலை டில்லி இப்ராஹீம் லோடிக்கு எதிராகப் படை நடாத்திச் சென்று லோடியைத் தோற்கடித்து இந்தியாவின் ஆட்சியாளரானார். இப்படையெடுப்பு முதலாம் பனிபட் படையெடுப்பு எனப்படுகிறது. இப்படையெடுப்புக்கு அப்பாலும் இவரது காலத்தில் பல படயெடுப்புக்கள் இடம்பெற்றன. 1 ஆம் பனிபட் போர் (1526), கான்வாப் போர் (1527), சந்தேரிப் போர், கோக்ரா நதிப் போர் (1529) முதலாம் போர்கள் பாபர் காலத்து முக்கிய போர்களாகும்.

பாபர் பன்முக ஆளுமை படைத்த ஒருவராக விளங்கினார். கலைஞர், கவிஞர், இலக்கியவாதி, பேச்சாளர், கட்டடக்கலை நிபுணர் என அவரது ஆளுமையின் தளம் பரந்து நின்றது. இளமையில் அனுபவித்த துன்பங்கள் காரணமாக இரக்கம், அன்பு, வீரம், சகிப்புத் தன்மை ஆகிய குணங்கள் பாபரிடம் குடிகொண்டன. பாபரின் வெற்றிகளுக்குப் பின்வருவனவற்றைக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

1. நன்கு பயிற்றப்பட்டிருந்த அவரது இராணுவம் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணியதோடு இந்தியாவைக் கைப்பற்ற வேண்டும் என்ற விடயத்தில் ஒருமுகப்பட்டிருந்தமை.
2. நவீன ரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் திறனைப் பெற்றிருந்தமை.
3. பாபரே தன்னளவில் சிறந்ததொரு படைத் தளபதியாகவும் போர்-வீரராகவும் யுத்த அனுபவம் மிக்கவராகவும் காணப்பட்டமை.

தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒழுங்கையும் அமைதியையும் நிலை நாட்டிய பாபர், நாட்டு மக்களோடு மிக நல்ல முறையில் நடந்து கொண்டார். மக்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாத்தார். திருடர்களையும் வழிப்பறிக்காரர்களையும் ஒடுக்கிய அவர், குறு நில மன்னர்களின் துன்புறுத்தல்களில் இருந்தும் மக்களைக் காத்தார்.

பாபர் தனது வரலாற்றை "பாபர் நாமா" என்ற பெயரில் துருக்கி மொழியில் எழுதினார். ஃபார்ஸியிலும் துருக்கி மொழியிலும் போர், காதல், மது போன்ற தலைப்புக்களில் கவிதைகளும் எழுதினார். இவர் ஹனஃபி மத்ஹபைத் தழுவி சட்ட நூலொன்றையும் எழுதியுள்ளார்.

பாபர் ஓய்வின்றிப் பல போர்களில் தொடராக ஈடுபட்டதாலும் இந்தியாவின் சுவாத்திய நிலை தனது உடல் நிலைக்குச் சாதகமாக அமையாததாலும் காலப்போக்கில் இவரது உடல் ஆரோக்கியம் குன்றியது. இவ்வேளை மகன் ஹுமாயூனுக்கு ஏற்பட்டிருந்த குணப்படுத்த முடியாத நோய் கண்டு மேலும் மனம் வருந்தினார். ஏலவே நோய்வாய்ப்பட்டிருந்த பாபரின் உடல் நிலை இதனால் மேலும் மோசமாகியது. இறுதியாக பாபருக்கு ஏற்பட்ட வயிற்றுக் கோளாறின் காரணமாக 1530 இல் அவர் மரணமானார். பாபர் மரணப் படுக்கையில் இருந்தபோது தனது மகன் ஹுமாயூனை அடுத்த வாரிசாக நியமனம் செய்தார்.

## ஹுமாயூன் (1530 - 1556 / 937 - 963)

இந்தியாவில் முகலாயப் பேரரசை நிறுவிய பாபரின் மூத்த மகனாகிய இவரது இயற் பெயர் நாஸிருத்தீன் ஹுமாயூன் என்பதாகும். 1508 இல் காபூலில் பிறந்த இவரது தாயின் பெயர் மஹிம் பேகம் என்பதாகும். சிறு வயதிலேயே அரபு, ஃபார்ஸீ, துருக்கி முதலாம் மொழிகளையும் சோதிடம், கணிதம் போன்ற கலைகளையும் கற்றுத் தேர்ந்தார்.

பாபருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற ஹுமாயூன், ஷாஹ் நாஸீருத்தீன் ஹுமாயூன் எனும் பெயருடன் 1530 இல் ஆக்ராவில் மகுடம் சூடிக்கொண்டார். இவரது ஆட்சியைக் கவிழ்க்க இவரின் உடன் பிறந்தவர்களும் ராஜபுத்திரர்களும் ஆப்கானியரும் முனைப்புக் காட்டினர். அவருக்கெதிராகப் போர்களும் சதிகளும் புரட்சிகளும் தொடர்ந்தன. எனினும் தனது தந்தையின், "உடன் பிறந்தவர்களோடு நல்ல முறையில்

நடந்து கொள்ள வேண்டுமென்ற" இறுதி அறிவுரையை கடைசிவரை காப்பாற்றினார். அந்தவகையில் தனது சகோதரர்களை ஆளுநர் பதவிகளில் அமர்த்தினார். எடுத்துக் காட்டாக, சகோதரர் கம்ரானிடம் காபூலும் கந்தகாரும் ஒப்படைக்கப்பட்டன. பிறிதொரு சகோதரரான ஹிந்தாவிடம் மேவாத் போன்ற பகுதிகளைக் கையளித்தார். இத்தனை செய்தும் அவர்கள் ஹமாயூனுக்குத் துரோகமே இழைத்தனர்.

ஆட்சிக்கு வந்ததும் ஹுமாயூனுக்கு எதிராகப் பல எதிர்ப்புக்கள் தோன்றின. அவற்றைச் சரியான திட்டங்களின்றி எதிர்க்க முற்பட்டார். எதிராளிகளை அன்புக்கரம் கொண்டு அரவணைத்தார். உண்மையில் இதுவே அவரது வீழ்ச்சிக்கும் காரணமாக அமைந்தது.

1540 இல் கன்னோசிப் எனும் போரில் ஷெர்ஷாஹ் என்பவர் ஹமாயூனைத் தோற்கடித்ததால் அவர் ஆட்சியை இழந்தார். 1555 இல் ஆட்சியை மீண்டும் கைப்பற்றும் வரை ஊரூராக உதவி கேட்டு அலைந்து திரிந்தார். இக்காலங்களில் (1540 - 1555) அவரது சகோதரர்கள்கூட அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் பாரசீகரின் உதவியோடு மீண்டும் டில்லியைக் கைப்பற்றினார். பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஹுமாயூன் ஆட்சியை மீண்டும் கைப்பற்றியபோதும் அரச வாழ்க்கையை அனுபவிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டவில்லை. 1556 இல் ஒரு நாள் வாசிகசாலையில் இருந்து மாடிப்படிகளில் இறங்கிக் கொண்டிருந்தபோது நினைவிழந்து கீழே விழுந்தார். மறு நாள் மரணமானார். இவர் மரணித்தபோது மகன் அக்பர் போர் முகாமொன்றில் வெகு தொலைவில் இருந்தார். அக்பர் வந்து சேரும் வரை சுமார் 17 நாட்கள் ஹமாயூனின் மரணம் வெளி உலகிற்குத் தெரியாதிருந்தது. அக்பர் வந்து சேர்ந்த பிற்பாடே அவர் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

சுமார் கால் நூற்றாண்டு காலம் இந்தியாவை ஆட்சி செய்துள்ள இவர் ஐந்தாண்டு காலம் பல நாடுகளுக்கு அலைந்து திரிந்து நாடோடி வாழ்க்கை வாழ்ந்தார். ஆட்சிக்காலம் முழுவதும் சோதனை மிகுந்த காலமாக அமைந்திருந்ததே தவிர நிலையான - உறுதியான - முன்னேற்றம் தரும் ஆட்சியொன்றை அவரால் அளிக்க முடியவில்லை. ஆயினும், அவர் கலை, இலக்கியத் துறையின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். கட்டடக் கலையும் ஓவியக் கலையும் இவரது காலத்தில் சிறப்புற்று விளங்கின. கட்டடக் கலைஞர்களும் ஓவியர்களும் பாரசீகத்திலிருந்து அழைத்துவரப்பட்டனர்.

ஹுமாயூன் அன்புள்ளமும் ஈகைக் குணமும் மிகுந்தவர். பிறரை மன்னிக்கும் தயாள குணம் படைத்த இவர், எவருக்கும் தீங்கு செய்யா உள்ளம் படைத்தவராகவும் காணப்பட்டார். இருப்பினும், அவரது வாழ்க்கை, போராட்டம் மிக்கதாகவே அமைந்திருந்தது. அப்போராட்டங் கள் முடிவுறும் தருணத்தில் அவரது வாழ்வும் முடிந்து போனது.

ஹுமாயூன் இந்தியாவுக்கு வழங்கிவிட்டுச் சென்ற அன்பளிப்புக்களுள் பெறுமதி மிக்கதும் போற்றுதலுக்குரியதுமான அன்பளிப்பாக அவரையடுத்து ஆட்சிபீடமேறிய மாமன்னர் அக்பர் கருதப்படுகின்றார். பகைவர்களையும் நண்பர்களாக்க முனைந்த இவரை வரலாற் றாசிரியர்கள் பண்பட்ட ஒரு மனிதர் எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

## அக்பர் (1556 - 1605 / 963 - 1014)

இந்தியாவில் அரசாண்ட சிறப்புமிக்க அரசர்களுள் அக்பரும் ஒருவர். அளப்பரிய அல்லல்களுக்கிடையில் பிறந்து வளர்ந்து, படிக்காத மேதையாகி, வீரனாகவும் விவேகியாகவும் வாழ்ந்து, பேரரசு ஒன்றை அமைத்து எம்மதமும் சம்மதம் என்ற சுலோகத்துடன் ஆட்சி நடாத்திய ஒருவர் இவர். இந்தியாவிலிருந்த இரு பெரும் மதங்களான இந்து மதத்தையும் இஸ்லாத்தையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைந்து, காலமெல்லாம் இருந்துவந்த மதப் பூசல்களுக்கு முடிவு காண முயன்ற விந்தை மனிதர் இவர். களத்தில் தோல்வியே கண்டிராதவர். அவரது சீரிய ஆட்சி முறையின் சுவடுகளை முகலாயருக்குப் பின் வந்த ஆங்கிலேயரின் ஆட்சி முறையிலும் காணலாம். அக்பரின் ஆட்சியில் மத பேதமின்றிப் பதவிகள் வழங்கப்பட்டன. எல்லா மதத்தினரையும் பின்னிப் பிணைத்து வலிமைமிக்க பேரரசொன்றை நிறுவிய பெருமை அக்பரையே சாரும். அக்பர் நிலவரி நிர்வாகத்திலும் சமூகத்திலும் செய்த சீர்திருத்தங்கள் அவருக்கு வரலாற்றில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றுத் தந்தன. இவரது அரவணைப்பில் கலைகள் வளர்ந்தன. கற்றோர் களிப்புற்றனர். முஸ்லிம்கள் இந்தியாவில் காலூன்றிய நாள் முதல் அவர்களது ஆட்சி முடிவடையும் வரை அக்பரைப் போன்ற ஒரு மாமன்னர் தோன்றவில்லை எனலாம்.

அக்பரின் தந்தை முகலாயப் பேரரசர் ஹுமாயூன் ஆவார். ஹுமாயூன் ஆட்சியை இழந்து சிந்துவில் அலைந்து கொண்டிருந்த போது அப்பிரதேசத்தில் இருந்த அமர்கோட் எனும் சிற்றூரில் கி. பி. 1542 இல் அக்பர் பிறந்தார். இளமையில் புத்தகப் படிப்பு

அக்பருக்கு வேம்பாய்க் கசந்தது. பாரசீக அறிஞர் அப்துல் லதீப் என்பவர் அவருக்கு முழு நேர ஆசிரியராக நியமிக்கப்பட்டபோதும் இவர் படிப்பில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை. மாறாக குதிரைச் சவாரியிலும் அம்பெய்தல், வேட்டையாடுதல் முதலானவற்றிலும் அலாதிப் பிரியம் காட்டினார். இயல்பிலேயே இவர் சிறந்த அறிவுக்கூர்மையையும் நினைவாற்றலையும் பெற்றிருந்தார்.

தந்தை ஹுமாயூனின் மரணத்தையடுத்து அப்போது 13 வயது மட்டுமே நிரம்பியிருந்த அக்பர் ஆக்ராவில் வைத்து பாதுஷாவாக 1556 இல் முடிசூட்டப்பட்டார். இவர் சிறுவராக இருந்ததால் ஆரம்பத்தில் ஆட்சிப் பொறுப்பு முழுவதும் அக்பரின் உதவியாளராக இருந்த பைராம்கானிடம் ஒப்படைக்கப்பட்டது. வயது 18 ஆனதும் ஆட்சிப் பொறுப்பைக் கையிலெடுக்க விரும்பியதால் பைராம்கானுக்கும் அக்பருக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியது. தனது ஆப்கானிய உதவியாளர் ஒருவரின் துணை கொண்டு பைராம்கானைத் தீர்த்துக் கட்டி, ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் தனதாக்கிக் கொண்டார்.

ஆட்சியைப் பலப்படுத்திய அக்பர், பின்னர் தனது சாம்ராஜ்யத்தின் எல்லையை விஸ்தரிக்க விரும்பினார். முதற்கட்டமாக குவாலியர் கோட்டை மீது படை நடாத்திச் சென்று அதனைத் தன்வசப்படுத்திக் கொண்டார். தொடர்ந்து மாளவம் (1561), கோண்டுவானா (1564), சிதூர் (1567), குஜ்ராத் (1572), கிழக்கு வங்கம் (1574), மேவார் (1576), காஷ்மீர் (1586) போன்ற பல பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டு அக்பரின் ஆட்சியின் கீழ் கொண்டுவரப்பட்டன. இதன் பின்னரும் தக்காணம், அஹ்மத் நகர், காந்தேஷ் முதலாம் பகுதிகள் அக்பரால் கைப்பற்றப்பட்டன.

ஆட்சியைப் பலப்படுத்தும் தனது திட்டத்தின் அடுத்த கட்டமாக இராஜபுத்திரர்களுக்கும் தனக்கும் இடையிலான உறவைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடலானார். இந்தியாவில் முகலாயர்களின் ஆட்சி வேரூன்ற வேண்டுமானால் இந்து வீரர்களான இராஜபுத்திரர்களின் உறவும் ஒத்துழைப்பும் அவசியம் என்பதை அக்பர் நன்கு உணர்ந்திருந்தார். எனவே அக்பர் இராஜ புத்திரர்களோடு மென்மையாக நடந்து கொண்டார். இந்துக்களைப் பகைத்துக் கொள்ளாமல் அவர்களை அரவணைக்கவும் செய்தார். 1562 இல் தனதாட்சிக்குப் பணிந்த ஜெய்ப்பூர் அரசர் பீஹர்மாலின் புத்திரியைத் தனது மனைவியாக்கிக் கொண்டார். இவரின் புத்திரர்தான் இளவரசர் ஸலீம் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னரும் தனக்குப் பணிந்த ஆட்சியாளர்களின் புத்திரிகளை மணந்து கொண்டதோடு மட்டுமன்றித் தனது உறவினர்களையும் இந்துப் பெண்களை மணக்கச் செய்தார். இராஜபுத்திரர்கள் பலரை அக்பர் தனது நிர்வாகத்தில் உயர் பதவிகளிலும் அமர்த்திக் கொண்டார். இத்தகைய திருமணங்கள் ஆட்சிக்கு நன்மை பயப்பதாகவே அமைந்தன.

மன்னர் அக்பரது இந்த இராஜ புத்திரக் கொள்கை இந்து முஸ்லிம் பண்பாட்டு ஒருமுகப்பாட்டுக்கு வழிகோலியது. கருத்துப் பரிமாற்றமும் கலாசாரப் பரிமாற்றமும் தடையின்றி இடம்பெற்றன. இந்துக்கள் உருது, பாரசீகம் போன்ற மொழிகளைக் கற்றனர். முஸ்லிம்களும் சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றனர். இந்நடைமுறை நாளடைவில் இந்து மதக் கொள்கைகளின்பால் அக்பரை ஈர்க்கச் செய்தது. தனது இந்துமத மனைவியருக்கு அவர்களது சமயச் சடங்குகளையும் விழாக்களையும் மேற்கொள்ள இடமளித்ததோடு நில்லாது தானும் அம்மதத்தின் ஆசாரங்கள் பலவற்றையும் மேற்கொண்டார். நாள்தோறும் தனது ஜன்னலருகே நின்று பொது மக்களுக்கு தரிசனமளித்தார். தீபாவளி, சிவராத்திரி போன்ற பண்டிகைகளை இந்துக்களோடு சேர்ந்து கொண்டாடினார். நெற்றியில் திலகமிடுவதையும் வழக்காக்கிக் கொண்டார். இந்துக்களைப் போலவே தலையில் குடுமி வைத்து தலைப்பாகை கட்டிக்கொண்ட அக்பர், இந்து மத ஆசாரப்படி காலில் வீழ்ந்து வணங்கும் வழக்கத்திற்கும் தனது அவையில் அனுமதி வழங்கியிருந்தார்.

அக்பர் புகுத்திய புதிய சமயக் கொள்கையே “தீனே இலாஹீ” (இறை ஒருமைப்பாடு) என்பதாகும். நாடு முழுவதற்குமான ஒரு பொதுச் சமயம் தேவை எனும் கருத்தியலை மையப்படுத்தியதாகவே அக்பரின் இக்கொள்கை அமைந்தது. “வஹ்ததுல் வுஜூத்” சிந்தனைத் தாக்கத்துக்கு உட்பட்டிருந்த ஜிஸ்திய்யாத் தரீக்காவின் கருத்தியலால் அக்பர் கவரப்பட்டிருந்ததன் விளைவாகவே இந்த “தீனே இலாஹீ” சிந்தனை அவருள் கருக்கொண்டதென்பர்.

அக்பர் தனது பாட்டனைப்போலவே நெஞ்சுரம்மிக்க ஒரு கடமை வீரராகத் திகழ்ந்தார். இளமை முதல் போர்களிலும் வேட்டையாடுவதிலும் ஈடுபாடு காட்டியதால் அவர் மிகச் சிறந்த உடற்பலத்தைப் பெற்றிருந்தார். வீரத்தில் மாவீரன் அலக்ஸாண்டருக்கு ஒப்பிடப்பட்டார். கடினமான ஒரு பணியைக்கூட விருப்போடு ஏற்றுக்கொள்வது அவரது இயல்பாக இருந்தது. ஒரு சமயம் அஜ்மீருக்கும் ஆக்ராவுக்கும்

இடையிலான 240 மைல் தூரத்தை சரியாக ஒரே நாளில் சவாரி மூலம் சென்று முடித்தார்.

படியா மேதையான அக்பருக்கு கேள்வி ஞானமே அதிகமிருந்தது. அவரிடம் காணப்பட்ட இந்த இயல்பான ஞானம்தான் அவரை மெய்ப்பொருள் காணவும் வைத்தது.

எல்லா மன்னர்களையும் போலவே இவரும் இந்தியக் கட்டடக் கலை வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்தார். தனது மகன் ஸலீமின் பிறப்பையொட்டி ஆக்ராவில் 7 மைல் சுற்றளவு கொண்ட, மூன்று பக்கங்கள் சுவரால் சூழப்பட்ட ஒரு சிறு நகரை நிருமணித்தார். ராணி ஜோத்பாய் மாளிகை, பீர்பால் இல்லம், தீவானி காஸ், செங்கோட்டை, தீவனே ஆம், யானை வாசல், ஹிரான் மினார், லாகூர் கோட்டை, அலகாபாத் கோட்டை முதலியன அக்பரின் கட்டடக் கலை ஆர்வத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

அக்பர் மேற்கொண்ட சீர்திருத்தங்களுள் சமூக சீர்திருத்தங்களும் முக்கியமானவை. உடன்கட்டையேறும் மரபைப் பெண்கள் மீது திணிப்பதைத் தடுத்தார். குழந்தைத் திருமணத்தினைத் தடை செய்த அவர், திருமணத்தில் கணவன் - மனைவியின் இசைவு கட்டாயமானது என வலியுறுத்தியதோடு நில்லாது, திருமண வயதை ஆண்களுக்கு 16 எனவும் பெண்களுக்கு 14 எனவும் நிருணயித்தார். பிள்ளைப் பேறு இல்லாதவர்களுக்கே பலதார மணம் செய்ய அனுமதித்த அக்பர், பல மனைவியரைக் கொண்டிருந்தார் என்பது நோக்கத்தக்கது.

கல்வித்துறையிலும் இவர் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பாடசாலைக் கல்வித் திட்டத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தார். அதன் முதற் கட்டமாக பண்டைய இலக்கிய நூல்களைப் பாடசாலை களில் கற்பிக்க வழி செய்ததோடு கணிதம், மருத்துவம், வானியல், வரலாறு, மனைப் பொருளியல் முதலான பாடங்களைப் போதிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

ஆன்மீகத்தைப் பொறுத்தவரை அக்பர் அசோகரோடு ஒப்பிடப் படுகிறார். சமய விவாதங்களில் கலந்து கொண்டு பரம் பொருள் ஒன்றுதான் என்பதை வலியுறுத்தினார். மக்களிடையே சமய ரீதியாக

ஏற்படும் பூசல்களுக்கு இறைவன் பற்றிய அறிவின்மையே காரண மென்றார். சமய சார்பற்ற சமூக அமைப்பொன்றைத் தோற்றுவிக்கும் பணியில் அவர் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் புரட்சிகரமானவை. இவரது சிந்தனைப் போக்குகள் ஷரீஅத்துக்கு முரணாக அமைந்தமை யால், அக்பர் மார்க்க மேதைகளால் விமர்சிக்கக்கப்பட்டார்.

சுமார் 50 வருடகால ஆட்சியின் பின்னர் மன்னர் அக்பர் தனது 63ம் வயதில் காலமானார். இவரது அடக்கஸ்தலம் ஆக்ராவிலுள்ள சிக்கந்தரா எனுமிடத்தில் அமையப் பெற்றுள்ளது.

## ஜஹாங்கீர் (1605 - 1627 / 1014 - 1036)

அக்பர் இறக்கும்போது தனது புத்திரர் ஸலீம்தான் தனக்குப் பின்னர் ஆட்சியாளராக வரவேண்டுமென விரும்பினார். இதன்படி 1605 இல் (ஒக்டோபர் 21)நூருத்தீன் முஹம்மத் ஜஹாங்கீர் பாதுஷா காழி எனும் பட்டப்பெயரோடு இவர் ஆட்சியில் அமர்ந்தார். ஜஹாங்கீர் என்ற பாரசீகப் பதத்திற்கு உலகைக் கைப்பற்றி ஆள்பவன் என்பது பொருளாகும்.

1569 இல் பிறந்த இவர் இளம் பராயத்திலேயே பாரசீகம், துருக்கி, ஹிந்தி முதலாம் மொழிகளை விரும்பிக் கற்றார். இளமையிலேயே இலக்கியம், கணிதம், புவியியல், உயிரியல், இசை, ஓவியம், தாவரவியல் முதலானவற்றை முறையாகக் கற்றுத் தேர்ந்தார். ஃபைராம்கானின் மகன் அப்துர்ரஹீம் போன்ற திறமை மிக்க ஆசான்களிடம் கல்வி பயின்றார். இவரிடம் நற்குணங்கள் குடிகொண்டிருந்தது போலவே தீய குணங்களும் குடிகொண்டிருந்தன. 17 வயதிலேயே ஜஹாங்கீர் குடிப்பழக்கத்துக்கு அடிமையானார். சிற்றின்ப ஆசையில் மூழ்கித் திளைத்தார். ஓயாத குடியும் ஒழியாத சிற்றின்ப நாட்டமும் தனது தந்தை அக்பரிடமிருந்து பெற்றிருந்த உடற்கட்டை நிலைகுலையச் செய்தன. இவர் தனது இறுதிக் காலத்தில் அதிகாரத்தை இழந்து, அவரது அழகிய மனைவி நூர்ஜஹானின் கைகளில் ஒரு பொம்மை போலவே செயற்பட்டு வந்தார்.

பதவிக்கு வந்த ஜஹாங்கீர் ஆரம்பமாகப் பல சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவற்றுள் பன்னிரு கட்டளைகள் (துஸ்தூருல் அமல்) என்ற பெயரில் அவர் வெளியிட்ட அறிக்கை

முக்கியமானதாகும். இதற்கு மேலாக அவர் ஆற்றிய பணிகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

1. கைதிகளை விடுதலை செய்தார்.
2. அவரது பெயர் பொறிக்கப்பட்டு, நாணயங்கள் வெளியிடப்பட்டன.
3. நீதி வழங்குவதில் அதிக கவனம் செலுத்தினார்.
4. ஆக்ரா கோட்டையில் ஓர் ஆராய்ச்சி மணியைத் தொங்கி விட்டார்.

பொற் சங்கிலியொன்று அந்த மணியோடு இணைக்கப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் அந்தப் பொற் சங்கிலியை அசைத்து மணியோசை செய்தால், அரசர் நேரில் வந்து அவர்தம் குறைகளைத் தீர்த்து வைத்து நீதி வழங்குவார்.

முன்னைய முகலாய மன்னர்களின் காலத்தில் போலவே ஜஹாங்கீரின் காலத்திலும் பல்வேறு படையெடுப்புக்கள் இடம்பெற்றன. அவற்றுள் கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் இடம் பெற்ற படையெடுப்புக்கள் முக்கியமானவை.

1. வங்காளம் (1612)
2. மேவார் படயெடுப்பு (1614)
3. தக்காணத்தின் மீதான படையெடுப்புக்கள் (1608 - 1617)
4. காங்காரா (1620)

இவ்வளவு வெற்றிகளுக்கு மத்தியில் ஏற்கெனவே ஹுமாயூன் காலத்தில் கைநழுவி, அக்பரால் மீண்டும் கைப்பற்றப்பட்டிருந்த கந்தகார் பிரதேசம் இவரது காலத்தில் மீண்டும் கை நழுவிப் போனது. இவரது கட்டளையை ஏற்று இவரது மகன் குர்ரம் கந்தகார்மீது படையெடுப்பு மேற்கொள்ளாததே இதற்குக் காரணமாகும். இவரது மூத்த மகன் குஸ்ரூ இவரை எதிர்த்துக் கலகம் செய்தபோது மகனின் எதிர்ப்பை வெற்றிகரமாக முறியடித்தார்.

உல்லாசப் பிரியரான ஜஹாங்கீர் சுகபோகங்களில் மூழ்கித் திழைத்தார். இதனால் இவரது காதல் மனைவி நூர்ஜஹானே ஆட்சியை நடாத்தி வந்தார். நூர்ஜஹான் தனது கணவனை பொம்மையாக்கி அதிகாரம் முழுவதையும் தனதாக்கிக் கொண்டார். இதன் மூலம் தன்

உறவினர்களை உயர் பதவிகளில் அமர்த்தினாள். தன் சகோதரனுக்கு ஆஸப்கான் எனப் பட்டம் சூட்டி அரசவையில் அவருக்கு முக்கிய இடம் கொடுத்தார். நூர்ஜஹானின் தந்தை கியாஸ்பேக்கும் அரசவையில் முக்கிய செல்வாக்குப் பெற்றார். இக்காலத்துப் பெண்கள் போதியளவு உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வாழ்ந்தனர். கலைத்துறை வளர்ச்சிக்கு ஊக்குவிப்பு வழங்கிய இவர், பாரசீகப் பாடல்களைத் தானே இயற்றிப் பாடினார். எல்லையற்ற அதிகாரங்களோடு நடந்து கொண்டதால் குர்ரம் புரட்சி செய்தார்.

ஜஹாங்கீர் அளவுக்கு மீறி மதுவருந்தியதால் உடல் நலம் குன்றி நோய்வாய்ப்பட்டார். ஓய்வுக்காக காஷ்மீர் சென்றார். அங்கு கி. பி. 1627 இல் காலமானார். மனைவி நூர்ஜஹான் 1645 இல் காலமானார்.

## ஷாஹ்ஜஹான் (1627 - 1658 / 1037 - 1067)

முகலாயப் பேரரசர் ஜஹாங்கீரின் மூன்றாவது புதல்வரான இவர் கி.பி.1592/3ல் லாகூரில் பிறந்தார். தாயார் பெயர் பல்மதி - ராஜா உதை சிங்கின் மகள். இவரது இயற் பெயர் மிர்ஸா குர்ரம் என்பதாகும். இவர் அக்பரின் முகச்சாயலைப் பெற்றிருந்தார். இளமையில் இவர் மீது ஜஹாங்கீர் அதிக அன்பு செலுத்தியதோடு இவரைத் திருப்திப்படுத்த எதை வேண்டுமானாலும் செய்து வந்தார். பாரசீக மொழியில் ஆர்வம் காட்டிய ஷாஹ்ஜஹான் அரசியல், சமயம், மருத்துவம் முதலாம் துறைகளை விரும்பிக் கற்றார். 1610 இல் மீர்சா எனும் பெண்ணையும், 1612 இல் அர்ஜுமந்த் பானு பேகம் எனும் பெண்ணையும் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மேலதிகமாகத் தனது அந்தப்புரத்தில் இருந்த பல பெண்கள் ஷாஹ்ஜஹானின் நெஞ்சத்தில் உலா வந்தனர்.

இவர் ஆட்சிக்கு வருவதை விரும்பாத இவரது எதிரிகள் இவருக்கெதிராகப் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொண்டனர். இவரின் செல்வாக்கைக் குலைக்க நூர்ஜஹான் செய்த சதிகளும் முறியடிக்கப் பட்டன. எந்த சலசலப்புக்கும் அஞ்சாத பனங்காட்டு நரிபோல திடமான உள்ளத்தோடு போராடி சகல எதிர்ப்புக்களையும் வெற்றி கொண்டவராய், 1628 இல் அபுல் முஸாபிர் ஷஹாபுத்தீன் முஹம்மது ஷாஹ்ஜஹான் அனும் பட்டத்தோடு ஆட்சியில் அமர்ந்தார்.

ஷாஹ்ஜஹானின் ஆட்சிக் காலத்தை முகலாய ஆட்சியின் பொற்காலம் என்பர். இக்காலத்தில் ஆட்சி செழிப்புற்று ஓங்கியது. பொன்னும் பொருளும் காண்போரை மலைக்கச் செய்தன. தாஜ்மஹால், முத்து மசூதி, அலிமசூதி முதலியவை அவரது ஆட்சியின் அடையாளங்களாக விளங்குகின்றன. டெல்லி, லாகூர், காஷ்மீர் முதலாம் இடங்களில் அமைக்கப்பட்ட எழில் மிகு பூங்காக்கள் இவருக்கு தோட்டக் கலையிலும் மலர்களிலும் இருந்த ஆர்வத்தை எடுத்துக்காட்டுகின்றன. தைமூரின் வழிவந்த முகலாயரின் வழித்தோன்றலில் ஷாஹ்ஜஹானே ஆட்சித் திறனிலும் கருவூலத்தைக் கட்டிக் காப்பதிலும் நிலவரிச் சீர்திருத்தங்கள் செய்வதிலும் படை வீரர்கள், அதிகாரிகளின் திறமைகளைக் கண்டறிவதிலும் சிறந்தவராக விளங்கினார். குடி மக்களுக்கு துன்பம் விளைவித்த கவர்னர்களையும் இதர அதிகாரி களையும் பதவி நீக்கம் செய்ததால் ஆட்சியில் அமைதி நிலவியது.

முகலாயர் ஆட்சியில் ஷாஹ்ஜஹான் காலத்து ஆட்சி பரந்து விரிந்த ஒரு பேரரசாகக் காணப்பட்டது. ஒரு தந்தை தனது குடும்பத்தைக் கட்டிக் காப்பது போல அவர் தனது குடிமக்களைக் காத்தார். முகலாயரது கட்டடக் கலை இவரது காலத்திலேயே உச்ச நிலையை அடைந்தது. ஷாஹ்ஜஹான் நிறுவிய எழில் மிகு காதல் சின்னத்தை (மாளிகையை) அவரே, "இவ்வுலகின் விண்ணுலகம்" எனக் குறிப்பிடுகிறார். வெண் சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட இவ்வழகு மாளிகை இன்றும் உலக அதிசயங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகின்றது. தனது முன்னோரிடம் இருந்து பெற்றுக்கொண்ட செல்வமும், நாட்டின் வர்த்தக விருத்தியால் கிடைத்த வருமானமும், தனது ஆட்சியின் கீழிருந்த பெரு நிலப்பரப்புக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற திறைகளும் இவரை மிகப்பெரும் செல்வந்தனாக்கின. இது நுண்கலையில் அவருக்கிருந்த ஆர்வத்தைத் தூண்டியது. இதன் விளைவாக எழில் மிகு கட்டடங்கள் அவரது ஆட்சியில் எழுந்தன. இவர் முகலாயரின் "அகஸ்டஸ்" என்று கூட வர்ணிக்கப்படுகிறார். தனித் தங்கத்தில் வடித்தெடுக்கப்பட்ட முத்துக்களும் நவரத்தினங்களும் பதிக்கப்பட்ட ஒளி மிக்க மயிலாசனத்தில் ஆட்சி செய்த ஷாஹ்ஜஹானின் ஆட்சி இன்னும் ஒளி பெற்று விளங்கியது. இவரது அரசவையை போர்வீரர்களும் கவிஞர்களும் கலைஞர்களுமே அணி செய்தனர்.

ஷாஹ்ஜஹான் ஆட்சியில் இந்துக்கள் உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டனர். அவரது மகன் தாரா இந்துக்களோடு நெருங்கிப்

பழகினார். இருப்பினும், இவரது ஆட்சியை சமயப் பொறுமையுடன் கூடிய ஆட்சிதான் என்று கூறுவதற்கில்லை. ஷாஹ்ஜஹான் அடிப்படையில் ஒரு ராஜபுத்திரியின் மகனாக இருந்தபோதும் இவரது காதலி மும்தாஜின் மார்க்க ஈடுபாடு இவரையும் பற்றிக்கொண்டது. இதனால், அக்கால முஸ்லிம்கள் இவரை சமயத்தின் காவலர் என அழைத்தனர். ஷாஹ்ஜஹான் தன் தந்தையை விட வைதீகமானவர். அவரிடம் சமய வெறி காணப்படாவிட்டாலும் சிலபோது அவரது நடத்தைகள் அவரிடம் சமயவெறி இருந்தது என்பதைக் காட்டின. அவர் தனதாட்சியில் முஸ்லிமல்லாதோரை துன்புறுத்தாவிட்டாலும் அக்பரின் சமயப் பொறை படிப்படியாக இவரது காலத்தில் கைவிடப்பட்டது எனலாம்.

கலை, இலக்கியத் துறையிலும் இவர் அதிக ஈடுபாடு காட்டினார். அவரே ஓர் இலக்கியவாதியாக இருந்ததால் ஏராளமான அறிஞர்களை ஆதரித்தார். பாரசீக இலக்கிய வளர்ச்சியில் இவரது பங்கு மகத்தானது. கட்டடக் கலையில் பெரிதும் ஆர்வம் காட்டிய இவர், தாஜ்மஹல், முத்து மசூதி, ஜாமிஆஹ் மஸ்ஜித், செங்கோட்டை, ஷாஹ்ஜஹான்பாத் (ஆக்ராவிலிருந்து மாற்றப்பட்ட புதிய தலை நகர் - டில்லி) முதலான வற்றை நிருமாணித்தார். மயிலாசனத்தை ஏழே ஆண்டுகளில் செய்து முடித்து, அதன்மீது வீற்றிருந்து ஆட்சி செலுத்தினார். கவிஞர்களை ஆதரித்தார். “குத்ஸி” என்ற கவிஞரின் வாயில் மூன்று முறை தங்கக் காசுகளை நிரப்பிக் கௌரவித்தார். இசைக் கலையின் வளர்ச்சியிலும் பெரிதும் ஊக்கமளித்தார்.

இவ்வளவு சிறப்புக்களையும் பெற்றிருந்த ஷாஹ்ஜஹான், தான் இறப்பதற்கு முன்பு தனது மகன் ஔரங்கசீப்பாலும் சிறைக்காவலன் முதாமத் என்ற கொடியவனாலும் பல அவமானங்களுக்கு உள்ளாக்கப்பட்டு குடிக்கத் தண்ணீர் கூட இல்லாத நிலையில் உயிர் நீத்தார். தான் நிறுவிய தாஜ்மஹாலைப் பார்த்து ஏங்கிய நிலையிலேயே இவரது உயிர் பிரிந்ததென வரலாறு குறிப்பிடுகிறது. ஒரு தாய் வயிற்றில் பிறந்த தனது பிள்ளைகள் நால்வரும், ஒருவரை ஒருவர் பகைத்துக் கொண்டு யுத்தங்கள் செய்து கொண்டதை கண்கூடாகக் கண்டு துயருற்ற ஒரு துர்ப்பாக்கியசாலித் தந்தை, வரலாற்றில் இவரொருவராக மட்டுமே இருந்திருக்க முடியும்.

## ஔரங்கஸீப் (ஆலம்கீர்) (1658 - 1707 / 1068 - 1117)

சக்கரவர்த்தி ஷாஹ்ஜஹானின் மூன்றாவது மகனான இவர் 1618 இல் தோஹாத் எனுமிடத்தில் பிறந்தார். ஸஅதுல்லாஹ்கான், பீர் முஹம்மது ஹாஷிம் ஜெய்லானி, முல்லா ஜீவன், முஹம்மது கானோஜி, அப்துல் ஹமீத் சுல்தான்பூரி முதலானோர் இவரின் இளமைக் கால ஆசான்களாவர். கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர் பாரசீக மொழியில் பல கவிதைகள் புனைந்தார். இளமை முதலே சூபித்துவத்தில் நாட்டம் காட்டியதால் உல்லாச சுகபோகங்களை உதறித் தள்ளிவிட்டு எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். இதனால் மக்கள் அவரை "ஃபக்கீர் இளவரசன்" என்றே அழைத்தனர். இவர் தனது 24வது வயதில் காடுகளுக்குச் சென்று தனித்துத் தியானத்தில் வீற்றிருக்கும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். உலகைத் துறந்து துறவறத்தை மேற்கொள்ளப் போவதாகவும் ஒரு சமயம் அறிவிப்புச் செய்தார். எனினும் விதி அவரை உலகின் பக்கமே இழுத்து வந்து ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியது. அதற்கு முழுத் தகுதி உடையவராகவும் அவர் காணப்பட்டார். "தைமூர்" வழியில் தோன்றிய அனைத்து மன்னர்களையும்விட சமயப் பற்றிலும் உடல் வாண்மையிலும் நீதி வழங்குவதிலும் இவர் சிறப்புற்று விளங்கினார்.

ஔரங்கஸீபின் ஆழ்ந்த மார்க்கப் பற்றுத்தான் அவருக்கு எதிரியாகவும் அமைந்தது. அக்பரின் சீர்திருத்தங்களால் இஸ்லாத்தின் சிறப்புக் குன்றியிருப்பதாகவும் இந்துக்கள் செல்வாக்கு மிகுந்து காணப்படுவதாகவும் கருதிய அவர், அந் நிலையை மாற்ற முயன்று ஈற்றில் தோற்றுப் போனார். இவரது காலத்து மார்க்க அறிஞர்கள் வழங்கிய தீர்ப்புக்கள் அனைத்தையும் சேர்த்து "பதாவா ஆலம்கீரி" எனும் பெயரில் வெளியிட்டார்.

இவர் வீரத்திலும் துணிவிலும் வல்லவராக விளங்கினார். யானையையும் புலியையும் அடக்கி வெற்றிவாகை சூடிய அக்பரினதும் ஷாஹ்ஜஹானினதும் வழியில் வந்தவர் என்ற வகையில் இவரிடமும் யானைகளை அடக்கும் வல்லமை காணப்பட்டதென்பர். 16வது வயதில் 10,000 குதிரைப்படை வீரர்களுக்கும் 4,000 காலாற் படையினருக்கும் தளபதியான இவருக்கு அரச அந்தஸ்துப் பெற்ற சிவப்புக் கூடாரத்தைப் பயன்படுத்தவும் அனுமதி வழங்கப்பட்டது. 18வது வயதில் தக்காணத்தின் கவர்னராக நியமிக்கப்பட்டார். பின்னர் கொஞ்ச காலம் குஜ்ராத்தின்

கவர்னராக இருந்த இவரை மன்னர் ஷாஹ்ஜஹான் பல்க் பிரதேசத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்குத் தளபதியாக நியமனம் செய்தார்.

ஷாஹ்ஜஹான் கடுமையாக நோய்வாய்ப்பட்டபோது அவர் உயிர் பிழைக்கமாட்டார் என்றெண்ணிய அவரது பிள்ளைகள், ஆட்சியைக் கைப்பற்றுவதற்காகப் போராட்டம் செய்தனர். இவர்கள் ஆட்சிக்கு வந்தால் மார்க்க விரோதச் செயல்களில் ஈடுபடலாம் என அஞ்சிய ஔராங்கஸீப் முராத் என்ற தனது பிறிதொரு சகோதரனோடு சேர்ந்து அவர்களை எதிர்த்து நின்று போரட்டத்தில் வெற்றிவாகைசூடினார். ஆயினும் தந்தை ஷாஹ்ஜஹானைக் கைது செய்து சிறை செய்த பிறகே ஔராங்கஸீபுக்கு அரியணையில் அமரமுடிந்தது. அரியணையில் அமர்ந்த ஔராங்கஸீப் தனக்கு "ஆலம்கீரி" எனும் பட்டத்தைச் சூடிக்கொண்டார். ஆலம்கீர் என்பதற்கு அகிலத்தை அடக்கி ஆள்பவர் என்பது பொருள். இருப்பினும் ஆட்சிக்கு வந்த நாள்முதல் மரணிக்கும் வரை அவர் போராட்டங்களையே சந்திக்க வேண்டியிருந்தார்.

ஆட்சிக்கு வந்த பின்னர்கூட முன்னர் போலவே இவர் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். ஆட்சியின் வீழ்ச்சிக்கு ஆட்சியாளர்களின் சொகுசான வாழ்க்கையே காரணம் என்பதை உணர்ந்ததே இதற்குக் காரணமாகும். சாந்த குணமுடைய அவர் அறிஞர்களின் ஆலோச னைக்குச் செவிமடுத்தார். அரசவையில் நிலவி வந்த வீண் பகட்டுகள் அனைத்தையும் அகற்றினார். உயரதிகாரிகளுக்கு பொன்னாலான உடை அன்பளிப்பாக வழங்கப்படுவதை நிறுத்தினார். அன்பளிப்புக்களை வெள்ளித் தட்டில் வைத்துக் கொண்டுவர வேண்டாம் என்றும் கேடயத்தில் வைத்துக் கொண்டுவந்தால் போதுமானது என்றும் கூறினார். ஒவ்வொரு நாளும் அரண்மனை ஜன்னல் அருகே நின்று பொதுமக்களுக்குத் தரிசனம் அளிக்கும் வழக்கத்தையும் தனது இறுதிக் காலத்தில் அடியோடு நிறுத்தினார். அரசரின் தரிசனத்தைப் பெறுவதை இந்துக்கள் இறை வழிபாடு போன்று கருதி விரதம் அனுஷ்டித்துக் காத்திருந்ததாலேயே இவர் இத்தடையை விதித்தார் எனக் கூறப்படுகிறது.

மிகவும் குறைவாகவே பேசும் பழக்கமுடைய ஔரங்கஸீப், தனது திட்டங்களை செயல்படுத்துவதிலேயே அதிக அக்கறை காட்டினார். உணவிலும் உடையிலும் எளிமை பேணித் துறவி போல் வாழ்ந்த

அவர், மதுவிலும் மாதுவிலும் இன்பம் அனுபவிப்பதை தவிர்த்தார். தனது சொந்தத் தேவைக்கு பைத்துல் மால் நிதியைக் கூட பயன்படுத்தாது விட்டுவிட்டார். இஸ்லாத்தை நடைமுறையில் கொண்டு வர உத்தியோகபூர்வ முயற்சிகளை அவர் எடுக்க முயற்சித்ததாலேயே சீக்கியரும் மராட்டியரும் ஜாட் இனத்தினரும் அதுவரை ஔரங்கஸீப்புக்கு அளித்து வந்த ஆதரவை நிறுத்திக் கொண்டனர். ஸுன்னத் வல் ஜமாஅத் சார்ந்த கொள்கைக்கு மதிப்பளித்த அவர், இஸ்லாத்துக்குச் சவாலாக வரும் எந்தவொன்றையும் உதாஷீனம் செய்து வந்ததோடு போர்க்களங்களில் கூட தொழுகையை முறையாகப் பேணி வந்தார். இவர் தனது கையால் எழுதப்பட்ட இரண்டு குர்-ஆன் பிரதிகளை மஸ்ஜிதுந்நபவிக்கு அனுப்பியதாக கூறப்படுவதுண்டு.

ஔரங்கஸீப்பின் தூய்மையான வாழ்வுக்கு, ஐ. சண்முகதாசன் என்பவர் எழுதிய “உலக வரலாறு” எனும் நூலுக்கு கவிப்பேரரசு வைரமுத்து வழங்கிய வாழ்த்துரையில் பதிவாகியிருக்கும் பின்வரும் வைர வரிகள் சான்றாக அமைகின்றன எனலாம்.

“கொடியவர் - கொடுமைக்காரர் என்று அறியப்பட்ட ஔராங்கஸீப், பொது வாழ்வில் எவ்வளவு தூய்மையானவராக இருந்தார் என்பதற்கு அவர் எழுதிய கடைசி உயில் சாட்சியாகிறது.

“என் கைகளால் தைக்கப்பட்ட குல்லாய்களை விற்ற பணம் 4 ரூபாய் 2 அணா, என் தலையணைக்குக் கீழ் இருக்கின்றன. நான் இறந்த பின்னர் எனது உடல் மீது போர்த்துவதற்குத் துணி வாங்க அதைப் பயன்படுத்துங்கள்.”

இந்த உயில் எழுத்து ஔரங்கஸீப் மீதிருந்த அத்தனை அழுக்கு களையும் சலவை செய்து விடுகிறது.”

குறித்த அதே நூலில், தரப்பட்டிருக்கும், ஔரங்கஸீப் தனது உயிலில் குறிப்பிட்டிருந்ததாகக் கூறப்படும் பின்வரும் அம்சங்களும் இங்கு நோக்கத்தக்கதாகும். “புனித குர்-ஆனிலிருந்து நான் எடுத்த பிரதிகளுக்காக எனக்கு ஊதியமாகக் கிடைத்த பணம் 350 ரூபாய்; என் கைப்பையில் உள்ளதை நான் இறக்கும் நாளன்று ஏழைகளுக்குத் தானம் செய்து விடுங்கள். இந்த நாடோடியின் கல்லறை மிகவும் எளிமையாக வானத்தைப் பார்த்தபடி இருக்க வேண்டும். எவ்வித அழகோ

ஆடம்பரமோ செய்யக் கூடாது. ஊர்வலம், இசை எதுவும் கூடாது. என் கல்லறை மண்ணால் மூடப்பட்டிருக்க வேண்டும். அங்கே பசுமையான செடிகள் வளரட்டும். (உலக வரலாறு பக். 157)

13 நாட்கள் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த இவர் கி. பி. 1707ம் ஆண்டு மரணமானார். இவரது விருப்பப்படியே எவ்விதமான ஆடம்பரமுமின்றி தௌலதாபாத் எனுமிடத்தில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

“உமது எளிமைமிக்க அடக்கஸ்தலம் - அலங்காரம் ஏதுமில்லா சமாதி என்பன, உலகை ஆண்ட அரசர்களில் நீ தான் உயர்ந்தவர் என்பதற்கு சான்றாக அமைகின்றது.” என அல்லாமா இக்பால் இவர் பற்றி புகழ்ந்து பாடியிருக்கிறார்.

## இ. துருக்கிய உஸ்மானியராட்சி

### முக்கிய ஆட்சியாளர்கள்

#### அவ்ரகான்

உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் ஸ்தாபகர் உஸ்மான் தனது மகன் அவ்ரகானுக்கு 16,000 சதுர கிலோ மீற்றர் கொண்ட ஒரு பெரு நிலப்பகுதியியை மட்டுமன்றி ஒரு கருத்தாழமிக்க உபதேசத்தையும் விட்டுச் சென்றார். அவ்ரகானும் பொதுவாகப் பின்னர் வந்த, உஸ்மானிய சாம்ராஜ்யத் தலைவர்களும் இதனைக் கவனமாகக் கடைப்பிடித்தார்கள் என வரலாறு கூறுகிறது. அந்த உபதேசத்தின் வரலாற்று முக்கியத்து வத்தின் காரணமாக அதனைக் கீழே தருகிறோம். இவ்வுபதேசத்தை உஸ்மானிய வரலாற்றாசிரியர் ஆஷிக் ஜலபி பதிவு செய்துள்ளார்.

"எனதருமை மகனே! உங்களின் இரட்சகன் அல்லாஹ் கட்டளையிடாத எதிலும் நீ ஈடுபாடு காட்டுவதை நான் உனக்கு எச்சரிக்கை செய்கிறேன். ஆட்சியில் ஏதாவது பெரும் பிரச்சினைகள் ஏற்படும் போது மார்க்க அறிஞர்களிடம் நீ அடைக்கலம் தேடு."

"மகனே உனக்கு வழிப்படுவோரை கண்ணியப்படுத்து. படைவீரர்களுக்கு போதுமான வசதிகளைச் செய்துகொடு. உன் படைப்பலத்தையும், செல்வத்தையும் கூட்டி ஷைத்தான் உன்னை ஏமாற்றி விடாதிருக்கட்டும். ஷரீஆவை விட்டு விலகுவதை உனக்கு நான் எச்சரிக்கிறேன்!."



11-CM14799

"மகனே! எமது இலட்சியம் உலகங்களின் இரட்சகன் அல்லாஹ்வைத் திருப்திப்படுத்துவதிலேயாகும் என்பதை நீ அறிவாய். ஜிஹாதின் மூலமே எமது மார்க்கத்தின் ஒளி உலகமெல்லாம் பரவும் என்பதையும் நீ அறிவாய். எனவே இறை திருப்தியைத் தேடுவதிலே கவனம் செலுத்து."

"மகனே ! பதவி ஆசைக்காக, தனிநபர்களின் ஆதிக்க வெறிக்காக யுத்தங்கள் நடாத்தியோர்களைச் சேர்ந்தவர்களல்ல நாம். நாம் இஸ்லாத்தால் வாழ்கிறோம், இஸ்லாத்திற்காக மரணிக்கிறோம். மகனே! இதற்கே நீ பொருத்தமானவன்".

இந்த உபதேசமே, உஸ்மானியர்கள் கல்விஸ்தாபனங்களிலும் இராணுவ நிறுவனங்களிலும் அறிஞர்களிலும் கவனம் செலுத்தக் காரணமாக இருந்திருக்க வேண்டும். அவர்கள் அறிஞர்களைக் கண்ணியப்படுத்தினார்கள். முஸ்லிம் படையின் கொடி மிகத்தூர நிலப்பரப்பெல்லாம் செல்லும் அளவுக்கு அவர்கள் ஜிஹாதில் கவனம் செலுத்தினார்கள். நாகரிக வளர்ச்சியிலும், நிர்வாகத்திலும் அவர்கள் ஈடுபாடு காட்டினார்கள்.

உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் முதலாவது இஸ்லாமிய பல்கலைக்கழகத்தையும், உலகிலே முதலாவது ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவத்தையும் அவ்ரகான் உருவாக்கியமை இந்த உபதேசத்தின் நடைமுறைப் பிரயோகம் எனலாம்.

உஸ்மானின் பின்னர் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவரது மகன் அவ்ரகானின் ஆட்சி மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. ஆட்சியின் பிரதம மந்திரியாக நியமனம் பெற்ற அவரது சகோதரர் அலாவுத்தீனும் பல நிர்வாக ஒழுங்குகளைக் கொண்டு வரலானார்.

தங்க, வெள்ளி நாணயங்கள் அச்சிடுவதை அவர் ஆரம்பித்து வைத்தார். இராணுவத்திற்கான பூரண ஒழுங்கமைப்பொன்றையும் அவர் கொண்டு வந்தார். ஏற்கனவே இராணுவம் யுத்த காலங்களின் போது திரட்டப்பட்டுப் பின்னர் கலைக்கப்பட்டு வந்தது. இந்நடைமுறையில் மாற்றத்தினை ஏற்படுத்தி நிரந்தர இராணுவமொன்றை உருவாக்க வேண்டுமென்ற கைரூத்-தீன் பாஷா என்ற பெயரில் அரச மந்திரியாக இருந்த குர்ரா கலீல் என்பவரது ஆலோசனையின் பேரிலேயே நிரந்தரமான படைப்பிரிவு ஒன்றை அலாவுத்தீன் உருவாக்கினார்.

குறிப்பாக யுத்தக் கைதிகளை அவர்களது இனம், தாய் தந்தையர்களை விட்டு நீக்கி இஸ்லாமிய ரீதியில் பயிற்றுவித்து இப்படைப்பிரிவை உருவாக்குமாறு கைருத்தீன் பாஷா ஆலோசனை கூறினார். இந்த வகையில் இப்படைப்பிரிவு உருவாக்கப்பட்டதன் பிறகு 'பக்தாஷியா' தரீக்காவின் ஷெய்கிடம் கொண்டு செல்லப்பட்டு அவரது பிரார்த்தனையுடன் அவரால் 'யனீதசாரி' எனப் பெயரிடப்பட்டது. 'புதிய படைப்பிரிவு' என்பது இதன் பொருளாகும். துருக்கி மொழியின் இச்சொற் பிரயோகமே திரிபடைந்து அறபு மொழியில் 'அல் - இங்கிஷாரி' என அழைக்கப்படலாயிற்று. இக்காலப் பிரிவிலிருந்தே உஸ்மானிய சாம்ராஜ்யப் படைப்பிரிவு யனீதஷாரி - இங்கிஷாரி என அழைக்கப் படலாயிற்று.

அவ்ரகான் 'போர்சா' என்ற நகரை முற்றுகையிட்டுக் கொண்டிருக் கும் போதே அவரது தந்தை உஸ்மான் மரணமடைந்ததாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. இவரது காலத்தில் இந்நகரும் பிடிக்கப்பட்டு உஸாமாவின் ஆட்சியின் கீழ் வந்தது. அவ்ரகான் இந்நகரையே கி.பி. 1328இல் தனது தலைநகராக ஆக்கிக்கொண்டார். கி.பி.1361 வரையில் உஸ்மானியர் தலை நகராக இது விளங்கியது. போர்சா இயற்கை வளமும் சிறந்த காலநிலையும் கொண்ட நகரம். கேந்திர முக்கியத்துவம் நிறைந்த நகராகவும் இது அமைந்திருந்தது. இக்காரணங்களாலேயே அவ்ரகான் இந்நகரைத் தலைநகராகத் தெரிந்து கொண்டார். பின்னர் அவ்ரகான் சின்னாசியாவில் எஞ்சியிருந்த ரோமர்களது பகுதிகளை வெற்றிகொள்ளத் தனது படைப்பிரிவுகளை அனுப்பி வைத்தார். அப்படைப்பிரிவு பிரதான நகர்கள் பலவற்றைக் கைப்பற்றியது. அவ்ரகான் மீண்டும் படையெடுத்துப் போய் இஸ்மீத் என்ற நகரைக் கைப்பற்றினார். இப்போது ஆசியக் கரையில் ரோமர்களின் பிரதான நகர் என அஜ்னீக் மட்டுமே எஞ்சியிருந்தது. அந்நகரை இருவருடங்களாக அவ்ரகான் முற்றுகையிட்டார். பின்னர் இந்நகரைக் கைப்பற்றி அந்நகர மக்களை மிகுந்த சகிப்புத் தன்மையுடனும், நீதியாகவும் நடத்தினார். தங்களது மார்க்கக் கிரியைகளைச் செய்துகொள்ள அவர்களுக்குப் பூரண சுதந்திரத்தை வழங்கினார். விரும்பியவர்கள் நகரைவிட்டுச் சென்றுவிடவும் முழுச் சுதந்திரத்துடன் தமது சொத்துக்களை விற்றுக்கொள்ளவும் அனுமதித்தார்.

சுல்தானின் இந்நடத்தை அந்நகர மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இந்நகரில் அவ்ரகான் பல பாடசாலைகளையும், ஏழைகளுக்கெனப் பல தக்கியாக்களையும் அமைத்துக் கொடுத்தார். தமது மூத்த மகன்

சுலைமான் பாஷாவை இந்நகரின் கவர்னராக நியமித்தார். இக்காலப் பிரிவில் அவ்ரகானின் சகோதரர் அலாவுத்தீன் மரணமடைய சுலைமான் பாஷாவையே அரச பிரதம மந்திரியாக அவ்ரகான் நியமித்துக் கொண்டார். சுலைமான் பாஷாவும் பல நகர்களை வெற்றிகொண்டு பிரசித்தி பெற்றார்.

ஹிஜ்ரி 736 (கி.பி.1336) இல் அவ்ரகான் மர்மர் கடலுக்குத் தெற்காகவும் துருக்கியின் மேற்காகவும் அமைந்திருந்த குர்ரா என்ற ரோமர்களின் சிறிய பிரதேசமொன்றையும் வெற்றிகொண்டார். அப்பிரதேசத்தின் இளவரசரது பிள்ளைகள் இருவருக்கிடையிலான கருத்து வேறுபாடு இப்பகுதியை இலகுவாக வெற்றிகொள்ளக் காரணமாக அமைந்திருந்தது. இல்லாவிட்டால் அவ்ரகான் கடும் யுத்தம் ஒன்றின் பின்னரே இதனை வெற்றி கொண்டிருக்க முடியும்.

இந்த வெற்றிகளின் பின்னர் அவ்ரகான் நாட்டின் உள் நிர்வாகத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தினார். நாட்டு மக்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கான ஒழுங்குகளைச் செய்தார். பரவலாக நாட்டில் குடிமக்கள் வாழ்வுக்கான வழிவகைகளை அமைத்தார். பல பள்ளிகளையும் தக்கியாக்களையும் அமைத்ததோடு பாடசாலைகளையும் நிறுவினார். இந்த வகையில் போர்சாவிலும் அஜ்னீக்கிலும் இரு உயர் பாடசாலைகளையும் நிறுவினார். இவரே உஸ்மானிய சாம்ராஜ்யத்தில் முதலாவது பல்கலைக்கழகத்தையும் நிறுவியவராவார். அறிஞர்களையும் கவிஞர்களையும் மிகவும் கவனித்தார். இந்த வகையில் யுத்த வாழ்வோடு, நாட்டின் உள்ளே இயல்பான நல்லின வாழ்வை உருவாக்குவதிலும் அவ்ரகான் பெரிதும் வெற்றி கண்டார்.

இவ்வாறு அவரகான் உள்நாட்டு விவகாரங்களில் கவனம் செலுத்தி மக்களுக்கு இயல்பு வாழ்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் போது, கொன்ஸ்தாந்து நோபிளின் ரோம மன்னன் ஜோன் பலியோலொகஸ் (Paleologus), 1355ம் ஆண்டு (மன்னர்) ஸுல்தான் அவ்ரகானிடம் ஒரு தூதுக் கோஷ்டியை அனுப்பி வைத்தான். ஷேர்பிய மன்னர் தோஷானின் (Dusan) படையெடுப்பிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள உதவுமாறு அத்தூதுக் கோஷ்டி ஸுல்தானை வேண்டி நின்றது. மன்னன் இவ்வேண்டுகோளை ஏற்று, தன் படைப்பிரிவொன்றை அனுப்பியபோது படைப்பிரிவு கொன்ஸ்தாந்து நோபிளை அடைய முன்னர் திடீரென மன்னர் தோஸான் மரணமடைந்தான்.

உஸ்மானியர் இக்காலப் பிரிவில் ஐரோப்பியக் கரையோரங்களில் இறங்கி ரோமப் பேரரசின் பலவீனத்தை உறுதிப்படுத்திக் கொண்டதோடு தமக்குக் காலூன்றுவதற்கான சில பகுதிகளை உருவாக்கிக் கொள்ளவும் முயற்சித்து வந்தனர். இந்த வகையில் ஸுல்தான் அவ்ரகான் கடலைக் கடந்து சென்று அவ்வாறான இடங்களைக் கைப்பற்றிக்கொள்ள சிறுசிறு படைப்பிரிவுகளை அனுப்புவதில் கவனம் செலுத்தினார். இந்நிலையில் கொன்ஸ்தாந்து நோபிளை கடலாலும் கரையாலும் முற்றுகையிட்டுத் தாக்கிக் கைப்பற்றிக் கொள்ளலாம் என உஸ்மானியர்கள் கருதினர்.

இந்த வகையில் 1357ம் ஆண்டு அவ்ரகான் தலைமையில் முடிக்குரிய இளவரசர் சுலைமான் பாஷா தன்னுடன் 40 மிகச் சிறந்த வீரர்களோடு இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் அட்ரினல் வளைகுடாவைக் கடந்து ஐரோப்பியக் கரையை அடைந்தனர். அங்கிருந்த பல இடங்களைக் கைப்பற்றிக்கொண்டு பாதுகாப்பாகத் தமது படை முகாமிட்டிருந்த அடுத்த தமது கரைப்பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தனர். படிப்படியாக உஸ்மானியப் படை ஐரோப்பியக் கரையை அடையலா யிற்று. இப்படை 30,000 வீரர்களைக் கொண்டிருந்தது. இப்படை முதலில் ‘தஸன்ப்’ என்ற துறைமுகத்தைக் கைப்பற்றியது. பின்னர் காலிபோல் கோட்டையையும், அப்ஸலா, ரொடெஸ்டோ போன்ற பல நகரங்களும் உஸ்மானியர் வசமாயின.

கி. பி. 1359 இல் இத்தகைய வெற்றிகளை ஆரம்பித்து வைத்த வீரர் இளவரசர் சுலைமான் பாஷா தமது குதிரையிலிருந்து விழுந்து மரணமடைந்தார். அவரது சகோதரர் முராத் அவரின் பின் முடிக்குரிய இளவரசனானார். ஏற்கனவே குறிப்பிட்ட கைருத்தீன் பாஷா அரசின் பிரதம மந்திரியானார்.

ஹிஜ்ரி 761 (கி. பி. 1360) இல் ஸுல்தான் அவ்ரகான் தனது 81வது வயதில் மரணமடைந்தார். 35 வருடங்கள் ஆட்சி செய்த இவர் உஸ்மானிய அரசை விரிவுபடுத்தியும், புதிய நிர்வாக ஒழுங்குகளை ஏற்படுத்தியும் பெரும் சாதனைகள் புரிந்துள்ளார். இவர் முதல் 6 உஸ்மானிய ஸுல்தான்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ள போர்சா நகரிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

ஸுல்தான் அவ்ரகானின் பின்னர் அவரது மகன் முதலாவது முராத்கான் 1360இல் ஆட்சியை ஏற்றார். முராத் தனது ஆட்சியில் ஐரோப்பிய மன்னர்களை நடுங்கச் செய்த பல வெற்றிகளைச் சாதித்தார் என வரலாறு கூறுகிறது.

**சுல்தான் முதலாம் 'பாயஸீத்' (கி. பி. 1389-1402)**

உஸ்மானிய ஆட்சியாளர்களில் நான்காமவரான சுல்தான் முஹம்மது பாயஸீத் தனது தந்தை முதலாம் முராத் கொலையுண்டதன் பின்னர் கி.பி. 1389 இல் ஆட்சிக்கு வந்தார். இவர் மிகப் பெரிய போராளியாகவும், வீரம் செறிந்தவராகவும் காணப்பட்டமையால் "பாயஸீத் இடி" என அழைக்கப்பட்டார். இவரது காலத்திலிருந்து இதுவரை சிற்றரசராக இருந்த உஸ்மானியரின் ஆட்சி மாபெரும் அரசாக மாறியது.

பாயஸீத் பெரும் இலட்சியங்களோடு வாழ்ந்த ஆட்சியாளர். துருக்கியப் பிரதேசங்கள் முழுவதையும் ஒரே கொடியின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. எனவே அதற்காகக் கடுமையாக முயற்சி செய்தார். முழு இஸ்லாமிய உலகையும் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற இலட்சியக் கனவும் அவரிடம் இருந்தது. எனவேதான் ஷாமிலும், எகிப்திலும் ஆட்சி புரிந்த மம்லூக்கியர்களோடு மோதவேண்டிய நிலை ஏற்பட்டது. அவர்களோடு மிகப் பெரியதொரு போராட்டத்திற்குத் திட்டமிட்டிருந்தார். இதனிடையே தைமூர் லங்க் என்ற மங்கோலிய ஆட்சியாளனின் துருக்கி மீதான படையெடுப்பு இந்த இலட்சியக் கனவுக்குத் தடையாக அமைந்துவிட்டது.

இந்தவகையில் பாயஸீத் துருக்கியின் பல பகுதிகளை யுத்தங்கள் எதுவுமின்றியே தனது ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தார். அங்கிருந்த சில ஆட்சியாளர்களுடன் மட்டுமே அவர் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. சின்னாசியப் பிரதேசத்தின் சிற்றரசுகள் அனைத்தும் ஒழிக்கப்பட்டு உஸ்மானிய அரசின் கொடி அங்கெல்லாம் பறந்தது.

பாயஸீத் ஜிஹாதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். எனவே தன் முன்னோர்கள் போன்றே மேற்குலகோடு மோதினார். அல்பேனியாவையும் ரோமானியாவையும் வெற்றி கொண்டார். கொன்ஸ்தாந்து நோபிளை ஏழு மாதங்களாக முற்றுகையிட்டிருந்தார். எனினும் அன்றைய போப் பாண்டவர் 'பொனீவா' ஐரோப்பா முழுவதும் யுத்தப் பிரசாரம் செய்து படை திரட்டி அனுப்பியதால் முற்றுகையைக் கைவிட வேண்டியதாயிற்று.

உஸ்மானியர்களை அழித்தொழிப்பதோடு, பைத்துல் முகத்திஸை யும் கைப்பற்றுவதே இந்த ஐரோப்பியப் படையெடுப்பின் பிரதான இலக்காக அமைந்தது. பிரான்ஸ், இங்கிலாந்து, ஜேர்மன், இத்தாலி,

ஸ்பெய்ன், ஒல்லாந்து போன்ற 15 நாட்டுப் படைகள் இந்த யுத்தத்தில் கலந்து கொண்டன. 'நிகோபோலா' என்ற நகரத்தில் இந்த வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யுத்தம் நடைபெற்றமையால் "நிகோபோலா யுத்தம்" என இது வழங்கப்படுகிறது. ஹி.798 துல்க.்.தா 23ம் திகதி (கி. பி.1396 செப்டம்பர் 27ஆம் திகதி) நிகழ்ந்த இந்த யுத்தத்தில் மேற்குலகக் கிறிஸ்தவர்கள் படுதோல்வியடைந்தனர். பிரான்ஸின் பெரும் தலைவர்களும் இந்த யுத்தத்தில் கைதிகளாக்கப்பட்டனர். அவர்களில் கோன்ட்டிநீவார் என்ற பிரான்ஸின் கிழக்கில் இருந்த 'போர்கினிவா' என்ற சிற்றரசின் இளவரசரும் ஒருவர். சிறைபிடிக்கப்பட்ட இவர் தான் இனிமேல் போராடமாட்டேன் என சத்தியம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் பின்னர் சிறையிலிருந்த இத்தகைய தலைவர்கள் விடுதலை செய்யப்படுவர் என்ற முடிவுக்கு வந்தபோது பாயஸீத் கோன்ட்டீநீவாரைப் பார்த்துக் கீழ்வருமாறு கூறினார்:

"கோன்ட், உங்களுக்கு ஏற்பட்ட இந்த அவமானத்தைத் துடைத்துக்கொள்ள மீண்டும் என்னோடு நீங்கள் போராடலாம், அதற்காக நீங்கள் எனக்குச் செய்த சத்தியத்திலிருந்து உமக்கு நான் விடுதலை தருகிறேன். மீண்டும் நீங்கள் என்னோடு போராட வருவது குறித்து நான் பயப்படவில்லை. அவ்வாறு பயப்பட்டிருப்பின் உம்மை நான் சிறையிலிருந்து விடுதலை செய்திருக்க மாட்டேன். எனவே, நீர் விரும்பியபோது வரலாம். என்னையும் என் வீரர்களையும் அப்போது நீர் உமக்கு முன்னால் காண்பீர். ஏனெனில், நான் எனக்கு முன்னால் காணும் சிலுவை யுத்தப் போராளிகளை வெற்றிகொள்ளவே பிறந்துள்ளேன்."

உஸ்மானியர்கள் நிகோபோலியாவில் அடைந்த பெரும் வெற்றிச் செய்தியை பாயஸீத் அப்பாஸிய கலீபா முதவக்கிலுக்கு அனுப்பி வைத்தார். அதற்குப் பதிலாக கலீபா முதவக்கில் பாயஸீதைக் கண்ணியப்படுத்தும் வகையில் ஒரு வாளையும், உடையையும் அனுப்பி வைத்தார். ரோம் பிரதேசத்திற்கு பாயஸீத் சுல்தானாக ஏற்றுக்கொள்ளப் படுகிறார் என்பதே இதன் பொருளாகும். இந்த வகையில் உஸ்மானிய ஆட்சியாளர்களில் முதலாவது ஸுல்தான் என்ற பட்டத்தைப் பெற்றவராக பாயஸீத் கருதப்படுகிறார். இந்நிகழ்வு பற்றி விளக்கும் தலை சிறந்த உஸ்மானிய வரலாற்றாசிரியர் ஷிஹாபுத்தீன் தகீன்னாக் "இது உண்மை யில் உஸ்மானியர்களின் யதார்த்த நிலையை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொண்டமையை காட்டுகிறது." என்கிறார்.

இதன் பின்னர் ஸுல்தான் பாயஸீத் மீண்டும் கொன்ஸ்தாந்து நோபிளைக் கடுமையாக முற்றுகையிட்டார். இடையே தைமூர் லங்கின் நாசகாரப் படையெடுப்பு மாத்திரம் நிகழ்ந்திராவிட்டால் கொன்ஸ்தாந்து நோபிளையும் வெற்றிகொண்டு ஐரோப்பாவின் பெரும் பகுதியையும் இவர் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்திருப்பார் என வரலாற் றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். தைமூர் லங்க்கின் படையெடுப்பால் வருடம் 1,000 தங்க நாணயங்கள் கொடுத்தல், முஸ்லிம்களுக்கு பள்ளியொன்றை நிர்மாணிக்க அனுமதித்தல், அவர்களுக்கான ஷரீஅத் அடிப்படையில் கொன்ஸ்தாந்து நோபிளோடு ஒப்பந்தம் செய்து கொண்டு முற்றுகையைக் கைவிட வேண்டியதாயிற்று.

### தைமூர் லங்க் படையெடுப்பு

தாத்தாரியத் தளபதி தைமூர் லங்க் சின்னாசியாவின் மீது படை யெடுத்தமை இஸ்லாமிய உலகிற்குப் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தியது. மங்கோலியர்கள் பக்தாதின் மீது படையெடுத்தபோது பக்தாதின் இளவரசர்களில் ஒருவரான ஜலாபின் சுல்தான் பாயஸீதிடம் வந்து அபயம் கோரினார். அவருக்கு அபயமளித்த பாயஸீத், தைமூர் அவரை ஒப்படைக்குமாறு கேட்டு வந்த போதும் ஒப்படைக்க மறுத்துவிட்டார். இதனால் கோபமுற்ற தைமூர் தன் பெரும்படையோடு சின்னாசியா மீது படையெடுத்து வந்து ‘சீவால்’ என்ற நகரையும் கைப்பற்றி மன்னர் பாயஸீதின் மகன் அர்தகரலையும் சிறை செய்து அவரைக் கொலை செய்தும் விட்டார். எனவே, பாயஸீத் தைமூர் லங்க்கை எதிர்க்கப் படையெடுத்துச் செல்ல வேண்டியதாயிற்று. இரு பெரும் படைகளும் அங்காரா சமவெளியில் பயங்கரமாக மோதிக்கொண்டன. சூரிய உதயத்திற்கு முன்னரே ஆரம்பித்த இந்த யுத்தம் சூரியன் மறைந்ததன் பின்னாலும் தொடர்ந்தது.

இந்த யுத்தத்தில் சுல்தான் பாயஸீத் நிகழ்த்திய வீரப்போர் அதிசயிக்கத்தக்க வகையில் அமைந்திருந்தது. உண்மையில் சுல்தானின் பக்கமே வெற்றி இருந்திருக்கும். ஆனால், யுத்தத்தின் இடையே சுல்தானின் படைப்பிரிவில் பெரும்பகுதியொன்று தைமூர் லங்க்கின் பக்கம் போய் இணைந்தது. சுல்தானின் படை இதனால் பாரியளவு குறைந்து பலவீனமுற்றது. இறுதியில் சுல்தான் தோல்வியடைந்தது மட்டுமன்றி அவரும் அவரது புதல்வர் மூஸாவும் சிறைபிடிக்கப்பட்டனர். அவரது ஏனைய புதல்வர்களான சுலைமான், முஹம்மத், ஈஸா என்ற

மூவரும் யுத்த களத்திலிருந்து தப்பியோடிவிட்டனர். அவரது ஐந்தாவது மகன் முஸ்தபா அலிக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.

இவ்வாறு வீரம் மிக்க இந்த மன்னரது நிலை மிகக் கவலைக் கிடமானதாக முடிவுற்றது. சிறைபிடிக்கப்பட்ட சுல்தான் மிக கௌரவமாக தைமூர் லன்ங்க்கால் நடாத்தப்பட்டாலும் ஆழ்ந்த கவலையாலும் துக்கத்தாலும் மன்னர் பாயஸீத், சிறையில் அடைக்கப்பட்ட ஒரு வருடத்திலேயே மரணமடைந்தார். தைமூர் லங்க்கின் நாசகாரப் படையெடுப்பு மாத்திரம் நிகழ்ந்திருக்காவிட்டால் ஐரோப்பாவின் மிகப் பாரிய வெற்றிகளை பாயஸீத் பெற்றுக் கொடுத்திருப்பார். இது வரலாற்றுப் போக்கையே மாற்றியிருக்கும் என வரலாற்றாசிரியர்கள் இந்நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிடுவர். இந்த நாசகார யுத்தம் ஹி.804 துல்ஹஜ் 19ம் நாள் (கி.பி. 1402 ஜுலை 20) நிகழ்ந்தது.

இந்த யுத்தம் நிகழ்ந்த காலத்தைத் தொடர்ந்து உஸ்மானிய ஆட்சியின் இருண்ட காலம் ஆரம்பமாகிறது. பாயஸீதின் மரணத்தோடு உஸ்மானிய ஆட்சி துண்டு துண்டாக மீண்டும் சிதறுண்டது. சின்னாசியாவின் பல சிற்றரசுகளை தைமூர் லங்க் திருப்பி உருவாக்கினார். பல்கேரியா, சேர்பியா போன்ற நாடுகள் இக்காலப் பிரிவில் உஸ்மானிய ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்று வேறாகின. உஸ்மானியர்களுக்கு மிகச் சொற்ப நாடுகளே எஞ்சி இருந்தன.

பாயஸீதின் புதல்வர்கள் தம்மிடையே பிளவுபட்டு ஒற்றுமையின்றிப் போராடிக் கொண்டமை உஸ்மானிய ஆட்சிக்கு பெரும் அபாயத்தைக் கொடுத்தது. பாயஸீதின் மகன் சுலைமான் அத்ரினாவில் தன்னை மன்னராகப் பிரகடனப்படுத்திக் கொண்டார். தனது நிலையைப் பலப்படுத்திக்கொள்ள ரோம மன்னன் இரண்டாவது இமானுவேலோடு ஒப்பந்தம் செய்துகொண்டார். சலானீக் நகரையும் கருங்கடலின் கரையோரப் பிரதேசங்களையும் ரோம மன்னருக்கு விட்டுக்கொடுத்தார். ரோம மன்னரின் உறவு முறைப் பெண்ணொருவரையும் திருமணம் செய்துகொண்டார்.

பாயஸீதின் அடுத்த மகன் முஹம்மத் தைமூர் லங்க்கின் படைப்பிரிவோடு போரிட்டு சின்னாசியாவின் மலைப்பிரதேசங்களிலிருந்து சில பகுதிகளை மீட்கத் தொடங்கினார். இந்நிலையில், பாயஸீதின் இன்னொரு மகனான ஈஸா தந்தை இறந்த செய்தியைச் செவியுற்றதும் தன்னோடிருந்த படைப் பிரிவைச் சேர்த்துக் கொண்டு தான் மறைந்து

வாழ்ந்த போர்சா நகரில் பகிரங்கமாகத் தன்னை உஸ்மானிய கலீபா எனப் பிரகடனப்படுத்திக் கொண்டார். கவலைக்குரிய விடயம் என்னவெனில், இம்மூவருமே தைமூர் லங்க்கிடம் அடுத்தவரை அழிக்க உதவி தேடினர். உஸ்மானிய அரசை முற்றாக ஒழிக்கும் நோக்கம் கொண்டிருந்த தைமூரும் மூவரையும் தூண்டிவிட்டுப் பலவீனப்படுத்த முயன்றார்.

பாயஸீதின் பிள்ளைகளில் முஹம்மதே இறுதியானவர். இவர் தனது அடுத்த சகோதரர்களை வெற்றிகொண்டார். முதலில் தனது சகோதரன் ஈஸாவோடு பல முறை போராடி அவரைத் தோற்கடித்து இறுதியில் அவர் கொல்லப்பட்டார். இவ்வாறு சின்னாசியாவில் அவருக்கு எதிரிகள் யாரும் இல்லாது போயிற்று. தனது அடுத்த சகோதரன் மூஸாவை சிறைமீட்டு பெரும்படைக்குத் தலைவராக்கி ரோமர்களோடு உறவாடிய சகோதரன் சுலைமானோடு போராட அனுப்பி வைத்தார். முதல்முறை அவர் தோற்ற போதிலும் இரண்டாவது முறை போராட்டத்தில் 1410 இல் சுலைமானை வெற்றிகொண்டு அத்ரினா நகர்க்கோட்டைக்கு வெளியே அவரைக் கொலை செய்தும் விட்டார்.

இப்போராட்டங்களை நடத்திய முஹம்மதின் சகோதரன் மூஸா உஸ்மானிய அரசின் ஐரோப்பியப் பகுதிக்கு தான் தனி மன்னனாக விரும்பினார். இந்த வகையில், கொன்ஸ்தாந்து நோபிளையும் முற்றுகையிட்டார். தனது சகோதரனின் இந்த ஆசையை முஹம்மத் அறிந்தார். அதேவேளை, கொன்ஸ்தாந்து நோபிளின் மன்னர் முஹம்மதின் உதவியை நாடினார். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட முஹம்மத் உடனே அங்கு விரைந்து கடுமையான போராட்டத்தின் பின்னர் கொன்ஸ்தாந்து நோபிள் முற்றுகையைத் தனதாக்கினார். பின்னர் மூஸாவின் படைத்தளபதிகள் பலர் அவரைக் கைவிடத் துவங்கினர். இறுதியாக அவர் கொலையுண்டார். இந்த வகையில் முஹம்மத் உஸ்மானிய அரசின் தனிப்பெரும் மன்னராக மாறினார்.

இந்தவகையில் எஞ்சிய உஸ்மானியப் பிரதேசங்களில் ஏக உஸ்மானிய மன்னராக முதலாம் முஹம்மத் முடிசூடினார். வரலாற்றில் இவர் முஹம்மத் ஜலபி என்றும் பிரசித்தி பெற்றார். இவரது ஆட்சி

ஆரம்பித்ததோடு உஸ்மானிய அரசை, தைமூர் லங்க்கின் படையெடுப்போடு பிடித்த இருண்ட காலமும் நீங்குகிறது. இவரைப் பெரும்பாலான உஸ்மானிய வரலாற்றாசிரியர்கள் 5வது உஸ்மானிய மன்னராகக் கருதுவர். அவரது அடுத்த சகோதரர்கள் ஆட்சியில் மிகச் சிறிது காலமே நிலைத்திருந்தாலும், இது சகோதரர்களுக்கிடையிலான போராட்டமாக அமைந்திருந்தாலும் அச்சகோதரர்கள் உஸ்மானிய ஆட்சியின் மன்னர்களாகக் கணிக்கப்படுவதில்லை.

## தற்கால முஸ்லிம் உலகம்

நம்பிக்கைக் கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், சட்ட நெறி, ஒழுக்க விழுமியங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வாழ்க்கை முறையாக இஸ்லாம் அமைந்துள்ளது. அனைத்து முஸ்லிம்களது செயற்பாடுகளும் நம்பிக்கை கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை. இந்த வகையில் ஏக இறைவனான அல்லாஹ்வை விசுவாசித்து அவனையே வழிபடுகின்ற முஸ்லிம்களை பெரும் பான்மையாகக் கொண்ட நாடுகள், முஸ்லிம் நாடுகள் எனப்படுகின்றன. இந்நாடுகளில் வாழ்கின்ற முஸ்லிம்களது மொழி, கலாசாரம், பரம்பரை, சூழல் என பல்வேறு அம்சங்களை தனித்துவமாகக் கொண்டிருப்பதை இனங்காண முடிகிறது. என்றாலும், பூமியின் நாலாபக்கங்களிலும் பரந்து வாழ்கின்ற அனைத்து முஸ்லிம்களும் இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டால் பிணைக்கப்பட்ட சகோதரர்களாக கருதப்படுகின்றனர். எனவே, முஸ்லிம்களை அறபி, அஜமி என்றோ அல்லது பெரும்பான்மை, சிறுபான்மை என்றோ, ஒரு முஸ்லிம் நாட்டை அல்லது சமூகத்தை வேறுபடுத்தி மதிப்பிட முடியாது. இறைவிசுவாசத்தை மையமாகக் கொண்டு உலகளாவிய முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சமூகமாகக் கணிக்கப்படுகின்றனர்.

ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய கண்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பல நாடுகளைக் காணலாம். இவற்றுடன் சீனா, இந்தியா போன்ற சில நாடுகள் முஸ்லிம் நாடுகளாக விளங்காத போதும் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டுள்ளன. முன்னர் சோவியத் ஒன்றியத்திற்கு உட்பட்டிருந்த தஜிகிஸ்தான், கஸகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்றன இன்று தனி நாடுகளாக சுதந்திரமாக செயற்படுகின்றன. இதனால், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற முஸ்லிம் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவ்வாறே, யுகோஸ்லாவியாவின் இராணுவ

கெடுபிடிகள் இனச்சுத்திகரிப்பிலிருந்து விடுபட்டு சுதந்திரத்தை அனுபவிக்கும் பொஸ்னியாவும் முஸ்லிம் நாடுகள் வரிசையில் உள்ளது.

முஸ்லிம் உலகின் விவகாரங்களும் பிரச்சினைகளும் உலகளாவிய சமூகத்துடன் பின்னிப்பிணைந்துள்ளன. அவை நீண்ட வரலாற்றைக் கொண்டவை. ஐரோப்பிய கிறிஸ்தவ சமூகம் முஸ்லிம்களுக்கெதிரான குரோத மனப்பான்மையை பல்வேறு வடிவங்களில் காலாகாலமாக வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. முஸ்லிம் சமூகத்தை சமய அடிப்படையிலிருந்து நெறிபிறழச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம் உலகின் சனத்தொகை அதிகரித்து பலம் பெறுவது போலவே, சமகால முஸ்லிம் உலகிலும் பல்வேறு நவீன சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, எமது வரலாற்று முதுசங்களை இஸ்லாமிய கலாசாரத்தின் அடிப்படைகளைப் பற்றிய போதிய தெளிவைப் பெற்றிருப்பதும் சமகால முஸ்லிம் உலக விவகாரங்களுடன் அவற்றை தொடர்புபடுத்தி நோக்குவதும் இன்றியமையாதது. சமகால உலகின் சவால்களுக்கும், பிரச்சினைகளுக்கும் மத்தியில் முஸ்லிம்களது தனித்துவத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் சனத்தொகையை தனிநபர் அடிப்படையில் நோக்குகின்ற போது இஸ்லாத்தை தழுவுவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. பல்வேறு அரசியல் சமூக காரணிகளால் தற்கால முஸ்லிம் உலக சனத்தொகையை துல்லியமாக மதிப்பிடுவது சிரமமாகும். என்றாலும், முஸ்லிம் உலக சனத்தொகை 2 பில்லியனைத் தாண்டி கிறிஸ்தவ சனத்தொகையை விட வேகமாக அதிகரிப்பதாக கருதப்படுகின்றது. முஸ்லிம் நாடுகள் கூட்டிணைந்து முஸ்லிம் நாடுகளது அமைப்பு, ராபிததுல் ஆலமுல் இஸ்லாமி போன்ற உலகளாவிய அமைப்புக்களை உருவாக்கியுள்ளன. 1945 இல் அறபு லீக் என்ற அமைப்பு உருவானது. 1969 இல் இஸ்லாமிய மாநாட்டு அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

இஸ்லாமிய ஷரீஆவை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் சமூகம் வகைப்படுத்தப்படுகின்றது. இறைவிசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம் நாடுகள் என்று அடையாளப்படுத்திய போதும்

அனைத்து முஸ்லிம் நாடுகளிலும் இஸ்லாமிய ஷரீஆ சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதில்லை. ஷரீஆ நீதிமன்றங்களுடன் ஏனைய நீதிமன்றங்களும் அங்கு காணப்படுகின்றன. ஷரீஆ அடிப்படையில் முஸ்லிம்கள் வாழ்கின்ற நாடுகள் தாருல் இஸ்லாம் எனவும், இறைநிராகரிப்பாளர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து அவர்கள் வகுத்தளித்த சட்டங்கள் ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் தாருல் குப்ர் எனவும் வகைப்படுத்தி நோக்கப்படுகிறது. தாருல் இஸ்லாம் எனப்படும் முஸ்லிம்களது பூமியில் வாழ்க்கையின் அனைத்துத் துறைகளிலும் இஸ்லாமிய ஷரீஆ சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டும். தற்கால முஸ்லிம் உலகிலுள்ள 56 முஸ்லிம் நாடுகளுள் 21 நாடுகள் அறபு நாடுகளாகும். மொத்த முஸ்லிம் சனத்தொகையில் சுமார் 23% சிறுபான்மை நாடுகளிலுள்ள முஸ்லிம்களாகும். இவர்களுள் பெரும்பான்மையானோர் ஆசியாவில் வாழ்கின்றனர். முஸ்லிம் சனத்தொகைப் பரம்பல் பூகோள அடிப்படையில் நோக்கப்படுகின்ற போது, ஆபிரிக்க கண்டத்தில் 52% முஸ்லிம்கள் வாழ்கின்றனர். ஆசிய சனத்தொகையில் 32% முஸ்லிம்களாவர். ஐரோப்பா கண்டத்தில் 7.6% முஸ்லிம்கள் வாழ்வதாக 2011 ஆம் ஆண்டு திரட்டப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

50 வீதத்திற்கும் இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சனத்தொகையைக் கொண்ட நாடுகளை பின்வருமாறு நிரற்படுத்தலாம்.

**ஆபிரிக்கக் கண்டத்திலுள்ள சில முஸ்லிம் நாடுகள்**

| | |
|---|---|
| மொசாம்பிக் | நைகர் |
| கமரோன் | எகிப்து |
| தன்சானியா | செனகல் |
| எத்தியோப்பியா | தூனீசியா |
| நைஜீரியா | மொரோக்கோ |
| சூடான் | அல்ஜீரியா |
| கொமரோஸ் | ஜிபூதி |
| சார்ட் | சோமாலியா |
| காம்பியா | மோரிதானியா |
| மாலி | லிபியா |

**ஐரோப்பியாவிலுள்ள முஸ்லிம் நாடுகள்**

ஐரோப்பியாவிலுள்ள முஸ்லிம் நாடுகளான துருக்கி, பொஸ்னியா, அல்பானியா, கொஸொவோ ஆகிய நாடுகள் 60% இற்கு மேற்பட்ட முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டுள்ளன.

பிரான்ஸ், ஜேர்மன், ஐக்கிய இராச்சியம், ஸ்பெய்ன் போன்ற நாடுகளில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக விளங்கிய போதும், உள்நாட்டு சனத்தொகையில் ஒரு மில்லியனை விடகவும் கூடிய எண்ணிக்கையில் காணப்படுவதை அவதானிக்கலாம்.

ஐரோப்பாவில் வேகமாக வளர்ந்து வரும் சமயமாக இஸ்லாம் விளங்குகிறது. முஸ்லிம்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்தல், ஐரோப்பிய குடும்பங்களிலுள்ள சராசரி குழந்தை பிறப்பு வீதத்தை விட முஸ்லிம்கள் மத்தியில் பிறப்பு வீதம் அதிகமாகவுள்ளமை அதிக எண்ணிக்கையில் புதிதாக இஸ்லாத்தினுள் பிரவேசித்தல் போன்றன முஸ்லிம் சனத்தொகை துரிதமாக அதிகரிப்பதற்கான சில காரணங் களாக மேற்கத்திய ஊடகங்கள் அடையாளப்படுத்தியுள்ளன. ஐரோப்பிய முஸ்லிம்கள் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், இன்றைய இளஞ் சந்ததியினருள் அரைவாசி ஐரோப்பாவில் பிறந்தவர்கள் என்ற வகையில் 1950, 60 களில் புலம்பெயர்ந்த தமது பெற்றோர்களிலிருந்து வித்தியாசமாக காணப்படுகின்றனர்.

**ஆசிய கண்டத்திலுள்ள முஸ்லிம் நாடுகள்**

ஆசிய கண்டத்திலுள்ள நாடுகளுள் 50 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் சனத்தெகையைக் கொண்ட நாடுகள் பின்வருமாறு :

| | |
|---|---|
| கஸகிஸ்தான் | துருக்கி |
| லெபனான் | பாகிஸ்தான் |
| மலேசியா | பங்களாதேஷ் |
| கிர்கிஸ்தான் | ஈரான் |
| துருக்மானிஸ்தான் | ஆப்கானிஸ்தான் |
| புரூணை | மாலைதீவு |
| தஜிகிஸ்தான் | குவைத் |
| உஸ்பெகிஸ்தான் | பஹ்ரைன் |
| சிரியா | கட்டார் |

| | |
|---|---|
| அஸர்பைஜான் | ஐக்கிய அரபு இராச்சியம் |
| ஜோர்தான் | ஓமான் |
| இந்தோனேசியா | யமன் |
| ஈராக் | சஊதி அரேபியா |

உலகளாவிய முஸ்லிம் சமூகத்தை அவர்களிடையே காணப்படும் ஆளுமைப்பண்புகள் பூகோள ரீதியாக ஏற்படும் நெருக்கமான உறவுகள், ஒருமைப்பாடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் சமூகப்பிரிவுகளாக அடையாளப்படுத்தலாம்.

(1) அரேபிய முஸ்லிம்கள்
(2) ஈரான், ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், கஷ்மீர், பங்களாதேஷ் முஸ்லிம்கள்
(3) இந்தோனேசிய, மலேசிய முஸ்லிம்கள்
(4) ஆபிரிக்க முஸ்லிம்கள்
(5) துருக்கி, கோகாஸ் முஸ்லிம்கள்

நன்மையை ஏவி தீமையைத் தடுக்கின்ற இஸ்லாமிய பிரச்சாரப்பணியை மேற்கொள்கின்ற உன்னத சமூகமாக முஸ்லிம் சமூகம் விளங்குகின்றது. இஸ்லாமிய த.்.வாப் பணி உலகளாவியதாகும். முஸ்லிம் உலகு என்ற பதத்தை விடவும் "உம்மா" என்ற அறபுப் பதம் முழு முஸ்லிம் சமூகத்தையும் உள்ளடக்குகிறது. முஸ்லிம்கள் எத்தேசத்தில் வாழ்ந்தாலும் உலகளாவிய உம்மத்தின் ஓர் அங்கமாகக் கணிக்கப்படுகின்றனர். பலஸ்தீன், கஷ்மீர், ஈராக், ஆப்கானிஸ்தான் என எல்லாப் பகுதிகளிலும் முஸ்லிம்கள் பிரச்சினைகளை, நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும் முழு முஸ்லிம் சமூகமும் அதனை தமது பிரச்சினையாகக் கருதி குரலெழுப்புகின்றது. உலக மயமாக்கலின் பின்னர் இலங்கை போன்ற சிறிய தீவொன்றில் சிறுபான்மையாக வாழ்கின்ற முஸ்லிம்களுக்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது மேற்கிலும் கிழக்கிலுமுள்ள முஸ்லிம்கள் தமது கரிசனையை வெளிக்காட்டினர்.

உலகளாவிய முஸ்லிம் சமூகத்தை ஓரணியில் ஐக்கியப்படுத்தி ஒருமைப்பாட்டை ஏற்படுத்துகின்ற அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) ஏக இரட்சகனான அல்லாஹ்வை முஸ்லிம்கள் தமது இறைவனாக விசுவாசிக்கின்றனர். உலகிலுள்ள பல சமூகங்கள் இயற்கையை வழிபடல் அல்லது பல தெய்வ கடவுள் கொள்கைகளைக் கொண்டுள்ளமை அவதானிக்க முடிகிறது.

(2) உலகளாவிய முஸ்லிம்கள் ஒரே க.்.பதுல்லாவை நோக்கி ஐவேளை கடமையான தொழுகையை நிறைவேற்றுகின்றனர்.

(3) முஸ்லிம்களனைவரதும் புனித நூலாக அல்குர்ஆன் விளங்குகிறது. அல்லாஹ் அருளிய தெய்வீக வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டே ஷரீஆ சட்டநெறி வகுக்கப் பட்டுள்ளது. அகிலமெங்கும் வாழும் அனைத்து முஸ்லிம் களுக்கும் இஸ்லாமிய சிந்தனை, கலாசாரம், வாழ்க்கை நெறிக்குரிய அடிப்படைகளை அல்குர்ஆன் வகுத்தது. இந்த வகையில் இஸ்லாத்தின் மூலதாரமாகவுள்ள அல்குர்ஆன் உலக முஸ்லிம்களை ஒற்றுமைப்படுத்துகின்றது.

(4) அல்குர்ஆனின் மொழியாகவுள்ள அறபு மொழியைக் கற்குமாறு இஸ்லாம் அனைத்து முஸ்லிம்களுக்கும் ஆர்வமூட்டுகின்றது. இஸ்லாமிய வாழ்க்கை நெறியை சரியாகப் புரிந்து செயற்பட அறபு மொழியறிவு இன்றியமையாததாகும். அல்குர்ஆன் பல மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டாலும் அறபு மொழியிலேயே சர்வதேசத்திலும் பாராயணம் செய்யப்படுகிறது.

(5) உலகின் நாலாபக்கங்களிலும் பரந்து வாழ்கின்ற முஸ்லிம்கள் ஹஜ்கடமைக்காக வருடாவருடம் க.்.பதுல்லாவில் ஒன்று கூடுகின்றனர். உலகளாவிய முஸ்லிம்களின் பலத்தை ஒற்றுமையை பிரதிபலிக்கும் சர்வதேச மாநாடாக ஹஜ் கடமை அமைந்துள்ளது.

(6) இஸ்லாமிய வரலாற்றை நோக்குகின்ற போது, நபி (ஸல்) அவர்களது காலத்தில் இடம்பெற்ற போராட்டங்கள் முதல் இன்று பலஸ்தீன், கஷ்மீர் போன்ற விவகாரங்கள் என அனைத்திலும் முஸ்லிம் சமூகம் ஒரே சமூகம் என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதைக் காணலாம். வரலாற்றின் எல்லாக் கட்டங்களிலும் பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் ஏனையவர்களது இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கேற்று இறுகி பின்னிப் பிணைந்துள்ளதைக் காணமுடிகிறது.

(7) நபிமார்கள், தூதர்கள் தௌஹீதை அடிப்படையாகக் கொண்ட பிரசாரப் பணியை தமது சமூகத்தவர் மத்தியில் மேற்கொண்டனர். மனித வாழ்வை வளப்படுத்தி ஈருலகிலும் ஈடேற்றம் தரக்கூடிய பொதுவான ஒழுக்கப் பெறுமானங்கள் வழிகாட்டல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இறுதித் தூதர் (ஸல்) அவர்கள் தமது தூதுவப்பணியின் மூலம் மார்க்கத்தை சம்பூரணப்படுத்தினார்கள். இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து அகிலமெங்குமுள்ள மக்களனைவருக்கும் பொருத்தமான உலகளாவிய தூதாக இஸ்லாம் அமைந்துள்ளது.

சமகால முஸ்லிம் உலகை நோக்குகின்ற போது அதனது கேந்திர முக்கியத்துவத்தை உணரமுடிகின்றது. நீர்வளம், நிலவளம் என பூகோள ரீதியாக உற்பத்தி நடவடிக்கைகளுக்கு சாதகமான சூழ்நிலை காணப்படுகிறது. பல நாடுகளில் காணப்படாத இயற்கை வளங்கள் முஸ்லிம்களிடம் காணப்படுகின்றன. ஆசிய, ஆபிரிக்க, ஐரோப்பிய கண்டங்களை இணைக்கும் பாலமாக முஸ்லிம்கள் வரலாறு நெடுகிலும் இருந்துள்ளனர். சர்வதேச உறவுகளைப் பேணுவதிலும் கரிசனை காட்டி உள்ளனர்.

சுயஸ் கால்வாய் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து மத்திய தரைக்கடல் முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. செங்கடல் முழுமையாக முஸ்லிம்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்க பெற்றோலிய உற்பத்திகள் உட்பட ஏனைய வர்த்தக பண்டங்களை நகர்த்துவதிலும் இக்கடல் மார்க்கம் உதவுகின்றது. தென்மேற்கு ஆசியா, கிழக்கு ஆபிரிக்கா இடையிலான கடற்பயணத்தை செங்கடலூடாகக் கடக்கலாம். அறபுக்கடலும் முஸ்லிம்களின் செல்வாக்கிற்கு உட்பட்டுள்ளது. அறேபிய தீபகற்பத்தின் கிழக்குப் பகுதி ஈரான், ஈராக் என்பவற்றை நோக்கி அறபு வளைகுடாவின் கரைகள் அமைந்துள்ளன. கருங்கடலில் முஸ்லிம்களின் ஆதிக்கம் காணப்படுகிறது. வங்கக் கடலில் வங்காள முஸ்லிம்கள் பயனடைகின்றனர். கிழக்கு மலேசியா, புரூணை, இந்தோனேசியா, பிலிப்பைன் பகுதிகளை அண்டிய தாக சீனக்கடல் அமைந்துள்ளது. அத்திலாந்திக் சமுத்திரம், இந்து சமுத்திரம் என்பனவற்றை சூழவுள்ள முஸ்லிம் நாடுகள் கடல் வளத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. போக்குவரத்து, வர்த்தக நடவடிக்கைகளுக்கு மட்டுமன்றி இராணுவத்தின்



12-CM14799

கடற்படையின் பலத்தை உறுதிப்படுத்தவும் கடல் வளம் இன்றியமையாதது. முஸ்லிம் நாடுகள் ஒற்றுமையாகக் கூட்டிணைந்து செயற்படும் போது அவர்களிடையிலான வளப்பரிமாற்றம், வளங்களின் மொத்தப் பெறுமானம் அதிகரித்து அது ஏனைய சமூகங்களுக்கு சவாலாக அமையலாம். எனவே நாடுகளிடையே பிரிவினைகளைத் தோற்றுவித்து அல்லது போட்டியுணர்வை ஏற்படுத்தி மேற்குலக நாடுகள் இலாபமடைய முற்படுகின்றன.

கனிய வளங்கள், விவசாயம், விலங்கு வேளாண்மை என பலதுறைகளிலும் வளங்கொழிக்கும் செழிப்பு மிக்க இடங்களாக முஸ்லிம் நாடுகள் விளங்குகின்றன. உலகிலுள்ள பிரபல்யமான நதிகள் நீர்நிலைகள் முஸ்லிம் நாடுகளில் அமைந்துள்ளமை. விவசாய அபிவிருத்திக்கு வாய்ப்பாக அமைந்துள்ளன. பல்வேறு தட்பவெப்ப சூழ்நிலைகளையும் முஸ்லிம் நாடுகள் கொண்டுள்ள தால் ஒவ்வொரு பகுதிக்குமுரிய வித்தியாசமான விவசாயப் பொருட்களை அறுவடை செய்ய முடிகிறது. அடர்ந்த காடுகள், பசும்புல் தரைகள், பாலைவனங்கள், வயல் நிலங்கள் என எண்ணற்ற நிலத்தோற்றங்களை முஸ்லிம் நாடுகளில் காணலாம். விவசாய பொருட்களை அறுவடை செய்ய முடிகிறது. அடர்ந்த காடுகள், பசும்புல் தரைகள், பாலைவனங்கள், வயல் நிலங்கள் என எண்ணற்ற நிலத்தோற்றங்களை முஸ்லிம் நாடுகளில் காணலாம். விவசாய உற்பத்தியின் பல்வேறு துறைகளிலும் முஸ்லிம் நாடுகள் முன்னிலையில் இருப்பதைக் காணலாம். அரிசி உற்பத்தியை நோக்கினால் மலேசியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், எகிப்து, இந்தோனேசியா ஆகிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. கோதுமை உற்பத்தியில் ஈரான், ஆப்கானிஸ்தான், துருக்கி, பலுஜிஸ்தான், சிரியா, எகிப்து, ஈராக் என்பன பிரசித்தி பெற்றவை. மரக்கறி, பழவகைகள், பருத்தி எண்ணெய், சீனி, இறப்பர் என உலக உணவுத் தேவையினை நிவர்த்தி செய்யும் உற்பத்தியில் முஸ்லிம் நாடுகள் ஈடுபட்டுள்ளன. மூலிகைகள், விலங்குகள், விலங்கு உணவுவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உலக பருத்தி உற்பத்திகளில் 40% இஸ்லாமிய உலகு உற்பத்தி செய்கிறது. உலக இறப்பர் உற்பத்தியில் 72% நைஜீரியா உற்பத்தி செய்கிறது. உலக பெற்றோல் இயற்கை வளத்

தேவையில் 75% இற்கும் மேற்பட்ட பகுதியை இஸ்லாமிய உலக நாடுகள் நிவர்த்தி செய்கின்றன. பசளை தயாரிப்பதற்கு பயன்படும் பொசுப்பேற்றில் 21% முஸ்லிம் நாடுகளிலிருந்து பெறப்படுகிறது. ஈரான், துருக்கி, பாகிஸ்தான், சூடான், அல்பேனியா ஆகிய நாடுகளில் குறோம் காணப்படுகிறது. மொத்த நுகர்வுத்தேவையில் 19% இஸ்லாமிய நாடுகளிலிருந்து பெறப்படுகிறது. மனித வளம், தொழிலாளர் படை என்ற வகையிலும் முஸ்லிம் நாடுகளிலிருந்து பல்வேறு துறைசார் ஊழியர்கள் மத்திய கிழக்கு உட்பட பல நாடுகளில் கடமை யாற்றுகின்றனர்.

நபி (ஸல்) அவர்களது ஹிஜ்ரத்தைத் தொடர்ந்து மதீனா காலப்பிரிவில் நல்லாட்சியை நிலை நாட்டுகின்ற அரசியல் தலைமைத்துவம் எவ்வாறு அமைய வேண்டுமென்பதை நடைமுறைப்படுத்தி எடுத்துக்காட்டினார்கள். நபி (ஸல்) அவர்களது வழிமுறையைப் பின்பற்றி நேர்வழி நடந்த கலீபாக்களான அபூபக்கர், உமர், உஸ்மான், அலி (றழி) இஸ்லாமிய ஆட்சியை விரிவுபடுத்தினர். இஸ்லாத்தின் தூதை உலகெங்கும் பிரசாரம் செய்வதற்கு வழிவகுத்தனர். அல்லாஹ் அருளிய சட்டங்களுக்கேற்ப நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கமைய ஆட்சியை ஒழுங்கமைத்து கிலாபத் கோட்பாடு என்ற சிந்தனையை உயிர்ப்பித்தனர்.

இஸ்லாம் உலகின் மாபெரும் சமயமாகவும் பலம் பொருந்திய அரசியல் சக்தியாகவும் விளங்கியது. பின்னர் வந்த ஆட்சியாளர்கள் டமஸ்கஸ், பக்தாத், கொன்ஸ்தாந்துநோபிள் என ஆட்சித் தலைநகர் இடம் மாறத் தொடங்கியது. இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பலவீனப்படுத்தும் பல்வேறு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு அந்நிய சக்திகள் கூட்டிணைந்து அவற்றை அமுல்படுத்தின. கி. பி. 1924 இல் முஸ்லிம் உலகிற்கு தனித்துவமாக விளங்கிய கிலாபத் ஆட்சி முறை முற்றுமுழுதாக இல்லாதொழிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முஸ்லிம் உலகுக்கெதிராகப் பல்வேறு சதித்திட்டங்கள் யூத, கிறிஸ்தவ பின்னணி கொண்ட சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட வண்ணமுள்ளன. அவற்றுள் சிலவற்றைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

ஐரோப்பிய மறுமலர்ச்சியின் பின் இந்தோனேசியா உட்பட்ட தூரகிழக்கு நாடுகள், மத்திய கிழக்கு நாடுகள், துருக்கியின் ஆதிக்கத்தின்கீழிருந்த போல்கன் குடா நாடுகள் முதலான முஸ்லிம் நாடுகள் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டன. இதனால், பல முஸ்லிம் நாடுகள் தமது அரசியல் சுதந்திரத்தை இழந்தன. அதன் மூலம் அந்நாடுகளின் பொருளாதார வளங்கள் சுரண்டப்பட்டன. இந்நாடுகளைத் தொடர்ந்து தம் ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்காக பல முயற்சிகளை காலனித்துவ நாடுகள் மேற்கொண்டன. முஸ்லிம்களின் ஐக்கியத்தை குலைப்பதற்காக முஸ்லிம்களிடையே தேசிய உணர்வை மேலோங்கச் செய்தன. இதனால் பல நூற்றாண்டுகளாக துருக்கியின் தலைமையில் ஒன்றுபட்டு இருந்த துருக்கி அறபு ஐக்கியத்தை அவை குலைத்தன. இதன் விளைவாக 1924 இல் கிலாபத் ஒழிக்கப்பட்டது மட்டுமன்றி அறபு மக்கள் வாழ்கின்ற ஆபிரிக்க மத்திய கிழக்கு பிரதேசங்கள் சின்னஞ்சிறு நாடுகளாக சிதறடிக்கப்பட்டன. அவை இன்று ஒன்றுடன் ஒன்று மோதிக்கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் முஸ்லிம் உலகின் அரசியல் பலம் சிதறடிக்கப்பட்டுள்ளது. அதன் விளைவாக அவற்றின் பொருளாதாரமும் சுரண்டப்பட்டு வருகின்றது. முதலாம் உலக மகா யுத்தத்தில் பின்பு தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச சங்கம் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின் தோற்று விக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை என்பவற்றின் ஊடாக சர்வதேச அங்கீகாரம் என்ற போர்வையில் மேற்கத்திய நாடுகள் முஸ்லிம் நாடுகளை தொடர்ந்து சுரண்டி வருவதுடன் முஸ்லிம் நாடுகளில் எழுகின்ற சமய உணர்வுகளையும் சுதந்திர உணர்வுகளையும் அடக்கியாளப் பிரயத்தனம் செய்கின்றன.

தமது இலக்கை இராணுவ நடவடிக்கைகளால் அன்றி முஸ்லிம் சமூகத்தை மேற்கு நாகரிகத்தை நோக்கிய சமூகமாக மாற்றியமைப்பதன் ஊடாக அடைய அவை முயற்சிக்கின்றன. அதற்காகவே, “ஜனநாயகம்” என்ற போர்வையுள் இருந்து தம் அடிவருடிகளை முஸ்லிம் நாடுகளின் தலைவர்களாக்கி முஸ்லிம் சமூகத்தை தொடர்ந்து பலவீனமாக்கவும் சுரண்டவும் பாடுபடுகின்றன. இதற்குத்துணையாகவே முஸ்லிம் சமூகத்தின் ஷரீஆ சட்டம், கல்வி, குடும்ப, சமூக அமைப்பு என்பவற்றை குறைகண்டு விமர்சிக்கின்றனர் முஸ்லிம்களின் தனித்துவமான மேற்குறித்த காலாசார அம்சங்களுக்குப் பதிலாக மேற்கின் சட்டம், கல்வி, கலாசாரம் குடும்ப சமூக அமைப்பு என்பவற்றை முஸ்லிம் நாடுகளில் திணிக்க முயற்சிக்கின்றன. இதன் விளைவாக இன்று முஸ்லிம் நாடுகள் ஷரீஆ சட்டத்தைப் புறக்கணித்து தனியார் சட்டம் என்ற எல்லையுள் அதனை

மட்டுப்படுத்தி வாழ்வின் ஏனைய தொழில்பாடுகளில் எல்லாம் ஐரோப்பிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் வெற்றி கண்டுள்ளன.

முஸ்லிம் சமூகத்திற்கு பெருமை தேடித் தந்த இஸ்லாமிய கல்லூரிகளின் (மத்ரஸாக்கள்) செல்வாக்கை ஒழித்து ஐரோப்பிய பாணியிலான கல்லூரிகள், பல்கலைகக்கழகங்களை அறிமுகப்படுத்தி சமய சார்ப்புக்கல்விக்குப் பதிலாக சமய சார்பற்ற கல்வியை முஸ்லிம் மாணவர்களிடையே புகுத்துவதில் ஐரோப்பிய உலகம் வெற்றி கண்டுள்ளது. இதனால் முஸ்லிம் நாட்டின் தலைவர்கள், கல்விமான்கள் என்று தம்மை அழைத்துக்கொள்பவர்களே இன்று இஸ்லாமிய அரசியற் சித்தாந்தத்துக்கும் இஸ்லாமிய கல்விக் கொள்கைக்கும் இஸ்லாமிய கலாசாரத்துக்கும் முரணாக குரல் கொடுப்பதைக் காண முடிகிறது.

இஸ்லாமிய சமூகத்தின் ஆணிவேராக அமைந்த குடும்ப அமைபபை சிதறடித்து அதனயாகக் கட்டி எழுப்பியிருந்த ஒழுக்க மாண்புகளை உதாசீனம் செய்து விடுவதன் மூலம் முஸ்லிம்களின் இலட்சிய வாழ்வை அழித்துவிட மேற்குலகு முயற்சிக்கின்றது. அதற்காக, நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வசதிகளையும் தொடர்பாடற் சாதனங்களையும் திட்டமிட்டு பயன்படுத்தி வருகின்றனர். அவர்களின் இம்முயற்சிக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களைப் பிற்போக்கு வாதிகளாகவும். பயங்கரவாதிகளாகவும் உலகுக்குக் காண்பிக்க முயற்சிக்கின்றனர். இஸ்லாமிய விழுமியங்களை காலத்துக்குப் பொருந்தாதவை என்று சித்தரிக்க அனைத்து வகைப் பிரயத்தனமும் மேற்கொள்கின்றனர்.

முஸ்லிம்கள் இஸ்லாமிய சிந்தனை வழி ஒன்றுபடுவது தமக்குப் பேராபத்தாக அமையும் என்ற அச்சத்தில் முஸ்லிம் சமூகத்தில் எழுகின்ற இஸ்லாமிய அடிப்படையிலான சீர்திருத்த முயற்சிகளை முளையிலேயே கிள்ளி எறிய முஸ்லிம் நாடுகளில் உள்ள தம் அடிவருடிகளான ஆட்சியாளர்களையே பயன்படுவதைப் பார்க்கலாம்.

தற்கால முஸ்லிம் உலகு தனது முன்னோர்கள் கட்டி எழுப்பிய கல்விப் பாராம்பரியத்தைத் தொலைத்து ஐரோப்பிய சுயநலமிகளின் சிந்தனையில் மூழ்கி ஆழ்ந்த உறக்க நிலையில் உள்ளது. இதுவே அதன் தற்கால சவாலாகவும் மாறியுள்ளது. இதனை, முஸ்லிம் அறிஞர்கள் இனங்கண்டு ஆவன செய்யாவிட்டால் தற்கால முஸ்லிம் உலகு வீழ்ச்சியை நோக்கியே சரியும் என்பதிற் சந்தேகமில்லை.

**கீழைத்தேய வாதமும் கிறிஸ்தவ மயமாக்கலும் :**
இஸ்லாமிய மூலாதாரங்கள், நபி (ஸல்) அவர்களது வாழ்க்கை, அவர்களது மனைவியர் என பல விடயங்கள் குறித்து உண்மைக்குப் புறம்பான சந்தேகங்களை, திரிபுகளை குழப்படிகளை ஏற்படுத்தி சிந்தனை ரீதியாக மக்களை இஸ்லாத்தை விட்டும் தூரப்படுத்தும் நடவடிக்கைகளை யூத கிறிஸ்தவர்கள் மேற்கொண்ட வண்ணமுள்ளனர். இதற்கென தனியான ஆய்வு நிறுவனங்களை கல்வி நிறுவனங்களுடன் இணைந்ததாக அமைத்துள்ளனர். அவ்வாறே, முஸ்லிம்கள் மத்தியில் கிறிஸ்தவ பிரசாரத்தை மேற்கொள்வது பற்றி மாநாடுகள் நடத்தப்பட்டு கிறிஸ்தவ பிரசாரகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பிழையான கோட்பாடுகள் :**
இஸ்லாம் வாழ்க்கை அனைத்திற்கும் வழிகாட்டும் சம்பூரண மார்க்கமென்ற நிலையை மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. கம்யூனிஸம், காதியானிஸம், பஹாயிஸம் என இஸ்லாத்திற்கு முரணான கோட்பாடுகள் முஸ்லிம் நாடுகளுக்குள் பரவின. இஸ்லாமிய அகீதாவில் பலவீனத்தை ஏற்படுத்துவதன் மூலம் முஸ்லிம்களிடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்குறிப்பிட்ட யூத, கிறிஸ்தவ சதி முயற்சிகளுக்கெதிராக முஸ்லிம் அறிஞர்கள் கல்வி நிறுவனங்கள், சமூக அமைப்புகள் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. என்றாலும், பின்வரும் விளைவுகள் ஏற்பட்டமை தவிர்க்க முடியாமல் போனது.

01. **இஸ்லாமிய ஷரீஆ சட்டங்களை அமுல்படுத்துவதை விட்டுத்தூரமானமை :**

காலத்தின் சவால்களுக்கேற்ப இஜ்திஹாதைப் பயன்படுத்தி சட்டப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் பின்னடைவு ஏற்பட்டது. கண்மூடித்தனமாக பாரம்பரியங்களைப் பின்பற்றுவதும் அறிவு ஆராய்ச்சிகளினூடாக பகுப்பாய்வு செய்யாமல் மனவெழுச்சி களுக்கு உட்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டது.

இந்நிலையிலிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாக்க சீரான மார்க்க சிந்தனைகளை முன்வைக்க இஸ்லாமிய இயக்கங்கள் தோன்றின. ஸலபி சீர்திருத்த சிந்தனைகளுடாக கி. பி. 18 ஆம் நூற்றாண்டில் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் அறேபியாவிலும், ஸனூஸிய்யா இயக்கம் லிபியாவிலும், சூடானில் மஹ்திய்யா இயக்கமும் தோன்றின. முஸ்லிம் உலகின் ஏனைய பகுதிகளிலும் இஸ்லாமிய சிந்தனையின் தூய்மையை பாதுகாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், தூனீசியாவில் 1914 இல் பிரான்சிய சட்டங்களிலிருந்து பெறப்பட்ட மனித சட்டங்கள் அமுலுக்கு வந்தன. இவ்வாறு ஏனைய பகுதிகளிலும் ஷரீஆ அமுலாக்கத்திற்கு அச்சுறுத்தல்கள் தோன்றின.

02. உஸ்மானிய கிலாபத்தை இல்லாதொழிப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்தமை. கி. பி. 1924 இல் முஸ்தபா கமால் துருக்கிய மக்கள் குடியரசின் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்டார். கிலாபத்திற்கும் அரசியலுக்கு மிடையில் பிரிவினை ஏற்படுத்தப்பட்டது. மதச் சார்பற்ற துருக்கிய தலைமைகள், ஸியோனிஸ் சக்திகள், சில ஐரோப்பிய நாடுகள் கூட்டிணைந்து மார்ச் 2 ஆம் திகதி 1924 இல் கிலாபத் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தன. மதச் சார்பற்ற ஷரீஆவை சட்டமாகக் கொள்ளாத ஆட்சி உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பின்வரும் அடிப்படைகளும், சிந்தனைகளும் ஊக்குவிக்கப்பட்டன.

1. மதச்சார்பற்ற சிந்தனை.
2. மேற்கத்திய கலாசார மோகம்.
3. கோத்திர பிராந்திய உணர்வைத் தூண்டியமை.
4. அல்குர்ஆனுடனான தொடர்பைத் துண்டிக்க முயன்றமை. அறபு மொழிக்கெதிரான நடவடிக்கைகள் மூலம் அதன் செல்வாக்கை குறைக்க முற்பட்டமை.
5. இஸ்லாமிய அந்நியப்படுத்தப்பட்ட கல்வித் திட்டம்.
6. இஸ்லாமிய உம்மத்தின் அடையாளத்தை இல்லாதொழிக்க முயன்றமை போன்ற பல சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இஸ்லாமிய சிந்தனையில் தேக்க நிலையை உருவாக்கும் முயற்சி, அண்மைக்காலத்தில் அரசியல் வழிமுறைகளூடாக மேற் கொள்ளப்படுகிறது. மேற்குலகின் நேசர்களாக முஸ்லிம்கள் விளங்க வேண்டுமாயின் ஜிஹாத் பற்றிய சிந்தனை முற்று முழுதாக அகற்றப்படவேண்டுமென கோஷமெழுப்பப்படுகிறது. சனநாயக அடிப்படையில் இஸ்லாமிய இயக்கங்கள் வெற்றிகண்ட போதும் அவர்களது அரசியல் ஆதிக்கத்தை கட்டுப்படுத்துவ தற்கான நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் முடுக்கி விடுகின்றன.

## இஸ்லாமிய கலைகள்

## முஸ்லிம் அறிஞர்களின் அறிவியல் பங்களிப்புகள்

### விஞ்ஞானம்

அல் குர்ஆன் வேதநூலாகவே அருளப்பட்டது. எனினும், சமய சிந்தனைக்கும், விஞ்ஞான சிந்தனைக்கும் இடையே வேற்றுமையை அந்நூலில் காணமுடியாது. மாறாக, அவ்விரண்டிற்கும் இடையே நெருக்கான உறவு இருப்பதையே காணலாம். சமயமும் விஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதல்ல. சமய உண்மைகளை விஞ்ஞானம் நிறுவுவதையே காணமுடிகிறது. இதனால், அல்குர்ஆனில் விரவி வந்துள்ள விஞ்ஞானத்துறைப் போதனைகளை முஸ்லிம்கள் ஆழ்ந்து சிந்தித்தனர். பிரபஞ்சம் முழுவதும் அல்லாஹ்வுக்கு முற்றிலும் அடிபணிகிறது என்ற கருத்து இஸ்லாத்தின் தௌஹீத் கோட்பாட்டுக்கு உட்பட்டதாகும். ஆதலால், பிரபஞ்சம் பற்றிய ஆய்வை இஸ்லாமிய ஆய்வாகவே முஸ்லிம்கள் கருதினர்.

விஞ்ஞான அறிவு அவதானம், ஆழ்ந்த சிந்தனை ஆகிய இரு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது. முன்னையது புலன்களின் பிரயோகத்தோடும், பின்னையது உள்ளத்தின் செயற்பாட்டோடும் தொடர்புடையனவாக இருக்கின்றன.

இறை படைப்புகளை அவதானிப்பதும், அதனைப் பற்றிச் சிந்திப்பதும் இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதிலும், அவனது எல்லையற்ற வல்லமையிலும் மகிமையிலும் ஏனைய பண்புகளிலும் ஒருவன் நம்பிக்கை கொள்வதற்கு வழிவகுக்கின்றன. குர்ஆனில் கூறப்பட்டுள்ள இப்றாஹீம் நபியின் சரிதையில், விண்மீன்களும், சந்திரனும், சூரியனும் மறைந்து விடுவதை அவதானித்துப் பார்த்து விட்டு அவர் பின்வருமாறு கூறியதாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

"மறைந்து போகக் கூடியவற்றை நான் நேசிக்க மாட்டேன்." அதாவது அவற்றின் வருகை நிலையற்ற தன்மை வாய்ந்தது. பிரபஞ்சத்தைப் படைத்த நித்தியமான ஓர் இறைவன் இருக்க வேண்டும் என்பதில் இப்றாஹீம் (அலை) நம்பிக்கை கொண்டார் என்பதையே இது காட்டுகிறது. இயற்கைத் தோற்றப்பாடுகளை அவதானிப்பதானது இறைவனில் நம்பிக்கை கொள்வதற்கு வழிவகுக்கும் என்பதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"இப்றாஹீம் உறுதி கொள்ளும் பொருட்டு வானங்களிலும் பூமியிலுமுள்ள நம்முடைய சிருஷ்டிகளை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்தோம்".

சில உண்மைகளைக் கண்டு விளங்கிக்கொள்வதற்காக அவதானித்தவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பது அவசியமாகும். அல்குர்ஆன் சிந்தனையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியிருக்கின்றது.

தமது புலன்களைக் கொண்டு அவதானிக்காதவர்களும், உள்ளங்களைக் கொண்டு சிந்திக்காதவர்களும் கால்நடைகளுக்கு நிகரானவர்களாகவும், சில வேளைகளில் அவற்றை விடவும் மோசமானவர்களாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறார்கள்.

விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சித் துறைகளில் ஈடுபடுவதற்குத் தூண்டக்கூடிய வகையில் அல்குர்ஆன் சில தெளிவான அறிவுறுத்தல் களை விசுவாசிகளுக்கு வழங்கியிருக்கின்றது. சந்திரனின் பல்வேறு நிலைகள், குறிப்பிட்ட வேகத்தில் சூரியன், சந்திரன் ஆகியவற்றின் சுழற்சி, குறிப்பிட்ட ஒழுங்கிற்கேற்ப அவற்றின் அமைவு, படைப்புக்கள் அனைத்தும் சோடி சோடியாகப் படைக்கப்பட்டிருத்தல் என்பன போன்ற பிரபஞ்ச இயற்கைத் தோற்றப்பாடுகள் பற்றி அடிக்கடி பேசும் அல்குர்ஆன் வசனங்கள் விஞ்ஞான ஆராய்ச்சிக்கான தூண்டுதல்களைத் தருகின்றன.

அல்குர்ஆன் எடுத்துரைத்துள்ள ஏராளமான பிரபஞ்ச உண்மைகளில் வெகு சொற்பமான அளவையே நவீன விஞ்ஞானம் இன்று புரிந்து கொண்டுள்ளது.

தொழுகை, நோன்பு, ஹஜ் போன்ற குர்ஆனியக் கட்டளைகளும் விஞ்ஞானக் கல்விக்கான தூண்டுதல்களை வழங்குகின்றன. தொழுகை நேரங்களில் முஸ்லிம்கள் தமது முகங்களைக் க.்.பாவின் பக்கம் திருப்பிக் கொள்ளக் கூடிய வகையில் முஸ்லிம்களுக்குக் க.்.பாவின் திசையையும், தொழுகைக்குரிய நேரங்களையும் நிர்ணயிக்க வேண்டியிருந்தது. இது முஸ்லிம்கள் வாழ்ந்த அனைத்து இடங்களுக்குமுரிய அகல, நெடுங்கோடுகளையும், சூரியனின் குத்துயரத்தையும் நிர்ணயிக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியது.

ஹஜ், ஜிஹாத், வர்த்தகம் போன்ற நோக்கங்களுக்காக முஸ்லிம்கள் கடலிலும், தரையிலும் நீண்ட நெடும் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இந்நடவடிக்கைகள் அவர்களது வழிகாட்டுதலுக்குத் தேவையான நட்சத்திர நிலைகள் பற்றிய படங்களைத் தயாரிக்கும் ஆர்வத்தைத் தூண்டிவிட்டன. புவியியற் கல்வியை விருத்தி செய்வதில் ஹஜ் முக்கியமானதொரு பங்கினை வகித்தது. மக்காவுக்குத் தமது புனித யாத்திரையை மேற்கொள்ளத் தொடங்குவதற்கு முன்னர் ஹஜ்ஜாஜிகள், மக்காவுக்குச் செல்லும் வழியிலுள்ள பிரதேசங்கள் பற்றித் தேவையான அனைத்துத் தகவல்களையும் திரட்டிக் கொள்ளலாயினர். இவ்வகையில் எழுதப்பட்ட நூல்கள், பல நாடுகளினது மத, சமூக, அரசியல், பொருளாதார, புவியியல், விவசாய ஆய்வுகளை உள்ளடக்கியனவாக இருந்தன.

இஸ்லாத்தின் வருகைக்குப் பின் ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் இஸ்லாமிய சாம்ராஜ்யமானது அரேபியாவிலிருந்து, அத்திலாந்திக் கரை வரையும் பரந்து விரிந்திருந்தது. ஜிஸ்யா, கராஜ், உஷ்ர், கனீமத் என்பன இப்பரந்த இராச்சியத்தின் வருமானத்திற்குரிய பிரதான மூலங்களாக இருந்தன. கணக்கு வழக்குகளைப் பேணி வருவதற்கு எண் கணிதத்தில் சிறந்த அறிவு தேவைப்பட்டது. கட்டடங்களையும் பள்ளிவாயில்களையும் நிர்மாணிப்பதற்கு திரிகோண கணிதம், கேத்திர கணிதம், அட்சர கணிதம், எண் கணிதம் என்பவற்றில் ஆழ்ந்த அறிவு தேவைப்பட்டது.

அல்குர்ஆன் இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்திற்கான முன்னேற்பாடுகளை வகுத்துக் கொடுத்திருக்கிறது. சிக்கலான வாரிசுரிமைச் சொத்தின் நடைமுறைகளைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு எண் கணிதத்தில் சிறந்த அறிவு பெற்றிருப்பது அவசியமாகும். இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டத்திற்கிணங்க உரிமையாளர்களின் பங்குப் பிரிவுகள் பற்றி பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

பூமியின் கீழுள்ள கனிப்பொருட்கள் பற்றிய அறிவையும் அல் குர்ஆனே வழங்கியுள்ளது. தாவரவியல் பற்றி அல் குர்ஆனில் பல இடங்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

> "மேகத்தில் இருந்து மிக்க பாக்கியம் உள்ள மழையை நாம் வருவிக்கச் செய்து அதனைக் கொண்டு பல சோலை களையும், அறுவடை செய்யும் தானிய மணிகளையும் முளைக்கச் செய்கின்றோம். அடுக்கடுக்காக (கனிகள்) நிறைந்த குலைகளை யுடைய நீண்டு வளரும் பேரீச்ச மரங்களையும் (முளைப்பிக்கச் செய்து) அடியார்களுக்கு ஆகாரமளிக்கின்றோம்...."(50:9-11)

> "வித்துக்களையும், கொட்டைகளையும் நிச்சயமாக அல்லாஹ் தான் வெடி(த்து முளை)க்கச் செய்கின்றான்....."(06:95)

தாவரவியல் பற்றி எடுத்தாண்ட மேற்குறித்த கருத்துக்களால் தூண்டப்பட்டதால் முஸ்லிம்கள் பலர் இத்துறையில் நிறைய ஈடுபாடு காட்டினார்கள். ஜாபிர் பின் ஹய்யான், அபூ சஈத் அல் அஸ்மஇ, இப்னு பாச்சா, இப்னுல் லதீப் அல் பக்தாதி, அல் கஸ்னவி போன்றவர்கள் இத்துறையில் அதிக பங்களிப்பு செய்துள்ளனர்.

விவசாய உற்பத்தியையும் அல் குர்ஆனும், சுன்னாவும் ஊக்கு வித்தன. "நாளை உலகம் அழியப்போகிறது என்று அறிந்தாலும் இன்று நீ ஒரு மரத்தை நடு" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அல்குர்ஆனும் விவசாய உற்பத்தியை விதந்து பாராட்டியுள்ளது.

இவ்வாறான பல குர்ஆன் ஆயத்துகளால் உந்தப்பட்ட முஸ்லிம்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே விவசாயத்தில் அதிக ஈடுபாடு காட்டினர். உற்பத்தியின் தரத்தைக் கூட்டினர். உற்பத்தியைப் பெருக்கி புதிய தாவரங்களை அறிமுகப்படுத்தினர். விவசாய உத்திகளைக்

கையாண்டனர். நிலம், நீர், தாவரங்கள், மிருகங்கள் என்பவற்றை விவசாயத்துக்குப் பயன்படுத்தும் அறிவைப் பெருக்கினர். பல அறிஞர்கள் விவசாயம் பற்றிய நூல்களை எழுதினர்.

அல் குர்ஆன் மனித உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிடும் போது, சப்தம் கொடுக்கக்கூடிய பிசுபிசுப்பான களிமண்ணால் முதல் மனிதனைப் படைத்ததாக குறிப்பிடுகிறது. மற்றோர் இடத்தில் "ஆரம்பத்தில் மனிதன் மண்ணால் படைக்கப்பட்டான். ஆயினும், பின் ஒரு துளி இந்திரியத்தில் இருந்து ஆண், பெண் என்று இருபாலாராகப் பிரிக்கப்பட்டனர்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகை மண்டலத்தில் இருந்து வானத்தைப் படைத்தான் என்றும், அனைத்துப் படைப்பினங்களையும் இனவிருத்தி நோக்கி சோடி சோடியாகப் படைத்துள்ளதாகவும் குறிப்பிடுகிறது.

ஒரு பெண்ணிண் கர்ப்பப் பையில் விந்தானது பல்வேறு படித்தரங் களில் மாற்றமும் வளர்ச்சியும் அடைந்து ஒரு பூரண வளர்ச்சியடைந்த குழந்தையின் அமைப்பைப் பெறுவதை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

> "நிச்சயமாக (ஆரம்பத்தில் முதல்) மனிதனைக் களிமண்ணின் சத்திலிருந்து சிருஷ்டித்தோம். பின்னர் அதனை நாம் இந்திரியமாக்கி ஒரு பத்திரமான இடத்தில் வைத்தோம். பின்னர் அந்த இந்திரியத்தை இரத்தக் கட்டியாக்கினோம். பின்னர் அவ்விரத்தக் கட்டியை மாமிசப் பிண்டமாகச் செய்தோம். பின்னர் அம்மாமிசப் பிண்டத்தில் இருந்து எலும்பை உற்பத்தி செய்து அவ்வெலும்புக்கு மாமிசத்தை அணிவித்தோம். பின்னர் அதனை முற்றிலும் வேறொரு படைப்பாக வளரச்செய்தோம். பெரும் அருட்பேறுடைய அல்லாஹ் படைப்பாளர்களிலெல்லாம் மிக அழகான படைப்பாளன்." (23 : 12 - 16). அல் குர்ஆன் மனித உற்பத்தி பற்றி சிந்திக்க எவ்வாறு வழிகாட்டுகிறது என்பதனை இவ்வசனம் தெளிவு படுத்துகின்றது. நவீன அறிவியலானது மிகத் துல்லியமான உபகரணங்களின் துணை கொண்டு கண்டுபிடித்த, தாயின் கருவறைக்குள் நிகழும் இந்த அற்புத வளர்ச்சிப் படிவங்களைப் பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இவ்வளவு நுட்பமாக அல்குர்ஆன் விளக்கியிருக்கும் பான்மையானது அது மனித சிந்தனையின் விளைவன்றி, ஒரு தெய்வீக வெளிப்பாடே என்பதை சந்தேகமின்றி நிறுவுவதாக கலாநிதி 'கீத் மூர்' குறிப்பிடுகிறார்.

இதைப் போலவே இரசாயனக் கலவைகள் பற்றியும் அல் குர்ஆன் சிந்திக்க வழிகாட்டுகிறது.

"உமதிறைவன் தேனிக்கு உள்ளுணர்ச்சியை உண்டாக்கினான். மலைகளிலும், மரங்களிலும், உயர்ந்த கட்டிடங்களிலும் நீ கூடுகளை அமைத்துக் கொள். அன்றி, நீ எல்லாவிதமான கனி(களின் மலர்) களிலிருந்தும் அருந்தி உமதிறைவனின் எளிதான வழிகளில் (உன்னுடைய கூட்டுக்குள்) ஒடுங்கிச் செல். இதனால், அதன் வயிற்றிலிருந்து பல நிறங்களையுடைய ஒரு பானம் (தேன்) புறப்படுகிறது. அதில் மனிதனுக்கு நிவாரணியுண்டு..." (16 : 68 − 69)

அல்குர்ஆனின் இவ்வாயத்து சடப் பொருட்கள் பல அளவுகளில் ஒன்றுடன் ஒன்று கலப்பதால் ஏற்படும் மாற்றங்கள் பற்றி சிந்திக்கத் தூண்டியது. உடலில் ஏற்படும் வலியை உணரக்கூடிய தன்மை மூளைக்கே உண்டென பலரும் நம்பி வந்தனர். ஆனால், நரக வேதனை பற்றிக் கூறவந்த அல்குர்ஆன், அவர்களுடைய தோல்கள் கருகிவிடும் போதெல்லாம் அவர்கள் வேதனையை அனுபவிப்பதற்காக அவை அல்லாத வேறு தோல்களை நாம் அவர்களுக்கு மாற்றிவிடுவோம் (4 : 56) என்று குறிப்பிடுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டபோது வலி உள்வாங்கிகள் தோலில் அமைந் திருப்பதால் தான் மனிதன் வலியை உணர்கிறான் என நிரூபிக்கப்பட்டது.

அண்மைய நூற்றாண்டுகளில் பல உண்மைகளை அறிவியல் கண்டறிந்துள்ளது. அவை, ஐரோப்பிய, அமெரிக்க அறிஞர்களின் சாதனைகளாகவே கொள்ளப்படுகின்றன. அல்குர்ஆனை நுணுக்கமாக ஆராய்பவர்கள் இந்த அறிவியல் உண்மைகள் தெளிவாகவோ, மறைமுகமாகவோ 14 நூற்றாண்டுகளுக்கு முன்னர் அல்குர்ஆனில் குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்டு கொள்வர்.

அல்குர்ஆனில் மேலே சுட்டியது போன்ற ஆயத்துகள் பல விஞ்ஞான ரீதியான உண்மைகளைப் புலப்படுத்தி அக்கலைகளை வளர்த்துச் செல்லும் மனப்பாங்கையும் முஸ்லிம்களிடம் தோற்றுவித்தது. அதன் விளைவாகத்தான் முஸ்லிம்களிடையே விஞ்ஞானக் கலை அப்பாஸியர் காலமுதல் வளர்ச்சியடைந்ததைக் காணமுடிகிறது.

அல்குர்ஆனின் போதனைகளின் தூண்டுதலால் இயற்கையின் படைப்பினங்களில் அவதானத்தைச் செலுத்தி, படைப்புகளில் காணப்படும் சீரமைப்பையும் ஒழுங்கையும் அடிப்படையாக வைத்து இயற்கையைப் பிணைத்திருக்கும் இயற்கை விதிகளைக் கண்டறிந்த முஸ்லிம் அறிவியல் அறிஞர்கள் பெருமைக்குரிய ஓர் அறிவியல் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பினர். வானியல், புவியியல், மருத்துவம், பௌதிகம், இரசாயனம், தாவரவியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் முஸ்லிம் அறிவியல் மேதைகள் பங்களிப்புச் செய்தனர். முஸ்லிம்கள் கிரேக்க, பாரசீக, இந்திய அறிவியல் பாரம்பரியங்களை ஆழமாகக் கற்று அவற்றில் காணப்படும் குறைகள், பலவீனங்களை இனங்கண்டு, தமது ஆய்வுகளின் அடிப்படையில் புதிய அம்சங்களை இணைத்து அதற்கேயுரிய சிறப்பியல்புகளைக் கொண்ட இஸ்லாமிய அறிவியல் பாரம்பரியத்தைக் கட்டியெழுப்பினர்.

## தத்துவம்

தத்துவஞானம் என்ற பதம் அறபியில் 'இல்முல் பல்ஸபா' என அழைக்கப்படுகிறது. இஸ்லாத்திற்கும் தத்துவத்திற்குமிடையிலான தொடர்பு மிக நெருக்கமானதாகும். இஸ்லாத்திற்கு முன்னரே அரேபியர் அல்லாஹ், ரிஸாலத், மறுமை என்பன பற்றி அறிந்திருந்தனர். இது, அவர்களிடம் தத்துவஞானம் சார்ந்த சில கண்ணோட்டங்கள் காணப்பட்டன என்பதைக் காட்டுகிறது. அரேபியர்களுக்கு வஹி பற்றிய அறிவு இருந்தது. அவர்களிடம் குர்ஆன் அருளப்பட்டது. குர்ஆன் வெறும் உபதேச, வரலாற்றுப் புத்தகமாக அன்றி, மெய் விளக்கவியல், பௌதிகவியல், ஒழுக்கவியல் என்பவற்றைக் கூறும் நூலாகவும் இருந்தது. அல்குர்ஆனை விளக்கும் அஸ்ஸுன்னாவும் இதற்குத் துணை செய்தது.

அல்குர்ஆன் கூறுகின்ற தத்துவக் கருத்துக்களை நோக்கினால், அதன் இறைக் கொள்கை, பிரபஞ்சம் பற்றிய கருத்துக்கள் கிரேக்க தத்துவத்துக்கு நேர் முரணான வகையில் அல்லாஹ் ஏகன், செயற்பாடுடையவன், பிரபஞ்சத்தை இல்லாமையிலிருந்து தோற்றுவித்த சிருஷ்டி கர்த்தா என்று கூறி, சடப்பொருட்கள் பூர்வீகமானது என்ற கருத்தை மறுத்தது. மேலும், காலத்தின் தோற்றத்தையும் முடிவையும் கூறியதன் மூலம் சடப் பொருட்கள் நிலையானது; முடிவற்றது என்ற கொள்கையையும் மறுத்தது. இவ்வாறு சடப் பொருட்களின் பூர்வீகமற்ற தன்மையைத் தெளிவுபடுத்தியதன் மூலம் அது புதிதாகவே உருவாகியது;

அவ்வாறே பிரபஞ்சமும் உருவாகியது எனப் பிரகடனப்படுத்தியது. இவ்வாறு அல்குர்ஆன் மனித சிந்தனை ஈடுபட்ட எந்த தத்துவக் கருத்தையும் விடாமல் அவற்றுக்குப் பொதுவான அடிப்படைகளை இட்டுச் சென்றது.

மனிதன் பற்றிய அல்குர்ஆனின் கொள்கை மிக அழகானதாகும். மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதியாவான். உலகில் மிகச் சிறந்த படைப்பாகப் படைக்கப்பட்டுள்ளான். தவறு செய்யும் உணர்வும், உயர் ஒழுக்கப் பண்பாடுகளும் அவனிடத்தில் இருக்கின்றன. பிறகு அவன் ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்துக்கு மாறிக் கொண்டே இருக்கிறான். அதற்கேற்ப அவனது உடலிலும் அறிவிலும் மாற்றம் ஏற்படுகின்றது. அத்தகைய மனித இயல்பின் மாற்றத்துக்கு ஏற்ப அல்லாஹ்வும் அவனது ரிஸாலத்தை ஒன்றன் பின் ஒன்றாக அனுப்புகிறான். அதனோடு இந்த வளர்ச்சிக் கட்டம் பூரணத்துவம் பெறுகின்றது.

இவ்வாறு மனிதனுக்குத் தேவையான அனைத்துத் தத்துவக் கருத்துக்களையும் அல்குர்ஆன் கொண்டிருக்கிறது. அவை கிரேக்க சிந்தனையிலிருந்து வேறுபட்டனவாகவும், அவர்களால் அடைந்து கொள்ள முடியாது போன தத்துவப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளாகவும் அமைந்திருக்கின்றன.

அல்குர்ஆன் தத்துவ ஞானத்தின்பால் முஸ்லிம்களைத் தூண்டிய போதிலும், அதிகமான தத்துவக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் வஹியின் மூலம் வழங்கிவிட்டது. அவ்வாறு குறிப்பிடாத சிலவற்றைத்தான் இஸ்லாமியத் தத்துவஞானிகள் கண்டு பிடித்தனர். எனினும், பிற தத்துவ ஞானங்களுடன் முஸ்லிம்களுக்குத் தொடர்பிருந்தது என்பதை மறுப்பதற்கில்லை. இத்தொடர்பு, முதலாவதாக அவர்களுடன் ஏற்பட்ட பரஸ்பர உறவு முறையினாலும், அடுத்து அவர்களது கருத்துக்கள் அரபு மொழியில் மொழிபெயர்க்கப்பட்டதனாலும் ஏற்பட்டதாகும். இதனால், அல்குர்ஆனின் தத்துவக் கருத்துக்களுடன் பிற தத்துவக் கருத்துக்களும் சேர்ந்து முஸ்லிம் தத்துவ சிந்தனையின் வளர்ச்சிப் போக்கில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன எனலாம். எனினும், முஸ்லிம்களைத் தத்துவ சிந்தனையின்பால் அல்குர்ஆனே முதலில் தூண்டியது என்பதையும், அத் தூண்டுதலினாயே பிற தத்துவங்களையும் தேடிக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதையும் மறுக்க முடியாது.

இஸ்லாமிய தத்துவத்துக்கு பல முஸ்லிம் அறிஞர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். இவர்களுள் முதலாவது தத்துவவியலாளர் அல் கிந்தி (கி.பி. 803 – கி.பி. 866). அரேபியர்களுள் முதலாவதாக விஞ்ஞானத்தையும் தத்துவத்தையும் கற்றமையால் ‘அரேபியர்களின் தத்துவவியலாளர்’ என அழைக்கப்படுகிறார். குர்ஆன், அரபு இலக்கணம், இலக்கியம், ஆரம்ப கணிதம் என்பவற்றையும் பின்னர் பிக்ஹ், கலாம் என்பவற்றையும் கற்றார். இவர் தத்துவக் கல்வியில் கொண்டிருந்த ஆர்வத்தை இது காட்டுகிறது. கிரேக்க, சிரிய மொழிகளிலிருந்து ஏற்கனவே மொழிபெயர்க்கப்பட்டிருந்த கிரேக்க, விஞ்ஞான தத்துவங்களை மிகவும் விரும்பினார். அல் கிந்தியின் கருத்துப்படி தத்துவம், இஸ்லாமிய கலாசாரத்தின் ஒரு பகுதியாக ஏற்கப்பட வேண்டியதாகும். இவர் தனது கருத்துக்களை பிளேட்டோ, அரிஸ்டோட்டல் Plato, Aristotle போன்றவர்களிடமிருந்து பெற்றாலும், அக்கொள்கைகளை ஒரு புதிய அமைப்பில் முன்வைத்தார்.

‘இப்னு நதீம்’ என்பவர் இவரை இயற்கைத் தத்துவஞானி என்ற நிலையில் வைத்து நோக்குகிறார். முன்னைய எல்லா விஞ்ஞானங்களினதும் அறிவு அவருக்கு இருந்ததென்றும், அவருடைய நூல்கள் தர்க்கம், தத்துவம், கேத்திர கணிதம், வானசாஸ்திரம் போன்ற பல்வேறு விஞ்ஞானங்கள் பற்றியும் விளக்குகிறது என்றும் குறிப்பிடுகிறார்.

மார்க்கத்துக்கும் தத்துவத்துக்குமிடையில் உடன்பாடு காண முயன்ற முதலாவது தத்துவஞானி அல் கிந்தியாவார். அல்பாராபி, இப்னு ஸீனா, இப்னு ருஸ்த் போன்றோருக்கு தத்தவஞானத்தில் வழியேற்படுத்திக் கொடுத்தவர் இவராவார். கிரேக்க தத்துவ ஞானங்களை அரபு மொழிக்கு மொழிபெயர்ப்பதில் கூடிய முயற்சி எடுத்தார்.

இஸ்லாமிய தத்துவ கலைக்குப் பங்களிப்புச் செய்த அடுத்த தத்துவஞானி அல்பாராபி (கி.பி.870 – கி.பி. 950) ஆவார். ‘அல் பாராபியஸ்’ என்ற இலத்தீன் பெயரில் ஐரோப்பியருக்கு அறிமுகமானவர். Plato, Aristotle போன்ற கிரேக்க தத்துவ ஞானிகளின் நூல்களுக்கு விரிவுரைகள் எழுதிய இவர், ஸுபித்துவக் கொள்கைகளுக்கும், கிரேக்க தத்துவங்களுக்குமிடையே பாலமொன்றை நிறுவ முயற்சித்தார்.

ரிஸாலா, புஸூஸுல் ஹிகம், சியாசதுல் மதனியா ஆகிய நூல்களில் இவருடைய தத்துவக் கொள்கைகள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இவருடைய தத்துவங்கள் திருத்தமானதாகவும் தெளிவான கருத்துக் களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது. ஆரம்ப தத்துவவியலாளர் களின் கொள்கைகளிலிருந்து சிலவற்றை சுவீகரித்து, அவரது சொந்த

கலாசார சூழலுக்குப் பொருந்தக்கூடிய வகையில் ஒரு முறையான அமைப்பில் ஒழுங்குபடுத்தியுள்ளார். இதனால், இவரது தத்துவங்கள் ஒழுங்கு முறையானதாகவும் பொருத்தமானதாகவும் அமைந்துள்ளது.

இஸ்லாமிய தத்துவ கலைக்குப் பங்களிப்புச் செய்த அடுத்த தத்துவஞானி இப்னு ஸீனா (கி.பி. 980 – கி.பி. 1037) ஆவார். மேற்குலகில் இப்னு ருஸ்தின் உதயத்துக்கு முன்னிருந்த சிறந்த 'அரேபியத் தத்துவவியலாளர்' என வர்ணிக்கப்படுகின்றார். மத்திய காலத்தில் உலகப் புகழ் பெற்ற மருத்துவராக விளங்கினார். இவர் Aristotle இன் கொள்கைகளைப் பின்பற்றக்கூடிய ஒரு மாணவராக இருந்த போதிலும், அவருடைய சிந்தனையிலே எழாத எண்ணற்ற தத்துவங்களின் சிருஷ்டிகர்த்தாவாக விளங்குகிறார்.

இமாம் கஸ்ஸாலி (கி.பி.1058 – கி.பி. 1111) அடுத்த சிறந்த தத்துவ மேதையாக விளங்குகிறார். 'அபூ ஹாமித் முஹம்மத் அல் கஸ்ஸாலி' என்பது இவரது முழுப் பெயராகும். 'ஹுஜ்ஜதுல் இஸ்லாம்' என்பது இவரது சிறப்புப் பெயர்.

இவரது காலத்தில் கிரேக்க சிந்தனையால் கவரப்பட்டிருந்த பல முஸ்லிம்கள் அவற்றைப் பிரபல்யப்படுத்தலாயினர். இதனால், கிரேக்க தத்துவவியலின் செல்வாக்கு ஓங்கி, சமய நம்பிக்கைகளின் அடித்தளத்தையே தகர்க்கக்கூடியளவு வலுப் பெற்றது. இதனால், கிரேக்க தத்துவத்தை எதிர்க்கவும், உண்மையான இஸ்லாமிய தத்துவத்தை எடுத்துரைக்கவும் தத்துவத்தை முறையாகக் கற்றார். சாதாரண மக்களும் அதனைக் கற்று விளங்கிக் கொள்ளக் கூடிய விதத்தில் அதனை இலகுபடுத்தினார். அவர் எழுதிய 'மகாஸிதுல் பலாஸிபா' எனும் நூலில், தர்க்கம் (Logic), பௌதிகம் (Physics), அடிப்படைத் தத்துவம் (Metaphysics) ஆகிய கலைகள் சம்பந்தமாக நிலவிய சித்தாந்தங்கள், கோட்பாடுகள் போன்றவற்றை விரிவாக விளக்கியுள்ளார். இவரது தத்துவ சிந்தனைகள் மத்திய கால சிந்தனையாளர்களான அல்பேர்ட், அக்கியுனாஸ், பேகன் ஆகியோர்களிடம் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியது.

தத்துவக் கருத்துக்களை கிரேக்க சிந்தனையிலிருந்தன்றி, தனது சொந்த சிந்தனைகளின் விளைவாகப் பெற்றுக் கொண்ட அவர், தனது 'தகாபதுல் பலாஸிபா' எனும் நூலில் கிரேக்க தத்துவவாதிகளின் கருத்துக்களை முன் எப்போதும் விமர்சிக்கப்படாதளவு தர்க்க ரீதியாக விமர்சிக்கிறார். அரிஸ்டோட்டிலினதும், அவரது சிந்தனைக்குட்பட்ட அல்பாராபி, இப்னு ஸீனா போன்றவர்களது கருத்துக்களையும் பக்க சார்பின்றி விமர்சித்தார்.

இமாமவர்களது புகழ்பெற்ற நூலான 'இஹ்யா உலூமுத்தீன்' அவர்களது அனுபவத்தினடியாக எழுந்த பெரு நூலாகும். அவர்களது காலத்திலிருந்த தத்துவ இயக்கங்களில் சிக்குண்டு, சிந்தனை குழம்பி, கருத்து மயக்கத்தில் உள்ளம் தடுமாறியவர்களுக்கு நன்னெறிப் பாதையைத் தெளிவுபடுத்துவதற்காக இமாமவர்கள் இஹ்யாவை எழுதினார்கள்.

இமாம் கஸ்ஸாலி அவர்கள் இஸ்லாமிய மரபுக் கலைகளைப் போன்று கிரேக்க தத்துவக் கலையிலும் ஆழமான அறிவு பெற்றிருந்ததால் தனது காலத்தில் தத்துவக் கருத்துக்களில் சிக்குண்டிருந்தவர்களுக்கு உண்மையான இஸ்லாமிய தத்துவத்தை விளக்கியதுடன் மட்டுமல்லாது, இஸ்லாமிய அடிப்படைகளைத் தகர்க்குமாப்போல் காணப்பட்ட கிரேக்க தத்துவ வாதிகளதும், அவர்களது கருத்துக்களால் கவரப்பட்டிருந்த முஸ்லிம் தத்துவவாதிகளதும் கருத்துக்களை விமர்சித்தார்கள். இதன் மூலம் இஸ்லாத்துக்கு எதிரான சிந்தனா ரீதியான படையெடுப்பை முறியடித்த ஒரு முஜத்திதாகவும் இமாம் கஸ்ஸாலி அவர்கள் திகழ்கின்றார்கள்.

அடுத்த சிறந்த தத்துவஞானியாக விளங்குபவர் 'இப்னு ருஷ்த்' ஆவார். இவரது தந்தையும் பெரிய தந்தையும் அந்தலூஸில் பிரதான நீதிபதிகளாக இருந்தவர்கள். குர்ஆன், தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ், அரபு மொழி இலக்கியம், கணிதம் , பௌதிகவியல், வானசாஸ்திரம், தர்க்கம், தத்துவம், மருத்துவம் போன்ற கலைகளைக் கற்றார். முழுக் குர்துபா நகரமுமே இவரது காலப் பகுதியில் தத்துவக் கல்வி நிலையமாகத் திகழ்ந்தது.

தத்துவத்துக்கும் மார்க்கத்துக்குமிடையில் ஓர் இணக்கம் காணுதல் இஸ்லாமிய தத்துவத்தின் ஒரு பிரதான அங்கம் என எண்ணினார். சட்ட அறிஞர்களினதும் இமாம் கஸ்ஸாலியின் தகாபதுல் பலாஸிபா

என்ற நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கண்டனங்களிலிருந்து தத்துவ வாதிகளைப் பாதுகாப்பது, ஒரு தத்துவவாதி என்ற வகையில் அவரது கடமையாக இருந்தது. இப்னு ருஷ்தின் கருத்துப்படி மார்க்கம் மூன்று அடிப்டைகளைக் கொண்டது. அவையாவன.

1. தவ்ஹீத்
2. ரிஸாலத்
3. மறுமையில் உயிர் பெற்றெழுதல்.

ஒவ்வொரு முஸ்லிமும் இம்மூன்றையும் அவசியம் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்று கூறினார். தத்துவமும் மார்க்கமும் இரட்டைச் சகோதரிகளாகும். அவ்விரண்டும் தம் இயற்கையான குணம் மூலம் ஒன்றையொன்று நேசிக்கக் கூடியவைகளாக இருக்கின்றன என்று இப்னு ருஷ்த் கருதுகிறார்.

**மருத்துவம்**

மருத்துவத் துறையில் முஸ்லிம்கள் அடைந்த முன்னேற்றத் திற்கு குர்ஆனினதும், ஹதீஸினதும் போதனைகளே தூண்டு கோலாய் அமைந்தன. தேனின் மருத்துவக் குணம் பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது "அதனுடைய வயிற்றில் இருந்து (தேனீ) பல நிறங்களுடைய ஒரு பானம் (தேன்) பெறப்படுகிறது. அதில் மனிதர்களுக்கு நோய் நிவாரணி உண்டு. சிந்தித்து உணரக்கூடிய மக்களுக்கு நிச்சயமாக இதிலும் ஓர் அத்தாட்சி இருக்கின்றது". (16 : 69)

தேனில் மனித உடலைக் குணப்படுத்தும் மருத்துவக் குணம் அடங்கியுள்ளது. நச்சுக் கிருமிகளைத் தடை செய்யும் சக்தி அதற்குண்டு. தேனின் அடர்த்தித் தன்மையால் உடற்காயத்தில் பக்டீரியா போன்ற நச்சுக் கிருமிகளோ, காளான்களோ வளர மாட்டாது.

ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் "அல்லாஹ்வின் அடியார்களே, நீங்கள் மருந்துகளைக் கொண்டு நோய்களுக்குப் பரிகாரம் தேடிக்கொள்ளுங்கள். மரணத்தைத் தவிர மற்றைய எல்லா நோய் களுக்கும் அல்லாஹ் மருந்துகளைப் படைத்துள்ளான். ஆனால், மனிதர்கள் அவற்றை அறியாமல் இருப்பதுண்டு" என்று கூறினார்கள்.

நபி(ஸல்) அவர்கள் பல நோய்களுக்கான நிவாரணங்களை விளக்கியுள்ளார்கள். அவர்களின் நோய் நிவாரணி பற்றிய ஹதீஸ்களை அறிஞர்கள் **"அத்திப்புந் நபவிய்யி (நபிகளாரின் மருத்துவம்)"** எனும் தலைப்பில் தொகுத்திருக்கிறார்கள். நபி(ஸல்) அவர்களின் காலப்பிரிவில் 'ஹாரிஸ் பின் கல்தா' என்ற யூத அறிஞர் மருத்துவத்துறையில் புகழ் பெற்று விளங்கினார். நபி(ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் பின்னர், ஸஅத் பின் அபி வக்காஸ் (றழி) அவர்கள் சுகவீனம் அடைந்த போது நபியவர்கள் ஸஅதுக்கு சிகிச்சை செய்யும்படி ஹாரிஸைப் பணித்தார்கள். இவர்களது காலப்பிரிவில் பாரசீக மன்னன் நபியவர்களுக்கு வைத்தியம் செய்வதற்காக பாரசீக வைத்தியர் ஒருவரை அனுப்பி வைத்தான்.

குலபாஉர்ராஷிதூன்கள் காலத்தில் மருத்துவத்துறை ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட துறையாக வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இஸ்லாமிய உலகில் முதன்முதலாக வைத்தியசாலைகளை நிறுவிய பெருமை கலீபா வலீதையே சாரும். இவரால் நிறுவப்பட்ட அங்கவீனர்களுக்கான வைத்தியசாலையில் குருடர், செவிடர் போன்ற நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது. இவரது முன்மாதிரியைப் பின்பற்றி ஏனைய உமையா கலீபாக்களும் ஆங்காங்கே வைத்தியசாலைகளை நிறுவிய போதிலும் அவை ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பில் இருக்கவில்லை. அப்பாஸியர் ஆட்சியிலேயே ஒழுங்கு படுத்தப்பட்ட மருத்துவமனைகள் தோன்ற ஆரம்பித்தன. முதன்முதலாக சகல வசதிகளையும் கொண்ட பொது வைத்தியசாலையை நிறுவிய பெருமை கலீபா ஹாரூன் அர்ரஷீதையே சாரும். பக்தாதில் நிறுவப்பட்ட இவ்வைத்தியசாலையில் நோயாளர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் இருந்ததோடு மருத்துவம் பயில விரும்பிய மாணவர்களுக்கு இங்கு பயிற்சியும் அளிக்கப்பட்டது.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் வெவ்வேறான விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. அதே போல் தொற்றுநோய்களுக்கு தனித்தனி வார்ட்டுகள் இருந்தன. ஆண்களுக்கான வார்ட்டுகளில் ஆண் தாதிகளும், பெண்களுக்கான வார்ட்களில் பெண் தாதிகளும் கடமையாற்றினர். வெளி நோயாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனை குறித்த தினங்களில், குறித்த இடத்தில் இடம் பெற்றது. மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு பிரத்தியேக உடைகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டன. நோயாளியின் உடைகள், உடமைகளை பாதுகாப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

நோயாளிகளைப் பார்க்க வருவோருக்கும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருந்தன. மருந்துகளை தயாரிக்கவும், நிர்வாக தேவைகளுக்காகவும் சமயலறைக்காகவும் தனித்தனி இடம் ஒதுக்கப் பட்டிருந்தது.

வைத்தியசாலைகளில் கடமையாற்றுவோர்களுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. தம் கடமை நேரத்தில் அவர்கள் வைத்திய சாலையில் இருப்பது அவசியமாகியது. பிரபல வைத்தியர்கள் தினந்தோறும் நோயாளிகளைப் பரிசோதித்தனர். நோயாளிகளுக்கான மருந்துகள், உணவு, தங்குமிடம் என்பன எல்லாம் இலவசமாக வழங்கப்பட்டன.

வைத்தியசாலைகளோடு இணைந்ததாக மருத்துவக் கல்லூரிகள் இயங்கின. பத்தாத், டமஸ்கஸ், கெய்ரோ, மக்கா, ஜெரூசலம், அலெப்போ, ஹர்ரான் ஆகிய பகுதிகளில் பல மருத்துவக் கல்லூரிகள் செயற்பட்டன. இதற்காக வைத்திய சாலைகளில் விரிவுரை மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. வைத்தியசாலைகளினதும் வைத்திய மாணவர் களினதும் நலன்கருதி அங்கு நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. குறிப்பு எடுக்கும் மாணவர்களுக்கு தாளும், பேனாவும் இலவசமாக வழங்கப்பட்டன.

மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உணவும், தங்குமிட வசதியும் வழங்கப்பட்டன. ஏழை மாணவர்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. இக்கல்லூரிகளில் பயின்ற மாணவர் களுக்குப் பரீட்சை நடாத்துவதற்கு அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வழக்கமும் இருந்தது.

கலீபா மஃமூன் ‘பைத்துல் ஹிக்மா’ எனும் நிறுவனத்தை நிறுவி ‘ஹுனைன் இப்னு இஸ்ஹாக்’ என்பவரை அதன் பிரதான மொழி பெயர்ப்பாளராக நியமித்தார். ஈஸா பின் யஹ்யா, தாபித் பின் குர்ரா, அலி அத் தபறி, யுஹன்னா என்போர் மொழிபெயர்ப்பாளர் குழுவில் அடங்கியிருந்த ஏனையோராகும். இவர்கள் கிரேக்க அறிஞர்களான கலன், ஹிப்போகிரட்டிஸ், போல் முதலானோரின் மருத்துவ நூல்களை மொழி பெயர்த்தனர். கிரேக்க மருத்துவ நூல்கள் கால ஓட்டத்தில் அழியாது பாதுகாக்கப்பட மொழிபெயர்ப்புப் பணி பெரிதும் உதவியது.

கிரேக்க மருத்துவ அறிவியல் நூல்களை மொழிபெயர்த்ததன் மூலம் அவற்றை அழியாது பாதுகாத்த பெருமை முஸ்லிம்களையே சாரும். முஸ்லிம்கள் கிரேக்க மருத்துவ நூல்களை மொழிபெயர்த்தது மட்டுமன்றி, கிரேக்க மருத்துவ மேதைகளின் தவறுகளை விமர்சித்து அவற்றை சுடடிக்காட்டியதோடு மருத்துவத்துறையில் பரிசோதனை முறையை அறிமுகப்படுத்தியும் பல கோட்பாடுகளை நிறுவியும் மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்கினர். கிரேக்கரின் மருத்துவ முறையான யூனானி மருத்துவத்தைப் பாதுகாத்து இன்றைய உலகிற்கு அளித்த பெருமை அரேபிய முஸ்லிம்களையே சாரும். போர்க் காலங்களில் வைத்திய சிகிச்சை அளிப்பதற்காக முஸ்லிம்களால் இராணுவ வைத்திய சாலைகளும் நிறுவப்பட்டன. படுக்கைகள் இணைக்கப்பட்ட ஒட்டகங்கள், அம்பியுலன்ஸ் வண்டிகளாகப் பயன்படுத்தப்பட்டன. அவ்வாறே முஸ்லிம்கள் மருந்துக்கடைகளையும் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்.

மருந்து உற்பத்தித் துறையில் முஸ்லிம்களின் பங்களிப்பு மகத்தானதாகும். இதனை மேற்குலகம் அங்கீகரித்துள்ளது எனலாம். கி. பி. 1618 இல் இங்கிலாந்தில் வெளியிடப்பட்ட மருந்தியல் நூலில் கிரேக்க அறிஞர்களான ஹிப்போகிரட்ஸ், கலன் எனும் இருவரது படங்களுடன் முஸ்லிம் மருத்துவர்களான அபூ அலி ஸீனா, அபூ ஸகரிய்யா, யுஹன்னா பின் மஸாவிஹ் என்போரது படங்களும் பிரசுரிக்கப்பட்டிருந்தன என்பது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

முஸ்லிம் மருத்துவ அறிஞர்கள் எழுதிய நூல்கள் ஐரோப்பிய மொழிகள் பலவற்றிற்கு மொழி பெயர்க்கப்பட்டமையும், முஸ்லிம் மருத்துவர்கள் கையாண்ட வழி முறைகள் நீண்ட காலம் ஐரோப்பிய மருத்துவர்களால் பின்பற்றப்பட்டமையும் இன்றும் அக்கலையில் அறபு மருத்துவத்தின் செல்வாக்கு இருக்கின்றமையும் மேற்குலக மருத்துவத்தின் மீது முஸ்லிம்களின் செல்வாக்கு யாது என்பதை மதிப்பிட உதவுவன எனலாம்.

## மருத்துவத் துறைக்குப் பங்காற்றிய அறிஞர்கள்

மருத்துவத் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் அர்ராஸி, இப்னு ஸீனா, இப்னு நபீஸ், அஸ்ஸஹ்ராவி, ஹுனைன் இப்னு இஸ்ஹாக் ஆகியோர் சிறப்புற்று விளங்கினர்.

**அர்ராஸி**

மேற்குலகத்தால் "ராஸஸ்" என அழைக்கப்பட்ட இவர் இளம் வயதிலேயே இரசவாதத்தில் ALCHEMY (அல் கெமி) ஈடுபாடு காட்டியவராவார். பிற்காலத்தில் மேற்காசியாவில் பல பாகங்களிலும் இருந்து வந்த நோயாளர்களாலும், மாணவர்களாலும் கவரப்பட்டார். இவர் மருத்துவம் செய்யும் திறமையைப் பெற்ற பிறகு பக்தாத் நகருக்குச் சென்று அங்கிருந்த பிரதான வைத்திய சாலையில் பிரதம மருத்துவ அதிகாரியாகக் கடமையாற்றினார். பின்னர் அப்பாஸிய கலீபாக்களுள் ஒருவரான முக்தபி பில்லாஹ் (கி. பி. 902 - 907) என்பவரின் ஆட்சிக் காலத்தில் இராச்சியம் முழுவதிலும் நிறுவப்பட்டிருந்த வைத்திய சாலைகளின் தலைவராகக் கடமையாற்றினார். இவர் எழுதிய 220க்கும் அதிகமான நூல்களில் 140 நூல்கள் மருத்துவம் சார்ந்த நூல்களாகும். அவற்றுள் அல்ஹாவி, அல் ஜுதாரி வல் ஹஸ்பா, கிதாபு திப்பில் மன்சூரி, கிதாபுல் அஸ்ரார் ஆகியவை தவிர ஏனையவை மிகச் சிறியவையாகும்.

12 பாகங்களை உள்ளடக்கிய பிரசித்தி பெற்ற நூலான அல்ஹாவி இவர் எழுதிய நூல்களில் மிப் பெரியதாகும். இந்நூல் ‘மருத்துவத் துறைக் கலைக்களஞ்சியம்’ என போற்றப்படுகிறது. இதைப்போன்ற ஒரு பெரிய மருத்துவ நூல் இதுவரை உலகில் இல்லை என கருதப்படுகிறது. சுகாதாரம், நோய்களும் அவற்றின் அறிகுறிகளும் அவற்றிற்கான சிகிச்சை முறைகளும் ஆகிய அம்சங்களை இந்நூல் உள்ளடக்கியிருப்பதுடன் ஒவ்வொரு நோயின் முடிவிலும் அந்நோய் பற்றிய அர்ராஸியின் சொந்தக் கருத்தக்களும் அனுபவங்களும் கூறப்பட்டிருக்கின்றன.

அர்ராஸியின் மற்றுமொரு நூலான அல் ஜுதரி வல் ஹஸ்பா சின்னமுத்து, பெரியம்மை பற்றி விளக்குகின்றது. இந்நூல் பல ஐரோப்பிய நாடுகளில் பதிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டது. சின்னமுத்துக்கும் பெரியம்மைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை முதன் முதலில் விளக்கிய நூலாக மதிக்கப்படுகிறது.

அர்ராஸியின் மற்றொறு நூலான ‘கிதாபுத் திப்பில் மன்சூரி’ (மன்சூரி மருத்துவ நூல்) எனும் நூலும் ஒரு சிறந்த மருத்துவப் படைப்பாகும். இந்நூல் 10 பாகங்களைக் கொண்டது. அவற்றில் சில பாகங்கள் ஜேர்மன், ப்ரென்ச் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன.

அர்ராஸி மகப்பேற்று மருத்துவம், பெண் மருத்துவம், கண் மருத்துவம், சத்திர சிகிச்சை போன்ற துறைகளிலும் தீவிர ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருந்தார். அறுவைச் சிகிச்சையின் போது தையல் போடுவதற்காக முதன் முதலில் மிருகங்களின் குடல் இழைகளைப் பயன்படுத்தியதும் இவரேயாவார்.

அர்ராஸி கி.பி 925ம் ஆண்டில் கண்பார்வை இழந்த நிலையில் மரணமானார். இவரின் உருவப்படம் பாரீஸ் பல்கலைக்கழத்தின் மருத்துவ பீடத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இவரது நினைவாக 1964 ஆம் ஆண்டு ஈரானில் தபால் முத்திரை ஒன்றும் வெளியிடப்பட்டது.

## அலி இப்னு ஸீனா

அர்ராஸியை அடுத்து மத்தியகால மருத்துவத்துறையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தவர் "அவிசென்னா" என ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்ட அபூ அலி ஹுஸைன் இப்னு அப்துல்லாஹ் இப்னு ஸீனா (கி.பி 980 - 1037) ஆவார். இவர் தனது 17வது வயதில் திறமை படைத்த மருத்துவராக விளங்கினார். 21வது வயதில் நூல்கள் எழுத ஆரம்பித்தார். இவர் எழுதிய 99 நூல்களுள் 17 நூல்கள் மருத்துவம் சார்ந்வையாகும். இவற்றுள் ‘கனன்’ என ஐரோப்பியர்களால் அழைக்கப்பட்ட ‘கானூன் பித்திப்பி’ (மருத்துவ விதிகள்) ஐரோப் பியரிடையே மிகுந்த வரவேற்பை பெற்றதுடன் மருத்துவத்துறையின் பைபிளாகவும் மதிக்கப்பட்டது. இந்நூல் 5 பெரும் பகுதிகளாக பிரிக்கப்பட்டது.

முதலாம் பகுதி – உடலமைப்பு, உடல்நலன்கள், குழந்தை நலன், வயோதிபர் நலன், பொதுவான சிகிச்சைகள்.

இரண்டாம் பகுதி – நோய்களின் அறிகுறிகள் அகரவரிசையில் விளக்கப்படுகின்றன.

மூன்றாம் பகுதி – உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரையுள்ள உறுப்புக்களைப் பாதிக்கும் நோய்களைப் பற்றியுள்ள விளக்கங்களும், பொது நோய் பற்றிய குறிப்புக்களும்.

நான்காம் பகுதி – காய்ச்சல், வீக்கம். உடைவு. அறுவைச் சிகிச்சை, முறிவு, உணவு நஞ்சாதல், விசர்நாய்க்கடி, சரும நோய் பற்றிய விளக்கங்கள்.

ஐந்தாம் பகுதி – கலவை முறை மருந்துகள், சிகிச்சை முறைகள்.

இந்நூலில் 760 வகையான மருந்துகள் தொடர்பான விரிவான விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. இந்நூல் பல ஐரோப்பிய பல்கலைக் கழகங்களில் மருத்துவ பாட நூலாகவும் பயன்படுத்தப்பட்டது.

அலி இப்னு ஸீனா, கானூன் பித்திப்பி தவிர அர்ஜுஸா பித்திப்பி, அத்வியதுல் காலிபா, அஷ்ஷிபா முதலிய மருத்துவ நூல்களையும் எழுதியுள்ளார். தொற்று நோய் பற்றி உலகிற்கு அறிமுகம் செய்த இவர் சில நோய்களின் பரம்பலுக்கு மண்ணும், நீரும் காரணமாகின்றன என்றும் நிறுவினார். மருத்துவத்துறைக்கு ஆற்றிய பணிகள் காரண மாகவே 'நவீன மருத்துவத்தின் தந்தை (Father of the Modern Medicine)' என அழைக்கப்படுகிறார்.

இவருக்கு 'ஷெய்குல் ரயீஸ்', '2ம் அரிஸ்டோட்டில்" போன்ற சிறப்புப் பெயர்களும் உண்டு.

**ஹுனைன் இப்னு இஸ்ஹாக்**

அப்பாஸிய கலீபாக்களான அல் மஃமூன், அல் முதவக்கில் ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் புகழ் பெற்று விளங்கிய மற்றுமொரு மருத்துவ மேதை 'ஹுனைன் இப்னு இஸ்ஹாக் ஆவார். கலீபா மஃமூனின் காலத்தில் அரசாங்க மொழிபெயர்பாளராகவும் பைத்துல் ஹிக்மாவின் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றினார். மஃமூனின் காலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க நூல்களுள் பெரும்பாலானவை இவரால் மொழிபெயர்க்கப்பட்டவையே ஆகும். கிரேக்க மருத்துவ நூல்களை சேகரிப்பதற்காக சிரியா, பலஸ்தீன், அலெக்சாந்திரியா போன்ற நாடுகளுக்கு பிரயாணம் செய்தார். கிரேக்க மருத்துவ மேதையான கலனால் எழுதப்பட்ட மருத்துவ நூல்கள் யாவும் இவரால் மொழி பெயர்க்கப்பட்டன.

இவர் மொழிபெயர்ப்பு நூல்கள் மட்டுமின்றி சொந்தமாகவும் பல நூல்களை எழுதியுள்ளார். இவர் சொந்தமாக எழுதிய நூல்களுள் 'மருத்துவத்தின் கேள்விகள்' எனும் நூல் பிரசித்தி வாய்ந்தது. இதில் மருத்துவக்கலை பற்றிய விளக்கங்கள் வினாவிடை முறையில் கூறப்பட்டடுள்ளன.

**அஸ்ஸஹ்ராவி**

கி.பி 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முஸ்லிம் மருத்துவ மேதைகளுள் இவரும் ஒருவராவார். குர்துபாவுக்கு அருகில் உள்ள 'ஸஹ்ரா' எனும் ஊரில் பிறந்த காரணத்தினால் 'ஸஹ்ராவி' என அழைக்கப்படுகின்றார். இவரது முழுப்பெயர் அபுல் காஸிம் கலப் பின் அப்பாஸ் அஸ்ஸஹ்ராவி என்பதாகும். குரங்குகளைப் பயன்படுத்தி மனித உடல் உறுப்புக்களைப் பற்றி மிகுந்த ஆய்வுகள் செய்து வெற்றி கண்ட இவர் அறுவைச் சிகிச்சை முறையில் பல நவீன முறைகளையும் கண்டுபிடித்தார். இவரால் எழுதப்பட்ட 'அத்தஸ்ரீப்' எனும் 30 பாகங்களைக் கொண்ட நூல் மருத்துவத் துறையில் எழுதப்பட்ட ஓர் ஒப்பற்ற மருத்துவக் கலைக் களஞ்சியமாகும்.

இந்நூல் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியிருந்தது

மருந்து தயாரித்தல்.
கண், காது, மூக்கு, வாய், முதலிய உறுப்புக்களில் அறுவைச் சிகிச்சை செய்தல்.
சயரோகம்
பெண்கள் தொடர்பான நோய்கள்
குருதியுறையா நோய்.
குருதியுறையா நோய் பற்றி முதலில் விளக்கிய இவர் ஒரு பல் வைத்தியராகவும் விளங்கினார்.

**இப்னு அந்நபீஸ்**

கி.பி 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு அந்நபீஸ் மருத்துவக் கலை பற்றி பல நூல்களை எழுதினார். கண்நோய்கள், உணவியல் சம்பந்தமான நூல்களை எழுதிய இவர் ஹிப்போகிரட்டீஸ், ஹுனைன் இப்னு இஸ்ஹாக், இப்னு ஸீனா ஆகியோரின் நூல்களுக்கு

விரிவுரைகளும் எழுதியுள்ளார். இவர் எழுதிய விரிவுரை நூல்களுள் கிதாப் அல் மு.்.ஜிஸ், அத்தஷ்ரீஹ் என்பன குறிப்பிடத்தக்கனவாகும்.

**அலி இப்னு அப்பாஸ்**

இவரது முழுப்பெயர் அலி இப்னு அப்பாஸ் மஜூஸி ஆகும். ஐரோப்பியர் இவரை 'ஹெலி அப்பாஸ்' என அழைத்தனர். மயிர்த்துளைக் குழாய்களின் அமைப்பு, தொழிற்பாடு, குழந்தை பிரசவமாகும் விதம் என்பன பற்றி ஆராய்ந்து மிகச்சரியான விளக்கமளித்த முதல் மருத்துவர் இவராவார். இவர் எழுதிய "கிதாபுல் மாலிக்கி" எனும் நூலில் வில்லியம் ஹார்வேக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே குருதிச் சுற்றோட்டம் பற்றி விளக்கப்பட்டது.

புகழ் பெற்ற மருத்துவ மேதையான இப்னு ஸீனாவின் கானூன் எனும் நூலின் தோற்றம் வரை மருத்துவத்துறையில் புகழ் பெற்ற நூலாக கிதாபுல் மாலிக்கி விளங்கியது. இவ்வாறு முஸ்லிம்களால் வளர்க்கப்பட்ட மருத்துவக்கலை பிற்பட்ட காலங்களில் அவர்களினால் கைவிடப்பட்டதினால் மேற்கத்தையவர்களும் பிற மதத்தவர்களும் அந்த மருத்துவ பாரம்பரியங்களை சுதந்திரமாகப் பெற்று அதனை வளர்க்க முற்பட்டனர்.

**வானவியல்**

வானவியல் என்பது சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் அவற்றின் பருமன், நகர்வு முதலான அம்சங்கள் பற்றி பேசும் துறையாகும். வானுலகின் அமைப்பு, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் என்பவற்றின் வடிவமைப்பு, அவற்றின் பருமன், நட்சத்திரங்களின் எண்ணிக்கை, அவற்றின் நகர்வு, அவற்றுக்கிடையிலான தூரம், சூரிய குடும்பம், பால்வெளி வீதி, வானவியல் அட்டவணை முதலான பல அம்சங்கள் வானவியற் கலைப் பரப்பு எல்லையுள் அடங்கும்.

இஸ்லாத்துக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரேபியர் வாழ்வு வானவியலுடன் தொடர்பு கொண்டிருந்தது. அரேபியாவின் மப்பும் மந்தாரமும் இல்லாத தெளிவான வானம், வானவியல் பற்றிய சரியான அவதானங்களைப் பெற அரேபியர்க்குப் பெரிதும் உதவியது. பாலைவனத்தினூடாகச் சென்ற வர்த்தகப் பாதைகளை அடையாளங் காண நட்சத்திரங்களே அவர்களுக்குப் பெரிதும் உதவின. நட்சத்திரங்

களுடன் அவர்களுக்கு இருந்த நெருக்கமான உறவின் காரணமாக அவர்களில் சிலர் நட்சத்திரங்களை வணங்கினர். அவர்களின் வாழ்க்கை யுடன் நட்சத்திரம் கொண்டிருந்த இத்தகைய தொடர்பு, வானவியல் பற்றிய சில தகவல்களை இஸ்லாத்துக்கு முன்பிருந்தே அறிந்து வைத்திருக்க உதவியது.

## வானியல் துறையில் முஸ்லிம்கள் ஈடுபட்டமைக்கான காரணங்கள்

1. சர்வதேச வர்த்தகத்திலும், கடல் பிரயாணத்திலும் புகழ் பெற்று விளங்கிய அரேபியர், காலநிலை பற்றி அறிந்து தமது கடல் பிரயாணத்தை மேற்கொள்வதற்கும், காலத்தைக் கணித்து தமது வர்த்தகத்தைத் திறம்பட மேற்கொள்வதற்கும் அவர்களுக்கு வானியல் அறிவு அவசியப்பட்டமை.
2. வானத்தைப் பற்றியும், நட்சத்திரங்கள், கோள்கள், மேகங்கள் பற்றியும் கூறப்பட்ட குர்அனின் கருத்துக்களால் அவர்கள் தூண்டப்பட்டமை. அல்குர்ஆன் பின்வருமாறு வினவுகிறது.

   "தங்களுக்கு மேல் இருக்கும் வானத்தை அவர்கள் பார்க்கவில்லையா? எத்தகைய வெடிப்புக்களும் இல்லாமல் நாம் எவ்வாறு அதனை நட்சத்திரங்களைக் கொண்டு அலங்காரமாக்கி வைத்திருக்கிறோம்." (50 : 06)

   "அவனே (பொழுதை) விடியச் செய்பவன். அவனே (நித்திரை செய்து நீங்கள்) சுகமடைவதற்காக இரவை ஆக்கினான். (நீங்கள் காலத்தின்) கணக்கை அறிவதற்காக சூரியனையும் சந்திரனையும் ஆக்கினான்." (6: 96)

   "உங்களுக்காக நட்சத்திரங்களை அமைத்தவனும் அவனே. தரையிலும், கடலிலும் உள்ள இருள்களில் கொண்டு நீங்கள் வழியறிந்து செல்கிறீர்கள்" (6: 97)

இவ்வாறான வசனங்களால் தூண்டப்பட்ட முஸ்லிம்கள் வானியல் பற்றிய அறிவைத் தேடுவதை சமய சிந்தனையின் ஓர் அங்கமாகக் கருதினர்.

3. பள்ளிவாயில்களை அமைப்பதற்கென க.்.பா இருக்கும் திசையை அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டமை.

4. ஐங்காலத் தொழுகையை நிறைவேற்ற வேண்டிய நேரங்கள், நோன்பு நோற்பதற்கும், பெருநாள் கொண்டாடுவதற்குமான தலைப்பிறையை அறிய வேண்டியிருந்தமை, ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்ற வேண்டிய காலம் என்பவற்றை அறிய வேண்டிய அவசியம் ஏற்பட்டமை.

**வானவியல் துறையின் வளர்ச்சி**

குலபாஉர் ராஷிதூன்கள் காலத்திலும் உமையாக்கள் காலத்திலும் நாட்டின் நிர்வாகம், சமூக வாழ்வு போன்ற துறைகளில் அதிக ஈடுபாடு காட்ட வேண்டியேற்பட்டதால் விரல் விட்டு எண்ணக்கூடிய சில முஸ்லிம்களே விஞ்ஞானக் கலைகளில் ஆர்வம் காட்டினர். உமையா ஆட்சியின் இறுதிக்காலப் பகுதியில் அறிவு ஆராய்ச்சித்துறையில் அதிக கவனம் செலுத்தப்பட்டதால், அப்பாஸியர் காலத்தில் நிறுவப்பட்ட பைத்துல் ஹிக்மாவின் துணையுடன் முஸ்லிம்கள் துரிதமாக முன்னேறினர். பிற மொழி நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டதால் பாரசீக, கிரேக்க, இந்திய வானியல் கருத்துக்கள் அவர்களுக்குக் கிடைத்தன. அத்துடன் அப்பாஸிய கலீபாக்களும் வானியல் துறைக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தனர். இதனால் பைத்துல் ஹிக்மாவின் ஓர் அங்கமாக இருந்து அரச ஆதரவுடன் இத்துறை வளர்ச்சி கண்டது. முஸ்லிம்கள் முன்னைய வானிலை ஆராய்ச்சியாளர்களது கருத்துக்களை நுணுக்கமாக ஆராய்ந்து அவற்றில் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டி திருத்தி விட்டதுடன் புதிய கருத்துக்களையும் வெளியிட்டனர்.

கலீபா மன்சூரின் காலத்தில் இந்திய வானியல் அரேபிய முஸ்லிம்களுக்கு முதன்முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கி.பி 770இல் ‘மங்கா’ எனும் பெயர் கொண்ட இந்திய வானியல் அறிஞரை ‘யாகூப் அல் பஸாரி’ என்பவர் கலிபா மன்சூருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இந்த அறிஞர் தம்மோடு கொண்டு வந்திருந்த ‘சித்தாந்த’ எனும் சமஸ்கிருத வானியல் நூல் ‘முகம்மத் இப்னு இப்றாஹிம் அல் பஸாரி’ என்பவரால் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டது. அந்த மொழி பெயர்ப்பைத் தொடர்ந்து இஸ்லாத்தில் விஞ்ஞான அடிப்படையிலான வானியல் ஆராய்ச்சி ஆரம்பமானது. இம்மொழி பெயர்ப்பு முஸ்லிம்களின் வானவியற் கலையின் வளர்ச்சிக்குப் பெருந் துணையாகியது.

மன்சூருக்கு அடுத்து வந்த அப்பாஸிய கலீபாக்களும் வானியல் துறை வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தினர். வானியல் துறை அறிஞர்களுக்கு சமுக மட்டத்தில் அதிக மதிப்பு இருந்தது. அவர்களுக்கு சம்பளம், உணவு, மற்றும் வசதிகள் அரச செலவில் வழங்கப்பட்டன.

கலீபா ஹாரூன் ரஷீதீன் காலத்தில் ஈரானிய வானியல் அரேபிய முஸ்லிம்களுக்கு முதன்முறையாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது. கலீபாவின் நூலகராகக் கடமையாற்றிய ‘அல் பழ்ல் இப்னு நௌபக்த்’ ஈரானிய வானியல் நூல்களை கலீபாவுக்கு அரேபியில் மொழிபெயர்த்துக் கொடுத்தார்.

கலீபா ம.்.மூனின் காலத்தில் ஏராளமான கிரேக்க வானியல் நூல்கள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டன. பைத்துல் ஹிக்மாவில் மொழி பெயர்ப்புகளுக்காகவும், வானிலை அவதானத்துக்காகவும் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தனி நபர்கள் சிலரும் மொழி பெயர்ப்பில் ஆர்வம் காட்டினர். தொலமியின் "அல் மஜெஸ்ட்" அரபு மொழியில் பல முறை மொழிபெயர்க்கப்பட்டது. இவற்றுள் ஹஜ்ஜாஜ் இப்னு மாதரினதும், ஹுனைன் இப்னு இஸ்ஹாக்கினதும் மொழிபெயர்ப்புக்கள் பிரபல்யம் வாய்ந்தவை. அத்துடன் கலீபாவும், செல்வம் படைத்த சில தனி நபர்களும் முக்கிய நகர்களில் பல வானியல் அவதான நிலையங்களை நிறுவினர். பக்தாத், டமஸ்கஸ், இஸ்பஹான் முதலிய நகர்களில் இவ்வாறான வானியல் அவதான நிலையங்கள் நிறுவப்பட்டன.

மிகச் சரியாக அவதானிப்பதிலும், மிகச் சரியான முடிவுகளை எடுப்பதிலும் முஸ்லிம் வானவியலாளர்கள் அதிக கவனம் செலுத்தினர். அதனால், தொடர்ந்து நீண்ட அவதானங்களை மேற்கொண்டனர். சில அவதானங்கள் தொடர்ந்து நாற்பது வருடங்கள் வரை மேற்கொள்ளப் பட்டமை குறிப்பிடத்தக்கது. கிரேக்க அறிஞர்களின் அவதானங்களை மறுபரிசீலனை செய்தே ஏற்றனர். இதனால், கிரேக்க அறிஞரான தொலமி உட்பட பலரது அவதானங்கள் மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன. பைத்துல் ஹிக்மாவின் வானிலை அவதான நிலையத்தில் சூரிய கிரகணத்தின் சரிவு, சூரிய வருடத்தின் மொத்த நாட்கள், சூரியன் பூமத்திய ரேகையைத் தாண்டும் நாள் போன்றன அவதானிக்கப்பட்டன.

கலீபா ம.ஃமூன் போன்ற ஆட்சியாளர்களும் பின் வந்தவர்களும் அளித்த ஊக்கம் காரணமாக பல விஞ்ஞானிகள் உருவாகினர். அவர்கள் தாம் திரட்டிய வானவியற் தகவல்களைத் தொகுத்து நூல் வடிவில் தந்துள்ளனர்.

## வானவியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த அறிஞர்கள்

வானியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்த அறிஞர்களுள் இப்றாஹீம் அல்பஸாரி, அல் பர்ஹானி, அல்பத்தானி, அபுல் வபா, அல்பிரூனி, உமர் கையாம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

### இப்றாஹிம் அல் பஸாரி

வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிஞர்களுள் இப்றாஹீம் அல் பஸாரி முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர். 'சிந்தாந்த' என்ற வானியல் நூலை மொழிபெயர்த்த அவர் அந்நூலைத் தழுவி, 'ஸிந்து ஹிந்து அல்கபீர்' என்ற நூலை எழுதினார். "அஸ்ட்ரோலோப்" வானோக்கு கருவியை முதன்முதலில் இவரே திருத்தியமைத்தார். முதன் முதலில் கிரேக்கர்களால் கண்டுபிடிக்கப்பட்டு, தொலமியினால் திருத்தியமைக் கப்பட்ட இக்கருவியை இவர் பல திருத்தங்களோடு சீர்படுத்தினார். மேற்கு நாட்டவர்கள் 17ஆம் நூற்றாண்டுவரை இக்கருவியை கடற் பிரயாண அவதானங்களுக்காகப் பயன்படுத்தினர். இக்கருவியைப் பயன்படுத்தும் விதம் பற்றி 'கிதாப் பில் அமல் அல் உஸ்துரலாப்' என்ற நூலை எழுதியுள்ளார். 'ஸிஜ்ல்' என்ற வானவியல் அட்டவணை ஒன்றையும் அவர் தயாரித்துள்ளார்.

### அல் பர்ஹானி

இவர் கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழ் பெற்ற வானியல் அறிஞராவார். கலீபா முதவக்கிலின் ஆணையின் பேரில் 'புஸ்தாத்' எனும் இடத்தில் நைலோ மீற்றர் (நைல் நதி பொங்கி எழும் உயரத்தை அறிய உதவும் கருவி) அமைக்கப்பட்ட பொழுது அதனை மேற்பார்வை செய்தார். 'அல் முத்கில் இலா இல்மி ஹயாத்தில் அப்லாக்' (வானியல் விஞ்ஞானத்தின் மூலகங்கள்) எனும் பெயரில் நூல் ஒன்றை எழுதினார்.

**அல் பதானி**

ஐரோப்பியரிடையே 'அல் படனியஸ்' எனும் பெயரில் அறிமுகமாயிருந்த அல் பதானி முஸ்லிம் உலகம் தோற்றுவித்த மிகப் பெரும் வானியல் அறிஞர்களுள் ஒருவராவார். அல் பதானியும் அல் பர்ஹானியும் 'ஐரோப்பியர்களின் ஆசிரியர்கள்' என மதிக்கப்பட்டவர்கள். இவரது பிரசித்தி பெற்ற நூல் **'கிதாப் மஉரிபத் மதாலி இல் புரூஜ் பி மா பைன அறப் அல் பலக்'** என்பதாகும். இவரது மற்றொரு நூல் **'றிஸாலா பி தஹ்கீக் மிக்தாரில் இத்திஸாலா'** என்பதாகும். இவர் தனது அவதானங்கள் மூலம் பெற்ற தகவல்களை மையமாக வைத்தே நூல்களை ஆக்கியுள்ளார். 30 வருடங்களுக்கு மேலாக கோள்களையும், நட்சத்திரங்களையும் அவதானித்து அவற்றின் இயக்கங்களை ஆராய்ச்சி செய்து அதனடிப்படையில் புகழ் பெற்ற அல் பதானி அட்டவணைகளை தயாரித்தார். ஒரு வருடம் என்பது 365 நாட்கள், 3 மணித்தியாலங்கள், 46 நிமிடங்கள், 24 வினாடிகள் என்று நிறுவினார். சிஜ்ஜுல் ஹபி என்ற பெயரில் வானியல் நூல் ஒன்றையும் எழுதினார்.

**அபுல் வபா**

அல் பதானிக்குப் பின்னர் கி.பி 10ஆம் நூற்றாண்டில் புகழ் பெற்ற வானியலாளராக விளங்கியவர் 'அல் வபா' ஆவார். வானியல் துறையில் மட்டுமன்றி கணிதத் துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் தொலமியின் சந்திரன் பற்றிய கொள்கையில் பல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியதோடு, சரியான கருத்துக்களையும் விளக்கினார். "சிஜ்லுஷ் ஷாமில்" எனும் வானியல் அட்டவணைகளைக் கொண்ட நூல் இவரது விடாமுயற்சிக்கும், கூர்மையான அவதானத்திற்கும் சிறந்த சான்றாக விளங்குகின்றது.

**அல்பிரூனி**

அபூ றய்ஹான் முஹம்மத் அல்பிரூனி ஒரு சிறந்த வானவியலாளராவார். இவர் இக்கலையில் 'உஸ்தாத்' என்று பாராட்டப்பட்டார். அவர் ஒரு சிறந்த கணிதவியலாளரும் ஆவார். 'கானூன் அல் மஸ்ஊதி பில் ஹயா வன் நுஜூம்' என்ற அவரது வானவியல் நூல் மிகப் பிரசித்தமானது. பல்வேறு துறை சார்ந்த சுமார் 180 நூல்களை அவர் எழுதியுள்ளார்.

## உமர் கையாம்

பிரபல கணிதவியலாளரும், கவிஞருமான உமர் கையாம் ஒரு சிறந்த வானவியலாளருமாவார். செல்ஜூக்கிய ஆட்சியாளரான ஜலாலுத்தீன் மலிக்ஷாவும், அவரது பிரதம அமைச்சரான நிழாமுல் முல்க் என்பவரும் 'றை' எனும் நகரில் அமைக்கப்பட்டிருந்த வானிலை அவதான நிலையத்தில் பணிபுரியுமாறு அவரை அழைத்தனர். உமர் கையாம் அவதான நிலையத்தில் பணி புரிந்து பெற்ற அவதானங்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்காட்டியை (கலண்டரை)த் தயார் செய்தார். அக் கலண்டருக்கு தன்னைப் போசித்த ஆட்சியாளர் மலிக்சாவின் பெயரைச் சூட்ட விரும்பிய அவர் அதற்கு 'அத்தாரி.ஃ. அல் ஜலாலி' எனப் பெயரிட்டார். அந்நாட்காட்டி (அக்கலண்டர்) இதற்கு முன்னரோ, அல்லது சம காலத்திலோ வழக்கிலிருந்த ஏனைய நாட்காட்டி (கலண்டர்)களை விட மிகச் சரியானதாக இருந்தது.

வானியல் துறைக்கான முஸ்லிங்களின் பங்களிப்பு கிரேக்கர்களின் தத்துவரீதியான சிந்தனைகளையும், இந்தியர்களின் திரிகோண கணித முறைகளையும் மிஞ்சக் கூடிய வகையில் காணப்படுகிறது. முஸ்லிம்களால் கண்டுபிடிக்கப்பட்ட, திருத்தியமைக்கப்பட்ட ஏராளமான வானியல் உபகரணங்கள் ஐரோப்பாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு ஐரோப்பியரால் மேலும் திருத்தியமைக்கப்பட்டு பூரணத்துவம் பெற்றன.

சர்வதேச வானவியலாளர் சங்கத்தினர் 1935 இல் ஒன்றுகூடி சந்திரனின் வடிவமைப்பை 672 அலகுகளாக வகுத்தனர். அவற்றில் 609 அலகுகளுக்கு இத்துறையின் வளர்ச்சிக்கு உதவிய வானவி யலாளர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர். சந்திரனின் முகப்பு 25 அலகுகளாக வகுக்கப்பட்டுள்ளது. அதில் 13 அலகுகளுக்கு முஸ்லிம்களின் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. அவர்களின் பெயர்கள் வருமாறு.

1. மாஷா அல்லாஹ்
2. கலீபா ம.ஃமூன்
3. அல்பர்கானி
4. அல்பதானி
5. ஸாபித்
6. அப்துர் ரகுமான் அஸ்ஸூபி
7. அல்ஹஸன் அல்ஹைதம்

8. அஸ்ஸர்காவி
9. ஜாபிர் பின் அப்தில்லாஹ்
10. நஸ்ருத்தீன் தூஸி
11. அல் பித்ருஜி
12. அபுல் பிதா
13. உலூஹ் பேக்

முஸ்லிம் அறிஞர்கள் வானவியற் துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கினை சர்வதேச வானவியலாளர்கள் அங்கீகரித்துள்ளனர் என்பதையே இவை காண்பிக்கின்றன.

## புவியியல் துறை

புவியின் மேற்பரப்பு, உருவம், பௌதீக உறுப்புக்கள், எல்லைகள், காலநிலை, உற்பத்திகள், குடிமக்கள் போன்றவற்றை விரிவாக ஆராயும் ஒரு துறையே புவியியல் ஆகும்.

### தூண்டிய காரணங்கள்

#### 01. அல் குர்ஆனின் தூண்டுதல்

இஸ்லாமிய தூதை நிறுவுவதற்காக புவியியல் பற்றியும், புவியில் வாழ்ந்து போன பல சமூகங்கள் பற்றியும் அல்குர்ஆன் எடுத்துக்காட்டியும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க நிகழ்வுகள் இடம் பெற்ற தளங்களைச் சுட்டிக்காட்டி அவ்விடங்களைத் தேடிப்பார்க்கும் ஆவலை மனிதர் களிடத்தில் தூண்டியது. ‘கஹ்பு’ எனும் அத்தியாயம் சுட்டிக்காட்டுகின்ற குகை வாசிகள் தங்கிய குகை, தூபான் வெள்ளத்தின் போது நூஹ் அலை (ஸல்) ஏறி இருந்த கப்பல் சென்றடைந்த ‘ஜூதி’ எனும் மலை, ஆத் தமூத் கூட்டங்கள் வாழ்ந்த இடம், மலைகளைக் குடைந்து செய்த வீடுகளில் வாழ்ந்தவர்கள், அழிக்கப்பட்ட இடம் என்பன பற்றி அங்கு குறிப்பிட்டவற்றை ஆராய்ந்து பார்க்க முஸ்லிம் அறிஞர்கள் தூண்டப்பட்டனர்.

> "அவன் தான் வானங்களைத் தூண் இன்றியே சிருஷ்டித் திருக்கிறான். அதனை நீங்களும் பார்க்கிறீர்கள். பூமி உங்களைக் கவிழ்த்து விடாதிருக்கும் பொருட்டு மலைகளை அதில் நாட்டிவைத்து விதம்விதமான ஜீவராசிகளையும் அதில் பரப்பினான்". (31:10)

"அவர்கள் பூமியில் சுற்றித்திரிந்து இவைகளைப்பார்க்க வில்லையா? அவ்வாறு பார்ப்பார்களாயின் உணர்ந்து கொள்ளக் கூடிய இருதயங்கள் அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்." (22:46)

இவ்வாறு அல் குர்ஆனில் புவியியலுடன் தொடர்புடைய மலைகள், ஆறுகள், மணல் மேடுகள், மழைமேகங்கள், உஷ்ண, குளிர் சுவாத்தியங்கள், ஆழ்கடல்கள், கனிப்பொருட்கள், தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள், தாவரங்கள், குடிசனப் பரம்பல், விவசாயப் பயிர்ச் செய்கை, அணைக்கட்டுக்கள் முதலான பல அம்சங்கள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றை ஆராய்ந்து பார்க்குமாறு தூண்டியது.

### 02. ஹஜ்ஜுக் கடமை

முஸ்லிம்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றுவதற்கு, தூரப் பிரதேசங்களில் இருந்தெல்லாம் மக்காவுக்குச் செல்ல வேண்டியிருந்தது. இஸ்லாமிய சாம்ராச்சியத்தின் நாலா புறங்களில் இருந்தும் மக்கா நோக்கி வரும் பிரதான பாதைகள் ஊடறுத்துச் செல்லும் பிரதேசங்கள், அங்குள்ள தட்பவெப்பநிலை, தங்குமிட வசதிகள் என்பன பற்றி பிரயாணிகளும், வர்த்தகர்களும் வழங்கும் தகவல்களை மையமாக வைத்து வழிகாட்டி நூல்கள் தொகுக்கப்பட்டன. ஹஜ்ஜுக்காக மக்காவில் ஒன்று கூடியர்கள் முஸ்லிம் உலகின் அரசியல், பொருளாதார, சமூகவியல் பற்றிக் கலந்துரையாடவும், தமது பிரயாண அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் அது வாய்ப்பை அளித்தது. இவ்வகையில் ஹஜ்ஜுக் கடமை மக்களின் புவியியல் அறிவை தூண்டவும், விருத்தியாக்கவும் வழி கோலியது.

### 03. கிப்லா திசையை அறிய வேண்டியிருந்தமை

தொழுகையை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு முஸ்லிமும் தான் வாழ்கின்ற இடங்களில் இருந்து கஃபா இருக்கும் திசையை அறிய வேண்டியிருந்தது. இதற்காக புவியின் நீள அகல கோடுகள் பற்றியும், பூமத்திய ரேகையில் இருந்து எவ்வளவு தூரத்தில் நாம் இருக்கிறோம் என்பது போன்ற தகவல்களை அறிய வேண்டி ஏற்பட்டதால் முஸ்லிம்கள் புவியியல் கலையில் ஆர்வம் காட்டினர்.

**04. இஸ்லாமிய இராச்சிய விஸ்தீரணம்**

உலகில் பரந்துபட்ட இஸ்லாமியப் பேரரசு ஒன்றைப் பரிபாலிப்பதற்கு நாடுகளைப் பற்றிய புவியல் அறிவு அரேபிய முஸ்லிம்களுக்குத் தேவைப்பட்டது. முஸ்லிம் ஆட்சியாளர்கள் பிற ஆட்சியாளர்கள் மீது படையெடுத்துச் செல்வதற்கு முன் திரட்டிய புவியியல் விபரங்கள் ஆராச்சியாளர்களை அத்துறையில் மேலும் மேலும் ஆய்வுகள் செய்யத் தூண்டின.

**05. வர்த்தகத்துறை ஈடுபாடு**

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரேபியர்கள் வர்த்தகத்தில் ஈடுபாடு உடையவர்களாக இருந்தனர். ஆழ் கடலும், அகன்ற நிலமும் அவர்களின் பிரயாணப் பாதைகளாக விளங்கின. இத்தகைய வர்த்தக ஈடுபாடு முஸ்லிம் நாடுகளைப் பற்றிய புவியியல் விபரங்களை அறிந்து கொள்ள அவர்களுக்குப் பெரிதும் உதவியது.

**06. இயற்கைச் சூழல்**

பாலைவனப் பிரதேசங்களில் வாழ்ந்த அரேபிய முஸ்லிம்கள் விண்மீன்களைப் பற்றியும், காலநிலை மாறுபாடுகள் பற்றியும் ஆராய்வதற்கு இயற்கைச் சூழல் வசதியாக அமைந்தது. பெரும்பாலும் மந்தை மேய்ப்பவர்களாகத் தொழில் செய்த அவர்கள், தம் மந்தை களுக்குத் தேவையான புதிய புல்வெளிகளைத் தேடி அறிந்தமையால் பல்வேறுபட்ட நிலப்பகுதிகளை ஆராய வசதியேற்பட்டது.

07. இஸ்லாமியப் பிரசாரம்
08. உலகைச் சுற்றிப்பார்க்க வேண்டிய ஆவல்
09. பிற மொழி நூல்கள் அரபியில் மொழி பெயர்க்கப்பட்டமை. போன்ற விடயங்களிலும் புவியியல் துறை வளர்ச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தன.

## புவியியல் வளர்ச்சிக்கு முஸ்லிம் அறிஞர்களின் பங்களிப்பு

முஸ்லிம்கள் புவியியல் நூல்களை மொழிபெயர்ப்பதுடன் நில்லாது, உலகின் நாலா பக்கங்களுக்கும் பிரயாணங்களை மேற்கொண்டு ஆய்வு செய்தனர். இதனால் கிரேக்க, பாரசீக, இந்திய, கருத்துக்களில் காணப்பட்ட பிழைகளைச் சுட்டிக்காட்டி நியாயமானதும், உண்மை யானதுமான கருத்துக்களை ஆதாரபூர்வமாக முன்வைத்தனர். அவர்களது கருத்துக்கள் நூலுருவில் பதிக்கப்பட்டமையால் அவை நவீன சமூகத்திற்கும் வழிகாட்டிகளாக அமைந்தன.

அப்பாஸிய கலீபாக்கள் ஏனைய அறிவியல் துறைகளின் வளர்ச்சிக்கு உதவியது போல புவியியல் துறையின் வளர்ச்சிக்கும் உதவியதால் இக்காலப்பகுதியில் புவியியல் துறை மேலும் முன்னேற்றமடைந்தது. புவியியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முஸ்லிம் அறிஞர்களுள் ஹிஷாம் அல் கல்பி, அல்குவாரிஸ்மி, சுலைமான் தாஜிர், இப்னு குர்தாபிஹ், அல்ய.்.கூபி, இப்னு ஷஹ்ரயார், அல் மஸ்ஊதி, அல் முகத்தஸி, அல் பிரூனி, அல் இத்ரீஸி போன்றவர்கள் குறிப்பிடத்தக்க வர்களாவர்.

### ஹிஷாம் அல்கல்பி

மத்திய காலத்தில் புவியியல் வளர்ச்சிக்குப் பங்காற்றிய முஸ்லிம் அறிஞர்களுள் மிகப் பழைமை வாய்ந்தவர் ஹிஷாம் அல்கல்பி ஆவார். இஸ்லாத்துக்கு முற்பட்ட கால அரேபியாவின் வரலாற்றைத் தொகுத்துத் தந்துள்ளார். அவரால் எழுதப்பட்ட பத்து நூல்களுள் சில பகுதிகளே இன்று கிடைக்கக் கூடியனவாக உள்ளன.

### அல் குவாரிஸ்மி

'அல் கோரித்ம்' என்ற இலத்தீன் பெயரில் ஐரோப்பியருக்கு அறிமுகமான அல் குவாரிஸ்மி, அரேபிய புவியியல் விஞ்ஞானத்துக்கு பலமான அத்திவாரம் அமைத்தவராவார். இவரால் எழுதப்பட்ட ' கிதாபு சூறதுல் அர்ழ்' (புவியின் அமைப்பு) எனும் நூல் 14 ஆம் நூற்றாண்டு வரை முஸ்லிம் புவியியல் அறிஞர்களுக்கு உதவக் கூடிய ஒரு வழிகாட்டி

நூலாக விளங்கியது. இந்நூலில் இவர் பூமியை ஏழு வலயங்களாகப் பிரித்துள்ளார். இவ்வாறான பிரிப்பு முறை தொலமியின் நூல்களில் கூடக் காணப்படவில்லை. கலீபா ம.்.மூனின் வேண்டுகோளுக்கிணங்க 70க்கு மேற்பட்ட அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட உலகப் படம் ஒன்றும் இந்நூலுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் படத்தை இன்று அந்த நூலுடன் பெற முடியாதுள்ளது.

இந்நூலிலே அவர் புவி கோள வடிவமானது என்ற கருத்தைப் பல ஆதாரங்களுடன் நிரூபித்துள்ளார். இந்நூலை வாசித்த பின்பே 'கொலம்பஸ்' பூமி கோள வடிவமானதாக இருந்தால் மேற்குப் புறமாகச் சென்று கிழக்கை அடைய ஒரு பாதை இருக்க வேண்டும் எனக் கருதிப் புறப்பட்டு கி.பி. 1492 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சென்றடைந்தார்.

**சுலைமான் தாஜிர்**

புகழ்பெற்ற கப்பலோட்டியும், வர்த்தகருமான சுலைமான் தாஜிர் வர்த்தகத்தின் பொருட்டு இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடு களுக்குச் சென்று வந்துள்ளார். அந்நாடுகள் பற்றியும் தனது கடற் பிரயாணங்கள் பற்றியும் சிறந்த தகவல்களை அவர் வெளியிட்டுள்ளார்.

**அல் மஸ்ஊதி**

நபித் தோழர்களுள் ஒருவரான மஸ்ஊத் (றழி) அவர்களின் சந்ததியில் தோன்றிய அல் மஸ்ஊதி, புவியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டு புவியியல் துறையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஓர் அறிஞராவார். மிகச் சிறு வயது முதலே உலகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்ற ஆசையால் இளம் வயதிலேயே உலக யாத்திரையை ஆரம்பித்து விட்டார். இலங்கை, இந்தியா, சீனா, மடகஸ்கார், துருக்கி, சிரியா, பலஸ்தீன், எகிப்து போன்ற பல்வேறு நாடுகளுக்குப் பிரயாணம் செய்துள்ளார். "முஸ்லிம் உலகின் பூகோளக் குதிரை", "அரேபியரின் ஹிரதோதஸ்", "அரேபியரின் பிளினி" போன்ற சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படும் இவர் ஏழு நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் 'முரூஜுத் தஹப்' (பொன் வயல்கள்), "கிதாபுத் தன்பீஹ் வல் இஸ்ராப்" ஆகிய இரு நூல்களே இன்று கிடைக்கக் கூடியனவாக உள்ளன.

**அல் பிரூனி**

இவர் புவியியலில் மட்டுமன்றி, வரலாறு, கணிதம், வானியல், தாவரவியல், மருத்துவம் போன்ற துறைகளிலும் சிறந்து விளங்கினார். இவரால் எழுதப்பட்ட 'கிதாபுல் ஹிந்த்' இந்தியா பற்றிய ஒரு பிரதேசப் புவியியல் நூல் ஆகும். இந்தியாவின் மத்திய கால புவியியல் வரலாற்றை அறிவதற்கு இந்நூல் மிகவும் துணைபுரிகின்றது.

புவியியலின் ஓர் அங்கமான பட வரைகலையிலும் (CARTO GRAPHY) அவர் ஈடுபாடு கொண்டிருந்தார். 1948 ஆம் ஆண்டு ஜுலை மாதம் பாரிஸில் சர்வதேச கீழைத்தேய ஆராய்ச்சியாளர்கள் மகாநாடு கூடிய போது அல் பிரூனியின் ஆயிரமாம் ஆண்டு பூர்த்தியும் கொண்டாடப்பட்டது.

**அல் முகத்தஸி**

கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல் முகத்தஸி என்பவரும் சிறந்த புவியியல் அறிஞர்களுள் ஒருவராவார். பைத்துல் முகத்தஸ் அமைந்திருக்கும் ஜெரூஸலத்தில் இவர் பிறந்தமையால் 'அல் முகத்தஸி' அல்லது 'அல் மக்திஸி' என்று அழைக்கப்பட்டார். சுமார் இருபது ஆண்டுகளைப் பிரயாணங்களிலேயே கழித்த இவர் பிரயாணங்களுக்காக மாத்திரம் சுமார் 10000 திர்ஹம்களைச் செலவிட்டுள்ளார். இவர் தான் எழுதிய 'அஹ்ஸனுத் தகாஸிம்' எனும் நூலில் இஸ்லாமிய நாடுகளை 14 மாகாணங்களாகப் பிரித்து ஆராய்ந்துள்ளதுடன், ஒவ்வொரு மாகாணத்தைப் பற்றியும் எளிதாக விளக்கும் பொருட்டு தேசப் படங்களையும் இணைத்துள்ளார். தேசப் படங்களில் பாதைகள் சிவப்பினாலும், மணற்றரைகள் மஞ்சளினாலும், கடல்கள் பச்சையினாலும், நதிகள் நீலத்தினாலும், மலைகள் சாம்பலினாலும் நிறந் தீட்டப்பட்டிருந்தன.

புவி கோள வடிவை உடையதென்றும், மத்திய கோட்டால் அது இரு சம பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதென்றும் அது 360 பாகை

பரிதியையும் மத்திய கோட்டிலிருந்து ஒவ்வொரு முனைக்கும் 60 பாகைகளைக் கொண்டதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

### இப்னு ஷஹ்ரயார்

சிறந்த யாத்திரிகராகவும், திறமை வாய்ந்த கப்பலோட்டியாகவும் மதிக்கப்படும் இப்னு ஷஹ்ரயார் என்பவரும் குறிப்பிடத்தக்க புவியியல் எழுத்தாளர்களுள் ஒருவராவார். இலங்கை, இந்தியா, சீனா போன்ற நாடுகள் உட்பட இந்து சமுத்திரத்திலுள்ள பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்த தனது பிரயாண அனுபவங்களைத் தொகுத்து, 'அஜாயிபுல் ஹிந்த்' (இந்தியாவின் அற்புதங்கள்) என்ற பெயரில் ஒரு நூலை எழுதினார்.

### அல் யஃகூபி

மிகச் சிறந்த புவியியல் எழுத்தாளரான அல் யஃகூபி இந்தியா முதல் வட மேற்கு ஆபிரிக்கா வரை நீண்ட பிரயாணங்களை மேற்கொண்டவர். இவர் தனது ஆராய்ச்சிகளையும், பிரயாண அனுபவங்களையும் வைத்து 'கிதாபுல் புல்தான்' (நாடுகள் பற்றிய நூல்) என்ற பெயரில் நூலொன்றை வெளியிட்டார்.

### அல் இத்ரீஸி

புவியியல் அறிவிலும், ஆராய்ச்சியிலும் தனித்துவம் வாய்ந்த ஒருவராக விளங்கிய அல் இத்ரீஸி முதன் முதலில் முறையான உலகப் படத்தை வரைந்த பெருமையைப் பெறுகிறார். இப்படம் இன்று லண்டன் நூதன சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

### இப்னு குர்தாபிஹ்

ஆரம்ப கால முஸ்லிம் புவியியல் அறிஞர்களுள் ஒருவரான இப்னு குர்தாபிஹ், பக்தாத் நகரில் பிரதம தபால் அதிகாரியாகக் கடமையாற்றிய காலத்தில் புவியியல் துறையில் ஆர்வம் கொண்டார். இவர் எழுதிய 'கிதாபுல் மஸாலிக் வல் மமாலிக்' (பாதைகளும் இராச்சியங்களும் பற்றிய நூல்) அரபு உலகின் முக்கிய வர்த்தகப் பாதைகளைப் பற்றிக் கூறுவதுடன் இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற தூரப் பிரதேசங்களைப் பற்றிய விபரங்களையும் பல்வேறுபட்ட இஸ்லாமிய நாடுகளின் நிருவாக அமைப்பு, தபால் விநியோக முறை, பிரயாணம் செய்வதற்கான

பாதைகள், வரி விதிப்பு முறைகள் போன்ற விபரங்களையும் தருகின்றது. இந்நூலில் உண்மைக்குப் புறம்பான சில அம்சங்கள் இடம்பெற்றிருந்த போதிலும் இந்நூல் பிற்காலப் புவியியல் ஆராய்ச்சியாளர்களுக்குப் பெரிதும் உதவியதை மறுப்பதற்கில்லை.

## வரலாறு

இஸ்லாத்தில் வரலாற்றுக் கலையானது, இஸ்லாமியக் கருத்துக்கள் மற்றும் உணர்வுகளின் தூண்டுதலின் அடிப்படையிலேயே தோன்றி வளர்ந்தது. வரலாற்றுக் கலையில் முஸ்லிம்கள் ஆர்வம் செலுத்தியமைக்குப் பின்வரும் அம்சங்கள் தூண்டுதல்களாக அமைந்தன.

1. **அல்குர்ஆனின் தூண்டுதல்** அல்குர்ஆன் முன்னைய நபிமார்களின் வரலாறுகளையும், முன்னைய சமூகங்களின் சரித்திர நிகழ்வுகளையும் குறிப்பிடுவதன் மூலமும், பூமியில் பயணம் செய்து முன்னைய சமூகங்கள் இறைவனின் வழிகாட்டலைப் புறக்கணித்ததால் அவர்களுக்கு நிகழ்ந்த பயங்கரத் தண்டனை களைச் சித்தரிக்கும் சின்னங்களைப் பார்த்துப் படிப்பினை பெறும்படி மனிதர்களைப் பணிப்பதன் மூலமும் முஸ்லிம்கள் வரலாற்றுக் கலையில் ஆர்வம் செலுத்தத் தூண்டுதலாக அமைந்தது.
2. நபியவர்களின் வரலாறு, அவர்கள் கலந்து கொண்ட யுத்தங்கள், அவர்களது நடைமுறைகள் பற்றி அறிந்து கொள்வதில் முஸ்லிம்கள் காட்டிய ஆர்வம்.
3. முஸ்லிம்களால் புதிதாகக் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களதும், மக்களதும் வரலாற்றை அறிவதில் காட்டப்பட்ட ஆர்வம்.
4. தத்தமது குடும்பத்தினதும், பரம்பரையினதும் வரலாற்றை அறிவதில் இயல்பாகவே அரேபியரிடம் இருந்த ஆர்வம்.
5. அறிவைத் தேடிப் பெற்றுக் கொள்வதன் அவசியம் குறித்த இஸ்லாத்தின் போதனைகள்.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னர் அரேபியர் வரலாற்றுடன் தொடர்புடைய பல தகவல்களை நினைவில் வைத்திருந்தனர். குறிப்பாக

தமது பரம்பரை பற்றிய தகவல் மற்றும் வம்சாவளிக் குறிப்புகளை அவர்கள் பாதுகாத்து வந்தனர். அரபு சமூகத்தில் நடைபெற்ற கோத்திரச் சண்டைகள் பற்றிய வரலாற்றையும், தம் முன்னோர்கள் பற்றிய நிகழ்வுளையும் கர்ண பரம்பரைக் கதைகளாகக் கூறி வந்தனர். தமது கோத்திர வீரர்களின் வீரச் செயல்களைக் கஸீதாக்களாகப் பாடி மகிழ்ந்தனர்.

இஸ்லாத்தின் தோற்றத்தின் பின்னர் நபி (ஸல்) அவர்களின் வாக்குகள், வாழ்க்கையின் நிகழ்வுகள், அவர்கள் பங்கு பற்றிய போர்கள் பற்றிய தொகுப்புகளே ஒழுங்கான வரலாற்று நூல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தன. ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. அவை வம்சாவளிக் குறிப்புகள், மரபு வழிக் கதைகள், கவிதைகள், கடிதங்கள், உடன்படிக்கைகள், குர்ஆன், ஸுன்னா தரும் தகவல்கள் முதலானவற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டன. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இடம் பெற்ற நிகழ்வுகளைப் பற்றிய பதிவேடுகள் போல குர்ஆனும், ஸுன்னாவும் அமைந்திருந்தன. எனவே, நபி (ஸல்) அவர்களை மையமாக வைத்து குர்ஆன் ஸுன்னாவின் துணையுடன் முதலில் வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன. நபியவர்கள் பங்குபற்றிய போர்கள் பற்றிய தகவல்களைத் தொகுத்து 'மகாஸி' எனும் தலைப்பிலும், அவர்களின் வாழ்க்கைத் தகவல்களைத் தொகுத்து 'ஸீரா' எனும் தலைப்பிலும் எழுதினர். 'ஸீரா' என்று அழைக்கப்பட்ட வரலாற்றுத் துறை ஆய்வே பின்பு 'தாரீக்' எனப்பட்ட வரலாற்றுக் கலையாக வளர்ச்சியுற்றது. எனவே, நபியவர்களின் வாழ்வைப் பற்றி அரபு வரலாற்றுக் கலை தோற்றம் பெற்றதால் மதீனா நகர் ஆரம்பகால வரலாற்றுக் கலையின் மையமாக விளங்கியது.

ஆரம்ப காலத்தில் ஹதீஸ், தப்ஸீர் போன்ற இஸ்லாமியக் கலைகளுடன் இணைந்தே வரலாற்றுக் கலை வளர்ச்சியடைந்தது. ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஏனைய கலைகள் போல வரலாறும் ஒரு தனிக் கலையாக வளர்ச்சி கண்டது.

மதீனாவில் வரலாற்றுக் கலை வளர்ச்சி பெறுகின்ற காலப் பகுதியில் புதிதாக உருவாக்கப்பட்ட கூபா, பஸரா போன்ற நகர்களிலும் இக்கலை வளர ஆரம்பித்தது. எனினும், அங்கு ஆரம்பத்தில் ஜாஹிலியாக் கால அரபு வரலாற்றை ஒத்ததாகவே இக்கலை வளர்ந்தது. ஜாஹிலியாக் காலத்தில் 'அய்யாமுல் அரப்' எனப்பட்ட போர்க் காலத் தினங்கள், தத்தம் பரம்பரைச் சிறப்பு என்பன பேசப்பட்டது போல் கூபா, பஸரா

நகர்களில் குடியேறிய இவர்களும் போர்க்களங்களில் தாம் இஸ்லாத் துக்காகச் செய்த வீர தீரச் செயல்கள், தியாகங்கள் என்பனவற்றுடன் தம் பரம்பரை பற்றியும் பேசினர். ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டளவில் இப்புதிய நகர்களில் பகுத்தறிவுச் சிந்தனை செல்வாக்குப் பெறலாயிற்று. எனவே, ஏனைய துறைகளில் ஏற்பட்டது போலவே வரலாற்றுத் துறையிலும் பகுத்தறிவுச் சிந்தனை செல்வாக்குச் செலுத்தியது.

வரலாற்று நூல்கள் எழுத்து வடிவு பெறுவதற்கு முன் வரலாற்றுத் தகவல்கள் வாய்மொழி மூலமாகவே வழங்கப்பட்டன. 'அவனா பின் அல் ஹகம்' வாய்மொழி மூலம் வரலாற்றுத் தகவல்களை வழங்கியவர்களில் முக்கியமானவர் ஆவார். எழுத்து வடிவில் வரலாற்று நூல்களைத் தந்தவர்களுள் 'அலி பின் முஹம்மது பின் அப்துல்லாஹ் மதாயினி' குறிப்பிடத்தக்கவர். மதாயினியின் வரலாற்று ஆக்கங்கள் பிற்கால எழுத்தாளர்கள் பலரில் செல்வாக்கைப் பதித்துள்ளன. ஸ்பானிய எழுத்தாளரான இப்னு அப்து ரப்பிஹி, கூபா வாசியான ஹிஷாம் பின் முஹம்மத் கல்பி என்பவர்களின் ஆக்கங்களில் மதாயினியின் தாக்கம் காணப்படுகிறது.

ஆரம்ப காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று நூல்களுள் இப்னு இஸ்ஹாக் என்பவர் எழுதிய 'ஸீரதுன் நபி' என்றழைக்கப்பட்ட நபி (ஸல்) அவர்களின் வரலாற்று நூல் வாசகர்களுக்குக் கிடைப்பதில்லை. நபியவர்கள் பற்றி எழுதப்பட்ட நூல்களுள் இன்று வாசகர்களுக்குக் கிடைக்கக் கூடிய மிகப்பழைய நூல் 'இப்னு ஹிஷாம்' என்பவரால் எழுதப்பட்ட 'ஸீரதுன் நபி' என்ற நூலாகும். நபியவர்கள் பங்கு கொண்ட போர்கள் பற்றிய நூல் ஒன்றை வாகிதி என்பவர் 'கிதாபுல் மகாஸி' என்ற பெயரில் எழுதினார். மகாஸி நூல்களை விட ஸீரா நூல்களிலேயே அதிகமான தகவல்கள் அமைந்திருந்தன.

ஹிஜ்ரி 02ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியர்களில் இப்னு ஹிஷாம், மதாயினி, ஹிஷாம் பின் முஹம்மத் கல்பி, முஹம்மத் பின் உமர் அல் வாகிதி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

ஹிஷாம் பின் முஹம்மத் கல்பி 150க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அந்நதீம் என்பவர் தனது 'பிஹ்ரிஸ்த்' என்ற நூல் அட்டவணையில் கல்பியின் நூல்கள் 129இன் பெயர்களைக் குறித்துள்ளார் அவற்றுள் 03 நூல்கள் இன்று வாசகர்களுக்குக் கிடைக்கின்றன. ஹிஜ்ரி 03ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அஹ்மத் பின்

யஹ்யா அல் பலாதூரி ‘புதூஹுல் புல்தான்’ எனும் வரலாற்று நூலை எழுதினார். ஆரம்பகால முஸ்லிம்களின் படையெடுப்புகளையும், இஸ்லாமிய ஆட்சிப் பரவலையும் இந்நூல் விளக்குகின்றது. இஸ்லாத்தின் முதலாவது கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின் காலப் பிரிவில் தோன்றிய ரித்தத் போர்கள், சிரியா, எகிப்து, பாரசீகம், ஆர்மேனியா, மொரோக்கோ முதலிய பிரதேசங்கள் கைப்பற்றப்படல் என்பன பற்றிய வரலாற்றுக் குறிப்புகளையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

வரலாற்றை மிக விரிவாகவும் பகுப்பாய்வு முறையிலும் விளக்கி, வரலாற்று நிகழ்வுளை அவை நிகழ்ந்த காலப் பிரிவின் அடிப்படையில் வரிசையாகத் தொகுத்தளித்த முதலாவது வரலாற்றாசிரியராக முஹம்மது ஜரீர் அத்தபரி (கி.பி. 923) விளங்குகின்றார். ஹிஜ்ரி 258ஆம் ஆண்டு வரையான இஸ்லாமிய வரலாற்றைத் தொகுத்துத் தரும் அவரது வரலாற்று நூல், இஸ்லாமிய வரலாற்று நூல்களில் மிக ஆதாரபூர்வமானதாகக் காணப்படுகின்றது. இவர் தொகுத்த வரலாற்று நூல் அதன் மூல உருவில் மிகப் பாரிய அளவினதாக அமைந்திருந்தது. அத்தபரி தனது வரலாற்று நூலில் இஸ்லாத்துக்கு முந்திய வரலாறு பற்றி இரு பகுதிகளில் விளக்கியுள்ளார். ஏனைய பகுதிகளில் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு, நாற்பெரும் கலீபாக்களின் வரலாறு, ஹிஜ்ரி 302 (கி.பி.915)வரையிலான உமையாக்கள், அப்பாஸிகளின் வரலாறு என்பவற்றை உள்ளடக்கியுள்ளார். எத்தகைய குறுகிய நோக்கமும் இன்றி எத்தகைய கொள்கைகள், கோட்பாடு களையும் சார்ந்திராது வரலாற்றை விளக்கிய ஒரு மகத்தான வரலாற்றாசிரியராக அவர் விளங்கினார். ஆட்சியாளரிடமிருந்து எத்தகைய பதவியையும் பெற்றுக் கொள்ள விரும்பாத அவர் முற்றிலும் வரலாற்று நூல்களை வாசிப்பதிலும், வரலாறு பற்றி எழுதுவதிலுமே ஈடுபட்டார்.

அத்தபரிக்கு அடுத்ததாக முஸ்லிம் வரலாற்று அறிஞர்கள் வரிசையில் சிறப்பிடம் பெறுபவர் அலி இப்னு ஹுஸைன் அல்மஸ்ஊதி ஆவார். தனது வரலாற்று நூலுக்கான தகவல்களைப் பல்வேறு நூல்களிலிருந்து பெற்றுக் கொண்டது மட்டுமன்றி, தனது நீண்ட பிரயாணங்களின் மூலம் தான் பெற்ற அறிவு, அனுபவங்கள் என்பவற்றின் மூலமாகவும் பெற்றுக் கொண்டார். அவர், இந்தியா, இலங்கை, ஆர்மேனியா, மடகஸ்கார், சீனா, கஸ்பியன் கடற் பிரதேசம் என்பவற்றுக்குப் பிரயாணம் செய்துள்ளார். தனது இறுதிக் காலப் பிரிவில் சிரியாவிலும், எகிப்திலும் வாழ்ந்த அல்மஸ்ஊதி ‘முரூஜுத் தஹப்’

என்ற வரலாற்று நூலைத் தொகுத்தார். கி.பி.947 ஆம் ஆண்டு வரையிலான உலக வரலாற்றை இந்நூல் தொகுத்துக் கூறுகிறது. அவர் தனது நூலின் முன்னுரையில் இந்நூலைத் தொகுப்பதற்காக, தான் ஐம்பது வரலாற்று நூல்களைப் படித்ததாகக் குறிப்பிடுகிறார். தபரியின் வரலாற்று நூலில் காணப்படுவது போன்று வரலாற்று நிகழ்ச்சிகள் நடைபெற்ற காலப்பிரிவுகளையும், திகதிகளையும் அடிப்படையாகக் கொண்டன்றி, பேரரசுகள், சாம்ராச்சியங்கள் என்பவற்றை அடிப்படையாக வைத்து அவர் தனது வரலாற்று நூலைத் தொகுத்துள்ளார்.

அல்மஸ்ஊதியுடன் முடிவடைந்த இஸ்லாமிய வரலாற்றுக் கலை மரபு இஸ்லாத்தின் முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் சிறப்பான வளர்ச்சியைக் கண்டது. அதனைத் தொடர்ந்து வந்த நூற்றாண்டுகளில் இஸ்லாமிய நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கும், முஸ்லிம் உலகில் தோற்றமெடுத்த புவியியல் தத்துவங்கள், வானவியல் போன்ற கலைகளும் வரலாற்றுக்கலை மரபில் மிகுந்த செல்வாக்கை ஏற்படுத்தின.

சமூகவியலின் தந்தையாகவும், மனித வரலாற்றை அறிவியல் நோக்கில் அணுகி பகுப்பாய்வு செய்த வரலாற்று மேதையாகவும், இப்னு கல்தூன் விளங்குகிறார். தனது வரலாற்று நூலுக்கு அவர் எழுதிய ‘முகத்திமா’ என்றழைக்கப்படும் முன்னுரையில் வரலாற்றுத் தத்துவம் ஒன்றை விளக்கியுள்ளார். ஆதலால், வரலாற்றுத் தத்துவம் ஒன்றைத் தந்த முதலாமவர் என்று அவர் கருதப்படுகிறார்.

முகத்திமா அவரது பெரு நூலான நான்கு பகுதிகளைக் கொண்ட ‘கிதாபுல் இபர்’ எனும் நூலின் நீண்ட முகவுரையாகவும், அதன் முதலாவது பகுதியாகவும் அமைந்துள்ளது. கிதாபுல் இபரின் இரண்டாவது பகுதி இஸ்லாத்திற்கு முந்திய அரேபியர், பபிலோனியர், நபாதியர், இஸ்ரவேலர்கள், ஆரம்ப கிறிஸ்தவர்கள், கிரேக்கர், பாரசீகர், உரோமர், துருக்கியர் ஆகிய இனங்கள் பற்றி ஹிஜ்ரி நான்காம் ஆண்டு வரையிலான வரலாற்றை விபரிப்பதுடன், ஆரியரது காலப்பிரிவு வரையிலான இஸ்லாமிய வரலாற்றை விளக்குகிறது. நூலின் மூன்றாம் பாகம் அவரது காலப் பிரிவு வரையுள்ள பெர்பெர் இனத்தின் வரலாற்றை விளக்குகிறது. நூலின் இறுதிப் பகுதியில் இப்னு கல்தூன் தனது வாழ்க்கை வரலாறு பற்றிய சில குறிப்புகளை இணைத்துள்ளார்.

இப்னு கல்தூனின் பார்வையில் வரலாறு என்பது நாகரிகத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையுமே குறிக்கிறது. சமூகம் அதன் இயல்பிலேயே மாறும் தன்மை கொண்டது. மனித சமூகம் ஒவ்வொன்றும் முதற்கட்டத்தில் நாடோடி வாழ்வையும், பின் மந்தை மேய்ப்பு வாழ்வையும், அடுத்து விவசாய வாழ்வையும், பின் நகர்ப்புற வாழ்வையும் கொண்டு நான்கு கட்டங்களைக் கொண்டதாகவே வளர்கிறது என இப்னு கல்தூன் கருதுகிறார்.

வரலாறு என்பது, அரசின் தோற்றத்தையும், வீழ்ச்சியையும் மட்டுமல்லாது, அது குறித்தகால சமூக அமைப்பு, சமூக உறவு என்பவற்றையும் உள்ளடக்கியுள்ளது என்றும், மனிதனின் சமூக வாழ்வு என்பது அச்சமூகத்தில் வாழும் மக்களின் தொழில், பொருளாதாரம், கலைகள், சமயம் முதலானவற்றையெல்லாம் உள்ளடக்கி நிற்கிறது; இவை அனைத்தும் இணைந்தே சமூக வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குகின்றன என்றும் அவர் கருதுகிறார். ஒரு சமூகத்தின் அழிவு என்பது மற்றொரு சமூகத்தின் பிறப்பைக் குறிக்கிறது என்றும், ஓர் அரசின் வீழ்ச்சி என்பது அவ்வரசில் வாழ்ந்த செல்வந்தர்களின் வீழ்ச்சியையும், மற்றொரு செல்வந்தக் குழுவின் தோற்றத்தையும் குறிக்கிறது என்றும் கருதுகிறார். ஆட்சிகளின் நிலைப்பாட்டிற்கும் உறுதிக்கும் ‘அஸபிய்யா’ என்னும் குழு உணர்வும், மதமும் மிக முக்கிய பங்களிப்பை ஆற்றுகின்றன என்பது அவரது கருத்தாகும். ஆட்சியை மனிதனின் உடல் வளர்ச்சியோடு ஒப்பிடும் அவர், ஒரு மனிதன் பிறந்து வளர்ச்சியடைந்து முதுமையடைந்து மடிவதுபோல, ஆட்சியும் தோற்றமெடுத்து வளர்ந்து, நலிந்து, மறைகிறது எனக் குறிப்பிடுகிறார். சமூக மாற்றம் பற்றிப் பேசும் போது நாடோடி சமூகத்துக்கும், நகர்ப்புற சமூகத்துக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றார். நாடோடி சமூகம் கடின உழைப்பையும், இராணுவத் திறன்களையும் கொண்டுவருகிறது என்றும், அங்கு தலைமைத் துவத்துக்குக் கட்டுப்படும் இயல்பு உண்டென்றும் குறிப்பிடுகிறார். இவ்வாறு கடின உழைப்பின் மூலம் உருவாகிய சமூகம் நகர்ப்புற சமூகமாக மாறி, செல்வத்தைத் திரட்டிக் கொண்ட போது சுகபோக வாழ்வும், சோம்பலும் உருவாகி, ஈற்றில் அச்சமூகம் அழிகிறது என்ற தத்துவத்தை இப்னு கல்தூன் எடுத்துக் காட்டியுள்ளார்.

# அழகியற் கலைகள்

## அழகியல் பற்றிய இஸ்லாமியக் கண்ணோக்கு

மனித உணர்வுகளைப் பரவசப்படுத்தி தன் வசப்படுத்தும் ஆற்றல் கொண்ட அழகியல் உணர்வு ஒரு மனிதனின் சாதாரண ஆக்கங்களில் புலப்படுத்தப்படும் போது அவை கலைப் படைப்புக்களாகப் பரிணமிக்கின்றன. மனிதனிடம் இயல்பாகவே அழகை விரும்பும் மனப் பாங்கு உள்ளது. இன, மொழி, நிற, சமய பேதங்களுக்கு அப்பால் நின்று அதனை இரசிக்கிறான். மனித சமூகத்தின் அழகுக் கலை ஆக்கங்களில் முஸ்லிம்களின் படைப்பும் மிகப் பெரும் சாதனையாக இனங்காணப்பட்டுள்ளது.

தொட்டு உணரக் கூடிய சடப் பொருட்களில் மட்டுமன்றி மனித உணர்வுகள், பண்புகள், உரையாடல், இலக்கியப் படைப்புக்கள் முதலிய அனைத்துத் துறைகளிலும் அழகியலைக் காணவே இஸ்லாம் விரும்புகிறது. அல்குர்ஆன் பல இடங்களில் அழகியலைப் பாராட்டியுள்ளது. அழகு எனும் பொருள் தரும் 'ஹுஸ்ன்', 'ஜமால்', 'ஸீனத்' எனும் அரபுப் பதங்கள் அல்குர்ஆனில் பல இடங்களில் கையாளப்பட்டுள்ளன. ஸீனத் எனும் பதம் புற அழகைக் குறிக்க, மற்றைய இரு பதங்களும் புற அழகை மட்டுமன்றி செயற்பாடுகள், செயற்பாட்டு வழிமுறைகள், மனிதப் பண்புகள் முதலானவற்றில் அழகாக இருப்பதையும் குறிக்கினறன.

ஃகுதூ ஸீனதகும் (உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள்) (அல்குர்ஆன் 07:31)
ஸீனதில் ஹயாதித் துன்யா (உலக வாழ்வின் அலங்காரம்) (15:18)
அஹ்ஸனு கவ்லன் (அழகிய வார்த்தை) (41:33)
அஹ்ஸனு அமலன் (அழகிய செயல்) (67:02)
அஹ்ஸனுல் ஃகாலிகீன் (அழகிய படைப்பாளன்) (23:14)
அஹ்ஸனி தக்வீம் (அழகிய வடிவு) (95:04)
வஜாதில்ஹும் பில்லதி ஹிய அஹ்ஸன் (அழகிய முறையில் அவர்களிடம் தர்க்கம் செய்வீராக) (16:125)
மவ்இழதன் ஹஸனத் (அழகிய உபதேசம்) (16:125)
அஹ்ஸனுல் கஸஸ் (அழகிய வரலாறு) (12:03)
ஸப்றுன் ஜமீல் (அழகிய பொறுமை) (12:83)

மக்களை வழிகெடுக்கும் கவிஞர்கள் இறைவனின் பழித்துரைத் தலுக்கு உள்ளான போதும், தங்கள் கவிதைகள் மூலம் இறைவனைத் துதிக்கும் கவிஞர்கள் பாராட்டப்பட்டுள்ளனர். கீழ்த்தரமான கவிதைகளைப் பாடிய இம்ரஉல் கைஸ் நரகைச் சென்றடைவான் என்று கூறிய நபி (ஸல்) அவர்கள், இறையுணர்வு ததும்பும் 'பானத் சுஆத்' கவிதையைப் பாடிய கஅப் இப்னு ஸுஹைரைத் தன் போர்வையால் போர்த்தினார்கள். கழுதையின் உரத்த குரல் வெறுக்கத் தக்கது (31:19) என்ற கருத்தை அல்குர்ஆன் எடுத்துரைத்த போதும் அபூ மூஸா அல் அஷ்அரி (றழி) அவர்களின் இனிய குரலை நபி (ஸல்) அவர்கள் பாராட்டியுள்ளார்கள்.

அழகியற் கலை உயர்ந்த இலட்சியத்துக்காகப் பயன் படுத்தப்பட வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகிறது. "வானங்களையும் பூமியையும் அவற்றிட்கிடையேயுள்ள அனைத்தை யும் நாம் வீணுக்காகப் படைக்கவில்லை" (38:27)

இஸ்லாமிய சிந்தனைக்கு இயைபான அழகியற் கலை ஆக்கங்களையே முஸ்லிம் சமூகம் ஊக்குவித்தது. இதன் விளைவாக, கட்டடங்கள், பள்ளிவாயல்களின் மினாராக்கள், குப்பாக்கள், சுவர்கள் என்பவற்றிலும், புத்தக அட்டைகள், தள விரிப்புகள், மட்பாண்டங்கள், உலோகப் பொருட்கள், மாணிக்கக் கற்கள், ஆடைகள் முதலானவற்றை அழகுபடுத்தவும் தாவர வடிவங்கள், கேத்திர கணித வடிவங்கள், அரபு எழுத்தணி என்பவற்றை உபயோகித்தனர். இப்புதிய அலங்கார வடிவே 'அரபெஸ்க்' (Arabesque) என அழைக்கப்படுகிறது.

## அரபு எழுத்தணிக்கலை

அரபு எழுத்துக்களை ஓவிய அம்சங்களோடு அழகுற வடித்துக் காட்டுவதே அரபு எழுத்தணிக்கலையாகும். தாமாகவே வளர்த்து வந்தார்கள்.

"எழுத்தணிக் கலை போன்று எந்தவொரு கலையும் கண்ணியப் படுத்தப்படவோ விடாமுயற்சியோடு விருத்தி செய்யப்படவோ இல்லை" என்று தோமஸ் ஆர்னல்ட் எனும் அறிஞர் குறிப்பிடுகிறார். "பிற நாட்டு அரசர்கள் தமது பழமொழிகள் பற்றி எம்மிடம் பெருமையடித்தால் எம்மிடமுள்ள எழுத்தணிக் கலை வடிவங்களைப் பற்றி நாமும்

அவர்களிடம் பெருமையடித்துக் கொள்ளலாம்'' என "அப்பாஸிய கலீபாவான கலீபா ம..மூன் குறிப்பிடுகிறார். எழுத்தணிக் கலையின் வளர்ச்சிக்கு முக்கிய தூண்டுதல்களை அல்குர்ஆனும் ஹதீஸும் வழங்கின".

''நூன், எழுதுகோலின் மீதும் (அதனைக் கொண்டு) அவர்கள் எழுதியவைகள் மீதும் சத்தியமாக'' (68:01)

''அவன்தான் எழுதுகோலைக் கொண்டு எழுதக் கற்றுக் கொடுத்தான்'' (96:04).

அழகிய எழுத்துக்களில் எழுதுமாறு நபியவர்களும் மக்களுக்கு ஆர்வமூட்டினார்கள்.

''அழகிய எழுத்துக்களில் எழுதுங்கள்; அது உங்களுக்கு பரக்கத்தைச் சொரியும்''

அரபு எழுத்துக்களின் இயல்பும் இதற்குத் துணையாய் அமைந்தது. வேறு எந்த எழுத்துக்களுக்கும் இல்லாத சிறப்பம்சம் அரபு எழுத்துக் களுக்குக் காணப்படுகின்றது. நெகிழ்ச்சி கூடிய எழுத்துக்களாகக் காணப்படுவதனால் விரும்பிய வடிவத்தில் அவற்றை வடிவமைக்க முடியும்.

இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்பே அரபு எழுத்துக்கள் என்றறியப்பட்ட எழுத்துக்கள் 'லகமைட்ஸ்' ஆட்சியில் அறிமுக மாகியிருந்தன. அங்கிருந்தே இவ்வெழுத்துக்களை அரேபியர் பெற்றனர் என்று பலாதூரி கருதுகின்றார். இவரது கருத்தை இப்னு கல்தூன், இப்னு கல்லிகான் முதலானோரும் ஆதரிக்கின்றனர். ஹிராவிலிருந்து அல்லது அன்பாரிலிருந்து அரபு எழுத்துக்களை ஹிஜாஸ் பெற்றுக் கொண்டது என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.

அல்குர்ஆனை எழுதிப் பாதுகாப்பதற்கு நபி (ஸல்) அவர்கள் ஏற்பாடு செய்தது முதல் ஹிஜாஸில் அரபு எழுத்துக்களும், எழுதும் கலையும் பிரபல்யமடைய ஆரம்பித்தன. அல்குர்ஆனின் கண்ணியத் தையும், பிழையின்றி ஓதுவதன் அவசியத்தையும் கருத்திற் கொண்டு எழுத்துக்களை அரைகுறையின்றி முழுமையாகவும் அழகாகவும் எழுத முயற்சித்ததால் சாதாரண அரபு எழுத்துக்கள் நாளடைவில் முஸ்லிம்களின் அழகுணர்ச்சியைப் பரதிபலிக்கும் எழுத்தணியாக மலர்ச்சி

கண்டது. இம் மலர்ச்சி அலி (ரழி) அவர்களின் ஆட்சியின் போதே தொடக்கி வைக்கப்பட்டது. கூபி எழுத்தை அலங்காரமாக எழுதுவதை அவர்களே ஆரம்பித்து வைத்ததால் எழுத்தணிக் கலையின் முதல் ஆசிரியராகவும் கருதப்படுகின்றார்கள்.

வஹி எழுதப்படும் காலத்தில் கடதாசிகள் அறிமுகமாகியிராததால் 'நஸ்கி' எழுத்துக்களை விட 'கூபி' எழுத்துக்களே இலகுவானதாக இருந்தன. எனவே, கூபி எழுத்துக்கள் வளர்ச்சி கண்டன. இதனால் தான் அரபு எழுத்துக்களின் ஆரம்ப வடிவு கூபி எழுத்துக்களே என்று நம்பப்படுகிறது.

இஸ்லாமிய ஆட்சிக் காலத்தின் ஆரம்பப் பகுதியில் அரபு எழுத்தணிக் கலை வளர்ச்சி கண்டமைக்குப் பின்வரும் காரணங்களைக் கூறலாம்.

1. இஸ்லாமிய இராச்சிய வியாபகத்துடன் இஸ்லாத்தை ஏற்போரின் தொகை அதிகரித்தமையால் அதிகமான அல்குர்ஆன் பிரதிகள் தேவைப்பட்டமை.
2. இஸ்லாமிய உலகில் ஏற்பட்ட அறிவியற் கலைகளின் வளர்ச்சி.
3. கடதாசி ஆலைகள் நிறுவப்பட்டு பல தரத்திலான கடதாசிகள் உற்பத்தி செய்யப்பட்டமை.
4. அப்பாஸிய அரசு எழுத்தணிக்கலை வளர்ச்சிக்கு வழங்கிய ஊக்குவிப்பு
5. கட்டடக் கலைகளில் மேற்கொள்ளப்பட்ட அரபு எழுத்தணிக் கலை வேலைப்பாடுகள்
6. நஸ்கி எழுத்துக்களின் வளைந்து நெளிந்து கொடுக்கும் இயல்பு
7. அல்குர்ஆனுடன் தொடர்புடைய ஒரு கலையாக அமைந்ததால் அது ஓர் இபாதத் என்று கருதப்பட்டமை.
8. எழுத்தணிக் கலைஞர்கள் நல்ல வருமானத்தையும் சமூக முக்கியத்துவத்தையும் பெற்றமை.

உமையாக்கள் காலத்தில் உத்தியோகபூர்வ மொழியாகவும் அறிவுசார் மொழியாகவும் அரபு மொழி இருந்தமையால் அரபு எழுத்துக்களின் முக்கியத்துவம் சிறப்புற்றோங்கியது. அரேபியர் அல்லாதவர்கள் கூட தமது சிந்தனை வெளிப்பாட்டுக் கருவியாக அரபைப் பயன்படுத்தினர். சமூகத்தில் வேறு கலைஞர்களை விட அரபு எழுத்தணிக் கலைஞர்களுக்கு அதிக மதிப்பிருந்தது. குத்பா இப்னு உபைதுல்லாஹ், காலித் இப்னு ஹஜ்ஜாஜ், ஸாலிம், அப்துல் ஹமீத் ஆகியோர் உமையாக்கள் காலப் பிரிவைச் சேர்ந்த அரபு எழுத்தணிக் கலைஞர்களாவர்.

அப்பாஸிய ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் குர்ஆனையும் விஞ்ஞானம், தத்துவம், சட்டவியல், இலக்கணம் போன்ற துறைகளையும் சேர்ந்த நூல்களையும் பிரதி செய்வதற்கு பல எழுத்து வடிவங்கள் நடைமுறையில் இருந்தன. கலீபாக்களான ஹாரூன் ரஷீத், ம.்.மூன் ஆகியோர் நூல்களைப் பிரதி செய்வதற்கு அளப்பரிய ஒத்துழைப்பு நல்கினர்.

அப்பாஸிய ஆட்சியில் இஸ்ஹாக் இப்னு ஹம்மாத், அவரது சகோதரர் முஹ்ஹாக், இப்றாஹீம், இஸ்ஹாக் இப்னு இப்றாஹீம், கலீபா ம.்.மூனின் அமைச்சரான பழ்ல் மற்றும் அஹ்மத் பின் ஹஸன், அபூ அலி, அபூ அப்துல்லாஹ் போன்ற எழுத்தணிக் கலைஞர்கள் பிரபல்யம் பெற்று விளங்கினர்.

அப்பாஸிய ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் தோன்றிய சிற்றரசுகளும் அரபு எழுத்தணிக் கலை வளர்ச்சிக்கு பெரிதும் உதவின. துருக்கி மன்னர்களான ஸுல்தான் ஸாலிம், ஸுலைமான், முறாத் ஆகியோர் இத்துறையில் அதிக ஆர்வம் காட்டினர். சிரியா, ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து கலைஞர்களை வரவழைத்து இதன் வளர்ச்சிக்கு உதவினர்.

ஈரானியர் தமது பிரதான கலை வெளிப்பாட்டு அலங்கார வடிவங்களாக அரபு எழுத்தணிக் கலை வடிவங்களைப் பயன்படுத்தினர். 'எழுத்தணிக் கலையின் வளர்ப்பிடம்' என அறிஞர்களால் பாராட்டப்

படுமளவிற்கு ஈரானில் எழுத்தணிக் கலை வடிவங்கள் அதிகமாக வளர்ந்தன.

மொகலாய ஆட்சிக் காலத்தில் இந்தியா அரபு எழுத்தணிக் கலைக்குப் பிரபல்யம் பெற்றிருந்தது. அக்பர் மன்னரின் காலத்தில் நஸ்தாலிக் எழுத்து மிகப் பிரபல்யம் பெற்று விளங்கியது. இந்தியாவில் அரபு எழுத்தணி வடிவங்கள் அறிமுகமாகிய போது அவை சித்திரங்களோடு இணைந்த வகையிலேயே வளர்க்கப்பட்டன. மன்னர் அவ்ரங்கஷிப் சித்திர, சிற்பக் கலைகளை வெறுத்த போதிலும் எழுத்தணிக் கலையைப் பெரிதும் விரும்பியதோடு அதன் வளர்ச்சிக்கு ஆதரவையும் வழங்கினார். தன் கைகளாலேயே அல்குர்ஆனைப் பிரதி பண்ணுவதில் பெருமையடைந்தார்.

முஸ்லிம் ஸ்பெயினில் நஸ்கி எழுத்தின் மற்றொரு வடிவான ‘அந்தலூசியன்’ அல்லது ‘கோர்டோவியன்’ எனும் பெயர் பெற்ற எழுத்து விருத்தியடைந்தது.

முஸ்லிம் கலைஞர்களின் நீண்டகால அயராத உழைப்பின் விளைவாக எழுத்து நடையின் விருத்திக்குதவும் வழிமுறைகளும் விதிகளும் பெற்றுக் கொள்ளப்பட்டன. அது முதல் எழுத்தணி, கணித விதிகளை அடிப்படையாகக் கொண்டு கற்க வேண்டிய ஓர் அறிவியற் கலையாகவும் வளர்ந்தது. ‘இப்னு முக்லா’ என்பவர் எழுதிய ‘அர்ரிஸாலா’ எனும் நூல் இத்துறையில் எழுதப்பட்ட முதல் நூலாகும். எழுத்தணி விதிகளுக்கான அடிப்படை நூலாக இந்நூல் கருதப்படுகிறது.

எழுத்தணிக் கலைஞர்களின் படைப்புக்கள் தனித்துவம் மிக்கதாகவும், இஸ்லாமிய கோட்பாட்டுக்கு இயைபாகவும், ஒழுக்கவியல் மரபுகளைப் பேணுவதாகவும், ஆன்மீக எழுச்சியைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தன. தூரிகைகளாலும், வர்ணத்தாலும் அலங்கரிக்கப்படும் ஒரு கலையாக எழுத்தணி பரிணமித்ததால், வர்ணந்தீட்டுதலும் எழுத்தணிக் கலையுடன் வளர்ச்சி கண்டது.

## அரபு எழுத்தணிக் கலையை ஊக்குவிக்க அண்மைக் காலங்களில் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்

முஸ்லிம் பேரரசுகளும் சிற்றரசுகளும் செல்வாக்குடன் இருந்த காலப் பகுதிகளில் எழுத்தணி வளர்ச்சி கண்டபோதும், முஸ்லிம் உலகு ஐரோப்பியரின் அரசியல் ஆதிக்கத்துக்குட்பட்ட பின் தட்டச்சு, அச்சியந்திரம் முதலானவை அறிமுகமாகியதால் அதன் வளர்ச்சி தேக்கம் அடைந்தது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் முஸ்லிம் நாடுகள் சுதந்திரம் அடைந்து பொருளாதார வளமும் பெருகியதால், அண்மைக் காலங்களில் எழுத்தணிக் கலையை ஊக்குவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இஸ்லாமிய சின்னங்களைப் பாதுகாப்பதற்கான சர்வதேச குழு 1986 முதல் எழுத்தணிப் போட்டிகளையும், எழுத்தணிக் கண்காட்சி களையும் உலகளாவிய ரீதியில் நடாத்துகின்றது.

தலைசிறந்த எழுத்தணிக் கலைஞர்களில் ஒருவராக மதிக்கப்படும் 'யாக்கூத் அல் முஸ்த.்.ஸிமி'யைக் கௌரவிக்கும் முகமாக 1989இல் எழுத்தணிப் போட்டியையும் எழுத்தணிக் கண்காட்சியையும் அக்குழு ஏற்பாடு செய்தது. அச்சந்தர்ப்பத்தில் 78 பக்கங்களைக் கொண்ட ஒரு நூல் வெளியிடப்பட்டது. யாக்கூத் அல் முஸ்த.்.ஸிமியின் வரலாறு, அவரது சில எழுத்தணிப் படைப்புக்கள், போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள் என்பன அந்நூலில் அடங்கியிருந்தன.

1961இல் அழகியற் கலைகளுக்கான நூதன சாலையொன்று தெஹ்ரானில் திறந்து வைக்கப்பட்டது. இங்கு சிறந்த எழுத்தணிப் படைப்புக்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. தற்காலத்தில் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் எழுத்தணிக்கலை போதிக்கப்படுகிறது. அக்கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் இஸ்லாமிய சஞ்சிகைகளில் பல மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றன.

### அரபெஸ்க்

முஸ்லிம்கள் வளர்த்த தூய்மையான கருத்துப் பொருட் கலைகளில் அரபெஸ்க்கும் ஒன்றாகும். கணித அணி வேலைப்பாடுகள், எழுத்தணி வேலைப்பாடுகள், தாவரம், மலர்களின் அமைப்பிலான வேலைப்பாடுகள்

ஆகியவற்றை மிக நுட்பமான முறையில் இணைத்துச் செய்யப்படும் அலங்கார வேலைப்பாடே 'அரபெஸ்க்' என அழைக்கப்படுகிறது.

அரபெஸ்க்கைப் பொறுத்தளவில் முஸ்லிம் கலைஞர்கள் பல்வேறு முஸ்லிம் பிரதேசங்களுக்கேற்ப, பல்வேறு காலகட்டங்களில் வித்தியாச மான வேலைப்பாடுகளைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால், பெரும்பாலும் வடிவ கணித அணிவேலை, இலைத் தொகுதிகள், மலர்கள் ஆகிய வற்றால் செய்யப்பட்ட வேலைப்பாடுகளையே அவர்கள் பயன்படுத்தி யுள்ளனர்.

அரபெஸ்க் வேலைப்பாடுகளில் இலைத் தொகுதி வேலைப்பாடு மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. பூரணமாக ஒரு தாவரத்தின் வடிவத்தைப் பயன்படுத்தி அல்லது கொடிகள், தளிரிழைகள் அல்லது இலைகள், மலர்கள், பழங்கள் முதலியவற்றைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட வேலைப்பாடுகள் அனைத்தும் பொதுவாக இலைத் தொகுதி வேலைப்பாடுகளாகக் கருதப்பட்டன. ரோஜா மலர், அல்லி மலர், குட்டையான விசிறி போன்ற அமைப்பிலுள்ள பனை ஓலைகள், திராட்சைக் கொடியின் இலைகள் போன்றவை மிகப் பரவலாக இவ்வகையான வேலைப்பாடுகளில் பயன்படுத்தப்பட்டன. உதாரணமாக ஸ்பெயினில் அல் ஹம்ரா மாளிகையில் காணப்படும் அழகிய வேலைப்பாடுகளைக் குறிப்பிடலாம்.

அரபெஸ்க்கில் தாவர வேலைப்பாடுகளோடு வடிவ கணித வேலைப் பாடுகளும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. சதுரங்கள், நீள் சதுரங்கள், வட்டங்கள், அரை வட்டங்கள், முக்கோணங்கள் போன்ற பல்வேறு அமைப்புகளைக் கொண்ட வடிவங்களைத் தோற்றுவிக்கும் முறையும் அரபெஸ்க் வேலைப்பாட்டின் ஓரம்சமாக விளங்கியது. இவ்வேலைப் பாடுகளைச் செய்வதில் முஸ்லிம் கலைஞர்கள் மிகச் சிறப்புற்று விளங்கினர்.

## இசைக் கலை

இசை இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி வித்தியாச மான கருத்துக்கள் காணப்படுகின்றன. அழகுணர்வு என்பது மனிதனில் இயற்கையாகவே அமைந்துள்ள ஒன்றாக உள்ளது. மனிதனின் இயற்கையுடன் இணைந்ததாக இறைவனால் அருளப்பட்ட இஸ்லாம், மனிதனது எந்த இயற்கை உணர்வையும் விட்டொழிக்கும்படி அவனைப்

பணிக்கவில்லை. அந்த இயற்கை உணர்வுகளை முற்றிலும் கட்டுப்படுத்த வும் அது முற்படவில்லை. மனிதனில் உள்ளார்ந்து அமைந்துள்ள இந்த இயற்கை உணர்வுகளை மனிதனது ஒழுக்க, ஆத்மீக வளர்ச்சிக்கு துணை பயக்கும் வகையிலும், அத்தகைய ஒழுக்க, ஆத்மீக வளர்ச்சிக்கு அவை பாதகமாக அமையாத வகையிலும், சரியான வழியில் நெறிப்படுத்தவே இஸ்லாம் வகை செய்துள்ளது. இது தொடர்பாக கலாநிதி யூஸுப் அல்- கர்ளாவி கூறும் கருத்து நோக்கத்தக்கதாகும்.

ஷரீஅத்தின் கண்ணோட்டத்தில் நோக்கும் போது கீழ்வரும் நிபந்தனைகளுக்குட்பட்ட பாடல்களே ஹலாலானவையாக அமைய முடியும்.

1. பாடல்களின் உள்ளடக்கம் இஸ்லாமிய போதனைகளுக்கும், ஒழுக்கப் பண்பாடுகளுக்கும் முரணில்லாத வகையில் அமைதல் வேண்டும்.
2. பாடல்களின் பொருள் பொருத்தமாயிருப்பினும், அவற்றைப்பாடும் பாடகனோ, பாடகியோ கீழ்த்தரமான மனித உணர்ச்சிகளைத் தூண்டும் விதத்தில் அதனைப் பாடக்கூடாது.
3. வணக்க வழிபாடுகளில் கூட அளவு கடந்த தீவிரத் தன்மையைக் கடைப்பிடிப்பதை இஸ்லாம் விலக்கியுள்ளது என்ற அடிப்படையில், கேளிக்கைகளில் ஒன்றான பாடல்களைப் பாடுவதிலும் கேட்பதிலும் அளவு கடந்து ஈடுபடுவது தவிர்க்கப்படல் வேண்டும்.
4. பாடல்களைக் கேட்கும் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைப் பொறுத்து தான் செவிமடுக்கும் பாடல்கள் அவனில் எத்தகைய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதைச் சிந்தித்து, உணர்ந்து அத்தகைய பாடல்களைக் கேட்பதைத் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய முக்கிய அறிஞர்கள் சிந்தனையாளர்கள் பலர் இக்கருத்தையே கொண்டிருந்தனர். அவ்வப்போது இசையைக் கண்டித்த அறிஞர்கள் அதன் தவறான பிரயோகத்தையே கண்டித்தனர்.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் பயணத்தை மேற்கொண்டு மதீனாவை அடைந்த போது நபிகளாரின் வருகையினால் ஆனந்த

மடைந்த பெண்களும் குழந்தைகளும் ‘தல அல் பத்ரு அலைனா’ என்ற பாடலை இசைத்து அவர்களை வரவேற்றனர்.

திருமணங்கள் இரகசியமாக நடத்தப்படாமல் ‘தப்’ அடிக்கப்பட்டு பகிரங்கப்படுத்தப்படுவதை நபி (ஸல்) அவர்கள் விரும்பினார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள் கூறுகிறார்கள். "ஒரு நாள் எங்கள் இல்லத்திற்கு அபூபக்கர் (ரழி) அவர்கள் வந்தார்கள். அப்போது அன்ஸாரிப் பெண்களில் சிலர் ‘புஆஸ்’ யுத்தத்தின் போது பாடப்பட்ட ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் ‘‘அல்லாஹ்வின் தூதரின் இல்லத்தில் ஷைத்தானின் இசைக் கருவியா’’ எனக் கேட்டார்கள். அத்தினம் ‘ஈத்’ பெருநாள் தினமாக இருந்தது. அப்போது நபி (ஸல்) அவர்கள் ‘‘அபூபக்கரே, ஒவ்வொரு மக்களுக்கும் அவர்களுக்குரிய பெருநாள் உண்டு. இது எங்களது பெருநாளாகும்.’’ எனக் கூறினார்கள்.

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆயிஷா (ரழி) அவர்கள் தங்களுக்கு உறவினராக இருந்த ஓர் அன்ஸாரிப் பெண்மணிக்குத் திருமணம் முடித்து வைத்தார்கள். அப்போது நபி (ஸல்) அங்கு வந்து "அத்திருமணத்தில் சில பெண்களை ஏற்பாடு செய்தீர்களா என ஆயிஷா (ரழி) அவர்களிடம் வினவ, அவர்கள் ‘இல்லை’ எனப் பதிலளித்தார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் ‘‘மணப் பெண்ணை அனுப்பிய போது ஏன் நீங்கள் மணப் பெண்ணுடன் பாடக்கூடிய சில பெண்களையும் அனுப்பியிருக்கக் கூடாது? அன்ஸார்கள் ‘கஸல்’ என்னும் பாடலை விரும்புபவர்கள் அல்லவா?’’ எனக் கூறினார்கள்.

இந்தப் பின்னணியில் இஸ்லாத்திற்கும் இசைக்குமிடையில் உள்ள தொடர்பை நோக்கும் போது கவிதைகளும் பாடல்களும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதும், அவை உள்ளடக்கியுள்ள கருத்துக்களும் பொருளும் விரசமானதாகவும், கீழான உணர்வுகளைத் தூண்டுவதாகவும், ஒழுக்க, ஆத்மீக வாழ்விற்கு ஊறு விளைவிக்கும் வகையிலும் அமையும்போதே இசையும், பாடலும், கவிதைகளும் கண்டிக்கப்படுகின்றன என்பதும் தெளிவாகின்றது.

அல் குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில் உரோம, பாரசீக பிரதேசங்கள் முஸ்லிம்களின் நேரடி ஆட்சிக்குட்பட்டதால், அங்கு வளம் பெற்றிருந்த இசைக் கலை நாளடைவில் முஸ்லிம்களிடையே மேலும் செல்வாக்குப் பெற்றது. உரோம, பாரசீக பிரதேசங்களை கைப்பற்றியதன் பின்னர் கைதிகளான ஆண்களும், பெண்களும் மக்கா, மதீனா உட்பட முக்கிய முஸ்லிம் நகர்களில் வாழ்ந்த முஸ்லிம்களிடம் பகிர்ந்தளிக்கப் பட்டனர். இதனால் ஒவ்வொரு அரபு முஸ்லிம் வீட்டிலும் அரபு இனத்தைச் சேராத இத்தகு பெண்களில் ஒருத்தியேனும் வாழ்ந்தாள். இவர்களில் பலர் தம் எஜமானர்களின் குடும்பத்தவர்களைத் திருப்திப்படுத்த தமக்கு ஏற்கனவே நன்கு பரிச்சயமாக இருந்த இசைப் பயிற்சிகளில் ஈடுபட்டனர்.

உமையா ஆட்சியாளர்களில் பலர் உலக சுகபோகங்களில் ஆர்வம் காட்டினர். உமைய சமூகத்தின் உயர்தர வகுப்பினர் செல்வ வளம் உடையவர்களாக இருந்தனர். அவர்களுடன் கவிஞர்களும் கதை கூறுவோரும் மட்டுமல்லாது, இசைக் கலைஞர்களும் நெருக்கமான உறவு கொண்டிருந்தனர். குடிமக்களும் இவர்களைப் பின்பற்றினர். வசதி படைத்தவர்கள் பாடகிகளை விலை கொடுத்து வாங்கி தத்தமது வீடுகளில் வைத்துக் கொண்டனர். இதன் விளைவாக இசைக் கலை அவர்களிடையே அதிக செல்வாக்குப் பெறலாயிற்று. கலீபாக்கள், பிரபுக்கள் உட்பட பலர் இசையில் மூழ்கலாயினர். இவ்வாறு இசைக் கலை சமூக முக்கியத்துவம் பெற்று வளர்ச்சியடைந்தாலும் இறை பக்தியுடைய பலர் இசைக் கலையைப் புறக்கணித்து வெறுத்தனர். இமாம் மாலிக் (ரஹ்) பாட்டுப் பாடுவதைத் தடுத்தார்கள். பாட்டைக் கேட்பதும் பாவம் என்று இமாம் அபூ ஹனீபா (ரஹ்) கூறினார்கள். இசையில் மூழ்கிப்போயிருப்பவனின் அறியும் சக்தி குறைந்து விடுகிறது, எனவே அவனது சாட்சியத்தை ஏற்க வேண்டாம் என்று இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டார்கள். இசை மக்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கிறது என்று அவர்கள் கருதியதாலேயே இக்கருத்தை அவர்கள் வலியுறுத்தினர். இத்தகையோர் இசையை வெறுத்தொதுக்கிய போதும் வேறு சிலர் இசையையும், இசைக் கலைஞர்களையும் ஆதரித்து ஊக்குவித்ததுடன் இசைக்கலை இஸ்லாத்தில் அங்கீகாரம் உடைய ஒரு கலை என்று நிறுவ குர்ஆன். ஹதீஸ் ஆதாரங்களையும் முன்வைத்தனர்.

"நிச்சயமாக குரல்களிலெல்லாம் மிக்க வெறுக்கத்தக்கது கழுதையின் உரத்த குரலே" (31:19). இக்குர்ஆன் ஆயத்து இனிய குரல் மிகவும் விரும்பத்தக்கது, பாராட்டத்தக்கது என்ற பொருளையும்

தன்னுள் கொண்டுள்ளது என்று அவர்கள் விளக்கமளித்தனர். மிக்க இனிய குரலில் தெளிவுறக் குர்ஆனை ஓதும் நபித் தோழரான அபூ மூஸா அஷ்அரி (ரழி) அவர்கள், தாவூத் (அலை) அவர்களில் பரம்பரையில் இன்னிசை எழுப்பும் குரல் வழங்கப்பட்டவர் அபூ மூஸா அஷ்அரி (ரழி) என்று பொருள் தருகின்ற ஹதீஸை இசைக் கலையை ஆதரிப்போர் ஆதாரம் காட்டினர். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் இசைக் கலையை ஆதரிப்போரதும், எதிர்ப்போரதும் கருத்துக்களை எடுத்துக் காட்டி நடுவழிக் கருத்தொன்றை முன்வைக்கும் வரை இக்கருத்துப் போராட்டம் தொடர்ந்தது.

இசைக் கலையின் அனுமதி, அங்கீகாரம் பற்றிய கருத்தில் முஸ்லிம் அறிஞர்கள் இருவித அபிப்பிராயங்களைக் கொண்டிருந்த போதும் மக்களை வழி தவறச் செய்யும் வகையில் இடம் பெறும் இசையையும், இஸ்லாமிய சிந்தனைக்கு முரணான கவிதைகளையும், நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தும் வகையிலான பாடல்களையும் பாடுவதையும் கேட்பதையும் இவ்விரு சாராரும் அங்கீகரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அப்பாஸிய ஆட்சிக்காலத்திலும் இசைக் கலை நன்கு வளர்ச்சியடைந்தது. அப்பாஸிய அரசவையில் இசைக் கலைஞராக இருந்த யஹ்யா அல் மக்கி பிரபல்யமானவர். 'கிதாப் அல் அ.்.கானி' என்ற ஓர் இசைக் கலை நூலை இவர் எழுதினார். இவரது மகன் அஹ்மத் இந்நூலைத் திருத்தங்கள் செய்து வெளியிட்டார். இதில் 3000 பாடல்கள் உள்ளன.

'இப்றாஹிம் அல் மவ்சிலி' புகழ் பெற்ற இசைக் கலைஞராவார். இவர் 900 பாடல்களை யாத்துள்ளார். இவர் பாடகிகளைப் பயிற்றுவிப்பதற்கான ஓர் இசைக் கல்லூரியையும் நிறுவியிருந்தார்.

கலீபாக்களான ஹாரூன், ம.்.மூன் என்பவர்களது ஆட்சிக் காலத்தில் இசைக் கலை உச்ச வளர்ச்சி கண்டிருந்தது. அப்பாஸிய காலப் பிரிவில் முக்கிய நகர்களில் ஏனைய கலைகள் துரிதமாக வளர்ச்சியடைந்தது போல் இசைக் கலையும் பல துறைகளில் வளச்சி கண்டது. கிரேக்க மொழியிலான இசை நூல்கள் அரபு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டன. இசைக் கலை பற்றிய ஆய்வு நூல்கள் எழுந்தன ; கவிதைகள் தொகுக்கப்பட்டன ; கவிஞர்கள் பற்றிய வரலாற்று நூல்கள் எழுதப்பட்டன ; இசைக் கருவிகள் பல புதிதாக அறிமுகம் செய்யப்பட்டன ; இசைக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இசைக் கலையில் ஈடுபட்டோர் மட்டுமன்றி, அறிவியல், விஞ்ஞானக் கலைகளில் ஈடுபாடு கொண்டோரும் இசைக் கலையில் ஆர்வம் காட்டினர். கணிதவியலைக் கற்போரின் பாடத் திட்டத்தில் இசையும் அலகாக இணைக்கப்பட்டதால் இக்கலை மேலும் முக்கியத்துவம் பெற்றது. கணிதவியலாளர்கள், மருத்துவவியலாளர்கள், தத்துவ வியலாளர்கள், சூபிஸ அறிஞர்கள் போன்றவர்களும் இக்கலையில் ஆர்வம் காட்டலாயினர்.

அப்பாஸிய ஆட்சியின் பிற்காலப் பிரிவில் இசையானது மதுவுடனும், நடனத்துடனும் இணைந்து சமூக வாழ்வைச் சீர்குலைக்கும் நிலையைத் தோற்றுவித்தது. இக்காலப் பிரிவிலேயே இறையச்சம் மிக்க அறிஞர்கள், சட்ட மேதைகள் மட்டுமன்றி, சில ஆட்சியாளர்கள் கூட இசைக் கலை யைக் கண்டிக்கலாயினர். ஒரு பெண் பாடகியின் இசைக் கருவியைக் கண்ணுற்ற ஒரு மனிதர் அதனை உடைத்தெறிந்த சம்பவத்தை வரலாற்றாசிரியர் இப்னுல் அதீர் குறிப்பிடுவதிலிருந்து சமூகத்தில் ஒழுக்கக் கேடான இசை மக்கள் மத்தியில் கூட எவ்வளவு வெறுப்புணர்வை ஏற்படுத்தியிருந்தது என்பதனைப் புலப்படுத்துகின்றது. அப்பாஸிய கலீபா அல் முக்ததீ பீ அம்ரில்லா (கி.பி. 1075 – 94) ஒழுக்கக் கேடான பெண்களையும் பாடகிகளையும் வெளியேற்றும்படி கட்டளை பிறப்பித்தார். மக்களின் ஒழுக்க வாழ்வைப் பாதுகாக்கும் நோக்கோடு பாதிமி கலீபா அல் ஹாகிம் இசையையும் நடனத்தையும் வீண் கேளிக்கைகளையும் கெய்ரோவில் தடை செய்தார்.

ஆபாசமும் விரசமும் கலக்காத இயற்கைத் தன்மை கொண்ட இசையை முஸ்லிம் அறிஞர்கள் ஆதரித்ததுடன், இசை பற்றிய ஒரு கோட்பாட்டையே கட்டியெழுப்பியுள்ளனர்.

## முஸ்லிம்கள் உபயோகித்த இசைக் கருவிகள்

அரேபியர்களிடையே தந்திகள் இணைக்கப்பட்ட ‘உத்’ என்றழைக்கப்பட்ட யாழை ஒத்த இசைக் கருவிதான் முதன் முதலில் வழக்கில் வந்தது. “உத்” உபயோகிக்கப்பட்ட காலப் பிரிவில் இரு தந்திகள் மாத்திரம் கொண்ட ‘வயலின்’ எனும் இசைக் கருவியும் அறிமுகமாகியிருந்தது. ஆயினும், பொது மக்களிடையே உத் எனும் இசைக் கருவிதான் பெருமளவில் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஜாஹிலிய்யாக் காலத்தில் “உத்” அறிமுகமாகியிருந்த போதும் முஸ்லிம்களின் ஆட்சிக் காலத்தில் இவ்விசைக் கருவி மேலும் வளர்ச்சி கண்டது.

முஸ்லிம்கள் கையாண்ட மற்றொரு இசைக் கருவி 'மிஸ்மார்' ஆகும். இக்கருவி புல்லாங்குழலை ஒத்தது. மூங்கிலால் இவ்விசைக் கருவி செய்யப்பட்டிருந்து. அல் பாராபி தனது நூலில் மிஸ்மாரில் எட்டுத் துளைகள் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

முஸ்லிம்கள் கையாண்ட மற்றொரு இசைக் கருவி 'பூக்' என்றழைக்கப்பட்டது. இது ஒரு வகை ஊது குழல் ஆகும். மிருகங்களின் கொம்புகளால் இது செய்யப்பட்டிருந்தது. ஊது குழல் வகைகளில் 'கான்' (Karn), நபிர் (Nafir), சாப்பூர் (Shabbur) என்பன குறிப்பிடத் தக்கனவாகும்.

'தப்' என்றழைக்கப்பட்ட இசைக் கருவிகளும் அறிமுக மாகியிருந்தன. உருவத்துக்கும் அளவுக்கும் ஏற்ப வித்தியாசமான பல்வேறு வகையான 'தப்' எனும் இசைக் கருவிகளை வெவ்வேறு பெயர்களால் அழைத்தனர்.

'முரப்பா' என்றழைக்கப்பட்ட அரபு இசைக் கருவி முஸ்லிம் ஸ்பெயின் ஊடாக ஐரோப்பாவில் அறிமுகமாகியது. இதனையே அவர்கள் 'கிதார்' (Guitar) என்றழைத்தனர். உமையாக்கள் காலத்தில் 'ஸன்ஜோ' எனும் இசைக் கருவியை நடனத்தின்போது ஓசையைச் சீராக்குவதற்குப் பயன்படுத்தினர். எவ்வாறாயினும் சமகால இசைக்கலையின் இயல்புகள், அதன் தாக்கங்களை அக்கால இசைத்துறையுடன் சம நிலையில் வைத்து நோக்கப்பட முடியாது என்பதுடன் கூடுதல் அவதானமும் அவசியமாகும்.

## இஸ்லாமிய கட்டடக்கலை

நாகரிகம் என்பது நகரத்தை மையமாக வைத்தே வளர்ச்சியடைகின்றது. நகர நிர்மாணத்தின் ஒரு முக்கிய அங்கமாக கட்டடக்கலை விளங்குகிறது. எல்லாக் கலைகளையும் போன்றே கட்டடக்கலையும் குறிப்பிட்ட மக்களின் உலக நோக்கைப் பிரதிபலிக்கிறது. இஸ்லாமிய கட்டடக் கலையானது முஸ்லிம்களின் உலக நோக்கைப் பிரதிபலிக்கிறது.

இஸ்லாமிய உலகம் முழுவதிலும் அதன் வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் தோன்றிய கட்டடக்கலை மரபுகள் ஒரு பொதுத் தன்மையையும் ஒருமைப்பாட்டையும் கொண்டிருப்பதைக் காணலாம். இந்த ஒருமைப்பாட்டைத் தோற்றுவிக்கும் மூல காரணியாக விளங்குவது இஸ்லாமாகும்.

ஓர் உலகளாவிய மதம் என்ற வகையில் இஸ்லாம் எவ்வகையில் முன்னைய காலப் பாரம்பரியங்களைத் தன்னோடு இணைத்து முற்றிலும் புதிய கலை வடிவங்களை உருவாக்குகின்றது என்பதற்கு இஸ்லாமிய கட்டடக்கலை மிகச் சிறந்த உதாரணமாகும். இஸ்லாம் சிரியா, பாரசீகம் முதலிய பகுதிகளில் பரவிய போது அப் பகுதிகளில் காணப்பட்ட கட்டடக்கலை வடிவங்கள் இஸ்லாமிய கட்டடக்கலை வடிவங்களோடு இணைக்கப்பட்டு தனக்கேயுரிய சிறப்பியல்புகளைக் கொண்ட ஒரு புதிய கட்டடக்கலைப் பாரம்பரியத்தை இஸ்லாம் தோற்றுவித்தது.

இஸ்லாமியக் கட்டடக்கலையின் முதல் வடிவம் மஸ்ஜித்களேயாகும். ஆரம்பகால முஸ்லிம்கள் அழகியற்கலையைப் பிரதிபலிக்கும் நிர்மாணங்களாகவன்றி எளிமையான வணக்கஸ்தலங்களாகவே மஸ்ஜித்களை நிர்மாணித்தனர். ஆரம்ப காலத்தில் இஸ்லாமியக் குடியரசை ஸ்திரப்படுத்தவும், அதன் அயல்பாகப் பேரரசுகளின் அச்சுறுத்தலிலிருந்து அதைப் பாதுகாக்கவும், எஞ்சிய நேரத்தில தியானத்தில் ஈடுபடவுமே நபித்தோழர்களும் அடுத்த பரம்பரையினரும் தம் நேரத்தைப் பயன்படுத்தினர். அதனால் அழகியற்கலைகளை வளர்ப்பதற்கான கால அவகாசம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. உமையாக்கள் ஆட்சியை ஸ்திரப்படுத்தி செல்வமும் செழிப்பும் ஏற்பட்ட பின்புதான் அழகியற்கலைச் சின்னங்கள் என்று குறிப்பிடத்தக்கதான மஸ்ஜித்களும் மாளிகைகளும் நிருமாணிக்கப்பட்டன.

இஸ்லாத்தின் தோற்றத்தின்பின் கட்டப்பட்ட முதல் மஸ்ஜித் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்லும் வழியில் 'குபா' எனுமிடத்தில் கட்டிய மஸ்ஜித் ஆகும். அதையடுத்தே மஸ்ஜிதுந் நபவி நிருமாணிக்கப் பட்டது. மதீனாவில் நபி (ஸல்) அவர்கள் மிக எளிமையாக நிருமாணித்த மஸ்ஜிதுந் நபவியைக் கட்ட, தொழில் நுட்பத் திறமைகளோ, பிற கலாசாரங்களிலிருந்து கடன் வாங்க வேண்டிய தேவைகளோ ஏற்படவில்லை. பிற்காலத்தில் விசாலமாக்க வேண்டிய தேவை ஏற்பட்ட போதுதான் புதிய தொழில் நுட்பங்களைக் கையாள வேண்டிய தேவை ஏற்பட்டது.

நபி (ஸல்) அவர்களின் மறைவினைத் தொடர்ந்து, குலபாஉர் ராஷிதீன் காலப் பிரிவில் இஸ்லாமிய ஆட்சி விரிவடைந்த போது புஸ்தாத், கைரவான் போன்ற நகரங்களில் பள்ளிவாயல்கள் கட்டப்பட்டன. இஸ்லாமிய ஆட்சியின் பரவலோடு இஸ்லாமியக் கட்டடக்கலையானது

முஸ்லிம்களால் கைப்பற்றப்பட்ட மெஸபொதேமியா, சிரியா, எகிப்து ஆகிய பிரதேசங்களிலும் வளர்ச்சியடைய ஆரம்பித்தது.

உமர் (ரழி) அவர்களின் காலத்தில் ஏற்பட்ட அயல் நாடுகளுடனான போர்கள், உஸ்மான் (ரழி) அவர்களின் காலம் முதல் கலீபா அப்துல் மலிக் காலம் வரை ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரம் என்பன காரணமாக ஆட்சியாளர்கள் நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதிலும் நிர்வாகத்தை மேற்பார்வை செய்வதிலும்தான் அக்கறை காட்டினார்களேயல்லாது, மாளிகைகளைக் கட்டுவதிலோ மஸ்ஜித்களை அலங்கரிப்பதிலோ அக்கறை காட்டவில்லை. உமையா கலீபா அப்துல் மலிக் பின் மர்வான் காலத்தில் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் முடிவடைந்து ஸ்திரநிலை தோன்றியது முதல் மஸ்ஜித்களும் மாளிகைகளும் கோட்டைகளும் நிருவாகத் தேவைகளுக்கான கட்டடங்களும் நிர்மாணிக்கப்பட்டன.

இஸ்லாமியக் கட்டடக்கலைத் துறையில் இன்று காணப்படும் மிகப் பழைய கட்டடம் அப்துல் மலிக் பின் மர்வானினால் ஹிஜ்ரி 72இல் ஜெரூஸலத்தில் கட்டப்பட்ட 'குப்பதுஸ் ஸக்ரா'வாகும். கலீபா வலீத் டமஸ்கஸ் பள்ளிவாயலைக் கட்டினார். இப்பள்ளிவாயல் 'ஸஹ்ன்' என அழைக்கப்படும் திறந்த மண்டபத்தைக் கொண்டுள்ளது. கலீபா வலீத் மதீனாவிலுள்ள மஸ்ஜிதுன் நபவியையும் விஸ்தரித்துக் கட்டினார். இவரே மஸ்ஜிதுன் நபவியில் மிஹ்ராபை அறிமுகப்படுத்தினார்.

அப்பாஸிய காலப் பிரிவில் மஸ்ஜித் கட்டடக் கலையோடு, மாளிகைக் கட்டடக் கலையும் சிறப்பாக வளர்ச்சியடைந்தது. அரசர்களுக்கு மிக மதிப்பும், மரியாதையும் அளித்த பாரசீக மரபின் செல்வாக்கு இக்காலப் பிரிவில் மாளிகைக் கட்டடக் கலையின் வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக விளங்கியது.

அப்பாஸிய கலீபாக்களினாலும் செல்வந்தர்களினாலும் இஸ்லாமிய உலகின் பல்வேறு பகுதிகளிலும் மாளிகைகள் கட்டப்பட்டன. அவற்றுள் பெரும்பாலானவை ஈராக் பிரதேசத்தில் காணப்பட்டன. மிகவும் விசாலமான பரப்பை உள்ளடக்கியிருந்த இம்மாளிகைகள் களஞ்சிய சாலை, வரவேற்பு அறை, விருந்தினர் அறை, ஓய்வெடுக்கும் அறை, அலுவலக அறை போன்ற பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியிருந்தன. களஞ்சியசாலை, உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், புத்தகங்கள்,

அலங்காரப் பொருட்கள், தளபாடங்கள் போன்றவற்றுக்கென தனித்தனி அறைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. கலீபா ம.்.மூனது வாசஸ்தல மாளிகை, ஏனைய அறைகள், மண்டபங்கள் என்பவற்றுடன் 360 அலுவலகங்களைக் கொண்டிருந்தது.

அப்பாஸியர்களின் காலப் பிரிவில் எகிப்தில் தோன்றிய தூலூனிய வம்சத்தின் ஆட்சியில் இஸ்லாமியக் கட்டடக்கலை சிறப்பாக வளர்ச்சியடைந்தது. ஓர் இலட்சத்து இருபதினாயிரம் திர்ஹம் செலவில் இப்னு தூலூனினால் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித் அதன் பிரமாணத்தை யும் அமைப்பையும் பொறுத்தளவில் எவரையும் கவரும் தன்மை படைத்ததாகக் காணப்படுகின்றது.

இஸ்லாமியக் கட்டடக்கலை வரலாற்றில் அடுத்து முக்கியத்துவம் பெறுவது பாதிமிகளின் காலப் பிரிவாகும். பாதிமி ஆட்சியாளர்கள் எகிப்தில் புஸ்தாத் நகரிற்கு வடக்கில் ‘அல் காஹிறா’ என்னும் ஒரு புதிய நகரை நிர்மாணித்தார்கள்.

மஸ்ஜித்களில் காணப்பட்ட இஸ்லாமியக் கட்டடக்கலையின் சிறப்புப் பண்புகளைப் பின்வருமாறு இனங்காட்ட முடியும்.

இஸ்லாமல்லாத சில சமயங்களைச் சார்ந்த வணக்கஸ்தலங்களில் வழிபடுவதற்காக உருவச் சிலைகள் வைக்கப்பட்டிருந்தன. இந்நடை முறை மஸ்ஜித்களில் பின்பற்றப்படவில்லை. வணக்கத்துக்காகவோ அலங்காரத்துக்காகவோ உருவச் சிலைகளை வைப்பதோ வரைவதோ முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. மஸ்ஜித்களில் அலங்கார வேலைப் பாடுகளுக்காக தாவர, கேத்திர கணித, அரபு எழுத்தணி வேலைப் பாடுகளே கையாளப்பட்டுள்ளன. மஸ்ஜித்களில் மக்கள் ஒன்றுகூடித் தொழுவதற்காக விசாலமான ஓர் உட்கூடமும், கிப்லாத் திசையைக் காண்பிப்பதற்காக மிஹ்ராபும், பிரசங்கம் நிகழ்த்துவதற்காக மிம்பரும், ‘அதான்’ கூறுவதற்காக மினாரா ஒன்றும் வளர்ச்சி கண்ட மஸ்ஜித்களில் இருந்தன. இவையே மஸ்ஜித்களை ஏனைய சமய வணக்கஸ்தலங்களில் இருந்து வேறுபடுத்திக் காண்பிக்கும் இஸ்லாமியக் கட்டடக் கலைக்கே சொந்தமான சிறப்பம்சங்களாகச் சுட்டிக் காண்பிக்கப்படுகின்றன. வுழூ செய்வதற்கான வசதிகள், மாணவர்கள் கல்வி கற்பதற்கான இடம் என்பன பெரும்பாலான மஸ்ஜித்களில் இருந்தன. உலகின் எப்பகுதியிலுள்ள மஸ்ஜித்களிலும் மேற்குறித்த சிறப்பியல்புகளைக் காண முடியும்.

முஸ்லிம்களால் வளர்க்கப்பட்ட கட்டடக்கலை பெரும்பாலும் சமயம் சார்ந்ததாகக் காணப்பட்ட போதிலும், பிற கலாசாரத் தாக்க விளைவாலும், முஸ்லிம்களிடையேயும் ஆட்சியாளர்களிடையேயும் தலைதூக்கிய ஆடம்பர வேட்கையினாலும் இஸ்லாம் அனுமதிக்காத சில கலையம்சங்கள் பள்ளிவாயலல்லாத கட்டடங்களில் இடம்பெறத் தொடங்கின. உருவச் சிலை, உயிருள்ள பிராணிகளின் படங்கள், வேட்டைக் காட்சிகள், நாட்டிய இசைக் காட்சிகள், தங்கம், வெள்ளியிலான விளக்குகள், உபகரணங்கள் போன்ற வெறுக்கத்தக்க அம்சங்கள் கட்டடங்களை அழகுபடுத்தப் பயன்படுத்தப்பட்டன. இந்த வகையில் முஸ்லிம்களது கட்டடக்கலை பள்ளிவாயல்களுடன் தொடர்பான இஸ்லாமியக் கலையாகவும், அழகுணர்ச்சியை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட சமூக அல்லது உலகியற் கலையாகவும் இரு பிரிவுகளாக வளர்ச்சியடைந்தது எனலாம்.

**அல்ஹம்ரா மாளிகை**

முஸ்லிம்களின் கட்டடக்கலைத் திறமையைப் பறைசாற்றக் கூடிய மிகச் சிறந்த எடுத்துக் காட்டாக ஸ்பெயினிலுள்ள அல்ஹம்ரா எனும் சிவப்பு நிறமான மாளிகை விளங்குகிறது. இம்மாளிகை கி.பி. 1284இல் முதலாம் முஹம்மத் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டு கி. பி. 1333இல் அபுல் ஹஜ்ஜாஜ் என்பவரால் பூரணப்படுத்தப்பட்டது. இம்மாளிகையின் நடுவே விசாலமான நீர்த் தடாகம் காணப்படுகிறது. இந்நீர்த் தடாகத்தைச் சூழ பளிங்கிலாலான 12 சிங்க உருவச் சிலைகள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் வாய்களிலிருந்து சதாவும் நீர் வெளி வந்து கொண்டிருக்கிறது. மாளிகையின் மேற்குப் புறத்தில் வேட்டைக் காட்சிகளும், வீரர்களின் செயல்களைப் பிரதிபலிக்கும் சித்திர அலங்காரங்களும் வரையப் பட்டுள்ளன. மேலும், ஆங்காங்கு அரபெழுத்தணி, அரபெஸ்கியூ வேலைப் பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இங்கு அலங்கார வேலைப் பாடுகளுக்காகக் கையாளப்பட்ட குர்ஆன் ஆயத்துக்கள் மக்கள் குர்ஆனை ஓதத் தூண்டுவனவாக உள்ளன. இதைவிட 35 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய இம்மாளிகையைச் சூழ மாளிகைத் தோட்டம் பூங்காவனம், விளையாட்டுத் திடல் என்பன அமைக்கப்பட்டுள்ளன. பேராசிரியர் ஹிட்டி இம்மாளிகையைப் பற்றிக் குறிப்பிடும் போது, “அதன் அலங்கார வேலைப்பாடுகளும், வனப்பு மிக்க கோபுரங்களும், கல்வெட்டுக்களும், ஒப்புவமையற்றவை” என்கிறார். பொருத்தமான

இடத்திற்கு பொருத்தமான நிறந்தீட்டி இயற்கையுடன் இயைந்து செல்லத் தக்கதாக அமைந்துள்ளமை அதன் சிறப்பியல்பாகும். இத்தகைய சிறப்புக்கள் காரணமாகவே, இன்றுகூட உலகின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் உல்லாசப் பயணிகள் இதனை கண்டு களிக்க வருகின்றனர்.

அல்ஹம்ரா மாளிகை கி.பி. 1492இல் கிறிஸ்தவர் வசமாகியது. அங்கு வாழ்ந்த முஸ்லிம்கள் துரத்தப்பட்டனர். ஐந்தாம் சார்ள்ஸ் மன்னன் அதனைக் கிறிஸ்தவ கோயிலாக்கினான். மாளிகையின் சில பகுதிகளை சிதைத்து அவ்விடத்தில் புதிய கட்டடம் ஒன்றை எழுப்பி அதன் அழகைக் கெடுத்துள்ளனர். அங்கிருந்த பெரிய மஸ்ஜிதை உடைத்து 1581 இல் கிறிஸ்தவ கோயில் ஒன்றைக் கட்டியுள்ளனர். அதுமட்டுமன்றி, அல்ஹம்ராவைப் பராமரிக்காமல் விட்டு அதன் கவர்ச்சியைக் கெடுத்துள்ளனர். 1812இல் மேற்கொள்ளப்பட்ட பிரான்ஸிய படையெடுப்பாலும் 1821இல் ஏற்பட்ட நில நடுக்கத்தாலும் அது பாதிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும், தற்காலத்தில் சுற்றுலா செல்வோரின் கண்களைக் கவரும் சின்னமாக உள்ளது.

### தாஜ்மஹால்

இந்தியாவில் மொகலாயர் கால ஆட்சியாளரான ஷாஜஹான் தன் மனைவி மும்தாஜின் நினைவாக யமுனா நதிக்கரையில் நிர்மாணித்த தாஜ்மஹால் அவரது நிர்மாணங்களில் தலையாயதாகும். முஸ்லிம்களின் கட்டடக்கலை வரலாற்றில் நிகரேதுமற்ற ஆக்கமாக இது உள்ளது. அழகிய மனம் கவர் சூழலும் கண்களைக் கவரும் வேலைப்பாடும் ஒத்திசைவான விகித சமப் பொருத்தமும் உயிரோட்டமுள்ள அலங்கார வேலைப்பாடும் தாஜ்மஹாலை ஓர் உலக அதிசயமாக்கியுள்ளது. தாஜ்மஹாலின் நிர்மாண வேலை கி. பி. 1631 இல் ஆரம்பித்து 1647 இல் பூர்த்தியாகியது. கால்வாய்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு தோட்டத்தின் ஒரு கோணத்தில் யமுனா நதியை நோக்கியதாக தாஜ்மஹால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குப்பாவையுடைய இச்சமாதிக் கட்டடம் எண்கோணங்களைக் கொண்டது. நான்கு மினாராக்களும் உண்டு. அதன் அலங்கார வேலைப்பாடு எழுத்தணிகளுக்கும் தாவர வடிவங்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தாஜ்மஹால் அமைந்துள்ள மேடையின் தளம் கறுப்பும் வெண்மையுமான பளிங்குக் கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. இம்மேடையின் நடுவில் 186 அடி சதுர கல்லறை மாளிகை அமைந்துள்ளது. மொகலாயர் ஆட்சிக்கால கட்டடக்கலை வளர்ச்சியின் உச்சகட்ட நிர்மாணமாக தாஜ்மஹால் திகழ்கிறது.

முஸ்லிம்கள் மஸ்ஜித்கள், மாளிகைகள், மருத்துவமனைகள் போன்ற கட்டடங்களை நிர்மாணிக்கின்ற போது தமது கலையுணர்வைப் பிரதிபலிக்கக் கூடியதாகவே நிர்மாணித்துள்ளனர். முஸ்லிம்களின் சமய உணர்வும் அழகியல் உணர்வும் இணைந்து இஸ்லாமியக் கட்டடக்கலைப் பாரம்பரியம் உருவெடுத்துள்ளது என்றறிய முடிகிறது. கட்டடக்கலையின் பெறுமானத்தை மதிப்பிடும் அளவுகோலாகவும் அதுவே அமைந்துள்ளது. அதன் காரணமாகத்தான் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்ட நாடுகளில் சுதேசக் கலைஞர்களும் தொழில்நுட்பவியலாளர்களும் சுதேச மூலப் பொருட்களும் பயன்படுத்தப்பட்ட போதும் அவற்றிற்கிடையே கலாசார ஒருமைப்பாட்டையும் ஏனைய பொதுப் பண்புகளையும் காணமுடிகிறது.

## கிராஅத் கலை

அல் குர்ஆனை ஓதும் கலை 'கிராஅத்' எனப்படுகின்றது. அல் குர்ஆனை, இலக்கண வழி முறையை மீறாமலும், முஹம்மது (ஸல்) அவர்கள் ஓதிக் காட்டிய வழிமுறைக்கு இயைபாகவும் ஓதும் கலையை 'கிராஅத்' கலை எனும் பதம் குறிக்கிறது.

ஸஹாபாக்கள் பலர் முஹம்மது (ஸல்) அவர்களது முன்னிலையில் குர்ஆனை ஓதிக் காண்பித்துள்ளார்கள். அதனை முஹம்மது (ஸல்) அவர்கள் சரி கண்டுள்ளார்கள். அவ்வாறு சரியாக ஓதிக் காண்பித்த ஸஹாபாக்களில் உபை பின் க.்.பு (ரழி), அலி பின் அபிதாலிப் (ரழி), ஸைது பின் தாபித் (ரழி), இப்னு மஸ்ஊத் (ரழி), அபுத் தர்தா (ரழி), அபூ மூஸா அல் அஷ்அரி (ரழி) என்போர்கள் குறிப்பிடத்தக்கவர்களாவர். இவர்களிடம் தாபிஈன்கள் பலர் கிறாஅத் கலையைக் கற்றுள்ளார்கள். குர்ஆனை ஓதும் கலையைக் கற்றுக் கொள்வது நன்கு பிரசித்தம் அடைந்ததால் மக்கா, மதீனா, கூபா, பஸரா, சிரியாப் பகுதிகளில் அதற்கான கல்வி நிலையங்கள் பல தோன்றின. இதன் காரணமாக கிறாஅத், ஒரு தனிக் கலையாக கி.பி. 8ஆம் நூற்றாண்டில் வளர்ச்சி கண்டது.

ஹதீஸ்களின் உண்மைத் தன்மை "இஸ்னாத்" மூலம் நிறுவப்பட்டது போல குர்ஆனை ஓதும் முறையும் இஸ்னாத் வழிமுறை மூலம் உண்மைப்படுத்தப்பட்டது. முதவாதிர் ஆன இஸ்னாத் வழிமுறை மூலம் உண்மைப்படுத்தப்பட்ட கிராஅத் மட்டுமே சரியான ஓதல்

முறையாக ஏற்கப்பட்டது. இவ்வாறு சரிகாணப்பட்ட ஓதல் முறையைப் பின்பற்றி ஓதும் கிராஅத் கலையை வளர்த்தவர்களுள் பின்வரும் பத்துப் பேர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

1. அபூ அம்ரு பின் அலா
2. இப்னு கஸீர்
3. நாபிஉ பின் அப்துர் ரஹ்மான்
4. இப்னு ஆமிர்
5. ஆஸிம்
6. ஹம்ஸா
7. அல் கிஸ்ஸாஇ
8. அபூ ஜஃபர் யஸீத் பின் கஉகா
9. யாகூப் இப்னு இஸ்ஹாக்
10. கலப் பின் ஹிஷாம்

மேற்குறித்த பத்துப் பேரில் முதல் ஏழு பேருடைய கிராஅத் வழி முறையும் முதவாதிர் அந்தஸ்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பின்னைய மூவரதும் கிராஅத் வழி முறைகளை சில அறிஞர்கள் முதவாதிர் என்று ஏற்ற போதும் வேறு சிலர் அதனை முதவாதிர் என்று ஏற்கவில்லை. கிராஅத் முறை மிகச் சரியானது என்ற உயர்ந்த அந்தஸ்தினை அடைவதற்கு, பின்வரும் மூன்று தகைமைகளை உடையதாக அவை இருப்பது அவசியமாகும்.

1. கிராஅத் உஸ்மான் (ரழி) காலத்தில் தொகுத்த குர்அன் பிரதிக்கு இயைபாயிருத்தல்.
2. அரபு இலக்கியப் பிரயோகத்திற்கு இயைபாயிருத்தல்.
3. கிராஅத் பற்றிய இஸ்னாத் வரிசை ஸஹீஹானதாக இருத்தல்.

## 04. இஸ்லாமிய வரலாற்றில் மஸ்ஜித்களின் பங்களிப்பு

### மஸ்ஜிதுகளின் தோற்றமும் பணிகளும்

“ஸஜத” எனும் அரபுச் சொல்லை அடியாகக் கொண்டு தோற்றம் பெறும் மஸ்ஜித் எனும் பதம், ஸஜதா செய்யும் இடம் எனும் கருத்தினைக்

கொண்டுள்ளது. மஸ்ஜித்களின் வரலாறு மக்காவில் அமைந்துள்ள புனித க.்.பாவின் தோற்றத்தோடு ஆரம்பமாகின்றது. இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் அல் குர்ஆன்: "நிச்சயமாக புவியில் மனிதர்களுக்காக நிறுவப்பட்ட முதல் இறையில்லம் பக்காவிலிருக்கும் க.்.பாவாகும் (ஆதாரம் : அல்குர்ஆன் வசனம்) எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.

இதனையடுத்து வரலாற்று ஒழுங்கில் அமைந்த அடுத்த மஸ்ஜிதாக பலஸ்தீனிலுள்ள பைத்துல் முகத்தஸ் காணப்படுகிறது. இஸ்லாத்தின் வருகையின் பின் முதல் மஸ்ஜிதாக நபி (ஸல்) அவர்களின் ஹிஜ்றத்தினைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட மஸ்ஜிதுல் குபாவும் அடுத்து மஸ்ஜிதுந் நபவீயும் இவற்றைப் பின்பற்றி அமைக்கப்பட்ட ஏனைய மஸ்ஜித்களும் காணப்படுகின்றன.

மஸ்ஜித்கள் அல்லாஹ்வின் கட்டளைகளை செயற்படுத்துவதற்கும், நிலை நிறுத்துவதற்குமான மத்திய நிலையமாகும்.

**மஸ்ஜித்களின் புனிதத்துவம் :**

1. மஸ்ஜித்கள் முஸ்லிம்களின் புனிதத் தலங்களாகும்.
2. ஷிர்க்கைக் கொண்டோ, அழுக்குகளைக் கொண்டோ மஸ்ஜித்களை அசுத்தப்படுத்தாதிருத்தல்.
3. மஸ்ஜித்கள் பக்தி பூர்வமானவையாகவும், எளிமையான தோற்றம் கொண்டவையாகவும் அமைய வேண்டும்.
4. கபுறுகளுக்கு மேலால் மஸ்ஜித்கள் அமைக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளமை. மஸ்ஜித்களில் வியாபார நடவடிக்கைகள் தடுக்கப்பட்டுள்ளமை.

**மஸ்ஜித்களின் முக்கியத்துவம் பற்றிக் குர்ஆனும் சுன்னாவும்**

1. அல்-குர்ஆன் (9 : 18)
2. நகரங்களில் அல்லாஹ்வுக்கு மிக விருப்பத்துக்குரிய இடம் அதனுடைய மஸ்ஜித்களாகும். மிக வெறுப்புக்குரிய இடம் அதனுடைய அங்காடிகளாகும். (முஸ்லிம்)

**நபியவர்களது காலத்து மஸ்ஜித்கள் சமூகத்தின் மத்திய நிலையங்களாக நின்று பணியாற்றிய விதம்**

1. சமூக இணக்கப்பாட்டிற்கும், தொடர்பாடலுக்குமுரிய இடம்.
2. இஸ்லாமிய பிரசார கேந்திர நிலையம்.
3. ஆன்மீகப் பயிற்சிப் பாசறை.
4. அரச கருமபீடம்.
5. சமூக கலாசார மத்திய நிலையம்.
6. இஸ்லாமிய கல்விக் கூடம்.
7. பொருளாதார கேந்திர நிலையம்.
8. இராணுவ மத்திய நிலையம்.
9. நீதிமன்றம்.

**குலபாஉர் ராஷிதூன்கள் காலத்தில் மஸ்ஜித்கள் மேற்குறித்த முறையில் பணியாற்றியதோடு பின்வரும் அடிப்படைகளிலும் செயல்பட்டன.**

1. கலீபாத் தெரிவும், பைஅத்தும் மஸ்ஜித்களில் இடம்பெற்றன.
2. மஜ்லிஸ் அஷ்ஷூரா - ஆலோசனை சபை மஸ்ஜித்களில் இயக்கப்பட்டது.
3. நீதிமன்றங்களாக பயன்படுத்தப்பட்டன.
4. பைதுல்மாலுக்குரிய செயற்பாடுகள் மஸ்ஜித்களில் மேற்கொள்ளப் பட்டன.

**குலாபாஉர் ராஷிதூன்கள் ஆட்சிக்குப் பிற்பட்ட கால மஸ்ஜித்கள் வகித்த பங்கு :**

1. தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் துறை கலா நிலையங்களாக இயங்கியமை.
2. மஸ்ஜித்களை இணைத்த வகையில் நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டு இயங்கியமை.
3. அறிவு ஆராய்ச்சி நிலையங்கள் மஸ்ஜிதை இணைத்து அமைக்கப்பட்டமை.

**மஸ்ஜித்களின் இன்றைய நிலையும், அதற்கான காரணங்களும் :**

1. வெறுமனே சில இபாதத்களை மாத்திரம் மேற்கொள்ளும் இடமாக மாறியுள்ளமை.
2. தகுதியான நிர்வாகிகளை இமாம்களை மஸ்ஜித்கள் கொண்டிருக்காமை.
3. மஸ்ஜித்களின் செயற்பாட்டிற்கான பொருத்தமான திட்டங்கள் இல்லாமை.

**மஸ்ஜிதுல் ஹறாம் :**

புனித மக்கா நகரில் அமைந்திருக்கும் மஸ்ஜிதுல் ஹறாம் எனும் கஃபா உலகில் முதன் முதலில் அமைக்கப்பட்ட அல்லாஹ்வின் இல்லம் என அல்குர்ஆன், அல் ஹதீஸ் மற்றும் வரலாறு போன்றன சான்றுப்படுத்துகின்றன. வானத்தில் மலக்குகள் சுற்றி வருவதற்கு பைத்துல் மஃமூர் காணப்படுவது போன்று பூமியில் மனிதர்கள் சுற்றி வருவதற்கும் முன்நோக்கித் தொழுவதற்குமாக அல்லாஹ்வின் உத்தரவில் இம்மஸ்ஜித் உருவாக்கப்பட்டுள்ளது. சில சான்றுகளின் அடிப்படையில் நபி ஆதம் (அலை) அவர்கள் உலகிற்கு அனுப்பப்பட்ட காலம் தொட்டே இதன் இருப்பும் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

எவ்வாறாயினும் அல்குர்ஆன், அல் ஹதீஸின் கருத்துக்களின் பிரகாரம் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கஃபாவைக் கட்டும் போது ஏற்கனவே அங்கு காணப்பட்ட கஃபாவின் எஞ்சிய பகுதியான ஒரு திடலிலிருந்தே ஆரம்பம் செய்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இந்த வகையில் இதன் கட்டுமானப் பணிகள் வரலாற்றில் நபி இப்றாஹீம் (அலை) அவர்களை விடவும் முந்தியதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு இம்மஸ்ஜித் வரலாற்றில் பல முறை சிதைவுகளுக்குட்பட்டும் புனர் நிர்மாணம் செய்யப்பட்டும் வந்துள்ளது. அதில், இஸ்லாத்திற்கு முற்பட்டகால குறைஷியரின் புனரமைப்பைத் தொடர்ந்து குலாபாஉர் ராஷிதூன்கள் உமைய்யாக்கள், அப்பாஸியர், உஸ்மானியர் முதலான ஆட்சியாளர்களால் பலமுறை புனர் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது என்பது வரலாற்றின் மூலம் ஊர்ஜிதம் செய்யப்படுகின்றது.

உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அனைவருமே இதனை முன்னோக்கியே தொழுகைகளை மேற்கொள்ள வேண்டுமென கடமையாக்கியுள்ள இஸ்லாம் இதில் தொழும் ஒரு தொழுகை

வேறிடங்களில் தொழுவதைப் பார்க்கிலும் ஓர் இலட்சம் மடங்கு நன்மைகள் கூடியது எனும் சிறப்பினை வழங்கியுள்ளது.

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்றான ஹஜ் வருடா வருடம் இங்கு நிறைவேற்றப்படுவது போல் இஸ்லாத்துக்கு முற்பட்ட கால சமூகங்களும் கஃபாவிற்கு வந்து அதனை தவாப் செய்துள்ளமை வரலாற்றிற் குறிப்பிடப்படுகின்றது.

**மஸ்ஜிதுன் - நபவீ**

நபியின் மஸ்ஜித் என அழைக்கப்படும் மதீனாவில் அமைந்துள்ள மஸ்ஜிதுந் நபவீ இஸ்லாத்தில் முதன்மை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள முக்கிய தலங்களுள் இரண்டாவதாகும். இது நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்றத் சென்று ஒருசில நாட்களுக்குள் பனீ நஜ்ஜார் கிளையினைச் சார்ந்த சிலரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியில், ஹிஜ்ரி முதலாம் வருடம் றபீஉல் அவ்வல் மாதம் கட்டப்பட்டது. கற்களால் அத்திவாரமும், சுடப்படாத களிமண் கற்களால் சுவர்களும், ஈத்தம் ஓலைகளால் வேயப்பட்ட கூரையையும் கொண்ட இப்பள்ளி அன்று சுமார் 115 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்டதாக நிர்மாணிக்கப்பட்டது. இப்பள்ளிவாசல் தொழுகைக்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட ஒன்றல்ல. மாறாக ஒரு பள்ளிவாசல் முஸ்லிம் சமூகத்தில் ஆற்றவேண்டிய பணிகள், அதன் வகிபாகம் முதலானவற்றை மிகத் தெளிவாக விளக்கும் அனைத்து நடைமுறை உதாரணங்களையும் அதனூடாக நபியவர்கள் காட்டிச் சென்றுள்ளார்கள்.

எனவே, அப்பள்ளி அன்று ஜும்ஆ முதல் ஏனைய தொழுகைகள், நிறைவேற்றப்படும் இடம், கல்விக்கூடம், பாராளுமன்றம், சமூக தனிநபர் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் நீதிமன்றம், அரசவிருந்தினர்கள் தூதுக் குழுக்களின் வரவேற்பிடம் கலந்துரையாடலுக்கான மண்டபம், யுத்தப் பயிற்சி, காயமுற்ற யுத்தவீரர்களுக்கு சிகிச்சையளித்தல் மற்றும் கைதிகளைத் தங்க வைக்கும் நிலையம் என அதன் சமூகப் பணிகளும் முக்கியத்துவமும் நீண்டுகொண்டே செல்கின்றன.

கைபர் யுத்தத்தின் பின்னர் மதீனா திரும்பிய நபி (ஸல்) அவர்கள், பள்ளிவாசலில் காணப்பட்ட இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, மேலும் சுமார் முப்பது அடிகளை நீளத்திலும் அகலத்திலும் விஸ்தரிப்பு

செய்தார்கள். இதற்குத் தேவையான காணியை உஸ்மான் (ரழி) அவர்கள் வாங்கிக் கொடுத்தார்கள். இப்புனித பள்ளிவாசல் வரலாற்றில் பல கலீபாக்களாலும், ஆட்சியாளர்களாலும் அவ்வப்போது விஸ்தரிக்கப்பட்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டும் வந்துள்ளது.

இப்பள்ளியின் புனிதம், முக்கியத்துவம் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும்போது : “எனது இப்பள்ளியில் ஒரு தொழுகை (மஸ்ஜிதுல் ஹறாமைத் தவிர்ந்த) ஏனைய பள்ளிகளில் ஆயிரம் தொழுகைகளைப் பார்க்கிலும் சிறந்தது” எனக் குறிப்பிட்டுள்ளார்கள். “விசேடமாக தரிசிப்பதற்கு இஸ்லாத்தில் அனுமதி வழங்கப்பட்ட மூன்று இடங்களுள் இப்பள்ளி இரண்டாவது ஸ்தானத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

இவ்வாறு பல சிறப்புக்கள் கொண்ட இப்பள்ளியில் விசேடமான சில இடங்கள் காணப்படுகின்றன. அவற்றிற்கும் பல சிறப்பம்சங்களை நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அவற்றுள் நபி (ஸல்) அவர்களது மின்பரும் ஒன்றாகும். முதலில் ஈத்தம் குற்றியாகக் காணப்பட்ட இது பின்னர் மரத்தினாலான ஒரு மின்பரால் மாற்றீடு செய்யப்பட்டது. இம்மின்பர் மறுமையில் எனது ஹவ்ழுக்குப் பக்கத்தில் கொண்டுவரப்படும் என நபி (ஸல்) அவர்கள் இதன் முக்கியத்துவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதேபோல், றவ்ழா அடுத்து முக்கியத்துவம் வாய்ந்த ஓரிடமாகும். இது நபியவர்களின் மின்பருக்கும் அவர்களது அறைக்கும் (வீடு) இடையில் அமைந்துள்ள ஓரிடமாகும். ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் இது பற்றிக் குறிப்பிடும் போது : எனது இந்த மின்பருக்கும் அறைக்குமிடையில் சுவர்க்கத்தின் பூங்காக்களில் ஒன்று உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

மஸ்ஜிதுன் நபவியில் இன்னுமொரு பகுதி அஹ்லுஸ் ஸுஃப்பாக்கள் எனும் திண்ணைத் தோழர்கள் தங்கியிருந்த பகுதியாகும்.

அடுத்து, மஸ்ஜிதுடன் இணைந்ததாகவும் அதன் பகுதிகளுள் அடங்காததுமாக நபி (ஸல்) அவர்களும் அன்னை ஆயிஷாவும் தங்கியிருந்த அறை காணப்படுகிறது. வரலாற்றில் “ஹுஜ்றது ஆயிஷா” எனக் குறிப்பிடப்படும் இப்பகுதியிலேயே நபி (ஸல்) அவர்களது வபாத்தும் இடம் பெற்றது. எனவே, நபிமார்கள் மரணித்த அதே இடத்திலேயே

அவர்கள் அடக்கம் செய்யப்படவேண்டும் எனும் அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப, அவர்கள் அவ்விடத்திலேயே அடக்கம் செய்யப் பட்டார்கள். அதனைத் தொடர்ந்து நபிகளாரின் வலக்கரமாக அவர்களது அனைத்து சுகதுக்கங்கள், த.ஃவாக் களத்தின் அனைத்து அனுபவங் களையும் பகிர்ந்துகொண்ட உத்தம கலீபாக்களான அபூபக்கர் ஸித்தீக், உமர் பாறூக் (ரழி) அவர்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளனர். இன்று வரை மதீனா செல்லும் உலகளாவிய முஸ்லிம்கள் அனைவரும் நாடிச் சென்று தரிசிக்கும் முக்கிய பகுதியாக அது காணப்படுகிறது.

## பைதுல் முகத்தஸின் தோற்றமும் முக்கியத்துவமும்

“பைதுல் முகத்தஸ்” என்றால் புனிதப்படுத்தப்பட்ட இல்லம் என்று பொருள்படும். இது மஸஜிதுல் அக்ஸா என்றும் அழைக்கப்படுகின்றது. இப்புனித இல்லம் ஷாம் தேசத்தில், பலஸ்தீனமெனும் புனித நாட்டில், குத்ஸ் எனும் புனித பூமியில் அமையப் பெற்றுள்ளது.
ஷாம் எனும் புனித தேசத்தின் சிறப்பைப் பற்றி அல்குர்ஆனின் பல வசனங்கள் குறிப்பிடுகின்றன.

- ⌘ “நாம் அவரையும் (இப்றாஹீம் (அலை) லூத் (அலை) தையும் அகிலத்தாருக்காய் அருள்பாலித்த பூமியை நோக்கி தப்பிச் செல்ல வைத்தோம்.” (அன்பியா : 71)

- ⌘ “பலவீனப்பட்டிருந்த சமூகத்திற்கு, நாம் அருள்பாலித்த பூமியின் கிழக்கையும் மேற்கையும் அருளினோம்.” (அ.ஃராப் : 137)

- ⌘ “சுலைமானுக்கு நாம் காற்றை வசப்படுத்திக் கொடுத்தோம். அது அவரது கட்டளைப்படி நாம் அருள்பாலித்த பூமியை நோக்கி வீசும்.” (அன்பியா : 81)

பைதுல் முகத்தஸ்ஸைக் கட்டியவர் இப்றாஹீம் (அலை) என்ற வகையில் அவரிலிருந்தே பைதுல் முகத்தஸின் வரலாறு ஆரம்ப மாகின்றது.

ஈராக்கிலிருந்து அல்லாஹ்வின் கட்டளைப்படி பலஸ்தீனை நோக்கி வந்த இப்றாஹீம் (அலை) அவர்கள், அப்பூமியில் தன் மனைவி ஸாராவை குடியமர்த்தி விட்டு இன்னொரு மனைவியாகிய ஹாஜரையும்

அவரது மகன் இஸ்மாயீலையும் மக்காவில் குடியமரச் செய்தார்கள். மகன் இஸ்மாயீல் வாலிபத்தை அடைந்த போது அவருடன் சேர்ந்து க.ஃபதுல்லாவைக் கட்டினார்கள். அதைக்கட்டி 40 வருடங்களின் பின் பலஸ்தீனில் பைதுல் முகத்தஸைக் கட்டினார்கள். அல்லாஹ்வை மாத்திரம் வணங்குவதற்கான வழிபாட்டுத்தலமாகவே இவற்றைக் கட்டினார்கள்.

அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் : நான் நபியவர்களிடம் "அல்லாஹ்வின் தூதரே ! பூமியில் முதன் முதலாக கட்டப்பட்ட பள்ளி எது எனக் கேட்டேன். அதற்கு மஸ்ஜிதுல் ஹராம் என்றார்கள். பின்னர் எது எனக் கேட்டேன். மஸ்ஜிதுல் அக்ஸா என்றார்கள். இவ்விரண்டிற்கும் இடையில் உள்ள கால இடைவெளி என்ன எனக் கேட்டதற்கு 40 வருடங்கள் எனக் கூறிவிட்டு, எந்த இடத்தில் உங்களுக்கு தொழுகை நேரம் வருகின்றதோ அங்கே தொழுது கொள்ளுங்கள். ஏனெனில் அவ்விடம் ஸுஜூத் செய்ய ஏற்ற இடமாகும்" என்றார்கள்.

இவ்விரு மஸ்ஜிதுகளுக்கும் அருகாமையில் இப்றாஹீம் (அலை) அவர்களது, இரு மனைவியரது குடும்பமும் ஏக அல்லாஹ்வை வணங்கி வழிபட்டவர்களாக வாழ்ந்து வந்தனர்.

இதன் வரலாறு மூன்று கூட்டங்களாக நோக்கப்படுகின்றது. அவையாவன :-

1 ஆம் கால கட்டம் :

கி. மு. 43 இல் உரோமர்களின் பிரதிநிதியாக பலஸ்தீனில் நியமிக்கப்பட்ட ஏரோது மன்னன் யூத மதத்தை ஏற்று பைதுல் முகத்தஸை மேலும் விரிவுபடுத்தி நுட்பமான அழகிய கட்டடக்கலைகளைப் பயன்படுத்தி மீளக்கட்டியெழுப்பினான். இம்மன்னனே யஹ்யா (அலை), ஸகரிய்யா (அலை) ஆகியோரை கொலை செய்தவனுமாவான்.

நபி ஈஸா (அலை) அவர்களது மறைவைத் தொடர்ந்து அவரது சீடர்கள் தீவிரமாக இன்ஜீல் வேதத்தை பரப்பலாயினர். இதனால் கோபமுற்ற யூதர்கள் அவரை வஞ்சம் தீர்த்தனர். இன்னும் உரோமர்களுக்கெதிராகவும் பலஸ்தீனத்தினுள் கிளர்ச்சிகள் செய்தனர். முதலாவது கிளர்ச்சியை அடக்குவதற்காக கி. பி. 70 இல் வந்த உரோமத் தளபதி டைடஸ் பலஸ்தீனத்தினுள் நுழைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளால் பைதுல் முகத்தஸ் முற்றாக சேதமாக்கப்பட்டது.

நபி இப்ஹாஹீம் (அலை) அவர்கள் தொடக்கம் பல்லாயிரம் நபிமார்கள் தோன்றி மறைந்துள்ள புனித தேசமான பலஸ்தீனிலுலும் அதன் மத்திய கேந்திரஸ்தலமான பைத்துல் முகத்தஸும் பெரும்பாலான நபிமார்களுடன் தொடர்புற்றுக் காணப்படுகின்றன. அவர்களுள் விசேடமாக நபி இப்றாஹீம் (அலை), இஸ்ஹாக் (அலை), தாவூத் (அலை), ஸுலைமான் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மத் (ஸல்) என முக்கிய நபிமார்கள் அதனை கட்டுதல், புனர்நிர்மாணித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டிருப்பதுடன் அதில் தொழுதுமுள்ளார். நபி (ஸல்) அவர்களும் மிஃராஜின் போது அங்கு தொழுதுள்ளதுடன் கஃபா கிப்லாவாக மாற்றப்படும் வரை பைத்துல் முகத்தஸையே கிப்லாவாகக் கொண்டு முஸ்லிம்கள் தொழுது வந்துள்ளார்கள்.

நபி (ஸல்) அவர்களில் விசேட யாத்திரை செல்லும் தளங்களாகக் குறிப்பிடப்பட்ட மூன்று மஸ்ஜிதுகளுள் பைத்துல் முகத்தஸும் ஒன்றாகும். அதுமட்டுமல்லாது அங்கு நிறைவேற்றப்படும் தொழுகைக்கும் மஸ்ஜிதுல் ஹறாம், மஸ்ஜிதுந் நபவீக்கு அடுத்தபடியான அதிகபட்ச நற்கூலி வழங்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த அடிப்படையில் நாம் பார்க்கும்போத பைத்துல் முகத்தஸ் ஏகத்துவத்தையே அடிபபடையாகக் கொண்டே நிர்மாணிக்கப் பட்டது. அனைத்து நபிமார்களும் ஒரே ஏகத்துவத்தையே போதனை செய்தார்கள். எனவே யார் எல்லா நபிமார்களுக்கும் மதிப்பளித்து இன, மொழி, வேற்றுமைகளை மறந்து ஏகத்துவத்தை நிலைநிறுத்த முயற்சிக்கின்றனரோ அவர்களுக்கே பைதுல் முகத்தஸ் சொந்தமாகும்.

“பைதுல் முகத்தஸ்” வரலாற்றில் நிகழ்ந்த மிகப் பெரும் மர்மம் ஈஸா (அலை) அவர்களின் மறைவாகும். அவரது மீள் வருகையைப் பற்றி பலமான நம்பிக்கை யூதர், கிறிஸ்தவர், முஸ்லிம்கள் ஆகியோரிடம்

இருந்து வருகின்றது. இந்நம்பிக்கைகளே பைதுல் முகத்தஸின் எதிர் காலத்தை தீர்மானிப்பவைகளாக இருக்கின்றன.

அபூ ஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார் : "நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். "எனது உயிர் எவன் கையில் இருக்கின்றதோ அவன் மீது சத்தியமாக உங்கள் மத்தியில் மர்யமின் மகன் நேர்மை மிகு ஆட்சியாளனாக வர இருக்கின்றார். அவர் சிலுவையை உடைப்பார். பன்றிகளைக் கொலை செய்வார். யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவார். அப்போது செல்வம் பெருகும். ஆனால் அதை எவரும் எதிர்பார்க்க மாட்டார்கள். அக்காலத்தில் ஒரு ஸஜ்தா உலகம் உலகிலுள்ள அனைத்தை விடவும் சிறந்ததாகும்."

## 05. இலங்கை முஸ்லிம்களின் வரலாறு

### அரபிகளின் வருகை

உலக வரைப்படத்தில் வடக்கே இந்தியத் துணைக் கண்டத்தையும், மேற்கே ஆபிரிக்கப் பெரு நிலப் பரப்பையும் கிழக்கே கிழக்கிந்தியத் தீவுக்கூட்டங்களையும் நில எல்லையாகக் கொண்டு இலங்கை இந்து சமுத்திரத்தில் அமையப் பெற்றிருப்பதைக் காணலாம். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே இலங்கை சர்வதேச உலகில் அறியப்பட்டிருந்தமைக்கு அதன் கேந்திர முக்கியத்துவமிக்க அமைவிடமே பிரதான காரணியாக அமைந்தது. அவ்வாறே இலங்கையின் இயற்கைச் சூழலும், பௌதீக நிலக்கட்டமைப்பும், இயற்கையாய் அமைந்த துறைமுகங்களும் வளம் மிக்க வணிகப் பொருட்களும் பிறநாட்ட வர்களை ஈர்க்கும் அம்சங்களாக அமைந்தன.

கி. பி. 4-7 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை இந்து சமுத்திர வணிகத்தின் மத்திய நிலையமாக விளங்கியது. உரோமர், பாரசீகர், அபீசீனியர், அரேபியர் போன்றவர்கள் இலங்கையில் வர்த்தக நோக்குகளுக்காக ஒன்று கூடினர். பாலைவனப் பயணங்களில் சிறந்த அனுபவமும் ஆற்றலும் பெற்றவர்களாக அரேபியர் இருந்தனர். அந்த அறிவைப் பயன்படுத்தி பருவக் காற்றுகளின் துணையோடு சமுத்திரங்களைக் கடக்கும் ஆற்றலைப் பெற்றனர். இதனால் சமுத்திர வணிகத்தில் ஏனையவர்களைவிட அவர்கள் சிறப்புற்று விளங்கினர். இலங்கையில் அரபு வணிகர்கள் கி. மு. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டு களிலேயே காணப்பட்டனர் என்பதற்கான சான்றுகள் காணப்படுகின்றன.

பந்துகாபயன் அனுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்ட முதல் மன்னராவார். இவரது காலப் பிரிவில் அநுராதபுரத்தில் அரபு வணிகர்கள் காணப்பட்டனர். அநுராதபுரத்தின் மேற்குவாயில் பகுதி அரபு வணிகர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இலங்கையின் வரலாற்றை விளக்கும் பிரதான மூல நூலாகிய மகாவம்சம் இத்தகவலைத் தருகின்றது.

இவ்வாறு இலங்கையில் கி. மு. 2 ஆம், 3 ஆம் நூற்றாண்டுகளில் வந்து தங்கிச் சென்ற அரபு வணிகர்கள், இஸ்லாம் அரபு தீபகற்பத்தில் அறிமுகமான கி. பி. 610 ஆம் ஆண்டுகளில் இந்தியத் துணைக் கண்ட கடற்கரையோரங்களில் வலிமை மிக்க வணிகர்களாக நிலைபெற்றிருந்தனர். அரபு தீபகற்பத்தில் மிகப் பெரும் சக்தியாக இஸ்லாம் வளர்ச்சியடைந்த போது கீழைத்தேய நாடுகளில் வாழ்ந்த அரபு வணிகர்களும் இஸ்லாத்தை தமது நெறியாக ஏற்றுக்கொண்டனர்.

## இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாதல்

இலங்கையில் இஸ்லாம் எப்போது அறிமுகமானது என்பது குறித்து தெளிவான சான்றுகள் காணப்படவில்லை. எனினும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமான காலப் பிரிவு பற்றி பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. நபி (ஸல்) அவர்களது காலப் பிரிவில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது.
2. கலீபா உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் அறிமுகமானது.
3. உமையாக்கள் காலப்பிரிவில் இடம்பெற்ற குடியமர்வுகள் மூலம் அறிமுகமானது.

நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவில் இஸ்லாத்தின் அழைப்பு உலகில் பல நாடுகளுக்கும் விடுக்கப்பட்டது. உரோம, பாரசீக ஆட்சியாளர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் எழுதிய கடிதங்கள் இதற்கு ஆதாரமாக அமைகின்றன. அவ்வாறே கீழைத்தேய நாடுகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டன என்ற கருத்தை சில வரலாற்றாசிரியர்கள் முன் வைத்துள்ளனர். இவ்வகையில் கி. பி. 628 ஆம் ஆண்டு சீனாவுக்கு நபி (ஸல்) அவர்களின் கடிதத்தை வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி)

அவர்கள் எடுத்துச் சென்றார்கள் என சேர் தோமஸ் ஆர்னல்ட் "The preaching of Islam" எனும் நூலின் முதற் பதிப்பில் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை சீன வரலாற்றுக் குறிப்புகளும் உறுதிப்படுத்துகின்றன.

நபி (ஸல்) அவர்களின் தூதுவராக சீனாவுக்குச் சென்ற வஹப் இப்னு அபீ ஹப்ஸா (ரழி) இலங்கைக்கும் வந்ததாகவும் இலங்கை அரசனுக்கு இஸ்லாத்தின் அழைப்பை விடுத்ததாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு காணப்படுகின்றது. இவ்வழைப்புக்கு கௌரவமளித்த இலங்கை மன்னன் இஸ்லாத்தை அறிமுகப்படுத்துவதற்கும், விரும்பியோர் அதனை ஏற்கவும், பள்ளி (மஸ்ஜித்) ஒன்றை நிர்மாணிக்கவும் அனுமதித்ததாக அக்குறிப்பு தெரிவிக்கின்றது. நபித்தோழர் ஏற்கனவே இங்கு குடியேறி வாழ்ந்த அறபியருக்கு இஸ்லாத்தைப் போதித்து அறிமுகப்படுத்திய பின் கி. பி. 632 இல் ஹி. 10 ஆம் ஆண்டு அரேபியாவுக்குத் திரும்பிச் சென்றதாக ஒரு வரலாற்றுக் குறிப்பு தெரிவிக்கின்றது. இதனை “சீனாவில் இஸ்லாம்” எனும் நூலும் வலுப்படுத்துகிறது.

இக்கருத்தை இலங்கையின் வரலாற்றோடு பொருத்திப் பார்க்கும்போது அக்கால இலங்கையின் அரசியல் சூழல் இக்கருத்தை ஏற்பதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றது.

அநுராதபுர அரசியலில் இலம்பகர்ண மரபு முடிந்து மோரிய அரசகுல மரபு இக்காலப் பிரிவில் ஆதிக்கம் பெற்றிருந்தது. கி. பி. 618 இல் மரணமான மோரிய அரச மரபைச் சேர்ந்த 2 ஆம் அக்ரபோதியுடன் அவ்வரச மரபின் பொற்காலம் முடிவுற்றது. இவருக்குப் பிறகு அரசுரிமை பெற்ற சங்கதிசன் மொகல்லனைன், சிலாமேகவன்னன் ஆகியோரது காலம் அரசியல் சிக்கல் நிறைந்ததாக அமைந்தது. எனவே அம்மனர்களில் ஒருவர் (சிலா மேகவண்ணனாக இருக்கலாம்) இங்கு குடியேறி வாழ்ந்த பொருளாதார பலம் மிக்க ஒரு சமூகமாகத் திகழ்ந்த அரபிகளின் ஒத்துழைப்பைப் பெற எடுத்த முயற்சியே இஸ்லாத்துக்கு வழங்கிய ஆதரவுக்குக் காரணமாக இருக்கலாம். எனவே சீனாவுக்குச் செல்லும் வழியில் இலங்கை வந்த நபி (ஸல்) அவர்களின் தூதுவரை மன்னன் வரவேற்றிருப்பான் என்பதையும் உலகளாவிய வர்த்தக சமூகமொன்றின் உதவியைப் புறக்கணிக்க விரும்பியிருக்க மாட்டான் கருதலாம்.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் அநுராதபுர ஆட்சியாளர்களின் முக்கிய துறைமுக நகரமாக மாந்தை விளங்கியது. இத்துறைமுக

நகரம் கிழக்கிற்கும் மேற்கிற்குமிடையிலான வணிகத்தில் ஒரு மத்திய நிலையமாக விளங்கியது. இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளும் கண்டெடுக்கப்பட்ட அரபு கல்வெட்டுகளும் அரபுக் குடியிருப்புகள் காணப்பட்டமையை உறுதிப்படுத்துகின்றன. எனவே இக்காலப் பகுதியில் இலங்கையில் இஸ்லாம் அறிமுக மாகியிருக்கலாம் எனக் கொள்ளலாம். கலீபா உமர் (ரழி) அவர்களின் காலப்பகுதியில் இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமானது என்ற கருத்தை கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இப்னு ஷஹ்ரயார் தாம் எழுதிய “அஜாஇபுல் ஹின்த்” எனும் நூலில் தருகிறார். இலங்கையில் குடியேறி வாழ்ந்த அரேபியர் இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி கேள்வியுற்று அது பற்றிய சரியான செய்திகளை அறிந்துகொள்வதற்காக தம்மில் இருந்து மிகத் திறமை மிக்க ஒருவரைத் தெரிவு செய்து அரேபியாவுக்கு அனுப்பி வைத்தனர். இந்நிகழ்வு இரண்டாம் அக்ரபோதி மன்னனின் காலப்பகுதியில் நடைபெற்றதாக கலாநிதி சிறிமாகிரிபமுனே "Mulims of Sri Lanka" எனும் நூலிற் குறிப்பிடுகின்றார். அவர் அங்கு சென்றடைந்த போது நபி (ஸல்) அவர்களும், கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களும் காலஞ்சென்று, கலீபா உமர் (ரழி) அவர்கள் (கி. பி. 634-644) ஆட்சி செய்து கொண்டிருந்தார். அவரிடமிருந்து இஸ்லாத்தைப் பற்றி அறிந்து கொண்டு இலங்கைக்கு மீண்டார். அவர் வரும் வழியில் இன்றைய பாகிஸ்தானில் உள்ள மக்ரான் கரையில் காலமானார். அவருடன் வந்த பணியாள் இலங்கையை அடைந்து இஸ்லாம் பற்றிய செய்திகளை வழங்கினார்.

இலங்கையில் வாழ்ந்த அரேபியர் வகப் இப்னு அபி ஹப்ஸா மூலம் கிடைத்த செய்தியை உறுதிப்படுத்திக் கொள்ள எடுத்த முயற்சியாக இத்தூதுவரை அனுப்பியமை அமைந்திருக்கலாம். அவ்வாறே இஸ்லாத்தின் அடிப்படைகள், அதன் வாழ்க்கையியல் கோட்பாடுகள் என்பன பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சியாகவும் இதனைக் கருதலாம்.

கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இஸ்லாமிய கிலாபத்தில் ஆட்சியாளர்களாக இருந்த உமையாக கலீபா அப்துல் மலிக் பின் மர்வான், வலீத் இப்னு அப்துல் மலிக் ஆகியோரது ஆட்சிக் காலத்தில் ஈராக்கின் கவர்னராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுபின் கொடுமைக்கு அஞ்சி உமையாக்களின் அரசியல் எதிரிகளாக இருந்த ஹாஷிம் கிளையினர் தென்னிந்திய இலங்கைக் கரையோர நகரங்களில் குடியேறினர். எனும் தகவலை Sir James Tannant "Ceylon" எனும் தனது நூலிற் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு புலம் பெயர்ந்து வந்த பனூ ஹாஷிம் கிளையினர் இலங்கையில் திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார், புத்தளம், கொழும்பு, காலி, பேருவளை ஆகிய இடங்களில் குடியமர்ந்த இதே காலப்பிரிவில் நடைபெற்ற இன்னொரு நிகழ்வையும் வரலாற்றாசிரியர் அல்பலாதூரி தமது "புதுஹுல் புல்தான்" எனும் நூலில் தருகிறார். 8 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையை ஆண்ட மன்னனான 2 ஆம் தாதோபதிஸ்ஸ இலங்கையில் காலஞ்சென்ற அரேபிய வர்த்தகர்கள் சிலரின் விதவைகளையும், பெண் மக்களையும் அரேபியாவுக்கு அனுப்பி வைத்தான். இவர்கள் பிரயாணம் செய்த கப்பலை இந்தியாவின் தேபல் (தற்போதைய கராச்சி) எனும் இடத்தில் கடற் கொள்ளைக்காரர்கள் தாக்கி கைப்பற்றிக் கொண்டனர். பெண்கள் அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். அவர்களில் பனூ யர்பூ குழுவைச் சேர்ந்த ஒரு பெண் "யா ஹஜ்ஜாஜ்" என சப்தமிட்டாள். இவ்விடயத்தை ஈராக்கின் ஆட்சியாளராக இருந்த ஹஜ்ஜாஜ் பின் யூசுப் கேள்வியுற்றதும் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களை விடுவிக்குமாறு சிந்தின் அப்போதைய ஆட்சியாளரான ராய்தாஹிருக்கு செய்தி அனுப்பினார். இதற்கு எத்தகைய பதிலும் கிடைக்காததால் முஹம்மத் பின் காஸிமின் தலைமையில் பெரும் படையொன்று அனுப்பப்பட்டு கி. பி. 715 இல் சிந்து வெற்றி கொள்ளப்பட்டது.

இது ஹி. 1 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் முஸ்லிம்கள் ஒரு சமூகமாக வாழ்ந்தார்கள் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. இலங்கை மன்னர் இந்த அநாதைப் பெண்களை அவர்களின் தாய் நாட்டிற்கு அனுப்பியமையை உமைய மாகாண அதிபரான ஹஜ்ஜாஜுடன் நல்லுறவை வளர்க்க எடுத்த முயற்சியாகவும் இதனைக் கருத முடியும்.

இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான காலப் பிரிவு பற்றிய மேற்குறித்த தகவல்கள் இஸ்லாம் அரபு தீபகற்பத்தில் அறிமுகமான காலப்பிரிவில் இலங்கைக்கும் அறிமுகமானது என்பதில் ஒன்றுபடுகின்றன. நபி (ஸல்) அவர்களது காலப்பிரிவிலேயே இஸ்லாம் பற்றிய அறிமுகத்தைப் பெற்றுக்கொள்ளும் இலங்கையில் வாழ்ந்த அரபு சமூகத்தினர் உமர் (ரழி) அவர்களது காலப்பிரிவில் இஸ்லாமிய வாழ்க்கை முறை பற்றிய அறிவைப் பெற்றுக்கொள்கின்றனர். இதனால் படிப்படியாக ஓர் இஸ்லாமிய சமூகம் உருவாகியிருக்க வேண்டும். அவ்வாறே இலங்கை முஸ்லிம்களுக்கும் அரபு சமூகத்திற்குமிடையே இருந்த சமய வர்த்தக உறவுகளே பனூ ஹாஷிம் கிளையினர்

இலங்கைக்கு வருவதற்கும், இங்கு குடியேறுவதற்கும் காரணமாக இருந்தது எனக் கருதலாம்.

## இலங்கையில் முஸ்லிம்களின் பரவல்

கி. பி. 8 ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கணிசமான அளவில் முஸ்லிம் குடியிருப்புகள் காணப்பட்டன. அநுராதபுர ராஜதானியின் முக்கிய துறைமுகமாகிய மாந்தையிலும் அதை அண்டிய பிரதேசங்களான திருக்கேதீஸ்வரம், எல்லுப்பிட்டிய, புளியந்தீவு ஆகிய இடங்களிலும் கண்டெடுக்கப்பட்ட அரபு சிலாசனங்கள் இதனை உறுதிப் படுத்துகின்றன என கலாநிதி எம். ஏ. எம். ஷுக்ரி "Mulims of Sri Lanka" எனும் நூலிற் குறிப்பிடுகின்றார்.

கி. பி. ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகள் அப்பாஸியரின் பொற்காலமாக அமைந்தது. இக்காலப் பகுதியில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் அப்பாசிய கலீபாக்களுடன் தொடர்புள்ளவர்களாக விளங்கினர். இலங்கை முஸ்லிம்களின் சமய அறிவை மேம்படுத்த அப்பாஸிய கலீபா காலித் இப்னு பகாயா என்ற மார்க்க அறிஞரை அனுப்பி வைத்தார். இது இலங்கையில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தவும், போதிக்கவும் எடுக்கப்பட்ட நிறுவன ரீதியான முதல் முயற்சியாக அமைந்தது. இலங்கை வந்த இவர் இங்கு தங்கி இஸ்லாமிய வாழ்க்கை முறையையும் ஷரீஆவையும் போதித்து வந்தார். இங்கேயே வாழ்ந்து காலஞ்சென்ற இவரது கல்லறை நடுகல் இன்றும் காணப்படுவது இவ்வரலாற்று உண்மையை நிறுவுவதற்கான சான்றாக அமைகின்றது.

கி. பி. 10, 12 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் உள்ளக நகரங்களில் பல முஸ்லிம் குடியிருப்புக்கள் காணப்பட்டமையை இலங்கையின் உள்ளக நகரங்களான கம்பளை, வெலகெதர, சப்பிரகமுவ பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட உமைய, அப்பாஸிய கால நாணயங்கள் உணர்த்துகின்றன. அவ்வாறே இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொற்காலம் என போற்றப்படுகின்ற பொலன்னறுவைக் காலப்பகுதியில் முஸ்லிம்களின் பரவல் கணிசமாக இருந்திருக்க வேண்டுமென்பதற்கான சான்றுகளை நாம் காணமுடிகின்றது.

பொலன்னறுவைக் கால மன்னர்களுள் சிறப்பிடம் பெறும் மகா பராக்கிரமபாகு (1156-1186) வின் காலப்பிரிவில் தேசிய வர்த்தகத்தில்



17-CM14799

முக்கியத்துவம் மிக்கவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். இதுவே ஏற்றுமதி வர்த்தகத்தை மேம்படுத்த மன்னன் உருவாக்கியருந்த “அந்தரங்கதுர” என்ற மேல் சபையில் நான்கு முஸ்லிம்கள் இடம்பெற்றிருந்தமைக்கு காரணமாக இருந்திருக்கலாம். அரபுப் புவியியலாளரான அல்-இத்ரீஸி தரும் இத்தகவலை இலங்கையின் தொல்பொருளியல் துறைப் பேராசிரியராக இருந்த எஸ். பரனவிதாரனவும் தனது "History of Ceylon" எனும் நூலில் உறுதிப்படுத்துகிறார். இத்தகவல் பொலன்னறுவை ராஜதானியில் செல்வாக்குள்ளவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர் என்பதற்கும் அவர்கள் நாட்டின் பல பாகங்களிலும் குடியமர்ந்துள்ளனர் என்பதற்கும் சான்றாக அமைகின்றது. பொலன்னறுவையின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி. பி. 1232 இல் தம்பதெனிய இலங்கையின் தலை நகராகியது. இக்காலப் பகுதியில் தம்பதெனிய அரசுக்கு வலுவூட்டும் வளம்மிக்க சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. கி. பி. 1270 இல் தம்பதெனிய அரசின் மன்னனாக முடிசூடிய 4 ஆம் விஜயபாகு அவரது இராணுவத் தளபதியாக இருந்த “மித்த” என்பவனால் கொலை செய்யப்பட்ட போது அந்த இராணுவத்தின் இன்னொரு பிரிவுக்கு தலைமை தாங்கிய “தாகூர்” எனும் முஸ்லிம் இராணுவ வீரர் “மித்த” வைக் கொன்று அரசைப் பாதுகாத்ததோடு 1272 இல் யாப்பஹுவையை தலைநகராகக் கொண்டு புவனேகுபாகு ஆட்சியமைப்பதற்கும் காரணமாக இருந்தார். இது இலங்கையின் உள்ளக நகரங்களில் முஸ்லிம்கள் வலுவான சமூகமாக பரவி வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றது.

யாப்பகுவை அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த உயர் இடமே 1283 இல் எகிப்துக்குச் சென்ற வர்த்தக தூதுக்குழுவின் தலைமைப் பதவி அபூ உஸ்மான் என்ற முஸ்லிம் பிரதானிக்கு கிடைப்பதற்கு காரணமாகியது.

தம்பதெனிய, யாப்பகுவை அரசியல் காலப்பிரிவில் நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வுகள் முஸ்லிம்களின் உள்நாட்டுப் பரவலுக்கான மிகப் பெரும் சான்றுகளாக அமைகின்றன. இக்கருத்துக்கள் இக்காலப் பிரிவில் உள்நாட்டில் காணப்பட்ட முஸ்லிம்கள் நாட்டின் சாதாரண பிரஜைகள் போலல்லாது அரசர்களோடு சமதரத்தில் உறவாடக்கூடிய பிரதானிகளின் அந்தஸ்தைப் பெற்றிருந்தமையைக் காட்டுகின்றன.

13 ஆம் நூற்றாண்டு இலங்கையின் அரசியலில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துமளவுக்கு வலிமை மிக்க சமூகமாக வளர்ச்சி பெற்றிருந்தனர். 13 ஆம் நூற்றாண்டின் இறுதிக் கூறில் குருநாகலை இலங்கையின் தலைநகராகியது. 2 ஆம் புவனேகுபாகு குருநாகலை யைத் தலைநகராகக் கொண்டு கி. பி. 1287-1293 வரை ஆட்சி செய்தான். இம்மன்னன் குருநாகலை அஸ்வத்தும பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பிரபுவாக விளங்கிய அதினாவிதின வீர விக்கிரமசிங்க என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்ட முஸ்லிம் பிரமுகரின் மகளாகிய மெதகெடிய குமாரி என்ற யுவதியைத் திருமணம் செய்தான். இருவருக்கும் பிறந்த முஸ்லிம் மகனே "வஸ்த்துஹிமி" என்ற பெயரில் இலங்கையின் வரலாற்றில் குறிக்கப்படுகிறார். இத்தகவலை ஆய்வாளர் கருணாதிலக தனது "வயப லங்காவே ராஜதானி" என்று நூலில் தருகிறார்.

2ஆம் புவனேகுபாகுவின் பின் அவரே குருநாகலையில் இலங்கை யின் மன்னனாக முடிசூட்டினார். எனினும் சூழ்ச்சியாளர்கள் சதி செய்து இவரைக் கொலை செய்தனர். அரசனின் சிங்கள மனைவிக்குப் பிறந்த மகனை 4 ஆம் பராக்கிரமபாகு என்ற பெயரில் மன்னராக முடிசூட்டினார். இத்தகவல்கள் அனைத்தும் இலங்கையின் வரலாற்றேடுகளில் இருந்து திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளதாக எட்வட் பெரேரா குறிப்பிடுகிறார்.

குருநாகல் ராஜதானியாக மாற்றப்பட்டமைக்கான காரணிகள் பல கூறப்பட்டாலும் கூட 2 ஆம் புவனேகுபாகுவின் அரசியல் வாழ்வை உற்று நோக்கும் போது அங்கு குடியேறி வாழ்ந்த பொருளாதார பலம் மிக்க சமூகமாக இருந்த முஸ்லிம்களின் ஆதரவும், ஒத்துழைப்பும் தனக்கு கிடைக்கும் என்ற நம்பிக்கையும், உறுதியும் அதற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக இருந்திருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

கி. பி. 14 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்கள் இலங்கையின் உள்ளகப் பகுதிகளில் பெருமளவில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான சான்றுகள் பல காணப்படுகின்றன. இவ்வகையில் கி. பி. 1344 இல் இலங்கையைத் தரிசித்த இப்னு பதூதா விட்டுச் சென்றுள்ள குறிப்புக்கள் முக்கியம் பெறுகின்றன. அவர் புத்தளத்திலிருந்து சிலாபம், குருநாகல், கம்பொள வழியாக ஆதம் மலையைத் தரிசித்து இரத்தினபுரி, தெவுந்தர, காலி, கொழும்பு வழியாக புத்தளம் நோக்கித் திரும்பிச் சென்றுள்ளார். இப்பயணப் பாதையில், தான் சந்தித்த பல முஸ்லிம் பெரியார்களைப் பற்றியும் அவர்களைச் சூழ இருந்த பள்ளிவாயில்கள், குடியிருப்புகள்

பற்றியும் குறிப்பிடுகிறார். இந்தவகையில் பார்க்கும் போது இலங்கையின் கரையோர நகரங்களிற் போலவே உள்ளக நகரங்களிலும் முஸ்லிம்கள் இக்காலப் பிரிவில் பரவலாக வாழ்ந்துள்ளனர் எனலாம்.

கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் அரசியலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றமாக போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டமையைக் குறிப்பிடலாம். கி. பி. 1505 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து பாரசீகக் குடாவை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓர் அரபுக் கப்பல் கூட்டத்தை தாக்கி கைப்பற்றுவதற்காக கோவாவிலிருந்து புறப்பட்ட டொன் லோரன்ஸ்சோ அல்மெய்டா கடும் புயலில் சிக்குண்டு திசைமாறி இலங்கையின் காலிக் கரையை வந்தடைந்தான். இவனது இவ்வருகை இலங்கையின் வரலாற்றுப் போக்கையே மாற்றியமைத்து விட்டது. போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்த நேரத்தில் இலங்கையின் கரையோர நகரங்களில் வர்த்தக வலிமை பெற்ற சமூகமாக முஸ்லிம் சமூகம் திகழ்ந்தது. பொதுவாக முஸ்லிம்களை தமது வர்த்தகப் போட்டியாளராகக் கண்ட போர்த்துக்கேயர்கள் அவர்களைத் தமது எதிரிகளாகவே கருதினர். முஸ்லிம் ஸ்பெயினில் முஸ்லிம்களுக்கு எதிராக மிகக் கடுமையான போக்கைக் கடைப்பிடித்ததைப் போலவே போர்த்துக்கேயர்கள் இலங்கையிலும் முஸ்லிம்களுக்கு எதிரான போக்கையே தமது எல்லா நடவடிக்கைகளிலும் கடைப்பிடித்தனர். கோட்டை இராச்சியத்தில் உருவான அரசியல் பிரச்சினைகளும், அது துண்டாடப்பட்டமையும் போர்த்துக்கேயர் இலங்கையில் நிரந்தரமாகக் காலூண்றுவதற்கு காரணமாகியது.

ஆரம்பத்தில் முஸ்லிம்கள் விடயத்தில் ஓரளவு நெகிழ்வுத் தன்மையோடு நடந்துகொண்ட போர்த்துக்கேயர்கள் 1597 ஆம் ஆண்டில் கோட்டை அரசின் கடைசி மன்னனான டொன்ஜுவான் தர்மபால வாரிசின்றி இறக்க அவன் எழுதி வைத்திருந்த சாசனத்தின்படி போர்த்துக்கேய மன்னனே கோட்டை அரசுக்கும் அதிபதியானவுடன் கடும் போக்கைக் கடைபிடிக்கத் தொடங்கினர். இதன் விளைவாக கி.பி. 1575 ஆம் ஆண்டு முதல் கரையோர நகரங்களில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாண்டில் வெலிகம பிரதேசத்தில் செல்வாக்குடன் வாழ்ந்த முஸ்லிம்களின் செல்வங்களைக் கொள்ளையடித்ததோடு பலரை கொலையும் செய்தனர். கி. பி. 1626 ஆம் ஆண்டில் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த எல்லாப் பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இவ்வாறு

வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களுக்கு மன்னன் செனரத் (கி. பி. 1604-1635) கண்டியின் உட்புறங்களிலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகலிடமளித்து குடியமர்த்தினான். மட்டக்களப்பில் மட்டும் நாலாயிரம் பேர் குடியமரத்தப்பட்டனர். கி. பி. 1642 இல் மாத்தறையில் 200-300 வரையிலான முஸ்லிம் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டனர். அவர்களது பெண்களையும், பிள்ளைகளையும் கைது செய்து கொழும்புக்கு கொண்டு வந்தனர். இதுவும் முஸ்லிம்கள் புலம்பெயரத் தூண்டியது.

எனவே, கி. பி. 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை முஸ்லிம்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் குடியேறியிருந்தனர் என்ற முடிவுக்கு வரலாம். பாணகமுவ, கண்டி, கம்பளை, ஹிங்குல, மாவனல்ல போன்ற உள்ளக நகரங்களில் கணிசமான அளவு முஸ்லிம்கள் குடியேறி இருந்தனர்.

கி. பி. 1656 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை போர்த்துக்கேயரிடமிருந்து ஒல்லாந்தர் கைப்பற்றிக் கொண்டனர். இவர்களின் ஆட்சியிலும் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. முஸ்லிம்களின் வர்த்தக முயற்சியில் ஒல்லாந்தர் குறுக்கிட்டனர். குறித்த சில தொழில்களை மட்டுமே முஸ்லிம்கள் செய்ய வேண்டுமென்றும் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் ஒல்லாந்தர்களுடன் சேர்ந்தே செயற்பட வேண்டுமென்றும் சட்டமியற்றினர். கி. பி. 1607 ஆம் ஆண்டு கொழும்பிலும் அதைச் சூழ உள்ள பகுதிகளிலிருந்தும் முஸ்லிம்களை வெளியேற்றினர்.

ஒல்லாந்தர் சுதேச முஸ்லிம்களுடன் முரண்பாடு கொண்டிருந்த போதிலும் தமது சுய தேவைகளுக்காக இந்தோனேசியா முஸ்லிம்களை இலங்கைக்கு அழைத்து வந்தனர். அவ்வாறே அங்கு ஒல்லாந்தருக்கு எதிராக கிளர்ச்சி செய்த இளவரசர்கள், பிரதானிகள், மார்க்க அறிஞர்கள் என்போரும் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டனர். இதனால் இலங்கை முஸ்லிம்களுக் கிடையே மலாய் சமூகம் தோற்றம் பெற்றது. இது முதல், அரேபிய. பாரசீக, இந்திய சுதேச முஸ்லிம்களை உள்ளடக்கி யிருந்த இலங்கை முஸ்லிம் சமூகத்தில் மலாய் சமூகமும் பிரதான இடத்தைப் பெற்றுக்கொண்டது. ஒல்லாந்தர்கள் சுதேச முஸ்லிம்களுக்கு இழைத்த கொடுமைகளைப் போல இவர்களுக்கு கொடுமைகள் எதுவும் செய்யவில்லை.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல், சமூக கலாசார வாழ்வில் 17 ஆம், 19 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பிரிவு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தர்களாலும் இன்னல்களுக் குள்ளான முஸ்லிம்கள் கண்டி மன்னர்களின் ஆதரவைப் பெற்று கண்டி அரசியலிலும் முக்கியத்துவம் மிக்கவர்களாகினர். மலையக ராஜதானியின் பல்வேறு பகுதிகளிலும் குடியமர்ந்த முஸ்லிம்கள் பொறுப்பு வாய்ந்த அரச பதவிகளையும் வகித்தனர்.

கண்டி அரசியலில் உள்நாட்டு நிர்வாகம் மிகத் திட்டமிட்ட அடிப்படையில் வகுக்கப்பட்டிருந்தது. வரையறுக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டு அரசனின் நிர்வாகம் கிராமிய மக்கள் வரைக்கும் சென்றமை இக்காலப் பிரிவின் சிறப்பியல்பாகும். ஒழுங்கான சமூக, பொருளியல், தொழிநுட்ப முறையொன்று சமகால திணைக்கள முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த திணைக்களங்கள் ஒவ்வொன்றும் குறித்த சில நிர்வாகப் பணிகளுக்கு பொறுப்பாக இருந்தது.

இத்திணைக்களங்கள் சிலவற்றின் பொறுப்பாளர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கனின் (1747-1781) காலப்பிரிவில் மீன்பிடித்தலுக்கும் தவளம் வியாபார முறைக்குமான திணைக்களமாக இருந்த "மடிகே பத்த" திணைக்களத்தின் தலைமைப் பதவியான "மடிகே பத்த நிலமே" பதவியை ஷேக் ஆலிம் எனும் முஸ்லிம் வகித்துள்ளார். இவரது மறைவுக்குப் பிறகு இவரது பேரப்பிள்ளையான ஷேக் அப்துல் காதர் என்பவர் இப்பதவியை வகித்துள்ளார். ஏழுகோறளையில் இப்பதவியை மகுலா முஹாந்திரம் என்பவர் வகித்துள்ளார். இவை தவிர மிகக் குறைவான அளவினராக சிங்கள மக்களுக்கு மத்தியில் வாழ்ந்து கிராமத்தின் தலைமைப் பொறுப்புக்குரிய "லேகம்", "முஹாந்திரம்" போன்ற பதவிகளையும் முஸ்லிம்கள் வகித்துள்ளனர் என கலாநிதி லேனா தேவராஜா குறிப்பிடுகின்றார்.

நாம் இதுவரை நோக்கிய கருத்துக்களைத் தொகுத்து நோக்கும் போது அநுராதபுர ராஜதானியின் தோற்றம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரையான மிக நீண்ட இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆரம்பகாலம் முதலே அறிமுகமாகி கடைசி வரைக்கும் நிலைத்து நின்ற கீர்த்தி மிக்கதோர் வரலாறு முஸ்லிம்களுக்கு இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். ஆரம்பகால அரபிகளின் வாரிசுகளாக வரலாற்றில் பிரவேசிக்கும் முஸ்லிம்கள் கடற்கரையோர நகரங்களில் இருந்து படிப்படியாக உள்நோக்கிப் பரந்து இலங்கையின் தேசிய

நீரோட்டத்தில் முக்கிய பங்குதாரர்களாக மாறியதை உணர்ந்து கொள்கிறோம். பெரும்பான்மை சமூகத்தோடு ஒரு சிறுபான்மை சமூகம் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக தனது தனித்துவத்தைப் பேணிக் கொண்டே இணைந்து வாழ்ந்த வரலாறு இலங்கை முஸ்லிம்களின் சிறப்புக்கு சான்றாகின்றது.

## தேசியப் பங்களிப்புக்கள்

ஒரு சமூகத்தின் சமூக, பண்பாட்டுப் பங்களிப்புகள் பற்றிய ஆய்வுகள் அனைத்தும் அதன் நம்பிக்கைகள், விசுவாசக் கோட்பாடுகள், பழக்க வழக்கங்கள், சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவற்றின் பின்புலத்திலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இலங்கை முஸ்லிம்களின் சமூக, பண்பாட்டு பங்களிப்புகள் பற்றிய ஆராய்வுக்கும் இக்கருத்து ஏற்புடைய தாகவே அமைகின்றது.

இலங்கை முஸ்லிம்களின் தோற்றமும், பரவலும் வணிக முயற்சிகளி னடியாக நடைபெற்ற போதிலும் சுதேசிகளோடு வணிகத் தொடர்புகளுக்கு அப்பாலும் பண்பாட்டு, கலாசார உறவு கொண்ட சமூகமாகவே வரலாற்றில் வாழ்ந்திருக்கிறது. எனினும் முஸ்லிம் சமூகத்தின் தனித்துவ இயல்புகளோ அல்லது பண்பாட்டுக் கூறுகளோ தனித்துவத்தை இழந்த நிலையை வரலாற்றில் எங்கும் காணமுடிய வில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் முஸ்லிம்கள் உலகின் எப்பாகத்தில் வாழ்ந்த போதிலும், எக்குழுவினருக்கு மத்தியில் இருந்த போதிலும் தமது வாழ்க்கைக்கும், நம்பிக்கைகளுக்கும் அடிப்படையாக அமைகின்ற அல்குர்ஆன், சுன்னா என்பவற்றின் போதனைகளுக்கு அமைய நடந்துகொள்வதாகும். இலங்கை முஸ்லிம்களும் ஐரோப்பியரின் வருகை வரை குறிப்பாக ஆங்கிலேயரின் அரசியல் யாப்பு, சீர்திருத்தங்கள் முன்வைக்கப்படும் வரை சிங்கள சமூகத்தோடு தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டே இணைந்து வாழ்ந்தனர். ஐரோப்பியர்களே தமது அரசியல் நோக்கங்களுக்காக இரு சமூகங்களுக்குமிடையே முரண்பாடுகளைத் தோற்றுவித்ததாக கலாநிதி லோனா தேவராஜா குறிப்பிடுகிறார்.

இலங்கையின் பிரதான சமூகக் குழுவாக வாழ்ந்த முஸ்லிம்களின் சமூக பண்பாட்டுப் பங்களிப்புகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் நோக்கலாம்.

1. பொருளியல் பங்களிப்புகள்
2. அரசியல் பங்களிப்புகள்
3. தேசிய பாதுகாப்புப் பங்களிப்புகள்
4. மருத்துவத் துறைப் பங்களிப்புகள்
5. கலாசார பண்பாட்டுப் பங்களிப்புகள்

இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் வரலாற்றில் முஸ்லிம்கள் வகித்த பங்கு மகத்தானதாகும். அநுராதபுர ஆட்சிகாலம் முதல் சர்வதேச வணிகத்தில் இலங்கையை முஸ்லிம்கள் பிரதிநிதித்துவப்படுத்தினர். இலங்கையை ஊடறுத்துச் சென்ற சர்வதேச வணிகப் பாதைகளில் அவர்களுக்கிருந்த பரிச்சயம் உள்நாட்டு வணிகத்தை சர்வதேச மயப்படுத்துவதற்கு உதவியது. அநுராதபுர ஆட்சிக்காலப் பிரிவின் முக்கிய துறைமுகமாக விளங்கிய மாந்தையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் இதனை உறுதிப்படுத்து கின்றன.

அநுராதபுர ஆட்சிக்காலப் பகுதிகளில் நடைபெற்ற படையெடுப்புக் களின் போது பாதிக்கப்பட்ட கால்வாய்கள், குளங்கள் என்பவற்றை புனர்நிர்மாணம் செய்யவும், சிதைந்து போன விவசாய நடவடிக்கைகளை மீளமைக்கவும் பயன்படுத்தப்பட்ட நிதி வெளிநாட்டு வணிகத்தின் மூலமாகவே பெறப்பட்டது. இலங்கையின் நீர்ப்பாசன நாகரிகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஆர். ஓ. எல். எச். குணவர்தன தரும் இத்தகவல் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் முஸ்லிம்கள் வகித்த பங்குக்கு ஆதாரமாகின்றது.

பொலனறுவைக் காலப்பிரிவில் கொழும்பு வளர்ச்சியடைந்த துறைமுக நகரமாகத் திகழ்ந்தது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் கொழும்பில் முஸ்லிம்கள் செறிவாக வாழ்ந்துள்ளனர் என்பதைக் கொழும்பு சிலாசனம் உணர்த்துகின்றது. பொலன்னறுவையின் பொற்காலத்துக்கு உரிமை கோரும் மன்னனான மகா பராக்கிரமபாகு (கி. பி. 1156-1186) வின் காலப்பிரிவில் வணிகத்துறையின் அபிவிருத்திக்காக உருவாகியிருந்த “அந்தரங்கதுர” என்ற மேல்சபையில் முஸ்லிம்கள் அங்கம் வகித்தமை வணிகத்துறையில் அவர்கள் பெற்றிருந்த

அங்கீகாரத்துக்கு சான்றாகின்றது. இக்காலப்பிரிவில் தேசிய வர்த்தகத்தில் ஈடுபட்ட "வலஞ்சியர்" என்போர் எருதுகளால் இழுக்கப்பட்ட பொதி வண்டிகள் மூலம் நாட்டின் பல பாகங்களுக்கும் வணிகப் பொருட்களைக் கொண்டு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்ற குறிப்பு முஸ்லிம்களையே குறிக்கின்றது. இலங்கையில் பிற்காலப் பகுதியில் "தவளம்" எனக் குறிக்கப்பட்ட வணிகப் போக்குவரத்து முறையின் ஆரம்பமாக இது அமைந்தது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலேயே இலங்கை மாணிக்கக் கற்களுக்கு பிரபல்யம் பெற்றிருந்தது. இலங்கையின் இரத்தினக் கற்களை சர்வதேச வர்த்தக உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் முஸ்லிம்கள்தான். இரத்தினங்களை அடையாளம் காணல், தர நிர்ணயம் செய்தல், பட்டை தீட்டுதல் உள்ளிட்ட இரத்தினக்கற்களோடு தொடர்பான அம்சங்களையும் முஸ்லிம்களே அறிமுகப்படுத்தினர் கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் அல் பெரூனி எழுதிய "கிதாபுல் ஜமாஹிர் பீ ம:ரிபதில் ஜவாஹிர்" என்ற நூலில் இலங்கை இரத்தினக் கல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இது அக்காலப் பகுதியில் இலங்கையின் இரத்தினக்கற்கள் பற்றிய அறிமுகம் முஸ்லிம் உலகுக்கு இருந்தது என்பதைக் காட்டுகின்றது.

ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றும் காலப்பிரிவுகளிலும் தேசிய வர்த்தகத்தில் முஸ்லிம்களே முன்னணி வகித்தனர். கரையோரப் பகுதிகளில் இருந்து முஸ்லிம்கள் துரத்தப்படுவதற்கும் அவர்கள் பெற்றிருந்த வர்த்தக வலிமையின் மீது கொண்ட காழ்ப்புணர்வே பிரதான காரணமாகியது. 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டத்துறை அறிமுகமாகிய போது மிகச் சில முஸ்லிம் பெருந்தோட்டத்துறை உரிமையாளர்கள் காணப்பட்டனர். இது தவிர ஏற்கனவே இருந்த இரத்தினக்கல் வியாபாரத்திலும், நகை வியாபாரம், புடைவை வியாபாரம் என்பவற்றிலும் முஸ்லிம்கள் ஈடுபட்டனர் எனினும் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டிலும் முஸ்லிம்களின் வணிக வலிமை படிப்படியாகக் குறையத் தொடங்கியதைக் காணலாம். இன்று இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகர்களின் வரிசையில் முன்னணி வகிக்கும் முஸ்லிம் தொழிலதிபர்கள் மிகக் குறைந்துள்ளனர்.

### அரசியல் பங்களிப்புகள்

இலங்கையின் அரசியலிலும் முஸ்லிம்கள் அநுராதபுர ஆட்சிக்காலம் முதல் கண்டி அரசின் வீழ்ச்சி வரைக்கும் குறிப்பிடத்தக்கவர்களாகத்

திகழ்ந்துள்ளனர். சுதந்திர இலங்கையின் பாராளுமன்றங்களிலும், அமைச்சரவைகளிலும் முஸ்லிம்கள் அங்கத்துவம் பெற்றிருந்தனர். இது முஸ்லிம்கள் இலங்கை வரலாற்றின் ஆரம்பகாலம் முதல் இன்று வரை தேசிய அரசியலில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் இனமாக வாழ்ந்தமைக்கான சான்றாகும்.

அநுராதபுர, பொலன்னறுவைக் காலங்களில் துறைமுக நகரங்களில் செறிவாக வாழ்ந்த முஸ்லிம்கள் அரசின் வரிவசூலிப்பாளர்களாகவும் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தின் மேற்பார்வையாளர்களாகவும் இருந்துள்ளனர்.

பொலன்னறுவையின் முதல் மன்னனான விஜயபாகு (கி. பி. 1055-1070) மன்னனின் முடிசூட்டு விழாவுக்கு ஒத்துழைப்பு வழங்கி மன்னனின் வலது கரமாக செயற்பட்ட முஸ்லிம் பிரமுகர் ஒருவர் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. பெரிய தம்பி மரிக்கார் என அழைக்கப்பட்ட இவர் அரசனது விசுவாசத்துக்குரியவராகவும், வணிகத்துறை தொடர்பான இணைப்பாளராகவும் செயற்பட்டுள்ளார். அவ்வாறே பராக்கிரமபாகு மன்னனின் காலப்பிரிவிலும் தாம் ஏற்கனவே குறிப்பிட்டவாறு அரசனின் நிதித்துறை ஆலோசகர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர்.

இலங்கையின் தலைநகரங்கள் இடம் விட்டு இடம் நோக்கி நகர்ந்து சென்ற வேளைகளில் குறித்த தலைநகரங்களில் முஸ்லிம்களும் குடியேறி வாழ்ந்துள்ளனர். இக்காலப் பிரிவுகளில் அரசனின் ஆலோசகர்களாக, வெளிநாட்டுத் தூதுவர்களாகப் பணிபுரிந்த பல முஸ்லிம் பிரதானிகளை இலங்கையின் வரலாற்றில் காணலாம். கி. பி. 1282 இல் புவனேகுபாகுவின் தூதுவராக எகிப்துக்குச் சென்ற அபூ உஸ்மான் குருநாகலை அரசில் மன்னனாக முடிசூடிய வஸ்த்ஹிமி போன்றவர்கள் இதற்கான வரலாற்று உதாரணங்களாவர்.

கண்டிய அரசியலில் முஸ்லிம்கள் வகித்த பங்கு மகத்தானதாகும். அரச திணைக்களங்களின் தலைவர்களாக அரச தூதுவர்களாக உயர் நீதிமன்ற நீதிபதிகளாக முஸ்லிம்கள் இருந்துள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. கி. பி. 1762 இல் இலங்கை வந்த ஆங்கிலேயத் தூதுவரான ஜோன் பைபஸை வரவேற்று அழைத்துவர மன்னனால் அனுப்பப்பட்ட உதுமான் லெப்பை, மடிகேபத்த நிலமே பதவியை வகித்த ஷேக் ஆலிம், ஷேக் அப்துல் காதர், கர்நாடக நவாப் முஹம்மத் அலியிடம் தூதுவராகச் சென்ற உதுமான் லெப்பை ஆகியோர் கண்டி

அரசியலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த அங்கீகாரத்துக்கான ஆதாரங் களாக அமைகின்றனர்.

அவ்வாறே கண்டியின் இறுதி மன்னனான சிறி விக்ரம ராஜசிங்கவின் (கி. பி. 1798-1815) காலப் பிரிவில் பிரதம அமைச்சராக இருந்த பிலிமதலாவை திசாவையுடனும் எகெலேபொல திசாவையுடனும் இணைந்த பிரதம நீதிபதியாக ராஜகருண கோபால் முதியான்ஸே ராலகாமி என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருந்த முஸ்லிம் பிரமுகர் கடமையாற்றினார். சுதந்திரத்திற்கு சற்று முந்திய காலத்திலும் சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்கள் அரசியலில் முக்கிய பங்காற்றியுள்ளனர். பாராளுமன்ற சபாநாயகர் பதவியைக்கூட முஸ்லிம்கள் வகித்துள்ளனர். இவை அனைத்தும் முஸ்லிம்களின் அரசியல் பங்களிப்புக்கான சான்றுகளாகும்.

### தேசிய பாதுகாப்பு பங்களிப்புகள்

இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கும், பந்தோபஸ்துக்கும் முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளனர். தம்பதெனிய அரசியலில் கி. பி. 1270 இல் இராணுவத் தளபதியாகப் பணிபுரிந்த முஸ்லிம் தளபதி தாஹோர் அவ்வாண்டு உருவாகிய கிளர்ச்சியை அடக்கி 1272 இல் 1 ஆம் புவனேகுபாகு யாப்பகுவையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சியமைப்பதற்கு காரணமாக அமைந்தார்.

கோட்டை அரசியலிலும், கண்டி அரசியலிலும் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பங்களிப்பு நல்கிய முஸ்லிம்களின பெயர்கள் பதியப்பட்டுள்ளன. சீதாவாக்க இராச்சியத்தின் மன்னனான மாயாதுன்னை (கி. பி. 1521-1581) யின் காலப்பிரிவில் போர்த்துக்கேயருக்கு எதிராக மாயாதுன்னையின் இராணுவத்தில் இணைந்து போராடினர். அத்தோடு கள்ளிக் கோட்டை மன்னனாக இருந்த ஸமோரினின் கடற்படை உதவியைப் பெற்றுக்கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டனர். இம்மன்னனது புதல்வரான 1 ஆம் இராஜசிங்கன் (கி. பி. 1582 - 1592) காலத்திலும் அரச படையில் இணைந்து போராடினர். போர்த்துக்கேய வரலாற்றாசிரியர் Queyroz தரும் தகவல்களின்படி மேற்குறித்த இராணுவ நடவடிக்கைகளில் துப்பாக்கிப் படைப்பிரிவினராக முஸ்லிம்களே செயற்பட்டுள்ளனர். இத்தகைய துப்பாக்கி வீரர்கள் சிங்கள இராணுவத்தில் காணப்படவில்லை.

கண்டி மன்னனான 1 ஆம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலத்தில் கரையோரப் பாதுகாப்புக்கான தளபதியாகவும், பிரதான கட்டளையிடும் அதிகாரியாகவும் ஒரு முஸ்லிம் பணி புரிந்தார். இவர் போர்த்துக்கேயரால் கைது செய்யப்பட்ட போது இவரை விடுவிக்க மன்னன், 5000 வெள்ளி நாணயங்களைக்கூட வழங்கத் தயாரானமை இவர் மீது மன்னனுக்கிருந்த நம்பிக்கைக்கு ஆதாரமாகும். அவ்வாறே 2 ஆம் இராஜசிங்கனின் காலப்பிரிவில் (கி. பி. 1634 - 1684) நடைபெற்ற வெள்ளவாயப் போரில் "ஒடுபந்திய" என அழைக்கப்பட்ட முஸ்லிம்களின் ஒட்டகப் படை மிக முக்கிய பங்காற்றியது. இப்போரில் தானடைந்த வெற்றியை நினைவு கூறும் வகையில் ஹங்குரன்கெத மகாதேவாலயத்துக்கு வழங்கிய அன்பளிப்புப் புடைவையில் இந்த ஒட்டகப் படையை மன்னன் ஓவியமாக சித்தரித்து வைத்துள்ளான். கண்டியின் இறுதி மன்னன் வரை முஸ்லிம்கள் தேசிய இராணுவத்தில் முக்கிய பங்காற்றியுள்ளனர். கி. பி. 1810 ஆம் ஆண்டு தேசிய இராணுவத்தில் 850 முஸ்லிம் வீரர்கள் இடம் பெற்றிருந்தனர். சுதந்திர இலங்கையிலும் முஸ்லிம்களின் பாதுகாப்புத் துறை பங்களிப்பு அளப்பரியதாகும். விசேடமாக கிழக்கு ஆயுத மோதல்களின் போத அரச இராணுவத்தைப் பலப்படுத்த தம்மாலான ஒத்துழைப்புக்களையும் நல்கியுள்ளனர்.

### மருத்துவத்துறைப் பங்களிப்புகள்

இலங்கைக்கு யூனானி மருத்துவ முறையை அறிமுகப்படுத்தி அதனை ஒரு தனிப்பெரும் துறையாக விருத்தி செய்த பெருமை முஸ்லிம்களையே சாரும். இது இலங்கைக்கு எக்காலப் பிரிவில் அறிமுகமானது என்பது பற்றிய உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. கி. பி. 10 ஆம் நூற்றாண்டள வில் சின்னாசியாவிலுள்ள கோன்யாவின் ஸுல்தானின் புதல்வரான இளவரசர் ஜமாலுத்தீன் ஒரு மருத்துவராக விளங்கினார் என்றும் பேருவளையில் குடியேறிய இவரும், இவரது புதல்வர்களுமே யூனானி மருத்துவத்தை அறிமுகப்படுத்தியதாகவும் ஒரு வரலாற்றுக் குறிப்பு உள்ளது. கி. பி. 7-9 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மருந்துகளை சேமித்து வைப்பதற்கான ஸாஸானிய இஸ்லாமிய மட்பாண்டங்கள் அநுராதபுரம், மிகிந்தலை ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட புதைபொருள் ஆய்வுகளின் போது புராதன மருத்துவமனையொன்றின் இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கப்பட்டன. இது யூனானி மருந்துகள் இலக்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்டுகின்றன.

வரலாற்றாசிரியர் கலாநிதி லோனா தேவராஜா தரும் தகவலொன்றின் படி தம்பதெனிய மன்னனான 2 ஆம் பராக்கிரமபாகு (கி. பி. 1236-1270) தனது 22 ஆவது ஆட்சியாண்டில் பேசமுடியாத நிலைக்குள்ளான போது அரசனின் வேண்டுகோளின் பேரில் டில்லி சுல்தான் வட இந்திய மாநிலமான சிந்து பிரதேசத்தின் "புழி" பகுதியில் இருந்து ஸ்பெயின் வழிவந்த ஒரு மருத்துவரை இலங்கைக்கு அனுப்பி வைத்ததாகவும் அவரே, இலங்கையில் யூனானி மருத்துவத்தை அறிமுகப் படுத்தி வளர்த்ததாகவும் அறியமுடிகின்றது. வைத்தியரத்ன கோபால முதலிகெ அன்சார் இப்னு துபைல் உடையார் என்ற பெயரை உடைய இம்மருத்துவரது சந்ததியினரே பிற்கால இலங்கையின் அரச மருத்துவர்ளாக பணிபுரிந்ததாக அவர் குறிப்பிடுகிறார்.

கண்டிய அரசியலில் யூனானி மருத்துவம் சிறப்புற்று விளங்கியது. பல யூனானி மருத்துவர்கள் கண்டிய மன்னர்களுக்கு மிக நெருக்கமானவர்களாக இருந்துள்ளனர். கீர்த்தி சிறி ராஜசிங்கன் (1749-1781) காலப்பிரிவிலும் அதனைத் தொடர்ந்து வந்த காலங்களிலும் "பௌத்தகே முஹாந்திரம் நிலமே" பதவியை வகித்து வந்த பல முஸ்லிம் மருத்துவர்களைக் காணமுடிகின்றது. இவர்கள் கண்டி மாவட்டத்தில் உடுநுவரைத் தொகுதியில் அரசனால் வழங்கப்பட்ட நிலங்களில் குடியமர்த்தப்பட்டனர். இத்தகைய மருத்துவர்கள் "ராஜபக்ஷ வைத்தியதிலக கோபால முதலி" "ராஜகருண வைத்திய திலக கோபால முதலி" எனும் கௌரவப் பெயர்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இக்காலப் பிரிவில் கண்டியில் மட்டுமல்லாது இலங்கையின் கரையோர நகரங்களான கொழும்பு, காலி, மாத்தறை முதலிய பிரதேசங்களில் ஒல்லாந்தர்கள் நிறுவியிருந்த வைத்தியசாலைகளில் முஸ்லிம் மருத்துவர்கள் பணிபுரிந்தனர். கி. பி. 1791 ஆம் ஆண்டு மீராலெப்பை மேஸ்தியார், சேக் மரிக்கார், சேக் லெப்பே ஆகியோர் இவ்வைத்திய சாலைகளில் பிரதம மருத்துவர்களாக இருந்தனர். இன்று யூனானி மருத்துவம் இலங்கையில் பல்கலைக்கழக அந்தஸ்து பெற்ற ஒரு துறையாகவும் சுதேச மருத்துவத்துறையின் ஒரு கூறாகவும் கணிக்கப்படுகின்றது.

**கலாசார பண்பாட்டு பங்களிப்புகள்**

இலங்கை முஸ்லிம்களின் கலாசாரப் பண்பாட்டு பங்களிப்புகள் சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் பங்களிப்புகளோடு ஒப்பு நோக்கி ஆராயப்பட முடியாத ஒன்றாகவே விளங்குகின்றது. எந்த ஒரு சமூகத்தின்

கலாசாரப் பண்பாட்டுப் பாரம்பரியங்களும் அந்த சமூகம் ஆட்சி பீடத்தில் அமர்ந்த நாடுகளில், நகரங்களிலேயே வளர்ச்சி பெறும். ஆட்சி யாளர்களின் அனுசரணையின்றி இவை வளர்ச்சி பெற முடியாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் நிர்மாணிக்கப்பட்ட மஸ்ஜித்கள் ஓரளவுக்கு தனித்து வமான கட்டிடக்கலைப் பாரம்பரியமொன்றைக் கொண்டுள்ளன. முஸ்லிம்களின் பொதுவான கட்டிடக்கலை அம்சங்களான கும்மட்டம், அரபு எழுத்தணி மரபுகள் ஆரம்பகால மஸ்ஜித்களில் காணப்படவில்லை. ஏனைய நாடுகளில் காணப்படாத “ஹவ்ள்” உட்பள்ளி, வெளிப்பள்ளி என்பன இங்கு காணப்பட்டன. எனினும் இன்று நிர்மாணிக்கப்படும் பெரும்பாலான மஸ்ஜித்கள் முன்னைவிட அதிகமாக மத்திய கிழக்கு கட்டிடக்கலையின் செல்வாக்கிற்கு உட்பட்டிருப்பதை அவதானிக்கலாம்.

இலங்கை முஸ்லிம்கள் ஆரம்ப காலம் முதலேயே இஸ்லாமிய பண்பாடுகளைப் பேணிக்காக்கும் இயல்புள்ளவர்களாக இருந்தமையால் சுதேசிகளின் வாழ்விலும் அதன் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவர் களாக இருந்துள்ளனர். சுகாதாரப் பழக்க வழக்கங்கள், தூய்மையான (ஹலாலான) உணவு வகைகளை நுகர்தல், நேர்த்தியாக உடை அணிதல், சமயக் கல்வி வழங்கல், விருந்து படைத்தல் போன்ற பண்பாட்டு விழுமியங்கள் முஸ்லிம்களிடமுள்ள நல்ல முன்மாதிகளாகும். அதிலும் குறிப்பாக விருந்தோம்பல் முஸ்லிம்களின் விசேட பண்பாகும். வித்தியாசமான அமைப்புக்களில், வேறுபட்ட சமையல் முறைகளைப் பின்பற்றி சுவையான உணவு வகைகளைத் தயாரித்து பரிமாறும் பண்பு போன்றன.

அவ்வாறே முஸ்லிம்களின் கலாச்சாரத்திலும், பழக்க வழக்கங் களிலும் இலங்கையின் சுதேச அம்சங்களும் தென்னிந்திய செல்வாக்கினால் அறிமுகமாகிய கலாசாரக் கூறுகளும் இரண்டறக் கலந்துள்ளமையை அவதானிக்கலாம். அரபு சமூகங்களில் காணப்படாத மரபுகள், சடங்குகள், சம்பிராதயங்கள் இலங்கை முஸ்லிம்களின் கலாசாரத்தில் ஊடுருவியுள்ளமை இதற்கு உதாரணங்களாகும்.

இந்நாட்டு மக்களுக்கு மத்தியில் சுதந்திர உணர்வையும், போராட்ட இயல்பையும் ஊட்டியவர்களாக முஸ்லிம்கள் இருந்துள்ளனர். குறிப்பாக ஆங்கிலேயர் காலப்பிரிவில் தமது பண்பாட்டுச் சின்னமாக அமைந்த துருக்கித் தொப்பியை நீதிமன்றத்தில் அணிய அனுமதி தரல்

வேண்டுமென சட்டத்தரணி எம். ஸி. அப்துல் காதர் ஆரம்பித்து வைத்த உரிமைப் போராட்டம் ஆங்கிலேயருக்கு எதிரான நிறுவனமயப் படுத்தப்பட்ட அறிவுபூர்வமான போராட்டமாக அமைந்தது. இதுவும் சிங்களத் தலைவர்கள் ஆங்கிலேய ஆட்சியாளர்களை அறிவுபூர்வமாக எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான தூண்டு கோல்களில் ஒன்றாக விளங்கியது.

இந்த வகையில், இலங்கையின் வரலாற்றில் அரபிகளின் வழித்தோன்றல்களாக அமைந்த முஸ்லிம்கள் இலங்கையின் தேசிய நீரோட்டத்தில் இரண்டறக்கலந்து வாழ்ந்த ஒரு சமூகமாக அமைகின்றனர். அநுராதபுர அரசு முதல் சுதந்திர இலங்கை வரைக்கும் அதற்குப் பின்னும் தேசத்தைக் கட்டியெழுப்புவதிலும், பாதுகாப்பதிலும், முஸ்லிம்கள் ஆற்றியுள்ள பங்கு குறிப்பிடத்தக்கதாகும். மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமொன்றின் பங்குதாரர்கள் என்ற வகையில் இனிமேலும் அர்ப்பணிப்புடன் செயலாற்ற விளைவோம்.

**முஸ்லிம் தனியார் சட்டம் (**Muslim Personal Law**)**

ஒரு நாட்டின் மத, கலாசார, பிரதேச அடிப்படைகளில் வாழ்கின்ற தனித்துவமான குழுமங்களின் தனித்துவங்களைப் பேணும் வகையில் அவர்கள் பின்பற்றுகின்ற, அவர்களுக்கே உரித்தான சட்டங்கள், நடைமுறைகள், வழக்காறுகள் முதலானவற்றை அவர்களுக்கு உடைத்தாக்கும் சட்டம் தனியார் சட்டம் எனப்படும். இந்த வகையில், இலங்கையில் வாழும் முஸ்லிம்களுக்கென உள்ள பிரத்தியேகமான சில சட்ட ஏற்பாடுகளே முஸ்லிம் தனியார் சட்டம் எனப்படுகிறது.

பல்லின மக்களைக் கொண்ட நமது இலங்கை நாட்டில் தற்சமயம் நடைமுறையில் உள்ள தனியார் சட்டங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **கண்டியச் சட்டம்** : இது கண்டி வாழ் சிங்கள மக்களுக்கு மட்டுமான தனியார் சட்டமாகும்.

2. **தேச வழமைச் சட்டம்** : இது யாழ்ப்பாணத் தமிழருக்கு மட்டும் உரித்தான சட்டம் மட்டக்களப்புக்குத் தமிழருக்குப் பொருந்தாது.

3. **முஸ்லிம் தனியார் சட்டம்** : முஸ்லிம் தனியார் சட்டம் என்பது குறிப்பிட்ட சில விடயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதே தவிர இஸ்லாத்தின் அனைத்துச் சட்ட திட்டங்களையும் கொண்ட ஒரு சட்டத் தொகுப்பு அல்ல.

**முஸ்லிம் தனியார் சட்டத்தின் உள்ளடக்கம் :**

இது இரு பிரிவுகளைக் கொண்டதாகும் :

1. **ஆள்சார் சட்டம்** - (Personal Law)

இச்சட்டத்தின் கீழ் பின்வருவன உள்ளடங்குகின்றன :

1. திருமணம், பலதாரமணம்
2. விவாகரத்து
3. பராமரிப்பு
4. பிரதி பலன்களை எதிர்பார்க்காத கொடைகள்
5. பருவமடைதல்
6. தத்தெடுத்தல் அல்லது மகவேற்பு
7. பிள்ளைகளது பாதுகாப்பு
8. திருமணம் செய்யத் தடுக்கப்பட்டோர்
9. மஹரும் கைக்கூலியும்

2. **ஆதனம்சார் சட்டம்** - (Law of Property)

இப்பிரிவில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்குகின்றன :

1. உயில் எழுதாத சொத்துவாரிசுரிமை :
   * உயில் எழுதாது மரணிப்பவர் சார்ந்த மத்ஹப் சட்டத்தின் பிரகாரம் வாரிசுகள் சொத்துக்களைப் பெறுவர்.
2. பிறப்பின் மூலம் வாரிசுரிமை
3. வாரிசின் வகை
4. வக்பு அல்லது நம்பிக்கைப் பொறுப்பு

**வக்புச் சட்டம்**

இச்சட்டம் மர்ஹூம் ஏ. எம். ஏ. அஸீஸின் முயற்சியின் பயனாய் 1956 இல் இலங்கையில் அறிமுகமானது.

**வக்பின் வகை**

1. வறுமை நிவாரணத்துக்காகச் செய்யப்படும் வக்பு
2. பொதுவாக இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் வக்பு
3. மஸ்ஜித்களை முகாமை செய்வதற்காக மேற்கொள்ளப்படும் வக்பு.
4. தர்ம நோக்கில் செய்யப்படும் வக்பு

இவ்வாறு முஸ்லிம் தனியார் சட்டத்தால் அங்கீகரிக்கப்படும் அனுமதிக்கப்படும் எதுவும் இதில் அடங்கும்.

**வக்பு சட்டத்தின் நோக்கம் :**

1. மஸ்ஜித்களையும் வக்பு சொத்துக்களையும் பதிதல்.
2. நம்பிக்கைப் பொறுப்புக்கள், பராமரிப்போரின் கடமைகளை வரையறுத்தல்.
3. ஜமாஅத்தினரால் தெரிவு செய்யப்படும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களை வக்ப் சபையில் பதிதல்.
4. முஸ்லிம் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தை உருவாக்குதல்.
5. ஆணையாளரை நியமித்தலும் ஏழு உறுப்பினர்கள் கொண்ட சபையை அமைத்தலும்.
6. 1982 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தின்படி மஸ்ஜித்களுக்கு மேலாக தர்ஹாக்களையும் பதிதல்.
7. பதியப்பட்ட ஒவ்வொரு நிறுவனமும் நிதியம் அமைக்கப் பங்ளிப்புச் செய்தல்.

## முஸ்லிம் தனியார் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தாபனங்கள் :

1. **காழி நீதிமன்றம்** :
   நீதிச் சேவைகள் ஆணையாளரால் காழிகள் நியமிக்கப்படுவர்.

**காழிகளின் அதிகாரங்கள்**

1. மஹரைப் பெற்றுக்கொடுத்தல்
2. மனைவி, பிள்ளைகள் என்பவருக்கான வாழ்க்கைச் செலவைப் பெற்றுக்கொடுத்தல்

3. விவாகரத்தை மேற்கொள்ள உதவுதல்
4. கைக்கூலியை மீளப் பெற உதவுதல்
5. அவசியத்தின் நிமித்தம் வலியாகச் செயற்படல்
6. கணவன் மனைவியரிடையே சமரசம் செய்து வைத்தல்

2. **காழிகள் சபை** :

- காழிகளின் தீர்ப்பில் திருப்தி அடையாத ஒருவர், இச்சபைக்கு மேன்முறையீடு செய்ய வேண்டும்.
- இதில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பர்.
- ஒரு தீர்வு வழங்கப்படும்போது குறைந்தது மூன்று உறுப்பினர்கள் அல்லது நீதிபதியாவது இருக்க வேண்டும்.

3. **மேன்முறையீட்டு நீதிமன்றம்** :

4. **சுப்ரீம்கோட்**
- மேன்முறையீட்டில் திருப்தி காணாதோர் இந்த நீதிமன்றத்தில் வழக்கைத் தாக்கல் செய்யலாம்.

5. **வக்பு சபை**
- ஏழுபேர் இதன் உறுப்பினர்களாக இருப்பர்.
- இந்த சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் திருப்தி இல்லையெனில், வக்பு நியாய சபைக்கு முப்பது நாட்களுக்குள் அப்பீல் பண்ணலாம்.
- வக்பு சபையைத்தெரிவு செய்வது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவாகும்.
- நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமித்தல், அவர்களை நீக்குதல், இடை நிறுத்தம் செய்தல், அவர்கள் சமர்ப்பிக்கும் கணக்குகளை மேற்பார்வை செய்தல், வக்பு தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல்.

**முஸ்லிம் தனியார் சட்ட வரலாறு :**

இதனை மூன்று தலைப்புக்களில் நோக்கலாம்.

1. **சிங்கள மன்னர்கள் காலம்**

- இஸ்லாத்தின் தோற்றத்துக்கு முன்னரே அரபு மக்கள் நம் நாட்டோடு தொடர்பு வைத்திருந்தனர்.
- இஸ்லாத்தின் தோற்றத்தின் பின் முஸ்லிம் வர்த்தகர்களாக வந்த அரபுகளால் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகியது.
- சுதேசிகளோடு அன்னியோன்யமாகப் பழகிய அரபு முஸ்லிம்களுக்கு சிங்கள மன்னர்களின் ஆதரவும் கிடைத்தது.
- மன்னர்களின் ஆலோசகர்களாகவும் மருத்துவர்களாகவும் வெளிநாட்டு வர்த்தகத்துக்கான பொறுப்பாளர்களாகவும் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டனர்.
- சிங்கள மன்னர்களிடம் கிடைத்த இத்தகைய ஆதரவும், செல்வாக்கும் முஸ்லிம்களுக்குத் தமது தனித்துவத்தைப் பேண வழி செய்தன.
- வியாபார நோக்கிலும், ஹஜ்ஜுக்காகவும், அரேபியா சென்றுவந்தவர்கள், அங்கு தாம் கற்றவற்றை இலங்கையில் அறிமுகம் செய்தனர்.
- ஷரீஅத்தை பின்பற்றுவதற்கான வழிகளையும் செய்தனர்.
- இவ்வாறு ஷரீஅத்தை நடைமுறைப்படுத்தியவர்களுள் “அப்துர்-ரஹ்மான் அபீ ஹாஷிம் ஸெய்லானி என்பவர் முக்கியமானவர்.
- இவர் இஸ்லாமிய சட்டங்களைத் தமிழில் எழுதி வெளியிட்ட போதும், அதற்கு எவரும் எத்தகைய தடைகளையும் விதிக்கவில்லை.

2. **போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலங்கள்**

- போர்த்துக்கீசரின் வருகையோடு, அதுவரை அரேபியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவி வந்த தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.
- இவர்களது அச்சுறுத்தலுக்குப் பயந்து முஸ்லிம்கள் ஒதுங்கி வாழ்ந்தார்கள்.

- பின்வந்த ஒல்லாந்தரும் தம் மதத்தைப் பரப்புவதில் தீவிரம் காட்டியதால், முஸ்லிம்களின் கல்வி நிலை தேக்கமடைந்து, அதனால் அவர்கள் பல வழிகளிலும் பின்தங்கினர்.
- டச்சு கவர்னர் வில்லியம் பெலக் (1765-1785) இலங்கைக்கென ஒரு சட்ட முறையை அறிமுகப்படுத்தியதோடு, இங்கிருந்த முஸ்லிம்களுக்கெனத் தனியான சட்டவாக்கம் ஒன்றை உருவாக்கவும் வழி செய்தார்.
- இதற்கு முஸ்லிம்கள் ஒத்துழைப்பு வழங்கப் பயந்து பின்னின்றதால், பதேவியாவில் (இந்தோனேஷியா) இருந்த முஸ்லிம்கள் பின்பற்றும் சட்டத்தொகுப்பை வருவிக்கச் செய்து இலங்கையில் அறிமுகம் செய்தார். கவர்னர் பெலக்

3. **ஆங்கிலேயர் காலம்**

- இவர்களும் ஒல்லாந்தர் அறிமுகம் செய்த சட்டத்தையே நடைமுறைப்படுத்திய போதும், தலைப்பை மாத்திரம் "முஹம்மதியர் அல்லது சோனகர் சம்பந்தமான விஷேட சட்டங்கள்" என மாற்றி அமைத்தனர்.
- 1806 இல் உயர் நீதியரசர் அலக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் கவர்னரிடம் முன்வைத்த, தனியார் சட்டம் தொடர்பான சில திருத்தங்களுடனான சட்டக் கோவை அமுலுக்கு வந்தது.
- இது ஆரம்பத்தில் கொழும்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு மட்டும் என்றிருந்து, பின்னர் இலங்கை வாழ் முழு முஸ்லிம் சமூகத்துக்கும் என ஆகியது.
- காலப்போக்கில் பிரச்சினைகள் அதிகரிக்க, அதிகரிக்க இச்சட்டக்கோவை பயனற்றதென உணரப்பட்டதால், நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களின் சட்டங்களைக்கொண்டு தீர்ப்பளிக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்படலாயிற்று.
- இக்காலத்தில் இச்சட்டக் கோவைக்கு வெளியே சென்றும் தீர்ப்பு வழங்கலாம் என அப்போதைய காலி மாவட்ட வழக்கறிஞர் "கில்மன் ஒரு கருத்து வெளியிட்டமையால் பல விமர்சனங்கள் எழுந்தன.
- இந்நிலையில் தனியார் சட்டத்தை அமுல் நடாத்த முஸ்லிம்களுக்கும் பூரண அதிகாரம் வழங்கும் வகையிலான

ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனும் பிரேரணை ஒன்றை என். எச். அப்துல் காதர் கொண்டு வந்தார்.

- இதனை மேற்கொள்ளவென எம். ரீ. அக்பர் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு 1928 இல் இரு முக்கிய சட்டவரைபுகளை முன்வைத்தது.
    1. திருமணம், விவாகரத்துத் தொடர்பான சட்டம்.
    2. இவ்விரண்டும் பதியப்படவேண்டும் எனும் சட்டம்.
- இக்காலத்தில் முன்னைய முஹம்மதியர் சட்டம் என்பதில் இருந்த முஹம்மதியர் எனும் பதம் நீக்கப்பட்டு இஸ்லாமிய சட்டம் என அறிமுகமாகியது.
- 1939 இல் இச்சட்டமும் மாற்றப்படவேண்டும் என்பதற்கிணங்க, பதிவாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு குழு, 1951 இல் 13 ஆம் இலக்க புதிய சட்டத்திருத்தம் ஒன்றை அறிமுகம் செய்தது.
- இக்குழுவில் M. T. அக்பர், T. B. ஜாயா, சம்சுதீன் போன்றோர் அங்கத்துவம் வகித்தனர்.
- 1954 இல் நடைமுறைக்கு வந்த இச்சட்டமே இன்றுவரை நடைமுறையில் இருந்து வருகிறது.

### முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களம்

முஸ்லிம்களின் சமய மற்றும் கலாசார விடயங்களைக் கண்காணிப்பதற்காக, விசேடமாக பள்ளிவாசல்களுடன் தொடர்புபட்ட வக்புச் சொத்துக்களைப் பராமரிக்கும் பணியை அரச சார்பு நிறுவனமாக மேற்கொள்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதே முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களமாகும்.

வரலாற்று ரீதியாக இத்திணைக்களத்தை நோக்கும்போது, ஆரம்ப கட்டங்களில் இது நிறுவன வடிவம் பெற்றிருக்காவிட்டாலும் வக்பு சட்டம் இலங்கையின் சட்டத்துறையில் 1931 ஆம் ஆண்டின் 50 ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட காலம் தொட்டே இத்திணைக்களமும் தோற்றம் பெற்றுவிட்டது எனலாம். ஏனெனில், இச்சட்ட மூலம் போதியளவு தெளிவினைக் கொண்டிராத காரணத்தால் 1933 இல் அதில் பல திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மேலதிக விடயங்கள் பலவும்

உள்ளடக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து 1937 இல் அகில இலங்கை மலாயர் சங்கம் பள்ளிவாசல்கள் பதிவு செய்யப்பட வேண்டிய தேவை பற்றி எடுத்துரைத்த பின்னணியில் அன்றைய உள்நாட்டலுவல்கள் அமைச்சரின் அறிவுறுத்தலின் பிரகாரம் சட்டத்துறை செயலாளரால் “முஸ்லிம் பள்ளிவாயல்கள் மற்றும் அறக்கட்டளைகள் சட்டமூலம்” என்னும் புதிய சட்ட ஏற்பாடுகளுடனான ஒரு தொகுப்பினை அக்கால முஸ்லிம் சமூகப் பெரியார்களின் ஒத்துழைப்புடன் தொகுத்து முன்வைத்தார். இத்திருத்தச் சட்டமூலம் 1943 ஆம் ஆண்டின் ஓகஸ்ட் 27 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

ஆயினும், பல வாதப்பிரதிவாதங்களுக்குட்பட்ட இத்திருத்தச் சட்டமூலம் மீண்டும் 1952 இல் ஏழு பேர் கொண்ட ஒரு குழுவால் மீளாய்வு செய்யப்பட்டது. இறுதியில் திருத்தங்களுடன் இதனை முன்வைத்த குழு இவற்றை நடைமுறைப்படுத்தவும் கண்காணிப்புச் செய்யவும் “வக்பு சபை” ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும் என பரிந்துரை செய்தது. அதில் வக்பு ஆணையாளர் அதன் தலைவராகவும் அவருடன் மேலும் ஏழு முஸ்லிம் ஆண்கள் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப்பட வேண்டும். ஆணையாளர் பத்து வருட இடையறாத சட்டத்துறை சேவையாற்றிய அட்வோகேற்றா (வழக்குரைஞராக) இருப்பதுடன் அங்கத்தவர்களுள் குறைந்தபட்சம் மௌலவி அல்லது ஷரீஆத் துறையில் உயர் கல்வி கற்ற ஒருவர் உள்ளடங்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்ட திருத்தங்கள் முன்மொழிவுகளின் அடிப்படையில் 51 ஆம் இலக்க வக்பு சட்டமூலம் 1956 ஆம் ஆண்டு இயற்றப்பட்டு 1956, யூன் 26 ஆந் திகதி சிலோன் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, 1957 ஆம் ஆண்டு மே 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

வக்பு சபையின் முதல் ஆணையாளராக 1957, ஜூன் 28 ஆந் திகதி எம். ஜே. எம். முஹ்ஸின் நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1957 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி, இலக்கம் 37/14, டாம் வீதி, கொழும்பு 12 எனும் முகவரியில் இச்சபை

உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அதன் அடுத்த ஆணையாளராக 1960 இல் எம். இஸட். மொஹிடீன் என்பவர் நியமனம் செய்யப்பட்டார்.

இவ்வாறு தனது பணியைத் தொடர்ந்த இச்சபை 1981 இல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து அதன் ஓர் அங்கமாக மாற்றப்பெற்றது. 2004 ஆம் ஆண்டிலிருந்து அதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட சொந்தக் கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட இத்திணைக்களம் அதன் பணிகளை மேலும் விஸ்தரித்து முன்னெடுத்துச் செல்கின்றது.

இன்று இதன் பணிகளுள் குறிப்பிடத்தக்கவையாக, பள்ளிவாயல்கள் அதனுடன் தொடர்புடைய வக்பு மற்றும் நிர்வாக விவகாரங்கள் ஏனைய நலன்புரி நம்பிக்கை நிதியங்களைப் பதிவு செய்தல் மேற்பார்வை செய்தல், அறபு மத்ரஸாக்கள், அல்குர்ஆன் மத்ரஸாக்கள், மக்தபுகள், அஹதிய்யா அறபுப் பாடசாலைகள், அல் ஆலிம் பரீட்சை மேற்பார்வை மற்றும் ஹஜ், உம்றா வணக்க வழிபாடுகள் தொடர்பான விடயங்கள் போன்ற பல சேவைகளைக் குறிப்பிடலாம்.

## 06. முஸ்லிம் வரலாற்று நாயகர்கள்

### ஸஹாபாக்கள்

### முஸ்அப் பின் உமைர் (ரழி)

முஸ்அப் பின் உமைர் இஸ்லாத்தின் முதலாவது வெளிநாட்டுத் தூதுவர். மக்காவில் செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்த வளர்ந்த அழகு மிக்க இளைஞர். உடை, நடை பாவனைகளில் இவருக்கென தனித்துவமான போக்கு இருந்தது. இவர் பாதையில் வந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு மக்காவின் அதியுயர் குடியினர் பாவிக்கும் வாசனையின் அறிகுறி தெரியும். இவர் போன்ற அழகுமிக்க தரமிக்க ஆடைகளை அணியக்கூடிய ஒருவரை நான் காணவில்லை என்ற நபி (ஸல்) அவர்களின் வார்த்தைகள் மட்டுமே இவர் பற்றி பேசுவதற்கு போதுமானதாக இருக்கும்.

நபி (ஸல்) அவர்களின் பிரசாரம் பற்றிய கருத்து மக்கா முஷ்ரிக்குகளால் எல்லா பிரதேசங்களிலும் முணுமுணுக்கப்படுவதை நீண்ட நாட்களாக அவதானித்து வந்தார் முஸ்அப். நபி (ஸல்) அவர்கள் முஷ்ரிக்குகளின் ஆபத்துகளிலிருந்து தனது த.ஃவா முன்னெடுப்புக்களை பாதுகாப்பாக கொண்டு செல்வதற்கு “அர்கம் பின் அபில் அர்கம்” வீட்டை பயன்படுத்தி வந்தார். ஒரு நாள் இந்த இளந்துடிப்புமிக்க இளைஞன் முஹம்மத் (ஸல்) அவர்களையும் அவரது தோழர்களையும் தேடி ஒரு மாலை பொழுது அர்கம் (ரழி) வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அங்கு நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுடன் உரையாடிக்கொண்டிருப்பதையும் அல்குர்ஆனின் சில வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பிப்பதையும் பின்னர் அவர்கள் அனைவரும் தொழுகையில் ஈடுபடுவதையும் கண்டு அவரையறியாத மனக் குமுறல்கள். இனங்காண முடியாத ஆனந்தம் - மனம் பூரித்துப் போனார். அக்கணமே அவர் மு.ஃமினாக விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்.

முஸ்அபின் தாய், ஹன்னாஸ் பின்த் மாலிக் தன் மகனின் செய்தி, கேட்டு அதிர்ந்து போவாளோ என யோசித்தார். கடுமையாக யோசித்தார் தன் தாய்க்கு தெரியாமல் இஸ்லாத்தை தனக்குள்ளேயே மறைத்து வைத்துக் கொள்வது தான் சரியென கண்டார். அர்கம் (ரழி) அவர்களின்

வீட்டுக்கு அடிக்கடி சென்று வருவார். ஈமான் பலம் பெற்றது என்றாலும் அவருக்கு தாயின் முடிவு எப்படியாகுமோ அவள் என்னை எப்படி தண்டிப்பாளோ என்ற பிரச்சினை அவருக்குள் ஊசலாடிக் கொண்டி ருந்தது. ஏனெனில், முஸ்அப் என்றாலே உயிரையும் விடுவதற்கு தயார் என்ற நிலையில் மகன் மீது அன்புகாட்டிய சீமாட்டி அவள். குடும்ப செல்வம் மக்காவின் அதியுயர் கோத்திரங்களின் அந்தஸ்து போன்ற பின்னணிகளால் முஹம்மதின் கோட்பாட்டை ஏற்க மறுத்து வந்த குடும்ப பெண்களில் ஒருவராக இருந்தார்.

அன்று மக்காவில் எந்த ஒரு இரகசியமும் யாராலும் மறைத்து வைத்திருக்க முடியாதளவு காட்டுத்தீ போல் பரவிச் செல்லும். குறைஷியரின் பார்வைகள் எப்போதும் எல்லா தெருக்களிலும் கூடாரமிட்டிருந்தன. ஒரு நாள் வேளை அர்கமின் வீட்டிற்குள் முஸ்அப் நுழைவதை உஸ்மான் பின் தல்ஹா கண்டுவிட்டார். தொடர்ந்து முஸ்அபை அவதானிக்கத் தொடங்கினார். பிறிதொரு நாள் அங்கு செல்வதையும் அவர்களுடன் சேர்ந்து தொழுகையில் ஈடுபடுவதையும் உஸ்மானுக்கு உறுதிப்படுத்த முடிந்தது. இளந்துடிப்புமிக்க கௌரவமான குடும்பத்தின் இளைஞன் முஸ்அப், முஹம்மதுடன் இணைந்துவிட்டார் என்ற செய்தி மக்கா முழுவதும் பரவியது.

முஸ்அப் தாய்க்கு முன்னால் நிலைகுலையாது நின்றார். அவரைச் சூழ குடும்பமும் கௌரவமிக்க கோத்திரத்தவர்களும் குழுமி நின்றனர். தைரியமாக தான் ஏற்றுக்கொண்ட இஸ்லாத்தின் தூதையும் அல்குர்ஆனின் சில வசனங்களையும் ஓதிக்காட்டினார். மறுகணம் தாயின் கை மகனின் முகத்தை பதம் பார்த்தது. அன்பு மிக்க மகன் வீட்டினுள்ளேயே சிறைக் கைதியானார். சில காலம் இப்படியே இருக்க வேண்டியதாயிற்று. மக்காவின் நிலைமையும் முஸ்லிம்களுக்கு ஆபத்தாக மாறியது. மு.்.மின்களில் ஒரு குழுவினர் எதியோப்பியாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளவுள்ளனர் என்ற செய்தி முஸ்அபுக்கு கிடைக்கின்றது.

தாய்க்கும் காவலாளிக்கும் தெரியாமல் வெளியேறி இக்குழுவுடன் இணைந்து ஹபஷாவுக்கு புறப்பட்டார். பயணம் கடினமானது என்பதை அவர் உணர்ந்திருந்தார். நீண்ட பயணம் செய்த பழக்கமும் அவருக் கில்லை. குதிக்கால் வெடிக்கத் துவங்கியது. கடுமையாக கஷ்டப்படுவதை கண்ட தோழர்கள், மாறிமாறி ஒட்டகத்தில் ஏற்றிக் கொண்டனர். செல்வத்துடன் வாழ்ந்த இளைஞனுக்கு எதுவெல்லாம் வேண்டுமோ அவற்றை பணத்தாலும் குடும்ப கௌரவத்தாலும் சாதிக்க முடியும். தாயும் கூட இதே வார்த்தைகளை ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருந்தார்.

எனினும், அவ்வளவும் போலி. மறுமையின் இன்பமே நிச்சயம் என்பதை அவர் உணர்ந்ததால் இக்கஷ்டங்களை பொருட்படுத்தவில்லை. அபீஸீனியாவில் சில காலம் வாழ்ந்த போது மக்காவின் நிலை சுமூகமாக உள்ளது எனவும் குறைஷிகள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர் என்ற செய்தியும் கேள்விப்பட்டு மக்கா திரும்பினார். ஆனால், நிலைமை சீராகவில்லை. எனவே மீண்டும் அபீசீனியாவுக்கு சென்றார்.

முஸ்அப் அபீசீனியாவிலிருந்தாலும் மக்காவில் தான் செய்த த.்.வா பணியை அங்கும் திறம்பட முன்னெடுத்தார். ஈமானுக்குரிய பயிற்சிக் களமாக அபீசீனியாவை மாற்றியமைத்துக் கொண்டார். நபி (ஸல்) அவர்கள் முஸ்அபின் செயற்பாடுகளை நுணுக்கமாக அவதானித்து வந்தார்கள். சிறந்த பிரச்சாரம் என்பதனையும், தொடர் பாடல் ஆளுமை கொண்ட பண்பாடு மிக்க இளைஞன் என்பதையும் புரிந்து கொண்டார்கள். அவரிடமிருந்து ஆடம்பர வாழ்வு மங்கிச் சென்றது. அவரை அவதானித்த முஸ்லிம்கள் கண்ணீர் வடிப்பார்கள் ; அவருக்காக பிரார்திப்பார்கள். செல்வம் மிக்க இளைஞர், அனைத்தையும் தூக்கியெறிந்துவிட்டு இஸ்லாத்தை அன்பு கொண்டுள்ளார்.

எதியோப்பியாவிலிருந்து மீண்டும் வந்த நிலையில் முஸ்அபின் நிலையை கண்டு தாய் மனவேதனையடைந்தாள். மீண்டும் அவரை தடுத்து வைத்துக் கொண்டால், இதற்கு முயற்சி செய்கின்ற அனைவரையும் கொன்று விடுவேன் என தாய்க்கு கூறவே அவள் அடங்கி போனாள். மகன், கூறியதை செய்பவன் என்பதை உணர்ந் திருந்தாள். கெஞ்சியவாறு, மகனே உன் கொள்கையை விட்டுவிட்டு என்னோடு வாழ வா, என்று கூறினாள். அதற்கு முஸ்அப், தாயே நான் நல்ல செய்தியைக் கூறுகின்றேன். நீங்கள் கலிமாவைக் கூறி இஸ்லாத்திற்குள் பூரணமாக வாருங்கள் என்றார். ஆத்திரம் கொண்ட தாய் ஒருபோதும் உனது மார்க்கத்திற்கு நான் வரப்போவதில்லை என ஆவேசமாக பதிலளித்தாள்.

இதே கால வேளையில், மதீனாவிலிருந்து வந்த குழுவினருடன் இஸ்லாம் பற்றிய கருத்துக்களை நபியவர்கள் பேசிவந்தார்கள். அதனை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். மதீனாவில் இக்குழுவினருக்கும் அங்கு

வாழும் மக்களுக்கும் இஸ்லாத்தின் தூதை எடுத்துரைக்கவும் பண்பாடு மிக்க மனிதர்களை உருவாக்கவும் ஒரு பிரதிநிதியை அவர்களுடன் அனுப்புவதற்கு நபியவர்கள் முடிவு செய்தார்கள்.

அதற்கு பொருத்தமான ஓர் இளைஞன் முஸ்அப் பின் உமைர் என்பதனை முடிவு செய்து இப்பொறுப்பை ஒப்படைத்தார்கள். எந்த மறுப்புமின்றி பொறுப்பை சுமந்துக்கொண்டார். இஸ்லாத்தின் வாழ்விடம் மதீனா தான் என்பதனை அவர் நினைத்திருக்கமாட்டார். தனது பணியை ஒழுங்குபடுத்தினார். ஒரு வருட காலத்திற்குள் 72 பேர்களை மக்காவிற்கு நபி (ஸல்) அவர்களிடம் அனுப்பிவைத்தார். சிறந்த திட்டமிடலும், மதிநுட்பமான த.்.வா முறையுமே இவரின் வெற்றிக்கு துணை புரிந்தது. கோத்திரத் தலைவர்களை சந்தித்து அவர்களினூடாக கோத்திரத்தை இஸ்லாத்துடன் இணைத்து விடுவார். இவ்வாறு மதீனாவில் இஸ்லாமிய நாகரிகம் பண்பாடு கொண்ட சமூகத்தை நபி (ஸல்) அவர்கள் உருவாக்க எடுக்கவிருக்கும் தளத்தின் அடிப்படை வேலைகளை தெளிவாகவும் நேர்த்தியாகவும் முன்னெடுத்தார். இத்துணைக்கும் ஓர் இளைஞன் மட்டுமே, அஸ்அத் பின் ஸராரா, உஸைத் பின் ஹுழைர் போன்ற கோத்திரத் தலைவர்கள் முழுமையாக இஸ்லாத்திற்குள் காலடி எடுத்து வைத்திருந்தனர்.

ஹிஜ்ரத் மேற்கொண்டு, நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் மதீனாவை வந்தடைந்தபோது அமோக வரவேற்பும், மதீனா பற்றிய முழு விபரங்களையும் நபியின் பிரதிநிதி என்ற வகையில் ஒப்புவித்தார். ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டு பத்று யுத்தம் இடம்பெற்றபோது சிறந்த வீரப்புருஷராக கலந்து கொண்டு முஸ்லிம்களின் இருப்பை உறுதிசெய்த தோழர்களில் ஒருவராக மாறினார். உஹத் யுத்தம் தவிர்க்க முடியாத ஒன்றாக மாறியது. முஸ்லிம்களின் சார்பில் தலைமை தாங்கிச் சென்று கடுமையாக போராடினார். இறுதியில் இந்த யுத்தத்தில் ஷஹீதாக்கப் பட்டார் இன்னாலில்லாஹி வஇன்னா இலய்ஹி ராஜிஊன் கபனிடுவதற்கு அவரிடம் போதியளவில் புடவையிருக்கவில்லை. தலைப் பகுதியை மூடினால் கால் பகுதி விளங்கும். இந்த உண்மை இளைஞனின் பணியை அல்லாஹ் ஏற்றுக்கொள்ளும் படியேனும் பிரார்த்திக்க முடியாத இளைஞர்களையே இன்று நாம் காணுகின்றோம்.

## பிலால் இப்னு றபாஹ் (ரழி)

பிலால் (ரழி) அவர்கள் அபிஷீனிய நாட்டைச் சார்ந்த நீக்ரோ அடிமைகளான ரபாஹ், ஹமாமா ஆகியோருக்கு மகனாக மக்காவில் 578 ல் (அல்லது 582 ல் பிறந்துள்ளார். சில பேரீத்தம் பழங்களுக்கு அடிமையாய் இருந்தவர். பிலால் (ரழி) யின் எஜமான் உமைய்யா பின் கல.்.ப் என்பவனாகும். இவன் பனூ ஜுமஹ் வம்சத்தைச் சார்ந்தவன். அடிமையாயிருந்த பிலால் (ரழி) ஒட்டகம் மேய்த்துக் கொண்டிருந்தார். அன்றைய அரபு உலகில் புரையோடிப் போயிருந்த பல தெய்வக் கொள்கையிலும், புரோகிதத்திலும், தனிமனித வழிபாட்டிலும் திளைத்திருந்த மக்களிடம் நபி(ஸல்) அவர்கள் ஏகத்துவக் கொள்கையை எடுத்துரைத்த போது, அதனை உளப்பூர்வமாக ஏற்றுக்கொண்டவர்களில் பிலால் (ரழி) அவர்களும் ஒருவர். அபரிமிதமான இணைவைப்பாளர் களுக்கு மத்தியில் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் இருந்த ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டோரின் நிலை பரிதாபகரமாக இருந்தது. அவர் தினந்தோறும் இணைவைப்பாளர்களின் கொடுமைகளுக்கும் சித்தரவதைகளுக்கும் ஆளானார்.

ஏகத்துவக் கொள்கைளின் எதிரில் இணைவைப்பும், தனிமனித வழிபாட்டின் அனுஷ்டானங்களும் புரோகிதமும் தவிடு பொடியாவதைக் கண்டு வெகுண்ட மக்கத்து இணைவைப்பாளர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டோரைக் கொடுமைப்படுத்துவதில் சிறிதும் சளைக்கவில்லை. உமைய்யா பின் கல.்.ப் தன் அடிமையான பிலால்(ரழி) அவர்கள் மீது இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டதற்காக சினந்து தன்வம்சத்தாரின் துணையுடன் அவரை மிகவும் கொடுமைப்படுத்தினான். சுடும் பாலைவன மணலில் அவரை ஆடையின்றி கிடத்தி நெஞ்சில் பாறாங்கல்லை வைத்து பிலால் (ரழி) அவர்கள் சற்றும் அசைய முடியாதவாறு செய்து துன்புறுத்தினான். சித்தரவதையின் உச்சநிலையை உணர்ந்த போதும் பிலால் (ரழி) அவர்கள் தான் ஏற்றிருந்த இஸ்லாத்தின் கொள்கை யிலிருந்து சற்றும் மாறவில்லை. அவர்களின் உடல் சித்தரவதையால் உருக்குலைக்கப்பட்டு கசையடி, உதை என தண்டனைகள் அதிகரிக்கப் பட்டும் கூட “அஹதுன் அஹதுன்” என்றே கூறிக்கொண்டிருந்தார்கள்.

இணைவைப்பாளர்களின் இத்தண்டனைகள் சித்தரவதைகள் யாவுமே பிலால் (ரழி) அவர்களது ஈமானை மென்மேலும் உறுதிப்படுத்தவே உதவியது. அடிமையாய் இருந்து இவ்வாறு சித்தரவதைகளுக்கு ஆளாகிய பிலால் (ரழி) அவர்களை விடுதலை செய்ய எண்ணிய அபூபக்கர் (ரழி) அவர்கள், நபி (ஸல்) அவர்களிடம் இவர் அனுபவிக்கும் துன்பம் பற்றி கூறவே அவரை விடுதலை செய்வதற்கு ஏதேனும் வழிகள் உண்டா என அபூபக்கர் (ரழி) அவர்களிடம் கேட்டார்கள். தான் அவரது எஜமானுக்கு பணம்கொடுத்து விடுதலை செய்வதற்கு சம்மதம் தெரிவிக்கவே நபியவர்கள் அதனை ஏற்றுக் கொண்டார்கள். அபூபக்கர் (ரழி) உமைய்யாவிடம் பிலால் (ரழி) அவர்களை விலைக்கு கேட்கிறார்கள். 10 தங்க காசுகளுக்கு பிலால் (ரழி) அவர்களை அபூபக்கர் (ரழி) அவர்களுக்கு உமைய்யா விற்ற போது இவரை நீர் ஒரு தங்கக் காசுக்கு கேட்டிருந்தாலும் நான் விற்றிருப்பேன் எனக் கூறுகிறான். பிலால் (ரழி) அவர்களுக்காக நீ 1000 தங்கக் காசுகள் கேட்டிருந்தாலும் நான் தந்திருப்பேன் என அபூபக்கர் (ரழி) அவர்கள் அவனுக்கு பதில் அளித்தார்கள். பின்னர் பிலால் (ரழி) அவர்களை அபூபக்கர் (ரழி) அவர்கள் விடுதலை செய்தார்கள்.

மதினாவிற்கு இடம் பெயர்ந்த பின், நபி (ஸல்) அவர்களுடன் இருந்த பிலால் (ரழி) அவர்களின் நடைமுறைகள் நபிகளாரைக் கவர்ந்தன. மதீனாப் பள்ளியில் மக்களை தொழுகைக்கு அழைக்கும் அதான் கூறும் பணிக்கு நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரழி)யை நியமிக்கிறார்கள். அபிஷீனிய அடிமைக்கு இத்தனை பெரிய அந்தஸ்த்தா? என இணைவைப்பாளர்கள் எரிச்சலடைந்தனர். இதன் மூலம் இஸ்லாத்தில் முதல் இமாம் நபி (ஸல்) அவர்களும் முதல் முஅத்தீன் பிலால் (ரலி) அவர்களும் என நாம் அறிகிறோம்.

பிலால் (ரழி) பத்ருப் போரில் பங்கெடுத்துக் கொண்ட ஸஹாபிகளில் ஒருவர். அப்போரில் இணைவைப்பாளனான உமைய்யாவை (முன்னாள் எஜமான்) பிலால் (ரழி) அவர்கள் கொன்றார்கள். மக்கா வெற்றி கொள்ளப்பட்டதும் அல்லாஹ்வின் இல்லமான க.்.பாவில் நபி (ஸல்) அவர்களுடன் நுழைந்த மூவரில் பிலால் (ரழி) அவர்களும் ஒருவர். அங்கிருந்த சிலைகளை அப்புறப்படுத்திய பின்னர் முதன் முதலில் பாங்கோசையை முழங்கியவரும் அவரே. நபிகளாரின் மரணத்திற்குப் பின் அவர் மீது கொண்ட அளவு கடந்த பற்றினால் பாங்கு சொல்லும் போது அவர்களுக்கு நபி (ஸல்) அவர்கள் நினைவுக்கு வருவதை

உணர்ந்த பிலால் (ரழி) பாங்கு கூற மறுக்கிறார்கள். தான் சிரியா சென்று ஜிஹாத் செய்யப்போவதாக அபூபக்கர் (ரழி) அர்களிடம் சொல்கிறார்கள். அபூபக்கர் (ரழி) பிலால் (ரழி) அவர்களை பாங்கு கூறுமாறு உத்தரவிடுகிறார்கள். அதற்கு பிலால் (ரழி) அவர்கள் நீர் எம்மை அடிமைத் தளையிலிருந்து விடுவித்தது அல்லாஹ்வின் அருளை நாடியா? அல்லது உம் கட்டளைக்கு கீழ்படிய வேண்டியா? என்று வினவினார்கள். வேறு வழியின்றி அபூபக்கர் (ரழி) அவர்கள் பிலால் (ரழி) அவர்களுக்கு சிரியா செல்ல அனுமதி தந்தார்கள். சிரியாவில் தங்கியிருந்த பிலால் (ரழி) அவர்களை உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் அங்கு சென்ற போது சந்தித்து பாங்கு கூறுமாறு கேட்டுக் கொண்டார்கள். கலீபாவின் வேண்டுகோளை ஏற்ற பிலால் (ரழி) அவர்கள் பாங்கு கூறினார்கள்.

பனுஜுஃஹ்ரா வம்சத்து பெண் ஒருவரையும் ஹிந்துல் கூலானிய்யா என்ற பெண்ணையும் மணமுடித்திருந்த பிலால் (ரழி) அவர்களுக்கு குழந்தைகளேதுமில்லை. 70 ஆவது வயதில் சிரியாவின் தலை நகரான டமஸ்கஸில் மரணமடைந்தார்கள். மி∴ராஜ் சென்று திரும்பிய நபி (ஸல்) அவர்கள் பிலால் (ரழி) அவர்களிடம் சுவனத்தில் உமது காலடி ஓசையை நான் கேட்டேன். நீர் செய்யும் நல்லறம் எது? என வினவியதற்கு நான் எப்பொழுது வுழூஉ செய்தாலும் உடனே 2 ரக்காஅத்கள் தொழும் வழக்கமுடையவனாக இருக்கிறேன் என பதிலளித்தார்கள்.

## ஸைத் பின் ஸாபித் (றழி)

பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சேர்ந்த ஸைத் பின் ஸாபித் அன்ஸார் ஸஹாபியாவார். தனது பதினொராவது வயதில் பெற்றாரை இழந்து அநாதையாக வாழ்ந்தவர். ஸைத் தனது குடும்ப உறுப்பினர்கள் இஸ்லாத்தை ஏற்றபோது இவரும் அவர்களுடன் இணைந்து கொண்டார். முஹம்மத் (ஸல்) அவர்கள் ஸைத் குடும்பத்திற்காக பிரத்தியேமாக துஆச் செய்தார்கள்.

பத்ரு யுத்தத்தில் கலந்துகொள்வதற்கு ஸைத்தின் குடும்பத்தினர் முன்வந்த போது இவரும் அவர்களுடன் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவிக்கவே நபி (ஸல்) அவர்கள் சைத் வயதில் குறைந்தவர்

என்பதனாலும் உடற்பருமன் போதாமையினாலும் இந்த யுத்தத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதிக்கவில்லை. (சர்வதேச யுத்த ஒழங்கு சிறந்த முன்மாதிரியாக ஸைதின் விடயத்தில் நபி (ஸல்) அவர்கள் நடந்துகொண்ட முறையைக் கொள்ளமுடியும்.)

உஹத் யுத்தத்தின் போது ஆறு சிறுவயது கட்டிளமைப் பருவத்தினர் தாமும் கலந்துகொள்ள ஆசைப்படுவதாக தெரிவித்தனர். அவர்களில் ஸைத் பின் ஸாபித்தும் ஒருவராவர். இவ்வேளையிலும், பத்ரு யுத்தத்தின் போது கூறிய அதே பதிலைக் கூறி எதிர்வரும் யுத்தங்களின் போது நிச்சயம் நீங்கள் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவீர்கள் என கூறினார்கள். அதன்படி தபூக் யுத்தத்தில் கலந்தகொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களின் அறிவுப் பின்னணி இஸ்லாத்தின் அறிமுக காலப் பகுதியில் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. அவரது அறிவுத் திறமையின் காரணமாக பத்ரு யுத்தக் கைதிகளில் எழுத வாசிக்க தெரிந்தவர்களின் விடுதலைக்கு நிபந்தனையாக இருந்து மதீனத்து பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கும் பணியை மேற்பார்வை செய்யும் பொறுப்பை இவரிடமே நபி (ஸல்) அவர்கள் ஒப்படைந்திருந்தார்கள். இவர் அறிவுத் துறையில் சிறந்து விளங்கியதோடு அல்குர்ஆன் நபி (ஸல்) அவரக்ளுக்கு இறங்கும் போதெல்லாம் உரியவாறு மனனமிட்டிருந்தார்கள். எல்லாவற்றிலும் மேலாக அல்குர்ஆனை எழுதும் பணியை இவரிடமே நபி (ஸல்) அவர்கள் பொறுப்பாக விட்டிருந்தார்கள். அறபு மொழி தவிர்ந்த பிறமொழிகளையும் கற்றிருந்தார். யூதர்களின் வேதத்தை தெரிந்து கொள்ளவும் அவர்களுக்கு இஸ்லாத்தின் தூதை எத்தி வைக்கவும் ஹிப்ரு மொழியைக் கற்றுக்கொள்ளும்படி நபியவர்கள் பணிப்புரை வழங்கி ஆறு மாதங்கள் முடியுமுன் அம்மொழியைக் கற்றுக் கொண்டார்கள். பின்னர், யூதர்களிடம் வருகின்ற கடிதங்களையும் ஏடுகளையும் நபி (ஸல்) அவர்களுக்கு வாசித்துக் காட்டுவதுடன் அவற்றுக்கான பதில்களையும் எழுதியனுப்பும் அளவுக்கு திறமை பெற்றிருந்தார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்களுக்குச் சுர்யானி மொழி தெரியுமா என நபியவர்கள் கேட்டபோது, தனக்கு அம்மொழி தெரியாது எனக் கூறிய போது அம்மொழியையும் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில், சுர்யானி மொழியிலும் எங்களுக்கு நிறைய கடிதங்கள் வருகின்றன. அவற்றை வாசிக்கவும் பதில் எழுதவும் வேண்டியுள்ளது என கூறியதும்

பதினேழு நாட்களில் அம்மொழியையும் கற்றுக்கொண்டார்கள். ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களின் மொழிப் புலமையின் காரணமாக "தர்ஜுமானுர் ரஸுல் (நபி (ஸல்) அவர்களின் மொழிபெயர்ப்பாளர்) எனும் புனைப் பெயரும் கிடைத்தது.

த.்.வா ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து சுமார் இருபத்தி ஒருவருட காலம் வரை வஹி இறங்கிக் கொண்டிருந்தது. நபியவர்களும் அவற்றை ஓதிக் காட்டிக்கொண்டிருப்பார்கள். அதன் போது ஒரு சிலர் உடனடியாக முடியுமானளவு மனனமிட்டுக் கொள்வார்கள். வேறு சிலர் எழுதி மனனமிடுவர். அவர்களில் அலி பின் அபூதாலிப் (ரழி), உபை பின் க.்.ப் (ரழி), அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி), அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரழி), ஸைத் பின் ஸாபித் ஆகியோர் முக்கியமானவர்கள். வஹி முழுமை பெற்றதும் நபியவர்கள் முஸ்லிம்களுக்கு அத்தியாங்களின் அடிப்படையில் முறையாக ஓதிக்காட்டினார்கள். ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்களும் நபியவர்கள் மரணிக்கும் அதே ஆண்டில் இரு தடவைகள் ஓதிக்காட்டினார்கள். இதற்கு ஸைத் பின் ஸாபித் (ரழி) யின் கிராஅத் முறை என பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில், நபியவர்களுக்காக அல்குர்ஆனை எழுதி பின்னர் அவர்களிடமே ஒப்புவித்தார்கள். நபியவர்கள் மரணிக்கும் வரை இம்முறையை மக்கள் பாராயணம் செய்து வந்தனர்.

நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னர் மதம் மாறியோருக்கு எதிரான போராட்டத்தில் முஸ்லிம்கள் பங்கேற்க வேண்டியிருந்தது போலவே யமாமா யுத்தத்தில் பல எண்ணிக்கையிலான குர்ஆனை மனனமிட்டிருந்த ஸஹாபாக்களை முஸ்லிம் உம்மத் இழக்க வேண்டியிருந்தது. இதனைக் கவனமாகத் தூர நோக்குடன் உமர் (ரழி) அவர்கள் பார்க்கலானார். எதிர்காலத்தில் அல்குர்ஆனுக்கே பெரும் ஆபத்து வந்தவிடும் என அஞ்சி கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து அல்குர்ஆனை நூல்வடிவுக்கு கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை எடுத்துக்கூறினார். முதலில், இவ்வேலையை ஏற்க மறுத்த கலீபா பின்னர் உடன்பாட்டிற்கு வந்தார். இப்பணியை மேற்கொள்வதற்கு பொருத்தமானவர். இளந்துடிப்புள்ள விவேகமிக்க ஸைத் பின் ஸாபித் ஆவார் என பலரது ஆலோசனையின் முடிவாக ஸைத் இடம் ஒப்படைக்கப்பட்து.

மிகவும் பொறுப்புவாய்ந்த இப்பணியை முன்னெடுப்பத்தில் ஸைத் பின் ஸாபித் மலைத்துப் போய்விட்டார். “பெரும் மலை ஒன்றை அதன் இடத்திலிருந்து பிறிதொரு இடத்திற்கு நகர்த்துமாறு கூறியிருப்பார் களாயின் இப்பணியைவிட இலகுவானதாக இருந்திருக்கும்” என குறிப்பிட்டார்கள். எனினும், மன உறுதியுடன் அல்லாஹ்வின் உதவியுடன் இப்பணியை வெற்றிகரமாக முன்னெடுத்தார்கள். மக்களின் உள்ளங்களில் பதிந்து வைத்தள்ள வசனங்கள் ஏடுகளிலும், பட்டைகளிலும், தோல்களிலும் எழுதப்பட்டவைகளை ஒப்புநோக்கி முழு வடிவிலான முஸ்ஹப் ஒன்றினை தொகுத்தார்கள். இத்தொகுப்பு ஹப்ஸா (ரழி) அவர்களின் வீட்டில் வைத்து பாதுகாக்கப்பட்டு வந்தது.

கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலப் பிரிவில் இஸ்லாமிய கிலாபத் விரிவடைந்து காணப்பட்டதால் அறபு மொழிப் பிரயோகமும் நாட்டுக்கு நாடு வித்தியாசப்பட்டது. எனவே அல்குர்ஆன் ஓதும் முறையும் வித்தியாசமான ஒழுங்கில் காணப்பட்டது. இது அல்குர்ஆனின் தனித்துவத்தை இழக்கச் செய்துவிடும் எனவும். அவர்களின் கரங்களில் இருக்கும் பிரதிகளை கலீபாவிடம் ஒப்படைக்கும்படியும் கூறி ஒழுங்கு முறையிலான பிரதியை வழங்குவது கட்டாயமானது என்ற கருத்தை ஹுஸைபதுல் யமானி (ரழி) அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கேற்ப ஹப்ஸா (ரழி) அவர்களின் வீட்டிலிருந்து முஸ்ஹபைக் கொண்டு பிரதிகள் செய்வதற்கான பணியை ஸைத் பின் ஸாபித், ஸஈத் பின் ஆஸ் ஆகிய இருவரிடமும் ஒப்படைக்கப்பட்டது. ஸைத் பிரதி செய்தார் ஸஈத் உச்சாடங்களைச் செவ்வை செய்தார். இப்பணியைப் பூரணமாக முடித்து பெரியதோர் பிரச்சினையிலிருந்து முஸ்லிம் சமூகத்தைக் காப்பதில் பங்கேற்ற சிறந்த மனிதர் என அன்று வாழ்ந்த பல நபித்தோழர்கள் இவரை கௌரவித்தனர்.

அல்குர்ஆனை பிரதி செய்கின்ற பணி முடிந்ததும் மதீனாவை விட்டும் வெளியேறி பிறிதோர் பிரதேசத்தில் வாழ்வதற்கு விரும்பினார். இத்தகைய முடிவொன்றுக்கு வருவதற்கு உஸ்மான் (ரழி) அவர்களின் ஆட்சியின்போது ஏற்பட்ட அரசியல் பிரச்சினை காரணமாகும். இதைக் கேள்வியுற்ற இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் நாட்டிலிருந்து

வெளியேறுவதைத் தடுக்க முற்பட்ட போது நீங்களும் என்னைப் போகவிடாது தடுக்கின்றீர்களா எனக் கேட்ட போது நான் உங்களைத் தடுக்கவில்லை. ஆனால், எங்களைப் போன்ற அறிவு முதிர்வு கொண்டவர்கள் வெளியேறுவதை நான் விரும்பவில்லை என்றார். பின்னர் தனது முடிவை சிறிது காலம் வரை ஒத்திவைத்தார்.

அபூஸஈத் அல்குத்ரி (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது நபியவர்கள் மரணித்த வேளையில் ஸகீபது பனூ ஸாஈதாவில் முஹாஜிர்கள் மற்றும் அனஸாரிகள் கூடி அடுத்த தலைமைத்துவம் பற்றி கலந்துரையாடிய வேளையில், அன்ஸார்களில் ஒருவர் எழும்பி நபியவர்களுடன் மிகவும் நெருங்கி வாழ்ந்தவர்களை அடிப்படையாகக் கொண்டு தலைமையைத் தெரிவு செய்வோம் என ஆலோசனை வழங்கினார். அப்பொழுது ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் உடனடியாக எழுந்து நபியவர்கள் முஹாஜிரீன்களில் ஒருவர் எனவே எமது தலைவரும் முஹாஜிரீன் களிலிருந்துதான் தெரிவு செய்யப்பட வேண்டும். நாம் நபியவர்களுக்கு எப்படி உதவியாளராக இரந்தோமோ அதுபோலவே புதிய தலைவருக்கும் உதவியாளராக இருப்போம். அப்போது அபூபக்கர் (ரழி) அவர்கள் எழுந்து அன்ஸாரிகளுக்கு அல்லாஹ் நற்கூலியை தருவானாக. இக்கருத்தை முன்வைத்த ஸைத் பின் ஸாபிதின் பாதங்களை ஸ்திரப்படுத்துவானாக என பிரார்த்தித்துவிட்டு இக்கருத்துக்கு புறம்பாக வேறு ஒரு கருத்தை நீங்கள் முன்வைப்பீர்களாயின் நாம் உங்களுடன் உடன்படமாட்டோம் எனக் கூறி முடிப்பதற்குள் ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் அபூபக்கர் (ரழி) அவர்களின் கருத்தைப் பற்றிப் பிடித்தவாறு இவர்தான் உங்களின் தோழர். இவருக்கு நீங்கள் பைஅத் செய்யுங்கள் என முதலில் அவர் பைஅத் செய்யவே தொடர்ந்து ஏனையோரும் பைஅத் செய்து மிக முக்கியமான கட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் இருப்பை உறுதிப்படுத்திய மகிமை இவருக்கேயுண்டு. ஸைத் பின் ஸாபித் (ரழி) அவரக்ள் ஹிஜ்ரி 45 ஆம் ஆண்டு முஆவியா (ரழி) அவர்களின் ஆட்சியின் போது மரணமானார். இவரது மரணச் செய்தி கேட்டு கவிஞர் ஹஸ்ஸான் தனது இரங்கல் உரையின் போது “ஹஸ்ஸானுக்கும் தன் மகனுக்கு பின் கவிப்புலமைக்கு யார் இருப்பர் (அதுபோல்) ஸைத் பின் ஸாபித்துக்குப் பின் அறிவுப் புலமைக்கு யார் இருப்பர்.” எனப் பாடினார்.

**துல்பிஜாதைன்**

அப்துல்லாஹ் துல்பிஜாதைன் தந்தையில்லாத அநாதை சிறுவனாவார். அவருக்கென்று எந்தச் சொத்தும் கிடையாது. தந்தை மரணித்தபோது எதனையும் வாரிசுச் சொத்தாக விட்டுச்சென்றிருக்கவில்லை. அவரை அவரது சிறிய தந்தை பராமரித்து வந்தார். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்து சேர்ந்த போது இவருக்குள் இஸ்லாம் உயிர்வாழ்ந்து கொண்டிருந்தது. இருப்பினும், சிறிய தந்தையின் பராமரிப்பும் அவரது இறுக்கமான போக்கும் இவரினுள் இருக்கும் இஸ்லாத்தை நீண்டகாலமாக மறைத்து வைத்திருக்கச் செய்தது.

ஒரு நாள் “சிறிய தந்தையே நீங்கள் இஸ்லாத்தை ஏற்றால் என்ன? நீங்கள் முஹம்மதை விரும்பமாட்டீர்கள் என்பதும் எனக்கு தெரியும். எனக்காவது இஸ்லாத்துடன் வாழ்வதற்கு அனுமதியுங்களேன்” எனக் கேட்டார். அதற்கு அவர் “அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீ முஹம்மதை பின்பற்றினால் நான் உனக்கு கொடுத்த எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டுதான் உன்னை துரத்துவேன். நீ உடுத்திருக்கும் உடுப்பையும் களற்றிக் கொண்டுதான் அனுப்புவேன் என்றார். அதற்கு துல்பிஜாதைன் “உண்மையிலேயே நான் முஹம்மதின் கொள்கையை பின்பற்றுகின்றவன்தான். கற்களை வணங்குவதை விரும்பாதவனும்தான் இதோ என்னிடம் இருப்பவைகளை எடுத்துக் கொள்ளுங்கள்” என்று இளமைத்துடிப்புடன் கூறினார். சிறிய தந்தை, தான் கொடுத்தவைகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டார். ஏன் அவர் உடுத்திருந்த ஆடைகளையும் களைந்தெடுத்துக் கொண்டார். அவரது தாய் ஓடோடி வந்து தனது இருதுண்டுகளை கிழித்து சாரமாகவும் மேலாடையாகவும் சுற்றிக் கொள்ளும்படி அழுதவளாக கொடுக்கிறாள். இவர் அதனை அணிந்த அதே நிலையில் மதீனாவை நோக்கி இரவோடு இரவாக சென்று பள்ளிவாயலின் வாராந்தாவில் ஒருக்கணித்து உறங்கிக் கொண்டிருந்தார். சுபஹ் தொழுகைக்காக நபி (ஸல்) அவர்கள் ஸப்புகளை ஒழுங்குபடுத்தும் போது நீங்கள் தான் அந்த இருதுண்டு புடைவைகளை உடையாக அணிந்து வந்தவரா (துல்பிஜாதைன்) என கேட்டு அறிமுகமாகிக் கொண்டார்.

சுபஹ் தொழுகையின் பின்னர் அவரை அருகில் அமர்த்திக் கொண்டார். அவர் அதிகமான அல்குர்ஆன் வசனங்களை மனனம் செய்த இளைஞராக காணப்பட்டார். தபூக் யுத்தத்தில் கலந்து கொண்ட

போது இந்த யுத்தத்தில் ஷஹீதாக்கப்படுதற்கு பிரார்த்திருக்குமாறு நபி (ஸல்) அவர்களிடம் கேட்டுக்கொண்டார். இப்பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டதால் அப்போரில் அவர்கள் ஷஹீதானார்கள். அவரது ஜனாஸாவை நபிகளார் (ஸல்) அவர்களும் அபூபக்ர் (றழி), உமர் (றழி) ஆகிய மூவரும் நல்லடக்கம் செய்தனர். நபி (ஸல்) அவர்களிடம் கேட்டுக்கொண்டார். இப்பிரார்த்தனை அங்கீகரிக்கப்பட்டதால் அப்போரில் அவர்கள் ஷஹீதானார்கள்" அவரது ஜனாஸாவை நபிகளார் (ஸல்) அவர்களும் அபூபக்கர் (றழி), உமர் (றழி) ஆகிய மூவரும் நல்லடக்கம் செய்தனர்.

இளம் துடிப்புமிக்க இந்நபித் தோழர்கள் இஸ்லாம் வாழவேண்டும் என்பதற்காக குடும்பம், பொருளாதாரம், நோய், சோர்வு என எதனையும் பார்க்காது தமது உயிரை அர்ப்பணமாக்கினார் என்ற தகவலை நாம் முன்மாதிரியாகக் கொள்வோம்.

## உம்மு அம்மாரா (ரழி)

பனூநஜ்ஜார் என்னும் அன்சாரிக் குடும்பத்தைச் சேர்ந்த நுஸைபா பின்த் கஅப் (ரழி) எனும் பெண்மணியே உம்மு அம்மாரா என்று அழைக்கப்படுகின்றார். அவருடைய குடும்பத்தினருக்கு மட்டுமே அவரைப் பற்றித் தெரியும் எனும் நிலை மாறி அவருடைய வீரமும் தியாகமும் எழுச்சி மிக்க வரலாறும் எங்கும் பேசப்படலாயின.

இரண்டாம் அகபா உடன்படிக்கையில் கலந்து கொண்ட இரு பெண்மணிகளில் இவரும் ஒருவராவார்.

இந்த இரண்டாவது உடன்படிக்கையில் தான் உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களை முதன் முறையாகச் சந்தித்தார்கள். அது தான் அவருடைய புகழ் மிக்க வரலாற்றுக்குத் தோற்றுவாயாக அமைந்தது.

இந்த உடன்படிக்கையில் தான் இறைச் செய்தியைச் செவியேற்பதற்கும் கீழ்ப்படிவதற்கும் - அவ்வழியில் போராடுவதற்கும் தம் குலத்தாருடன் உம்மு அம்மாராவும் அண்ணலாரிடம் உறுதி மொழியளித்தார்கள். அண்ணலாருக்கு எதிரிகள் எவ்விதக் கேடும் அளித்திடாமல் பாதுகாப்போம் என்றும் அண்ணலாரின் அழைப்புப் பணி வெற்றி பெறப் போராடுவோம் என்றும் அவர்களுடன் போர் புரிய வருபவர்கள் யாராக இருந்தாலும் தம் உயிரையும் உடைமைகளையும் தியாகம் செய்தேனும் அவர்களை எதிர்த்துப் போர் புரிவோம் என்றும் சபதம் ஏற்றார்கள்.

உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் உள்ளத்தில் வாய்மையான ஈமானும் கொள்கைப்பிடிப்பும் இடம்பிடித்துக்கொண்டன. தமது உள்ளம் ஏற்றிருந்த இறை நம்பிக்கையை அவர்கள் மிகச் சரியாக மதிப்பிட்டிருந்தார்கள். இஸ்லாம் என்னென்ன கடமைகளை கீழ்ப்படிதல்களை தியாகங்களை நாடுகின்றது என்பதைச் சரியாகப் புரிந்திருந்தார்கள். அதனால் தான், உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் இறைவன் அவர்கள் மீது சுமத்தியிருந்த பொறுப்பை உறுதியோடும் திடத்துடனும் ஏற்றிட அவர்களால் முடிந்தது. தமது ஈமானியக் கொள்கையைக் காப்பாற்றுவதற்காக தொய்வில்லாத உறுதியான போராட்டத்தை மேற்கொள்ளும் வகையில் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டார்கள்.

மதீனாவுக்குத் திரும்பிச் சென்று தமது குடும்பத்தார்களையும் மதீனத்துப் பெண்களையும் சந்தித்து அவரக்ளை ஏகத்துவக் கொள்கையின் பக்கம் அழைக்கவும். அது பற்றி நற்செய்தி அறிவிக்கவும் ஆயத்தமானார்கள் !

உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் புதிய உள்ளத்தோடும் உணர்வோடும் தம் குழுவினருடன் மதீனாவுக்குத் திரும்பினார்கள். அவருடைய உள்ளத்தில் இறைமார்க்கத்தின் பற்றும் ஆழமான ஈமானும் நிறைந்திருந்தன. இரண்டாவது உடன்படிக்கைகளுக்குப் பிறகு அவரும் அவருடைய குழுவினரும் ஆற்ற வேண்டிய பணிகளோ அதிகப்பளு கொண்டவை ! இறைமார்க்கத்தை நன்கு ஆழமாக அறிவது. அதனைப் பரப்புவதற்கும் அதன் பக்கம் பிற மக்களை அழைப்பதற்கும் அரங்கத்திலும் அந்தரங்கத்திலும் வாய்மையுடன் உழைப்பது ஆகியவை தான் அப்பணிகள்.

மதீனத்துப் பெண்களிலேயே உம்மு அம்மாராவுக்குத் தான் அளவிலா மகிழ்ச்சியைக் கொடுத்தது ! அண்ணலாரை வரவேற்பதற்காக அவருடன் அவருடைய தோழியர்களும் அவரின் மூலம் இஸ்லாத்தைத் தழுவிய அண்டை வீட்டுப் பெண்களும் பெருந்திரளாய் வந்திருந்தார்கள். அனைவரின் உள்ளங்களிலும் முகங்களிலும் பேரானந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது!

அண்ணல் நபி (ஸல்) அவர்களின் அவையில் ஆஜராகி அவர்களின் அருள் மொழிகளைக் கேட்டு அறிவுரை பெறுவதில் உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் அதிக ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

இஸ்லாமிய மார்க்கத்தில் பெண்களுக்கு நீதியும் நேர்மையும் சமத்துவமும் இருப்பதைக் காண்கிறார். அதனை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையில் ஒருமுறை அண்ணல் நபி (ஸல்) அவர்களிடம் இவ்வாறு கேட்டனர்.

அனைத்திலும் ஆண்களுக்குத் தானே உரிமையுள்ளது. பெண்களுக்கு எந்த உரிமையும் இருப்பதாகத் தெரியவில்லையே !

பெண்கள் ஆண்களுக்குச் சமமானவர்கள் எனும் உண்மை இறைவாக்கிலும் கட்டளையிலும் அதிகாரபூர்வமாக இடம்பெற வேண்டும் என்பது உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் விருப்பம்.

அவருடைய விருப்பத்திற்கு பதிலளிக்கும் வகையில் இறைவசனம் இறங்கியது. “நிச்சயமாக முஸ்லிம்களான ஆண்களும், பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும், பெண்களும், இறைவனுக்கு வழிபடும் ஆண்களும், பெண்களும், உண்மையே பேசும் ஆண்களும், பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும், பெண்களும், உள்ளச்சமுள்ள ஆண்களும், பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், பெண்களும், தங்கள் வெட்கஸ் தலங்களை (கற்பை) காத்துக்கொள்ளும் ஆண்களும், பெண்களும், அல்லாஹ்வை அதிகமாக நினைவு கூறும் ஆண்களும், பெண்களும் ஆகிய இவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும் மகத்தான நற்கூலியையும் தயார் செய்து வைத்துள்ளான். (33 : 35)

இஸ்லாத்தில் உம்மு அம்மாரா (ரழி) அவர்களைக் கவர்ந்த சிறப்பம்சம் மகளிருக்கு உரிமையும் மரியாதையும் கிடைத்தது என்பது மட்டுமல்ல. ஜிஹாத் - இறைவழியில் போர் புரியுமாறு இறைக்கட்டளை பிறப்பிக்கப்பட்டு, அந்தப் போரில் தாமும் கலந்து கொள்ள முடியும் என்பதை உம்மு அம்மாரா (ரழி) அறிந்த போது தான் அவரின் உள்ளத்தில் முழுமையான பேரானந்தம் பொங்கியது. அறப் போரில் பெண்களும் கலந்த கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு கலந்துகொள்வதன் மூலம் போரில் ஆண்களுக்கு ஏற்படுகின்ற சிரமத்தையும் பளுவையும் குறைக்க முடியும். குறைக்க வேண்டும் என்றும் உறுதியாக உணர்ந்தார்.

உஹது யுத்தத்தை உம்மு அம்மாரா (ரழி) தம் வாழ்நாளில் கிடைத்த அரியதொரு சந்தர்ப்பமாக கருதி, தண்ணீர் நிரம்பிய தோல் பையை சுமந்து கொண்டு போரில் கலந்திடப் புறப்பட்டார்கள்.

உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் தொடக்கத்தில் எதிரிகளுடன் மோதி, வெற்றியை உறுதிப்படுத்திய முன்னணிப் படையில் இருந்தார்கள். அவர்களுக்கு உதவியாகச் சென்றார்கள். முஸ்லிம் வீரர்களின் திகிலூட்டும் தாக்குதல்களை சமாளிக்க முடியாமல் குறைசிகள் ஆயுதங்கள், பொருள்களையெல்லாம் அவ்வவ்விடத்திலேயே போட்டு விட்டு ஓடலாயினர். எனினும், கணவாயில் காவலில் இருந்த வீரர்கள் விட்ட தவறின் காரணமாக முஸ்லிம்கள் பெற்ற வெற்றி தலைகீழாக மாறியது. முஸ்லிம் வீரர்கள் சிதறினர். இதனால், நபிகளார் பயங்கரமானதோர் ஆபத்தை எதிர்நோக்கினார்கள்.

இத்தகைய அபாயகரமான கட்டத்தில் - துன்பமிகு சூழ்நிலையில் இஸ்லாத்தையும் இறைத்தூதரையும் பாதுகாப்பதற்காக நிலைகுலை யாமல் இருந்தவர்கள் மிகச்சிலரே, அவர்களே உறுதிகுலையாமல் அண்ணல் நபி (ஸல்) அவர்களைச் சூழ்ந்து நின்று போரிட்டார்கள்! அவர்களின் முன்னிலையில் இருவர் இருந்தனர். ஒருவர் அபூ துஜானா (ரழி) எனும் மாவீரர்! அவர் குறைசிகள் வீசும் அம்புகள் கோமான் நபி (ஸல்) அவர்களின் பூமேனியைத் துளைத்து விடாதவாறு தனது மேனியைக் கேடயமாகக் காட்டிக் கொண்டு பாதுகாத்து நின்றார்! மற்றொருவர் தான் வரலாற்றுப் புகழ் பெற்ற - மாவீரம் கொண்ட பெண்மணி உம்மு அம்மாரா (ரழி) அவர்கள்! அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பெண்மணியும் எதிரிகளின் அம்புகளை எதிர்நோக்கி நின்று கொண்டு முடிந்தவரையில் அண்ணலாருக்குப் பாதுகாப்பு அரணாய் விளங்கினார்கள். வாளை எடுத்துச் சுழற்றியும் நபியவர்களைக் காப்பாற்றினார்கள்!

உஹதுப் போரில் தாம் கலந்து கொண்டது பற்றி உம்மு அம்மாரா (ரழி) அளித்த விளக்கத்தை இப்னு ஹிஷாம் அவர்கள் தமது ஸீறாவில் எழுதியுள்ளார்கள். அதில் உம்மு அம்மாரா (ரழி) கூறுகின்றார். "எதிரிகளின் குதிரைப் படையினர் எங்களைப் போன்று அவர்களும் வாகனமின்றி வந்திருந்தால் அல்லாஹ்வின் உதவியால் அவர்களை ஒரு கை பார்த்திருப்போம்! ஒருவன் குதிரை மீது வந்து என்னைத் தாக்கினான். நான் கேடயத்தின் மூலம் அவனது தாக்கு தலிலிருந்து என்னைத் தற்காத்தேன். அவன் தனது வாளால் எதையும் சாதிக்க முடியாமல் திரும்பினான். அப்போது அவனது குதிரையின் குதிக்காலை வெட்டினேன். குதிரை கீழே விழுந்தது. உடனே நபி (ஸல்) என்னுடைய மகனை அழைத்து அப்துல்லாஹ்வே உன்னுடைய தாயைப் பார். உனது தாயைப் பார் என்று சப்த மிட்டார்கள். என்னுடைய மகன் வந்து எனக்கு உதவினார்."

உம்மு அம்மாரா (ரழி) அவர்களைப் பற்றி இப்னு ஹிஷாம் (ரஹ்) கூறுகின்றார்கள். உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் போரிட்டுக் கொண்டும் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டும் தண்ணீர் புகட்டிக் கொண்டும் இருந்தார்கள். ஒரு கட்டத்தில் அவருடைய மகனார் அப்துல்லாஹ் இப்னு ஜைத் (ரழி) தாக்குதலுக்குள்ளாகி காயம் அடைந்தார். ஆனால் உம்மு அம்மாராவோ தன் மகனைக் கண்டு கொள்ளாமல் எதிரிகளுடன் போரிடுவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

இறுதியில் நபி (ஸல்) அவர்கள் அப்துல்லாஹ்வை அழைத்து உமது காயத்திற்கு நீரே மருந்து கட்டிக் கொள்வீராக" என்று கூறிய போது தான் தன்னுடைய மகன் காயமடைந்திருப்பதை உம்மு அம்மாரா (ரழி) உணர்ந்தார்கள். உடனே அவர் அருகில் சென்று, அவருடைய காலில் மருந்து வைத்துக் கட்டினார். பிறகு தனது மகனை நோக்கிக் கூறினார்: மகனே, எழுந்து சென்று இறுதிவரை போராடு !"

உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் தியாகச் செயலைப் பார்த்துக்கொண்டிருந்த நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் உம்மு அம்மாராவே ! உமக்குள்ள ஆற்றல் யாருக்குத் தான் வரும்?"

சிறிது நேரத்தில் அவருடைய மகன் அப்துல்லாஹ்வைக் காயப் படுத்தியவன் மீண்டும் தாக்குதல் தொடுக்க வந்து கொண்டிருந்தான். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் : உம்மு அம்மாராவே. இவன் தான் உன்னுடைய மகனைக் காயப்படுத்தியவன். பிடித்துக்கொள்."

உடனே, உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் கோபாவேசத்துடன் அவன் பக்கம் பாய்ந்து சென்று வாள் கொண்டு அவனது முழங்காலைத் தாக்கினார்கள். அவன் இரு துண்டாகிக் கீழே சாய்ந்தான். அதனைப் பார்த்துக்கொண்டிருந்த நபியவர்கள் உம்மு அம்மாராவே. உன்னுடைய மகன் தாக்கப்பட்டதற்கு பழி வாங்கி விட்டீர்"என்று புன்முறுவலுடன் கூறினார்கள்.

போர் நடந்து கொண்டிருந்த போது ஒரு அயோக்கியன் தூரத்தி லிருந்து பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி கல்லெறிந்தான். அக்கல் நபியவர்களின் இரு பற்களை உடைத்து விட்டது. இறைத் தூதர் பதற்றத்துடன் அந்தப் பக்கமாகத் திரும்பினார்கள். அப்போது இப்னு கமிஆ என்பவன் நபியவர்களை நோக்கி விரைந்து வந்து வாள் கொண்டு தாக்கினான். நபியவர்கள் இரும்புத் தொப்பி அணிந்திருந்தார்கள். அதனுடைய இரு வளையங்கள் தெறித்து வந்து அவர்களின் புனித முகத்தில் குத்தி நிற்க இரத்தம் பீறிட்டு ஓடியது ! ஒரு கணப்பொழுதில் இப்படியெல்லாம் நடந்துவிட்டன !

உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் பதறிப் போய் விட்டார்கள். முன்னேறிச் சென்று இப்னு கமிஆவைத் தடுத்தார்கள். குறைஷிக் குலத்தைச் சார்ந்த அவன் குதிரை சவாரியில் திறமையானவன் !

உம்மு அம்மாரா (ரழி) அவர்களும் சளைத்தவர்கள் அல்லவே ! சிம்ம இதயம் கொண்ட அவர்கள் மிகவும் துணிச்சலுடன் அவனைத் தாக்கினார்கள். அவன் இரண்டு கவசங்களை அணிந்திருந்தான் ஆதலால் உம்மு அம்மாராவின் வாள் ஒடிந்து விட்டது. அதனால் பதில் தாக்குதல் தொடுக்க இப்னு கமிஆவுக்கு சந்தர்ப்பம் கிடைத்து விட்டது. அவனது தாக்குதலால் உம்மு அம்மாராவின் தோளில் கடுமையான வெட்டுக் காயம் ஏற்பட்டது. இப்னு கமிஆவும் அங்கு நிற்கத் துணிவில்லாமல் வேகமாகக் குதிரையை முடுக்கிக் கொண்டு ஓடிவிட்டான்.

தோளில் பட்ட காயத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்துக் கொண்டிருந்தது ! இந்த நிலையில் உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் தம் பாதங்களை மெதுவாக எடுத்து வைத்து மெல்ல மெல்லச் சென்று அன்பிற்குரிய அண்ணல் நபி (ஸல்) அவர்களின் பாதங்கள் அருகே வந்து நின்றன!

அல்லாஹ்வின் தூதரே! எனக்காக துஆ செய்யுங்கள் ! நான் மரணமான பிறகு மறுமையில் எழுப்பப்படும் போது என்னுடைய இந்த உடல் அருள்மிகு இப்பாதங்களின் அருகிலே தான் எழுப்பப்பட வேண்டும்.” என வேண்டிக் கொண்டார்கள்.

உடனே கருணை நபி (ஸல்) உம்மு அம்மாராவுக்காக இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள் : இறைவா ! இவர்கள் அனைவரையும் சுவனத்தில் என்னுடன் இருப்பவர்களாய் ஆக்கி அருள்வாயாக!”

இதனைக் கேட்ட உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். அவர்கள் அறியாமலேயே அவர்களின் நாவு இப்போது இந்த உலகில் என்ன துன்பம் நேர்ந்தாலும் பரவாயில்லை என்று உச்சரித்தது !

நபி (ஸல்) அவர்களே உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் காயத்தில் மருந்து வைத்துக்கட்டிய வண்ணம் வீரமிக்க நபித்தோழர்கள் பலரை வரிசையாகச் சொல்லி இன்று இவர்கள் அனைவரை விடவும் உம்மு அம்மாரா அதிக வீரத்தைக் காட்டினார்கள்”என்று கூறினார்கள். உஹதின் வீராங்கனை” என்று வரலாறு இன்றும் அவரைப் புகழ்ந்து கொண்டிருக்கின்றது !

இறைவழியில் போர் செய்யும் இஸ்லாமியப் படையில் சேராமல் இருப்பதை உம்மு அம்மாரா (ரழி) எப்போதும் விரும்பியதில்லை. ஜிஹாதுக்கான எந்தச் சந்தர்ப்பத்தையும் அவர் நழுவவிட்டது கிடையாது. இவர்கள் ஹிஜ்ரி 11 இல் முஸைலமாவுக்கெதிராக நடைபெற்ற யுத்தத்திலும் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது அளவுகடந்த மரியாதையும் பாசமும் கொண்டிருந்தார்கள். நபியவர்களுக்காக தம் உயிரையும் தியாகம் செய்ய எப்பொழுதும் தயாராய் இருந்தார்கள். நபியவர்களும் உம்மு அம்மாரா (ரழி) மீது அதிகப் பரிவு கொண்டிந்தார்கள். இடையிடையே அவர்களின் இல்லம் சென்று நலம் விசாரிப்பார்கள் !

நபியர்வகளுக்குப் பிறகு கலீபா அபூபக்கர் (ரழி) அவர்களும் இடையிடையே உம்மு அம்மாரா (ரழி) அவர்களின் இல்லம் சென்று அவர்களின் நலம் விசாரித்து வருவது உண்டு.

உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக் காலத்திலும் உம்மு அம்மாரா (ரழி) உயிருடன் இருந்தார்கள் என்று நம்பகமான அறிவிப்பு கூறுகின்றது. முதுமையை அடைந்திருந்த அவர்களுக்கு உமர் (ரழி) அவர்கள் அதிக அளவு மரியாதை செலுத்தி வந்துள்ளார்கள்.

ஒரு முறை போரில் கைப்பற்றப்பட்ட பொருள்கள் மதீனாவுக்குக் கொண்டு வரப்பட்டன. விலை உயர்ந்த சேலைகள் இருந்தன. அவற்றில் பொன்னிழை கலந்து நெய்யப்பட்ட மிக மிக விலையுயர்ந்த இரு பட்டுப் புடவைகளும் அடங்கும் !

வந்த பொருள்களைப் பங்கிடும் போது கலீபா உமர் (ரழி) அவர்கள் அவையோரை நோக்கிக் கேட்டார்கள். “இந்த இரு பட்டுச் சேலைகளுக்கு மிகவும் அருகதையுடையவர் யார்?”

சிலர் சொன்னார்கள். “உங்கள் மகனார் அப்துல்லாஹ்வின் மனைவிக்கு கொடுங்கள்” (அப்துல்லாஹ் (ரழி) கலீபாவின் மகன் என்பதற்காக இவ்வாறு கூறப்படவில்லை. அவர் பல போர்களில் பங்கு

பெற்ற முக்கியமான நபித்தோழர். இறையச்சம் உடையவர் என்பதால் தான் இவ்வாறு கூறப்பட்டது என்பதை கவனத்தில் கொள்ளவும்.)

உமர் (ரழி) கூறினார்கள். இல்லை. இல்லை ! இவற்றை உம்மு அம்மாராவுக்குத் தான் கொடுப்பேன். அவர்தான் இவற்றிற்கு அதிகத் தகுதியானவர். ஏனெனில், உஹதுப் போருக்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் உம்மு அம்மாராவின் வீரம் குறித்து இவ்வாறு கூறக் கேட்டுள்ளேன். "உஹதுப் போரில் வலது பக்கம், இடது பக்கம் எங்கு நோக்கினும் உம்மு அம்மாராவே போரிட்டுக் கொண்டிருப்பதை நான் கண்டேன்."

அன்றைய கலீபா உமர் (ரழி) அவர்கள் இவ்வாறு கூறிவிட்டு - அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நினைவுகளை தம் உள்ளத்தில் பசுமையாக்கிய வண்ணம் மதீனமா நகரத்தின் ஓர் இல்லத்தில் வசித்து வந்த உம்மு அம்மாரா (ரழி) அவர்களுக்கு அச்சேலைகளை அனுப்பி வைத்தார்கள்.

தம்முடைய சிறிய தந்தையின் மகனார் ஜைத் இப்னு ஆஸிம் என்பவரை மணம் முடித்திருந்தார்கள். அவர்களின் மூலம் அப்துல்லாஹ் (ரழி), ஹபீப் (ரழி) எனும் இரு ஆண்மக்களைப் பெற்றெடுத்தார்கள். ஜைத் இறந்த பிறகு அரபா இப்னு அம்ர் (ரழி) என்பவருக்கு மணம் முடித்து வைக்கப்பட்டார்கள். இவருடன் வாழ்ந்து தமீம் என்று ஒரு பெண் குழந்தையையும் பெற்றார்கள் !

உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் மேற்கொண்ட மகத்தான வீரச் செயல்களின் மூலம் பெண் குலத்தின் மதிப்பு உயர்ந்துள்ளது. போர் வலிமையும் ஆற்றலும் மிக்க ஆண்களை விட வீரத்திலும், தியாகத்திலும் தாம் எந்த வகையிலும் குறைந்தவர் அல்லர் என்பதை உம்மு அம்மாரா (ரழி) அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள்.

இஸ்லாத்துக்காகவும் முஸ்லிம்களுக்காகவும் அவர்கள் ஆற்றிய நற்சேவைகளுக்காக அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவானாக.

## அஸ்மா பின்த் அபூபக்கர் (ரழி)

ஹிஜ்ரத்துக்கு 27 வருடங்களுக்கு முன்பு மக்காவில் பிறந்த அஸ்மா (ரழி) அவர்களுக்கு அப்துல்லாஹ் என்றொரு சகோதரரும், ஆயிஷா எனும் சகோதரியும் இருந்தனர்.

இவர் இஸ்லாம் அறிமுகமான காலம் முதல் அதன் சூழலிலேயே வாழ்ந்த ஒரு பெண்மணியாவார். அஸ்மா இஸ்லாத்தினுள் 18 ஆவது நபராக தனது பதினைந்தாவது வயதில் காலடியெடுத்து வைத்து நபி (ஸல்) அவர்களுக்கு விசுவாசப் பிரமாணம் (பைஅத்) செய்தார். இஸ்லாத்தின் பெறுமானங்களை தன்னுள் ஆழமாக பதிந்து கொண்டாள். சகிப்புத் தன்மை, தாராண்மைக்குணம், தந்தையின் த.்.வாவுக்கு உதவும் மனப்பாங்கு என்பன அவரினுள் இழையோடியிருந்தன.

மதிநுட்பமும், விவேகமும் செயல்திறன்மிக்க மனப்பாங்கும் அவரிடம் காணப்படும் சிறப்பியல்புகளில் பிரதானமானவை.

சுவர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட சுபைர் பின் அவாம் (ரழி) அவர்களைத் தனது கணவராக தெரிவு செய்து இஸ்லாமிய ஆளுமைப் பண்புகளைக் கொண்ட சிறந்த குடும்பம் ஒன்றினை கட்டியெழுப்பினார். சுபைர் பின் அவாம் (ரழி) திருமணம் முடிக்கும் போது அவரிடம் ஒரு குடிசை வீடும், ஒரு குதிரையும் மட்டுமே இருந்துள்ளன. அவரைத் தன் கணவராகத் தெரிவு செய்து அவருக்கு பணிவிடை செய்து திருப்திகரமான வாழ்க்கை நடத்திய அஸ்மா (ரழி) வீட்டின் வேலைகளில் எவ்வித குறைபாடுகளையும் வைக்கவில்லை. மிகுதியான நேரங்களை பக்கத்துச் சூழலில் வாழும் மக்களுக்கு இஸ்லாத்தின் நடைமுறை வாழ்வு தொடர்பான ஈமானியச் செய்திகளை பரிமாறிக்கொள்ளும் ஒருவராகவும் காணப்பட்டார். அப்துல்லாஹ், உர்வா ஆகிய இரு குழந்தைகளுக்குத் தாயானார். மூத்த குழந்தை அப்துல்லாஹ் ஹிஜ்ரத்தின் பின்னர் கிடைக்கப்பெற்றார். இளைய மகன் உர்வா கிடைத்திருந்த போது அஸ்மா (ரழி) அவர்களுக்கும் கணவருக்கும் இடையில் ஏற்பட்ட தர்க்கத்தின் காரணமாக அஸ்மா (ரழி) தலாக் பெறவேண்டியதாயிற்று. எனினும், மறுமணம் முடிப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. இளைய மகன் உர்வாவை சுபைர் பின் அவாம் (ரழி) எடுத்துச் செல்லவே அப்துல்லாஹ்வுடன் தனது தனிக்குடித்தனத்தை அமைத்துக்கொண்டார்.

அஸ்மா (ரழி) அவர்களின் வாழ்வில் மறவாத நிகழ்வாக முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்தின் போது ஏற்பட்ட அனுபவங்கள் காணப்படுகின்றன. அல்லாஹ்வின் கட்டளையை எதிர்பார்த்திருந்த முஹம்மத் (ஸல்) அவர்களும் அவரது நண்பர் அபூபக்கர் (ரழி) அவர்களும் மதீனாவுக்கு ஹிஜ்ரத் மேற்கொள்ளுமாறு கட்டளை இடப்பட்டனர். அபூபக்கர் (ரழி) தனது வீட்டிற்கு வந்து ஹிஜ்ரத்தின் போது தேவையான பொருட்களை தயார்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தார். அப்போது நபி (ஸல்) அவர்களும் அபூபக்கர் (ரழி) அவர்களின் வீட்டில் இருந்தார். அபூபக்கரின் ஆயத்தப்பாட்டிற்கு முழுமையான உதவியை அஸ்மா வழங்கிக் கொண்டிருந்தார். தேவையான பொருட்களை தயார்படுத்திவிட்டு அவற்றை ஒட்டகத்தில் கட்டுவதற்கு ஒரு துண்டு கயிற்றைத் தேடுகிறார். ஆனால் கிடைக்கவில்லை. சற்று நேரத்தில் தனது இடுப்பிலிருந்த பட்டியை இரண்டாக தன் பற்களால் கிழித்து பொருட்களை கட்டிவிட்டார். இதனை அவதானித்த நபி (ஸல்) அவர்கள் அஸ்மா (ரழி) அவர்களுக்கு அல்லாஹ் இவ்விரு துண்டுகளுக்கும் பதிலாக சுவர்க்கத்தில் இரு துண்டுகளை தருவான் என பிரார்த்தித்துவிட்டு (தாது நிதாகைன்) என சிறப்பாக அழைத்தார்கள்.

வீட்டிலிருந்து இருவரும் மதீனா நோக்கிச் செல்லத் தயாரான போது தானும் வருவதாகக் கூறி கண்ணீர் விட ஆரம்பித்தார்கள். அவரின் துணிச்சலைக் கண்ணுற்ற நபி (ஸல்) அவர்கள் அஸ்மாவுக்கு சில பொறுப்புகளை வழங்கினார்கள். தாம் இருவரும் மதீனா செல்லும் வரை மக்காவில் நடைபெறுகின்ற செய்திகளை அவ்வப்போது எங்களுக்கு அறிவிக்க வேண்டும் என குறிப்பிடவே அப்பணியை மகிழ்வுடன் ஏற்று இரவு பகல் என்று பாராது பொதுமக்களின் பழிப்பு வார்த்தைகளையும் பொருட்படுத்தாது இப்பணியினை திறம்பட செய்து, ஹிஜ்ரத் நிகழ்வின் பங்குதாரர்களில் அஸ்மா பின்த் அபூபக்கர் (ரழி) அவர்களும் ஒருவரானார்.

ஒரு நாள் இரவு நடுநிசியில் அஸ்மா ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும் போது அபூ ஜஹ்ல் அவனது கூலிப்படையுடன் வீட்டுக் கதவைத் தட்டினான். கதவைத் திறந்த அஸ்மாவுக்கு ஆச்சரியமும் அச்சமும் காத்திருந்தது. அபூ ஜஹ்ல் அங்கே கோபத்தால் சிவந்த முகத்துடன் நின்றிருந்தான். எங்கே உனது தந்தை என ஆக்ரோஷமாக அவன் கேட்கவே எனக்கு தெரியாது என பதில் கூறினார் அஸ்மா.

அவனது கோபம் அஸ்மாவின் முகத்தைப் பதம் பார்த்தது. வீட்டினுள் இருந்த அபூபக்கர் (ரழி) இன் வயது முதிர்ந்த தந்தை அபூ குஹாபாவுக்கு கடும் பயம் ஏற்பட்டது. தனது பேரப்பிள்ளைக்கு ஏதாவது நடந்து விடுமோ, வீட்டிலும் எந்த பொருளுமில்லையே. உண்மையைச் சொல்லிவிடலாம் என எத்தனித்தார். ஆயினும், அஸ்மா நிலைமையைச் சமாளித்து விட்டார்.

அஸ்மா (ரழி) அவர்களிடம் காணப்பட்ட சிறப்பம்சங்களுள் கொடை வழங்கல் முதன்மையானதாகும். நீங்கள் செலவழியுங்கள், அல்லது சதகா செய்யுங்கள் அதன் பிரதிபலனை எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் பிரதிபலனை எதிர்பார்த்தால் எந்த நலவையும் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள். நீங்கள் சதகா செய்யுங்கள். அதில் எந்தவொரு இழப்பையும் கண்டுகொள்ளமாட்டீர்கள் என அடிக்கடி சொல்பவராகவும் இருந்துள்ளார்.

இவர் தனது மகன் அப்துல்லாஹ் ஹஜ்ஜாஜின் படையால் கொல்லப்பட்டு சில நாட்களில் தனது 73 ஆம் வயதில் மரணமானார். அவர் மரணிக்கும் வரை ஒரு பல்லேனும் விழுந்திருக்கவில்லை அவரது மதிநுட்பத்தில் எத்தகு குறைபாடும் காணப்படவில்லை.

பெண்களுக்கு, குடும்பத்திற்கு, சமூகத்திற்கு ஒரு முன்மாதிரியான இஸ்லாமியப் பெண்ணாக வாழ்ந்து பணிபுரிந்து அல்லாஹ்வின் அழைப்புக்கு ஏற்ப சென்றவர். அல்லாஹ் அவரை பொருந்திக் கொள்வானாக.

## பாத்திமா (ரழி)

பாத்திமா (ரழி) அவர்கள், நபி முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் அன்னை கதீஜா (ரழி) அவர்களுக்கும் கடைசி மகளாக மக்காவில் பிறந்தார்கள். இவர்களுக்கு ஸஹ்ரா, பதூல் போன்ற பல சிறப்புப் பெயர்களும் உண்டு. இவர்களை அலி இப்னு அபூதாலிப் அவர்கள் மணமுடித்தார்கள். அவர்களுக்கு ஹஸன், ஹுஸைன், ஸைனப், உம்முகல்ஸூம் ஆகியோர் பிறந்தார்கள்.

பாத்திமாவின் தந்தை வர்ணனைகளுக்க அப்பாற்பட்டவர். “அதியுயர் நற்பண்புகளின் உறைவிடம்” என அல்லாஹ்வால் போற்றப்பட்டவர். பாத்திமா தமது ஒளிமயமான வாழ்வின் அனைத்துக் கட்டங்களையும்

வஹியினதும் நபியினதும் நிழலில் அமைத்துக் கொண்டார். தான் இரண்டு வயதை அடைந்திருந்த குழந்தைப் பருவத்திலேயே குறைஷிக் காபிர்களின் கொடுமைகளைத் தாங்க வேண்டி ஏற்பட்டது.

காபிர்கள் ஏற்படுத்திய படுமோசமான பொருளாதார முற்றுகைக்கு உள்ளாகி தனது அருமைத் தாய் தந்தையரோடு அபூதாலிப் பள்ளத் தாக்கில் சுமார் மூன்று வருடங்களாக பசி, பட்டினி போன்ற இன்னல்களை அனுபவித்தார். அபூதாலிப் பள்ளத்தாக்கு முற்றுகையிலிருந்து விடுபட்டு நுபுவ்வத்தின் பத்தாவது ஆண்டில் தன் அருமைத் தாயை இழந்தார்.

தாயை இழந்த கவலையும் மனவேதனையும் தன்னை வதைத்தாலும், இந்நிகழ்வின் பின் தன் தந்தையின் நிழலாக என்றும் எப்போதும் இருந்து ஆன்மீகப் பயிற்சிகளை பெறும் சந்தர்ப்பத்தை வளர்த்துக் கொண்டார்.

நபியவர்கள் மதீனாவிற்குச் சென்றதோடு, அவரின் ஏனைய குடும்பப் பெண்களோடு சேர்ந்து ஹஸ்ரத் அலீ அழைத்துச் செல்ல மதீனா வந்து சேர்ந்தார்.

இங்கும் தன் தந்தையை நிழலாகத் தொடர்ந்த பாத்திமா, நபியவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளின் போது அவரின் அருகாமையிலேயே இருந்துவந்தார். உஹத் யுத்தத்தில் முஸ்லிம்கள் பின்வாங்க நேரிட்ட போது யுவதியான பாத்திமா நபியின் முகாமுக்கு விரைந்து சென்றார். அங்கு காயமடைந்திருந்த தன் அருமைத் தந்தைக்கு சிகிச்சையளிக்கும் பெரும் பணியில் ஹஸ்ரத் அலீயுடன் இணைந்து கொண்டார்.

பாத்திமா இஸ்லாத்தின் வளர்ச்சியோடு தாமும் வளரலானார். வஹியின், காற்றையே சுவாசித்தார். திருமணம் செய்து பிள்ளைகள் பெற்றுத் தாயான பின்னரும் கூட நபியின் இல்லத்தோடு தன் இல்லத்தையும் இணைத்துக் கொண்டார். அண்ணலாரும் வேறு இடங்களை விட அதிகமாக பாத்திமாவின் வீட்டுக்கே போய் வந்தார். ஒவ்வொரு நாளும் அதிகாலை பள்ளிவாசலுக்குச் செல்ல முன்னர் பாத்திமாவின் வீட்டுக்குச் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். நபியவர்கள் எப்போதாவது பிரயாணம் செய்யப்

புறப்பட்டால் இறுதியாக விடைபெறுவது பாத்திமாவிடமே. அவ்வாறே பிரயாணம் முடிந்து திரும்பி வரும் போது முதலில் சென்று சந்திப்பதும் பாத்திமாவையே ஆகும்.

ஹிஜ்ரி இரண்டாம் வருடம் நபி (ஸல்) அவர்கள் பாத்திமாவை அலீக்கு மணமுடித்து வைத்தார்கள். இவ்விருவரினதும் தரத்துக்கும் அந்தஸ் துக்கும் ஏற்புடையதாக அத்திருமணம் அமைந்தது. பாத்திமாவை மணந்துகொள்ள குறைஷி முக்கியஸ்தர்கள் பலர் முன்வந்த போதெல்லாம் நபியவர்கள் “பாத்திமாவின் திருமணம் அல்லாஹ்வின் கையிலேயே இருக்கிறது” எனப் பதிலளித்தார்கள்.

ஆனால், பாத்திமாவை தனக்கு மணமுடித்து தருமாறு ஹஸ்ரத் அலீ நபியவர்களிடம் கேட்டுச்சென்ற போது எவ்வித மறுப்புமின்றி சம்மதம் தெரிவித்தார். திருமண செலவுகளுக்காக தம்மிடம் என்ன வைத்திருக்கிறீர்கள் என நபியவர்கள் அலீ (ரழி) அவர்களிடம் வினவிய போது, ஒரு போர்க் கேடயமும் ஒரு வாளும் நீர் கொண்டுவரப் பயன்படும் ஓர் ஒட்டகையும் தம்மிடம் இருப்பதாக பதிலளித்தார்கள். கேடயத்தை விற்று வரும் 500 திர்ஹம்களில், வீட்டுத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை வாங்குமாறு அவரைப் பணித்தார்கள். அவ்வாறே குறிப்பிட்ட சில பொருட்கள் வாங்கப்பட்டன. திருமண வைபவம் இனிதே நடந்தேறியது.

ஒளிமயமான இத்திருமணத்தின் எப்பகுதியை உற்று நோக்கினாலும் இறைவனின் தனிக் கிருபையும் அருளும் அதில் நிறைந்து காணப்பட்டதை உணர முடிந்தது. அது மட்டுமன்றி திருமணங்கள் மிக எளிமையாக நடாத்தப்படுவதற்கு சிறந்த முன்மாதிரியாகவும் திகழ்ந்தது.

அலி (ரழி) அவர்கள் பாத்திமாவைப் பெண்கேட்டு நபியவர்களிடம் வந்தபோது, நபியவர்கள் சொன்னார்கள். உமக்கு முன்னரும் பலர் பாத்திமாவைக் கேட்டு வந்த போதும் நான் பாத்திமாவிடம் அது பற்றி விசாரித்ததுண்டு. அப்போதெல்லாம் அதிருப்தியோடு முகத்தைத் திருப்பிக் கொணடார். நீங்கள் சிறிது இங்கே உட்கார்ந்து கௌ்ளுங்கள். பாத்திமாவிடமும் ஒரு வார்த்தை கேட்டு வருகிறேன் என்று கூறியவாறு வீடு சென்றார். பாத்திமாவிடம் விடயத்தைக் கூறிய போது முன்னர் போன்று அதிருப்தி தெரிவிக்காது மௌனம் சாதித்தார். நபியவர்கள்,

“அல்லாஹ் மிகப் பெரியவன். பாத்திமாவின் மௌனம் சம்மதத்துக்கு அடையாளமாகும்” எனக் கூறினார்கள்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக, பாத்திமாவுடன் வாழ்க்கை நடத்திய காலத்தில் நான் எப்போதாயினும் அவரைக் கோபப் படுத்தியதில்லை. எந்தக் காரியத்தையும் செய்யுமாறு நான் கட்டாயப்படுத்தியதுமில்லை. அவரும் என்னுடன் கோபம் வரும்படி நடந்தது கிடையாது. என் பேச்சுக்கு மாற்றமாக நடந்ததும் கிடையாது. அவரைக் கண்ணுற்ற போதெல்லாம் என் துன்பங்களை மறப்பேன். உள்ளம் அலாதியான அமைதி பெற்று விடும்.” என அலி (ரழி) அவர்கள் கூறுவார்கள்.

“நபிக்குப் பிறகு பாத்திமாவின் அளவு உண்மை பேசுபவர் எவரையும் நான் கண்டதில்லை” என அன்னை ஆயிஷா (றழி) அறிவித்துள்ளார்கள்.

ஹஸன் (ரழி) அவர்கள் குறிப்பிடும் போது, எமது தாயார் இரவு வேளைகளில் நீண்ட நேரம் தொழுகையில் ஈடுபடுவார். ஒரு முறை அதிகாலை வரை அவ்வாறே வணக்கத்தில் ஈடுபட்டார்கள். விசுவாசி களான எல்லா ஆண்களுக்காகவும், பெண்களுக்ககாவும் ஒவ்வொருவரின் பெயரையும் குறிப்பிட்டு துஆச் செய்தார்கள். நமக்காகவோ எதனையும் இறைவனிடம் கேட்கவில்லை. ஏனையவர்களுக்காக துஆச் செய்யும் நீங்கள் தமக்காகவும் ஏன் துவாச் செய்யக்கூடாது?” என நான் அவரிடம் விசாரித்தேன். அதற்கு அவர்கள், “முதலில் அயலவர்கள், பின்னர் தான் நம்மவர்கள் மகனே” எனப் பதிலளித்தார்கள்.

ஒரு தடவை கண்பார்வையற்ற மனிதர் ஒருவர் பாத்திமாவின் வீட்டுக்கு வர அனுமதி கோரினார். தம்மை மறைத்துக கொண்ட அவர், அம் மனிதருக்கு அனுமதி வழங்கினார். அவர் கண்பார்வை யற்றவர் அல்லவா? அப்படியிருக்க நீங்கள் ஏன் இவ்வளவு மறைந்து கொள்ள வேண்டும்? என அங்கிருந்த நபியவர்கள் வினவினார்கள். அவர் என்னைப் பார்க்காவிட்டாலும் நான் அவரைப் பார்க்கலாம் அல்லவா? தவிரவும் அவரால் வாசகங்களை நுகர முடிகிறதல்லவா. அவரது பார்வையிலன்றி நுகர்வில் குறையில்லை தானே” என்ற

பாத்திமாவின் பதிலைக் கேட்ட பெருமான் நபியவர்கள், “நீர் என்னிலிருந்தும் ஒரு பகுதி தான் என்பதற்கு சான்று பகர்கிறேன்” எனக் கூறினார்கள்.

பிரயாணத்திலிருந்து திரும்பிய நபியவர்கள் வழமை போல பாத்திமாவின் வீட்டுக்கு வந்தார்கள். வாசலில் தொங்கும் திரையும் பாத்திமாவின் கைகளில் அணிந்திருந்த காப்புகளும் அவர்களது கண்களில் பட்டன. வீட்டில் நுழைய வந்த நபியவர்கள் வீட்டின் முற்றத்திலே அமர்ந்து கொண்டார்கள். நபிகளாரின் என்றுமில்லாத இந்நடத்தையைக் கண்ட பாத்திமா விடயத்தை விளங்கியவர்களாக திரையையும் இரு காப்புகளையும் கழற்றி ஹஸனிடமும், ஹுஸைனிட மும் கொடுத்து நபியவர்களிடம் எடுத்துச் சென்று எனது சலாத்தை எத்திவைத்து விட்டு, நீங்கள் பயணத்தில் இருக்கும் போது நாங்கள் இவ்விரு வேலையையும் தான் செய்தோம். உங்களது விருப்பமிருந்தால் இதை நாம் பாவிக்கலாம். இல்லையெனில், அதை எவருக்காவது கொடுத்துவிடலாம் என்று கூறுமாறும் சொல்லியனுப்பினார்கள்.

அவ்விருவரும் நபியை அடைய அவர்களைத் தாவியணைத்து முத்தமிட்டு விடயத்தைச் செவியுற்றார்கள். பின்னர் இவ்விரு காப்புகளையும் அத்திரையையும் திண்ணைத் தோழர்களை அழைத்து பங்கிட்டு விட்டு, “பாத்திமாவுக்கு இறைவன் சுவர்க்கதில் அழகு ஆபரணங் களையும் அழகு ஆடைகளையும் அணிவிப்பான்” என்று கூறினார்கள்.

## தாபிஈன்கள் - இமாம்கள்

### உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்)

இஸ்லாமியச் சீர்திருத்தப் பணிக்கு முன்னோடியாகக் கொள்ளப்படுவர். இரண்டாம் உமர் ஆவார். குலபாஉர்றாஷிதூன்களின் வாரிசு என்றும் அழைக்கப்படும் இவர் ஹிஜ்ரி 61 இல் பிறந்து ஹிஜ்ரி 101 இல் மரணித்தார் ஆட்சிபீடத்துக்கு வருவதற்கு முன் மிக செழிப்புடன் வாழ்ந்தவர் இவர். எனினும், ஆட்சிப்பொறுப்பை ஏற்றதைத் தொடர்ந்து அவர் தன்போக்கை முற்றாக மாற்றிக் கொண்டார். பரம்பரை ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கில் மக்களிடம் "பைஅத்" வாங்கினார். அத்துடன் அரச ஆடம்பரங்களையும் துறந்து அமீருல் மு.்.மினூனுக்குரிய பண்புகளைக் கடைப்பிடிக்கலானார். அவர்களின் சீர்திருத்தப்பணி அவர்களின் வீட்டிலிருந்து வந்தது. தனக்கும் அரச குடும்பத்துக்கும் இருந்த விஷேட சலுகைகளை இரத்துச் செய்தார். தனக்கும் அரச குடும்பத்துக்கும் என்றிருந்த சொத்துக்களை பொது நிதி- பைத்துல்மாலில் சேர்ப்பித்தார். அரச குடும்பத்தார் அநியாயமாகப் பறித்து வைத்திருந்த சொத்துக்களை உரியவர்களிடம் கொடுத்தார்.

இத்தகைய மாற்றம் காரணமாக எந்தளவு தூரம் அவர்களது வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டதெனில் 50,000 தீனார்களாக இருந்த அவர்களது வருட, வருமானம், 200 தீனார்களாகக் குறைந்தது. பைத்துல்மாலில் இருந்து வழங்கப்படுகின்ற வேதனத்தைக் கூட அவர் பெற்றுக்கொள்ள மறுத்தார்.

இவ்வாறு வீட்டிலே பலசீர்திருத்தங்களை மேற்கொண்ட இவர், தன் கவனத்தை ஆட்சியின் பால் திருப்பினார். அநியாயக்கார கவர்னர்களை வேலை நீக்கம் செய்தார். நினைத்தவாறெல்லாம் செயறப்பட்டு வந்த அதிகாரிகளை சட்டத்தினால் கட்டுப்படுத்தினார். அநியாயமாக விதிக்கப்பட்ட வரிகளை நீக்கினார். ஸகாத் அமைப்பை மறுசீரமைப்புச் செய்தார். முன்பு அரச குடும்பத்துக்காக அதிகமாகச் செலவிடப்பட்ட பைத்துல்மால் நிதியை நாட்டு மக்களின் நலனுக்காகச் செலவு செய்யும் விதத்தில் வழிவகைகளை மேற்கொண்டார். தமது ஆட்சியில் இருந்த முஸ்லிமல்லாதோரையும் முறையாக நடாத்தத் தயங்கவில்லை. அவர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலையில் இருந்த

வழிபாட்டு நிலையங்களைத் திருப்பிக் கொடுத்தார். அவர்களது சொத்துக்களையும் மீட்டுக் கொடுத்தார்.

அடுத்து அவர் தனது கவனத்தை பொது மக்கள் பால் செலுத்தினார். தனது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி சுமார் அரை நூற்றாண்டு காலமாக மக்களை ஆட்கெண்டிருந்த நெறி பிறழ்ந்த வாழ்வியல் போக்குகளில் இருந்து மக்களை மீட்டு அவர்களை இஸ்லாத்தின்பால் வழிநடாத்தி முழு வாழ்வையும் இஸ்லாமிய மயப்படுத்த முயன்றார். மக்களுக்குக் கல்வியூட்ட வேண்டிய ஏற்பாடுகளையும் செய்தார். இஸ்லாமியக் கலைகளில் உலமாக்களை ஈடுபாடு கொள்ளச் செய்தார். இவர்களின் இத்தகைய முயற்சிகளின் பயனாக ஒரு பெரும் அறிவியக்கமே தோன்றியது. மத்ஹப்களது நான்கு இமாம்களும் கூட இவர்களின் முயற்சிகளின் பலனாக உருவானவர்களே. மக்கள் மத்தியில் இருந்த அனைத்து வகையான தீமைகளையும் ஒழித்துக் கட்டினார். பல்லாயிரக் கணக்கானோர் இவர்களின் காலத்தில் இஸ்லாத்தைத் தழுவியமையும் அவர்களது சீர்திருத்தப் பணியில் மாற்றத்தை ஏற்படுத்தியது. "புதூகுல் புல்தான்" எனும் நூலில் இந்தியாவில் இருந்த அரசர்களுக்குக் கூட இஸ்லாத்தின்பால் அழைப்பு விடுத்து உமர்பின் அப்துல் அஸீஸ் அவர்கள் கடிதங்களை வரைந்தார் எனக் குறிப்பிடுகின்றது. மொரோக்கோவிலும் கூட இஸ்லாம் பரவுவதற்கு இவரது முயற்சியே காரணமாக அமைந்தது என்று வரலாறு கூறுகின்றது. ஹதீஸ்கள் உத்தியோகபூர்வமாகத் தொகுக்கப்பட முன்னோடியாக இருந்தவரும் இவரே ஆவார். அன்னாரே ஒரு பெரிய அறிஞராக திகழ்ந்தார் என்பதுவும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. அவர்கள் பல ஹதீஸ்களையும் அறிவித்துள்ளார்கள். இவ்வாறு சிறந்ததொரு முஜத்திதாக முஸ்லிஹாக சீர்திருத்தப்பணியில் சுமார் இரண்டரை வருட காலம் ஈடுபட்டு வெற்றியும் கண்ட இவர் ஹிஜ்ரி 101 இல் நஞ்சூட்டப்பட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

### இமாம் ஸஈத் இப்னுல் முஸய்யப் (ரஹ்)

தாபிஈன்களின் சிறந்த அறிஞர்களில் ஒருவரான இவர், கலீபா உமர் (ரழி) அவர்களது ஆட்சியின் ஆரம்பப் பகுதியில் குறைஷிக் குலத்தில் மதீனாவிற் பிறந்தார். அக்கால அறிஞர்களில் குறிப்பிடத்தக்க உச்ச நிலையிலிருந்த இவர் அக்கால தாபிஈன்களின் தலைவர் எனப் போற்றப்படுகிறார்.

ஹதீஸ் துறையில் மிகவும் சிறந்து விளங்கிய இமாமவர்கள் ஸெய்யதினா உமர், உஸ்மான், அலீ, ஆயிஷா, அப்துல்லாஹ் இப்னு உமர், ஸஃத் இப்னு உபாதா (ரழி அன்ஹும்) போன்ற பல முன்னணி ஸஹாபாக்களை சந்தித்தும் கண்டும் கேட்டும் கற்றுமுள்ளார் என அவரது வரலாறு குறிப்பிடுகின்றது.

அவ்வாறே அவரிடமிருந்து ஹதீஸ் துறையின் முக்கிய அறிஞர்களான இமாம் ஸுஹ்ரீ, கதாதா, அம்று, யஹ்யா போன்ற பல ஹதீஸ் கலை அறிஞர்கள் ஹதீஸைப் பெற்று அறிவித்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கனவுகளுக்கான "தஃவீல்" - விளக்களிப்பதில் சிறந்து விளங்கிய இமாமவர்கள் அக்கால அரசிடமும் மதிப்பு மிக்கவராகக் காணப்பட்டார். குறிப்பாக உமைய்ய கலீபாவான அப்துல் மலிக் இப்னு மர்வான் இமாமவர்களை மிகவும் மதிப்பவராகக் காணப்பட்டார். ஒரு தடவை தனது மகனும் இளவரசருமாகிய வலீதிற்கு இமாமவர்களின் மகளை மணமுடித்து வைக்குமாறு தூதனுப்பினார். ஆயினும், இமாம் ஸஈத் அதனை நிராகரித்து விட்டார்.

சுமார் எண்பது வருடங்களுக்கும் மேலாக இஸ்லாத்திற்காக குறிப்பாக நபிகளாரின் ஸுன்னாவுக்காக அரும்பணியாற்றிய மேதை ஸஈத் பின் முஸய்யப் (றஹ்) அவர்கள் கடுமையாக நோய்வாய்ப்பட்டு ஹிஜ்ரி 94 இல் வபாத்தானார்கள். இதே ஆண்டில் மேலும் பல அறிஞர்கள் மரணித்த காரணத்தால் அக்கால மக்கள் அவ்வருடத்தை அறிஞர்கள் வருடம் என பெயர் சூட்டினர்.

### அதாஉ இப்னு அபீ றபாஹ்

அபூ முஹம்மத் அதாஉ இப்னு அபீ றபாஹ் அவர்கள் ஹிஜ்ரி 24 இல் யெமெனிற் பிறந்தார். அபிஸீனிய பரம்பரையைச் சேர்ந்த அவர் குறைஷிக் குலத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடம் அடிமையாக மக்காவிலேயே வளர்ந்து வந்தார். அங்கு பிரபல்யமிக்க பல ஸஹாபாக்கள், தாபிஈன்களிடமிருந்து சன்மார்க்க அறிவினைப் பெற்றார். இவரது அறிவுத் தாகம் வணக்க வழிபாடுகளிற் காணப்பட்ட ஆழமான ஈடுபாடுகள் பக்குவங்களை அவதானித்த இவரது எஜமாட்டி அல்லாஹ்வின் பொருத்தத்தை எதிர்பார்த்து இவரை விடுதலை செய்தார்.

சட்டக்கலை, ஹதீஸ் துறைகளில் சிறந்து விளங்கிய இவர் ஹிஜ்ரி முதலாம் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த அறிஞர்களுள் குறிப்பிடத்தக்கவாராகும்.

அன்னை ஆயிஷா, அபூ ஹுறைறா, உம்மு ஸலமா, உம்மு ஹானி.்., இப்னு அப்பாஸ், இப்னு உமர், இப்னு அம்று, முஆவியா இன்னும் பல பிரபல்யமிக்க ஸஹாபாக்களிடமிருந்து ஹதீஸ் மற்றும் பிக்ஹ் அறிவுகளைப் பெற்றதுடன் இத்துறைகளை விருத்தி செய்வதற்கு அரிய பல பங்களிப்புகளையும் செய்துள்ளார்கள்.

இவரிடமிருந்து இமாம் அவ்ஸாஈ, இப்னு ஜுரைஜ், இமாம் அபூ ஹனீபா, அல்லைத் போன்ற பல மேதைகள் கற்றுள்ளார்கள். மேலும் இமாம்களான முஜாஹித், அபூ இஸ்ஹாக், அம்றுப்னு தீனார், கதாதா, அம்றுப்னு ஷுஐப், அல் அ.்.மஷ், யெஹ்யா போன்ற இன்னும் பலர் ஹதீஸ்களை அறிவித்துள்ளனர்.

இவரது அறிவியற் புலமை மற்றும் சமூக அந்தஸ்துப் பற்றிக் குறிப்பிடும் போது ஒரு முறை அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் உம்றா செய்வதற்காக மக்கா வந்த போது மக்களிற் சிலர அவரிடம் மார்க்க விவகாரங்கள் சில பற்றித் தெளிவு கேட்டனர். அதற்கவர் வியப்புடன் அதா.். இப்னு அபி றபாஹ் உங்கள் மத்தியில் இருக்க என்னிடம் ஏன் கேட்கிறீர்கள்? என வினவியதிலிருந்து அவர்களுக்கிருந்த அறிவியல் அங்கீகாரம் புலப்படுகின்றது.

அவ்வாறே ஒரு முறை கலீபா ஸுலைமான் இப்னு அப்துல் மலிக் ஹஜ் கடமைக்கு வந்திருந்த போது ஹஜ் சம்பந்தமான சில விடயங்களில் தெளிவு காண்பதற்காக ஒருவரிடம் இமாம் அதா.். பற்றி விசாரித்தார். அப்போது அவர் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஒரு கறுப்பின மனிதரைக் காட்டி அதோ தொழுது கொண்டிருப்பவர்தான் அவர் என சுட்டிக்காட்டினார். தனது இரு மகன்மாருடனும் இமாமவர்கள் தொழுகையை முடிக்கும் வரை காத்திருந்த கலீபா இமாமுக்கு ஸலாம் கூறிக் கொண்டு அவரது மஜ்லிஸை நோக்கிச் சென்றார். அங்கு அவரது வருகையை எதிர்பார்த்திருந்த பெரும் கூட்டமே திரண்டு விட்டது. மக்களின் வரிசை முடியுமிடத்தில் உட்கார்ந்து கொண்டார். பின்னர் அவரது சந்தர்ப்பம் வந்தவுடன் இமாமுக்கு அருகில் சென்று ஹஜ்ஜு சம்பந்தமான கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கேட்டுத்

தெளிவு பெற்ற பின் அவருக்கு நன்றி கூறி விட்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டார். இவையனைத்தையும் அவதானித்துக் கொண்டிருந்த அவரது இரு மக்களும் வியப்புடன் தந்தையே யார் இந்த மனிதர்? கலீபாவுடன் மிகச் சாதாரணமாக நடந்து கொள்கிறார். அவருக்கெனத் தனியான சிறப்புக்கள் காணப்படுகின்றனவா என வினவினர். அதற்கு கலீபா இவர்தான் அறிவாற்றல் மிக்க இப்னு அப்பாஸின் மக்கத்து (அறிவியல்) வாரிசு. இவர் இங்கு அங்கீகரிக்கப்பட்ட மார்க்கத் தீர்ப்பாளர். இது தான் அறிஞர்களுக்கு அல்லாஹ் வழங்கும் அந்தஸ்து. எனவே கல்வியிற் கவனம் செலுத்துங்கள். அழியாத அந்தஸ்தும் மங்காப் புகழும் பெறலாம் என மக்களுக்கு உபதேசித்தார்கள். இவ்விரு நிகழ்வுகளையும் அடியாகக் கொண்டு நோக்கும் போது இமாமவர்களின் நிலையினை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு சுமார் நூறு வருடங்கள் இவ்வுலகில் அல்லாஹ்வுக்காகவும் அவனது மார்க்கத்திற்காகவும் வாழ்ந்த இமாமவர்கள் தமது இறுதிக் காலம் வரை மக்காவிலேயே வாழ்ந்து அங்கேயே அடங்கப் பெற்றார்கள்.

## இமாம் அல் ஸீஹ்ரி (ரஹ்)

அபூபக்கர் முஹம்மத் இப்னு முஸ்லிம் இப்னு ஸுஹ்ரி என்பது இவரது முழுப் பெயராகும். எனினும், இவரது பாட்டனாரின் பெயரைக் கொண்டு ஷிஹாப் அல் ஸுஹ்ரி என அழைக்கப்படுகின்றார்.

இமாம் ஸுஹ்ரி சிறந்ததொரு தாபிஈ ஆகவும் மார்க்க மேதையாகவும் ஹதீஸ் கலையில் விற்பன்னராகவும் விளங்கினார். ஸஹாபாக்களில் பத்துப் பேரை, நேரில் பார்க்கும் பாக்கியம் பெற்ற இவர், மாலிக் இப்னு அனஸ், ஸுப்யான் இப்னு உயைனா, ஸுப்யானுஸ்ஸவ்ரி போன்ற பல மேதைகளின் ஆசிரியராகவும் திகழ்ந்தார். அம்ர் இப்னு தீனார் என்பவர் இவரைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது "இப்னு ஷிஹாப், தெரிந்திருப்பவற்றை நன்கு தெரிந்து வைத்திருக்கின்றார். அவரைப் போன்ற அறிவாளியை இது வரை நான் கண்டதில்லை" எனக் கூறுகின்றார். இவரது இக்கூற்று இமாம் ஸுஹ்ரி அவர்களின் திறமையையும் அறிவு முதிர்ச்சியையும் எடுத்துக் காட்டுகின்றது.

இமாம் ஸுஹ்ரி அவர்களுக்கு இஸ்லாமிய சட்டதிட்டங்களில் பெரும்பாலானவை மனப்பாடமாக இருந்தன. இதனால் கலீபா உமர் இப்னு அப்துல் அஸீஸ் அவர்கள் மாநில ஆளுநர்களுக்குக் கடிதம் எழுதும் போது இஸ்லாமிய சட்டதிட்டங்கள் பற்றி இப்னு ஷிஹாபிடம் ஆலோசனை செய்து கொள்ளுமாறும், இஸ்லாமிய சட்டங்களை அவரைவிடவும் தெரிந்தவர் வேறு யாருமில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்கள். அத்தோடு ஹதீஸ்களைத் தொகுக்கும் பணியை இவரிடமே ஒப்படைத்தார்கள்.

இமாம் ஷிஹாப் அல் ஸுஹ்ரி அவர்கள் டமஸ்கஸ் பள்ளியை மத்திய நிலையமாகக் கொண்டு ஹதீஸ் தொகுக்கும் பணியை ஆரம்பித்தார். இவருக்கு அப்பகுதி மாநில ஆளுநர் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். இவ்வாளுநர்கள் தத்தம் பகுதிகளில் கிடைத்த உண்மையானதும். தெளிவானதுமான ஹதீஸ்களை எழுதி கலீபாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இவைகளனைத்தும் பின்னர் ஸுஹ்ரி அவர்களால் ஏடுகளாக எழுதப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டன ; இவற்றின் பிரதிகள் சாம்ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

மேலும் இப்பணியில் அக்கால முக்கிய அறிஞரான ஸஃது இப்னு இப்ராஹிம் என்பவரின் முயற்சியும் பாராட்டத்தக்கது. இவர் ஷிஹாப் அல்ஸுஹ்ரி அவர்களின் ஹதீஸ் தொகுப்பு முயற்சிக்கு பெரிதும் ஒத்துழைப்பு வழங்கியவர்.

அதிகமான நேரத்தை ஹதீஸ்கள், புத்தகங்களை வாசிப்பதில் செலவிட்ட இமாம் ஸுஹ்ரி அவர்கள், கலீபா அப்துல் மலிக், ஹிஷாம் முதலியோரது ஆலோசகராகவும் இருந்தார். இவர் ஹிஜ்ரி 124 இல் தனது 72 ஆம் வயதில் காலமானார்.

ஹதீஸ் திரட்டும் பணியில் ஸுஹ்ரி அவர்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டமை அக்காலத்தில் வாழ்ந்த மற்றும் பலரையும் இப்பணியில் ஈடுபடத்தூண்டியது. பிரதானமாக ஸுஹ்ரி அவர்களின் மாணவர்கள் ஹதீஸ் திரட்டும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அதன் பயனாக பல ஹதீஸ் தொகுப்புக்கள் உருவாகின.

# சிந்தனையாளர்கள் சீர்திருத்தவாதிகள்

## ஹஸன் அல் பஸரீ (ரஹ்)

ஆரம்பகால முஸ்லிம் உலகம் தோற்றுவித்த இறைநேசச் செல்வர்களுள் ஹஸன் அல் பஸ்ரீ (ரஹ்) அவர்களும் ஒருவராவார். இவருடைய தந்தை ஹபீப் இறாகிலுள்ள "மைஸான்" எனுமிடத்தில் காலித் (ரழி) அவர்களாற் போர்க்கைதியாகப் பிடித்துவரப்பட்டு, ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்களிடம் அடிமையாயிருந்து விடுதலை செய்யப்பட்டவர். அவர் அன்னை உம்மு ஸல்மா (ரழி) அவர்களின் அடிமையாயிருந்த "கைறாஹ்" என்பவரைத் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு மகனாகவே ஹஸன் பஸ்ரீ (ரஹ்) ஹிஜ்ரி 21 (கி. பி. 642) இல் மதீனாவிற் பிறந்தார்.

பிறக்கும் போதே அழகானவராக இருந்த இவருக்கு உமர் (ரழி) அவர்களே ஹஸன் (அழகர்) எனும் பெயரைச் சூட்டினார்கள். இளமைக் காலத்தில் 'வாதி உல் குரா' எனுமிடத்தில் வாழ்ந்த இவர் பின்னர் பஸ்ராவில் குடியேறி, மரணிக்கும் வரை அங்கேயே வாழ்ந்தார். ஹதீஸ் கலையிலும் இஸ்லாமிய சட்டக் கலையிலும் பேரறிவு பெற்றிருந்த இவர் 130 ஸஹாபாக்களைச் சந்தித்திருந்தார். இதனால், இவர் தாபிஈன்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். முதன் முதலில் நபி (ஸல்) அவர்களின் பிரிய பேரர் ஹஸன் (ரழி) அவர்களிடம் தமது கல்வியை ஆரம்பித்த அவர் ஒரு பேரறிஞராக விளங்கினார். சில போர்களிலும் கலந்து கொண்டார். ஹிஜ்ரி 45 இல் முஸ்லிம்கள் மீது படை யெடுத்துச் சென்ற சமயம் இவரும் போர் வீரர்களுள் ஒருவராகச் சென்றார்.

தமது கருத்துக்களை எடுத்துரைப்பதில் துணிந்தவராகவும் பயமற்றவராகவும் இருந்தார். உமையா கலீபா முஆவியா (ரழி) அவர்களால் நியமிக்கப்பட்ட அவரது மகன் யஸீதின் நியமனத்தைப் பகிரங்கமாக எதிர்த்த அவர், கலீபாவாக இருப்பதற்கு யஸீத் தகுதி யற்றவர் என்னும் கருத்தை மக்கள் மத்தியில் துணிந்து வெளியிட்டார். அக்காலத்தில் இப்படியொரு கருத்தை வெளியிடுவது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை.

தமது பேச்சுக்களில் எளிமை, இறை நம்பிக்கை, இறையச்சம் என்பவற்றையே அதிகமாக விளக்கினார். அவர் மக்களை "உத்குலூ

பிஸ் ஸில்மி காப்பா" என்ற குர்ஆன் வசனத்தைக் கூறி, பூரணமாக இஸ்லாத்தில் நுழையுமாறு அழைப்பு விடுத்தார். அக்கால முஸ்லிம் சமுதாயத்தைப் பீடித்திருந்த (உளவியல்) நோய் பற்றியறிந்து அதனைப் போக்க உதவும் திறமை வாய்ந்த மருத்துவராகவும் அவர் விளங்கினார்.

ஹஸன் அல் பஸரீ (ரஹ்) சிறந்த மார்க்க மேதையாகவும் அல்லாஹ்வின் விருப்புக்குரிய நல்லடியாராகவும் பஸ்ரா நகரிலே வாழ்ந்து கொண்டிருந்தார். அவருக்குப் பல சீடர்கள் இருந்தனர். அவர்களுள் இறை நேசச் செல்வரான 'றாபிஆ பஸ்ரீ' என்ற பெண்ணும் ஒருவராகும்.

ஹஸன் அல் பஸரீ (ரஹ்) தாம் செய்த பாவங்கள், தவறுகளை யெல்லாம் தமது ஆடைகளிலே எழுதி, அவற்றை அடிக்கடி பார்த்து மனம் வெதும்புவார். இந்தப் பழக்கம் அவர் பருவமெய்திய காலம் தொட்டு இருந்து வந்தது. அடிக்கடி தமது பாவங்களை எண்ணிக் கண்ணீர் சிந்தி அழுவார். தனித்திருந்து இறைவனிடம் பாவமன்னிப்புக் கோருவார். அத்தகைய சமயங்களில் சில வேளைகளில் உணர்விழந்து கீழே சாய்ந்து விடுவார்.

இவரைப் பற்றி இமாம் அஸ்ஸுஹ்ரி குறிப்பிடுகையில் அக்கால முஸ்லிம் உலகில் கல்விமான்கள் நால்வரே இருந்தனர் என்றும் அவர்களுள் ஒருவர் பஸ்ராவில் வாழ்ந்த ஹஸன் அல் பஸரீ (ரஹ்) என்றும் கூறுகிறார்.

இவருடைய காலத்திலேயே பிற்காலத்தில் முஸ்லிம் உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மு.்.தஸிலா இயக்கத்திற்கு அத்திபாரம் இடப்பட்டது.

இவ்வாறு புகழ் பெற்ற ஸூபியாகவும், பேரறிஞராகவும் விளங்கிய ஹஸன் பஸரீ (ரஹ்), ஹிஜ்ரி 110 (கி.பி.728)இல் பஸ்ராவிலேயே மரணமானார். மரணமாவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர், "தோட்டங் களிலிருந்தும் துறவுகளிலிருந்தும் நாம் அவர்களை வெளியேற்றி விட்டோம். அன்றி, பொக்கிஷங்களிலிருந்தும் மிக்க நேர்த்தியான வீடுகளிலிருந்தும் (அவர்களை வெளியேற்றினோம்)" (26 : 57 - 58) என்னும் குர்ஆன் வசனத்தை ஓதிக் கொண்டே மயக்கமுற்றார். அடுத்த நாள், வெள்ளிக் கிழமை ஜும்ஆத் தொழுகையின் பின்னர் இவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.

## அப்துல் காதிர் ஜீலானி ஹிஜ்ரி.470-561 கி.பி 1077-1166

அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) அவர்களின் தந்தை அபூ சாலிஹ் இமாம் ஹஸன் (றழி) அவர்களின் பரம்பரையில் வந்தவர். ஜீலான் (றஹ்) அவர்களின் தாயார் உம்முல் கைர் பாத்திமா இமாம் ஹுசைன் (றழி) அவர்களின் மகன் ஸைனுலாப்தீன் அவர்களின் பரம்பரையில் வந்தவர்கள். அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) அவர்கள் ஹிஜ்ரி 470/ கி.பி1077 இல் ஈரானின் ஜீலானி மாகாணத்தின் நாஸிப் எனும் ஊரில் பிறந்தார்கள். பெற்றோர் அவருக்கு வைத்த பெயர் அப்துல் காதிர் என்பதாகும். அவரது குன்னிய்யா அபூ முஹம்மத் என்பதாகும். தனது ஐம்பத்து ஓராவது வயதில் விவாகம் புரிந்தார்கள். நபிகள் (ஸல்) அவர்களின் ஹதீஸை உயிர்ப்பிக்கு முகமாகவே நான்கு பெண்களை விவாகம் புரிந்தார். அவர்களுக்கு இருபத்தேழு ஆண் குழந்தைகளும் இருபத்திரண்டு பெண் குழந்தைகளும் பிறந்தனர். இவர்களுள் நான்கு ஆண்பிள்ளைகள் குறிப்பிடத்தக்கவராவர்.

அவரது மூத்த மகன் ஷெய்க் அப்துல் வஹாப் சிறந்த அறிஞர் ஆவார். அவரது தந்தை அப்துல் காதிர் ஜீலானி (றஹ்) நடத்தி வந்த மத்ரஸாவை ஹிஜ்ரி 543ல் இருந்து இவரே நடத்தி வந்தார். அவரது தந்தை வாரம் தோறும் நடாத்தி வந்த பிரசங்கங்களை இவரே தொடர்ந்தார். மக்கள் கேட்கும் ஷரீஆ சார்ந்த வினாக்களுக்கும் அவரே விடை அளித்தார்.

அவரது மற்றுமொரு மகன் ஈசா என்பவர் ஹதீஸ் துறையில் புலமை பெற்றிருந்தார். நல்ல பல குணப்பண்புகளைக் கொண்டிருந்தார். சிறந்த பேச்சாளர். சூபிசம் பற்றிய நூல்கள் எழுதியுள்ளார். எகிப்தில் குடியேறி வாழ்ந்து அங்கே இறந்தார். அவரது மற்றொரு மகனான ஷெய்க் அப்துர் ரசாக் ஓர் அறிஞர். ஹதீஸ்கள் பலவற்றை மனனம் செய்தவர் பக்தாதில் வாழ்ந்த புகழ் பெற்ற ஆன்மீக ஞானியுமாவார். மற்றொரு மகனான ஷெய்க் மூஸா புகழ் பெற்ற அறிஞர். டமஸ்கஸில் குடியேறி வாழ்ந்து அங்கேயே இறந்தார். (புதூகுல் ஹைப் எனும் அப்துல் காதிர் ஜீலானியின் பிரசங்கத் தொகுப்பில் இடம்பெற்ற முதல் எழுபத்தெட்டுப் பிரசங்கங்களும் ஜீலானியின் மகனான ஈசாவின் மூலமே கிடைத்துள்ளன. இறுதி இரு உபதேசங்கள் மட்டும் மூத்த மகன் மூலம் கிடைத்துள்ளன).

அப்பாசிய கிலாபத் கி.பி. பத்தாம் நூற்றாண்டு முதல் நலிவுற்றிருந்தது. சிற்றரசுகளில் ஒன்றான செல்ஜூக் ஆட்சியாளரான மலிக்ஷா (கி.பி.1072-1091)வின் கை ஓங்கியிருந்தது. அப்பாசிய கிலாபத்தின் கீழ் இருந்த பல பிரதேசங்களை மலிக்ஷா தன் நேரடிப் பரிபாலனத்தின் கீழ் கொண்டு வந்திருந்தார். இருவருக்குமிடையே அரசியல் ரீதியான பகைமை இருந்த போதும் செல்ஜூக் ஆட்சியாளரான மலிக்ஷா சுன்னத் வல்ஜமாஅத் கோட்பாட்டைப் பின்பற்றியதால் பக்தாத் கலிபாவுடனான சமயரீதியான நல்லுறவு வலுவடைந்திருந்தது. மலிக்ஷாவின் பிரதம அமைச்சராக இருந்த நிதாமுல் முல்க் பக்தாதில் நிதாமிய்யாப் பல்கலைக்கழகத்தை நிர்மாணித்தார். இதனால் இக்காலப் பகுதியில் கலை கலாசாரம் வளர்ச்சியடைய வாய்ப்பாகியது. ஆயினும் மலிக்ஷா 1091 இல் மரணிக்க வாரிசுகளிடையே உரிமைப் போராட்டம் ஏற்பட்டது. கி.பி. 1119இல் சன்ஜார் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பே அங்கு அமைதி நிலவியது. கி.பி. 1157இல் சன்ஜார் இறந்ததும் மீண்டும் வாரிசுரிமையைப் போராட்டங்கள் தலைதூக்கி அமைதி குன்றியது. அப்துல் காதிர் ஜீலானி பிறந்து இறக்கும் வரையிலான காலப் பகுதி அமைதிச் சூழல் சில காலம் நிலவிய போதும் அரசியல் குழப்ப நிலையும் உள்நாட்டு அச்சுறுத்தலும் வெளிநாட்டுப் படை எடுப்பும் இடம்பெற்று மக்கள் அமைதி குலைந்திருந்தது.

இக்காலப்பகுதியில் ஹஷ்ஷாஷூன் எனப்படுகின்ற உள்நாட்டுப் பயங்கரவாதிகளின் குழு ஒன்று பல ஆயிரக்கணக்கான முஸ்லிம் பிரமுகர்களை கொலை செய்தது. பிரதம அமைச்சர் நிழாமுல் முல்க் இப்பயங்கரவாதிகளாலேயே கொலை செய்யப்பட்டார். சிலுவை யுத்தமும் இக்காலப் பகுதியிலே ஆரம்பமாகியது. முதலாவது சிலுவை யுத்தம் கி.பி. 1095-99 இல் முடிவுற்றது. மலிக்ஷா இறந்து முஸ்லிம்களின் ஒற்றுமை குன்றியிருந்த காலப்பகுதியில் சிலுவை யுத்தம் ஆரம்பித்தது. கிறிஸ்தவர்களான சிலுவை யுத்த வீரர்கள் 1099இல் ஜரூசலத்தைக் கைப்பற்றி மஸ்ஜிதுல் அக்ஸாவைத் தம் பரிபாலனத்தின் கீழ் கொண்டு வந்து பல ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை அநியாயமாகக் கொலை செய்தனர். நாட்டில் அமைதி குலைந்திருந்தது. குடிமக்கள் அச்சமின்றி வாழ முடியவில்லை.

அப்பாசிய ஆட்சியின் தோற்ற முதலே தலை நகர் பக்தாதில் அறிஞர்களும் கலைஞர்களும் ஆதரிக்கப்பட்டனர். அதனால் அறிவியல் கலைகளும் அழகியற்கலைகளும் அப்பாசிய ஆட்சியில் வளர்ச்சி

கண்டன. அதைப் போலவே மெய்ஞ்ஞானக் கலைகளும் துரித வளர்ச்சி பெறுவதற்கு அப்பாசியர் துணை நின்றனர். ஹஸனுல் பஸரியுடன் (கி.பி.642-728) ஆரம்பித்த இக்கலையை அபூஹாசிம் கூபி (மர. கி.பி.776) இப்றாஹிம் இப்னு அத்ஹம் (மரணம் கி.பி.777) ஷகீக் அல் பல்கி (மர.கி.பி.810) ராபியதுல் அதவிய்யா (கி.பி.717-801) துன்னூன் அல்மிஸ்ரி (கி.பி. 796-859) பாயஸீத் அல்பிஸ்தாமி (மர.கி.பி.874) ஜுனைத் அல்பக்தாதி (மர.கி.பி. 910) போன்ற மெய்ஞ்ஞானிகளால் வளர்க்கப்பட்டது. அதனால் பக்தாதில் அறிவியல், அழகியல் கலைகளுடன் மெய்ஞ்ஞானக் கலையும் வளர்ச்சி கண்டது.

தனது ஆரம்பக் கல்வியை தனது ஊரிலேயே பெற்றுக் கொண்ட அப்துல் காதிர் ஜீலானி உயர்கல்வி பெறும் நோக்கில் பக்தாதில் நிலவிய அமைதியீனத்தையும் கருத்திற் கொள்ளாது பதினெட்டாம் வயதில் பக்தாதுக்குச் சென்றார்கள். அங்கு புகழ் பெற்றிருந்த அபுல்வபா இப்னு அகீல், முஹம்மதிப்னு ஹஸன், அவ்பா கிலானி, அபூஸகரிய்யா தபரி என்பவர்களிடம் கல்வி பயின்று மத்ரஸாக்களில் போதிக்கப்பட்ட பாடங்களில் ஆழ்ந்த அறிவைப் பெற்றார்கள். அதன்பின் ஆன்மீக ஞானிகளான சே.ஃ. அபுல் கைர், ஹம்மாத் பின் முஸ்லிம், காழி அபூ ஸஈத் மக்ரமி என்பவர்களிடம் ஆன்மீக ஞானம் (தஸவ்வுப், பற்றிய அறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொண்டார்கள்.

இஸ்லாமிய கலைகளில் அவர் ஆழ்ந்த அறிவைப் பெறுகின்ற அதே காலப்பகுதியில் ஆன்மீகப் பயிற்சிகளிலும் ஈடுபட்டார்கள். புலன் இன்பங்களில் மூழ்குவதைத் தவிர்த்தார்கள். உயிர்வாழத் தேவைப்படும் அளவுக்குப் போதுமான உணவையே உட்கொள்வார்கள். இரவு நேரங்களில் நீண்ட நேரத்தை தொழுகையிலும் குர்ஆன் ஓதுவதிலும் கழித்தார்கள். மக்களுடன் உறவாடுவதையும் முடிந்தளவு குறைத்தார்கள். பக்தாதில் இருந்து தொலைவில் உள்ள சுஸ்தார் எனும் இடத்துக்குச் சென்று சமூகத்தில் இருந்து சிலகாலம் ஒதுங்கி வாழ்ந்தால் இத்தகு முயற்சிகளினூடாக அவர் தன் உள்ளத்தில் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழப் பழகிக் கொண்டார். அவரது ஆழ்ந்த அறிவும் ஆன்மீகப் பயிற்சியும் முஸ்லிம் சமூகம் ஆன்மீக பயன்பாட்டுத்துறைகளில் மட்டுமன்றி உலகியல் துறைகளிலும் வீழ்ச்சியடைந்திருந்ததை அவருக்கு உணர்த்தின.

குடிமக்கள் உலகியல் இன்பங்களைச் சுவைப்பதையே கருத்திற் கொண்டிருந்தனர். ஏழைகள் தம் வாழ்வில் திருப்தியில்லாது

விரக்தியடைந்திருந்தனர். செல்வந்தர்கள் தம் உல்லாச வாழ்வுக்குத் தேவையான பொருள் ஈட்டுவதிலும் அதனைக் கொண்டு ஆடம்பரமாகத் தம் வாழ்வைக் கழிப்பதிலும் கவனம் செலுத்தினர். இஸ்லாத்தின் உயர் குணப்பண்புகள் சமூகத்தில் இருந்து படிப்படியாக மறைந்து கொண்டிருந்தன. சிலுவைப் போர் வீரர்களின் கொடுமைகளும், அசாசிய்யூன்களின் படுகொலைகளும் இஸ்லாத்தின் எதிர்காலம் மங்கிவிடுமோ என்று பயப்படுமளவு அதிகரித்திருந்தன.

தனது கால முஸ்லிம் சமூகத்தின் அவல நிலையையும் அதற்கான காரணங்களையும் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் நன்கு புரிந்து கொண்டார்கள். ஆதலால் தக்வாவின் அடியாக அமைந்த வாழ்க்கைக்கு மக்களை அழைத்தச் செல்வதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்தார்கள். அதன் விளைவாகவே மக்களுக்கு இஸ்லாமியப் போதனைகளை வழங்கி நல்வழிப்படுத்த உதவும் உபதேசங்களை வாரந்தோறும் வழங்கினார்கள்.

தனதாசிரியர் காழி அபூஸஈத் மக்ரமியின் கலைக்கூடத்தில் தனது பிரசங்கங்கங்களைத் தொடர்ந்தார். நாளடைவில் பெரும் சனக்கூட்டம் வர ஆரம்பித்தால் இக்கட்டடத்தை விசாலமாக்க வேண்டியதாகியது. அறிஞர்கள், ஆட்சியாளர்கள், அமைச்சர்கள், செல்வந்தர்கள், பிரமுகர்கள் என்பவர்களும் சாதாரண மக்களுடன் சேர்ந்து அவரது பிரசங்கங்களுக்கு செவிமடுத்தனர். வாரத்தில் மூன்று தினங்கள் பொது மேடைகளில் பிரசங்கம் செய்தார். "ஈத்கா" (பெருநாள் தொழுகைக்கான அரங்கு)வில் வெள்ளிக்கிழமை காலையிலும் செவ்வாய்க்கிழமை இரவில் தனது மத்ரஸா மண்டபத்திலும் ஒவ்வொரு புதன்கிழமை காலையிலும் உரையாற்றினார்.

அவர் தனது பிரசங்கங்களின் போது உளத்தூய்மையையும் பண்பாட்டு விருத்தியை ஏற்படுத்துவதற்கும் ஈமான் பற்றிய மிகச் சரியான அறிவை வழங்குவதற்கும் முக்கியத்துவம் கொடுத்தார். நம்பிக்கையிலும் (ஈமானில்) வாழ்க்கை முறையிலும் புகுந்திருந்த பித்அத்களைக் களைவதிலும் அதிக கவனம் செலுத்தினார். அவரது பிரசங்கங்கள் கேட்போர் உள்ளத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. குற்றம் செய்த பலர் இறைவனிடத்தில் பாவமன்னிப்புக் கேட்டிருந்தனர். அவரது உரைக்கு செவிமடுக்க வந்த யூத கிறிஸ்தவ பிரசைகளில் பலர் இஸ்லாத்தை ஏற்றனர்.

இப்பிரசங்கங்களுக்கு மேலதிகமாக ஒவ்வொரு நாளும் அவர் காலையிலும் மாலையிலும் தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் கலைகள் பற்றிப் பாடம் நடாத்தினார். ஹன்பலி மத்ஹபை அவர் பின்பற்றிய போதும் பிக்ஹ் பாடத்தை நடாத்தும் போது குறித்த விடயம் சார்ந்த பல மத்ஹப்களது கருத்துக்களையும் எடுத்துக் காட்டி விளக்கம் அளிப்பார். பகல் ளுஹர் தொழுகையின் பின் அவர்களிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கான தீர்ப்பை (பத்வாவை) வழங்குவார். தீர்ப்பு வழங்கும் போது சாபிஇ, ஹன்பலி மத்ஹப்களை அடியொட்டியே தீர்ப்பளித்தார். இசாத் தொழுகையின் பின் தனித்து நின்று தியானத்தில் ஈடுபட்டார்கள்.

அவர் ஆற்றிய பிரசங்கங்கள் புதூஹுல் கைப், பத்ஹுர்ரப்பானி எனும் இரு தொகுப்புக்களாக வெளிவந்துள்ளன. பத்ஹுர்ரப்பானியில் 68 பிரசங்கங்கள் அடங்கியுள்ளன. புதூஹுல் கைப் என்பது பிரசங்கங்களின் தொகுப்பாகும். ஜீலானியின் ஆண் பிள்ளைகளுள் ஒருவரான சே∴ ஈசா என்பவரூடாகவே இதன் முதல் எழுபத்தெட்டுப் பிரசங்கங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. அவரது மூத்த மகன் சே∴ அப்துல் வஹாப் மூலமே மற்றிரு பிரசங்கங்களும் ரிவாயத் செய்யப்பட்டுள்ளன.

அவை பெரும்பாலும் மனிதனின் ஆத்மீக எழுச்சியையும் சமூக மேம்பாட்டையும் கருத்திற் கொண்டவை ஆகும்.

அப்துல் காதிர் ஜீலானி வாழ்ந்த கால முஸ்லிம் சமூகத்தினை இரு குழுக்களாக வகைப்படுத்த முடியும். இவர்களில் ஒரு குழுவினரிடம் பொருள் வளம் இருந்தது. எனினும், அவர்களின் ஈமானிலும், அமலிலும், பண்பாட்டிலும் குறைபாடுகள் இருந்தன. மறு குழுவினர் வறுமையின் பிடியில் சிக்கியவர்களாகவும் நசுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். அவர்களிடம் ஈமானும் நல்லதைச் சரியானதைச் செய்ய வேண்டும் என்ற மன உணர்வும் ஒழுக்க விழுமியங்களும் இருந்தன. இவர்கள் சிலவேளைகளில் கவலைக்குள்ளாகி மனமுடைந்தவர்களாக இருந்தனர். இவர்கள் வசதி படைத்தவர்களாய் பொறாமைக் கண்ணுடன் நோக்கினார். தாம் ஒதுக்கப்பட்டவர்களாக உள்ளதாகவும் நம்பினர் என இக்காலப் பகுதி முஸ்லிம் சமூகம் பற்றிய மதிப்பீடொன்றை அபுல் ஹஸன் அலி நத்வி அவர்கள் குறிப்பிட்டுள்ளர்கள். இத்தகைய மக்களை கருத்திற்கொண்ட அப்துல் காதிர் ஜீலானி தனது பிரசங்கங்களை நடாத்தினார்.

அப்துல் காதிர் ஜீலானி தனது பிரசங்கங்களின் போது பொதுமக்களின் குறைபாடுகளை மட்டுமன்று ஆட்சியாளர்கள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், அறிஞர்கள் என்போரின் குறைகளையும் சுட்டிக்காட்டத் தவறவில்லை. உலகியல் இன்பங்களில் மூழ்க விரும்பி அரச பதவிகளில் அமர விரும்பிய அறிஞர்கள், பகீஹ்கள், ஆன்மீகவியலாளர்கள் முதலானோரின் நடவடிக்கைகளே ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் வழிதவறிச் செல்ல காரணம் என்று சுட்டிக் காட்டினார். அவர் தனது பிரசங்கம் ஒன்றின் போது ஆற்றிய உரையின் பின்வரும் பகுதி இவ்விடத்து சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

"அறிஞர்களே நீங்கள் உங்கள் அறிவையும் ஞானத்தையும் தவறாகப் பயன்படுத்துகிறீர்கள். நீங்கள் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் எதிரிகளாவீர்கள். கள்வர்கள், அக்கிரமக்காரர்கள், முனாபிக்குகள் என்பவர்களுக்கு நீங்கள் எவ்வகையிலும் குறைந்தவர்களல்லர். தக்வாவைப் போர்வையுள் எவ்வளவு காலம் நிலைக்கப் போகிறீர்கள். உங்களது மன்னர்களதும், ஆட்சியாளர்களதும் நலன்களில் எவ்வளவு காலம் இவ்விடையை அறியப் போகிறீர்கள். அதிகாரத்துக்கும், பதவிக்கும், விருப்பு வெறுப்புக்களுக்கும் எவ்வளவு காலம் அடிமையாக இருக்கப் போகிறீர்கள். நிச்சயமாகவே நீங்களும் உங்களது ஆட்சியாளர்களில் பலரும் இறைவனுக்கும் அவனது அடியார்களுக்கு துரோகமிழைக்கின்றரீர்கள். யா அல்லாஹ் இவர்களைப் பதவி இறக்கி அவமானப்படுத்துவது அல்லது தாம் செய்த குற்றங்களுக்கு மன்னிப்புக் கேட்பவர்களாக்கி விடு. யா அல்லாஹ் இவ்வக்கிரமக் காரர்களை இழிவாக்கிவிடு அல்லது உனது மண்ணில் இருந்து அழித்து விடு அல்லது அவர்களை நல்வழிப்படுத்து."

அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் தான் வாழ்ந்த முஸ்லிம் சமூக உறுப்பினர்கள் நான்கு வகையினராகப் பின்வருமாறு வகைப்படுத்தி யுள்ளார்.

### I. இதயமும் நாவும் இல்லாதவர்கள்

இவர்கள் சாதாரண மனிதர்களில் பெரும்பகுதியினர். ஈமானிய உயர்வு இல்லாதவர்கள். "பதர்" போன்றவர்கள். நரகத்துக்குரியவர்கள். அல்லாஹ்வுக்கு கீழ்படிந்து நடக்குமாறு இவர்களை அழைக்க வேண்டும். பாவம் செய்வது பற்றி இவர்களை எச்சரித்தல் வேண்டும். இவ்வாறு அழைப்புவிடுப்பவர்களுக்கு இறைவனின் அன்பளிப்புக் கிடைக்கும்.

## II. நாவு இருந்தும் இதயம் இல்லாதவர்கள்

இவர்கள் மக்களுக்கு உபதேசம் செய்யும் அறிஞர்கள், மக்களை நல்வழிப்படுத்துவதற்காக உபதேசம் செய்வர். ஆயினும் அதன்படி அவர்கள் நடக்கமாட்டார்கள். அல்லாஹ்வுக்கு அடிபணியுமாறு மக்களை அழைப்பர். ஆயினும் அவர்கள் அல்லாஹ்விடம் இருந்து தூரமாகி நடப்பர். மக்களிடம் குறை காண்பர். ஆயினும் தங்களிடமுள்ள அதே குறைகளைக் காணமாட்டார்கள். தக்வாவுள்ளவர் போல காண்பிப்பர். பாவமும் செய்வர். பசுத்தோல் போர்த்தப் புலி போன்றவர்கள்.

## III. இதயம் இருந்தும் நாவில்லாதவர்கள்.

இவர்கள் ஈமானுள்ளவர்கள். கண்ணியம் உள்ளவர்கள். தம்மிடம் உள்ள குறைபாடுகளை அறிந்திருப்பர். மக்களோடு பழகுவதால் ஏற்படும் தீங்குகளை அறிந்திருப்பர். தாமுண்டு தம்பாடுண்டு என்று இருப்பதிலேயே நலன் உண்டு என்று கருதுவர்.

## IV. நாவும் இதயமும் உள்ளவர்கள்

இவர்கள் தாம் மறுமை வாழ்வுக்குத் தயாராகுமாறு மக்களுக்கு அழைப்பு விடுபவர்கள். அல்லாஹ்வைப் பற்றியும் அவனது அத்தாட்சிகள் பற்றியும் அறிந்திருப்பவர்கள். இறைவனுடன் நெருக்கமான உறவு கொண்டிருப்பர்.

(புதூஹுல் கைப் முப்பத்து மூன்றாவது பிரசங்கம் பார்க்க)

மேற்குறித்தவாறான பலவகை மக்களை உள்ளடக்கியுள்ள மக்கள் கூட்டத்துக்கு உரையாற்றும் போது அவர்களின் உள்ளத்தில் ஈமானைப் பாதிக்கவே முயற்சி செய்தார்கள். ஈமான் உள்ள ஒருவரிடம் எந்நிலையிலும் பின்வரும் மூன்றம்சங்கள் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

I. அல்லாஹ்வின் கட்டளைக்கு எப்போதும் அடிபணிதல்.

II. அல்லாஹ் விளக்கியவற்றைத் தவிர்த்து நடத்தல்.

III. அல்லாஹ் தந்துள்ளவற்றைக் கொண்டு திருப்தியடைதல்.

(புதுஹுல் கைப் - முதலாம் பிரசங்கம்)

அல்லாஹ்வின் தூதரை மனப்பூர்வமாகப் பின்பற்றுதல். பித்அத்துக் களை உருவாக்குவதும் பின்பற்றாதும் இருத்தல். அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முற்றிலும் அடிபணிந்து நடத்தல். அல்லாஹ்வுக்கு இணைவைக்காதிருத்தல் என்பன முஸ்லிம் ஒருவரிடம் இருக்க வேண்டிய பண்புகள் என தனது இரண்டாம் பிரசங்கத்தில் வலியுறுத்தியுள்ளார்கள். (புதுஹுல்கைப் இரண்டாம் பிரசங்கம்)

அவர் தனது பெரும்பாலான பிரசங்கங்களில் முஸ்லிம் சமூகத்தின் ஸ்திரமற்ற நிலைக்கும் வீழ்ச்சிக்கும் முஸ்லிம்களிடையே நிலவும் சடவாத சிந்தனைகளே முக்கிய காரணம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். மனிதனின் உலகியல் தேவைகளுடன் ஆன்மீகத் தேவைகளும் சமகாலத்தில் பேணிக்காக்கப்படுவதன் மூலமே அவனது நலன் பேணப்பட முடியும் என்று கருதுகிறார். அவர் துறவறத்தைப் போதிக்கவும் இல்லை. உலகியல் வளங்களை உதறித்தள்ளிவிடுமாறு மக்களிடம் கூறவுமில்லை. இவ்விரண்டையும் மனிதன் தனது தேவையின் அளவு மட்டும் பயன்படுத்த வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகும்.

“உலக வளங்களில் உனது பங்கைப் பெறுவதற்காக யாசகன் போல காத்து நிற்காதே. நீ ஓர் அரசனைப் போல இருக்க வேண்டும். அவன் தனது சிம்மாசனத்தில் அமர்ந்நிருக்கும் போதே அன்பளிப்புகள் அவனது காலடியில் குவிக்கப்படுகின்றன. இறைவாயிலில் காத்து நிற்பவனை உலகு பாராட்டுகிறது. ஆயினும் பொருளின் தலைவாயிலில் நிற்பவனின் கண்ணியம் பறிக்கப்படுகிறது. ஆதலால் பொருள் வளத்தில் உனது பங்கை உனது கண்ணியத்தை குறைத்துக்கொள்ளாத நிலையில் பெற்றுக்கொள். இதனையே அல்லாஹ் உன்னிடம் எதிர்பார்க்கின்றான். (பதிஹுர்ரப்பானி பிரசங்கம் 21-அபுல் ஹஸன் அலி நத்வி கையாண்ட மேற்கோள் இது)

“உலகியல் வளங்களைப் பெற்றுக்கொள்வது அனுமதிக்கப்பட்ட ஒன்றே. உயர்ந்த இலட்சியம் ஒன்றுக்காக அதனை சேகரிப்பதும் அனுமதிக்கப்பட்டதே. ஆயினும், உன் உள்ளத்தை அதில் மூழ்க வைப்பது அனுமதிக்கப்பட்டதல்ல. உன் இருதயத்தில் நுழைவதற்கு அதன் வாயிலில் அது காத்து நிற்பதும் அனுமதிக்கப்பட்டதே. ஆயினும், உள் இதயத்தின் வாயில் ஊடாக நுழைய அனுமதிப்பது தடை செய்யப்பட்டதே. இதயத்தின் வாயிலால் நுழையவிடுவது உனக்கு எதுவித கண்ணியத்தையும் தராது”. (பதிஹுர்ரப்பானி பிரசங்கம் 51, இது அபுல் ஹஸன் அலி நத்வி கையாண்ட மேற்கோள்)

“நபிகளார் (ஸல்) அவர்கள் நிர்மாணித்த ஈமானியக் கட்டிடம் கொஞ்சம் கொஞ்சமாக சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. தற்போது அது துண்டு துண்டாக சிதறி வரும் நிலையை எட்டியுள்ளது. மனிதர்களே நபிகளார் நிர்மாணித்த அக்கட்டிடத்தை கட்டி எழுப்புங்கள். இப்பணியை நிறைவு செய்யும் வரை நாம் ஒரு குழுவாக இயங்க வேண்டியுள்ளோம்.”

இஸ்லாம் அங்கீகரிக்காத இறை சிந்தனை, முனாபிக்தனம், பித்அத் என்பவற்றை தக்வா எனும் போர்வைக்குள்ளாக்கி முஸ்லிம் சமூகத்தில் நடமாடவிட்டுள்ளதால் இஸ்லாம் கண்ணீர் வடிக்கிறது என்று அவர் கவலைப்படுகிறார்.

மேற்குறித்த பிரசங்கம் முஸ்லிம் சமூகத்தை மேலோங்கச் செய்துவிட வேண்டும் என்ற கவலை அவருக்கிருந்தது என்பதையே உணர்த்துகின்றன. ஆன்மீகத் துறை பற்றிய அவரது போதனைகளும் மக்களின் ஆன்மீக நலனை மேம்படுத்துவதையே இலட்சியமாக கொண்டிருந்தன என்பதைக் காண்பிக்கின்றன.

சிந்தனைக்கு விருந்தளித்த இப்பிரசங்கங்கள் மக்கள் மனதில் பெரு மாற்றத்தைத் தோற்றுவித்த போதும், சமூக பண்பாட்டு ஆன்மீகத் துறை மேம்பாடுடைய நிலையான ஒரு சமுதாயத்தை உருவாக்க இப்போதனைகள் மாத்திரம் போதுமானதல்ல என்றுணர்ந்தார்கள். போதிப்பவருக்கும் செவிமடுப்போருக்கும் இடையே நிலையான நீடித்த உறவு நிலைக்க பிரசங்க மேடைகள் மட்டும் போதாது. பிரசங்கத்துக்கு செவிமடுக்க மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். பயன் பெற்றோ பெறாமலோ மீண்டனர். அடுத்த பிரசங்கத்துக்கு அவர்கள் வரவும் கூடும் ; வராமல் இருக்கவும் கூடும். ஆதலால் சமூக மேம்பாட்டுக்கான மாற்றுவழி காண வேண்டியிருந்தது. இஸ்லாமிய முறைக்கு ஏற்ப மக்களை வாழத்தூண்டும் பணியைச் செய்வது அரசின் பொறுப்பாக இருந்த போதும் அதனை அரசு மேற்கொள்ளவில்லை. மாறாக தமது அரசியல் நலன் பறிபோகும் என்று பயந்ததால் இஸ்லாமிய எழுச்சிக்காக உழைப்பவர்களுக்கும் ஊக்கம் அளிக்க வில்லை. அதனால் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் நபிகளாரைப் பின்பற்றி தம்மிடம் பைஅத் செய்வோரை ஆன்மீக நெறியில் வழி நடத்தி இஸ்லாமிய விழுமியங்களைப் பேண வழிகாட்டி ஊக்குவித்தார்கள். இம்முயற்சி நாளடைவில் காதிரிய்யா தரீக்காவாகப் பரிணமித்தது. இத்தரீகா அவரது மாணவர் பரம்பரையினரால் உலகின் பல பகுதியிலும் அறிமுகம்

செய்யப்பட்டது. இலங்கையிலும் இத்தரீகா கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிளவில் அறிமுகமாகியது.

முஸ்லிம் சமூக மேம்பாட்டில் அவர் கவனம் செலுத்தியது போலவே தனி மனிதர்களது ஆன்மீக வளர்ச்சியிலும் கவனம் செலுத்தினார்கள். அவரது பிரசங்கங்கள் சில இதனை நன்கு புலப்படுத்துகின்றன.

சமூக எழுச்சிக்கும் ஆன்மீக வளர்ச்சிக்கும் அயராது உழைத்த அவர்கள் தனது தொண்ணூற்றி ஓராவது வயதில் இறையடி சேர்ந்தார்கள். அவர் மனித சமுதாயத்திற்கு முன்மாதிரியாக வாழ்ந்து சென்றவர். அடக்கமும் பணிவும் உடையவர். படாடோப வாழ்க்கையை வெறுப்பவர் வறுமையினால் பீடிக்கப்பட்டவர்கள், அடிமைகள், சிறுவர்கள் என்போருக்கு உதவுதில் பேரின்பம் கண்டவர். பரந்த உள்ளமும் விருந்தோம்பும் பண்பும் கொண்டவர். மூத்தோர் மீது கண்ணியமும் இளயவர் மீது இரக்கமும் காண்பிப்பவர். பிறருக்கு தானே முந்தி சலாம் சொல்பவர் என்று அறிஞர்கள் அவரைப் பாராட்டுவர்.

## மௌலானா ஜலாலுத்தீன் றூமி (ரஹ்)

மௌலானா ஜலாலுத்தீன் றூமி அவர்கள் ஹிஜ்ரி 604 (கி.பி.1207)இல் பல்க் நாட்டில் பிறந்தார்கள். றூமியின் பிறப்புக்குச் சில நாட்களின் பின் அவரது தந்தைக்கும் பல்க் நாட்டின் மன்னருக்குமிடையில் அரசியல் தகராறுகள் காரணமாக மனக் கசப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக பல்க் நாட்டை விட்டு ஜலாலுத்தீனின் தந்தை குடிபெயர்ந்து சென்றார். இவ்வாறு பல்வேறு இடங்களுக்கும் அலைந்து சென்ற ரூமியின் குடும்பம், இறுதியில் சின்னாசியாவிலுள்ள 'கோன்யா' என்னும் ஊரில் குடியேறியது. அரபு மொழியில் சின்னாசியப் பிரதேசம் 'றூம்' என அழைக்கப்பட்டது. இதிலிருந்தே ஜலாலுத்தீனுக்கு 'றூமி' என்ற காரணப் பெயர் வழங்கப்படலாயிற்று.

ஜலாலுத்தீன் றூமி ஆரம்ப காலத்தில் சட்டம், தர்க்கம், தத்துவம் முதலிய தர்க்க ரீதியான கலைகளிலேயே ஆர்வம் செலுத்தினார். ஆனால், றூமியின் ஆன்மீகத் தாகத்தையும், மெஞ்ஞான அறிவு பற்றிய

வேட்கையையும் இக்கலைகளினால் தீர்க்க முடியவில்லை. எனவே, றூமியின் ஆர்வம் மெய்ஞ்ஞானக் கலையின் பால் சென்றது. புர்ஹானுத்தீன் திர்மதி, ஷம்ஸ் தப்ரீஸி போன்ற மெய்ஞ்ஞானச் செல்வர்களோடு தொடர்பு கொண்டு 'தஸவ்வுப்' பற்றிய அறிவினை அவர் பெற்றார். ஷம்ஸ் தப்ரீஸி, றூமியோடு பல ஆண்டுகள் தங்கி அவர் மீது தனது செல்வாக்கினை ஆழப் பதித்து விட்டார். றூமியின் கவிதைத் தொகுதியொன்றுக்கு 'தீவானே ஷம்ஸே தப்ரீஸி' எனப் பெயரிடப்பட்டிருப்பது றூமியின் மீது அவருக்கிருந்த செல்வாக்கைக் குறித்து நிற்கிறது. கி.பி. 1247 இல் ஷம்ஸ் தப்ரீஸ் மரணித்ததும் றூமியை கடும் துயரம் ஆட்கொண்டது. தனது மெய்ஞ்ஞானக் குருவின் நினைவாக 'மௌல வியா'என்னும் தரீக்காவை றூமி நிறுவினார்.

மௌலானா றூமி இஸ்லாமிய உலகம் ஈன்றெடுத்த இணையற்ற மெய்ஞ்ஞானச் செல்வர். பாரசீக இலக்கியம் கண்ட தலை சிறந்த மெய்ஞ்ஞானக் கவிஞர். அவர் பல தனிப் பாடல்களை இயற்றியுள்ளார். அவரது புகழ் பரவக் காரணமாக அமைந்த பெரு நூல் 'மஸ்னவி' ஆகும்.

பொதுவாக இஸ்லாமிய வரலாற்றிலும் சிறப்பாக சூபித் தத்துவத்தின் வளர்ச்சியிலும் மௌலானா றூமியின் செல்வாக்கு ஆழப் பதிந்துள்ளது. றூமியின் தத்துவத்தின் முக்கிய பண்பு வாழ்க்கையைப் பற்றிய உணர்வு ரீதியான விளக்கமும், மனிதனைப் பற்றிய உயர்ந்த கோட்பாடுமாகும். மனிதன் அவனது விதியைத் தானாகவே உருவாக்குவதாக றூமி கருதுகிறார். பாவம் என்ற ஒன்று இல்லையெனில் நன்மையும் இல்லை என்பது றூமியின் தத்துவமாகும். உலகில் பாவமும் தீமையும் இருக்கின்றன. அந்தத் தீமைக்கு எதிராகப் போராடுவதன் மூலமே மனிதன் உயர்ச்சியடைய முடியும் என்கிறார்.

இஸ்லாமிய வரலாற்றில் தோன்றிய பல சிந்தனைகளையும், தத்துவங்களையும் ஒன்றாய் இணைத்து ஒரு பொதுவான தத்துவத்தை அவர் உருவாக்கினார். இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக் கவிஞரும் சிந்தனையாளருமான அல்லாமா இக்பால் தமது தத்துவத்தினை ரூமியின் சிந்தனையின் அடிப்படையிலேயே அமைத்தார்.

## அபுல் ஹஸன் அஷ்ஷாதுலி (ரஹ்)

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஸ்தாபகரான அபுல் ஹஸன் அலி அஷ்ஷாதுலி (ரஹ்) (ஹிஜ்ரி 593 - 656 / கி.பி. 1195 - 1258) வட ஆபிரிக்காவிலுள்ள சியூட்டாவுக்குத் தெற்கேயுள்ள 'கிமாறா' எனும் ஊரில் பிறந்தார். அன்னாருக்கு 'அலி' என்று பெயர் சூட்டப்பட்டது. ஆரம்பத்தில் அபூ மத்யன் என்னும் புகழ்பூத்த சூபியின் மாணவரான அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் ஹராஸியின் சீடராக விளங்கிய அவர் அதனைத் தொடர்ந்து அபுல் பத்ஹ் அல் வாஸிதியின் சீடராக சில காலம் விளங்கினார். அவரின் பணிப்புரையில் மேற்கு நோக்கிப் புறப்பட்ட அவர் 'பாஸ்' எனுமிடத்தில் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷ் என்னும் ஆத்ம ஞானியைச் சந்தித்து அவரது சீடராகவும் விளங்கினார். அதன் பின் அப்துஸ் ஸலாம் இப்னு மஷீஷின் கட்டளையின் பேரில் டியூனிஸியாவிற்குச் சென்ற அவர் 'ஷாதிலா' எனுமிடத்தில் சில காலம் ஏகாந்த வாழ்க்கையிலும் தியானத்திலும் ஈடுபட்டார். இதனாலேயே அவர் 'ஷாதிலி' என்ற அடைமொழியைப் பெற்றார். தனது அமைதியான தியான வாழ்வு மூலம் ஆத்மீகப் பக்குவம் பெற்ற அவர் அதனைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார்.

இவர் இரவு பகலாக இறை வணக்கத்தில் ஈடுபட்டதுடன் மக்களை 'ஷரீஆ' என்ற சன்மார்க்க சட்டப்படி நடக்க வலியுறுத்தியும் வந்தார். இறை வணக்கத்தில் ஆர்வம் பிறப்பதற்கான வழிவகைகளை வகுத்துக் கொடுத்து, அதன்பால் மக்களை ஆர்வமூட்டியும் வந்தார். இவரது ஆத்மஞான வழிமுறையே 'ஷாதுலிய்யாத் தரீக்கா' என அழைக்கப் படுகிறது. இவர் ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஐந்து அடிப்படை நியதிகளையும் அனுஷ்டித்து வரவேண்டுமென்று தனது தரீக்காவைப் பின்பற்றும் மக்களுக்குக் கட்டளையிட்டார்.

ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஐந்து அடிப்படை நியதிகள் பின்வருமாறு.

I. பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும் அல்லாஹ்வுக்கு அஞ்சி நடக்க வேண்டும்.
II. சொல், செயல் இரண்டிலும் சன்மார்க்க நெறி முறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
III. சகல கருமங்களிலும் செல்வம், வறுமையுற்ற நிலைகளிலும் சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ்வையே முன்னிலையாக்க வேண்டும்.

IV. அல்லாஹ்வின் அருட்கொடைகள் கூடுதலாகவோ, குறை வாகவோ அருளப்படும் போது அவனது செயலுக்குப் பூரண மாக இணங்கி நடத்தல் வேண்டும்.

V. இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்விடமே திரும்பிவிட வேண்டும்.

இவர் எந்த நூலையும் எழுதவில்லை. இவரிடம் "தாங்கள் ஏன் ஒரு நூலையேனும் எழுதக் கூடாது" எனக் கேட்கப்பட்டபோது "எனது மாணவர்களே எனது நூலாகும்" எனக் குறிப்பிட்டார். அவரது மாணவர்களுள் ஒருவரான 'அபுல் அப்பாஸ் அஹ்மத் அல் முர்ஸி' என்பவரின் மூலமாக ஷாதுலிய்யா தரீக்கா பரவியது.

ஆத்மீக மெய்ஞ்ஞான சிந்தனையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திய இமாம் அபுல் ஹஸன் ஷாதிலீ அவர்கள் தமது ஆத்மீகப் பயணத்தில் டியூனியாவின் பல வருடங்கள் கழித்தபின், அவரது மிக நெருக்கத்திற்குரியவரான அபுல் அல்பாஸ் அல்முர்ஸீ மற்றும் பல தோழர்களுடன் ஹி. 642/ கி. பி. 1244 இல் எகிப்து நோக்கிப் பயணமானார். ஹி. 646/ கி. பி. 1248 இல் 7 ஆம் சிலுவை யுத்தத்தில் எகிப்தின் "மன்ஸூறாப் போரில் கலந்துகொண்டபோது தனது கண்பார்வையை இழந்தார்.

எகிப்தில் அலெக்ஸாந்திரியாவில் தனது தங்குமிடத்தையும், ஸாவியாவையும் அமைத்துக் கொண்ட இமாம் ஸாதிலீ ஹி. 656/ கி. பி. 1258 இல் பெரும் எண்ணிக்கையிலான தனது ஆதரவாளர்களுடன் ஹஜ்ஜுக்காக மக்கா நோக்கிப் புறப்பட்டார். வழியில் எகிப்தின் கிழக்குப் பகுதிப் பாலைநிலமான "ஹுமைதறா" எனுமிடத்தில் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மரணித்தார்.

இமாம் ஷாதுலி மரணிப்பதற்கு முன்பதாகவே தனது பணியைத் தொடர்வதற்கு அபுல் அல்பாஸ் அல்முர்ஸியை வாரிசாக நியமித்தார். அவர் தனது ஷெய்கின் பணியை ஹி. 686/ கி. பி. 1288 இல் மரணிக்கும் வரை தொடர்ந்தார்.

உலகளாவிய ரீதியில் எல்லாக் கோணங்களிலிருந்தும் தரீக்காக் களைப் பின்பற்றி அனுஷ்டிக்கும் முஸ்லிம்கள் மத்தியில் ஷாதுலிய்யா தரீக்கா உன்னத இடத்தை வகிக்கின்றது. மக்கா, மதீனா, அல்ஜீரியா, டியூனிஸ், எகிப்து, சூடான், மலேசியா, இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் வாழ்வோருக்கு மிகவும் அறிமுகமான தரீக்காவாக இது காணப்படுகிறது.

இத்தரீக்காவில் 'பாஸிய்யா' என்ற கிளையே இலங்கையில் ஆழமாக வேரூன்றியுள்ளது. தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இத்தரீக்கா அஷ் ஷெய்க் முஹம்மத் அல் பாஸி வழியாக பரவியது. இதன்பின் தென்னிந்திய காயல்பட்டண வாசியும் ஷெய்க் அல் பாஸியின் கலீபாவுமாகிய முஹம்மத் அபூபக்கர் மிஸ்கீன் ஸாஹிப், அஷ்ஷெய்க் அஹ்மத் இப்னு ஸாலிஹ் அல் யமனி, ஷெய்க் அல் பாஸியின் புதல்வரான அஷ் ஷெய்க் ஷம்ஸுத்தீன் அல் மக்கி அல் பாஸி ஆகியோர் இலங்கை வந்து கொழும்பு உம்மு ஸாவியாவில் இருந்து இத்தரீக்காவைப் பரப்பினார்கள்.

### முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) (கி.பி. 1703 - 1792)

அவரது காலத்தில் மக்களால் அனுஷ்டிக்கப்பட்ட இணைவைத்தலுக்குச் சமமான விடயங்களைக் கண்டித்து ஏகத்துவக் கொள்கைப் புரட்சியை உருவாக்கியவராகக் கருதப்படும் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) ஹிஜ்ரி 1115ஆம் ஆண்டு (கி.பி.1703) இன்றைய ஸவுதி அரேபியாவின் நஜ்த் மாகாணத்திலுள்ள 'உயைனா' எனும் கிராமத்தில் பிறந்தார். அவரது தந்தையின பெயரே அப்துல் வஹ்ஹாப் எனினும், முஹம்மத் என்ற பெயருக்குப் பதிலாக அப்துல் வஹ்ஹாப் என்ற பெயர் கொண்டே உலகம் அவரை அழைத்தது. இளமை முதலே மிகவும் புத்திக் கூர்மையானவராகத் திகழ்ந்த அவர் தனது ஆரம்பக் கல்வியை அக்காலத்தைய சிறந்த மார்க்க அறிஞர்களில் ஒருவரும் காதியுமான தனது தந்தை அப்துல் வஹ்ஹாபிடமிருந்தே கற்றார். ஹன்பலி மத்ஹபைப் பின்பற்றிய அப்துல் வஹ்ஹாப் தனது மகன்

முஹம்மதுக்கும் ஹன்பலி மத்ஹபின் படியே ஆரம்பக் கல்வியைப் பயிற்றுவித்தார்.

இஸ்லாத்தின் கொள்கைகளை அறிவதில் மிகவும் ஆர்வமுடைய வராகத் திகழ்ந்த அவர் மக்கா, பஸரா, பக்தாத் போன்ற தூர இடங்களுக்குச் சென்று மார்க்க சட்ட நூல்களின் தொகுப்புகளை ஆழமாகக் கற்றார். இக்காலகட்டத்தில் இப்னு தைமியா (ரஹ்)வினால் எழுதப்பட்ட சில நூல்களை வாசித்த போது அவற்றிலுள்ள கருத்துக்களினால் கவரப்பட்ட முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்), இப்னு தைமியாவின் நூல்களைத் தேடித் தேடி வாசிக்கத் தொடங்கினார். இதன் காரணமாக, தான் இஸ்லாத்திற்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் அவர் உணரத் தொடங்கினார்.

இவர் வாழ்ந்த காலப்பகுதியில் சமூகத்தின் நம்பிக்கைக் கோட்பாடு களங்கப்பட்டிருந்தது. பித்அத்களும், மூட நம்பிக்கைகளும், பிற்சேர்க்கை களும் அரசேறியிருந்தன. நஜ்த் மாகாணம் அனாசாரம், இஸ்லாத்திற்கு முரண்பட்ட கொள்கைகள் முதலியவற்றின் உறைவிடமாக இருந்தது. நபி (ஸல்) அவர்கள் பிறந்தபோது அரேபியாவில் எவ்வாறான சமய சூழல் இருந்ததோ அதே நிலையே அங்கு காணப்பட்டது. அரேபியாவில் சிலைகள் எடுத்த இடத்தை இங்கு நல்லவர்களின் சமாதிகள் எடுத்திருந்தன. மக்கள் தம் தேவைகளை நிறைவு செய்ய சமாதிகளை நோக்கிச் சென்றார்கள். ஈராக், ஷாம், எகிப்து, யமன் போன்ற நாடுகளில் வாழ்ந்த மக்களும் அறிவிற்குப் பொருந்தாத அளவிற்கு அறியாமைக்கால சிலை வணக்கங்களைப் புரிந்து வந்தனர். சுருங்கக் கூறின், முஸ்லிம் சமூகம் நெறி பிறழ்ந்து, பூமிக்குப் பாரமாக வாழ்ந்தது எனலாம். இத்தகையதொரு சூழ்நிலையிலேயே தூய இஸ்லாத்தின்பால் மக்களை அழைத்து, அவர்களை சீர்திருத்தும் முயற்சியில் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் ஈடுபட்டார். ஏகத்துவம் தோன்றிய மண்ணில் ஏகத்துவக் கொள்கை புதைக்கப்பட்டு, பல தெய்வ வழிபாட்டுக்கு வித்தூன்றப்படுவதைக் கண்டு, கொதித்தெழுந்த அவர் மீண்டும் ஏகத்துவத்தையும் குர்ஆனின் போதனைகளையும் அதே மண்ணில்

ஊன்றி, நபி (ஸல்) அவர்களின் வாழ்வை மக்களிடத்தில் கொண்டு வந்து விட வேண்டும் என ஆவல் கொண்டவராக தனது சீர்திருத்தப் பணியைத் தொடங்கினார். பின்வரும் ஒழுங்கில் அவரது பணி அமைந்திருந்தது.

1. தௌஹீத் பிரசாரம்
2. இணைவைத்தல் பற்றிய விளக்கமும், அதைவிட்டு நீங்குமாறு பணித்தலும்.
3. தௌஹீதுக்கு மாற்றமாக நடக்கும் ஒருவரை 'காபிராகி விடுவார்' என எச்சரித்தல்.
4. இத்தகையோருக்கு எதிராகப் பலத்தைப் பிரயோகித்தல்.

நஜ்த் உட்பட ஏனைய அரேபிய மாநிலங்களிலும், மற்றைய அரபு நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வந்த இஸ்லாம் உண்மையான இஸ்லாம் அல்ல என்ற பிரச்சினையிலிருந்துதான் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் தனது போராட்டத்தை ஆரம்பித்தார். அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாரையும் அழைத்து உதவிகள் தேடக் கூடாதென்றும், அல்லாஹ்வுக்காக மட்டுமே அறுத்துப் பலியிட வேண்டுமென்றும் எடுத்துக் கூறி, கப்றுகள், மரங்கள், கற்கள் என்பவற்றிடம் உதவி தேடுவதும் நன்மை தீமை செய்யக்கூடிய சக்தி அவற்றுக்கு இருக்கிறதென்று நம்புவதும் பெரும் வழிகேட்டுக்கே இட்டுச்செல்லுமாதலால் அவற்றிலிருந்து ஒதுங்குமாறும் மக்களுக்குப் போதித்தார்.

மார்க்கத்தில் புதுமைகளுக்கும் நூதன அனுஷ்டானங்ளுக்கும் இடமில்லை என்பதில் கண்டிப்பான கொள்கைகளைக் கடைப்பிடித்தார். இஸ்லாத்திற்கு முரணான நம்பிக்கைகளையும் வழிபாடுகளையும் கைவிட்டு தூய இஸ்லாத்திற்கு மீளுமாறு மக்களை அவர் அழைத்தார். ஹன்பலி மத்ஹபிற்கு அவர் மதிப்பளித்த போதிலும் அவருடைய தீர்ப்புகளில் ஹன்பலி மத்ஹபுக்கு மாற்றமான ஆதாரங்கள் குர்ஆன் ஹதீஸிலிருந்து கிடைக்கின்ற போது குர்ஆன், ஹதீஸின் ஆதாரங் களையே பின்பற்றுபவராக இருந்தார்.

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் தனது சீர்திருத்தப் பணிகளில் மக்களுக்குக் கல்வி போதிக்கின்ற பணியிலும் ஈடுபட்டார். நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கூட்டங் கூட்டமாக மக்கள் வந்து அவரிடம்

கல்வி பயின்றனர். இவ்வாறு கல்வி பயில வந்தவர்களுக்கு 'லாஇலாஹ இல்லல்லாஹ்' என்ற திருக் கலிமாவின் உட்பொருளை விளக்குவதில் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் பெரும் முயற்சி எடுத்தார். வணக்கத்துக்குரியவன் அல்லாஹ் மட்டும்தான் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டதுதான் இக்கலிமா என்பதையும், அல்லாஹ் ஒருவனையே பயந்து, அவனிடம் மட்டுமே உதவி தேட வேண்டும் என்பதையும் அவர்களுக்கு விளக்கினார். இத்தகைய போதனைகளால் மக்களின் உள்ளங்களில் குடிகொண்டிருந்த அறியாமை நீங்கி அவர்கள் தெளிவு பெற்றார்கள்.

தனது சீர்திருத்தப்பணியின் பரப்பை மேலும் விஸ்தீரணமாக்கிய அவர் நஜ்த் மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு ஊர்த் தலைவர்களுக்கும் கடிதம் எழுதி மூடப் பழக்கவழக்கங்களை விட்டுவிடுமாறும், இஸ்லாத்தின் ஏகத்துவக் கோட்பாட்டையும், எளிமையான போக்குகளையும் கைக்கொள்ளுமாறும், மக்கள் சமாதிகளுக்குச் சென்று மரியாதை செய்வதைத் தடுக்குமாறும் ஏகத்துவக் கொள்கைக்கு மாசு கற்பிக்கும் அனைத்துக் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் விட்டு தூர விலகுமாறும், அல்குர்ஆனையும், ஸுன்னாவையும் தங்கள் வாழ்க்கை யாகக் கொள்ளுமாறும் நன்மையை ஏவி, தீமையை விலக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து சமூகத்தைச் சீர்திருத்துமாறும், இஸ்லாத்திற்கு விரோதமான அனைத்து நடவடிக்கைகளையும் ஒழித்துக் கட்டுமாறும், ஆரம்ப ஸஹாபாக்களின் வாழ்க்கையைப் பார்த்து, தங்களை சீர்திருத்திக் கொள்ளுமாறும் வேண்டினார்.

இவ்வேண்டுகோளை சிலர் ஏற்றபோதிலும் வேறு சிலர் அவரை அறிவீனர் எனக் கூறி கேலி செய்ததோடு சூனியக்காரர் என்று கூறி, அவர் மீது பல அவதூறுகளையும் இட்டுக்கட்டினர். எனினும், நபி (ஸல்) அவர்கள் தனது பிரசாரப் பணியை மேற்கொள்ளும்போது குறைஷிக் காபிர்கள் இவ்வாறு பல பட்டப் பெயர்களைச் சூட்டி அவர்களது பிரசாரத்தைத் தடுத்து நிறுத்துவதற்குக் கூடிய பிரயத்தனம் எடுத்திருந்தனர் என்பதை நன்றாகவே அறிந்திருந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப், இவர்களது கேலி வார்த்தைகளையும், இவர்கள் இட்டுக்கட்டிய அவதூறுகளையும் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை.

தற்போதைய றியாதில் உள்ள நஜ்த் பகுதியில் தனது பிரசாரத்தை ஆரம்பித்த அவர் மக்கா, மதீனா போன்ற பிரதேசங்களிலும் படிப்படியாக தனது கருத்துச் செல்வாக்கைப் பரப்பினார். மக்கா நகர் நோக்கி

ஹஜ், உம்றா நோக்கத்தோடு வந்தவர்கள் உலகு பூராகவும் இவரது சிந்தனையை ஏந்திச் சென்றனர். தக்லீத் என்ற கண்மூடித்தனமான பழக்கத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கிய முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) அவர்களது பணி அல்குர்ஆன், ஹதீஸை நேரடியாக அணுக வேண்டும் என்ற உணர்வை மக்களிடம் உண்டு பண்ணியது.

## மௌலானா முஹம்மத் இல்யாஸ் (ரஹ்) (கி.பி. 1885 - 1944)

மௌலானா முஹம்மத் இல்யாஸ் (ரஹ்) ஹிஜ்ரி 1303 (கி.பி 1885) இல் இந்தியாவின் மத்திய பிரதேசத்திலுள்ள 'காந்தலா' எனும் கிராமத்தில் பிறந்தார். தந்தையின் பெயர் மௌலானா முஹம்மத் இஸ்மாஈல் ஸாஹிப் (ரஹ்) முதல் மனைவி காலமான பின் இரண்டாந்தாரமாக மௌலானா முழப்பர் ஹுஸைன் ஸாஹிப் (ரஹ்) அவர்களின் பேத்தியாரை மணம் முடித்தார். இந்த அம்மையாருக்கு இரு குழந்தைகள் பிறந்தனர். முதல் குழந்தையின் பெயர் முஹம்மத் யஹ்யா, இரண்டாவது குழந்தையின் பெயர் முஹம்மத் இல்யாஸ். இந்த இரண்டாவது குழந்தைதான் தப்லீக் அமைப்பின் ஸ்தாபகராக மாறியது. இவருக்கு அக்தர் இல்யாஸ் என்றுதான் பெயர் வைக்கப்பட்டது. எனினும் முஹம்மத் இல்யாஸ் என்ற பெயரால்தான் அவர் பிரபலமானார்.

மௌலானா அவர்களின் குடும்பம் மார்க்கப் பேணுதல் கொண்டதாயிருந்தது. அல்லாஹ்வின் நல்லடியார்கள் பலர் இக்குடும்பத்தோடு இணைந்துள்ளார்கள். அவர்களின் குடும்பத்தில் பொதுவாக எல்லோருமே ஹாபிழ்களாகவே இருந்தார்கள். மௌலானாவும் தனது சிறு பராயத்திலேயே ஹாபிழாகி விட்டார். அவர் காந்தலாவில் பிறந்திருந்தாலும் தனது பால்ய பருவத்தைத் தந்தையுடன் நிஜாமுத்தீனிலேயே கழித்தார்.

மௌலானா மாணவராயிருக்கும் பொழுதே சமுதாயச் சீர்திருத்தத் துடிப்பு மிக்கவராயிருந்து வந்தார். ஒரு தடவை கையிலே ஒரு கம்பை எடுத்துக் கொண்டு சக மாணவராயிருந்த 'ரியாழுல் இஸ்லாம்' என்பவரிடம் வந்து "வாரும், வெளியில் சென்று தொழாதவர்களோடு போர் தொடுக்கலாம்" என்று ஆவேசத்தோடு கூறியுள்ளார்.



23-CM14799

தனது பத்து அல்லது பதினோராவது வயதில் தமது சகோதரர் மௌலானா யஹ்யா ஸாஹிப் (ரஹ்)வுடன் கங்கோஹ் வந்து அங்கு மௌலானா ரஷீத் அஹ்மத் கங்கோஹி (ரஹ்) அவர்களிடம் கல்வி கற்றார். ஒரு தடவை மௌலான ரஷீத் அஹ்மத் (ரஹ்), மௌலானா இல்யாஸைக் கூர்ந்து கவனித்து விட்டு, "இல்யாஸ், உனது முகக் குறிகளிலிருந்து எதிர் காலத்தில் அல்லாஹ் உன்னைக் கொண்டு நிறைய தீனுடைய வேலை வாங்க இருக்கின்றான் என்று எனக்குத் தோன்றுகிறது" என்று கூறினார். ஹிஜ்ரி 1323 இல் ரஷீத் அஹ்மத் கங்கோஹி மரணித்ததால் ஹிஜ்ரி 1326இல் தேவ்பந்த் வந்த இல்யாஸ் (ரஹ்) அங்கு ஷைகுல் ஹிந்த் மௌலானா மஹ்மூத் ஹஸன் ஸாஹிப் (ரஹ்) அவர்களிடம் புகாரி ஷரீப், திர்மிதி ஆகியவற்றைக் கற்றார். ஹிஜ்ரி 1328இல் 'ஸஹாரன்பூர் மழாஹிருல் உலூம்' மத்ரஸாவில் ஆசிரியராகப் பணி புரிய நியமிக்கப்பட்டார்.

மேவாத்தில் தனது தந்தை நடத்தி வந்த மத்ரஸாவை தந்தையின் மரணத்தின் பின் மௌலானா முஹம்மத் ஸாஹிப் (ரஹ்) நடத்தி வந்தார். அவரும் மரணமான பின்பு அம்மத்ரஸாவை மௌலானா இல்யாஸ் (ரஹ்) தமது பொறுப்பில் எடுத்து நடத்தி வந்தார்.

ஒரு தடவை டில்லியிலிருந்து ஒரு வியாபாரி, மௌலானாவிடம் வந்து துஆ செய்யுமாறு வேண்டிக் கொண்டதோடு, ஒரு பெருந்தொகைப் பணத்தைக் காணிக்கையாகச் சமர்ப்பித்தார். துஆ செய்ய சம்மத்தித்த மௌலானா காணிக்கையை ஏற்க மறுத்துவிட்டார். அவருடன் இருந்தவர்கள் அந்தப் பணம் மத்ரஸாவின் வளர்ச்சிக்குத் தேவைப்படும் என்றும், எனவே காணிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறும் வற்புறுத்தினர். ஆனால், அதைக் கண்டிப்பாக மறுத்துவிட்ட மௌலானா "மார்க்க சேவை பணத்தைக் கொண்டு நடைபெறாது; அப்படிப் பணத்தைக் கொண்டு மார்க்க சேவை செய்வதாயிருந்தால் நபி (ஸல்) அவர்களுக்கு எவ்வளவோ நிதி குவிந்திருக்கும்" என்று கூறினார்.

நாட்கள் செல்லச் செல்ல தனது வாழ்க்கையில் நிம்மதி காணாத மௌலானா இல்யாஸ் (ரஹ்) முஸ்லிம்களை முஸ்லிம்களாக வாழச் செய்ய வேண்டும்; அவர்களது உள்ளங்களைவிட்டு அறியாமை அகல வேண்டும்; வாழ்வில் ஒரு புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்றும் இதற்கு என்ன வழி என்றும் சிந்தித்தார். மத்ரஸாக்களின் மூலம் ஒரு சில சிறுவர்கள் தான் பயனடைய முடிகிறது. ஆனால், இப்பருவத்தைக் கடந்துவிட்ட இலட்சோப இலட்சம் மக்களின் உள்ளங்களில் மார்க்க

ஞானத்தை எப்படிப் புகுத்துவது என்று சிந்தித்தார். இதற்குரிய ஒரே வழி முஸ்லிம்களை உண்மையான முஸ்லிம்களாக வாழச் செய்து, அவர்களின் நடை, உடை, பாவனை, கலாசாரம் அனைத்திலும் இஸ்லாமிய ஒளியைப் பிரகாசிக்கச் செய்வதே என முடிவு செய்தார். இதனைச் செயற்படுத்துவதற்குரிய களமாக மேவாத் பகுதியைத் தேர்ந்தெடுத்த அவர் அடிக்கடி அங்கு சென்று மக்களுக்கு கலிமா செல்லிக் கொடுத்தல், தொழுகைக்காக அழைத்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டார். மேவாத் மக்களின் பிரயாசையினாலும் மௌலானாவின் முயற்சியினாலும் மௌலானா கலீல் அஹ்மத் (ரஹ்) அவர்களும் வேறுபல உலமாக்களும் மேவாத் வந்து அவருடன் சேர்ந்து இப்பணியில் ஈடுபட்டார்கள்.

ஒரு தடவை மௌலானா இல்யாஸ் (ரஹ்) 'நூஹ்' என்ற ஊரில் ஓர் இஜ்திமா∴. நடாத்தினார். பாமர முஸ்லிம்கள் பலர் அதில் வந்து கூடியிருந்தனர். தமது திட்டத்தின் நோக்கத்தை அதில் வெளியிட்ட அவர் ஜமாஅத்துகளைத் தயார் செய்து வெளிப் பகுதியொன்றுக்கு அனுப்பி வைப்பது, அவர்கள் அங்கு தீனுடைய உழைப்பு செய்து இன்னுமொரு ஜமாஅத்தைத் தயார் செய்து வேறொரு பகுதிக்கு அனுப்பி வைப்பது என்று விளக்கினார். கூடியிருந்தவர்கள் எவரும் மௌலானாவின் திட்டத்தை மறுக்காததால் அல்லாஹ்வின் பாதையில் புறப்பட ஒரு ஜமாஅத் தயாரானது. மௌலானா தயாரித்துக் கொடுத்த ஒழுங்குப் பிரகாரம் ஜமாஅத்துகள் புறப்பட்டு ஒரு வெள்ளிக் கிழமையிலிருந்து மறு வெள்ளிக்கிழமை வரை ஓர் ஊரில் உழைப்பு செய்து அங்கிருந்து இன்னுமொரு ஜமாஅத்தைத் தயாரித்து அனுப்பினர். இவ்வாறாக தொடர்ச்சியாக பல ஆண்டுகள் இப்பணி நடந்து கொண்டே இருந்தது.

எனினும், ஏழைகளான மேவாத்திகளை இவ்வாறு அவர்களது தொழில்களை விட்டு விலக்கி, அவர்களது வீடு வாசல்களையும் மனைவி மக்களையும் விட்டு அப்புறப்படுத்தி, ஊர் ஊராகச் சுற்றவைப்பதைக் கொண்டு அவர்களிடம் மார்க்கக் கல்வியையும், இஸ்லாமிய அறிவையும் கொண்டு வருவது சாத்தியமாகுமா? அல்லது இந்த முறையில் மாற்றம் ஏற்படுத்துவது அவசியமா? என்ற கேள்விகளும் மௌலானாவின் உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்தன. எனினும், வேலை கடின மாயிருந்தாலும் இப்பணியின் முக்கியத்துவத்தை மக்கள் விளங்க ஆரம்பித்தால் அதன் பளு குறைவடையும் என்றும் அதுவரை ஜமாஅத்து களை உலமாக்களும், மத்ரஸாக்களும் நிறைந்த பகுதிகளுக்கு மட்டும்

அனுப்பி மார்க்கப் பெரியார்களின் உபதேசங்களைக் கேட்கச் செய்வதன் மூலம் ஜமாஅத்தினருக்கும் நல்ல உற்சாகம் ஏற்படும் என்றும் அவருக்குத் தோன்றியது. இந்த வகையில், அவரது சொந்த ஊரான காந்தலா உலமாக்கள் அதிகம் வாழும் ஊராகையால் ஜமாஅத்துகளை அங்கு அனுப்பி வைக்கத் தொடங்கினார். இவ்வாறு வரும் ஜமாஅத்துகளை காந்தலா வாசிகள் வரவேற்று உபசரித்ததோடு பணிவிடைகள் செய்து ஆதரிக்கவும் செய்தனர்.

மௌலானா இல்யாஸ் (ரஹ்) வின் இத்தகைய முயற்சி பெரு வெற்றியைக் கொடுக்க ஆரம்பித்தது. மேவாத் முழுவதும் தப்லீக் வேலை பரவலாக நடக்க ஆரம்பித்தது. அல்லாஹ்வின் பாதையில் புறப்பட்டு மார்க்கத்தைக் கற்பது, கற்றுக் கொடுப்பது மேவாத்திகளுக்கு இப்பொழுது சர்வ சாதாரணமாகி விட்டது. தப்லீக்கைப் பற்றிய சந்தேகம் மக்களுடைய உள்ளங்களிலிருந்து அகல ஆரம்பித்தது. இந்தகைய ஒரு சூழ்நிலையைத்தான் மௌலானாவும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருந்தார். தப்லீக் வேலை செய்வதற்காக தமது தொழில்களை விட்டு விட்டு வெளியேறுவதால் ஏற்படும் நஷ்டத்தை எப்படி ஈடு செய்வதென்பது மேவாத்திகளுக்கு ஆரம்பத்தில் ஒரு பிரச்சினையாகவே இருந்தது. அப்படிச் செய்வது அவர்களைப் பொறுத்தளவில் ஒரு பெரிய தியாகமாகவே காணப்பட்டது. ஆனால், அல்லாஹ் இந்த வேலையைக் கொண்டு மகிழ்ச்சியடைந்து விட்டதன் காரணமாக நஷ்டத்திற்குப் பதிலாக தமக்கு அதிக இலாபம் கிடைத்ததை மேவாத்தி மக்கள் கண்கூடாகக் காணத் தொடங்கினர்.

இத்தகைய பணியின் காரணமாக மேவாத் மகத்தான மாறுதலைக் கண்டது. அங்கு நிலை கொண்டிருந்த குடி, கொலை, கொள்ளை, சண்டை, சச்சரவு முதலிய தீமைகள் அம்மக்களை விட்டும் அகன்றன. பள்ளிவாயல்களைக் காண்பதே அரிதாக இருந்த நிலை மாறி பெருமளவு பள்ளிவாயல்கள் தோன்றின. புதிது புதிதாக மத்ரஸாக்களும் தோற்றமெடுத்தன. வீதிகள்தோறும் ஆலிம்களதும் ஹாபிழ்களதும் நடமாட்டம் அதிகரித்தது. மக்கள் குர்ஆன், ஸுன்னாவின் வழியில் நடக்க ஆரம்பித்தனர்.

தப்லீக் பணியின் பயனாக மேவாத்திகள் பல சிறப்பான குணங் களைப் பெற்றார்கள். அக்குணங்களில் விருந்தோம்பல் மிக முக்கியமானதாயிருந்தது. ஊருக்கு வரும் விருந்தாளிகள் எவ்வளவு

பேராயிருந்தாலும் எத்தனை நாட்கள் தங்கியிருந்தாலும் முகம் கோணாது உபசரிப்பர். அவர்களது அந்தப் போக்கு பண்டைய அறபிகளின் விருந்தோம்பலை நினைவூட்டுகிறது.

இப்போது மௌலானா தனது பணியின் பரப்பை விஸ்தீரண மாக்கினார். மேவாத்தில் மட்டுமல்லாது டில்லி போன்ற நகரங்களிலும் அது வளர்ச்சி காண ஆரம்பித்தது. ஒவ்வொரு குக்கிராமத்திலும் இந்தப் பணி செயல்பட்டது. பல பகுதிகளிலும் இஜ்திமாக்கள் தொடர்ந்து நடைபெற ஆரம்பித்தன. ஒவ்வொரு மஹல்லாவிலிருந்தும் ஜமாஅத்துகள் தயாராயின.

மேவாத்திகளுக்கு அடுத்தபடியாக மௌலானா இல்யாஸ் (ரஹ்) வுக்கு அதிக கண்ணியம் கொடுத்து அவரது பணிக்கு ஊக்கம் கொடுத்தவர்கள் டில்லி வியாபாரிகளாவர். மேவாத்தில் நடைபெறும் முக்கியமான இஜ்திமாக்களில் அவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொள்பவர்களாக இருந்தனர். தப்லீக் பணியில் அதிகம் பங்கெடுத்து உழைத்து வந்ததன் மூலம் அவர்களிடையே ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட ஆரம்பித்தது. தொழுகை நேரம் வந்தால் கடை, காரியங்களை அப்படியே விட்டு விட்டு ஜமாஅத்துடன் தொழ விரைந்தார்கள். தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ளும் பக்குவத்தைப் பெற்றுக் கொண்டார்கள். தமது செல்வத்தையும் அந்தஸ்தையும் பொருட்படுத்தாது ஏழைகளின் குடிசைகளுக்குச் சென்று அவற்றின் வாயிற் படிகளில் நின்று அவர்களோடு புன்முறுவலுடன் பேசுவதிலும் அவர்களது தெருக்களிலே சுற்றுவதிலும் தனிச்சுவை கண்டார்கள்.

தப்லீக் பணிக்கென தனது ஓய்வு, உறக்கம் அனைத்தையும் தியாகம் செய்து இரவு பகலாகப் பாடுபட்டுழைத்த காரணத்தினால் மௌலானா இல்யாஸ் (ரஹ்)வின் உடல் நிலை மிகவும் பலவீனமடைந்து சோர்வுற்றிருந்தது. தனது இறுதி நேரம் நெருங்கி விட்டதை அறிந்த அவர், ஷைகுல் ஹதீஸ் மௌலானா முஹம்மத் ஸகரிய்யா ஸாஹிப், மௌலானா அப்துல் காதிர் ஸாஹிப், மௌலானா ஜபர் அஹ்மத் ஸாஹிப் ஆகியோரை வரவழைத்து ஒருவரைத் தனது பிரதிநிதியாகத் தெரிவு செய்யும்படி குறிப்பிட்டார்கள்.

மேற்படி மூவரும் ஆலோசித்து, முடிவில் மௌலானாவின் மகனான மௌலவி முஹமது யூஸுப் ஸாஹிப் அவர்களையே தேர்ந்தெடுப்பதென முடிவு செய்து, தங்களது முடிவை மௌலானாவிடம் தெரிவித்தார்கள். அப்பொழுது மௌலானா, "அல்ஹம்துலில்லாஹ், அதுவே உங்கள் முடிவாயின் அல்லாஹ் அம்முடிவில் நலவைத் தருவானாக; இது எனக்கு ஒரு பெரும் பிரச்சினையாகவும் குழப்பமாகவும் இருந்தது. இப்பொழுது அல்லாஹ்வின் கிருபையால் கடைசிக் கவலையும் தீர்ந்தது. இன்ஷா அல்லாஹ் இனி இந்த வேலை எனக்குப் பின்பும் தொடர்ந்து நடைபெறும்" என்று கூறினார்கள். இந்நிகழ்வு 1944 ஜுலை 12ஆந் திகதி நடைபெற்றது. மறுநாள் அதாவது 1944 ஜுலை 13 ஆந் திகதி பஜ்ருத் தொழுகைக்கு சற்று முன்பாக அன்னாரது உயிர் பிரிந்தது.

## இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) (கி.பி 1906 - 1949)

எகிப்து நாட்டின் ‘மஹ்மூதிய்யா’ என்ற சிறியதொரு கிராமத்தில் 1906 ஆம் ஆண்டு ஷெய்கு ஹஸனுல் பன்னா பிறந்தார். கிராமத்தில் வசித்தபோதும் ஹஸனுல் பன்னாவின் குடும்பம் கல்வி, இஸ்லாமிய பண்பாடு, மார்க்கப்பற்று என்பவற்றில் தலை சிறந்து விளங்கியது. தெளிவான இஸ்லாமிய ஞானம் அவருக்குக் கிடைப்பதற்கு இத்தகைய ஒரு குடும்பப் பின்னணியும் முக்கியமான காரணமாகும்.

அவரது தந்தை கடிகாரம் திருத்தும் தொழிலிலே மிகவும் கைதேர்ந்தவராக இருந்தார். இதன் மூலம் தனக்கும் தனது குடும்பத்துக்கும் தேவையானவற்றைச் சம்பாதித்துக் கொண்டார். இரவில் அவர் வேலை செய்தார். பகல் வேளைகளில் அவர் படிப்பித்த இடத்தில் உள்ள ஒரு பள்ளிவாயலிலே இமாமாகப் பணிபுரிந்தார். ஓய்வு நேரத்தைத் தனது நூலகத்திலே செலவிட்டார். ஹஸனுல் பன்னா திருக்குர்ஆன் முழுவதையும் மனனம் செய்யும் வரை அவரது தந்தையே அன்னாரது ஆசிரியராக இருந்தார். அவர் சிறிது வளர்ந்து வரும்போது அவரது தந்தை தனது நூலகத்தை அவருக்கு அறிமுகப்படுத்தி, அதிலிருந்து அவருக்குத் தேவையான நூல்களை வாசிப்பதற்கு உற்சாகமூட்டினார். இவ்வாறு ஹஸனுல் பன்னா, தனது தந்தையிடமிருந்து பரிசுத்தமான இஸ்லாமிய அறிவைப் பெற்றார். அவரது தாய் மொழியான அறபியில் அவர் மிக்க நிபுணத்துவம் பெற்றிருந்தார்.

16 ஆம் வயதில் அவரது தந்தை, அவரை கெய்ரோவிலுள்ள 'தாருல் உலூம்' ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்த்தார். கெய்ரோவுக்கு அவர் வந்ததும், அங்கு அவர் கண்ட ஒழுக்கச் சீர்கேடுகளும், இஸ்லாத்தைப் பற்றி அவர்கள் பாராமுகமாய் இருந்தமையும் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. ஹஸனுல் பன்னா, தாருல் உலூமில் மாணவராயிருக்கும் போது டாக்டர் தாஹா ஹுஸைன் வெளியிட்ட 'இஸ்லாத்திற்கு முந்திய கால கவிதைகள்' பற்றிய நூல் அல் குர்ஆன், ஹதீஸ் என்பவற்றின் நம்பகத்தன்மையில் சந்தேகங்களை ஏற்படுத்தியது. ஷெய்க் அலி அப்துர் ராஸிக் வெளியிட்ட 'இஸ்லாமும் அரசாங்கத்தின் கொள்கைகளும்' என்ற நூல் மத சார்பின்மைக் கொள்ளையை ஏற்றுக் கொள்வதற்கு முஸ்லிம்களைத் தூண்டியது. பெருமளவு சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் 'எகிப்து ஐரோப்பாவின் ஒரு பகுதி' எனும் பெயரைத் தாங்கி வந்தன.

அக்காலத்தில் இஸ்லாமிய நாடுகள் மேற்குலக உற்பத்திகளின் சந்தையாக மட்டுமன்றி, மேற்கின் சிந்தனைகளதும், அடிவருடிகளதும் பூமியாவும் இருந்தது. மேற்கத்தைய வாழ்வு முறை, சிந்தனைப்பாங்கு என்பனவே முன்னேற்றத்துக்கு இட்டுச் செல்லக் கூடியன எனக் கருதப்பட்டது. அரசியல், பொருளாதார, சமூகவியல் துறைகளிலிருந்து இஸ்லாம் பிடுங்கப்பட்டிருந்தது. காலனித்துவவாதிகள் முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமித்து சொத்து செல்வங்களை சூறையாடி, அராஜகம் புரிந்து கொண்டிருந்தனர். இதற்கிடையில் முஸ்லிம் சமூகத்தின் ஆணிவேரான கிலாபத்தும் 1924இல் வீழ்ந்தது. இது கண்டு யூத, கிறிஸ்தவ சக்திகள் மகிழ்ச்சியுற்றன.

இந்நிலையைக் கண்டு மிகவும் கவலையுற்ற ஹஸனுல் பன்னா, தனது சக மாணவர்களுடன் சேர்ந்து ஆறுதல் தேடினார். கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும்போதே தீமைகளை வெறுப்பவராகவும், சீர்திருத்த முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்ற ஆவல் கொண்டவராகவும் விளங்கினார். இத்தகைய எண்ணங்களின் விளைவாக தனது வயதை ஒத்த மாணவர்களையெல்லாம் ஒன்றிணைத்து, 'ஜம்இய்யத்துல் அ.்.க்லாகில் அதபிய்யா' என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருந்தார். மாணவர்களின் ஒழுக்கத்தை மேம்படுத்துவது, நல்ல பழக்கவழக்கங்களை அவர்களுக்குக் கற்றுக் கொடுப்பது என்பன இந்த சங்கத்தின் குறிக்கோள்களாக இருந்தன.

கல்லூரிக்கு வெளியிலும் தன்னுடைய நண்பர்களோடு இணைந்து ‘ஜம்இய்யத்துல் மன்இல் முஹர்ரமாத்’ என்ற பெயரில் ஒரு சங்கத்தை ஏற்படுத்தியிருந்தார். "தவறான செயல்களையும், தீமையான காரியங்களையும் விட்டு விலகியிருங்கள்" என்று ஊர் மக்களுக்கு அழைப்பு விடுப்பது இந்த சங்கத்தின் குறிக்கோளாக இருந்தது.

1927 ஆம் ஆண்டு தனது 21 ஆவது வயதில் பட்டதாரியாகி தாருல் உலூம் கலாசாலையிலிருந்து வெளியாகிய ஹஸனுல் பன்னா, இஸ்மாஈலிய்யா நகரை அடைந்து, அங்குள்ள ஓர் அரசாங்கப் பாடசலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். இஸ்மாஈலிய்யா நகரைச் சென்றடைந்த பிறகு தன்னுடைய சீர்திருத்தப் பணிகளை மேலும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கில் மக்களுடனான தனது தொடர்பை அதிகமாக்கிக் கொண்டார். பொதுவாக மக்கள் கூடும் இடங்களில் தொடர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்ட அவர் தன்னுடைய எண்ணங்களுக்கேற்ப அவர்களை உருமாற்றுவதில் வெற்றி பெற்றார். அவருடைய தூய உள்ளம், இ∴லாஸ், கலப்பற்ற அன்பு, விடாத முயற்சி, தியாக மனப்பான்மை, அர்ப்பணிக்கும் தன்மை போன்றவற்றால் ஈர்க்கப்பட்ட மக்கள் அவர் பின்னால் அணிதிரண்டனர். மிகக் குறுகிய காலத்தில் அவருடைய ஆதரவாளர்களின் வட்டம் பெருகிவிட்டது.

1928 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் கடைசியில் அவரை ஒத்த சிந்தனையுடைவர்கள், அவரோடு இணைந்து பணியாற்ற முன்வந்த ஆறு தியாக உள்ளங்களை அவர் சந்தித்தார். அவர்கள் அனைவரும் ஹஸனுல் பன்னாவின் வசிப்பிடத்தில் ஒன்று கூடி, மேற்கொண்டு எப்படிச் செயற்படவேண்டும் என்பது பற்றிக் கலந்துரையாடி, தாம் வாழ்வதும், மரணிப்பதும் இஸ்லாத்திற்காகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்கள். அன்றைய தினத்தில்தான் வரலாற்றில் புரட்சிகரமான பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்திய இஸ்லாமியப் பேரியக்கமான ‘அல் இக்வானுல் முஸ்லிமூன்’ பிறப்பெடுத்தது.

பெரிய சிற்றுண்டிச் சாலைகள், களியாட்ட மையங்கள், மக்கள் பொழுதைப் போக்கும் இடங்கள் என்பவற்றில் சுவர்க்கத்தின் இன்பசுகங்கள், நரகத்தின் துன்ப வேதனைகள் பற்றி உபந்நியாசங்களை நிகழ்த்தினார். அவரது குரல் அசட்டை மனப்பான்மையுடைய பெருந்தொகையானவர்களைத் தட்டியெழுப்பக் கூடியதாயிருந்தது. "உண்மையான இஸ்லாத்திற்குத் திரும்புங்கள்" என்று முஸ்லிம்களுக்கு பன்னா அழைப்பு விடுத்தார்.

சமய வழிபாடாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த அவுலியா வழிபாடுகளை பன்னா எதிர்த்தார். உயர்ந்த மனிதர்களை மதிப்பது அவசியமாயினும், அவர்களை அற்புதம் நிகழ்த்துபவர்களாகவும், வழிபடத் தகுதி பெற்றவர்களாகவும் நம்புவது தவறானதும், இஸ்லாத்திற்கு முரணானதுமாகும் என்றார். சமாதிகளுக்குச் செல்வதை அவர் ஏற்றுக் கொண்ட போதிலும், சமாதிகளில் நடைபெறும் சடங்குகளையும் ஆசாரங்களையும் கைவிடுமாறு முஸ்லிம்களை வேண்டினார்.

ஷரீஅத்துக்கு முற்றிலும் நிகராக எகிப்திய சமூகத்தைச் சீர்திருத்துவதே அவரது முக்கிய குறிக்கோளாக இருந்தது. எதிர்காலச் சந்ததியினரின் கல்வியில் அதிக அக்கறை காட்டிய அவர், பாடசாலைகளை இஸ்லாமிய அடிப்படையில் மறுசீரமைக்கும்படியும், ஆண், பெண் கூட்டுக் கல்வி முறையைத் தடைசெய்யுமாறும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனித்தனியான பாடத்திட்டத்தினை அளிப்பதன் முக்கியத்துவம் பற்றியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறினார்.

எகிப்தும் ஏனைய முஸ்லிம் நாடுகளும் மேற்கத்தைய நாடுகளைப் பின்பற்றுவதிலேயே மூழ்கியுள்ளதையும், அந்நாடுகளிலுள்ள பெண்கள் ஆண்களுக்கு சமமாக உரிமை கோருவதையும், ஆண்களும் பெண்களும் கலந்து பழகுவதையும் கண்டித்த அவர், ஒரு பெண், சமூகத்தில் எவ்வாறான பங்கை வகிக்கிறாள் என்பது குறித்த அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை முன்வைத்து ‘முஸ்லிம் பெண்’ என்ற நூலை எழுதினார்.

குடும்ப வாழ்வும், மனிதனின் ஒழுக்கமும் பேணப்படுவது அவசியமாயின் ஆணும் பெண்ணும் கலந்து பழகும் சந்தர்ப்பங்களை இல்லாமற் செய்ய வேண்டும் என்றும் பெண்கள் மஹ்ரமான ஆண் துணையின்றிப் பிரயாணம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வெளியே செல்லும் போது உடலை நன்றாக மறைக்கக் கூடிய ஆடைகளை அணிய வேண்டும் என்றும் கூறி, ஹதீஸ்களிலிருந்து அவற்றுக்கான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டினார்.

பகைமைமிக்க அந்நிய ஆதிக்கத்தின் கீழ் ஓர் இஸ்லாமிய சமூகம் முன்னேற்றமடைய முடியாதென்பதை ஹஸனுல் பன்னா நன்கு அறிந்திருந்தார். எனவே, அவர் பிரித்தானிய ஏகாதிபத்திய அரசியல், பொருளாதார முறைகளுக்கெதிராக ஜிஹாத் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இமாம் ஹஸனுல் பன்னாவினதும் அவரது இயக்கத்தினதும் புகழும் செல்வாக்கும் மேலோங்கியபோது அது தம்மை நிலைகுலைவிக்கச் செய்யும் என அன்றைய ஆட்சியாளர்கள் கருத ஆரம்பித்தனர். இதனால், 1948 டிஸம்பர் மாதத்தில் அரசு, பிரித்தானியாவின் கட்டாயப்படுத்தலுக்குப் பணிந்து அல் இக்வான் (சகோதரத்துவ இயக்கம்) சட்டப்படி தடை செய்யப்பட்டதாக அறிவித்தது. இறுதியாக 1949 பெப்ரவரி 12ஆந் திகதி ஷெய்க் ஹஸனுல் பன்னா கெய்ரோ வீதியொன்றிலே ஒரு கொலைகாரனின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட பின்னர் அன்றைய அரசின் வேண்டுகோளின் பேரில் எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படாத நிலையில் அன்றைய தினமே மரணமானார்.

ஷெய்க் ஹஸனுல் பன்னா அவர்களின் இஸ்லாமிய புனருத்தாரண முயற்சிகள், நவீன ஜாஹிலிய்ய கோட்பாடுகளையும், நடைமுறை களையும் வெற்றி கொண்டு வேகமாக வளர்ச்சி பெற்றன. இதைக்கண்டு அதிர்ந்துபோன இஸ்லாத்தின் எதிரிகள் தங்களின் கையாட்களாக இருந்த எகிப்திய மன்னர் பாரூக்கையும், அவரது அதிகாரிகளையும் அல் இக்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தினார்கள். இமாமவர்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதும் இயக்க சகோதரர்கள் சிறையிலிடப்பட்டதும், இமாமவர்களின் ஆதரவாளர்களில் எவருமே அவரின் ஜனாஸாவைப் பார்க்கவோ அல்லது தங்களது தோள்களில் சுமந்து செல்லவோ, அதற்காகத் தொழுகை நடாத்தவோ முடியாதவாறு அரசாங்கம் தடை செய்ததும் எதிரிகளின் சதித்திட்டப்படி இஸ்லாத்தின் வளர்ச்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாகும்.

## மௌலானா ஸெய்யித் அபுல் அஃலா அல் மௌதூதி (ரஹ்) (கி.பி 1903 - 1976)

நவீன இஸ்லாமிய எழுச்சிக்குப் பங்களிப்புச் செய்த மிகப் பெரும் சிந்தனையாளராக மௌலானா ஸெய்யித் அபுல் அ∴லா மௌதூதி (ரஹ்) கருதப்படுகிறார். மௌலானா அவர்கள் 1903 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆந் திகதி இந்தியாவின் ஹைதராபாத்தைச் சேர்ந்த அவ்ரங்கபாத்தில் பிறந்தார்கள். அவரது குடும்ப பரம்பரை தகப்பன் வழியாக நபி(ஸல்) அவர்களது குடும்பத்துடன் தொடர்புபடுகிறது. அவரது குடும்ப பாரம்பரியத்திற்கு, சிஷ்திய்யா தரீக்காவுடன் தொடர்பிருந்தது. அவர்களுள் சிஷ்திய்யா தரீக்காவின் ஷெய்க்மார்களில் ஒருவராக விளங்கிய ‘குவாஜா குத்புத்தீன் மௌதூத்’ என்பவரிலிருந்தே அவரது குடும்பப் பெயரான மௌதூதி பெறப்பட்டிருக்கிறது.

மௌலானா மௌதூதி தனது தந்தை அஹ்மத் ஹஸனின் மேற்பார்வையில் உருது, பாரசீகம், அறபு ஆகிய மொழிகளிலும் ஹதீஸ், பிக்ஹ், மன்திக் ஆகிய துறைகளிலும் கல்விப் பயிற்சியைப் பெற்றார். ஆங்கிலத்தையும் மேற்கத்தைய கல்வியையும் கற்பதற்கு மௌதூதிக்கு ஆர்வமிருந்தபோதும் தந்தை அதைத் தடுத்துவிட்டார். அவ்ரங்கபாத் அரசாங்கப் பாடசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர்தான் அவருக்கு நவீன பாடங்களையும் விஞ்ஞானத்தையும் கற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

1921 இல் இஸ்லாத்தை மேலும் ஆழமாகக் கற்க ஆரம்பித்த அவர் அறபிலக்கணம், தப்ஸீர், ஹதீஸ், தர்க்கவியல், தத்துவம் ஆகியவற்றிலும் பாண்டித்தியம் பெற்றார். பின்னர் எழுத்துத் துறையில் ஈடுபட்ட அவர் மக்களைக் கவரும் வகையில் தனது உரைகளை அமைத்தார்.

இந்தியாவில் காந்தி உட்பட ஹிந்துத் தலைவர்கள் "இஸ்லாம் வன்முறைச் சமயம்" என்ற கருத்தை வெளியிட்டபோது அதற்குப் பதிலளிக்கும் வகையில் ‘அல் ஜிஹாத் பில் இஸ்லாம்’ என்ற நூலை எழுதினார். யுத்தத்தையும் வன்முறையையும் இஸ்லாம் ஏற்றுக் கொள்ள வில்லை என்பதை அந்நூல் விளக்கியதோடு, இஸ்லாமிய ஜிஹாத்

கோட்பாடு சாதாரண யுத்த நடவடிக்கைகளிலிருந்து வேறுபட்ட ‘அறப் போராட்டம்’ என்பதையும் விளக்கியது. அல்லாமா இக்பால் உட்பட, பல அறிஞர்கள் மௌலானா மௌதூதியின் இவ்வாய்வு முயற்சியைப் பாராட்டினர்.

1932 முதல் ‘தர்ஜுமானுல் குர்ஆன்’ என்ற சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினார். இஸ்லாமிய சிந்தனையைப் புனர் நிர்மாணம் செய்யும் சஞ்சிகையாக அது வெளிவந்தது. இதனூடாக தனிமனிதன், சமூகம், அரசு என்பவற்றைச் சீர் செய்து, இஸ்லாமிய கிலாபத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அவர் இடத் தொடங்கினார்.

தர்ஜுமானுல் குர்ஆன் சஞ்சிகையினுடாக ஆயிரக்கணக்கான அபிமானிகளையும், தோழர்களையும் அவர் சம்பாதித்திருந்தார். இத்தகைய அபிமானிகளும், தோழர்களும் அவரது சிந்தனைகளை ஆழமாகப் புரிந்து எப்போதும் அவருக்கருகிலிருந்து கருத்துப் பரிமாற்றம் செய்தார்கள். தனது சிந்தனைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க முனைந்த மௌலானா, 1941இல் தர்ஜுமானுல் குர்ஆனினூடாக ஒரு பகிரங்க அழைப்பை விடுத்தார். "தூய இஸ்லாத்துக்காக உழைக்கக் கூடிய தியாகப் பரம்பரையொன்றை உருவாக்க வாருங்கள்" என்பதே அந்த அழைப்பு. அதன் எதிரொலிதான் 1941 ஆகஸ்ட் 26இல் 75 உறுப்பினர்களுடன் உருவான ஜமாஅதே இஸ்லாமியாகும்.

எழுத்துத் துறையில் தனியிடம் பெற்றுத் திகழ்ந்த அவர் நூற்றுக்கும் அதிகமான பெருநூல்களைப் படைத்துள்ளார். ‘தப்ஹீமுல் குர்ஆன்’ என்ற அல்குர்ஆன் விரிவுரை மௌலானாவின் ஆழமான அரபு மொழி ஞானத்திற்கும் பரந்த இஸ்லாமிய அறிவுக்கும் ஒரு சான்றாக விளங்குகின்றது. அவர் எழுதிய நூல்கள் இன்று உலக மொழிகள் பலவற்றில் பெயர்க்கப்பட்டுள்ளன. அவரது ‘தீனிய்யாத்’ (இதுதான் இஸ்லாம்) என்ற நூல் சுமார் நாற்பது மொழிகளில் பெயர்க்கப் பட்டுள்ளது. மேற்கத்தைய சிந்தனைத் தாக்கதிலிருந்து இஸ்லாமிய சமூகத்தை மீட்டெடுப்பதும் இஸ்லாம் மட்டுமே நவீன உலகப் பிரச்சினைகளுக்கான தீர்வுத் திட்டமென வலியுறுத்துவதுமே அவரது எழுத்தின் இலக்காக இருந்தது.

துருக்கியின் இஸ்லாமிய கிலாபத்தின் வீழ்ச்சி கண்டு பெரிதும் கலங்கினார். அவ்வேளை, மீண்டும் இஸ்லாமிய கிலாபத்தை உருவாக்க வேண்டும் என்ற கோஷங்கள் உலகெங்கும் ஓங்கி ஒலித்ததைக் கூர்ந்து

கவனித்த அவர் மேற்கத்தையவர்களால் படித்த முஸ்லிம் வர்க்கத்தினர் மூளைச் சலவை செய்யப்படுவதும், இஸ்லாமிய உலகிலிருந்து கிலாபத் ஆட்சிமுறை ரத்துச் செய்யப்பட்டமையும் பெரும் துர்பாக்கியமென உணர்ந்தார். முஸ்லிம் உம்மத்துக்கு இஸ்லாமிய சிந்தனையை வழங்கியதோடு, அச்சமூகத்தை கிலாபத்தை நோக்கி அழைத்துச் செல்வதில் மௌலானாவின் சிந்தனைகளும், நூல்களும் பெரும் பங்காற்றியுள்ளன. 'காதியானி பிரச்சினை' என்ற நூலை எழுதியமைக்காக பாகிஸ்தான் இராணுவ நீதி மன்றம் அவருக்கு மரண தண்டனையை விதித்துத் தீர்ப்பளித்தது. எனினும், பல உலக நாடுகளில் இத் தீர்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்ததோடு அவரை விடுதலை செய்யுமாறு எழுந்த கோஷங்களும் வலுப் பெற்றமையால் இரு வருடங்களின்பின் அவர் விடுதலை செய்யப்பட்டார்.

இஸ்லாமிய உலகின் சட்டமேதையான முஸ்தபா அஹ்மத் ஸர்கா, மௌலானாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் "மௌலானா மௌதூதி அவர்கள் இமாம் கஸ்ஸாலி, இப்னு தைமியா போன்ற இஸ்லாமிய தத்துவ ஞானிகளின் வரிசையில் வைத்து நோக்கத்தக்கவர்" எனக் குறிப்பிடுகிறார்.

இஸ்லாமிய வரலாற்றின் மிக சிக்கலான ஒரு காலப்பிரிவில் இஸ்லாத்தை மிக நுணுக்கமாக முன்வைத்த முஜத்திதாகவும், இஸ்லாமிய சிந்தனைகள் செயல் வடிவம் பெற வேண்டும் என்பதற்காகப் போராடிய முஜாஹிதாகவும் மௌலானா மௌதூதி அவர்கள் கருதப்படுகிறார்கள்.

1976 ஆம் ஆண்டு மரணமடைந்த அவர் இஸ்லாமிய உலகில் போற்றப்படும் அளவுக்கு விமர்சிக்கப்படும் ஒருவராகவும் விளங்குகின்றார். இஸ்லாமிய அறிஞர்களில் மிகக் கடுமையாக விமர்சிக்கப்படுபவர்களுள் இவரும் ஒருவராவார். தற்காலத்தில் மௌலானா மௌதூதியைப் போன்று மிகவும் கொடூரமாகச் சாடப்படுகின்ற மற்றோர் இஸ்லாமிய அறிஞர் இல்லை எனலாம். மௌலானா மௌதூதியை விமர்சித்தவர்களுள் பெரும்பான்மையினர் இந்திய உப கண்டத்தைச் சேர்ந்தவர்களாவர். உண்மையில் மௌலானா அறபு நாட்டு அறிஞர்களால் மிகக் குறைவாகவே விமர்சிக்கப் பட்டுள்ளார்.

# அஸ்-ஸீரா வத்தாரீக்
# (இஸ்லாமிய வரலாறு)